ஸ்ரீ:

திவ்ய தேஸங்களின் நித்ய வாஸங்கள்

ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்த
நூற்றெட்டு திவ்ய தேசங்களைப்
பற்றிய பாடல்கள்

Version - 4

அடியேன் ஸ்ரீராமானுஜ தாஸன்

ஸார்வபௌமம் அய்யம்பேட்டை
ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன்

பொருளடக்கம்

முன்னுரை
மங்கள பாசுரங்கள்
திவ்ய தேஸங்களின் சுருக்கம்
தனியன்

திவ்ய தேஸங்கள்

சோழ நாடு

1. திருவரங்கம்
2. திருக்கோழி
3. திருக்கரம்பனூர்
4. திருவெள்ளறை
5 திரு அன்பில்
6 திருப்பேர் நகர்
7. திருக்கண்டியூர்
8. திருக்கூடலூர்
9. திருக்கவித்தலம்
10. திருப்புள்ளம்பூதங்குடி
11. திரு ஆதனூர்
12. திருக்குடந்தை
13. திருவிண்ணகர்
14. திருநறையூர்
15. திருச்சேறை
16. திருக்கண்ணமங்கை
17. திருக்கண்ணபுரம்
18. திருக்கண்ணங்குடி
19. திருநாகை
20. திருத்தஞ்சை
21. திருநந்திபுர விண்ணகரம்
22. திருவெள்ளியங்குடி
23. திருவழுந்தூர்
24. திருச்சிறுபுலியூர்
25. திருத்தலைச்சங்க நாண்மதியம்
26. திரு இந்தளூர்
27. திருக்காவளம்பாடி
28. திருக்காழிச்சீராம விண்ணகரம்
29. திருஅரிமேய விண்ணகரம்
30. திருவண் புருடோத்தமம்
31. திருசெம்பொன் செய்கோவில்
32. திருமணிமாடக கோவில்
33. திருவைகுந்த விண்ணகரம்
34. திருவாலி, திருநகரி
35. திருத்தேவனார் தொகை
36. திருத்தெற்றியம்பலம்
37. திருமணிக்கூடம்
38. திருவெள்ளக்குளம்
39. திரு பார்த்தன் பள்ளி
40. திருச்சித்ர கூடம்

நடு நாடு

41. திருவஹீந்த்ர புரம்
42. திருக்கோவலூர்

தொண்டை நாடு

43. திருக்கச்சி
44. திரு அஷ்டபுயகரம்
45. திருத்தண்கா
46. திருவேளுக்கை
47. திரு நீரகம்
48. திருப்பாடகம்
49. திரு நிலாத்திங்கள் துண்டம்
50. திரு ஊரகம்
51. திருவெஃகா
52. திருக்காரகம்
53. திருக்கார்வானம்
54. திருக்கள்வனூர்
55. திருப்பவள வண்ணம்
56. திருபரமேச்சுவர விண்ணகரம்
57. திருப்புட்குழி

58. திரு நின்றவூர்
59. திரு எவ்வுள்
60. திருவல்லிக்கேணி
61. திரு நீர்மலை
62. திரு இடவெந்தை
63. திருக்கடல்மல்லை
64. திருக்கடிகை

வட நாடு

65. திருவயோத்தி
66. திரு நைமிசாரண்யம்
67. திருப்பிருதி
68. திருக்கண்டமென்னும் கடிநகர்
69. திருவத்ரியாஸ்ரமம்
70. திரு சாளக்கிராமம்
71. திரு வட மதுரை
72. திருவாய்ப்பாடி
73. திருத்துவாரகை
74. திருச்சிங்கவேள் குன்றம்
75. திருவேங்கடம்

மலை நாடு

76. திருநாவாய்
77. திருவித்துவக்கோடு
78. திருக்காட்கரை
79. திருமூழிக்களம்
80. திருவல்லவாழ்
81. திருக்கடித்தானம்
82. திருச்செங்குன்றூர்
83. திருப்புலியூர்
84. திருவாறன்விளை
85. திருவண்வண்டூர்
86. திருவனந்தபுரம்
87. திருவாட்டாறு
88. திருவண்பரிசாரம்

பாண்டிய நாடு

89. திருக்குறுங்குடி
90. திருச்சிரீவர மங்கை
91. திருவைகுண்டம்
92. திருவரகுணமங்கை
93. திருப்புளிங்குடி
94. திருத்தொலைவில்லி மங்கலம்
95. திருகுளந்தை
96. திருக்கோளூர்
97. திருப்பேரை
98. திருகுருகூர்
99. திருவில்லிபுத்தூர்
100. திருத்தண்கால்
101. திருக்கூடல்
102. திருமாலிருஞ்சோலை
103. திருமோகூர்
104. திருக்கோட்டியூர்
105. திருபுல்லாணி
106. திருமெய்யம்

வின் நாடு

107. திருப்பாற்கடல்
108. திருப்பரமபதம்

பின்னிணைப்புகள்

ஸ்ரீ:
யஸ்யாபி4வத் பி4க்ஷ2தி ஜநார்த்திஹரந்து: பித்ருத்வமந்யேஷு அவிசார்ய தூர்ணம் ।
ஸ்தம்பே4 அவதாரSதமந்யலப்4யம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்3யே ॥
அஹோபி3லே க3ருட3ஶைலமத்4யே க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதா4நம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கி3த வாமபா4க3ம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்3யே ॥
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமத்3ரங்கஶடாரி ஸம்யவிவராலல்லப்3தாக3மாந்தத்வயம்
ஸ்ரீமத்3 வீரரகூத்3வஹாத்3யஶடஜித்பாதாரவிந்தா3ஶ்ரயம் ।
ஸ்ரீமத்3 வேத3வதம்ஸதே3ஶிகயதே: காருண்ய வீக்ஷாஸ்பத3ம்
ஸேவே ரங்க3துரீண ஶாஸநவஶம் நாராயணம் யோகி3நம். ॥

ஸ்ரீமாந் வேங்கட நாத2ார்ய கவிதார்கிககேஸரீ !
வேதா3ந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸதா3 ஹ்ருதி3 !!

திவ்ய தேஸங்களின் நித்ய வாஸங்கள்
முன்னுரை

நூற்று எட்டு திவ்ய தேஸங்கள் என்று வைணவ மரபில் வழங்கக்கூடிய தலங்கள் வைணவக் குரவர்களான ஆழ்வார்களால் பாடப்பட்டவை. ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்களுக்கு நம்முடைய ஆசாரியர்கள் தனி மதிப்பு கொடுத்து பக்தியுடன் தாங்கள் வணங்கி, தங்களுடைய அடியார்களுக்கும் காட்டி கொடுத்தார்கள்.

வட மொழி மறைக்கு இல்லாத தனிச் சிறப்பு இந்த திராவிட வேதமான திவ்ய பிரபந்தத்திற்கு உண்டு என்பதை "திவ்ய" என்ற அடை மொழியிலிருந்தே காணலாம். திவ்ய தேஸம், திவ்ய பிரபந்தம், திவ்ய ஸூரிகள் என்று பெயர் பெற்றிருப்பவை இந்த மூன்று மட்டும்தான். தவிர பெண், பிறர் என்ற பாகுபாடின்றி எல்லோரும் சேர்ந்து மறைந்து இருக்கும் வேதத்தின் உட்பொருளை "தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்ற வேதாந்த தேசிகரின் வாக்கின்படி தெள்ளத் தெளிய அறிய உதவுகிறது அருளிச் செயல் என்னும் திவ்ய பிரபந்தம்.

ஆழ்வார்கள் மனம் நெகிழ்ந்து அனுபவித்து, அவர்கள் அனுபவமே பாசுரமாக "தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன்" அருளாலே பெருக்கெடுத்தது. அந்த திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை கண்டு களித்து எல்லோராலும் ஆனந்திக்க முடியாவிட்டாலும், இங்கு அவைகளை நூற்றெட்டு பாடல்களாக ஆழ்வார்கள், ஆசாரியர்கள் அனுபவித்த முறையில் மனத்திரையிலே காண்கிறோம். "திவ்ய தேஸங்களின் நித்ய வாஸங்கள்" என்கிற தலைப்பின்கீழ் உயர்ந்த திவ்ய தேசங்களின் வாஸனையை நுகர்ந்து இன்பத்தில் திளைத்து, "பவது மம பரஸ்மிந் ஸேமுஷி பக்திரூபா" என்கிற ஆசாரிய வள்ளலின் கருத்தின்படி பக்தி என்னும் அனுபவக் கடலில் மூழ்குகிறோம்.

நூற்றெட்டு திவ்ய தேசங்களும் அதில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான், பிராட்டி இவர்களும் பக்தர்களுடைய இதயத்தில் வந்து "ஒடி வந்து என் மனக்கடலில் வாழ வல்ல மாய மணாள நம்பீயாய்" தாமே வந்து நித்ய வாஸம் செய்ய காத்துக் கொண்டிருக்கிறார்கள். திவ்ய தேசத்தில் போய் நாம் வசிப்பது என்பது கைகூடாமல் போனாலும், அவை தாமாகவே தேசத்தின் வாஸம் என்ற ரீதியில் பாகவதர்களின் நெஞ்சில் வந்து குடி கொள்கின்றன.

ஆழ்வார்கள் அருளிய நாலாயிர திவ்ய பிரபந்தங்களில் உள்ள பாட்டுக்களை பாசுரங்கள் என்று அழைக்கிறோம். அது ஸ்வரத்தோடு கூடிய பா என்று பொருளாகும். இவற்றை தெய்வீக இசை, தேவ கானம் என்று நம் ஆசார்யர்கள் போற்றினர்.

இந்த திவ்ய பாசுரங்களை நான்கு பகுதியாக பிரித்தார்கள் நம் ஆசார்யர்கள்.

1. இசைப்பா - முதல் ஆயிரம் (9 பிரபந்தங்கள்)
2. இசைப்பா - பெரிய திருமொழி முதல் (3 பிரபந்தங்கள்)
3. இசைப்பா - திருவாய்மொழி (1 பிரபந்தம்)
4. இயற்பா (11 பிரபந்தங்கள்)

இவற்றில் முதல் மூன்றும் இசையோடு சேர்த்து வழங்கப்பட்டதால் அவை இசைப்பா என்றே அழைக்கப்பட்டன. ஆழ்வார்களும் தங்கள் பாசுரங்களை இசைமாலை என்றே அழைத்தனர்.

காளம் வலம்புரி அன்ன நற்காதல் அடியவர்க்குத்
தாளம் வழங்கி தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்

என்று அதிகார ஸங்க்ரஹத்தில் (6) ஸ்வாமி தேசிகன் காஹளம் என்ற வாத்யத்தையும், வலம்புரிசங்கையும் போன்ற தம் அடியவர்களுக்கு நாதமுனிகள் தாள வித்தையாகிற கந்தர்வ வேதத்தை உபதேசித்து அதில் அமைத்து பாடும்படி உயர்ந்த திவ்ய பிரபந்தத்தையும் உபதேசித்தார் என்றார்.

ஆசார்யர்கள் காட்டிக் கொடுத்த பகவத் பாகவத கைங்கர்யமே புருஷார்த்தத்தின் எல்லை என்பதை உணர்ந்து எல்லோரும் "கூடியிருந்து குளிர்ந்து" என்ற முறையில் இவற்றை சேர்ந்து அனுபவித்து உய்வு பெறுவோமாக!

ஆழ்வார் திருவடிகளே சரணம்। எம்பெருமானர் திருவடிகளே சரணம் ॥
சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥॥

ஸ்ரீமதே ஸ்ரீவண் ஶட²கோப ஸ்ரீவேதா³ந்தே³ஶிகயதீந்த்³ரமஹாதே³ஶிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ம தி³வ்யபாது³காஸேவக
ஸ்ரீவண் ஶட²கோப ஸ்ரீநாராயணயதீந்த்³ரமஹாதே³ஶிகாய நம:

ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ரங்கராமாநுஜ மஹாதேசிகாய நம:

மங்கள பாசுரங்கள்

மீனாய் ஆமையாய் பன்றியாய் அரி உருவாய் *
வானாய் உயர்ந்த வாமனனாய் கோவ ராமனாய்
ரகு ராமனாய் * அண்ணனாய் கள்ள கண்ணனாய்
வெண்பரி மன்னனாய் * காண்பது வண்புகழ்நாரணனே.

(1)

பகவான் ஸ்ரீமந் நாராயணனின் நிலைகள் பரம், வ்யூஹம், விபவம், ஆர்தம், அர்ச்சை என்கிற ஐந்து என்று ஸம்ப்ரதாயத்தில் ஸாதிப்பது வழக்கம். அதில் விபவம் என்று சொல்லக்கூடிய நிலையில் பகவான் பூலோகத்தில் பலவித அவதாரங்களாக தோன்றி அருள் புரிகிறான். பகவானுடைய அவதாரங்கள் பல இருப்பினும் அத்தனையும் நம் மனத்தில் தரிக்க முடியாது என்று கருதி பத்து அவதாரங்களை மட்டும் முக்கியமாகக் குறிப்பிட்டு தசாவதாரம் என்று ஆழ்வார்கள் அருளினார்கள்.

மத்ய, கூர்ம, வராக, நாரசிம்ம, வாமன, பரசுராம, ராம, பலராம, கிருஷ்ண, கல்கி என்ற பத்து அவதாரங்களும் அடியவர்கள் அனைவரும் எப்பொழுதும் நினைத்து அனுபவிப்பதற்கு மிகவும் அத்யாவசியமானது என்று கருதி

இச்சா மீந விஹார கச்சப மஹா போத்ரீந் யத்3ருச்சா ஹரே
ரக்ஷா வாமன ரோஷ ராம கருணா காகுத்ஸ்த2 ஹேலா ஹலிந் |
கிரீட3 வல்லவ கல்க வாஹந த3ஸா கல்கிந்நிதி ப்ரத்யஹம்
ஜல்பந்த: புருஷா: புநந்தி பு4வநம் புண்யைளக4 பண்யாபணா:

ஸ்ரீதசாவதார ஸ்தோத்திரத்தில் (12) ஸ்வாமி தேசிகன் சுருக்கமாக அருளியுள்ளார்.

தே3வத்வே தே3வதே3ஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ |
விஷ்ணோர் தே3ஹாநுரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ்தநும் ||

என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (1-9-145) பராஸர மஹரிஷி கூறுகிறார். பகவான் தேவானாய் அவதரிக்கும்போது பிராட்டி தேவரூபத்தில் தானும் அவதரிக்கிறாள். அவன் மனிதனாய் தோன்றும்போது தானும் மனித ரூபத்தில் தோன்றுகிறாள். விஷ்ணுவின் தேஹத்திற்கு தகுந்தாற்போல் தன் தேஹத்தை அமைத்துக் கொள்கிறாள் என்றார்.

"நின் படிக்கல்லாம் தன் படியேற்ப" என்ற முறையில் தாயாரும் பகவானின் ஒவ்வொரு அவதாரத்திலும் தானும் அவதரிக்கிறாள் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.

உத்தமன் பாதங்களில் தத்துவம் சொல்லியே
மத்தவையலாம் சுத்தமில்லை எனத்தள்ளியே
வித்தகர் வியக்கும் வடிவு எத்தனை ஆனாலும்
அத்தனையுள் கண்டேன் காவலன் வாமனனே

(2)

ஓங்கி உலகளந்த உத்தமன் பாதங்களை முதலில் வணங்கி அவனுடைய அருள் கொண்டு தேஸத்தின் வாஸம் என்ற தலைப்பின் கீழ் ஆரம்பிக்கிறோம். வாமன அவதாரத்தை உத்தமன் என்றுகூறி ஆண்டாள் திருப்பாவையில் மூன்று பாசுரங்களில் அருளிச் செய்துள்ளாள். முன்றடி நிலம் கேட்ட யாசகனிடம் மூன்று பெரும் குணங்களை காண்கிறோம்.

(1) ஸ்ரீயப்பதித்வம்,
   a. திருவை விட்டு என்றும் எந்நிலையிலும் பிரியாமை,
(2) ஆஸ்ரித ரக்ஷகம்,
   a. தன்னை அண்டியவர்களை காப்பதற்காக தான் அதிமட்டமான காரியங்களைக்கூட செய்வதில் உள்ள திடம்
(3) மாற்று அழிக்க வல்லமை,
   a. பகைவரது பகைப்புத் தன்மையை (enemisim) மட்டும் நீக்கி அவர்களைக் காத்து அவர்களை உய்விப்பது.

ஆசார்ய பரம்பரை மூலம் வழிவழியாக வழங்கிய கருத்துக்களைக் கொண்டு விசிஷ்டாத்வைத ஸித்தாந்ததம் தவிர மற்றவை வேத்தின் உண்மையான உட்பொருளை சரியாக விளக்கவில்லை என்று அவைகளை தள்ளுகிறோம். ஆழ்வார்கள், ஆசாரியர்கள் அபிமானித்த பகவானுடைய திருவுருவங்கள் பலவாயினும் அவை எல்லாவற்றிலும் ரக்ஷித்து அருளக்கூடியவன் "ரக்ஷா வாமன" என்று ஸ்வாமி தேசிகன் வாக்கின்படி, சுத்தமானவன், ஸம்ஹாரம் இல்லாத கடவுளான வாமனனையே காண்கிறோம்.

"இசையாதார் பக்கல் மேல் விழும் அவன் இசைந்தார் பக்கம்
மேல் விழச் சொல்லவும் வேணுமோ"

என்று ஸாதிப்பர் முன்னோர். அதிமானுஷ ஸேஷ்டிதங்களாலும், வாத்ஸல்யத்தாலும், வடிவழகாலும், ஆஸ்ரித பக்ஷபாதத்தாலும் கிருஷ்ணாவதாரத்தோடு வாமனாவதாரம் ஒத்திருப்பதால், நம் ஆசாரியர்கள் இதை அனுபவித்து மகிழ்கிறார்கள்.

பதிலுக்கு மறைந்த மாதவன் நெருக்கத்தில் அறிந்து உரைத்த
முதலுக்கு ஆழ்வார் என பொய்கையார் பூதத்தார் பேயாரும்
எழுந்து இரு என ஆண்டவனுக்கு ஆணையிட்ட மழிசையும்
தொழுது எழுயென்ற மாறனும் தேவு மற்றறியா மதுரகவியும்

(3)

கொல்லிகாவலன் குலசேகரனும் பரமனுக்கே பல்லாண்டிசைத்த
வில்லிபுத்தூர் பட்டனும் கோவலனையே கொண்ட கோதையும்
அடியவரடிப்பொடி நம்பாணன் மங்கையர்கோனென இவர்கள்
நெடியமாலை கடைந்து அளித்தாரே செந்தமிழ் மறைச்சுவையிலே

(4)

ஆழ்வார்கள் பன்னிருவர் என்பர் நம் ஆசாரியர்கள். அதில் முதலாழ்வார்கள் என்று வழங்கப்படும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற மூவரும் ஓர் நள்ளிரவில் பகவானால் நெருக்கப்பட்டு, பகவானின் அருளால் திராவிட வேத ஸாரமான நாலாயிர திவ்ய பிரபந்தத்தை பாடத் தொடங்கினர். திருமழிசையாழ்வாரோ திருக்குடந்தை ஆராவமுதனைப் ஸேவித்து "கிடந்தாவாறு எழுந்திரு" என்று பகவானுக்கே ஆணையிட்டவர்.

"துயர் அறு சுடர் அடி தொழுது எழு என் மனனே" என்று தன் உள்ளத்திற்கு முதலில் சொல்லிக் கொண்டார் மாறன், நம்மாழ்வார். "தேவு மற்றறியேன் குருகூர்ச் சடகோபன்" என்று ஆசாரியனை விட உயர்ந்த தெய்வமில்லை என்ற உன்னதமான கருத்தை மதுரகவிகள் நமக்கு போற்றி புகட்டினார்.

ராமனைத் தவிர உயர்ந்த பெருமாள் இல்லை என்ற கருத்துடைய ஆழ்வார் சேரமன்னன் குலசேகரன். பூவுலகில் அசுயை கொண்ட மாந்தர்களால் பகவானுக்கு தீது வந்துவிடுமோ என்று அஞ்சி பரமனுக்கே பல்லாண்டிசைத்தார் பெரியாழ்வார். அஞ்சுகுடிக்கோர் சந்ததியான அவர் மகள் ஆண்டாளோ கண்ணனையே நினைந்து வருந்தி அவனையே தன் பூமாலை, பாமாலைகளால் வசீகரித்து கடைசியில் அரங்க மன்னனையே மணம் கொண்டாள். பகவானின் அடியவர்களுக்கு நான் அடியன் என்று பாகவத பாரதந்த்ர்யத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாய் திகழ்ந்தவர் தொண்டரப்பொடியாழ்வார்.

ஸ்வாமி தேசிகனால் ஆசையுடன் "நம்" என்ற அடைமொழியோடு அழைக்கப் பட்டு பத்தே பாசுரங்கள் பாடி ஆழ்வார் என்னும் பெருமையை அடைந்தவர் பாணநாதன். வாள் வில்லேந்தும் மங்கையர்கோன் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நான்கு விதமான கவிகளால் திருமாலின் பெருமையை அருளிய நாலு கவிப் பெருமான் திருமங்கை மன்னன்.

இந்த பன்னிரு ஆழ்வார்களும் பர தத்துவமாகிற நெடிய மாலானான, மாதவனை, ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந் நாராயணனை அவனுடைய அருளால் மயர்வற மதிநலம் அருளப்பெற்று அகக் கண்களால் கண்டார்கள். பகவானை விளக்க

முடியாமல் தத்தளிக்கும் ஸ்ருதி, ஸ்மிருதி, இதிகாச, புராணங்களில் சொன்ன கருத்துக்களையே கடைந்து ப்ரம்ம தத்துவத்தை எடுத்து கையில் கனியென நமக்கு அளித்தார்கள்.

ஆழ்வார்களை பகவான் ஸ்ரீமந் நாராயணனின் விபவ அவதாரங்களுக்கு ஒப்பாக நம் ஆசாரியர்கள் கருதி அவர்களையே வழிபட்டார்கள். ஆழ்வார்கள் பிறப்பை **அபிநவ தசாவதாரம்** என்றே அழைத்தனர்.

1. மத்ஸ்யம் (மீன்) - பொய்கையாழ்வார்
2. கூர்மம் (ஆமை) - பூதத்தாழ்வார்
3. வராகம் (பன்றி) - பேயாழ்வார்
4. நரசிம்மம் (சிம்மம் மனிதன்) - திருமழிசையாழ்வார்
5. வாமனன் - நம்மாழ்வார்
6. பரசுராமன் - குலசேகரன்
7. ராமன் - பெரியாழ்வார்
8. பலராமன் - தொண்டரடிப்பொடியாழ்வார்
9. கிருஷ்ணன் - திருப்பாணாழ்வார்
10. கல்கி - திருமங்கையாழ்வார்

லக்ஷ்மியுடன் கூடிய திருநாரணனை சொல்லாலும், செயலாலும், சிந்தையாலும் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் அருளிய செந்தமிழ் மறை என்னும் நாலாயிர திவ்ய பிரபந்தத்தைக் கொண்டு அனுபவித்து அந்தமில்லா பேரின்பத்தை அனைவரும் அடைவோமாக!

சழக்கு நாக்கொடு புன்கவி சொன்னேன்
சங்கு சக்கரம் ஏந்தும் கையானே
பிழைப்பர் ஆகிலும் தம் அடியார் சொல்
பொறுப்பதும் பெரியோர் கடன் அன்றே

பெரியாழ்வார் திருமொழியில் (5-1-2) தம் அடியார் சொல் பொறுப்பது பெரியோர் கடமை என்று ஸாதித்தார்.

அழ்வார் அளித்த ஊக்கத்தில் அடியேன் மனத்தில் தோன்றிய கவிதைகளும், முன்னோர்களின் எடுத்துக்காட்டுக்களும் (contextual reference) கொண்ட இந்த தேசத்தின் வாஸம் என்கிற கட்டுரையை ஆசாரியர்கள், பெரியோர்கள் முன்னிலையில் ஸமர்ப்பிக்கிறேன். இதன் குறிக்கோளைக் கண்டு உகந்து, குறைகளைப் பொறுத்து அனுக்ரஹிக்குமாறு தலைதாழ்த்தி வணங்கி வேண்டிக் கொள்கிறேன்.

நூற்றெட்டு திருப்பதிகளின் சுருக்கம்

திவ்ய பிரபந்தங்கள் புகழ்ந்த நூற்றெட்டு திவ்ய தேசங்களில் முன்றைத் தவிர மற்றெல்லாம் பாரத தேசத்திலேயே உள்ளன. திருச்சாளக்கிராமம் என்னும் க்ஷேத்திரம் நேபாள நாட்டிலும், திருப்பாற்கடலும், திருவைகுந்தமும் நம் புலக்கண்ணிற்கு எட்டாத வான் வெளியிலும் உள்ளன.

நம்முடைய முன்னோர்கள், இந்த திவ்ய தேசங்களை சோழ நாடு, நடு நாடு, தொண்டை நாடு, வட நாடு, மலை நாடு, பாண்டிய நாடு, விண் நாடு என்று ஏழு பகுதியாக பிரித்து அனுபவித்திருக்கிறார்கள். அந்த முறையிலேயே இங்கும் கூறப் பட்டுள்ளது.

திவ்ய பிரபந்தம் மகிழ்ந்த தேசங்கள்

திருவரங்கம் முதல் தில்லை வரை சோழ நாற்பதும்
அயிந்திரபுரமும் கோவில் ஊரும் நடு இரண்டும்
கச்சி கடிகை கொண்ட இருபத்திரண்டும் தொண்டை
வட அயோத்தி பத்தோடு திருவேங்கடம் ஒன்றை

மலை நாவாய் ஆறிரண்டு ஒன்றும் பரிசாரம் வரை
குறுங்குடி முடியும் மெய்யம் பாண்டிய மூவாறை
விண்ணில் ஈறு பாற்கடலும் பரமபதமும் இறுதியென
கண்ணில் காணாமல் கண்டாரே செந்தமிழ் சுருதியென

சோழ நாட்டு திருப்பதிகள் நாற்பது திருவரங்கம் தொடங்கி, தில்லை திருச்சித்திர கூடம் வரை. நடு நாடு என்றழைக்கப்படுவை திருவஹீந்திபுரமும், திருக்கோவலூரும். தொண்டை நாட்டு திவ்யதேசங்கள் இருபத்து இரண்டு, திருக்கச்சி தொடங்கி திருக்கடிகை என்னும் சோளிங்கபுரம் வரை.

வட நாட்டு திருப்பதிகள் அயோத்தி தொடக்கமாக திருவேங்கடம் வரை பதினொன்று ஆகும். திருநாவாய் முதல் திருப்பரிசாரம் வரை உள்ள பன்னிரண்டும் மலை நாட்டு ஸ்தலங்கள். திருக்குறுங்குடி தொடங்கி திருமெய்யம் வரை பாண்டிய திவ்ய தேசங்கள் பதினெட்டாகும். கடைசியாக விண்நாட்டு திருப்பதிகள் என்ற பாற்கடல், பரமபதம் என்ற இரண்டும் சேர்த்து மொத்தம் 108 திவ்ய தேசங்கள்.

இவைகளை தம்முடைய இனிமையான தமிழ் மறை என்னும் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் கண் கொள்ளா காட்சியாக கண்டு மகிழ்ந்து அடியார்களுக்கு அருளியவர்கள் மாதவனால் மதிநலம் அருளப் பெற்ற உத்தமமான ஆழ்வார்கள்,

ஆழ்வார் திருவடிகளே சரணம்।

தனியன்கள்

ஸ்ரீமந் நாராயணன்

திரு நாரணன் தானே முன் நின்று திருவருள் காட்டி
ஒரு சாதனமின்றி இணையடிதாம் துணையென தேற்றி
திருமகளோடு தீவினை நீக்கித் தருவான் பெருவான்பேறு
அறிவாயே என உரையும் ஆசிரியர் வழிமுறையும் ஆக்கி

ஸ்ரீ லக்ஷ்மீ

அருளாலே அவன் மார்பில் அகலாது உறையும்
உன் தகவாலே நிறையும் நல்தந்திரத் துணிவும்
மருளாலே மண்ணில் மயங்கும் உயிரும் நீங்காப்
பொருளாலே விண்ணில் பணி செய்து விளங்கும்

விஷ்வக்ஸேனர் (ஸேனை முதலியார்)

பிரம்பு எடுத்து வானில் குண்டலை மகனே
வரம்பு கொள்ளும் ஸேனையின் அதிபதியே
தடை நீக்கி அருளும் சூத்திரவதியின் பதியே
உன் கருணைக்கு பாத்திரமாவதும் எம்கதியே

ஸ்வாமி நம்மாழ்வார் (சடகோபன், மாறன், சடாரீ, பராங்குசன்)

உந்தியில் அயனைப் படைத்ததும் உரலில் உவந்து கட்டுண்டதும்
அந்தியில் அரியாய் அழித்ததும் அவனியில் அண்ணலாய் அளித்ததும்
மந்தி மலிந்த மாமலை அம் மாதவன் மலரடி மருவுதலும் * உறவாட
சந்தியாய் சேர்த்ததும் தமிழ்மறை இசைச்சுவை தந்த மாறனடிகளே.

நாதமுனிகள்

போகத்தை எண்ணும் மாந்தர்க்கு நல் யோகத்தை காட்டி
சோகத்தை தவிர்ப்பாய் நீயவன் பாகமேயென * வேகத்தில்
நாகத்தில் பள்ளி கொண்டானை அடைய * அடைந்தேன்
ராகத்தில் தாளத்தில் வழங்கிய நாதமுனியை காலத்திலே

ஓரு பத்து கேட்டு உகந்து உள்ளம் கசிந்து
பல பத்தை நாடிய உம் யோகத்தில் இசைந்து
ஒருமித்து அருளிய ஆயிரம் நான்கும் நமக்கேயென
தருவித்த வள்ளலே தரித்தேன் உன் திண்கழலே

யாமுன முனிகள் (ஆளவந்தார்)

அயனை ஆக்கிய ஆயனை ஆரவணையில் துயிலும் ஈசனை
உகந்து அவன்பால் பணியினை உள்ளம் உரை செய்தவனை
மற்றில் இசையா சோர்வினைக் கண்டுதாமே கழியும் கடுவினை
அறிந்த ஆளவந்தார் அடியினை அடைந்தோமே நம் யாமுனனை.

நான்கும் ரத்தினமும் பத்திரமாய் தந்து பாங்காய் திருவைத்
தாங்கும் இதயத்தில் எமக்கோர் இடத்தை அளித்தவனே
பொங்கும் கருணையில் தங்கும் அவர் திருவருள் என
சங்கும்சக்கரமும் உடையானுக்கு ஆள் செய்வித்த வித்தகனே.

பகவத் ராமானுஜர் (ஸ்ரீபாஷ்யகாரர், எம்பெருமானார், உடையவர், யதிராஜர்)

அடையவனை அவாக்கொண்டு உள் உயிரும் உலகும் உடலாய்
உடையவனை * சடையனை அயனையும் படைத்த இடையனை
மடைதிறந்து மாதவனருளால் மருள்நீக்கி மறைப்பொருள் விடையினை
கொடையென குவித்த ராமானுஜா! அடைந்தேன் உன்னடி யான்பெற்றபேறே.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் (வேங்கட நாதன், தூப்புற் பிள்ளை)

அறத்தை அவனியில் உரைத்து அகலாபரத்தை அன்புடன் வரித்து
உன்தரத்தை அருளால் குரைத்து தூமறை பொருளை நிறைத்து
மறத்தை மனத்தில் வெறுத்து மாளா பிறவித்துயரை நினைத்து
துறத்தை துறந்த துய்யோன் அடியினை அடைவோமே இனித்து.

வாசித்தோன் மறைப்பொருள் என்று இல்லாதான் ஆனாலும்
ஏசிமற்றோர் காசில்லாத் தூசியென கண்டவர் கடிந்தாலும்
வீசி ஆசைகளை விரட்டி வீறுடை ஆசானடிக் கொண்டேன்
பூசித்துப் புகலடை என்றவர் புகட்டியதும் நம்தேசிகனையே

ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் (சடகோப மாமுனி)

காட்சி தரும் கமலைநாதன் வானவர்க்கு மட்டும் இன்றி
மீட்சி செய்து மாறன் மறையோடு நம் சிங்கப்பிரான்
சாட்சி சடகோப மாமுனி சரண்கொண்டார் சார்வுடன்
தாழ்ச்சியிலாது தவமிலாது தவறாது தழைக்கும் வாழ்ச்சியே

45ம் பட்டம் அஹோபிலமட அழகியசிங்கர் தனியன்

அல்லி மலரும் அந்தியில் ஆதவன் கண்டே தாமரை
எல்லிப் பகல் எண்ணாது எவர்க்கும் ஏற்ற தூமறை
வில்லிவலம் வந்த நாரயண முனி நவிலும் பேருரை
சொல்லி மகிழ்வோம் நாம் அவர் சிறப்பை வான்வரை

கிடாம்பி சுந்தரராஜன் வாழ்த்துப் பாடல்

ஓப்பாரிலா ஆவியில் மன்னன் நீர்ப்பானை சுந்தரத்தான்
இப்பால் புவியில் சுரந்தான் ஓர் ஆனை வேர் மந்திரத்தால்

சோழ நாட்டு திருப்பதிகள் 40 (1 முதல் 40 வரை)

1. திருவரங்கம்

அரங்கனாய் அடைக்கலம் அருளிய அறத்தின் இறையாய் * பொல்லா
உறங்கனாய் பொன்னுருவாள் பதியாய் உன்னித்து உகந்த கதியாய்
மண்ணுலகில் மாந்தர் தம் விண்ணுலக வாயிலாய் மாறன் நிதியாய்
திண்ணமெனும் கோவிலாய் தித்திக்கும் முலவெழுத்து முடியிலணியாய்

ஸ்ரீரங்கம் என்னும் 108 திவ்ய தேஸங்களில் முதன்மை வகிக்கும் இந்த ஸ்தலத்தில் எம்பெருமான் ஸ்ரீரங்கநாதன், பெரிய பெருமாள், நம்பெருமாள், அழகிய மணவாளன் என்ற திருநாமங்களுடன் ஆதிஸேஷனின் மேல் புஜங்க ஸயனமாய் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு ஸ்ரீரங்க நாயகி, ஸ்ரீரங்க நாச்சியார் என்று பெயர்.

"அம்புயத்தோன் அயோத்தி மன்னர்க்கு அளித்த கோவில்
தோலாத தனி வீரன் தொழுத கோவில்"

என்றார் ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்க்ரஹத்தில் (42). ப்ரம்மா நிலவுலகிற்கு கொடுத்து அனுப்பிய ஸ்ரீரங்கநாதனாக பள்ளி கொண்டுள்ள பெரிய பெருமாள், இஷ்வாகு குலத்தின் தனம், ஸ்ரீராமன் ஆராதித்த குல தெய்வம். "ராமோ விக்ரவாந் தர்ம:" என்கிறபடி தர்மமே வடிவெடுத்தவன் ஸ்ரீராமன். சரணாகதி என்று வந்து விழுந்த காகாசுரன், விபீஷணன் இவர்களுக்கு அடைக்கலம் தந்து ரக்ஷித்தவர்.

"ஸஹ பத்ன்யா விசாலாக்ஷ்யா: நாராயண முபாகமத்"

தாமரை போன்ற அகன்ற மலர்ந்த சிவந்த கண்களுடைய ஸ்ரீராமன் தன்னுடைய பட்டாபிஷக தினத்திற்குமுன் குல தெய்வமான ஸ்ரீரங்கநாதனை தன் மனைவி சீதையுடன் சென்று ஆராதித்தான் என்கிறார் ஆதிகவி வால்மீகி பகவான் ஸ்ரீமத் ராமாயணத்தில். தர்மத்தின் ஸாக்ஷாத் ஸ்வரூபமான ஸ்ரீராமனுக்கே தெய்வமாக இருப்பவர் ஸ்ரீரங்கநாதன். அதனால் ஸ்ரீரங்கநாதனுக்கு பெரிய பெருமாள் என்றும் பெயர்.

ஸ்ரீரங்கத்தை பூலோக வைகுண்டம் என்பார்கள். திட விசும்பு என விளங்கும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையே வேண்டாம் என்று கூறும்படி தெவிட்டாத தேன் சொரியும் புனலரங்கம்.

"இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே"

என்று ஸ்ரீரங்கத்தை விடுத்து பரபதமே வேண்டாம் என்றார் திருமாலையில் (2) தொண்டரடிப் பொடியாழ்வார். "பாவோ நாந்யத்ர கச்சதி" என்று அனுமன் கூறிய முறையில்

"யாவத் சரீர பாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வா"

என்று மீதி வாழ்நாட்கள் பூராகவும் ஸ்ரீரங்கத்தில் சுகமாக ஸ்ரீரங்கநாதனை ஸேவித்துக் கொண்டு வாழவும் என்ற பகவானின் ஆஞ்ஞையை அப்படியே அனுபவித்திருக்கிறார் பகவத் ராமனுஜர் தம்முடைய கத்யத்தில்.

உள்ளூரும் சிந்தைநோய் எனக்கே தந்து என்
ஒளிவளையும் மாநிறமும் கொண்டார் இங்கே
தெள்ளூரும் இளந்தெங்கின் தேறல் மாந்திச்
சேலுகளும் திருவரங்கம் நம்மூர் என்னக்
கள்ளூரும் பைந்துழாய் மாலையானைக்
கனவிடத்தில் யான் காண்பன் கண்டபோது
'புள்ளூரும் கள்வா நீ போகேல்' என்பன்
என்றாலும் இது நமக்கு ஓர் புலவி தானே?

என்று திருநெடுந்தாண்டகத்தில் (23) திருமங்கையாழ்வார் உன்னுடைய ஊர், என்னுடைய ஊர் என்று சொல்லாது நம் ஊர் என்று சேஷனும், சேஷியும் சேர்ந்து அனுபவிக்கும் ஊர் என்றார். அப்படிப்பட்ட உயர்ந்த திவ்ய தேஸம் இது.

"காவேரீ விரஜா தோயம் வைகுண்ட்டம் ரங்க மந்திரம்
ஸவாஸீதேவோ ரங்கேசோ பரத்யக்ஷம் பரமம் பதம் ।
விமானம் ப்ரணவாகாரம் வேதச்ருங்கம் மஹாத்புதம்
ஸ்ரீரங்கசாயி பகவாந் ப்ரணவார்த்த ப்ரகாச:" ॥

காவேரி நதியே விரஜா நதியாகவும், ஸ்ரீரங்க க்ஷேத்திரமே வைகுண்ட்டமாகாவும், ஸ்ரீரங்கநாதனே பர வாசுதேவனாகவும் விளங்குகிற அந்த ஸ்ரீரங்கத்தை நான் ஸேவிக்கிறேன். ஸ்ரீரங்க விமானம் ஒங்கார வடிவமானது. பகவான் ஸ்ரீரங்கநாதனே ப்ரணவத்திற்கு பொருளாய் தன்னைக் காட்டி நிற்கிறான் என்கிறது ப்ரம்மாண்ட புராணம்.

தங்க நிற மேனி கொண்ட லக்ஷ்மியின் பதியான நாராயணன், ஸ்ரீரங்கநாதனாக. பொய் விளையாட்டாக தூங்குவது போல் நடிக்கிறான், அந்த ஸ்ரீரங்கநாதனை எல்லா ஆழ்வார்களும், ஆசாரியர்களும் மற்றும் அடியவர்களும் இவன்தான் நமக்கு கதி என்று விரும்பி அடைக்கலம் புகுந்து வணங்குகிறார்கள்.

"அந்தர்ஜ்யோதி: கிமபி யமிநாம் அஞ்ஜனம் யோகத்ருஷ்டே:
சிந்தாரத்நம் ஸ்ரிலபயமிஹ ந: ஸித்தி மோகஷாநுரூபம்" ।

என்று ஸ்வாமி தேசிகன் ஸ்ரீபகவத்யான ஸோபானத்தில் (1) மோக்ஷத்திற்கு சுலபான வழியைக் காண்பிக்கிறார். இங்கு மரணமடைந்தவர் நேராக விண்ணுலகு அடைந்து பரமபத்தில் நித்ய ஸூரிகளுடனும், முக்தர்களுடனும் சேர்ந்து "ஸதா பச்யந்தி ஸூரய:" என்று மகிழ்கிறார்கள். இந்த கோவில் பரமபத்தை நிச்சயம் தரும் என்பது ஆசாரியர்களின் ஒரே முகமான வாக்கு.

ஸ்ரீரங்கத்தை அழ்வார் பதின்மர் பாடிய கோவில் என்பார்கள். ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தின் ஆணிவேராய் திகழும் ஆசார்ய ஸார்வ பௌமர் எம்பெருமானர் அருளிய " ஸ்ரீமந் ஸ்ரீரங்க ஸ்ரீய மதுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய:" என்ற ஸ்ரீசுக்தியை இரண்டு தடவை அனுஸந்திக்காத ஸ்ரீவைஷ்ணவ இல்லாமோ கோவிலோ காண முடியாது. அடியார்கள் வாழி, அரங்க நகர் வாழி என்ற வாழ்த்தொலி ஒவ்வோரு மூலையிலும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

அழ்வார்கள் மங்களாஸானம் செய்த பிரபந்தங்கள் நாளடைவில் பழக்கத்திலிருந்து மறைந்து போயின. ஸ்ரீமந் நாத முனிகள் செய்த யோகத்தின் மகிமையால் ஸ்வாமி நம்மாழ்வார், பாசுரங்கள் நாலாயிரத்தையும் திருப்பிக் கொடுத்து அருள் செய்தார். அதனால் பிரபந்தம் முழுவதுமே மாறன் அளித்த புதையல் என்றே கருதலாம்.

.வேதம் என்ற சொல் "வித்" என்பதலிருந்து தோன்றியது. வித் என்றால் ஞானம், அறிதல், உணர்தல் என்று பொருள். அதனால் வேதம் என்பது அறிவுக்கு சாதனம் என்று ஆகிறது.

ஸகல வேத ஸாரமான திருமந்திரம் ஆரம்பிப்பதே "ஓம்" என்கிற ப்ரணவத்தோடுதான். அந்த ஓங்காரத்தை நாம் ஸிரஸில் ஆபரணம் போல் அணிந்து என்றும் மகிழ்வோம். ஸ்ரீரங்கத்து கோவில் விமானம் ப்ரணவாகார விமானம். அந்த விமானத்தை கோவில் சிகரமாக கொண்டுள்ளவனே என்றும் பொருள் கொள்ளலாம்.

அர்ச்சாவதார மூர்த்திகளில் முதலல்வர் ஸ்ரீரங்கநாதனே. கோவில் என்று பொதுவாகச் சொன்னால் அது ஸ்ரீரங்கத்தையே சிறப்பித்து சொல்லும் ஆழ்வார்களில் மதுரகவிகள் தவிர அனைவரும் அரங்கனைக் கண்டு களித்து இசைத்து அனுபவித்தார்கள் தங்களுடைய பாசுரங்களில்.

1. பெரியாழ்வார்
    - "திருவுடையாள் மணவாளா! திருவரங்கத்தே கிடந்தாய்"
    - "என்னுடைய திருவரங்கற்கு அன்றியும் மற்றொருவர்க்கு ஆளாவாரோ."
    - "அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே"
    - "நமன்றமர்கள் வலிந்து நலிந்தென்னைப் பற்றும்போது அஞ்சலை யென்றென்னைக் காக்க வேண்டும் அரங்கத்தரவணைப் பள்ளியானே"

2. ஆண்டாளோ

- "என்னரங்கத்து இன்னமுதர் குழலழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழில் எழு கமலப்பூ ஆழகர் எம்மானார்"
- "தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்" என்று பாடி மகிழ்ந்துள்ளாள்.

3. குலசேகரனோ
   - "வன் பெருவானகம் உய்ய, அமரருய்ய, மண்ணுய்ய, மண்ணில் மனிசர் உய்ய துன்பமிகு துயர் அகல" என்று வர்ணித்துள்ளார்.

4. திருமழிசையாழ்வார்
   - "கேட்பார்க்கு அரும் பொருளாய் நின்ற அரங்கனே உன்னை விரும்புவதே விள்ளேன் மனம்" என்றார்.

5. தொண்டரடிப்பொடியோ
   - "நாட்டினான் தெய்வமெங்கும் நல்லதோரருள் தன்னாலே காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்கு உய்யும் வண்ணம்",
   - "மற்றுமோர் தெய்வமுண்டோ மதியிலா மானிடர்காள்" என்றார்.

6. திருப்பாணாழ்வாரோ
   - "அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்றார்.

7. திருமங்கை மன்னனோ
   - "பண்டை நான் மறையும் கேள்வியும் கேள்விப் பதங்களும் -- அண்டமும் தானாய் நின்ற எம்பெருமான் அரங்கமாநகர் அமர்ந்தானே",
   - "உள்ளுரும் சிந்தை நோய் --- சேலுகளும் திருவரங்கம் நம்முரென்பர்" என்றார்.

8. முதலாழ்வார்களோ
   - "அன்று கருவரங்கத்துட் கிடந்து கைதொழுதேன் கண்டேன் திருவரங்க மேயான் திசை",
   - "தமருள்ளம் தஞ்சை தலை யரங்கம்",
   - "கொண்டு அங்கு உறைவார்க்கு கோயில்" என்று இசைத்துள்ளார்கள்.

9. நம்மாழ்வாரோ
   - "சங்கு சக்கரங்கள் என்று கை கூப்பும் தாமரைக் கண் என்றே தளரும்" என்று அரங்கனை பாடி மகிழ்கிறார்.

ஸ்ரீ ரங்கநாயிகா ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

2. திருக்கோழி (உறையூர்)

கோழி மணவளான் மங்கை மலராளை மணந்த உறந்தை
ஆழியெனும் விடும் அச்சக்கரமும் கொண்டு நின்ற எந்தை
காணாது மற்றொன்று என்ற நம் பாணன் நிகளாபுரியே
வீணாது வாழ்க்கை அறிவாய் அவர் அகலா உறவையே.

திருக்கோழி என்னும் திவ்ய தேசம் ஸ்ரீரங்கத்தை அடுத்து இருக்கிறது. இந்த ஊரை உறந்தை, உறையூர் என்பர். பகவான் இங்கு அழகிய மணவாளப் பெருமாள் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாரும் பெருமாளுக்கு அருகிலேயே கமலவல்லி, வாஸலக்ஷ்மி, உறையூர் வல்லி என்ற திருநாமங்களுடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறாள். தாயாருக்கு என்று தனி ஸன்னதி கிடையாது.

ஸ்ரீரங்க உத்ஸவ மூர்த்தியான ஸ்ரீரங்கநாதன் இங்கு வந்து சோழ மன்னன் மகளை மணம் புரிந்த ஸ்தலம். அவன் வலது கையில் உள்ள திருவாழி என்னும் சக்கரம் ப்ரயோகிக்கும் நிலையில் (stage) உள்ளது.

"கண்டேன் திருமேனி யான் கனவில் * ஆங்கு அவன் கைக்
கண்டேன் கனலும் சுடராழி - கண்டேன் *
உறு நோய் வினை இரண்டும் ஒட்டுவித்து * பின்னும்
மறு நோய் செறுவான் வலி"

என்று பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியில் (67) பாடினார். முதலில் பகவானின் திருவுருவம் கண்டேன். உடனே என் கண்கள் அவன் திருக்கையை நோக்கியது. அதன் மேல் தீ உமிழ்கின்ற சோதி மயமான சக்கரத்தைக் கண்டேன். உடனே என் ஆத்மாவுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் இரு வினைகள் என்னும் நோயைத் தொலைத்தேன் என்கிறார். அந்த சக்கரத்தை ஏந்தியிருக்கும் கோழி மணவாளா!

"கை அமர் சக்கரக் காவல காக்கும் திருவருளால்
வையம் அளந்த அடிக்கீழ் அடைக்கலம் வைத்து அருளே"

அமிருத ஸ்வாதினியில் (11) ஸ்வாமி தேசிகன் கை அமர் சக்கரக் காவல! என்று திருக்கையில் உள்ள சக்கரத்தால் அடியவர்களை காப்பதில் வல்லவனே என்று சக்கரத்தாழ்வானைக் கொண்டே சரம ஸ்லோகத்தை விவரிக்கிறார். அப்படிப்பட்ட உயர்ந்த சக்கரத்தை ஏந்தியிருக்கும் எம்பெருமானே

"என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"

என்று பாண் இசைத்து அரங்கனைப் பாடிக் களித்த நம்முடைய திருப்பாணாழ்வார் தோன்றியதும் என்னுடைய தந்தையாய் நின்று ஸேவை ஸாதிக்கும் பகவான் உள்ள இந்த உயர்ந்த ஸ்தலத்திலேதான்.

"உன்தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது"

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தன்னோடு
உற்றேமேயாவோம் உனக்கே நாமாட் செய்வோம்"

என்று திருப்பாவையில் (28 29) ஆண்டாள் பகவானுக்கும் நமக்கும் பிரிக்க முடியாத உறவைப் பற்றி சொல்லி அவனுக்கு செய்ய வேண்டிய கைங்கர்யத்தை நினைவுறுத்துகிறாள்

"துலை ஒன்று இலை என நின்ற துழாய் முடியான் உடம்பாய்
விலையின்றி நாம் அடியோம் எனும் வேதியர் மெய்ப்பொருளே"

என்ற ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்கரஹத்தில் (10) ஸாதித்த கருத்தாய் பகவானின் பிரியா உடம்பாய் இருக்கும் சேதனங்களாகிற நாம் அகலாத உறவாய் அவனுடன் சேர்ந்து உள்ளோம். நமக்கும் பகவானுக்கும் உள்ள அழியா உறவை நினைத்து. அவன் நமக்கு செய்யும் உபகாரங்களை மனத்தில் கொண்டு பக்தி என்னும் வெள்ளம் பெருக்கில் சிக்கி, கதறினால் நம்முடைய வாழ்க்கை வீணாகாது. பகவத் பாகவத கைங்கர்யமே பரம புருஷார்த்தம் என மனம் ஈடுபடும்.

திருமங்கையாழ்வார் ஒரு பாசுரமும், குலசேகராழ்வார் ஒரு பாசுரமும் பாடியுள்ளார்கள்.

"கோழியும் கூடலும் கோயில் கொண்ட கோவலர்" என்றார் திருமங்கை மன்னன் பெரிய திருமொழியில்.

"கோழிக்கோன் குலசேகரன்" என்று குலசேகராழ்வார் தன்னுடைய பாசுரங்கள் யாவற்றிலும் தன்னைக் கூறிக் கொள்கிறார். நம்முடைய ஆசார்யர்கள், அந்த கோழி என்கிற சொல் இந்த ஸ்தலத்தையே குறிக்கிறது என்று ஸாதித்தார்கள்.

ஸ்ரீ கமலவல்லீவாஸ லக்ஷ்மீநாயிகா ஸமேத ஸ்ரீஸுந்தரவராய பரப்ரஹ்மணே நம:

3. திருக்கரம்பனூர் (உத்தமர் கோவில்)

ஏந்திய கபாலம் கிள்ளிய தலையால்
ஓள்ளி ஒடுங்கியது பெற்ற பிள்ளையால்
அள்ளி அளித்ததும் வெள்ளை உள்ளத்தால்
திருவுக்கே தன்னைத்தந்த கரம்பனூர் உத்தமனால்

திருக்கரம்பனூர், உத்தமர் கோவில் என்னும் இந்த ஸ்தலத்தில் பகவான் புருஷோத்தமன் என்ற திருநாமத்துடன் புஜங்க ஸயனமாய் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு பூர்வாதேவி, பூர்ணவல்லீ என்று திருநாமம்.

சிவபிரான், தன்னைப் போலவே பிரம்மாவிற்கும் ஐந்து தலைகள் இருப்பதைக் கண்டு பொறுக்க முடியாமல் அசூயையினால் பிரம்மாவின் ஒரு தலையைக் கிள்ளி எறிந்தான். தன் தந்தையின் தலையே சீவியதால், சிவனுக்கு ப்ரம்மஹத்யா தோஷம் பிடித்து கொண்டு, அந்த தலையானது, கபாலமாக அவன் கையில் ஒட்டிக் கொண்டது.

ஸர்வ லோகத்தையும் ஸம்ஹரிக்கும் (அழிக்கும்) கடவுளான அரனுக்குத் தன்னுடைய கையில் ஒட்டிய ஒரு சிறிய கபாலத்தைக்கூட அழிக்க முடியவில்லை. பிரம்மா ஸ்ருஷ்டிக்கும் (படைக்கும்) கடவுள். பிரம்மா படைத்தவன்தான் சிவன். தன்னுடைய மகனே தன் தலையைக் கிள்ளி அங்கஹீனம் செய்து விட்டானே என்று பிரம்மா மனது ஒடுங்கி வெட்கம் அடைந்தான். போதாக் குறைக்கு, குறைந்த தலையை, நிறைக்க மற்றொரு தலையை உண்டாக்கி கொள்ள முடியவில்லை, எல்லா பொருள்களையும் படைக்கும் பிரம்ம தேவனால்.

பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும்
நாயகனவனே கபால நன்மோக்கத்துக் கண்டு கொள்மின்!

என்ற நம்மாழ்வார் திருவாய்மொழியில் இருவரும் ஸ்ரீமந் நாராயணனை வேண்ட பகவான் தனக்கே உள்ள கல்யாண குணங்களினால் அவர்களை மன்னித்து அருளினார். சிவனை மஹாலக்ஷ்மியிடம் பிச்சை எடுக்க வைத்து, அவள் அருளால் கபாலத்தில் பிச்சையிட சிவன் சாபம் தீர்ந்தது. அதனால் இந்த ஸ்தலத்தை பிக்ஷாண்டார் கோவில் என்றும் அழைப்பர்.

ஏறு ஏழும் வென்று அடர்த்த எந்தை எரி உருவத்து
ஏறு எறி பட்ட விடு சாபம் -- பாறு ஏறி
உண்ட தலை வாய் நிறையக் கோடு அம்பை ஓண் குருதி
கண்ட பொருள் சொல்லின் கதை

பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியில் (63) ஸாதிக்கிறார். சிவன் பிரமனின் சாபத்தால் கையில் மண்டையோட்டுடன் திரிந்தான். பருந்துகள், கழுகுகள் கபாலத்தில் அமர்ந்து உண்ணுகின்றன. பகவான் தன் திருமேனியில் ஒரு சிறு பகுதியை நகத்தால் கிள்ளி எறிய ரத்தம் பாய்ந்து கபாலம் நிறைந்தது. பகவான் அருளால் கபாலம்

வெடித்து சிதறியது. மஹா அபராதம் செய்த சிவனுக்கு விமோசனம் பகவானால் அளிக்கப்பட்டது. இந்த கதையை சொல்ல ஆரம்பித்தாலே போதும் அது ஒரு மஹாபாரதம் அளவு நீண்டுவிடும். என்றார்.

ஒருவனை உந்திப் பூ மேல் ஒங்குவித்த ஆகம் தன்னால்
ஒருவனைச் சாபம் நீக்கி "உம்பராள்" என்று விட்டான்

பெரிய திருமொழியில் (5-9-3) திருமங்கையாழ்வாரும் இதே கருத்தைத்தான் தெரிவிக்கிறார்.

இங்கு எழுந்தருளியிருக்கும் தாயார் பூர்ணவல்லி தாயார் என்று திருநாமத்திற்கு ஏற்ப எல்லாம் நிறைந்து இருப்பதால் பகவான் மற்றொன்றை நாடாமல் அவளுக்கே தன்னைத் தந்து புருஷர்களில் உத்தமனாய், புருஷோத்தமானாய் ஸேவை ஸாதிக்கிறான். அதனால் இந்த ஊருக்கு உத்தமர் கோவில் என்றும் பெயர்.

உளன் கண்டாய் நன்னெஞ்சே உத்தமன் என்னும்
உளன் கண்டாய் உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்

என்று பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில் (99) என்னுடைய நெஞ்சமே புருஷோத்தமன் நம்மை ரக்ஷிப்பதற்கே இருக்கிறான். எந்த காலத்திலும் காப்பதற்கு என்றே இருக்கிறான். தன்னை வேண்டுபவர்களின் மனத்தில் ஓடி வந்து அமர்கிறான் என்றார். இந்த பாசுரத்தில் திருவேங்டமுடையானைப் பற்றி ஆழ்வார் சொன்னாலும், புருஷோத்தமன் என்ற பதத்தை கையாண்டிருப்பதால் இந்த ஸ்தல பெருமாளையும் சேர்த்துச் சொல்லும் என்று கொள்ளலாம்.

திருமங்கையாழ்வார் மட்டுமே இந்த பகவானை மங்களாசாஸனம் செய்துள்ளார். இந்த கோவிலைப் பற்றி. திருமங்கை மன்னன் அருளிய "கரம்பனூர் உத்தமனை" என்று இரண்டே வார்த்தைகள் மட்டும்தாம் காணப்படுகிறது பிரபந்தத்தில்

ஸ்ரீ பூர்ணவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ புருஷோத்தம பரப்ரஹ்மணே நம:

4. திருவெள்ளறை

மலை மீது ஒரு கோட்டை தாண்டா மங்கையாள் கிழித்த கோட்டை
தலைமீது வைத்து தாங்கி பங்கயத்தாளிடம் படும் பாட்டை * பால்
அலைமீது துயிலும் பரமன் புண்டரீகனென வெள்ளறை நின்றானே
வலைமீது விழுந்து வணங்கினேன் எம்மாசிரியர் அவர் அருளாலே.

திருவெள்ளறை என்னும் இந்த திவ்ய தேசத்தில் பகவான் புண்டரீகாஷன் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயார் செண்பகவல்லி பங்கயச்செல்வி என்று திருநாமங்கள்.

திருவெள்ளறை, (ஸ்வேதகிரி) என்று சொல்லப்படும் வெள்ளை நிற பாறையால் ஆன மலை மேல் உள்ள கோவில். அது ஒரு கோட்டை போல் உள்ளது. அந்த கோவிலில் எல்லாம் தாயாரின் ஸாம்ராஜ்யம்தான். இங்கு பகவான் அவள் கிழித்த கோட்டை தாண்டாமல் அதற்கு அடங்கியிருப்பவன். அவளைத் தன் தலைமீது வைத்து கொண்டாடுபவன்.

அஸ்யேஶாநா ஜக3தோ விஷ்ணுபத்நீ

என்கிறது யஜுர் வேதம். இந்த பிரபஞ்சம் முழுவதற்கும் மஹாராணியாகவும், விஷ்ணுவிற்கு பத்னியாகவும் இருப்பவள் அல்லவோ அந்த லக்ஷ்மீ!

ஸ்ரீரித்யேவ ச நாம தே ப4க3வதீ
ப்3ரூம கத2ம் தவாம் வயம்

என்று ஸ்வாமி ஆளவந்தார் சதுஸ்லோகியில் (1) குறிப்பிட்டுள்ளார் "ஸ்ரீ என்றே உனக்கு திருநாமம். பகவானைப்போல் நீயும் பகவதியாய் இருக்கிறாய்" என்றார்.

உலகிற்கு எல்லாம் தாயாய் விளங்கும் அவள் பகவானைத் தன் அன்பினால், ஆதரத்தால், காதலினால் படுத்தும் பாடு மிகவும் ரசிக்கத் தகுந்தது என்று நம் பூர்வாசாரியார்கள் ஸாதித்துள்ளார்கள்.

பிதேவ த்வத் ப்ரேயாந் ஜநநி பரிபூர்ணாகஸிஜநே
ஹிதஸ் ரோதோ வ்ருத்த்யா ப4வதி ச கதா3சித் கலுஷதீ4:
கிமேதந் நிர்தே3ாஷ: க இஹ ஜக3தீதி தவமுசிதை:
உபாயைர் விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா ததா3ஸி ந:

ஸ்ரீகுணரத்ந கோஸத்தில் (52) பராசர பட்டர் அனுபவிக்கிறார். தாயே! உனக்கு அன்பனாய் இருக்கும் பகவான் எமக்கு தந்தை. எமக்கு நல்லவை செய்யும் போது அவன் கோபித்துக் கொள்ளவும் கூடும். தந்தையின் ஸ்வபாவம் இது. தவறு செய்த குழந்தைகளிடம் தகப்பன் இவ்வாறு நடப்பது ஸகஜம். நீ என்ன செய்கிறாய்? இடையில் தலையிட்டு, அவனிடம் எமக்காக வாதாடுகிறாய். அவன் தண்டனையை

மறக்க பல உபாயங்கள், போக மயக்கங்கள் இவற்றை செய்கிறாய் என்று தாயார் சேதனனுக்காக பரிந்து செய்யும் காரியங்களைக் கண்டு மகிழ்கிறார்.

வலையுள் அகப்படுத்து என்னை நன்னெஞ்சம் கூவிக்கொண்டு
அலைகடல் பள்ளியம்மானை ஆழிப்பிரான் தன்னை

என்று திருவாய்மொழியில் (5-3-7) பகவான் என்னை அவன் வலளையுள் ஆழ்த்தி பாற்கடல் சென்று உறங்கினான் என்றார்.

க்ஷீராப்தியில் பள்ளிகொண்ட பரமனே இந்த திருவெள்ளறையில் வந்து புண்டரீகாஷன் என்ற திருநாமத்துடன் நின்ற கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். அவனுடைய திவ்ய கல்யாண குணங்கள் என்னும் வலையில் அகப்பட்டு நான் என்னுடைய ஆசாரியர்கள் கண்டு அனுபவித்த முறையிலேயே உன்னை வணங்கி வழிபட்டேன். உய்யக் கொண்டார் மற்றும் நடாதூர் அம்மாளின் ஆசாரியரான எங்களாழ்வான் ஆகிய உயர்ந்த ஆசாரியர்கள் அவதரித்த ஸ்தலம் இது.

ஞானம் கனிந்த நலம் கொண்டு நாள் தோறும் நைபவர்க்கு
வானம் கொடுப்பது மாதவன் * வல்வினையேன் மனத்தில்
ஈனம் கடிந்த இராமானுசன் தன்னை எய்தினவர்க்குத்
தானம் கொடுப்பது * தன் தகவு என்னும் சரண் கொடுத்தே

ஸ்ரீ இராமனுச நூற்றந்தாதியில் (66), திருவரங்கத்தமுதனார் ஸ்ரீயப் பதியான நாராயணன், மோக்ஷ ப்ராப்தியை ஞானவான்களாய் தன் நிலையை அறிந்து வருந்தி பகவானிடம் சரண் புகுபவர்க்கு அளிக்கிறான். ஆனால் நம் இராமானுசனோ, தன்னை அண்டியவர்களுக்கு எல்லாம் வள்ளல் போன்ற உதார குணத்தால் அவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்கிறார் என்றார். ஆசாரியர்கள் மூலம்தான் மோக்ஷத்தை அடைய முடியும், ஆசாரியர்கள் அள்ளித் தர காத்திருக்கிறார்கள் என்ற அற்புதமான கருத்தை திருவரங்கத்தமுதனார் ஒரு சிறிய பாசுரத்தில் வெளியிட்டார்.

யஸ்மாத் தது³பதே³ஷ்டாऽஸௌ தஸ்மாத்³ குருதரோ கு³ரு:

பரமாத்வையே உபதேசிப்பதால் குரு. அவரைவிட மேலானவர் என்றது சாஸ்த்ரம்.

நம் ஸம்ப்ரதாயத்தில் மூன்று திருக்கோயில்கள் தாயாருக்கு ப்ராதான்யமாய் உள்ளன. திருவெள்ளறையில் ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கும், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸ்ரீ ஆண்டாளுக்கும் நாச்சியார் கோலிலில் ஸ்ரீநீளாதேவிக்கும் முதன்மை அளித்து உள்ளார்கள், நம் பூர்வாசார்யர்கள்.

இரண்டு ஆழ்வார்கள் 24 பாசுரங்களால் மங்களா சாஸனம் செய்துள்ளார்கள். பெரியாழ்வார் "திருவெள்ளறை நின்றாய்" என்று ஒரு பதிகம் இந்த பகவானை பற்றி அனுபவித்துள்ளார். திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் "அமரர்க்கு அருள் விளக்கினை சென்று வெள்ளறை கண்டிடுமே" என்று அருளியுள்ளார்.

ஸ்ரீ ரக்த பங்கஜவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ புண்டரீகாக்ஷ பரப்ரஹ்மணே நம:

5. திருஅன்பில் (அன்பில்)

வடிவு அழகியநம்பி ஆட்கொண்டு தன்அன்பில்
அடி காட்டி ஆதியடிமை பட நாகத்தின் மேல்
படியளந்த மேனியைப் பாங்காய் சாய்த்தருளி
குடி கொண்டான் என் மனத்தில் திருஅன்பிலே.

திருஅன்பில் என்னும் திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் பொருமாள் வடிவழகிய நம்பி. பகவான் இங்கு ஸயன கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு அழகிய வல்லி என்ற திருநாமம்.

பகவானின் வடிவழகில் மயங்கி எல்லா ஆழ்வார்களும் ஆசாரியர்களும் பல இடங்களில் அதை அனுபவித்து பாடி இருக்கிறார்கள்

கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ

தாஸாமாவிரபூத் சௌரி: ஸ்மயமாந முகாம்புஜா: ।
பீதாம்பரதரஸ் ஸ்ரக்வீ ஸாக்ஷாத் மந்மத மந்மத: ॥

ரூபௌதார்ய குணை: பும்ஸாம் த்ருஷ்டி சித்த அபஹாரிணம் (ரா-அ 3-29)

பங்கயக் கண்ணன் என்கோ! பவளச் செவ்வாயன் என்கோ!
அங்கதிர் அடியன் என்கோ! அஞ்சன வண்ணன் என்கோ!
செங்கதிர் முடியன் என்கோ! திருமறு மார்வன் என்கோ!
சங்கு சக்கரத்தான் என்கோ! சாதி மாணிக்கத்தையே

என்று திருவாய்மொழியில் (3-4-3) நம்மாழ்வார் பகவானை சுருக்கமாக வர்ணிக்கிறார். ஸ்வாமி ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்திலும், எம்பெருமானார் ஸ்ரீவைகுண்ட கத்யத்திலும் அதி அற்புதமாக பகவானின் வடிவழகை வர்ணித்துள்ளார்கள்.

- திருவடி - ஸௌலப்யம் (எளிமை)
- அபய ஹஸ்தம் - வாத்ஸல்யம் (கருணை, தயை)
- திரு அமர்ந்துள்ள திருமார்பு - திவ்யம் (தூய்மை)
- திருமுகமும், புன்முறுவலும் - ஸௌஸீல்யம் (நீர்மை)
- திருமுடி - ஸ்வாமித்வம் (எல்லாம் உடைமை)
- சங்கு - ஞானம், தீவினையைத் தொலைக்கும் அறிவு
- சக்கரம் - பலம், அஞ்ஞானத்தை அழிக்கும் சக்தி, ஆற்றல்

என்று பகவானின் வடிவும், அழகும், ஆயுதங்களும், அவனுடைய கல்யாண குணங்களும் ஒன்று சேர்ந்து கலந்தே இருக்கின்றன அவை முற்றும் நிறைந்தவன் நாராயணன் ஒருவனே என்கிறார்கள் பூர்வாசாரியர்கள்.

கலந்து என் ஆவி நலம் கொள் நாதன்
புலன் கொள் மாணாய் நிலம் கொண்டானே

என்று திருவாய்மொழியில் (1-8-6) நம்மாழ்வார் கூறுகிறார் வாமனாவதார வடிவழகு என் மனத்தை பறிக்கிறது. என் உடம்பில் கலந்து என் ஆத்மாவிற்கு நல்லது எண்ணும் பகவான் வாமனனாக அவதாரம் செய்தான். இந்திரியங்களை கவர்ந்து அழகிய பிரம்மாச்சாரி வடிவு கொண்டு மஹாபலி மன்னன் முன் சென்று யாசித்தான் என்று பகவனின் வடிவழகில் மயங்கி பாடுகிறார்.

பகவானை உணர்ந்து அவனைப் போற்றிப் புகழ்ந்து வழிபட அவனுடைய அருளே வேண்டும். பகவான் தன் மங்களமான கல்யாண குணங்களினால் சேதனர்கள் பல கோடி ஜன்மங்களின் செய்திருக்கும் பாபங்களை எல்லாம் பொருட்படுத்தாது அவர்கள் மேல் உள்ள அன்பினால், கருணையால் அவர்களை உய்விக்க தானே தன் திருவடிகளைக் காட்டிக் கொடுக்கிறான். தன்னுடைய ஸௌஸீல்யம் (நீர்மை) என்ற குணத்தால் எல்லோரையும் வசப்படுத்தி தன்னையே தந்தருளும் உத்தமன்.

முவுலகும் அளந்த நெடுமால், ஆதி ஸேஷனாகிற (first servant) நாகத்தில் சாய்ந்து படுத்து அழகாய் ஸேவை ஸாதிக்கிறார். அந்த நம்பி என்னுடைய உள்ளத்தில் வந்து அமர்ந்து என்னை உய்விக்கிறான்.

பணிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடி வந்து என்
மனக்கடலில் வாழவல்ல மாய மணாள நம்பீ ।
தனிக்கடலே தனிச்சுடரே தனியுலகே என்றென்று
உனக்கிடமாயிருக்க என்னை உனக்கு உரித்தாகினையே ॥

என்ற பெரியாழ்வாரின் வாக்கின்படி பகவான் தனக்கே உரியதான பரமபதம், பாற்கடல், ஸ்ரீரங்கம் என்ற திவ்ய தேஸங்களைவிட உண்மையான அடியாருடைய இதயங்களில் வாழ்வதையே தனக்கு போக்யமாக எண்ணுகிறான்.

படி கொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பக்தி வெள்ளம்
குடி கொண்ட கோயில் இராமானுசன் குணம் கூறும்

என்று இராமானுச நூற்றந்தாதியில் (37) திருவரங்கத்தமுதனார் பகவத் ராமானுஜர் மனத்தில் எப்பொழுதும் ஸ்ரீமத் ராமாயணமும் அதன் நாயகனான ஸ்ரீராமனும் குடி வந்து என்றும் நிலைத்து நின்றனர் என்றார்.

திருமழிசையாழ்வார் அருளிய நான்முகன் திருவந்தாதியில் "பேரன்பில்" என்ற ஒரே வார்த்தை மட்டும்தான் பிரபந்தத்தில் காணப்படுகிறது.

"நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள் நாகத்தணை அரங்கம் பேரன்பில் நாகத்தணை பாற்கடல் கிடக்கும் ஆதி நெடுமால்" என்று ஏழு திவ்ய தேஸங்களுடன் சேர்த்து அனுபவித்தார்.

ஸ்ரீ ஸௌந்தர்யவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ ஸுந்தரமூர்த்தயே பூர்ணாய பரப்ரஹ்மணே நம:

6. திருப்பேர் நகர் (அப்பக்குடத்தான்)

இரவில் அரவணை அப்பமோ இலக்குமி ஏங்கிய வெப்பமோ
மறைவில் அமரர் கப்பமோ உன் காரண காரிய நுட்பமோ
பிறவி கடத்தும் தெப்பமோ கொண்டபின் நாள் சொற்பமோ
புகுந்த அவன் திருப்பேரோ கோவிலடி அப்பக் குடத்தானோ

திருப்பேர் நகரில் எழுந்தருளியிருக்கும் பெருமான் அப்பக்குடத்தான், அப்பாலா ரங்கநாதன் என்ற திருநாமங்களுடன் புஜங்க ஸயனமாய் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு இந்திரா தேவி, கமலவல்லி என்ற திரு நாமங்கள்.

இந்த கோவிலில் இரவில் பகவானுக்கு அப்பம் செய்து ஸமர்ப்பிப்பது வழக்கம். பகவானின் உடம்பு தாயாரிடம் எப்பொழுது சேர்ந்து இருப்போம் என்ற விரக தாபத்தில் வியர்த்து கொதிக்கிறது. நான்தான் முதல்வன் என்று தெய்வங்கள் பல தன்னைப் பற்றி சொல்லிக் கொண்டும், அந்த தெய்வங்களின் அடியவர்களும் அந்த பொய்யைப் பரப்பிக் கொண்டும் திரிகிறார்கள். உண்மையில், அவர்கள் உன் புகழைப் பாடி, உன்னை ஸேவித்து உனக்கு கப்பம் கட்டுகிறார்கள்.

நாத்தழும்ப நான்முகனும் ஈசனுமாய் முறையால் ஏத்த

என்று பெரிய திருமொழியில் (1-7-8) திருமங்கையாழ்வார் பிரமனும், சிவனும் உன்னை ஸ்தோத்ரம் செய்து வழிபடுகிறார்கள் என்றார்.

நீயும் அவர்கள் செய்யும் அபவாதங்களை, தாங்கள்தாம் முதற் கடவுள் என்று சொல்லித் திரிவதைக் காணாது போல் நடிக்கிறாய். எல்லாம் ஜகத் காரணகனான உனக்கு ஒரு நுட்பமான (complicated, subtle) விளையாட்டு போலும்!

ஸம்ஸாரார்ணவ மக்நாநாம் விஷயாக்ராந்த சேதஸாம் ।
விஷ்ணுபோதம் விநா நான்யத் கிஞ்சிதஸ்தி பராயணம் ॥

என்று விஷ்ணு தர்மத்தில் ஸம்ஸாரக் கடலில் தத்தளிக்கும் ஜீவர்களுக்கு விஷ்ணுவே ஓடம் என்னும் சாதனாமாகிறான் என்று கூறவில்லையா? பிறவி என்னும் கடலை கடப்பதற்கு ஸாதனமான ஒரு தெப்பம் போல் நீ விளங்குகிறாயே, அப்பக்குடத்தானே!

பிடித்தேன் பிறவி கெடுத்தேன் பிணி சாரேன்
மடித்தேன் மனை வாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை
கொடிக் கோபுர மாடங்கள் சூழ் திருப் பேரான்
அடிச் சேர்வது எனக்கு எளிதாயின வாறே

என்று திருவாய்மொழியில் (10-8-3) நம்மாழ்வார் திருப்பேரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் திருவடி சேர்வது மிக எளிது என்றார்.

ஸ்வாமி நம்மாழ்வார் தன் சரம பிரபந்தமான திருவாய்மொழியில் கடைசி திவ்ய தேஸமாக இந்த ஊரைத்தான் அனுபவித்திருக்கிறார். அதனால் நம்மாழ்வார் இங்கிருந்து மோக்ஷத்திற்கு சென்றிருக்கலாம் என்பது ஆசாரியர்கள் கருத்து.

அதனால், இந்த அப்பக்குடத்தான் என்கிற பகவானை மனத்தில் கொண்டவருக்கு மண்ணுலகில் துன்பப்படும் மீதி நாட்கள் மிகவும் குறைவு என்று கருதுகிறார்கள்.

நான்கு ஆழ்வார்கள் 33 பாசுரங்களால் மங்களாஸாஸனம் செய்துள்ளார்கள். பெரியாழ்வார்,

"திருப்பேர் கிடந்த திருநாரணா" என்றார் திருமங்கை மன்னன் "தென் திருப்பேர் எங்கள் மால் இறைவன் நாமம் ஏத்தி நானுய்ந்தவாறே" என்று ஒரு பதிகமே பாடினார்

நம்மாழ்வார், "திருமால் சென்று சேர்விடம் திருப்பேரே", "இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான், "உற்றேன் உகந்து பணி செய்து உன பாதம் பெற்றேன்" என்றெல்லாம் அகமகிழ்ந்தார் ஒரு பதிகத்திலே.

ஸ்ரீ இந்திரவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ அப்பால ரங்கநாத அபூப கடஸ்பர்சி ஹஸ்தாய அதிரஸாபூப கடவத் பரப்ரஹ்மணே நம:

7. திருக்கண்டியூர் (திரிமூர்த்தி க்ஷேத்திரம்)

பிண்டியேந்தி பிழைவருந்தி தவிக்கும் அரனைக்
கொண்டிருக்கும் சாபம் விலக்கிய பெருமானே
வண்டியென்னும் உடல் தண்டிக்கும் முன்னே
மண்டி அடைவோமே நாம் திருக் கண்டியூரே

திருக்கண்டியூரில் ஹரசாபவிமோசனப் பெருமான் என்ற திருநாமத்துடன் பகவான் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு கமலவல்லி என்ற திருநாமம்.

திருக்கரம்பனூர் போலவே இந்த க்ஷேத்திரத்திலும் ஐதிகம். பரமசிவன், தன் தகப்பனான பிரமனின் தலையைக் கிள்ளியதால் அவன் கையில் கபாலம் ஒட்டிக்கொண்டு சாபத்துடன் பிச்சை கேட்டு மண்டையோடு ஏந்தி திரிந்தான்.

வெந்தார் அன்பும் சுடு நீரும்
மெய்யிற் பூசிக் கையகத்து ஓர்
சந்தார் தலை கொண்டு உலகு ஏழும்
திரியும் பெரியோன் தான் சென்று
என் எந்தாய் சாபம் தீர் என்ன
இலங்க முதுநீர் திருமார்பில் தந்தான்

என்று திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (1-5-8) சிவன் கபாலத்துடன் அலைந்ததை விவரிக்கிறார். தான் செய்த தவறுக்காக மனம் வருந்தி பகவான் ஸ்ரீமந் நாராயணனை வேண்டினான்.

திருக்கண்டியூரில் எழுந்தருளியிருக்கும் பெருமான் அருளால் சாபம் நீங்கப் பெற்றான்.. அதனால் இங்குள்ள பகவானுக்கு ஹர சாப விமோசனப் பெருமாள் என்று பெயர். பகவான் சிவனுடைய சாபத்தை கண்டித்ததால் ஊரின் பெயரும் திருக்கண்டியூர் என்று பெயர் வந்திருக்கலாம் என்று கருதுகிறார்கள்..

ஒற்றைப் பிறை இருந்த செஞ்சடையான் பின் சென்று மாலைக்
குறை இரந்து தான் முடித்தான் கொண்டு

பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியில் (17) ஒரு பக்கமாயுள்ள பிறைச் சந்திரனை தலையில் அணிந்த சிவன் திருமாலின் பின் சென்று யாசித்து தன் வேண்டுகோளை நிறைவேற்றிக் கொண்டான் என்கிறார்,

வேதா₃பஹார குரு பாதக தை₃த்யபீட₂ாதீ
ஆபத்₃ விமோசந மஹிஷ்ட்ட₂ பு₂ல ப்ரதா₃நகை: ।

என்று ஸ்தோத்ர ரத்னத்தில் (13). ஸ்வாமி ஆளவந்தார் சிவனை "குரு பாதகன்" என்று கூறினார் தன்னுடைய தந்தையும் குருவுமான பிரம்மாவிடம் அபசாரம் பட்டதற்கு.

ஏ பாவம்! பரமே! ஏழு உலகும்
ஈ பாவம் செய்து அருளால் அளிப்பர்
மாபாவம் விட அரற்கு பிச்சை பெய்
கோபாலக் கோளரி ஏறன்றியே

திருவாய்மொழியில் (2-2-2) ஸ்வாமி நம்மாழ்வாரும் "மாபாதகன்" என்றார். மகா பாபம் செய்தவனை அரன், ஸம்ஹாரக் கடவுள் என்றார். அவனை மன்னித்து சாபம் விலக்கியவனை கோபாலக் கோளரி, ஒரு சிங்கம் போன்ற குழந்தை என்றார்.

தன் தகப்பனின் தலையை அறுத்துத் தள்ளிய மகா பெரும் குற்றத்தை செய்த அரனையே மன்னித்த பகவான் நாம் செய்த அற்பமான குற்றங்களை மன்னித்து அருள மாட்டானா?

வேதங்களில் ஆத்மா என்னும் மாடு, சரீரம் என்னும் வண்டியை இழுக்கிறது அந்த இரண்டையும் ஓட்டுபவனாக பகவான் இருக்கிறான் என்கிறது. ஸ்ரீ வைஷ்ணவ தத்துவமே வண்டி, மாடு, வண்டிக்காரன் என்னும் முன்றுதான் என்று ஆசார்யர்கள் எளிமையான உதாரணம் காட்டுவர்.

மறம் சுவர் மதில்கள் எடுத்து மறுமைக்கே வெறுமை பூண்டு
புறம் சுவர் ஓட்டை மாடம் பரலும்போது அரிய மாட்டீர்

திருமாலையில் (6) தொண்டரடிப்பொடியாழ்வார் கூறுகிறார். நம் உடம்பு பல விதமான ஓட்டை உடைசல் கொண்டது. என்றைக்கு கீழே விழுமோ என்று தெரியாது. அதை மனத்தில் கொண்டு பகவானை அடைந்து மறுபிறவி என்பதையே ஒழிப்பீர்களே என்று அறிவுரை கூறினார்.

வண்டி என்னும் இந்த நலியக்கூடிய உடம்பு நம்மைப் பாடு படுத்தி வதைப்பதற்கு முன் தாமதிக்காமல் திருக்கண்டியூரை அடைந்து ஹர சாப விமோசனப் பெருமானை ஸேவித்து அவன் கருணைக்கு பாத்திரமாவோம்.

திருமங்கையாழ்வார் மட்டும் ஒரே ஒரு பாசுரத்தில் இந்த திவ்ய தேஸத்தை மங்களாசாஸனம் செய்துள்ளார்.

"பிண்டியார் மண்டையேந்திப் பிறன்மனை திரிதந்து உண்ணும் உண்டியான் சாபம் தீர்த்த ஒருவனூர், உலகமேத்தும் கண்டியூர்" என்ற சொற்றொடர் மட்டுமே பிரபந்தத்தில் காணப்படுகிறது.

ஸ்ரீ கமலவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ கமலநாத நாம
ஸ்ரீஹரசாபவிமோசன பரப்ரஹ்மணே நம:

8. திருக்கூடலூர் (ஆடுதுறைப் பெருமாள், ஸங்கம க்ஷேத்திரம்)

கூடிக்கூடிக் களித்த நம் காவலன் வையங் காத்தவன்
பாடிப்பாடி அமரர் பணிந்த பரமன் பாண்டவதூதன்
ஓடியோடிப் பயனொன்றும் கூடாமல் நான் வாடியே
தேடித்தேடி வந்து தேவுடன் சேர்ந்தேன் கூடலூரிலே

திருக்கூடலூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு வையங்காத்த பெருமான், ஜகத்ரக்ஷகன் உய்ய வந்தார் என்று திருநாமங்கள். பகவான் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு பத்மாஸனி, புஷ்பவல்லி என்று திருநாமங்கள்.

ஒரு காலத்தில் தேவர்கள் பகவானுடன் கூடி களிக்க விரும்பினார்கள். நந்தக முனிவருக்கு பகவான் ஸ்ரீமந் நாராயணன் பரத்யக்ஷமாகி அற்புத ஸேவை அளித்தார். அவருடன் தேவர்களும் ஒன்றுகூடி பகவானுடன் ஆடிப் பாடி மகிழ்ந்தார்கள்.

நான் என் வாழ்நாள் பூராகவும் உழன்று பயனற்ற காரியங்களில் ஈடுபட்டு வாழ்க்கையை வீணாக்கினேன். உண்மையான தத்துவங்களைத் தெரிந்து கொள்ளாமல் ஆத்மாவை வெய்யிலிட்டு தேகத்தை நிழலின் போஷாக்கில் மூழ்த்தி காலத்தைக் கடத்தி விட்டேன்

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால் பெருந்துயர் இடும்பையில் பிறந்து

பெரிய திருமொழியில் (1-1-1) திருமங்கை மன்னன் ஆரம்பத்திலேயே சொல்லுகிறார் ஸம்ஸார பந்தத்தில் விழுந்து உழலுகிறேன் என்று. கடைசியில் வாடி வதங்கி உன்னைத் தேடி அடைந்தேன்.

பத்தி முதலாம் அவற்றில் பதி எனக்கு கூடாமல்
எத்திசையும் உழன்று ஓடி இளைத்து விழும் காகம் போல்

என்றார் ஸ்வாமி தேசிகன் அடைக்கலப்பத்தில் (1), காகாசுரன் எல்லா லோகங்களிலும் திரிந்து வாடி வதங்கி தனக்கு சரண் கொடுப்பார் யாரும் இல்லையே என்று மனம் நொந்து கடைசியில் பரதத்துவமாகிற அந்த ராமனிடத்தே சரண் புகுந்தான். உண்மையான ரக்ஷகன் என்பவன் தந்தையோ, தாயோ, சுற்றத்தாரோ இல்லை என்பதை புரிந்து கொண்டேன்.

மாதா பிதா ப்ராதா நிவாஸச் ஸரணம் ஸுஹ்றுத் கதிர் நாராயண: ।

என்ற சுபால உபனிஷத் வாக்கியத்தின் பொருளை கடைசியில் உணர்ந்தேன். ஸ்ரீமந் நாராயணனான நீயே எல்லா ஜீவராசிகளுக்கும் தாயாகவும், தந்தையாகவும், தம்மோடு பிறந்தாவனாகவும், தங்கும் இடமாகவும், மோக்ஷத்திற்கு உபாயமாகவும், நண்பனாகவும், மோஷத்தில் பணி செய்வதற்கு உரியவனாகவும் இருப்பவன் என்று. வாழ்க்கையின் பலனை இன்று உன்னுடன் கூடிய பிறகுதான் நான் அறிந்தேன்.

வேத நூல் பிராயம் நூறு மனிசர் தாம் புகுவரேலும்
பாதியும் உறங்கி போகும் நின்றதில் பதினையாண்டு
பேதை பாலகனதாகும் பிணி பசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன்

திருமாலையில் (3) தொண்டரடிப்பொடியாழ்வார் ஸாதித்த முறையில், வாழ்க்கையை வீணாக்கி விட்டேன். இன்றாவது எனக்கு நல் உணர்வு உன் அருளால் கிடைத்தது. இதன் பின் நான் எப்படி உன்னை மறக்க முடியும்?

மறுத்தார் திருவுடன் மார்பில் தரித்தவன் வாசகத்தை
மறுத்தார் மயக்கமும் மற்று அதனால் வந்த மா நரகு
நிறுத்தார் பவத்தில் நெடு நாள் உழன்றமை கண்டு அதனால்
வெறுத்து ஆரண நெறியே வெள்கி ஓட விரைவர்களே

என்று பரமபதசோபானத்தில் (4) ஸ்வாமி தேசிகன் காலத்த வீணாக்கி பகவான் ஆணையை மீறியவர்கள் கொடு நரக பாபம் செய்தவர்கள். விவேகிகள் ஸ்ம்ஸார்த்தில் கிடந்ததை நினத்து வெறுத்து வேதாந்தங்களில் கூறிய உபாயத்தை அனுஷ்டிக்க முயல்வர்.

வையத்து வாழ்வீர்காள் ------
----- உய்யுமாறு எண்ணி உகந்தேலோ எம்பாவாய்

என்றே ஆண்டாள் திருப்பாவை (2) பாசுரத்தை ஆரம்பிக்கிறாள். செய்வன, செய்யக்கூடாதன என்பதை அறிந்து இந்த கலியுகத்திலே பகவானை பூஜிக்கிறீர்களே என்று வியந்து பகவான் உமக்கு அருள் செய்து வையகத்தை காப்பான் என்றாள்.

அப்படி உலகத்தை ரக்ஷிக்கும் உன்னுடைய திருவடிகளின் பெருமையை உணர்ந்து அதை அடைந்து கெட்டியாக ஸரணம் என்று பிடித்துக் கொண்ட பின் தத்துவங்களோ வேத விசாரணைகளையோ வீணாக எதற்கு அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு ஒரு வேளை கஷ்டப்பட்டு அறிந்தாலும் அவை கடைசியில் உன்னுடைய திருவடிகளைத் தானே காண்பிக்கப் போகிறது.

சிரம் ஜீவதி வைதே3ஹீ யதி3 மாஸம் த4ரிஷ்யதி ।
ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம் ॥

என்று ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் (ஸு 66-10) ராமன் கூறுகிறான். சீதை என்னை விட்டு ஒரு மாதம் பிரிந்து வாழ்ந்திருப்பாளாலானால் வெகு காலம் பிழைத்தவள் ஆகிறாள். கறுமையான கண்களுடைய அவளை நான் ஒரு க்ஷண நேரமும் பிரிந்திருக்க மாட்டேன் என்றார். அது போல் என்னுடைய தெய்வமே! உன் திருவடிகளை கண்டு கொண்டபின் ஒருக்காலும் இனிப் பிரியேன்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாஸாஸனம் செய்திருக்கிறார்.

ஸ்ரீ பத்மாஸனீ நாயிகா ஸமேத ஸ்ரீ ஜகத்ரக்ஷக பரப்ரஹ்மணே நம:

9. திருக்கபித்தலம் (கபிஸ்தலம்)

கொள்ளும் பள்ளி பாற்கடலை விட்டு ஓர் ஆனை அலற
உள்ளம் கொள்ள கிடந்தான் கபித்தலத்த காவிரிக் கரையில்
அள்ளி அருந்த அடியேன் அறிந்தேன் ஆயனின் அருமறை
வெள்கி நகர்ந்தன நமனும் நரகமும், இனி எமக்கேது குறை?

திருக்கபித்தலம் என்ற இந்த திவ்ய தேஸத்தில் பகவான் கஜேந்தர வரதன் என்ற திருநாமத்துடன் புஜங்க ஸயனமாய் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு ரமாமணிவல்லி, பொற்றாமரையாள் என்று திருநாமங்கள்.

பாற்கடலில் க்ஷீராப்திநாதனாய் பள்ளி கொள்ளும் பரமனே நீ அதை விட்டு காவிரிக்கரையில் கபித்தலம் என்ற ஊரில் வந்து கிடந்தாய். ஒரு யானை தன்னுடைய காலை நீரிலிருக்கும் முதலை ஒன்று மறைந்திருந்து கவ்வும். தன் உயிரைக் காத்துக் கொள்ள சக்தி தனக்கு இல்லை என்பதை அறிந்த பிறகு அந்த யானை "ஆதி மூலமே" என்று அலறும் அதை காக்க சித்தமாக இருக்க வேண்டும். பக்தர்களுக்கும் மற்றவரும் இந்த நிகழ்ச்சியை கேட்டு மனம் நெகிழ்ந்து இன்புற வேண்டும் என்று நினைத்து அதற்காகவே இங்கே ஆற்றங்கரை கிடக்கும் கண்ணனாக உன்னை மாற்றிக் கொண்டாயோ?

இடையனாக தோன்றி, தூதனாக சென்று, கடைசியில் தேர்ப்பாகனாயும் ஆகி யுத்தத்தில் பார்த்தனுக்கு பகவத் கீதையை உபதேசித்தாய். அது பார்த்தனுக்கு மட்டுமா? பார்த்தவன், கேட்டவன், கேளாதவன் எல்லோருக்கும் இன்றியமையானது அன்றோ?

"அறிவினால் குறையில்லா அகல் ஞாலத்து அவர் அறிய
நெறி எல்லாம் எடுத்து உரைத்த நிறை ஞானத்து ஒரு மூர்த்தி"

என்று திருவாய்மொழியில் (4-8-6) ஸ்வாமி நம்மாழ்வார் பரந்த இவ்வுலகத்தில் தமக்கு அறிவில் குறை உள்ளது என்பதையே அறியாத மாந்தர்களுக்கு பகவான் கிருஷ்ணன் கர்ம, ஞான, பக்தி, ப்ரப்த்தி யோகங்களாகிற எல்லா உபாயங்களையும் பகவத் கீதையில் எடுத்துரைத்தான் என்கிறார்.

உன் திருவாக்கிலிருந்து தோன்றிய மறையின் பொருளை நான் கண்டு கொண்டேன். நானும் அதைத் தேன் போல் அள்ளிப் பருகி அதன் இன்பச்சுவையை அனுபவித்தேன். "சோகிக்காதே என்னை ஒருவனையே சரணாக அடை" என்பதின் கருத்தைப் புரிந்து கொண்டு உன் திருவடிகளே கதி என்று சரண் அடைந்தேன்.

வேறு தெய்வங்களும் அவற்றின் பலன்களும் அற்பமானவை என்று வெறுத்து ஒதுக்கினேன். அதனால் யமனும், நரகமும் வெட்கப்பட்டு, மனம் குறுகி என்னை விட்டு விலகின.

ஸ்வபுருஷமபி விக்ஷ்ய பாஸ ஹஸ்தம்
வததி யம: கில தஸ்ய கர்ண மூலே ।
பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந்
ப்ரபுரஹமந்யந் ந்ருணாம் ந வைஷ்ணவாநாம் ॥

என்று விஷ்ணு புராணத்தில் யமன் மதுசூதனனை ஸரணம் அடைந்தவர்களை அணுகாதே நான் வைஷ்ணவர்களுக்கு ப்ரபு இல்லை என்று அல்லவோ கூறுகிறான்.

திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் நாமம்
மறந்தும் புறம் தொழா மாந்தர் -- இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்கள் என்றான் நமனும் தன்
தூதுவரைச் செவிக்கு

நான்முகன் திருவந்தாதியில் (65) திருமழிசையாழ்வார் அதே உதாரணத்தையே கூறுகிறார். உலகத்தில் யமனுக்கு யம தர்ம ராஜா என்று பெயர். நேர்மையில் சிறந்தவன். பக்ஷபாதம் என்பதை அறியாதவன். அவன் தன் கிங்கரர்களைக் கூப்பிட்டு காதில் ரஹஸ்யமாக கூறுகிறான். நீங்கள் ஒருவன் உயிரைக் கொண்டு வரச் செல்லும்போது கவனமாக பார்த்து காரியத்தை செய்யுங்கள்.

ஸ்ரீமந் நாராயணனே பரதத்துவம். அவனை பூசனை செய்வதுதான் எல்லா ஜீவராசிகளின் கடமை. அவன் அடிமைகள் ஏதோ ஒரு காரணத்தினால் அதை செய்யாமல் இருந்தாலும் சரி, அவர்கள் வேறு தெய்வங்களை பூஜிக்காமல் இருந்தால் போதும். அவர்கள் எம்பெருமானின் உண்மையான பக்தர்கள்தாம். அவர்களை தொடுவதற்குகூட நமக்கு அதிகாரம் கிடையாது. அவர்களைக் கண்ட பின் வெறுமே திரும்பி வந்தேன் என்று சொல்லாதீர்கள். அந்த அடியவர்களுக்கு பூஜை செய்து விட்டு வந்தேன் என்று சொல்லுங்கள் என்றான்.

ரமாத3யித ரங்க பூர்ண க்ருஷ்ண விஷ்ணோ ஹரே
த்ரிவிக்ரம ஜநார்த3ந த்ரியுக3 நாத2 நாராயண ।
இதீவ ஶப்4தத்3ரயீ ய: பட2தி நாமதே4யாநி தே
ந தஸ்ய யம வஶ்யதா நரக பாத பீ4தி: குத: ॥

என்று அபீதிஸ்தவத்தில் (7) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். லக்ஷ்மிநாதா!, கிருஷ்ணா, எங்கும் வியாபித்திருப்பவனே, பாபங்களை பொசுக்குபவனே, மூவடி வைத்து உலகை அளந்தவனே, பிறவியை ஒழிப்பவனே, ஆறு குணங்களை உடைய பகவானே, நாராயணனே, இப்படி எல்லாம் நலத்தைத் தரும் உன் திருநாமங்களை எவன் ஒருவன் படிக்கின்றானோ அவன் யமனால் வசப்பட மாட்டான். நரகத்தில் விழுந்து விடுவோமோ என்ற பயம் எதற்கு? என்றார்.

"ஆற்றங்கரை கிடக்கும் கண்ணன்" என்று திருமழிசையாழ்வார் ஒருவர் மட்டுமே மங்களாஸாஸனம் செய்திருக்கிறார்.

ஸ்ரீ ரமாமணிவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ கஜேந்த்ரவரத பரப்ரஹ்மணே நம:

10. திருப்புள்ளம்பூதங்குடி

வான்வீடு புள்ளுக்கு அளித்து வாட்டம் தீரக்கோலம் கொண்டு
மான் வேண்டிய மாதைப் பிரிந்த தோள் நான்கன் * வண்டு
தேன் பருகும் பூமலராள் தனித்து நிலமகளுடன் தான் நின்று
நானுகந்த நாரணனை கண்டேன் ராமனில் புள்ளம்பூதங்குடியே.

திருப் புள்ளம்பூதங்குடி என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் வல்வில் ராமன் என்ற திருநாமத்துடன் புஜங்க ஸயனமாய் காட்சி அளிக்கிறான். தாயாருக்கு பொற்றாமரையாள், ஹேமாம்புஜவல்லி என்று திருநாமங்கள். "பூதங்கள் வியும் நாளும் போகி உகம் புகச் செய்த" என்று கம்பன் ராமாயணத்தில் ஜடாயுவை தகனம் செய்தது பற்றி விவரித்திருக்கிறார். அதுவே புள்ளம்பூதங்குடி என்ற பெயராயிற்று.

ஹா ராமா! ஹா லக்ஷ்மண! ஹா ஸுமித்ரே!
ஹா ராமமாத:! ஸஹ மே ஜந்யா

என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் (ஸு 28-8) வரும் ஸ்லோகம். மாரீசன் போலி மானாக வந்தபோது சீதை அந்த மானை விரும்பி மஹானைப் பிரிந்து கதறினாள். ராவணன் சீதையை கவர்ந்து எடுத்துச் செல்லுங்கால் ஜடாயு என்னும் கழுகுக்கூட்ட அரசன் அந்த பாதகனை தடுத்து சீதையை மீட்க எண்ணி போராடி கடைசியில் தோல்வி கண்டார்.

எம்பெருமான் ராமன் சீதையைத் தேடி வருகிறார். வழியில் ஜடாயுவைப் பார்த்து விஷயங்களை அறியும்போது ஜடாயு உயிர் நீத்தார்.

க்ருத்4ரராஜ்யம் பரித்யஜ்ய பித்ருபைதாமஹம் மஹத் ।
மம ஹேதோரயம் ப்ராணாந் முமோச பதகே3ஶ்வர: ॥

என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் (ஆ 68-33) வால்மீகி பகவான் கூறுகிறார். தன் வம்சத்தில் வழிவழியாக வந்த அரசைத் துறந்து இந்த கழுகு அரசர் எனக்காக உயிரை விட்டார் என்று ராமன் கூறுவதாக ஸ்லோகம். ராமன் தான் விட்டுப்போன இஷ்வாகு குல ராஜ்யத்தைவிட கழுகரசன் ஜடாயு விட்ட ராஜ்யம் பிரிவதற்கு அரிது என்பதை "மஹத்" என்ற சொல் விசேஷிப்பதாய் பூர்வாசார்யர்கள் அருளினார்கள்.

ராஜா தசரத: ஸ்ரீமாந் யதா மம மஹாயஶா: ।
பூஜ நீயஶ்ச மாந்யஶ்ச ததாயம் பதகேஶ்வர: ॥
ஸௌமித்ரே! ஹர காஷ்டாநி நிர்மதிஷ்யாமி பாவகம்
க்ருத்ரராஜம் திதக்ஷாமி மத்க்ருதே நிதநம் கதம்

என்று என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் ராமன் கூறுகிறான். லக்ஷ்மணா! அந்திம க்ரியைகளுக்கு ஏற்பாடு செய். பூஜிக்கத்தக்க ஜடாயுவுக்கு நானே தஹநக்ரியை செய்கிறேன் என்று துக்கத்தோடு சொன்னான். ராமன் தன் தந்தைக்கு செய்ய

முடியாமல் போன ஈமக் கடன்களை அந்த ஸ்தானத்தில் ஜடாயுவை வைத்து செய்து முடிக்கிறார். ஜடாயுவுக்கு மோக்ஷம் அளித்தபின் இளைப்பாற கொண்ட கோலத்தில் இந்த கோவிலில் உள்ள பிரான் ஸேவை ஸாதிக்கிறார்.

சீதை அருகில் இல்லாமல் பிரிந்த நிலையில் பெருமாள் புஜங்க ஸயனத்தில் எழுந்தருளி இருக்கிறார். தேனைப் பருக வண்டு தேடி வரும் வாசனை மிகுந்த பூவின் மேல் அமர்ந்திருக்கும் லக்ஷ்மி, சீதையாக அவதாரம் செய்து பிரிந்த நிலையானதால், ஸ்ரீமந் நாராயணன், மண்மடந்தையான பூமிப்பிராட்டியுடன் ஸேவை ஸாதிக்கிறார், அதனால் சக்கரவர்த்தி திருமகனான ராமனுக்கு. உத்ஸவ மூர்த்தி சங்கு சக்ரங்களோடு காட்சி அளிக்கிறார்.

அஷண்ணயோக3பத2ம் அக்3ர்யஹதம் ஜடாயும்
தி3ர்யஞ்சமேவ ப3த மோக்ஷபதே3 நியோக்தும் ।
ஶக்நோஷி வேத்ஸி ச யதா3 ஸ ததா3 கத2ம் த்வம்
தே3வீமவாப்துமநலம் வ்யதி4தோ விசிந்வந் ॥

என்று அதிமானுஷஸ்துவத்தில் (19) கூரத்தாழ்வார் ஸாதிக்கிறார். ஒரு யோகமும் செய்யத, தி3ர்யக் என்னும் விலங்கினத்தை சேர்ந்த ஜடாயு, பிராம்ஹணனாகிய ராவணனால் கொல்லப்பட்டவர். "அந்த ஜடாயுவுக்கு மோக்ஷத்தை அளிக்கும் திறமையை கொண்டாய். அதற்கான வழியையும் காண்பித்தாய். ஆனால் பிராட்டி சென்ற இடம் எது என்று தெரியாது என்று வருந்தினாயே. அது என்ன ஆச்சரியம்?" என்றார்.

நான் உகந்த என்ற பதத்தால் பக்தி யோகம் இங்கு சொல்லப்பட்டது.

யே ஜந்ம கோடிபி4: உபார்ஜித ஶுத்3த4த4ர்மா:
தேஷாம் ப4வச்சரண ப4க்திரதீவ பே4தா3க்3யா ।
த்வத் ஜீவிதைஸ் த்ரிதி3ஶநாயக து3ர்லபை4ஸ்தை:
ஆத்மாநம் அப்யகத2ய: ஸ்வயம் ஆத்மவந்தம் ॥

என்று தேவநாயக பஞ்சாத்தில் (46) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். பகவானே உன் திருவடிகளை ஸதா ஸர்வ காலமும் ஸ்மரிப்பது என்னும் பக்தி யோகத்தை சுலபத்தில் அடைய முடியாது. கோடிக்கணக்கான முன் ஜன்மங்களில் வேறு பலன்களைக் நாடாது சிறந்த தர்மங்களை செய்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் உன் திருவடிகளில் பக்தி செய்வதை இன்பமாக கொள்ள முடியும். அப்படிப்பட்ட பாகவதர்களைக் காண்பது அரிது. அந்த உயர்ந்த பாகவதர்கள் உனக்கே ஆத்மாவாக ஆகிறார்கள் என்று நீயே கூறினாய். பகவத்கீதையில் "ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்" என்று நீயே சொன்னாய் அல்லாவா.

திருப்புட்குழியும் (திவ்ய தேஸம் 57) இதே ஐதிகத்தைக் கொண்டிருக்கிறது. திருமங்கையாழ்வார் இந்த ஸ்தலத்தை ஒரு பதிகம் பாடி மங்களாஸாஸனம் செய்திருக்கிறார். "அறிவது அரியான் அனைத்துலகும் உடையான் என்னை ஆளுடையான்" என்றே பதிகத்தை ஆரம்பிக்கிறார்.

ஸ்ரீ ஹேமாப்ஜ நாயிகா ஸமேத ஸ்ரீ த்ருடதன்வீ ராமபத்ர பரப்ரஹ்மணே நம:

11. திரு ஆதனூர்

ஒருக்காலே நெடுமாலே உன்னை செருக்கால் மறந்தாலும்
இருக்காலே ஏத்தி இறைஞ்ச இயாலாது இருந்தாலும்
முறுக்காலே மோதிய முன்வினை மோகத்தாலும் மறப்பாயே நீ
மரக்கால் கொண்டு ஆண்டு அளக்கும் ஆதனூர் ஐயனே

திரு ஆதனூர் பெருமாளுக்கு ஆண்டு அளக்கும் ஐயன் என்று திருநாமம். இந்த திவ்ய தேஸத்தில் பகவான் புஜங்க ஸயனத்துடன் காட்சி அளிக்கிறான். தாயாருக்கு ரங்க நாயகி என்ரு திருநாமம்.

"பகவானே, நான் ஏதோ ஒரு வினையால், ஒரு காலத்தில் மிடுக்கு மிகுந்து, தலைக் கனத்தினால் உன்னை மறந்து போய்விடலாம். புனிதமான ரிக் போன்ற வேதங்களைக் கொண்டு உன்னை சரணாகதி அடைந்து உன்னையே துதிக்க முடியாமல் போகலாம். காலத்தினாலும், இடத்தினாலும், என்னுடைய உடல், அறிவின் கோளாறினாலும் உன்னை நினைக்கக் கூட முடியாமல் போகலாம்.

கண்ணா! நான்முகனைப் படைத்தானே
காரணா! கரியாய்! அடியேன் நான்
உண்ணா நாள் பசி ஆவது ஒன்றில்லை
ஓவாதே "நமோ நாராண!" என்று
எண்ணா நாளும் இருக் எசுச் சாம
வேத நாண் மலர் கொண்டு உன பாதம்
நண்ணா நாள் அவை தத்துறும் ஆகில்
அன்று எனக்கு அவை பட்டினி நாளே

பெரியாழ்வார் திருமொழியில் (5-6) பகவாவே உன்னை நான்கு வேதங்களாலும் ஓதி, திருமந்திரத்தை ஜபித்து, உன் திருவடிகளை நான் நினைக்காவிடில் அந்த நாள் தான் எனக்குப் பட்டினி நாள் என்றார்.

பகவானே, நான் நல் வழியில் செல்லலாம் என்று நினைக்கும்போதே இளமை முறுக்கேறி பல பிறவிகளிலிருந்து சேர்த்து வைத்திருக்கும் பாபக் குவியல் அத்துடன் மோதி என்னைத் தகாத காரியங்களில் ஆசை உண்டாக்கி வழி பிறழச் செய்யலாம்.

பிரபஞ்சங்களில் உள்ள பொருள்கள் யாவும் படைக்கும் சக்தி உனக்கு உள்ளது. அந்த சக்தியை ஒத்திருக்கிறது பாபத்தையே செய்யும் என்னுடைய சக்தி. அப்படி அளவொண்ணாதபடி செய்துள்ள பாபங்களை போக்கடிக்கவும் முடியுமோ என்று மலைத்துப்போய் இருக்கிறேன்.

பாபாநாம் வா ஸுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம ।
கார்யம் கருணமார்யேண ந கஸ்சித் ந அபராத்யத: ॥

என்று ஸீதாப்பிராட்டியே குற்றம் செய்யாதவன் ஒருவனும் இல்லையே. கருணை காட்டுங்கள் என்று கூறவில்லையா?

அதனால், பகவானே மரக்கால் கொண்டு எல்லாவற்றையும் அளப்பவன், நீ, உன்னுடைய மரக்காலால் என்னுடைய பாபங்களை அளப்பது என்பது உத்ருணீயால் சமுத்திரத்தை அளப்பதுபோல் இருக்கிறது.

நான் செய்த பாபங்களை எல்லாம் மறந்து, என்னை மன்னித்து உன் நினைவையே எனக்கு என்றும் தோன்றும்படி அருள் புரிவாய்.

அபூத பூர்வம் மம பா4வி கிம் வா
ஸர்வம் ஸஹே மே ஸஹஜம் ஹி து:க்2கம் ।
கிந்து த்வதா3க்3ரே ரணாக2தாநாம்
பராப4வோ நாத ! ந தே3Sநுரூப: ॥

என்று ஸ்தோத்ர ரத்னத்தில் (25) ஸ்வாமி ஆளவந்தார் ஸாதித்தார். பகவானே எனக்கு புதியதாக துக்கம என்ன வரப்போகிறது? துக்கம் என்பது என் உடன் பிறந்தது என்று எல்லாவற்றையும் நான் பொறுத்துக் கொண்டே இருக்கிறேன். ஆனால் உனக்கு முன் சரணாகதி செய்தவர்களுக்கு ஏற்படும் அவமானம் உனக்குத் தகுந்தன்று. அதனால் அடைக்கலம் என்று அடைந்தவரை நீ காத்தே தீர வேண்டும்.

தை3வீ ஹ்யேஷா கு3ணமயீ மம மாயா து3ரத்யயா ।
மாமேவ யே ப்ரப3த்3யந்தே மாயமேதாம் தரந்தி தே ॥

என்று பகவத் கீதையில் (7-14) கண்ணன் கூறுகிறான். முக்குணங்களைக் கொண்ட என்னால் படைக்கப்பட்ட இந்த பிரகிருதி மாயையானது. அதைத் தாண்டுவது அரிது. ஆனால் என்னையே எவன் ஒருவன் சரண் என்று அடைகிறானோ அவன் தாண்டுகிறான் என்றான்.

அதனால் சரண் அடைந்த எனக்கு வீண் புத்தியும் அற்ப சுகங்களில் உள்ள ஆசையையும் நீக்கி உண்மை ஸ்வரூபத்தை எப்பொழுதும் நினத்து உனக்கே கைங்கர்யம் செய்ய அருள்வாய்.

திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமடலில் "அன்னவனை ஆதனூர் ஆண்டளிக்கும் ஐயனை" என்ற ஒரே ஒரு சொற்றொடர் மட்டுமே பிரபந்தத்தில் காணப்படுகிறது.

ஸ்ரீ ரங்கநாயிகா ஸமேத ஸ்ரீ வர்ஷகாலாதி நாயக பரப்ரஹ்மணே நம:

12. திருக்குடந்தை (கும்பகோணம்)

சாய்ந்த நிலையில் எம்பிரானுக்கு செவி சாய்த்த ஆழ்வானே
பாய்ந்ததேரில் படியேறா பத்தினியும் வாராதே வரும் ஆராவமுதே
ஆய்ந்த மறைச் சாரத்தை ஓரத்தில் முனிகேட்ட திருக்குடந்தையில்
காய்ந்தன கருமங்கள் கண்டபின் ஓய்ந்து கிடந்தவன் எழுந்தானே.

திருக்குடந்தையில் எழுந்தருளியிருக்கும் பெருமாளுக்கு ஆராவமுதன், சாரங்கபாணி, அபர்யாபதாம்ருதன் என்று பல திரு நாமங்கள். ஆதிஸேஷனின் மேல் உத்தானஸாயியாய் பகவான் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு கோமளவல்லீ, படிதாண்டாப்பத்தினி என்று திருநாமங்கள்.

நடந்த கால்கள் நொந்தவோ நடுங்குஞாலம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ விலங்கு மால்வரைச் சுரம்
கடந்த கால் பரந்த காவிரிக் கரை குடந்தையுள்
கிடந்தாவாறு எழுந்து இருந்து பேசு வாழி கேசனே

என்று திருச்சந்தவிருத்தத்தில் (61) திருமழிசை ஆழ்வார் "பகவானே! ராமாவதாரத்திலும், மற்ற அவதாரங்களிலும் நீ நடந்தே சென்று பல அரிய காரியங்களை சாதித்ததால் சற்று களைப்பாற இங்கு படுத்துக் கிடந்தாயோ? கிடந்த கேசனே நீ எழுந்திரு" என்று திருக்குடந்தையில் ஸயன கோலத்தில் கிடந்த பெருமானை நோக்கிப் பாடினார். அர்ச்சையான பகவானும் ஆழ்வாரின் பாடலுக்கு செவி சாய்த்து எழுந்திருக்க முயலும்போது ஆழ்வாரும் "போதும், போதும்" என வாழ்த்த, பாதி எழுந்தவன் அப்படியே ஸ்தம்பித்து நின்றான் (freeze out). இன்று நாம் பகவானை சேவிப்பது இந்த உத்தானஸாயி கோலத்தில்தான். பகவான் ஆழ்வார் வார்த்தையைக் கேட்டு அடி பணிந்ததால், அவருக்கு ஆராவமுத ஆழ்வான் என்றும் ஆழ்வார் பகவானுக்கே கட்டளையிட்டதால் அருக்கு திருமழிசைப் பிரான் என்றும் பெயர்.

திருக்குடந்தையில் பெருமாள் ஸன்னதியே கல் தேர் சக்கரத்துடன் இருக்கும். உன்னுடைய பத்தினியான கோமளவல்லி பிராட்டியார் ஸன்னதியை விட்டு வெளியே வராமல் படி தாண்டா பத்தினி என்ற புகழுடன் விளங்குகிறாள். அவளுடன் பாய்கின்ற தேரில் ஏறி வருவாயோ?

வாரா வருவாய் வரும் என் மாயா! மாயா மூர்த்தியாய்
ஆரா அமுதாய் அடியேன் ஆவி அகமே தித்திப்பாய்

என்று ஸ்வாமி நம்மாழ்வார் திருவாய்மொழியில் (5-8-10) கூறியது போல் நீ வருகிறாய் என்பது வாரமல் வருவது. அதாவது மற்ற எல்லோரும் ஒரு இடத்தில்தான் இருப்பார்கள். மற்றொரு இடத்திற்கு போக தேகத்தை நகர்த்த வேண்டும். நீயோ ஸர்வ வியாபி. "அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணனாய்" இருக்கும் நீ இருந்த இடம், வந்த இடம் என்று வேற்றுமை உண்டோ? அந்தர்யாமியாய் எல்லோர்

உள்ளத்திலும் உறைந்து இருப்பவனே! நீ என்னிடத்தில் இல்லாமல் இருந்தால்தானே வர முடியும்.

திராவிட வேதத்தின் ஸாரமாக இந்த எம்பெருமானை பற்றி திருவாய்மொழியில் "ஆராவமுதே அடியேனுடலம்" என்ற ஒரு பதிகத்தை கேட்ட நாத முனிகள், அகமகிழ்ந்து, "குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும் மட்டுமே எமக்கு கிடைத்தன என வருந்தி, யோக ஸித்தியினால் பிரபந்தம் அனைத்தையும் ஸ்வாமி நம்மாழ்வாரிடமிருந்து பெற்றார். மறைந்த நாலாயிர திவ்ய பிரபந்தத்தையே காட்டி கொடுத்தவன் இந்த ஆராவமுதன் என்றால் மிகையாகாது.

தீரா வினைகள் தீர என்னை ஆண்டாய் திருக்குடந்தை
ஊரா, உனக்கு ஆட்பட்டும் அடியேன் இன்னும் உழல்வனோ

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் (5-8-10) கூறினார். உத்தமமான அரும் செயல்களை உலகத்திற்கு காட்டிய குடந்தை ஆராவமுதனை ஸேவித்தால் நம்முடைய தீராத வினைகள் தீரும். எத்தனை நாட்கள், வருடங்கள், யுகங்கள், பிறவிகள் வீணாக அற்ப சுகங்களில் கழித்து வாழ்க்கையில் ஓய்ந்து போன நான், விழித்துக் கொள்கிறேன்.

பிரியா அடிமை என்னைக் கொண்டாய் குடந்தைத் திருமாலே
தரியேன் இனி உன் சரண் தந்து என் சன்மம் களையாயே

திருவாய்மொழியில் (5-8-7) நம்மாழ்வார் ஸாத்தித்த முறையில், நீ உன்னை எனக்கு காட்டிக் கொடுத்தாய். உன் திருவடிகளே தஞ்சம் என்று உணர்ந்தேன். அன்று முதல் பகவத் கைங்கர்யத்திலேயே பூர்ணமாக ஈடுபடுகிறேன்.

பத்து ஆழ்வார்களாலும் மங்களாசாஸனம் செய்யப்பட்ட பெருமாள் திருவரங்கன். ஒன்பது ஆழ்வார்களால் செய்யப் பட்ட பெருமை திருவேங்கடத்தானுக்கு உரியது. ஆழ்வார்கள் வரிசையில் அடுத்தபடியாக, ஏழு ஆழ்வார்களால் 51 பாசுரங்கள் பாடிய ஸ்தலம் இதுதான். தவிர "மாறன் உரைக்கு ஆறு அங்கம் சொன்ன" திருமங்கையாழ்வார் ஸாதித்த ஆறு பிரபந்தங்களில் ஒன்றான திருவெழுக்கூற்றிருக்கையில் பாடப்பட்ட ஒரே பெருமாள் இவரே. மற்ற எந்த திவ்ய தேச பெருமாளும் தனக்கே ஒரு பிரபந்தம் என்ற பெருமையை கொண்டவரில்லை.

மூலவரும் உத்ஸவரும் தனித்தனியே பாடப்பட்ட பெருமையும் உடையது இந்த க்ஷேத்திரம். "ஆராவமுதே அடியேன் உடலம்" என்று மூலவரையும், "சாரங்கவிற் சேவகனே" என்று உத்ஸவரையும் கொண்டாடியுள்ளார்கள். அதனால் உபயப்பிரதான க்ஷேத்திரம். என்று அழைப்பதும் உண்டு.

கும்பகோணம் (குடத்தின் மூக்கு) என்பது வட மொழிச் சொல். திருக்குடந்தை என்றே ஆழ்வார்கள் அருளியுள்ளார்கள். "குடமெடுத்தாடிய எந்தை" என்பதே மருவி குடந்தை என மாறியிருக்கலாம் என்று முன்னோர் கருத்து.

ஸ்ரீ கோமளவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ சார்ங்கபாணாய-அபர்யாம்ருதாய பரப்ரஹ்மணே நம:

13 திருவிண்ணகர் (ஒப்பிலியப்பன்)

ஒப்பில்லா அப்பன் உயரும் துய்ய துழாய்ச் சோலையிலே
உப்பில்லா அமுது உவந்துண்ட கருணை மழைக்கண்ணன்
ஒப்பில்லா தாள் காட்டிய திரு விண்ணகர பொன்னப்பன்
தப்பில்லாமல் பற்றினேன் நான் பற்றிய பின் பிறவேனே.

திருவிண்ணகரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஒப்பிலியப்பன்.. தனக்கு ஒப்பார் யாருமில்லை என்று சொல்லும்படியாக ஸ்தானத்தில் இருக்கிறான். பகவான் இங்கே உயர்ந்து நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு பூமி தேவி, பூமி நாச்சியார் என்று திருநாமம். இந்த ஸ்தலத்திற்கு துளஸீ வனம் என்ற பெயரும் உண்டு.

மிருகண்டு ரிஷி புத்ரியான பூதேவியை மணந்த இடம். பூமிப்பிராட்டி முலவர் அருகில் திருக்கல்யாண நிலையில் மண்டியிட்டு வணங்குகிற திருக்கோலம். திருமணம் என்று பகவான் பேசும்போது.. தந்தையான ம்ருகண்டு ரிஷி, பூமிப்பிராட்டி ஆறு வயது கூட நிரம்பாத குழந்தை. அவளுக்கு உப்பு சேர்த்து தளிகை செய்யக் கூடத் தெரியாத பருவம் என்று தட்டிக் கழிக்கப் பார்த்தார். பகவானும் "அதனால் என்ன? நான் இன்று முதல் உப்பே சேர்க்காமல் சாப்பிடுகிறேன்" என்று சொல்லி பூமிபிராட்டிக்காக உப்பைத் துறந்து அவளை மணந்த இடம். அதனால் இங்கு உப்பு சேர்க்காமல்தான் தளிகை. அதனால் ஒப்பிலியப்பனை உப்பிலியப்பனாகவும் (உப்பில்லாத அப்பனாகவும்) நினைக்கலாம்.

பகவானது வலது திருக்கையில் "மாம் ஏகம் ஸரணம் வ்ரஜ" என்ற முத்திரை உள்ளது. இடது திருக்கை தன்னுடைய ஒப்பில்லாத திருவடிகளை காண்பிக்கிறது. இந்த ஒப்பிலியப்பன், பகவான் கிருஷ்ணனுடைய திருவாக்கிலிருந்து வந்த சரம ரகசியத்தை ஒரு கையிலும் மற்றொன்றால் தன்னுடைய பாதங்களை காண்பித்து நம்மை எல்லாம் உஜ்ஜிவிக்க காத்திருக்கும் கருணை மழைக் கண்ணன்..

ஸ்வாமி தேசிகன் தயா ஸதகத்தில் கருணைக்கடலே என்று பாடியுள்ள திருவேங்கடமுடையானுக்கு இந்த ஒப்பிலியப்பன் அண்ணன். ஆகையால் கருணை மழைக்கு அண்ணன் என்றாயிற்று..

என்னப்பன் எனக்காய் இகுளாய் என்னைப் பெற்றவளாய்
பொன்னப்பன் மணியப்பன் முத்தப்பன் என் அப்பனுமாய்
மின்னப் பொன் மதிள் சூழ் திரு விண்ணகர்ச் சேர்ந்தவப்பன்
தன் ஒப்பாரில்லா அப்பன் தந்தனன் தன தாள் நிழலே

என்று திருவாய்மொழியில் (6-3-9) நம்மாழ்வார் ஸாதிக்கிறார். திருவிண்ணகரத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! உனக்குதான் எத்தனை பெயர்கள்? பொன்னப்பன், மணியப்பன், முத்தப்பன் என்றெல்லாம் ஸ்வாமி நம்மாழ்வார் வர்ணிக்கிறாரே! உன்னுடைய திருவடிகளை ஒரு தடவை வந்து அடைந்தால் போதும்.

ஆண்டாய் உனைக் காண்பதோர் அருள் எனக்கு அருளுதியேல்
வேண்டாம் மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே

என்று பெரிய திருமொழியில் (5-6-1) திருமங்கையாழ்வார் இந்த பகவானை வந்து ஸேவித்தவர்களுக்கு மறு பிறப்பு என்பதே கிடையாது என்கிறார்.

உற்றேன் உகந்து பணி செய்து உன பாதம்
பெற்றேன்

என்று திருவாய்மொழியில் (10-8-10) நம்மாழ்வார் ஸாதித்த முறையில் சேதனர்கள் முதலில் பிராட்டியை புருஷகாரமாக பற்றி அவள் மூலம் பகவானை அடைகிறார்கள்.

ஓப்பில்லாதாள் என்று ஒரே பதமாகக் கொண்டால், ஓப்பற்ற புருஷகாரத்தை சேதனர்களுக்கு வாத்ஸல்யத்துடன் அளிக்கும் பிராட்டி தானே உபாயமாகவும், பலனாகவும் நின்று பகவானின் திருவடிகளைக் காட்டிக் கொடுக்கிறாள் என்றாயிற்று.

சாதலும் பிறத்தலும் என்று இவற்றைக்
காதல் செய்யாது உன் கழல் அடைந்தேன்
ஓதல் செய் நான் மறையாகிம் உம்பர்
ஆதல் செய் முவுரு வானவனே!

பெரிய திருமொழியில் (6-1-9) திருமங்கையாழ்வார் மும்மூர்த்தியானவனே உன்னை காண வேண்டும் என விழைந்தேன் என்று ஸாதித்தார்.

மற்றோர் தெய்வம் எண்ணேன் உன்னை என் மனத்து வைத்துப்
பெற்றேன், பெற்றதும் பிறவாமை எம் பெருமான்
வற்றா நீள் கடல் சூழ் இலங்கை இராவணனைச்
செற்றாய், கொற்றவனே! திருவிண்ணகரானே!

என்று பெரிய திருமொழியில் (5-6-1) திருமங்கையாழ்வார் கூறுகிறார். இந்த பகவானையே நினத்து மற்று ஒரு தெய்வங்களையும் நாடாது பக்தர்கள் எல்லோரும் பிறவிக்கடலுக்கு ஒரு முடிவு காண்கிறார்கள் என்றார்.

வளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகை
இளங்குமரன் தன் விண்ணகர்

முன்றாம் திருவந்தாதியில் (61) பேயாழ்வார் யுவகுமாரனான பெருமான் தனது என்று அபிமானிக்கும்படியான திவ்ய தேஸம் திருவிண்ணகரம் என்றார்.

பேயாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் முவரும் 47 பாசுரங்களால் மங்களாஸாஸனம் செய்துள்ளார்கள்.

ஸ்ரீ பூமிதேவீ நாயிகா ஸமேத ஸ்ரீ லவணவர்ஜித ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

14 திருநறையூர் (நாச்சியார் கோவில்)

நெஞ்சத்தில் நம்பியை வைத்து நெருப்புடன் பஞ்சு சேர்த்து
அஞ்சும் சமயத்திற்கு அந்தம் இட்ட ஆழ்வாருக்கு அச்சிட்டு
துஞ்சும்போதும் கொஞ்சம் விலகாது வலிந்த கல்புள்ளூடன்
தஞ்சமடைந்தேன் வஞ்சுளவல்லியை நாச்சியார்கோவிலிலே

திருநறையூர் நம்பீ, ஸ்ரீநிவாஸன், வாசுதேவன் என்ற திருநாமங்களுடன் நின்ற கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு வஞ்சுள வல்லீ, நம்பிக்கை நாச்சியார் என்ற திருநாமங்கள்.

திருமங்கை ஆழ்வார் தன்னுடைய காலத்தில் வேதத்திற்கு புறம்பாய் எழுந்த சமயங்களை எல்லாம் விலக்கி வெற்றி கொண்டார். அஷ்டாக்ஷர ஸித்தியுடன் பகவானை தன் மனத்தில் இருத்தி நாலு கவிப் பெருமாளாக தன்னுடைய பிரபந்தத்தை அருளினார் இந்த திவ்ய தேசத்தில்.

தத்₃ யதா₂ இஷ்வகதூலமக்₃நௌ ப்ரோதம் ப்ரதூ₃யேத ।

நெருப்பில் இட்ட பஞ்சு எப்படி கொளுத்தப்படுகிறதோ என்று சாந்தோக்ய உபனிஷத் கூறுகிறது. அதைப்போல் மீதி சமயங்கள் எல்லாம் நெருப்பில் விழுந்த பஞ்சுபோல் பொசுங்கியது. அந்த மதத்தை சேர்ந்தவர்கள் எல்லோரும் ஆழ்வாரின் பெயரைக் கேட்ட உடனே அஞ்சி ஓடினார்கள். அந்த திருமங்கையாழ்வாருக்கு பகவான் ஸமாச்ரயணம் செய்த இடம். ஆழ்வாருக்கு வைஷ்ணவன் என்ற முத்திரை பதித்த ஸ்தலம்.

பகவானுக்கும் கைங்கர்யம் செய்வதில் பெரிய திருவடி எனப் பெயர் பெற்ற கருடாழ்வார் தனி இடம் வகிக்கிறார். "வேதாத்மா விஹகேஸ்வரோ" என்றார் ஸ்வாமி ஆளவந்தார். திருநறையூரில் வைநதேயர் கல் கருடனாக ஸேவை ஸாதிக்கிறார்.

"வேகே₃ாத்தாநம் விதாநம் வ்யஜநமநுகூ₃ணம் வைஜயந்தீ ஜயந்தீ
மித்ரம் நித்யாப்₄யமித்ரம் யுதி₄ விஜயரதே₂ா யுக்₃யயோக₃ாநபேக்ஷ: ।
த₃ாஸோ நிஷ்பர்யுத₃ாஸோ த₃நு தநய பி₄தே₃ா நி:ஸஹாய: ஸஹாய:
தே₃ாதூ₄யேதாஸ்மதீ₃யம் து₃ரித மத₄ரிதாராதி பக்ஷ: ஸ்வபக்ஷ:" ॥

என்று ஸ்வாமி தேசிகன் கருட பஞ்சாசத்தில் (46) கருடன் பகவானுக்கு பலவிதமாக ஸேவை செய்வதை கூறியுள்ளார். பகவான் அசுரரைக் கொல்லும்போது மேலாப்பாய், குளிர்ந்த விசிறியாய், வெற்றிக்கொடியாய், பகைவருக்கு தானே எதிரியாய், குதிரை பூட்டுதல் இல்லாத தேராய், புறக்கணிக்கமுடியாத அடியாராய் எம்பெருமானுக்கு துணை புரிகிறார். என்கிறார். நி:ஸஹாய: ஸஹாய: என்பதால் பகவானுக்கு வேறு துணை வேண்டாத துணையாக திகழ்கிறார் என்று ஆயிற்று.

பகவானை ஏந்தி உள் பிரகாரம் தொடங்கி வெளியில் வருவதற்குள் கருடன் வலிமை அதிகரித்து அவரை எழுந்தருள பண்ணுபவர்கள் கூட்டம் பல மடங்காக பெருகிவிடும் என்பதை இன்றைக்கும் கண்டு மகிழலாம்.

மேதாவி மஹரிஷி தவமிருந்து மஹாலக்ஷ்மியிடம் நீயே எனக்கு குழந்தையாக வரவேண்டும் என வேண்டினார். தாயாரும் அவருடைய வேண்டுகோளுக்கு செவி சாய்த்து, வஞ்ஜுல மரத்தடியில் ஒரு குழந்தையாக தன்னை உருவெடுத்துக் கொண்டாள். மஹரிஷியும் குழந்தைக்கு வஞ்ஜுலவல்லீ பெயரிட்டு வளர்த்து வந்தார். ஒரு நாள் பகவான் நாராயணனே ஐந்து ரூபங்களாக (வாசுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன், புருஷோத்தமன்) அதிதியாய் (guest) வந்து புசித்தார். சாப்பிட்ட பிறகு அவர்கள் கை அலம்ப வஞ்சுளா தண்ணீர் சேர்த்துக் கொண்டிருந்தாள்.

வஞ்சுளாவின் கூக்குரல் திடீரென்று கேட்க, முனிவரும் ஓடி வந்து பார்த்த போது ஐந்து அதிதிகளும் காணவில்லை. ஆதற்கு பதிலாக நாராயாணனே முனிவர் வியக்கும்படி காட்சி அளித்தார். பகவான் வஞ்சுளாவை மணம் புரிய வேண்ட, ரிஷியும் அதற்கு இசைந்தார், ஆனால் மூன்று நிபந்தனைகளுடன் (conditions). 1. தனக்கு மோக்ஷம் வேண்டும். 2. திருச்சேறையை சேர்ந்த அனைவருக்கும் மோக்ஷம் அளிக்க வேண்டும். 3. தன் பெண் எல்லாவற்றிலும் முதலிடம் பெற வேண்டும். அவளுக்கு பிறகு தான் பகவான் நாராயணனே.

எம்பெருமானும் இதற்கு இசைந்ததால், இது நாச்சியார் (பகவானுடைய பத்தினி) கோவில் ஆயிற்று. இந்த கோவிலில் மூலவர் பெண்ணை தானம் கேட்கும் நிலையிலும், தாயார் அவனைவிட ஒரு படி மேலாகவும் இருப்பதைக் காணலாம். ஸ்ரீதேவி, பூதேவி இல்லாமல் நீளாதேவி மட்டுமே இந்த திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளார்.

நறவார் பொழில் சூழ் நறையூர் நின்ற நம்பீ
பிறவாமை எனைப் பணி எந்தை எம்பிரானே

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் நறையூர் நம்பியிடம் பிறவாமை வேண்டுகிறார்.

அத்தா! அரியே! என்று உன்னை அழைக்க
பித்தா என்று பேசுகின்றார் பிறார் என்னை
முத்தே! மணி மாணிக்கமே! முளைக்கின்ற
வித்தே, உன்னை எங்கனம் நான் விடுகேனே!

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (7-1-8) பகவானை வேண்டி பைத்தியக்காரன் போல் அலைவதை கூறிக் கொள்கிறார்.

திருமங்கையாழ்வார் மட்டும் 110 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.
ஸ்ரீ வஞ்சுளவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

15 திருச் சேறை (பஞ்ச ஸார க்ஷேத்திரம்)

மறை காத்து மண்ணுலகு மடிந்த பின்னும் * கறை தீர்த்து
சிறையென்னும் பிறவி தொலைத்து சீலத்தால் மறை நிறைத்து
வரையிலா சாரநாதன் தன் தேவிமார் ஐவருடன் நிற்கும் * அக்
கரை சேர்க்கும் திருச்சேறையில் நான் ஒருச்சேர விரைந்தேனே.

திருச்சேறை என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் ஸார நாதன் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு ஸார நாயகி என்னும் திருநாமம்.

ப்ரம்மா தன்னுடைய ஸ்ருஷ்டி எல்லாம் முடிந்து ப்ரளய காலம் வரும்போது வேதங்களையும் ஸ்ருஷ்டிக்கு வேண்டிய மூலப்பொருள்களைக் காக்க வேண்டுமே என்றும் மிகவும் கவலை அடைந்தான். பகவான் நாராயணனை வேண்ட, பகவானும் அவனுக்கு ஒரு வழி சொல்லிக் கொடுத்தார். காக்க வேண்டிய பொருட்களை ஒரு மண் பாண்டத்தில் இட்டு மறைத்து வைத்தால் அது ப்ரளயத்திலிருந்து விடுபட்டு நிற்கும் என்று. ப்ரம்மா அப்படிப்பட்ட மண் எங்கே என்று தேடி கடைசியில் திருச்சேறையில் வந்து அங்கிருந்த மண்ணைக் கொண்டு பானை செய்து வேதங்களை காப்பாற்றினதாக வரலாறு.

திருச்சேறை பூமியானது, நமக்கு வேதத்தை ப்ரளய காலத்திலிருந்து பாதுகாத்து கொடுத்தது. இங்கு எழுந்தருளியிருக்கும் பகவான் நம்முடைய பாவக் குவியல்களிலிருந்து நம்மை மீட்டி பிறவிக்கடலை ஒழித்து நம்மை உஜ்ஜீவிப்பான். உண்மை தத்துவமாய் இருக்கும் பரந்தாமனை காட்டிக் கொடுக்க உகந்த ப்ரமாணமாய் இருக்கும் வேதங்களை பகவான் தனக்கே உள்ள ஸௌஸீல்ய குணத்தால் பாதுகாத்து நமக்கு அளித்தான்.

வேதாமே பரமம் ஸஷ்டி வேதாமே பரமம் தனம்।
வேதாமே பரமம் தாம வேதாமே ப்ரஹ்ம சோத்தமம்॥

என்று உபனிஷத்தே வேதங்கள் பகவானின் கண்கள் போல என்று கூறுகிறது.

சாஸ்த்ரயோநித்வாத்

என்று ப்ரம்மசூத்திரத்தில் (ஸ்ரீ - 3) வேதாந்த வாக்யங்கள்தான் ப்ரம்மத்தை உணர்த்தும் என்று வியாஸ பகவான் அருளினார்.

அந்த வேதங்களின் ஸாரமாக, ஸார நாத பெருமாள், தன் பத்தினி ஐந்து பேருடன் (ஐந்து தேவிமார்கள் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி, மஹா லக்ஷ்மி, ஸார நாயகி) என்னை கரை சேர்த்து மோக்ஷ ப்ராப்தியை அளிப்பான் என்ற நம்பிக்கையுடன் விரைந்து திருசேறையை அடைய விரும்புகிறேன்.

துன்பக் கடல் புக்கு வைகுந்த என்பதோர்
தோணி பெறாது உழல்கின்றேன்

என்று நாச்சியார் திருமொழியில் (5-4) ஆண்டாள் ஸம்ஸாரம் என்னும் கடலில் விழுந்தவருக்கு பகவான் விஷ்ணு என்னும் தோணியைத் தவிர கரையேற வழியில்லை என்பதை சுருக்கமாகத் தெரிவிக்கிறாள்.

சரணாமறை பயந்த தாமரையானோடு
மரணாய மன்னுயிர்கட்கு எல்லாம் - அரணாய
பேராழி கொண்ட பிரான் அன்றை மற்று அறியாது
ஓராழி சூழ்ந்த உலகு

என்று முதல் திருவந்தாதியில் (60) பொய்கையாழ்வார் அருளினார். உலகம் உய்வதற்கு உபாயங்களை உபதேசிக்கும் வேதங்களை அளித்த பிரமன் முதலாய் எல்லாப் பிறப்புக்களுக்கும் ரக்ஷை சக்கரமேந்தி நிற்கும் நாராயணனே உன்னைத் தவிர ஏது? என்றார்.

"ஒருச்சேர" என்ற பதத்தால் பக்தர்கள் குழாமுடன் சேர்ந்து பகவானை அனுபவித்தலைச் சொன்னது.

தாராளும் வரை மார்பன் தண்சேறை
எம்பெருமான் உம்பர் ஆளும்
பேராளான் பேர் ஓதும் பெரியோரை
ஒருகாலும் பிரிகிலேனே

என்று பெரிய திருமொழியில் (7-4-4) திருமங்கையாழ்வார் சாரநாதன் பக்தர்களோடுதான் என்றும் இருப்பேன் என்றார்.

ஸ்ரீவைகுண்ட்டம் என்னும் நித்ய விபூதியை அடைந்து எப்பொழுதும், குறைவிலா நித்ய கைங்கர்யம் செய்ய விரும்பி திருவுடன் சேர்ந்த மாலுடன் ஒன்று சேர என் மனம் விழைந்து அதற்கு உபாயமான இந்த திருச்சேறையை வந்து அடைந்தேன்.

திருமங்கையாழ்வார் மட்டும் இந்தப் பெருமானை 13 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

"தொண்டனேன் திருவடியே துணையல்லால் துணையில்லேன்" என்றும் "திருச்சேறை எம்பெருமான் தாள் தொழுவார் காண்மின் என் தலைமேல் ஆரே" என்றும் "எம்பெருமான் தாள் தொழுவார் எப்பொழுதும் என் மனத்தே இருகின்றாரே" என்றெல்லாம் வர்ணித்துள்ளார்.

ஸ்ரீஸாரநாயகீ ஸமேத ஸ்ரீ ஸாரநாத பரப்ரஹ்மணே நம:

16 திருக்கண்ணமங்கை (க்ருஷ்ண மங்கள க்ஷேத்திரம்)

கண்ணன் சுவைக்கச் செய்த பாக்களை பத்தர் தலைமீது நின்று
வண்ணமான முதல்வன் பாலில் காணாயோ நெய்யே என்று
இருந்தும் மறைந்தும் மருந்தாய் திருச்சோலை கண்ணமங்கையுள்
வருந்தும் பித்தன்பாவியைக் காத்தாய் பத்தர் ஆவிப் பெருமானே!

திருக்கண்ணமங்கை என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் பக்த வத்ஸலப் பெருமான், பத்தராவிப்பெருமான் என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தனியாக தாயார் ஸன்னதி. தாயாருக்கு அபிஷேகவல்லி என்று திருநாமம்.

திருமங்கையாழ்வார் இந்த திவ்ய தேசத்தில் உள்ள பக்தவத்ஸலப் பெருமானைப் பற்றி ஒரு பதிகம் பாடி முடிக்கும்போது, கண்ணா, நீயும் இதை சுவைக்கலாம் என்று அருளினார். அந்த பகவான் பக்தர்களின் தலை மீது நின்று தன் ஸ்வரூபத்தை அவர்களுக்கு உணர்த்துகிறான்.

பகவானை கோவிலில் ஸேவிக்கும்போது திவ்ய மங்கள விக்ரஹமாக காண்கிறோம். அவன்தான் பரதத்துவம், முவரில் முதல்வன், அவன் எங்கும் வியாபித்திருக்கிறான் என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியாது. பகவானை அறிவது என்பது பாலில் நெய்யைத் தேடுவது போல் (It is there but you can't see it with your eyes). எம்பெருமான் இருப்பது ஊனக் கண்களுக்குப் புலப்படாது. இப்படி இருந்தும், மறைந்தும் நமக்கு தோன்றுகிறான்.

மருந்தாய் பகவான் எல்லா ஜீவராசிகளுக்கும் உள்ளான். இந்த உலகத்தில் சுகமாய் வாழ்வதற்கோ இல்லை மறுபிறவியின்றி வான்வீடு செல்வதற்கோ அந்த பகவானே நமக்கு மருந்தது என்னும் உபாயம் ஆவான்.

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல்

என்றார் குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் (5-4). மக்கள் வீணாய் மருத்துவனை நாடி அவன்தான் நோய்களை எல்லாம் குணப்படுத்தி உடம்மை சீர் செய்கிறான் என்று போய் விழுகிறார்கள். உண்மையான மருத்துவன் ஒருத்தன் எல்லோருக்கும் மேலாய் இருப்பதை அறிந்து கொள்ளாமல். பகவான்தான் ஸர்வ வியாதிக்கும் மருந்து.

வைப்பாம் மருந்தாம் அடியவரை வல்வினைத்
துப்பாம் புலன் ஐந்தும் துஞ்சக் கொடான் அவன்
எப்பால் யவர்க்கும் நலத்தால் உயர்ந்து உயர்ந்து
அப்பால் அவன் எங்கள் ஆயர் கொழுந்தே

என்று திருவாய்மொழியில் (1-7-2) நம்மாழ்வார் கண்ணனே மக்கள் எல்லோரையும் காக்கும் மருந்து என்றார்.

எருத்துக் கொடியானும் பிரமனும் இந்திரனும் மற்றும்
ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு மருந்து அறிவாரும் இல்லை
மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா

என்று பெரியாழ்வார் திருமொழியில் (5-3-6) பிறவி என்னும் நோய்க்கு மருந்து திருநாரணனே என்ற இதே கருத்தை தெரிவிக்கிறார்.

அச்யுதானந்த கோவிந்த3 நாமோச்சாரண பே4ஷஜாத் ।
நஶ்யந்தி ஸகலா ரோகா3ஸ்ஸத்யம் ஸத்யம் வதா3ம்யஹம் !!

ஶரீரே ஜர்ஜ2ரீ பூ4தே வ்யாதி4க்3ரஸ்தே களேப3ரே ।
ஔஷத4ம் ஜாஹ்நவீதோயம் வைத்3யோ நாராயணோ ஹரி: ॥

அச்சுதன், அனந்தன், கோவிந்தன் என்று வாக்கினால் சொன்னாலே போதும். எல்லா வியாதிகளும் பறந்து ஓடிவிடும். பகவான் ஸ்ரீமந் நாராயணனே எல்லா வியாதிகளுக்கும் உன்னதமான மருந்து (panacea) என்கிறது ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

லக்ஷ்மி தவம் செய்து லக்ஷ்மி வனம் என்ற பெயருடன் திகழும் அந்த திருக்கண்ணமங்கையில் குடி கொண்டிருக்கும் பத்தராவிப் பெருமானே, நான் கணக்கற்ற பாபங்கள் செய்திருக்கிறேன். அதற்காக இன்று வருந்துகிறேன். உன்னையே நினத்து மனம் உருகி பைத்தியம்போல் அலைகிறேன். நீ என்பால் கருணை கொண்டு என்னைக் காப்பற்ற வேண்டும்.

திருமங்கையாழ்வார் மட்டும் இந்தப் பெருமானை 14 பாசுரங்களால் மங்களா சாஸனம் செய்துள்ளார்.

ஏற்றினை இமயத்துள் எம் ஈசனை இம்மை மறுமைக்கு மருந்தினை
ஆற்றலை அண்டத் தப்புறத் துய்த்திடும் ஐயனைக் கையில் ஆழி ஒன்று ஏந்திய
கூற்றினை குரு மாமணிக்குன்றினை நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை
காற்றினைப் புனலைச்சென்று நாடிக் கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே

பெரிய திருமொழியில் (7-10-5) என்றும்

"பாலுள் நெய்யினை மாலுருவாய் நின்ற விண்ணினை",
"எங்களுக்கருள் செய்கின்ற ஈசனை" என்றும் பாடியுள்ளார்.

என்றார்.

ஸ்ரீஅபிஷேகவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ பக்தவத்ஸல பரப்ரஹ்மணே நம:

17 திருக் கண்ணபுரம் (கிருஷ்ணாரண்ய கேஷத்திரம்)

கொண்ட கேசமும் ஏந்திய கையும் ஒதிய மந்திரத்தின் பொருளும்
மாண்டால் வான்வீடு எனக்காட்டிய அடியும் அரங்கன் நடையும்
தொண்டருக்கே அடிமையென கேட்டறிந்த நீலமேகப் பெருமானே!
கண்டுகந்த கண்ணபுரத்து காவலனே என் ராகவனே துயிலாயோ!

திருக்கண்ணபுரம் ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் மூலவருக்கு நீலமேகப் பெருமாள் என்றும் உத்ஸவருக்கு சௌரிராஜன் என்றும் திருநாமங்கள். பகவான் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு கண்ணபுர நாயகி என்னும் திருநாமம்.

ஒரு காலத்தில், ரங்கபட்டர் என்ற பக்தர் மன்னனுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்ற பகவான் தான் கேசம் கொண்டு ஸேவை ஸாதித்ததாக வரலாறு. பத்மாவதி என்னும் வேடுவப் பெண்ணை மணந்த கோலத்திற்கேற்ப, உத்ஸவர் கன்னிகாதானம் வாங்கும் கையேந்திய நிலையில் இருக்கிறார்.

திருமங்கையாழ்வாருக்கு திருமந்திரம் உபதேசம் செய்யப்பட்ட ஸ்தலம். அதனால் ஸ்ரீமதஷ்டாக்ஷர மஹாமந்திரஸித்தி கேஷத்திரம் என்று வழங்கப்படுகிறது. பகவான் ஆழ்வாருக்கு திருமந்திரம் ஸாதித்து ஆழ்வாரிடம் தான் காது குளிர திருப்பிக் கேட்க வேண்டும் என்ற ஆசையுடன் "ஓய் ஆழ்வாரே நீர் திருமந்திரத்தை அறிந்து கொண்டீர். அதன் பொருள் என்ன என்று எமக்கு திருப்பிச் சொல்லவும்" என்று ஆசையுடன் வினவினார்.

மற்றும் ஓர் தெய்வம் உளது என்று இருப்பாரோடு
உற்றிலேன் * உற்றதும் உன் அடியார்க்கு அடிமை *
மற்று எல்லாம் பேசிலும் நின் திரு எட்டு எழுத்தும்
கற்று * நான் கண்ணபுரத்துறை அம்மானே

என்று பெரிய திருமொழியில் (8-10-3) திருமங்கையாழ்வாரும் "நின் திருவெட்டெழுத்தும் கற்று, உற்றதும் உன் அடியார்க்கடிமை" என்று பதிலளித்தார். பகவான் ஆழ்வாருக்கு திருமந்திரத்தை அறிவித்தாலும், அதனுடைய சாரம் என்பது "பாகவத சேஷத்வமே" என்கிற பொருளை பகவானே ஆழ்வாரிடம் கேட்டறிந்த ஸ்தலம்.

வேதம் அறிந்த பகவர் வியக்க விளங்கிய சீர்
நாதன் வகுத்த வகை பெறும் நாம் அவன் நல் அடியார்க்கு
ஆதரம் மிக்க அடிமை இசைந்து அழியா மறை நூல்
நீதி நிறுத்த நிலை குலையா வகை நின்றனமே

என்று அதிகார ஸங்கரஹத்தில் (23) ஸ்வாமி தேசிகன் பாகவத கைங்கர்யமே எல்லை நிலம் என்பதை விளக்கினார். வேதாந்தத்தை அறிந்த பாகவதர்கள் ஆச்சர்யப்படும்படி

திருக்கல்யாண குணங்களை உடைய எம்பெருமானுடைய நியமனத்தில் அழியாத வேதங்களில் சொன்ன முறைப்படி அவனுடைய அடியவருக்கு அன்பு மிகுந்து கைங்கர்யத்தை செய்து வாழ்ந்தோம் என்றார். அந்த முறையில் பாகவதர்களுக்கு தொண்டு செய்து வாழ்வதே உயர்ந்த புருஷார்த்தம். நான்கு மறைகளும் அறிவிக்கக்கூடிய சாரார்த்தம் இதுதான்.

சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கு எல்லாம்
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் ।

என்றார் ஸ்வாமி நம்மாழ்வார். அதன்படி இங்குள்ள பெருமாளை நினைப்பவருக்கு "சரணம் கொள்" என்று தன் திருவடி நிலையை காட்டி மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையே அளிக்கும் பிரான்.

விபீஷணன், ஸ்ரீரங்கநாதனை காவிரிக்கரையில் எழுந்தருள பண்ணிய பிறகு அவருடைய நடை அழகை ஸேவிக்க முடியவில்லையே என்று வருந்த ஸ்ரீரங்கநாதனும் தை அமாவாசையன்று திருக்கண்ணபுரத்தில் வந்தால் உமக்கு நடை அழகை காண்பிப்போம் என்றார். அதன்படி வருஷத்திற்கு ஒரு நாள் ஸ்ரீரங்கநாதன் நடையழகை இங்கே காணலாம்.

வருந்தாதிரு நீ மட நெஞ்சே
நம்மேல் வினைகள் வாரா

என்று பெரிய திருமொழியில் (8-6-6) திருமங்கை மன்னன், இந்த பகவானை ஸேவித்த பின் ஏன் வருந்துகிறீர் என்றார்.

கண்ணனுடைய புரம் என்று வழங்கினாலும், இங்குள்ள பெருமாளை ராமனாகவே கண்டார் கோழியர்கோன் குலசேகரன். "மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே" என்று ராமனுக்கு தாலாட்டு பாடிய திவ்ய தேஸம். "கண்ணபுரத்தமுதே" என்று பெரியாழ்வார் மங்களாசாஸனம் செய்த பெருமானை நாமும் உகந்து அவனே நமக்கு காவலன் என்று திட நம்பிக்கையுடன் அவனுடைய திருவடிகளை அடைவோம்.

பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் 71 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

திருமங்கையாழ்வார் கவித்திறனுக்கு ஒரு எடுத்துக் காட்டு, பெரிய திருமொழி (8-7-1)

வியமுடை விடையினம் உடைதர மடமகள்
குயமிடை தடவரை யகலம துடையவர்
நயமுடை நடையனம் இளையவர் நடைபயில
கயமிடை கணபுரம் அடிகள் தம் இடமே

ஸ்ரீ கண்ணபுர நாயிக ஸமேத ஸ்ரீ நீலமேக பரப்ரஹ்மணே நம:

18 திருக்கண்ணங்குடி

அன்று அவனியில் தோன்றி அனைவரையும் காத்த பரமன்
ஒன்றாய் முனியின் பாசக் கயிற்றில் கட்டுண்ட இறைவன்
நன்றாய் வாழ்த்தி வறுமை நீக்க உன்னை அடைந்தேன் நீ
நின்ற திருக் கண்ணங்குடியில் சாமமேனி லோகநாதனே

திருக்கண்ணங்குடி என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் லோகநாதன், ச்யாமள மேனிப் பெருமான் என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார். தாயாருக்கு லோகநாயகி என்று திருநாமம். காயா மகிழ், உறங்காப்புளி, தோலா வழக்கு, உறாக்கிணறு என்று புகழ் பெற்ற திவ்யதேசம் திருக்கண்ணங்குடி.

ஜந்ம கர்ம ச மே தி3வ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத: ।
த்யகத்வா தே3ஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந ॥

என்று பகவத் கீதையில் (4-9) கண்ணன் தன்னைப் பற்றி கூறிக் கொள்கிறான். பரம பதத்திலிருந்து இறங்கி இந்த பூமிக்கு வந்து பல அவதாரங்கள் எடுக்கிறேன். என்னுடைய பிறப்பும் செயலும் தெய்வீகமானவை. குறையில்லாதவை. உலக இயற்கைக்கு அப்பாற்பட்டவை என்று தன்னுடைய அவதாரங்களை சொல்லித் தானே வியக்கிறான். பகவானை அவ்வாறு அறிந்த சேதனன் மறு பிறப்பு எடுப்பதில்லை. என்னையே அடைகிறான் என்றார்.

பொய் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்கு உடம்பும் *
இந்நின்ற நேர்மை இனியாம் உறாமை * உயிரளிப்பான்
எந்நின்ற யோனியுமாய் பிறந்தாய் இமையோர் தலைவா
மெய்ந்நின்று கேட்டருளாய்* அடியேன் செய்யும் விண்ணப்பமே

திருவிருத்தத்தில் (1) நம்மாழ்வார் பகவானிடம் வேண்டுகிறார். எல்லா ஜீவன்களையும் காத்து அருள்வதற்காகவே எது என்று அளவிடமுடியாதபடி பிறப்பு உடையவனாய் அவதாரம் செய்த முக்தர்களின் தலைவனே, தவறான அறிவும், கெட்ட நடத்தையும், வெறுக்கத்தக்க உடம்பும் கூடிய இந்த பிறவித்தன்மையை நாங்கள் இனிமேலும் பெறக் கூடாது. உன் தொண்டனான நான் செய்யும் விண்ணப்பத்தை என் முன் ஸத்யமாய் நின்று கேட்டு அருள வேண்டும் என்றார்.

அப்படி பகவான் செய்யும் பலவிதமான அவதாரங்களும் இங்குள்ள பெருமாள்தான் என்று திருமங்கையாழ்வாரால் மங்களாஸாஸனம் செய்யப் பட்டவர்.

ஒரு நாள் கண்ணன் வெண்ணெய் தேடி, வஸிஷ்டர் வெண்ணெயை கோபாலனாக உருட்டி செய்த பிம்பத்தை அமுது செய்ய விரும்பினார். அதைக் கண்ட மஹரிஷிகள் கண்ணனைப் பிடித்து பக்தி என்னும் பாசக் கயிற்றால் கட்டினார்கள்.

கட்டுண்ட கண்ணன் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இந்த ஊருக்கு திருக்கண்ணங்குடி என்று பெயராயிற்று.

தரித்திருந்தேன் ஆகவே தாரகணப்போர்
விரித்து உரைத்த வெந்நாகத்து உன்னை - தெரித்து எழுதி
வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும்
பூசித்தும் போக்கினேன் போது

நான்முகன் திருவந்தாதியில் (63) திருமழிசையாழ்வார் சொல்லுகிறார். ஜோதிட சாஸ்த்ரத்தை வெளியிட்ட ஆதிசேஷனின் மேல் துயிலும் பகவானே! உன்னை உள்ளபடி உணர வேண்டும். எப்பொழுதும் அனுஸந்தித்தும். எழுத்தில் எழுதியும், அவற்றைப் படித்தும், சான்றோர் பலரிடமும் பலமுறை கேட்டு அறிந்தும், பகவானை வணங்கியும், பூஜைகளைச் செய்தும் என் காலத்தைக் கழிக்கின்றேன் என்றார்.

கார் கலந்த மேனியான் கைகலந்த ஆழியான்
பார் கலந்த வல் வயிற்றான் பாம்பணையான் * சீர் கலந்த
சொல் நினைத்து போக்கரேல் சூழ்துயரின் ஆழ் துயரை
என் நினைந்து போக்குவர் இப்போது

என்று பெரிய திருவந்தாதியில் (86) நம்மாழ்வார் ஸாதிக்கிறார். மேகத்தை ஒத்த திருமேனியும் திருக்கையிலே சக்கரத்தையும்,. ப்ரளய காலத்தில் பூமியயை தாங்கும்படி வலிமையான வயிறையும், அனந்தாழ்வானை படுக்கையாகவும், மேன்மையான குணங்களையும் உடையவன். அவனுடைய திருநாமங்களை சொல்லி தம்மை சுற்றி இருக்கும் பாபங்களால் வருத்தும் துன்பத்தை போக்கி கொள்ளாமல் வேறு எதைச் சொல்லி போக்குவார்கள்? என்று வினவினார்.

அதை மனத்தில் கொண்டு இங்கு எழுந்தருளியிருக்கும் நின்ற கோலத்தில் ஸேவை ஸாதிக்கும் நீலமேக பெருமாளை அடைந்து காலக்ஷேபம் செய்பவருக்கு வறுமை என்பதே கிடையாது. சாம மேனி என்பது ச்யாமள மேனி. காலக்ஷேபம் என்ற வட சொல்லுக்கு பொழுது போக்கு என்று தமிழில் பொருள்,

திருக்கண்ணபுரம், திருக்கண்ணமங்கை, திருக்கண்ணங்குடி, திருக்கபிஸ்தலம், திருக்கோவலூர் இந்த ஐந்தும் பஞ்ச கிருஷ்ண க்ஷேத்திரங்கள் என்று வழங்கப்படுகின்றன.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் (பத்து பாசுரங்கள்) பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். "திருக்கண்ணங்குடியுள் நின்றானே" என்று மச்ச, வராக, வாமன, பரசுராம, ராம, கிருஷ்ண அவதாரங்கள் செய்தவன் இந்த தாமோதர நாராயணன் என்று பாடி பரவசமகிறார். கடைசியில் "வல்லர்க்கு இல்லை நல்குரவே" என்று இவற்றைப் படித்தால் வறுமையே வராது என்கிறார்.

ஸ்ரீ லோகநாயகீ ஸமேத ஸ்ரீ லோகநாத பரப்ரஹ்மணே நம:

19 திரு நாகை (நாகப் பட்டினம்)

கருத்தில் அழகைக் கொண்டு என் மனம் அடையத் துணியும்
வருத்தி உடலும் கண்ணன் கடல் வண்ணனே எனப் பணியும்
இருத்தி மன்னவர் வானவர் ஆக்கி இருவினையும் விலக்கும்
திருத்தி கதையுடன் நிற்கும் திருநாகை நீலமேகனே என்றும்

திருநாகையில் பெருமாள் கதையுடன் நீலமேகப் பெருமாள் என்ற திருநாமத்துடன் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். உத்ஸவருக்கு ஸௌந்தர்ய ராஜன் என்று திருநாமம். தாயாருக்கு ஸௌந்தர்யவல்லி என்று திருநாமம்.

திருமங்கையாழ்வார் நாயிகா பாவத்தில் இந்த பகவானை "அச்சோ ஒரு அழகியவா" என்று அனுபவிக்கிறார். தோழிக்கு உரைப்பது போல் தலைமகனின் உருவத்திலும், குணங்களிலும் மனத்தை பறி கொடுத்து தன்னை மறந்து அவனைப் புகழ்ந்து பாடிய ஸ்தலம்

ப்ரபு3த்3த முக்தா4ம்பு3ஜ சாருலோசநம்
ஸவிப்4ரம ப்4ரூல முஜ்ஜ்வலாதா4ரம் ।
ஸ்மிதம் கோமள கண்ட3 முந்நஸம்
லலாட பர்யந்த விலம்பி3 தாலகம் ॥

என்று ஸ்வாமி ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னத்தில் (35) பகவானின் திருமேனி அழகை வர்ணித்துள்ளார். "அப்பொழுது மலர்ந்த தாமரைப் போல் அழகிய திருக்கண்களும் நெறிந்தும் வளைந்ததுமான கொடி போன்ற புருவங்களும் பிரகாசிக்கும் உதடுகளையும், பரிசுத்தமான புன்சிரிப்பும், அழகிய கன்னங்களும் உயர்ந்த திருமூக்கும், திருநெற்றி வரை தொங்கும் திருக்குழல்களும்" என்று, இதற்கு மேல் அழகை விவரிக்க வார்த்தைகள்தாம் இல்லை.

விண்ணுற நீண்டு அடி தாவிய மைந்தனை
வேற்கண் மடந்தை விரும்பி
கண்ணுற என் கடல் வண்ணனைக் கூவு
கருங்குயிலே என்ற மாற்றம்

நாச்சியார் திருமொழியில் (5-11) பகவானின் திருமேனி சௌந்தர்யத்தில் மூழ்கி, விரக தாபத்தால் இளைத்து வெளுத்த ஆண்டாள் குயிலை நோக்கி கடல் வண்ணனாகிற எம்பெருமானிடம் சென்று என் நிலையைப் பற்றிக் கூறு என்று தூது விடுகிறாள்.

இத்தனை அழகையும் கருத்தில் கண்ட தலைவி அவரை அடையவே மனம் துடிக்கிறாள். கடல் வண்ணர், கட்டழகு உடையவர், என்று எல்லாம் வர்ணிக்கப்பட்ட பெருமானை யாருக்குத்தான் அடையத் தோன்றாது? ரூபத்திலும், குணத்திலும் மட்டுமா அவர் சிறந்தவர்? தம்மை அடைந்தவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளல் அல்லவோ?

தேசும் திறலும் திருவும் உருவமும்
மாசில் குடி பிறப்பும் மற்றவையும் பேசில்
வலம் புரிந்த வான் சங்கம் கொண்டான் பேராத
நலம் புரிந்து சென்று அடையும் நன்கு

பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதியில் (10) சொல்லுகிறார். வலம்புரி சங்கு ஏந்திய எம்பெருமானின் திருநாமங்களைச் சொல்லத் தொடங்கினால் நல்ல தேஜஸ்ஸும், வெற்றித் திறமையும், ஐசுவர்யமும், அழகிய தோற்றமும், நல்ல பண்புள்ள குலத்தில் பிறப்பும், மற்ற எல்லா நன்மைகளும் தாமாகவே வந்தடையும்.

தரும் அரும் பயன் ஆய திருமகளார் தனிக் கேள்வர்
பெருமை உடைய பிரானார் இரு வினை கடிவாரே

என்று திருவாய்மொழியில் (1-6-9) நம்மாழ்வார் திருமால் ஜன்மாந்தரமாக தொடரும் நம் இருவினைகளையும் போக்குவார் என்றார்.

சாய இருவல்வினைகளும் சரித்து மாயப் பற்று அறுத்து
தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி வீடு திருத்துவான்

என்று திருவாய்மொழியில் (1-5-10) நம்மாழ்வார் நம் வினைகளை நீக்கி உலகப் பொருள்கள் மீது உள்ள ஆசைகளை அகற்றி வான் வீடு பெற நல்வழியை அவனே அருள்வான் என்றார்.

இருந்தேன் இருவினைப்பாசம் கழற்றி இன்றி யான் இறையும்
வருந்தேன் இனியெம் இராமானுசன், மன்னு மாமலர்த்தாள்
பொருந்தா நிலையுடைப் புன்மையினோர்க்கொன்றும் நன்மைசெய்யாப்
பெருந்தேவரைப் பரவும் பெரியோர்கள்தம் கழல் பிடித்தே

என்று ஸ்ரீ இராமானுச நூற்றந்தாதியில் (62) திருவரங்கத்தமுதனார் ஆசாரியர் ராமானுஜர் திருவடிகள் அடைந்தவர்கள் இருவினையும் விலக்குவர் என்றார். அது போல் இந்த பெருமானை சரணடைந்தவர்கள் இவ்வுலகத்தில் எல்லா போகங்களையும் பெற்று, தேவர்களாகி, தேவலோகத்தையும் அடைந்து மகிழ்வர் என்றார்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். ஒன்பது பாசுரங்களில் "அச்சோ ஒரு அழகியவா" என்றே சொல்லி பகவானிடம் மயங்கி அவன் பெயரையும், ஊரையும் மறந்து கடைசிப் பாசுரத்தில் "நாகை அழகியாரை" என்று சொல்லி முடிக்கிறார்.

ஸ்ரீ ஸௌந்தர்யவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ நீலமேக பரப்ரஹ்மணே நம:

20 திருத்தஞ்சை மாமணிக் கோவில்

அஞ்சல் கொண்ட நாரணனே எல்லாம் நீயே நீலமேகனே
தஞ்சக வேழத்தை ஆளியாய் அழித்தாயே * நம் தேசிகனை
நெஞ்சத்துடன் சொல்லாமல் சொல் எனும் மணிக்குன்றத்தையே
தஞ்சமென அடைந்தேன் முன்றையும் தஞ்சை மாமணிக்கோவிலிலே

தஞ்சை மாமணிக்கோவில் என்பது மாமணிக்கோவில், மணிக்குன்றம், தஞ்சையாளி என்ற முன்று கோவில்களைக் கொண்டது. பகவான் நீலமேகப் பெருமான், மணிக்குன்றப் பெருமான், நரசிம்மன் என்ற திருநாமங்களுடன் இந்த முன்றிலும் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு செங்கமலவல்லி, அம்புஜ வல்லி, தஞ்சை நாயகி என்று திருநாமங்கள்.

சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன் மக்களும்
மேலாத் தாய் தந்தையரும் அவரே இனி ஆவாரே

பெற்ற தாய் நீயே பிறப்பித்த தந்தை நீ
மற்றை யார் அவாரும் நீ பேசில் -- ।

என்றார் ஸ்வாமி நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் (6). பகவான் ஒருவனே நமக்கு எல்லா உறவும். மற்றைய ஸம்பந்தங்கள் எல்லாம் அநித்யம், நிலையற்றது என்றார்.

நான் கண்டு கொண்ட நாராயணா என்னும் நாமத்தால் அறிந்தேன் நீலமேகப் பெருமானே நீயே எனக்கு தாய், தந்தை, உற்றமும், சுற்றமும் என்பதை. உணர்ந்தேன்.

"பித்ரு மாத்ரு ஸ்ரீதப்ராத்ரு தர மித்ராத யோபிவா ।
ஏகைக பல லாபாய ஸர்வ லாபாய கேசவ:" ॥

என்கிற வசனத்தின்படி தாய், தந்தை, மக்கள், உடன் பிறந்தோர், மனைவி, நண்பன் அனைவரும் ஒரு பலனை அடைவதன் பொருட்டுத்தான். பகவானாகிய நீ எல்லாப் பொருள்களின் பலனாக உள்ளாய். உன்னை அறிந்தபின் நான் உய்வடைந்தேன்.

தஞ்சகம் என்கிற யானையை நகத்தால் பிளந்து அழித்த நரசிம்மனே! தஞ்சகன் பெயரில் அல்லாவோ இன்று இந்த ஊர் தஞ்சை என அழைக்கப்படுகிறது. அவன் வேண்டுகோளை பூர்த்தி செய்ய நீ இன்றும் நரசிம்ம கோலத்தில் அமர்ந்திருந்து காட்சி அளிக்கிறாயே!

மணிக்குன்ற பெருமாள் ஸன்னதியில்தாம் நம் தேசிகன் திருமகனார் நயினாசாரியார் என்னும் வரத குரு, திவ்ய பிரபந்தம் ஸேவிக்க முடியாத அனத்யன காலத்தில் (அதாவது நாலயிர திவ்ய பிரபந்தத்தில் சில பதிகம் தவிர மற்ற எல்லாம், வருடத்தில் சில நாட்கள் சொல்லக்கூடாது. இது தமிழ் பஞ்சாங்கத்தில், கார்த்திகை மாதம் கார்த்திகை நக்ஷத்திரம் முதல் தை மாதம் ஹஸ்தம் நக்ஷத்திரம் வரை.) அதற்கு

பதிலாக தேசிக பிரபந்தங்களை எல்லா இடங்களிலும் அனுஸந்திக்குமாறு நியமித்த மணிக்குன்றமே!

"நம் தேசிகனை நெஞ்சத்துடன் சொல்லாமல் சொல்" என்பது, பகவானை சொல்லாது போனாலும் சரி, நம் ஆசாரியனான தேசிகனை தவறாது சொல், பகவானுடைய அடியவர்களை மனம் உருகி சொல் என்றும் பொருள் கொள்ளலாம். பாகவத பாரதந்த்ரியத்தை சிறப்பித்த ஸ்தலம்.

அஜ்ஞாந த்4வாந்த ரோத4ா த3க்ஷ பரிஹரணாத் ஆத்ம ஸாம்ய ஆவஹத்வாத்
ஜந்ம ப்ரத்4வம்ஸி ஜந்ம ப்ரத3 க்3ரிமதயா திவ்ய த்3ருஷ்டி ப்ரப4ாவாத் ।
நிஷ்பரத்யூஹ ஆந்ருஶம்ஸ்யாத் நியத ரஸதயா நித்ய ஶேஷித்வ யோக3ாத்
ஆசார்ய: ஸத்3பி4: அப்ரத்யுபகரணதி4யா தே3வவத் ஸ்யாத் உ3பாஸ்ய: ॥

என்று ஸ்ரீந்யாஸவிம்ஶதியில் (2) ஸ்வாமி தேசிகன் ஞானத்தை பெறவும், மோக்ஷத்திற்கு உபாயமான ஆசாரியனை பகவானைப்போல் தியானிக்கும் முறையை ஸாதித்தார். பகவான் செய்யும் உதவிகளை ஆசாரியன் மிகவும் சிறப்பாகவே செய்கிறான். அஜ்ஞானத்தை விரட்டி, பாபங்களை போக்கி ஞானம், குணம் இவற்றில் தன்னைபோல் ஆக்குகிறான். புதுப்பிறவியைக் கொடுத்து கருணையை சுரந்து தெவிட்டாத அமுதமாய், ஒழிக்க முடியாத உறவாய் திகழ்கிறான். இதை அறிந்து சிஷ்யர்கள் கைம்மாறு கருதாமல் ஆசாரியனை வழிபட வேண்டும் என்றார்.

ஏற்றி மனத்து எழில் ஞான விளக்கை இருள் அனைத்தும்
மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான்
போற்றி உகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ்
சாற்றி வளர்ப்பதும் சற்று அல்லவோ முன்னம் பெற்றதற்கே.

என்று அதிகார ஸங்கரஹத்தில் (38) ஸ்வாமி தேசிகன் சிஷ்யனது கடைமையை ஸாதிக்கிறார். ஆசாரியர்கள் தத்வ, ஹித புருஷார்த்தங்களை உபதேசித்து ஞான விளக்கு ஏற்றியதற்கு பகவானால் கூட பிரதி உபகாரம் செய்ய முடியாது. சிஷ்யர்கள் அசாரியனை புகழ்ந்து, மகிழ்ந்து தியானித்து அவர் கீர்த்தியை பரப்புகின்றனர். இது ஆசாரியன் செய்த மஹா உபாகரத்திற்கு கேவலம் ஒரு போக்குவீடு என்றார்.

இந்த மூன்று ஸ்தலங்களையும் ஒன்றாக நான் தஞ்சை மாமணிக்கோவில் என்றே கொண்டு சரண் புகுந்தேன். திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார் 5 பாசுரங்களில் இந்த ஸ்தலத்தை மங்களாசாஸனம் செய்துள்ளார்கள். "வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை மாமணிக்கோயிலே வணங்கி நம்பிகாள் உய்ய நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்றார் திருமங்கையாழ்வார். "தடம் பருகு கரு முகிலை" என்று நீல மேகனுக்கு அழகிய தமிழ் விளக்கமாக "கரு முகில்" என்றார். "என் மனத்தே இருக்கும் புகழ் தஞ்சை யாளியைப் பொன் பெயரோன்" என்றும் கூறி நரசிம்மாக அனுபவித்தார்.

ஸ்ரீ ரக்த பங்கஜவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ நீலமேக பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ அம்புஜவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ மணிபர்வத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ தஞ்சா நாயிக ஸமேத ஸ்ரீ நரஸிம்ம பரப்ரஹ்மணே நம:

21 திருநந்திபுர விண்ணகரம் (நாதன் கோவில்)

தயிருண்டு நடனம் ஆடி ஆயுதம் ஐந்தும் கையில் ஏந்தி
வயிறுள் உலகம் ஏழும் வளமாகத் தானே கொண்டு
மயிர் சிலிர்க்க நந்தி பணிசெய்த ஜகந்நாதன் தானமர்ந்த
பயிர் செழிக்கும் நாதன்கோவில் நந்திபுர விண்ணகரமே

திருநந்திபுர விண்ணகரம், நாதன் கோவில் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் ஜகந்நாதன், நாதநாதன், விண்ணகரப் பெருமான் என்ற திருநாமங்களுடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு செண்பகவல்லி என்று திருநாமம்.

நந்தி, சிவ பெருமானுடைய வாஹனம். அன்புக்கும், அயறா அடிமைப் பணிக்கும் ஒரு எடுத்துக் காட்டாக (an example) விளங்குவது. பகவான் நாராயணனைக் குறித்து நந்தி தவம் செய்து அவருக்கு பணி செய்து அவருடைய அருளை வேண்டியதால் திருநந்திபுர விண்ணகரம் என்றே ஊரின் பெயராயிற்று.

பகவான் கிருஷ்ணன் இடையனாக தயிர் திருடி, காளிங்கன் என்கிற பாம்பின் மேல் நடனமாடி தன்னுடைய தெய்வச் செயல்களை அனைவருக்கும் அறிவித்தான்.

ஆழ்கடல் சூழ் வையகத்தார் ஏசப் போய் ஆய்ப்பாடி
தாழ்குழலார் வைத்த தயிருண்டான் காணேடீ
தாழ்குழலார் வைத்த தயிருண்ட பொன்வயிறு இவ்
ஏழ் உலகு உண்டும் இடமுடைத்தால் சாழலே

என்று பெரிய திருமொழியில் (11-5-3) திருமங்கை மன்னன் சாழல் என்ற உரையாடல் பாசுரத்தில் தோழி முதலில் பகவானன ஏச, மற்றொருத்தி தயிருண்ட கண்ணனின் வயிறே உலகு ஏழும் உண்டது என்றார்.

கண்ணன் ஏழு உலகங்களையும் உண்டு "உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும் நிலை பெறுத்தலும், நீங்கலா" என்னும் கம்பன் வாக்கின்படி தானே ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களை செய்யும் ஜகத்காரணகன் என்பதை நிருபித்தான்.

மஞ்சாடு வரை ஏழும் கடல்கள் ஏழும்
வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம்
எஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின் மேல் ஓர்
இளந்தளிரில் கண் வளர்ந்த ஈசன் தன்னை

பெரிய திருமொழியில் (2-10-1) திருமங்கை மன்னன் பகவானின் ஸ்ருஷ்டி விநோதங்களை கண்டு ஆச்சரியப்படுகிறார்.

பகவானின் ஆயுதங்கள், சங்கு, சக்கரம், கதை, வாள், தண்டு என்ற ஐந்தையும் ஏந்தி தானே ஸர்வேச்வரன், பரத்துவம் என்பதை கண்பித்தான் அந்த பெருமாள் ஜகத்ரக்ஷகனாக இந்த ஊரில் காட்சியளிக்கிறான்.

ஸ்ருஷ்டி ஸ்திதித்யந்த கரணீம் ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்மிகாம் ।
ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாந் ஏக ஏவ ஜநார்த்ந ॥

என்ற விஷ்ணு புராண வாக்கின்படி ஜநார்த்தனே பிரம்மா விஷ்ணு சிவன் என்று பெயருடைய உருவங்களை அடைகிறான் என்று பரசாரர் கூறி ஜகத்துக்கு நாதனாய் இருப்பவன் அந்த ஸ்ரீமந் நாராயணனே என்பதை நிரூபித்தார்.

திருவில்லாத் தேவரை தேறன்மின் தேவு

இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்

நாராயணாத் ப்ரஹ்ம ஜாயதே
நாராயணாத் ருத்ரோ ஜாயதே

நான்முகனை நாரணன் படைத்தான்
நான்முகனும் தான்முகனாய் சங்கரனைப் படைத்தான்

என்று எல்லா ப்ரமாணங்களும் ஒரே முகமாக நாராயணனைத்தான் பரப்ரம்மம், ஜகத்காரணகன், ஸர்வ ஸ்வாமி, ஸ்ரீயப்பதி என்று சொல்லுகின்றன.

எல்லோரும் வியக்கும்படி நந்தி பணி செய்த பெருமாள் ஜகந்நாதனாக அமர்ந்த திருக்கோலத்தில் நாதன் கோவில் என்று சொல்லும் திருநந்திபுர விண்ணகரத்தில் ஸேவை ஸாதிக்கிறான். இந்த நாதன் கோவிலில் செழித்து விளங்கும் பயிர்களில் சிறந்து விளங்குவது பக்தி என்னும் பயிரே.

அறிந்து ஐந்தும் உள்ளடக்கி ஆய்மலர் கொண்டு * ஆர்வம்
செறிந்த மனத்தராய் செவ்வே * அறிந்து அவன் தன்
பேரோதி ஏத்தும் பெருந்தவத்தோர் காண்பரே *
காரோத வண்ணன் கழல்

என்று இரண்டாம் திருவந்தாதியில் (6) பூதத்தாழ்வார் பகவானிடத்தில் பக்தி செய்யும் தூயவர்களைப் போற்றுகிறார்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். "தயிருண்டு குடமாடு தடமார்வர் தகை சேர்" என்றும் "வாளும் வரி வில்லும் வளை ஆழி கதை சங்கும் இவை அங்கையுடையான்" என்று பகவான் பஞ்சாயுதங்களுடன் இருக்கிறான் என்றும் பாடி மகிழ்ந்தார். "நந்தி பணி செய்தநகர் நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே" என்று எல்லோருக்கும் அறிவுரை கூறுகிறார்.

ஸ்ரீ செம்பகவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ ஜகந்நாத பரப்ரஹ்மணே நம:

22 திருவெள்ளியங்குடி

ஆழியும் சங்கும் புள்ளுக்கு அளித்த பாழியந் தோளுடையான்
தாழியுடன் தயிரை உண்டு தரணியில் தாம்கருதிய கோவில்
வாழி கோலவல்வில்ராமனே எனப் பேணியுரைத்தார் தாம்வாழ
ஊழி முதல்வன் ஸயனித்த நம் ஊர் திரு வெள்ளியங்குடியே

திருவெள்ளியங்குடியில் பகவான் கோலவல்வில் ராமனாக ஸயன திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு மரகதவல்லி என்று திருநாமம்.

தேவர்களின் சிற்பி மாயன் (மண்டோதரியின் தந்தை) இங்கு வந்து பகவானை வேண்ட பகவான் விஷ்ணுவும் ப்ரத்யக்ஷமானார். ஆனால் மாயனோ விஷ்ணுவை ராமனாக ஸேவிக்க விழைந்தான். விஷ்ணு, உடனே தன் கையில் உள்ள சங்கு சக்கரங்களை வாஹனமான கருடாழ்வார் கையில் தந்து தான் வில்லுடன் ராமனாக ஸேவை ஸாதித்ததாக வரலாறு.

பகவானின் வாஹனமான பக்ஷி ராஜன் எம்பெருமானுக்கு பல விதங்களிலும் பணி செய்கிறார். கருடனது பெருமையை

ஏகோ விஷ்ணோர் த்₃விதீயஸ் த்ரீ சதுர விதி₃தம் பஞ்சவர்ணி ரஹஸ்யம்
ஷாட்₃கு₃ண்ய ஸ்மேர ஸப்த ஸ்வர க₃தி: அணிமாத்₃ யஷ்ட ஸம்பந்நவாத்மா ।
தே₃வோ த₃ர்வீகரார்பி: த₃ஶ ஶத நயந அராதி ஸாஹஸ்ர லக்ஷே
விக்ரீட₃த் பக்ஷி கோடிர்விக₄டயது ப₄யம் வீத ஸங்க்₂யோத₃யோ ந: ॥

கருட பஞ்சாஶத்தில் (5) ஸ்வாமி தேசிகன் அஸாதாரண முறையில், ஒன்று முதல் பல்லாயிரம் வரை எண்ணிக்கையில் வர்ணிக்கிறார். அந்த வேதாத்மா விஹகேச்வரன் இங்கு பகவான் கொடுத்தருளிய சங்க சக்கரங்களையும் தாங்கி நிற்கும் பணியும் செய்கிறார்.

பகவான் கிருஷ்ணாவதாரத்தில் இடையனாய்த் தோன்றி வெண்ணையும், தயிரையும் திருடி அள்ளி அமுது செய்கிறான். பொறுக்க முடியாத அவசரத்தில் அவன் சாப்பிடுகிற காட்சி அப்படியே கலத்தோடு சேர்த்து விழுங்குவது போல் இருக்கும்.

தாழியில் வெண்ணெய் தடங்கை ஆர விழுங்கிய
பேழை வயிற்று எம்பிரான் கண்டாய் உன்னைக் கூவுகின்றான்

என்று பெரியாழ்வார் திருமொழியில் (1-5-9) கண்ணன் வெண்ணெய் திருடி எடுத்து உண்டதை விவரிக்கிறார்.

வைகலும் வெண்ணெய் கைகலந்து உண்டான்
பொய்கலவாது என் மெய் கலந்தானே

என்று திருவாய்மொழியில் (1-8-5) பகவான் வெண்ணெய் உண்டு உள்ளத்தில் கலந்ததை நம்மாழ்வார் அனுபவிக்கிறார்.

சூட்டு நன் மாலைகள் தூயன ஏந்தி விண்ணோர்கள் நன்னீர்
ஆட்டி அந் தூபம் தரா நிற்கவே அங்கு ஓர் மாயையினால்
ஈட்டிய வெண்ணெய் தொடு உண்ணப் போந்து திமில் ஏறு வன் கூன்
கோட்டிடை ஆடினக் கூத்து அடல் ஆயர் தம் கொம்பினுக்கே

நம்மாழ்வார் திருவிருத்தத்தில் (21) "பகவானே! பரமபத்தில் நித்யர்களும் முக்தர்களும் ஆராதிக்கும்போது உண்டான புகையின் மறைவில் நீ கீழிறங்கி ஆயர்பாடி வந்து வெண்ணெய் திருடி உண்டு மகிழ்ந்தாயோ?" என்று வினவுகிறார்.

அந்த மாயாஜாலவித்தன் கண்ணன் தன்னுடைய கோவில் என்று கருதியது இந்த ஸ்தலம்தான் என்பது திருமங்கை ஆழ்வார் வாக்கு. பகவானே தன் கோவில் என்று கருதியதால் இந்த கோவிலை ஸேவித்தால் 108 திருப்பதிகளையும் ஸேவித்தற்கு நிகர் (equal) என்றும் கூறுவர். பகவானும் பக்தர்களும் சேர்ந்து தம்முடைய ஊர் என்னும் கருத்துடைய மஹா புண்ய பூமி இது.

உற்ற உறு பிணி நோய்காள்! உமக்கு இன்று சொல்லுகேன் கேண்மின்
பெற்றங்கள் மேய்க்கும் பிரானார் பேணும் திருக்கோயில் கண்டீர்
அற்றம் உரைக்கின்றேன் இன்னம் ஆழ் வினைகாள் உமக்கு இங்கு ஓர்
பற்றில்லை கண்டீர் நடமின் பண்டு அன்று பட்டினங் காப்பே

பெரியாழ்வார் திருமொழியில் (5-2-6) கூறுகிறார். கன்றுகள் மேய்க்கும் கிருஷ்ணன் விரும்பியுள்ள ஆலயம் இது. மிகுந்த பாடு படுத்தும் நோய்களே, அந்த நோய்களுக்கு காரணமான வினைகளே! எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இந்த தலத்தில் உமக்கு ஓர் பிடிப்பும் கிடையாது. ஓடிச் செல்வீர் என்றார்.

கோலவல்வில் ராமனே நீ வாழி! என்று மகிழ்ந்து ஆசையுடன் உன்னை மனத்தில் நினத்து வாயினால் பாடுபவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள். இந்த உலகத்தை எல்லாம் படைத்தவனான திருவெள்ளியங்குடியில் ஸயனித்துள்ள பரத்துவமே! உன்னுடைய அருளால் அவர்கள் நல்வாழ்க்கை பெற்று இவ்வுலகில் வாழ்வார்கள்.

பேணி உரைத்தார் என்பது ஆசாரியர்களின் கருத்துகளை அப்பழுக்கில்லாமல் அப்படியே உரை செய்த பெரியவாச்சான் பிள்ளையைக் குறிக்கும். அவருடைய அவதார ஸ்தலம் இது.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். "கார் நிறை மேகம் கலந்ததோர் உருவக் கண்ணனார் கருதிய கோவில்" என்று பகவான் கிருஷ்ணனே கருதிய கோவில் இது என்றார். மற்றொரு இடத்தில் "கோல வல்வில் ராமன் கோவில்" என்று பாடினார்.

ஸ்ரீ மரகதவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ சுருங்காரஸுந்தர தநுஷ்பாணி ராமாய பரப்ரஹ்மணே நம:

23 திருவழுந்தூர் (தேரழுந்தூர்)

உருவத்தால் ஈர்த்து எம் உள்ளே நின்று புலன்களை கவர்ந்து
தருவாய் காட்சி கனவகன்று கையில் கதையுடன் தேவாதிராஜா!
கருவுக்கும் உள்ளே புகுந்து கலக்கம் நீக்கி திருவருள் சுரக்கும்
திருவுக்கும் திருவாகிய ஆமருவியப்பா நீ நின்ற தேரழுந்தூரே!

தேரழுந்தூரில் எழுந்தருளியிருக்கும் பகவானுக்கு தேவாதிராஜன் என்று திருநாமம். மூலவர் இடக்கையில் கதையுடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். உத்ஸவர் ஆமருவியப்பன் என்ற திருநாமத்துடன் அருகில் அழகிய பசுங்கன்றுடன் கண்கொள்ளாக் காட்சியாய் திகழ்கின்றார். தாயாருக்கு செங்கமலவல்லி என்று திருநாமம். இது கவிச்சகரவர்த்தி கம்பன் அவதார ஸ்தலம்.

அஹம் புநர் தே3வகுமார ரூபம் அலங்க்ருதம் தம் ஸ்மிதமா வ்ரஜந்தம் ।
நந்த3ாமி பஶ்யந்நபி து3ர்ஶநேந பு4வாமி த்3ருஷ்ட்வா ச புநர்யுவேவ ॥

என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் தசரதன் கூறுவதாய் ஸ்லோகம். "என் மகன் ராமன் தேவகுமாரனைப் போல் அலங்காரங்களுடன் கம்பீரமாய் நடந்து வரும் காட்சியை மனத்தினால் நினைக்கும்போதே ஆனந்தமாகி பரவசமாகி விடுகிறேன். கண்ணால் கண்டவுடன் என் முதுமை மறைந்து நான் இளைஞனாகவே ஆகிறேன்" என்றான்.

உன்னுடைய கவர்ச்சிகரமான திருவுருவத்தை என்னுடைய உள்ளம் நினைத்து நினைத்து மகிழ்கிறது. ஆனால் தசரதனைப்போலன்று உன்னை நினக்கும்போது எல்லாம் என்னுடைய அவயங்கள் சக்தி இழந்து செயலற்று போய்விடுகின்றன. கண் விழிக்கிறது. உடனே கண்டது எல்லாம் கனவு என்று புலப்படுகிறது. என் கனவில் வந்த தோற்றம் மாதிரி நீ நேரில் வருவாயோ? இடக்கையில் கதையுடன் அருகில் பசுங்கன்றுடன் உன்னுடைய அற்புத தோற்றத்தை என்று நான் காணப்போகிறேன்?

பகல் கண்டேன் நாரணனைக் கண்டேன் கனவில்
மிகக் கண்டேன் மீண்ட அவனை மெய்யே -- மிகக் கண்டேன்

என்று இரண்டாம் திருவந்தாதியில் (61) பூதத்தாழ்வாரும் கனவில், அதாவது யோக ஸாக்ஷாத்காரமாய் நேரிடையாய் பகவானைக் கண்டார். உடனே "இந்த காளராத்ரி என்னும் இரவு முடிந்து பகல் உடனே வரப்போகிறது. ஸ்ரீமந் நாராயணனை நான் நேரிடையாய் காணப்போகிறேன்" என்றார் அல்லவா?

நீ தூரக்கத்தில்தான் வந்துதான் மனம் நெகிழச் செய்கிறாய் என்பது மட்டுமா? இல்லை. குழந்தைக்கு பிறக்கும்முன் கருவிலே நீ சென்று அதனுடைய முற்பிறவி சம்பந்தத்தில் மயங்கியிருக்கும் நிலைமை தவிர்த்து உன் நினைவைத் தருகிறாய்.

யச்ச கிஞ்சித் ஜக3த்யஸ்மிந் த்3ருஶ்யதே ஶ்ரூயதேऽபி வா ।
அந்தர் ப3ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: ॥

என்று தைத்ரீய உபனிஷத் இந்த உலகில் பார்ப்பதும் கேட்பதும் ஆகிய எல்லா வஸ்துக்களிலும் பகவான் நாராயணன் உள்ளும் வெளியும் வியாபித்திருக்கிறான் என்கிறது. நாராயணன் ஸர்வ வியாபி என்கிற கூற்றின்படி

பகலும் இரவும் தானேயாய்ப் பாரும் விண்ணும் தானேயாய்
நிகரில் சுடர் இருளாகி நின்றார் நின்ற ஊர் போலும்

என்று பெரிய திருமொழியில் (7-5-5) திருமங்கையாழ்வார் எல்லாமும் ஆன அவன் நின்ற ஊர் இது என்றார்.

அவ்வாறு பரந்து இருக்கும் நீ, பிறக்கும் முன்னே ஒரு சிறு குழந்தைக்கு செய்யும் அருள் அவ்வளவு மகிமையானது என்றால் அதை நான் எந்த வார்த்தை கொண்டு புகழ்வது? உன்னுடைய நீர்மையையோ, வாத்ஸல்யத்தையோ எந்த சொற்களைக் கொண்டு வர்ணிப்பேன்?

லக்ஷ்மீக்கு தமிழில் திருமகள் என்று பெயர். திரு என்பது ஐசுவர்யத்தை குறிக்கும். எல்லோரும் ஐசுவர்யத்தை அடைவதற்காக, அதற்கு தெய்வமாய் இருக்கும் லக்ஷ்மீயை வேண்டுவார்கள். ஆனால் அவளோ உன்னையல்லாவோ தன்னுடைய ஐசுவர்யமாக கருதுகிறாள்! செல்வதிற்கே செல்வமாக விளங்கும் ஆமருவியப்பா, உன்னை நான் சரணாக அடைந்தேன், திருவழுந்தூரிலே.

கஶ்ஸ்ரீ ஸ்ரீய: பரம ஸத்த்வஸமாஶ்ரய க: ।
க புண்ட3ரீக நயந: புர்ஷோத்தம க: ।

என்று ஸ்வாமி ஆளவந்தாரும் ஸ்தோத்ர ரத்னத்தில் (12) திருவுக்கும் திருவாகிய செல்வன் யார்?, சுத்த ஸத்வ குணத்தையே உடையவன் யார்? தாமரைக் கண்ணன் யார்? புருஷோத்தமன் யார்? என்று வினவினார்.

யத்ஸங்கல்பாத்3ப4வதி கமலே யத்ர தே3ஹிந்யமீஷாம்
ஜந்ம ஸ்தே2ம ப்ரளய ரசநா ஜங்க3மாஜங்க3மாநாம் ।
தத் கல்யாணம் கிமபி யமிநாமேகலக்ஷ்யம் ஸமாதி4ள
பூர்ணம் தேஜ: ஸ்புரதி ப4வதீ பாத3 லாக்ஷா ரஸாங்கம் ॥

என்று ஸ்ரீஸ்துதியில் (4) ஸ்வாமி தேசிகன் பிராட்டியே எம்பெருமானை பரதத்துவமாக காட்டுகிறாள் என்றார். ஸ்ரீயே! உலகை தன் உடம்பாய் கொண்டுள்ளான் பகவான். அவனுடைய ஸங்கல்பத்தால்தான் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்கிற செயல்கள் நடக்கின்றன. யோகிகள் எல்லோரும் மங்களகரமாய் ஒரே நோக்காய் எங்கும் பரவி அற்புதமாய் உள்ள எம்பெருமானை வணங்குகின்றனர். அப்படிப்பட்ட பகவானின் திருமார்பு, நீ பூசியுள்ள செங்குழம்பு பட்டு பிரகாசிக்கிறது என்றார். ஸ்ரீயப்பதி என்பதைக் கொண்டுதான் பகவானுக்கே பரதத்துவ நிர்ணயம் செய்யப்படுகிறது.

திருமங்கையாழ்வார் நாற்பத்தைந்து பாசுரங்கள் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ஸ்ரீ செங்கமலவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ தேவாதிராஜ பரப்ரஹ்மணே நம:

24 திருச்சிறுபுலியூர்

யார் சொல்லும் கேளாது அடிமை யாருக்கும் இன்றி
நேர் வந்து அடைந்தேன் அருள்மாகடல் சலசயனத்தானே
பார் புகழும் முனி தவத்தால் வேண்டிய புலித் தோற்றம்
சீர்மலிந்த திருப்புலியூர் கீழ்க்கண்டு கொண்டேனே ஏற்றம்.

அருள்மாகடல், சலசயனப்பெருமான் என்ற திருநாமங்களுடன் பகவான் இங்கே புஜங்க ஸயனத்துடன் காட்சி தருகிறான். ஸயனித்த திருக்கோலத்திலேயே மிகச்சிறிய உருவம் இந்த கோயிலில்தான். தாயாருக்கு திருமாமகள் நாச்சியார் என்று திருநாமம். இந்த ஸ்தலத்தில்தான் புகழ் வாய்ந்த வியாக்ரபாத மஹரிஷி புலித் தோற்றம் கொண்டு பகவானை துதித்தார். அந்த தோற்றத்தை இன்றும் மூலவரின் திருவடிக்கீழ் காணாலாம்.

கௌதம மஹரிஷி சிவபெருமானை நோக்கி தவமிருக்கும்போது தன் தவத்தை கலைக்க முற்படுவர்களை தாக்கி அழிக்க வேண்டும் என்பதற்காக புலி நகம், கை, கால் வேண்டும் என்று பிரார்த்தித்தார். சிவனும் அவருக்கு அதை அருளி அன்று முதல் நீர் வியாக்ரபாதர் என்று அழைக்கப்படுவீர் என்று கூறினார். தவிர, "நீர் நாராயணனை பூசித்து வைகுண்ட்டம் பெறுவீர்" என்றும் அருளினார். அந்த மஹரிஷி அர்ச்சித்த இடமானாதால், இந்த ஸ்தலத்திற்கு சிறு புலியூர் என்று பெயர்.

பொன்னை இகழ்ந்து விருகங்கள் புல்லிய புல் உகந்தால்
மன்னர் எடுப்பது அப் பொன் அலதே மன் உலகு அனைத்தும்
தன்னை அடைந்திடத் தான் அருள் செய்யும் தனிச் சிலையோன்
பொன்னடி நாம் அடைந்தோம் ஆர் புறம் செய்திடின் என் கொல்?

என்று அமிருத ஸ்வாதினி (17) என்னும் சில்லரை ரஹஸ்யத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். விலங்குகள் தங்கத்தை தரையில் கண்டால் அதை வேண்டாம் என்று விலக்கி அற்பமான புல்லைத் தேடும். ஆனால் அரசர்கள் பொறுக்கி எடுத்துக் கொள்வது அந்த பொன்னை அல்லவா? உலகம் முழுவதும் தன்னை சரணமாக அடைய அருள் செய்கிற ராமபிரானுடைய அழகிய திருவடிகளை நாம் அடைக்கலம் கொண்டபின் வேறு யார் என்ன சொன்னால் என்ன? என்ன செய்தால் என்ன?

அதையே திருமங்கை மன்னன், தன் பாசுரங்களில் "மக்களே யார் சொல்வதையும் கேட்காதீர்கள். யாரையும் சரணாகதி என்று போய் அடையாதீர்கள். க்ருபா சமுத்திரம் என்ற அருள் மாகடல் பெருமான் இங்கே திருச்சிறுபுலியூரில் குடி கொண்டிருக்கும் சலசயனப் பெருமாளை நேராக வந்து அடையுங்கள்" என்று வேண்டுகிறார்.

நன்மை தீமைகள் ஒன்றும் அறியேன்
நாரணா என்னும் இத்தனை அல்லால்
புன்மையால் உன்னைப் புள்ளுவம் பேசிப்

புகழ்வான் அன்று கண்டாய் திருமாலே
உன்னும் ஆறு உன்னை ஒன்றும் அறியேன்
ஓவாதே நமோ நாரணா! என்பன்
வன்மையாவது உன் கோயிலில் வாழும்
வைஷ்ணவன் என்னும் வன்மை கண்டாயே!

பெரியாழ்வார் திருமொழியில் (5-1-3) அழகாக ஸாதிக்கிறார். எனக்கு ப்ரமாணங்கள் கூறும் நன்மை இது, தீமை இது என்கிற விஷயங்கள் ஒன்றும் தெரியாது. நமோ நாராயணா என்று ஓதுகிறேன். அப்படி ஓதுவது சரியா தவறா என்று கூடத் தெரியாது,. மந்த்ர ஜபமே அரைகுறையாய் இருக்க உன்னை முறையாய் தியானம் செய்வது என்பதை எப்படி நான் அறியப் போகிறேன்? அற்பமாய், வஞ்சகமாக உன்னை ஒரு காரியத்திற்காக புகழ்பவன் இல்லை நான். எப்போதும் நமோ நாராயணா என்று ஓதுகிறேன். நீயே சரண் என்ற ஸ்ரீவைஷ்ணவனாய் கிடக்கிறேன். உன் கோயிலே கதி என்று நம்புகிறேன். அந்த மகிழ்ச்சிதான் எனக்கு பலன் என்றார்.

வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்

ஆனாத செலத்து அரம்பையர்கள் தற்சூழ
வான் ஆளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்

என்றார் பெருமாள் திருமொழியில் (4-7, 4-2) குலசேகராழ்வார். வாழ்க்கையில் அடிமை என்பது தினமும் கண்ணில் காண்கிறோம். பலவிதமான அற்ப சுகங்களுக்காக தன் ஆத்ம ஸ்வரூபத்தை மறந்து சரீரமே ஆத்மா என்று கிடக்கும் மக்களை நோக்கி கூறினார்,. தேவலோகத்து கன்னிகைகள், பூவுலகு முழுவதும் ஆளக்கூடிய இந்த ராஜ்யமும் மற்றைய செல்வமும் எனக்கு அளித்தாலும் அது வேண்டாம் என்றார்.

நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான்
தன்னையே தான் வேண்டும் செலவம் போல் மாயத்தா

என்று பெருமாள் திருமொழியில் (5-9) குலசேகராழ்வார். அப்படி அறிந்து பகவானையே ஸ்தோத்திரம் செய்பவருக்கு எல்லா செல்வங்களும் தானே வந்து என்னை எடுத்துதுக் கொள் என்ற்றே குவிகின்றன.

விட்டாரை விடாதாள் திரு

என்ற அகநானுறும் இதையே கூறியது. இங்கு வந்து அர்ச்சிப்பவர்கள் வாழ்க்கையில் எல்லாவிதமான ஏற்றங்களையும் அடைவார்கள் என்று கருதப் படுகின்றது.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். "பிரிந்தவர் வாய்மொழி மதியாது வந்தடைவீர்" என்று பகவானை வந்து அடையுங்கள் என்றார். "அந்தாமரை அடியாய் வந்து அடியேற்கு அருள் புரியே" என்று அடியவருக்கு அருள் செய் என்று வேண்டுகிறார்.

ஸ்ரீ தயா நாயிக ஸமேத ஸ்ரீ க்ருபாஸமுத்ர பரப்ரஹ்மணே நம:

25 திருத்தலைச்சங்க நாண்மதியம் (தலைச்சங்காடு)

சிறந்த சங்கெனும் பெயர் சுமந்த தலைச்சங்காட்டில்
மறந்தும் மற்றோர் தெய்வம் தொழா அடியாரவருடன்
வருந்தும் பிறவி இனி வேண்டேனென வந்தடைந்தேன்
பரந்து வெண்சுடராய் நின்ற நாண்மதியப் பெருமானே!

நாண்மதியப் பெருமாள், வெண்சுடர்ப் பெருமாள் என்ற திருநாமங்களுடன் பகவான் இந்த ஸ்தலத்தில் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறான். தாயாருக்கு தலைச்சங்க நாச்சியார் என்று திருநாமம்.

இந்த ஸ்தலத்திற்கு தலைச்சங்காடு என்றும் பெயர். ஒரு காலத்தில், உயர்ந்த சங்குகள் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கொண்டு வரப்பட்டு இந்த ஊரில் வியாபாரம் செய்யப்பட்டது. அரச மரங்கள் சூழ்ந்து காடு போல் தேன்றிய ஊரில் சங்கு வியாபாரம் நடந்ததால் இந்த பெயர். தலை, சங்கு, காடு எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து தலைச்சங்காடாக மருவியது.

மற்றோர் தெய்வம் எண்ணேன் உன்னை என் மனத்துவைத்துப்
பெற்றேன் பெற்றதும் பிறவாமை எம்பெருமான்

பெரிய திருமொழியில் (6-3-5) திருமங்கையாழ்வார், நான் மற்ற தேவதாந்தரங்களைப் பற்றி நினைப்பதும் கூட கிடையாது. உன்னையே என் மனத்தில் வைத்து துதித்தேன். அதனால் பிறவாமை நான் பெற்றேன் என்கிறார்.

உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனை அல்லால்
நும் இச்சை சொல்லி

என்று திருவாய்மொழியில் (4-6-10), நம்மாழ்வார் நாயிகா பாவத்தில் அவர் தோழி சொல்வதாக கூறுகிறார். "எம்பெருமானைத்தவிர வேறு ஒருவரை வணங்காத இப்பெண்" என்று.

இங்கு இருக்கும் அடியவர்கள் உண்மையான பக்தர்கள். நினைவு தவறிப் போய்கூட மற்றொரு தெய்வத்தை மனத்தில் நினைப்பது கூட கிடையாது. அந்த உத்தமமான பக்தர்களான பரமைகாந்திகள் என்று அழைக்கப்படும் மஹா புருஷர்களுக்கு இனி மறு பிறவி கிடையாது. அப்படிப் பட்ட பக்தர் குழாங்களுடன் சேர்ந்து நானும் அனுபவிக்க ஆசையுடன் ஓடி வந்தேன்.

பகவானை அடைவது என்பது அடியவருடன் கூடி அடைவதுதான் முறை என்பதை

வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்
பாதம் பணிந்து

என்று திருவாய்மொழியில் (4-6-8) நம்மாழ்வார் "ஸ்ரீவைஷ்ணவர்களுடன் கூடி ஒன்று சேர்ந்து நித்யஸூரிகளின் தலைவனான எம்பெருமானின் திருவடிகளை அடையுங்கள்" என்றார்.

பொருளும் புதல்வரும் பூமியும் பூங்குழலாரும் என்றே
மருள் கொண்டு இளைக்கும் நமக்கு நெஞ்சே! மற்றுளார் தாமோ?

என்று இராமானுச நூற்றந்தாதியில் (39) திருவரங்கத்தமுதனார் ஸாதிக்கிறார். செல்வம், பூமி, மக்கள் இவை எல்லாம் புருஷார்த்தம் என்று எண்ணி அஜ்ஞானத்தால் சூழ்ந்து ஆத்மாவின் ஸ்வரூபத்தை மறைத்து இவ்வளவு நாள் இன்பம் அனுபவித்த என் மனமே சொல், இளைக்காதபடி செய்கிறவர்கள் யாரேனும் உண்டோ? இல்லை என்றார். அதனால் அவை எல்லாம் துறந்து பகவானே நீயே கதி என்று ஓடி வந்து உன்னை அடைந்தேன்.

நம்மன் போலே வீழ்த்து அமுக்கும் நாட்டில் உள்ள பாவம் எல்லாம்
சும்மனாதே கை விட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே

பெரியாழ்வார் திருமொழியில் (5-4-3) பகவானிடன் சரண் அடைந்தவர்கள் பாவங்கள் எல்லாம் தூசி போல் பறக்கும் என்றார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தாதார்
இறைவன் அடி சேராதார்

என்று திருக்குறளும் பகவானின் திருவடிகளை அடையாதவர், பிறவி என்னும் கடலை கடக்க முடியாமல் அதிலே முழ்கி தத்தளிப்பர் என்கிறது.

அஹம் ஸ்மராமி மத்3பக்தம் நயாமி பரமாம் க3திம் ||

என்று வராஹசரமஸ்லோகத்தில் பகவான் என்னுடைய பக்தனை அவன் உயிர் பிரியும் தருணத்தில் நான் நினைக்கிறேன். உயர்ந்த கதிக்கு நானே முன்வந்து அவனை அழைத்துச் செல்கிறேன் என்றார்.

அதனால் எங்கும் பரந்து வெண் சுடராய் விளங்கும் நாண்மதியப் பெருமானே, எனக்கும் நீ அருள் செய்து இப்பிறவிக் கடலை நீக்குவாய் என ஓடி வந்தேன்.

திருமங்கையாழ்வார் இரண்டு பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

"தண்ணார் தாமரைசூழ் தலைச்சங்க மேல்திசையுள் விண்ணோர் நாண்மதியை விரிகின்ற வெஞ்சுடரை" என்று இந்த கோவில் இருக்கும் திசையே போதும். பக்தர்களுக்கு சந்திரன் போலும் பகைவர்களுக்கு வெப்பமான சூரியன் போலும் காட்சி தருகிறான் என்று பாடி மகிழ்ந்தார்.

ஸ்ரீ சிரஸ் சங்க நாயிக ஸமேத ஸ்ரீ சந்த்ரசாபஹர பரப்ரஹ்மணே நம:

26 திரு இந்தளூர்

காட்டாதே காவிரியும் கங்கையும் கிடக்கும் உம் நான்கு தோள்களும்
கேட்காதே அருள வேண்டி அடியாரை பார்க்காமலே புறக்கணித்தாயே
வாட்டாது நீயே அனுபவித்து வாழ்ந்தேபோவாய் சுகந்த வனநாதாயென
ஆற்றாது உனைப்பிரிந்தாரே இந்தளூர் பரிமளரங்கா! மருவினியமைந்தா!

திரு இந்தளூரில் ஸயன திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் பகவானுக்கு பரிமள ரங்கன் என்று திருநாமம். பகவான் நான்கு புஜங்களுடன் திருமுடி அருகே காவிரியும், திருவடி அருகே கங்கையுடனும் காட்சி அளிக்கிறார். தாயாருக்கு பரிமள ரங்க நாயகி, சந்தரசாப விமோசனவல்லி, புண்டரீகவல்லி நாச்சியார் என்று திருநாமங்கள்.

ஒரு நாள் பட்டப்பகலில், திருமங்கை ஆழ்வார் பகவானை ஸேவிக்க வருங்கால் கதவு இழுத்து மூடப்பட்டு அவர் பெருமாள் ஸேவை கிடைக்காமலே திரும்பினார். ஆழ்வார் பகவானிடம் மஹா கோபம் கொள்கிறார். "பல தலைமுறைகளாக உமக்கே அடிமை செய்யும் பரம்பரையில் வந்தவன் நான். இன்றோ, நேற்றோ உனக்கு பணி செய்ய அரம்பித்தவன் இல்லை. நீ அடியார்களுக்கு அவர்கள் கேட்பதற்கு முன்னே சென்று அருள் செய்ய வேண்டியது போக, நான் இங்கு வந்து உன்னை தரிசிக்க ஏங்கி நின்றபோது, என்னை ஏறெடுத்தும் பார்க்காமலே படுத்துக் கிடக்கிறாயே பரிமள ரங்கா!

ந தே ரூபம் ந சாகாரோ நாயுதா4நி ந சாஸ்பத3ம் ।
ததா2பி புருஷகாரோ ப4க்தாநாம் த்வம் ப்ரகாஶஸே ॥

ஜிதந்தே ஸ்தோத்திரத்தில் (5) பகவானுடைய ஸ்வரூபமும், திவ்ய மங்கள விக்ரஹமும், திவ்ய ஆயுதங்களும், இருப்பிடமான ஸ்ரீவைகுண்ட்டமும் எல்லாம் அவனுக்காகக் கிடையாது. அவனுடைய பக்தர்களுக்குத்தான் என்றல்லவோ சொல்லுகிறது. எம்பெருமான், தனக்காகவும், தனக்கும் பிறருக்குமாகவும் இல்லாது தென்றல், நிலவு, சந்தனம் போல் பிறருக்கே என்று இருக்கை என்பர் முன்னோர்.

பாம்பணைமேல் பாற்கடலுள் பள்ளி அமர்ந்ததுவும்
காம்பணை தோள் பின்னைக்கா ஏறுடனேழ் செற்றதுவும்
தேம்பணைய சோலை மராமரம் ஏழ் எய்த்ததுவும்
பூம்பிணைய தண்டுழாய்ப் பொன் முடியம்போரேறே

என்று திருவாய்மொழியில் (2-5-7) நம்மாழ்வர் பகவான் எத்தனை காரியங்கள் செய்திருக்கிறான். அவன் கிடப்பது, நடப்பது நிற்பது ஆகிய எல்லா காரியங்களும் நான் அனுபவிக்கவே என்று இதே கருத்தையே சொல்லுகிறார்.

பரிஜநபரிப3ர்ஹா பூ4ஷணாந்யாயுதா4நி
ப்ரவரகு3ணகணாஶ்ச ஜ்ஞாநஶக்த்யாத3யஸ்தே ।

பரமபத3மத2ண்ட3ந்யாதமதே3 ஹஸ் ததா2த்மா
வரத3 ! ஸகலமேதத் ஸம்ஸ்ரீதார்த்த2ம் சகர்த்த2 ||

ஸ்ரீவரதராஜஸ்தவத்தில் (63) கூரத்தாழ்வான் ஸாதிக்கிறார். வரதனே! நித்ய ஸூரி பரிவாரங்களும், ச2த்ரம், சாமரம் போன்ற பரிச்ச2தங்களும், ஆடை ஆப4ரணங்களும், ஆயுத4ங்களும், ஜ்ஞானம், ஶக்தி போன்ற குணங்களும் பரமபதமும். அண்ட3ங்களும், உன்னுடைய தி3வ்ய மங்க3ள விக்3ரஹமும், திவ்யாத்ம ஸ்வரூபமும் ஆகிய எல்லாவற்றையும் நீ அடியவருக்கென்றே ஆக்கி வைத்தாய் அல்லாவோ? என்கிறார்.

"அவ்வாறு ப்ரமாணங்கள் அனைத்தும் உன்னுடைய உடைமை எல்லாம் அடியவருக்கே உரிமையானது என்று சொல்லுகிறது. அப்படியிருக்க,, எனக்கு ஸேவை தராமல் புறக்கணித்த நீ உன்னையே பார்த்து கொண்டும், முகந்து கொண்டும், கட்டிக் கொண்டும் உடம்பு நோகாமல் அனுபவித்தும் வாழ்ந்தே போவாய் நீயே, உன்னுடைய வாசனை கொண்ட வனத்திலே. மருவு இனிய மைந்தனே" என்றார் ஆழ்வார்.

சாஸ்திரங்கள் எல்லாம் பகவானான நீ அடியவர்கள் கேட்பதற்கு முன் நீயாகவே சென்று அவர்களுக்கு எல்லா காரியங்களையும் செய்ய காத்திருக்கிறாய் என்கிறது.

வானே தருவான் எனக்காய் என்னோடு ஒட்டி
ஊனேய் குரம்பை இதனுள் புகுந்து, இன்று
தானே தடுமாற்ற வினைகள் தவிர்த்தான்

என்று திருவாய்மொழியில் (10-8-5) நம்மாழ்வார் அடியவரின் தடுமாற்றத்தை நீக்கி வானுலகை அளிக்கிறான் என்றார். (குரம்பை = மாமிச உடம்பு)

இங்கே அடியவனான நான் உன்னைத்தேடி வரும்போது எனக்கு ஸேவை ஸாதிக்காமல் இருக்கும் நீதான் தடுமாற்றத்தில் உள்ளாய் போலும்? பரிமள ரங்கனே, நான் உன்னைக் காணாமலே செல்கிறேன். மனம் நொந்து வேதனையால் நான் பிரிகிறேன் என்று வருந்தினார் ஆழ்வார்,

கோ3விந்தே2தி யதா3க்ராந்தத் கிருஷ்ண மாம் தூ3ர வாஸிநம் |
குணம் ப்ரவ்ருத்3த4மிவ மேவ ஹ்றுதா3யாந்நாப ஸர்ப்பதி ||

"த்ரௌபதி வெகு தூரத்திலிருந்து கோவிந்தா என்று கூக்குரலிட்டது பெருகிவிட்ட கடனை போல் என மனத்தை விட்டு அகலவில்லை என்று கிருஷ்ணா நீயே மஹா பாரதத்தில் சொல்லி வருத்தப்படவில்லையா? நானோ உன்னையே ஆஸ்ரயித்து உன்னையே ஸ்துதி செய்து உன்னை தரிசிக்க உன்னுடைய திருக்கோயிலை தேடி வந்தால் கதவை இழுத்துப் பூட்டினாயே? இனி உன் சொல்லை இனி யார் நம்புவார்கள்?"

திருமங்கையாழ்வார் பதினொன்று பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ஸ்ரீ பரிமள ரங்க நாயிக ஸமேத ஸ்ரீ பரிமள ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

27 திருக்காவளம்பாடி (திருநாங்கூர்)

இறையாய் ஸத்ய பாமைக்கு கற்பக மரம் அளித்து
மறைப் பொருளாய் உன் பத்தரையே உண்ணும்
துறை கண்டேன் உன்னிடம் கோபாலகிருஷ்ணனே
குறை காணாது காப்பாய் திருக்காவளம்பாடியிலே

திருக்காவளம்பாடியில் எழுந்தருளியிருக்கும் பெருமாளுக்கு கோபால கிருஷ்ணன், ராஜ கோபாலன் என்ற திருநாமம். ருக்மணி, ஸத்ய பாமையுடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு மடவரல் மங்கை, செங்கமல நாச்சியார் என்று திருநாமம்.

பகவான் கோபால கிருஷ்ணன், ஸத்ய பாமைக்காக கற்பக மரத்தை கொண்டு வந்து இந்த ஊரிலே வளர்த்த இடம். பெரியாழ்வார் இந்த கதையை அற்புதமாக விளக்குகிறார்.

கற்பகம் காவு கருதிய காதலிக்கு
இப்பொழுது ஈவன் என்று இந்திரன் காவினில்
நிற்பன செய்து நிலாத்திகழ் முற்றத்துள்
உய்த்தவன் என்னைப் புறம் புல்குவான்
உம்பர்கோன் என்னை புறம் புல்குவான்

[ஈவன் = கொடுப்பேன், காவு = கொண்டு போக, உம்பர்கோன் = விண்ணுலக அதிகாரி காவினில் = பூந்தோட்டத்தில்]
பெரியாழ்வார் திருமொழியில் (1-10-9) கூறுகிறார். பாரிஜாதம் என்னும் கற்பக மரத்தை கொண்டு செல்லவேணும் என்று விரும்பிய ஸத்ய பாமைக்கு இப்பொழுது (temporarily) கொடுக்கிறேன் என்று இந்திரனுக்கு சொல்லி அதை பாமை இல்லத்து முற்றத்துள் நட்டு உஜ்ஜீவிக்கிறான். [இந்திராணி செய்த குற்றத்திற்க்காக பகவான் கற்பக மரத்தை பூமிக்கு சில காலம் கொண்டுவர நியமித்த வரலாறு.]

கவளம் என்னும் சொல் மருவி காவளம் என்று ஆயிற்று. கவளம் என்றால் ஒரு பிடி சாதம். இந்த ஊர் கோவிலில் மடப்பள்ளி கிடையாது. அதற்கு பதிலாக பகவான் பக்தர்களையே உணவாக உண்ணுவதாக ஐதிகம் என்று சொல்லுகிறார்கள்.

அஹமந்நமஹமந்நமஹமந்நம் ।
அஹமந்நாதோ3ऽஹமந்நாதோ3ऽஹமந்நாத3: ।

என்று தைத்ரிய உபநிஷத் முடிக்கிறது. ஸ்ரீவைகுண்டத்தில் பகவானிடம் போய் ஜீவாத்மா சேரும்போது, நான் (பரம புருஷனாகிற உனக்கு) அன்னம் (போல் போக்யமாய் இருப்பவன்), நீ என்னை புசிப்பாயாக. நான் உன்னுடைய (உகப்பாகிற) அன்னத்தை புசிப்பவன்'' என்ற பொருள் அந்த ரீதியில், தன்னுடைய பக்தர்களையே உணவாக கொள்கிறான் இந்த பூமியிலே.

வேத விற்பன்னர்கள் வாழும் திருக்காவளம்பாடி அடைந்து கோபால கிருஷ்ணனை சரண் கொள்வது மோஷ ஸாம்ராஜ்யத்திற்கு வழி என்று நான் அறிந்து கொண்டேன். பகவானே பரமபதத்திற்கு வழி என்று தெரிந்து கொண்டேன்.

வேதா3ஹமேதம் புருஷம் மஹாந்தம்
ஆதி3த்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத் ।
தமேவம் வித்3வாந் அம்ருத இஹ ப4வதி
நான்ய: பந்தா2 வித்3யதேऽயநாயா ॥

என்று புருஷஸூக்தம் (உத்தரானுவாகம் - 2) சொல்கிறது. சூரியன் போல் ப்ரகாசிப்பவனும், ப்ரகிருதிக்கு அப்பாற்பட்டவனுமான வேத புருஷனான பரமாத்மாவை அறிகிறேன். அவனை இப்படி அறிபவன் இங்கேயே முக்தனாக ஆகிறான். மோக்ஷத்திற்கு அவனைத்தவிர வேறு வழி கிடையாது என்றது.

பகவானை ஆசாரியர்கள் மூலமாய் அறிந்து சரணாகதி செய்த பின் என்னிடம் உள்ள லௌகீக வாழ்க்கை குறைகளை பற்றி ஏன் கவலை? பகவான் என் குறைகளைக் கண்டு கொள்ளாமல் என்னைக் காத்தருள்வான்.

குறை என்பதை அந்திம ஸ்ம்ருதி செய்ய முடியாமல் போன நிலை என்றும் கொள்ளலாம். எத்தனை பக்தனாய் இருந்தாலும் கடைசிக் காலத்தில் பகவானுடைய நினைவு வர வேண்டுமே என்று அஞ்ச வேண்டாம்.

துப்பு உடையாரை அடைவது எல்லாம்
சோர்வு இடத்து துணை ஆவர் என்றே
ஒப்பிலேன் ஆகிலும் நின்னை அடைந்தேன்
ஆனைக்கு நீ அருள் செய்தமையால்
எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்கு
ஏதும் நான் உன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்

என்று பெரியாழ்வார் திருமொழியில் (4-10-1) உடம்பு வலிமையாய் இருக்கும்போதே சரணாகதி செய்தேன் என்றார். அதைப் பின்பற்றியே, நானும் என் பரம்பரையான ஆசாரியர்கள் மூலமாக, பிராட்டி பரிவுரையுடன் உன்னிடம் சரணாகதி செய்துவிட்டேன். இனி எனக்கு என்ன குறை ? கடைசி காலத்தில் உன் நினைவைத் தருவதோ இல்லையோ அது உன் பாடு, உன் ஸங்கல்பம்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார்.

"ஏவிளங் கன்னிக்காகி இமையவர்கோனைச் செற்று காவளம்பாடி கடிதிறுத்துக் கற்பகம் கொண்டு போந்தாய்" என்றார் திருமங்கை மன்னன்.

ஸ்ரீ பங்கஜ வல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ கோபாலகிருஷ்ண பரப்ரஹ்மணே நம:

28 திருக்காழிச்சீராம விண்ணகரம் (சீர்காழி)

கால் தூக்கி விண்ணுலகு முழுதுமளந்த திரிவிக்கிரமனை
வேல் வென்ற திருமங்கையான் பாடியதும் இன்கவியால்
மேல் செல்ல திருச்சங்க குளமும் சக்கர நீரும் தந்து நின்ற
நால்வேதத் தாடாளன் ஆளுவதும் காழிச்சீராமவிண்ணகரமே

திருக்காழிச்சீராம விண்ணகரப் பெருமாளுக்கு திரிவிக்ரமன், தாடாளன் என்று திருநாமங்கள்.. மூலவர் இடது காலைத் தூக்கி வானத்தை அளக்கும் அற்புத காட்சியுடன் திகழ்கிறார். தாயாருக்கு லோக நாயகி என்று திருநாமம்.

குடமாடி இம்மண்ணும் விண்ணும் குலுங்க உலகளந்து
நடமாடியப் பெருமான்

என்று திருவிருத்தத்தில் (38) நம்மாழ்வார் வாமனன் உயர்ந்து வளர்ந்து திரிவிக்கிரமனாய் உலகளந்த வைபவத்தை புகழ்கிறார்.

விதியினால் பெடை மணக்கும் மென்நடைய அன்னங்காள்
மதியினால் குறள் மாணாய் உலகு இரந்த கள்வற்கு

என்று ஆழ்வார் நாயிகா பாவத்தில் வாமனனை கள்வன் என்று அழைக்கிறார்

பொல்லாக் குறளுருவாய் பொற்கையில் நீர் ஏற்று
எல்லா உலகும் அளந்து கொண்ட எம் பெருமான்

என்று நாச்சியார் திருமொழியில் (11-5) ஆண்டாள் வாமனனை பொல்லாதவன் என்றாள். வாமனாவதாரம் பின் வரும் கிருஷ்ணாவதார லீலைகளுக்கு ஒரு முன்னோடி (precedence) என்பது போல்.

இங்குதான் திருமங்கையாழ்வார் சைவ நாயன்மாரான திருஞான சம்பந்தருடன் வாதம் புரிந்து வென்றார். அவரும் அடி பணிந்து தம்முடைய வேலைப் பரிசாகத் தந்து திருமங்கையாழ்வாரை நாலு கவிப் பெருமாள் என்று கௌரவித்தார். திருஞான சம்பந்தருடன் வாதம் செய்ய அரம்பிக்கும்போது அவர் "ஒரு குறள்" என்று ஆரம்பித்து உமது கவித்திறனைக் காட்டும் என்றார்.

ஒரு குறளாய் இரு நிலம் முவடி மண் வேண்டி
உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும்
தருக என மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாள் அணைவீர் தக்க கீர்த்தி
அருமறையின் திரள் நான்மும் வேள்வி ஐந்தும்
அங்கங்கள் அவை ஆறும் இசைகள் ஏழும்

என்று பெரிய திருமொழியில் (3-4-1) திருமங்கையாழ்வாரும் பாடினார் ஒன்று முதல் ஏழு வரை எண்கள் அமைந்திருப்பது ஆழ்வாரின் அற்புத கவித்திறன்.

வாய் மொழிந்து வாமனனாய் மாவலிபால் * மூவடிமண்
நீ அளந்து கொண்ட நெடுமாலே! * - தாவிய நின்
எஞ்சா இணை அடிக்கே ஏழ் பிறப்பும் ஆளாகி *
அஞ்சாது இருக்க அருள்

மூன்றாம் திருவந்தாதியில் (18) பேயாழ்வார் உனக்கே ஏழு ஜன்மங்களிலும் அடிமைப் பட்டவனாய் பயமின்றி வாழ அருள வேண்டும் என்றார். இந்த ஸ்தலத்தில் உள்ள சங்கு புஷ்கரணியும், சக்கர தீர்த்தமும் அடியவருக்கு எல்லா விதமான செல்வங்களையும் தந்து மோக்ஷத்தையும் அளிக்க வல்லது. அதை அறிந்து நம்பிக்கையுடன் தாடாளனுடைய திருப்பாதங்களைப் பற்றவே திருக்காழிச் சீராம விண்ணகரத்தை வந்து அடைந்தேன்.

பூ வளரும் திரு உந்திப் புனிதன் வையம்
பொன்னடியால் அளந்து இருவர் போற்ற நின்ற
நாவலரும் கலைகள் எல்லாம் தன்னை நாட
நாடாத நன்னிதியா நணுகு நாதன்

பரமத பங்கத்தில் (44) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். தாமரைப்பூ மலர்கின்ற திருநாபியில் தோன்றிய ப்ரம்மாவின் ஸத்ய லோகம் வரை எல்லா உலகங்களையும் தன் திருவடியால் அளந்தான் எம்பெருமான் திரிவிக்கிரமாவதாரத்தில். அப்பொழுது ப்ரம்மாவும், சிவனும் அவனை ஸ்தோத்ரம் செய்தனர். வேதம் முதலிய சாஸ்த்ரங்கள் அவனைத் தேட முடியாமல் தவித்தன. ஆனால் அவனோ தேடத் தேவையே இல்லாத ஓர் நல் நிதியாய் தன் அடியார்களிடம் ஒன்றியிருந்தான் என்றார்.

திருக்காழி என்பது சீர்காழி. சீராம விண்ணகரம் என்பது ராமனின் செங்கோலுக்கு உட்பட்ட நிலம். ஒன்று என்னும் எண் ராமனின் அடைமொழி.

ஓக மாட ஓக பாணமு ஓக பத்நீ வ்ரதுடே மதஸா
ஓக சித்தமு கலவாடே ஓக நாடுநு மறவகே

என்று தியாகராஜர் ஹரிகாம்போஜி ராகத்தில் பாடியுள்ளார். ஒரே சொல், ஸத்ய வசனம். ஒரே பாணம், மூன்று உலகங்களையும் ஒரே ப்ரயோகத்தில் அழிக்கும் வல்லமை உடையது. ஒருவனுக்கு ஒரே மனைவி என்னும் சாஸ்திரம் என்று ராமனைப் பற்றிய க்ருதி. அதுபோல் இந்த பெருமாள் ஒருவரே இந்த உலகத்தையும், விண்ணையும் ஆள்கிறவர் என்பது வேதத்தின் உட்பொருள்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ஸ்ரீ லோக நாயகீ ஸமேத ஸ்ரீ லோகநாத த்ரிவிக்ரம பரப்ரஹ்மணே நம:

29 திருஅரிமேய விண்ணகரம் (திருநாங்கூர்)

குன்று எடுத்து காத்ததும் நின்று குடத்தின் மேல் ஆடியதும்
கன்று மேய்த்தவன் காட்டிய கருணையும் களிப்புமே * தாவி
இன்று வந்தேன் பகை கெடுக்க சுடை வடிவ குடமாடு கூத்தா!
நன்று நீ வீற்றிருக்கும் நாங்கூர் திரு அரிமேய விண்ணகரமே

திருஅரிமேய விண்ணகரம், குடமாடுகூத்தர் கோவில் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் எம்பெருமான் குடமாடு கூத்தன் என்ற திருநாமத்துடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு அம்ருதகட வல்லி என்று திருநாமம்.

கூத்தாடு என்பதை கூத்து + ஆடு என்று கொள்ளும்போது கூத்து (dance) ஆடுபவர்கள் என்று பொருள். கூடு + ஆடு என்று பிரித்தால் எல்லோரும் ஒன்றாய் சேர்ந்து கூடி ஆடுவது (dance together)

குடமாடு கூத்தா என்பதை குடக் கூத்தா. என்று கொண்டால் குடத்தைக் கொண்டு ஆடுபவன் என்று லீலா ரஸத்தைக் காட்டுகிறது. குடைக் கூத்தா என்று கொண்டால் கோவர்தன மலையே குடையாகக் கொண்டு ஆடுபவன் என்று கருணையின் மகிமையைக் காண்பிக்கிறது.

குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான்

என்றார் நம்மாழ்வார், திருவாய்மொழியில் (3-3-8). பகவான் கிருஷ்ணன் கோவர்தன கிரியை குடையாக பிடித்து ஏழு நாட்கள் எல்லோரையும் ரக்ஷித்தவன்.

குன்றினால் குடை கவித்ததும் கோலக்
குரவை கோத்ததும் குடமாட்டும்
கன்றினால் இளவு எறிந்ததும் காலால்
காளியன் தலை மிதித்து முதலா
வென்றி சேர் பிள்ளை நல்விளையாட்டம்
அனைத்திலும் அங்கு என் உள்ளம் குளிர
ஒன்றும் கண்டிடப் பெற்றிலேன் அடியேன்
காணுமாறி இனி உண்டெனில் அருளே

என்றார் பெருமாள் திருமொழியில் (7-9) குலசேகரப் பெருமாள் கண்ணன் செய்த லீலைகள் எல்லாம் தேவகி கேட்டு அவற்றை நான் கண்டு அனுபவிக்கவில்லையே என்று வருந்துகிறாள் என்றார்.

குடக் கூத்து என்று குடங்களை வரிசையாக அடுக்கி அதன் மேல் தாவித் தாவி நின்று நடனம் செய்பவன். இப்படி எல்லாம் எல்லோரையும் மகிழ்ச்சியில்

அமிழ்த்துபவன் கன்றுகளை மேய்க்கும் இடைப்பயல் கண்ணன். மலையை குடையாக பிடித்தது ரக்ஷகத்வம். குடத்தின் மேல் ஆடியது லீலாரஸம். ரக்ஷகத்தை கருணை என்றும், லீலாரஸத்தை களிப்பு என்றும் இங்கே சொல்லப்படது.

குடமாடு கூத்தன் கோவிந்தன் கோமிறை செய்து எம்மை
உடைமாடு கொண்டான் உங்களுக்கு இனி ஒன்று போதுமே

என்று நாச்சியார் திருமொழியில் (10-7) ஆண்டாள் கூறினாள். பரபதத்தில் யாரும் காணாத அந்த குடமாடு கூத்தை பசுக்களுக்கும் இடையர்களுக்கும் எளியவனான கண்ணன், தன் ஸ்வரூபத்தை மாற்றிக் கொண்டு நடுசந்தியில் எல்லோரும் அனுபவிக்க ஆடி என்னுடைய அச்சம், மடம், நாணம் என்ற உடைமைகளை எல்லாம் கொண்டான் என்றாள். (கோ = அரசன், மிறை = மிறுக்கு அரசன் செய்யும் துன்புறுத்துத்தல்)

தத்நா நிமந்த்ர முகரேண நிபத்த தாளம்
நாதஸ்ய நந்த பவநே நவநீத நாட்யம்||

என்று ஸ்வாமி தேசிகனும் ஸ்ரீ கோபால விம்ஸதியில் (3) நந்த கோபனது இல்லத்தில் நன்கு கடைவதால் உண்டாகும் ஒலி தாளமாய் அமைந்து கண்ணன் வெண்ணெய்க்காக ஆடிய ஆட்டத்தை மனத்தில் நினைத்து அனுபவிக்கிறார்.

பிதா த்வம் மாதா த்வம் தயிதநயஸ்த்வம் ப்ரிய ஸுஹ்றுத்
த்வமேவ த்வம் மித்ரம் குருரஸி கதிஶ்சாஸி ஜகதாம் ।
த்வதீயஸ் தவத் ப்ருத்யஸ் தவ பரிஜநஸ் தவத்கதிரஹம்
பரபந்நஶ்சைவம் ஸத்யஹமபி தவைவாஸ்மி ஹி பர: ॥

என்று ஸ்தோத்ர ரத்னத்தில் (60) ஸ்வாமி ஆளவந்தார் ஸாதிக்கிறார். உலகிற்கெல்லாம் தந்தை, தாய், மகன், நண்பன், ரஹஸ்யங்களை பகிர்ந்து கொள்ளும் தோழன், ஆசாரியன், உபாயம், பலன், எல்லாம் நீயே. நானோ உன் அடிமை. உன் தாஸன். உன்னையே போக்யமாக நினப்பவன். உன்னையே கதியாய் கொண்டவன். இவ்வாறு உன் ரக்ஷிக்கத்திற்கு பாத்திரமாகும் தன்மையில் இருக்கிறேன் அல்லவோ?

குடமாடு கூத்தா, இதை எல்லாம் நான் அறிந்து, பகைகளை கெடுத்து நீ ரக்ஷிப்பாய் என்று தாவி ஓடி வந்தேன். பகை என்பது உன்னைத் தவிர மற்றவைகளில் கொண்ட நாட்டம். மற்றவைகளை ஸ்திரம் என்னும் நினைக்கும் அஞ்ஞானம். அவற்றை எல்லாம் விலக்கி என்னை நீ கொள்வாய் என்றே நம்புகிறேன்.

நீ அழகாய் அமர்ந்திருக்கும் திருநாங்கூர் திருஅரிமேய விண்ணகரம் என்ற ஊருக்கு. இங்கு நீ சுடை வடிவ மூர்த்தியாய் இருக்கிறாய். அதனால் எப்பொழுதும் தைலகாப்பு சாத்திய மேனியாகவே ஸேவை ஸாதிக்கிறாய்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். "குன்றதனால் மழை தடுத்துக் குடமாடு கூத்தன்" என்று பாடி மகிழ்ந்தார்.

ஸ்ரீ அம்ருதகடவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ கடகேலி நர்த்தநாய பரப்ரஹ்மணே நம:

30 திருவண் புருடோத்தமம் (திருநாங்கூர்)

பொங்கும் கடலை முனிக்குத் தந்து உயிர்காத்த மலைக் கீழ்
சங்கு சக்கரத்தைத் துறந்து வில் எடுத்து வீழ்த்தி நின்றவனே
தங்கும் இன்பம் நான்கும் அளிப்பாய் என வந்து அடைந்தேன்
பங்கயக் கண்ணா புருஷோத்தமா! நீ நின்ற வண்புருடோத்தமே

திருவண்புருடோத்தமம் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் எம்பெருமான் புருஷோத்தமன் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு புருஷோத்தம நாயகி என்று திருநாமம்.

பகவான் உபமன்யு மஹரிஷிக்கு திருப்பாற்கடலையே அளித்துவிட்டு இந்த ஊரில் ராமனுடைய உயிர் காத்த சஞ்சீவி என்ற மூலிகையின் ஞாபகார்த்தமாக உள்ள சஞ்சீவி விக்ரஹ விமானத்தின் கீழே நின்ற திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறார்.

புருஷர்களிலேயே உத்தமன் என்று கூறும்படி திகழ்ந்த பெருமாள் ஸ்ரீராமன் வில் ஏந்தி பகைவரை வீழ்த்திய கோலத்துடன் பரதத்துவத்திற்கே உள்ள சங்கு சக்கரத்தை துறந்து நிற்கிறார்.

சதுர்ணாம் புருஷார்த்தா$_{2}$நாம் தாதா தே$_{3}$வ: சதுர்பு$_{4}$ஜ:

வேதம் நான்கு திருக்கைகளுடைய பகவான் நாராயணன் நான்குவிதமான புருஷார்த்தங்களையும் அளிக்கிறான் என்று சொல்கிறது.

இந்த ஸ்தலத்திற்கு வந்து புருஷோத்தமனை தரிசிப்பவர்களுக்கு தர்ம, அர்த்த, காம மோக்ஷ என்னும் அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நான்கு விதமான புருஷார்த்தங்களையும் பகவான் வழங்குகிறான் என்பது திருமங்கையாழ்வார் வாக்கு.

அற முதல் நான்கு அவையாய் மூர்த்தி மூன்றாய்
இருவகைப் பயனாய் ஒன்றாய் விரிந்து நின்றனை

என்று திருவழுக்கூற்றிருக்கையில் (34) திருமங்கையாழ்வார் பகவானை அறம் ஆரம்பித்து அது முதல் நான்கு புருஷார்த்தங்களாய் ஆகின்றவனாய் என்று அழைக்கிறார். புருஷார்த்தங்கள் நான்கையும் அளிக்கும் வல்லமை உடையவன் ஆனதால் நாலு புருஷார்த்தங்களும் இவனே என்றார்.

த$_{4}$ர்மார்த்த$_{2}$ காமமோக்ஷாக்$_{2}$யா: புருஷார்த்த$_{2}$ா உத$_{3}$ாஹ்ருதா ।
இத$_{3}$ம் சதுஷ்ட்யம் யஸ்மாத் தஸ்மாத் கிம் கிமித$_{3}$ம் வச: ॥

என்று விஷ்ணு புராணத்தில் (1-18-22) சொல்லப்பட்டுள்ளது. புருஷார்த்தங்கள் என்பவை தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று நான்கு ஆகும். இவற்றை எவன்

ஒருவனிடமிருந்து எல்லோரும் பெறுகிறார்களோ அவனை நோக்கி "அவனால் என்ன ப்ரயோஜனம்" என்று கேட்பது ஏன்? என்றார். பராசரர்

தே3வேந்த்ரஸ் த்ரிபு4வநம் அர்த்த2மேகபிங்க:
ஸர்வர்த்3தி4ம் த்ரிபு4வநகாம் ச கார்த்தவீர்ய: ।
வைதேஹ: பரமபத3ம் ப்ரஸாத்3ய விஷ்ணும்
ஸம்ப்ராப்த: ஸகலப2ல ப்ரதே3 ஹி விஷ்ணு: ॥

என்று விஷ்ணு தர்மம் (43-47) கூறுகிறது. விஷ்ணுவையே தியானித்து இந்திரன் முன்று உலகங்களையும் குபேரன் செல்வங்களையும் கார்த்தவீர்யன் முவுலகிலும் பரவிய பெருமைகளையும், ஜனகர் மோக்ஷத்தையும் பெற்றனர். விஷ்ணு பகவான் பக்தர்கள் வேண்டியதெல்லாம் அளிக்கும் வள்ளல் அல்லவா? என்றது.

சேமநல் வீடும் பொருளும் தருமமும் சீரியநற்
காமமும் என்றிவை நான்கென்பர் * நான்கிலும் கண்ணனுக்கே
ஆமது காமம் * அறம் பொருள் வீடு இதற்கு என்று உரைத்தான்
வாமனன் சீலன் * இராமானுசன் இந்த மண் மிசையே

என்று திருவரங்கத்தமுதனார் ஸ்ரீராமானுச நூற்றந்தாதியில் (40) புருஷார்த்தம் நான்கு வகை. அவை நான்கிலும் பகவானுக்கு உகந்தது காதல் என்னும் பக்தி. மற்ற மூன்றும் அதற்கு வழி என்று ஸாதித்தார். அதாவது ஏன் இன்னும் யோசிக்கிறாய்? அவனையே சரணடை என்பதாக. அந்த பகவானை இங்கே புருஷோத்தமனாக காண்கிறாய்.

பத்துடை அடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கு அரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும் நமரும் பெற மலரடிகள்

என்று திருவாய்மொழியில் (1-3-1) நம்மாழ்வார், பகவான் அவனைக் காண விரும்பும் பக்தர்களுக்கு எளிமையானவன். அவாப்த ஸமஸ்தகாமன் (அனுபவிக்க கிடைக்காத வஸ்து ஒன்றும் கிடையாது) ஆனால் மற்றவர்களுக்கு நினைக்க முடியாதபடி அரியவன் நம்முடைய திருமகள் விரும்பும் நாதன் என்றார். அதை நம்பி நானும் வந்து அடைந்தேன் உன்னுடைய அடிமை என்று.

பரிவதில் ஈசனைப் பாடி விரிவது மேவல் உறிவீர்
பிரிவகை இன்றி நன் நீர்தூய்ப் புரிவதும் புகை பூவே

என்று திருவாய்மொழியில் (1-6-1) நம்மாழ்வார் பலனை எதிர்பாராமல் பகவானுக்கு செய்யும் பணிக்கு அவன் எளியவனாய் உள்ளான். உபகரணம் இல்லை என்று தயங்க வேண்டாம் என்றார்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். "கம்பமா கடல் அடைத்து இலங்கைக்கு மன் கதிர் முடியவை பத்தும் அம்பினால் அறுத்து" என்றே ஆரம்பிக்கிறார். கடைசியில் "எண்ணிலாத பேரின்பமும் பெற்று இமையவரோடும் கூடுவரே" என்று முடித்துள்ளார்.

ஸ்ரீ புருஷோத்தம நாயிக ஸமேத ஸ்ரீ புருஷோத்தம பரப்ரஹ்மணே நம:

31 திருச்செம்பொன்செய் கோவில் (திருநாங்கூர்)

தாழ்ந்து தாரம் திருடியவன் தலைபத்தும் அறுத்த கனை நீங்க
வாழ்ந்து ஓழிவாரே காணும் திருச்செம்பொன் செய்கோவிலிலே
தங்கப் பசுவை தானமீந்து நின்றதனைக் கண்டேன் ஹேமரங்கா
மங்கா அல்லி மாமலர் மங்கையுடன் பேரருளாளப் பெருமானே

திருச்செம்பொன்செய்கோவில் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் எம்பெருமான் பேரருளாளன் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு அல்லிமாமலர் நாச்சியார் என்று திருநாமம். ஒரு பக்தன் பகவானை இங்கு பூஜித்து அஷ்ட ஐசுவர்யத்தையும் பெற்றதால், பகவானுக்கு பேரருளான் என்றும் ஸ்ரீரங்கநாதனைப்போல் வாரி வழங்குவதால் உத்ஸவருக்கு ஹேமரங்கர் என்று பெயர்.

ஒரு வில்லால் ஓங்கு முந்நீர் அடைத்து உலகங்கள் உய்ய
செருவிலே அரக்கர் கோனைச் செற்ற நம் சேவகனார்

என்று திருமாலையில் (11) தொண்டரப்பொடியாழ்வார் கூறுகிறார். ராவணன் கோழை போல் போலி மானை விட்டு ராம லக்ஷ்மணர்களை அகற்றி சீதையைக் கவர்ந்தான். ஆனால் ராமனோ அது போல் இல்லாமல் மஹா வீரனாய் அவனுடைய ஊர் சென்று அவன் தலை அனைத்தும் அறுத்துத் தள்ளினார் என்கிறார். ஸ்வாமி தேசிகனும் அதிகார ஸங்க்ரஹத்தில் "உத்த அமர்த்தலம்" என்று ராமன் இலங்கை சென்று ராவணனை வீழ்த்தியதால் அதனை உத்தமான போர்க்களம் என்றார். (gave him the home court advatnage)

மாதலி தேர் முன்பு கோல் கொள்ள மாயன்
இராவணன் மேல் சர மாரி
தாய் தலை அற்று அற்று வீழத் தொடுத்த
தலைவன்

என்று நாச்சியார் திருமொழியில் (5-3) ஆண்டாள் இராவணனை சித்ரவதம் செய்து அவன் உயிரைப் பிடிங்கினான் என்றாள்.

ததோ ராமோ மஹாதேஜா தூ4ராதூ3ர ய வீர்யவாந் ।
ப்ரவிஶ்ய ராக்ஷஸம் ஸைந்யம் ஶரவர்ஷம் வவர்ஷ ஹ: ॥

என்று ஸ்ரீமத் வால்மீகி ராமயணம் (ரா-யு 94-18) மஹாதேஜஸும் வீர்யமும் உடைய ராமன் அசுரப் படைகள் நடுவே புகுந்து தன் வில்லைக் கொண்டு அம்புகளை சரமழையாகப் பொழிந்தான் என்றது.

சதுரமா மதில் சூழ் இலங்கைக்கு இறைவன் தலை பத்து
உதிர ஓட்டி ஓர் வெங்கணை உய்த்தவன் ஓத வண்ணன்

என்று அமலனாதிபிரானில் (4) திருப்பாணாழ்வார் பகவான் ராமன் அரண் சூழ்ந்த இலங்கையின் அரசனான ராவணனின் தலை பத்தும் அறுத்துத் தள்ளியதை விவரிக்கிறார்.

கரிகுழல் கனிவாய் திருவினைப் பிரிந்த
கொடுமையில் கடுவினை அரக்கன்

என்று திருமங்கையாழ்வார் கூறினார். பகவானுக்கு எல்லா அவதாரங்களிலும் பகைவர்கள் இருந்தனர். ஆனாலும், ராமாவதாரத்தில் உண்டான பகைவனான ராவணன் மஹாபாதகன் மிகக் கொடியவன் என்கிறார். சேதனர்கள் அனைவரும் வணங்கி இன்புறும் பர தத்துவ மிதுனத்தைப் பிரித்த மஹா பாபம் செய்தவன் என்றார். பகவான் ராமன் அவன் தலை பத்தும் அறுத்து தள்ளினார்.

அவிகல ப்3ரஹ்மஸ்ருவர்ண ஹுயமக2 ஸஹஸ்ர நிர்வஹண
நிர்வர்தித நிஜ வர்ணாஶ்ரம தர்ம!

ஸர்வ கர்ம ஸமாராத்4ய! ஸநாதந தர்ம!

என்று மஹாவீர வைபவத்தில் ஸ்வாமி தேசிகன் ராமன் பற்பல யாகங்களை செய்து தானங்களை வழங்கியவன். எல்லா கர்மங்களாலும் ஆராதிக்கப்படுபவன் அவனே. சாஸ்வதமான தர்மத்தின் வடிவானவன் என்றார்.

ராவணன் வைதிகன் ஆனபடியால், வைதிகனை கொன்ற பாபம் நீங்க வேண்டுமே என்று ராமன் வருந்தினான். த்ருடநேத்ர மஹரிஷி என்னும் முனிவரின் அறிவுரையைக் கொண்டு தங்கத்தால் ஒரு பசுவை செய்து ஒரு பிராமணனுக்கு தானமாக வழங்கினார். அந்த பிராமணனும் தனக்கு கிடைத்த தங்கத்தைக் கொண்டு இந்த கோவில் கட்டியதால் இந்த ஊருக்கு செம்பொன் செய்கோவில் என்று பெயர்.

இந்த ஊரில் உள்ள அடியவர்கள் அனைவரும் இந்த கோவிலில் உள்ள எம்பிரானை வணங்கி வாழ்ந்து இதுதான் கடைசி வாழ்க்கை. இதற்கு மேல் பிறப்பு கிடையாது என்று ஸம்ஸாரத்தையே ஒழித்துக் கட்டியவர்கள்.

சிவன் தன்னுடைய ப்ரம்மஹத்யா தோஷத்திலிருந்து விடுபட "ஏகாதச ருத்ர" அச்வமேத யாகத்தை செய்தான். பூர்ணஹுதியின் போது பகவான் ஸ்ரீமந் நாராயணன், ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவிகளுடன் ஸேவை ஸாதித்தார். அப்பொழுது சிவன் செய்த பிராத்தனையின் பொருட்டு, பகவான் பதினொன்று ரூபங்கள் எடுத்து ருத்ரனுடன் நித்ய வாஸம் செய்வதாக ஐதிகம்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். "தாய் மனத்திரங்கி அருளினைக் கொடுக்கும்" என்று தாயார் போல் வாத்ஸல்யம் உண்டு என்றார். "கண்டு வாழ்ந்து ஒழிந்தேனே", கண்டு உய்ந்து ஒழிந்தேனே" என்று பல பாசுரங்களில் முடிக்கிறார்.

ஸ்ரீ அல்லி மாமலர் நாயிகா ஸமேத ஸ்ரீ பேரருளாள பரப்ரஹ்மணே நம:

32 திருமணிமாடக கோவில் (திருநாங்கூர்)

இந்திரனுக்கும் அரனுக்கும் சந்தமிகு காட்சி தந்து முவ்வழுத்து
மந்திரத்தை தனக்கு தானே ஓதுவித்த அணையா விளக்கே!
சுந்தரமாய் மணிமாடக்கோவிலில் வீற்றிருக்கும் நாராயணனே
தந்திரம் வேறின்றி அடைந்தேன் உனதடி அளத்தற்கரியானே

திருமணிமாடகக் கோவிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் நாராயணன், நந்தா விளக்கு என்ற திருநாமங்களுடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு புண்டரீகவல்லி என்று திருநாமம்.

பத்ரிகாசிரமத்தைப்போல் இங்குள்ள நாராயணனும் தானே குருவாகவும், தானே சிடனாகவும் தோன்றி தனக்குத் தானே ப்ரணவத்தை உபதேசித்த ஸ்தலம்.

பகவான் இந்த இடத்தில்தான் இந்திரனுக்கும் ஏகாதச என்ற பதினொன்று ருத்ரர்களுக்கும் வேதத்தின் ஸ்வரூபமாய் அழகு மிகுந்து ஸேவை ஸாதித்தார். திருமங்கை ஆழ்வார் இந்த பெருமானை ஆசையுடன் நந்தா விளக்கே என்று அழைக்கிறார்.

அளத்தற்கரியான் என்று அழைக்கப்படும் பெருமானே, வீற்றிருக்கும் நாராயணனே, நீ மாடத்தில் வைத்த அணையாத விளக்கு போல் விளங்குகிறாய்.

ந தூ4ர்ம நிஷ்ட்டோ2ஸ்மி ந சாத்மவேதீ3
ந பூ4க்திமாம்ஸ் தவத் சரணாரவிந்தே3 ।
அகிஞ்சநோன்யகதிஶ் ஶரண்ய: !
த்வத் பாத3மூலம் ஶரணம் ப்ரபத்3யே ॥

என்று ஸ்வாமி ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் (22) கர்ம ஞான பக்தி யோகங்களுக்கு அருகதை அற்றவன். அதனால் வேறு கதியின்றி உன் பாதங்களை சரணாகதியாக பற்றுகிறேன் என்று அநந்யகதித்வத்தை விளம்புகிறார்.

நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன் உலகிலும்
இனி உன்னை விட்டு ஒன்றும் ஆற்றகின்றிலேன்

என்று ஸ்வாமி நம்மாழ்வாரும் திருவாய் மொழியில் இதையே ஸாதித்தார்.

தந்திரங்கள் வேறின்றி தமது வழி அழியாது
மந்திரங்கள் தம்மாலும் மற்றும் உள்ள உரையாலும்
அந்தரம் கண்டு அடி பணிவார் அனைவர்க்கும் அருள் புரியும்

என்று அடைக்கலப்பத்தில் (3) ஸ்வாமி தேசிகன் இந்த கருத்தையே காட்டுகிறார்.

கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்
அறிவு ஒன்றுமில்லாத ஆய்க்குலத்து

என்று திருப்பாவையிலும் (28) ஆண்டாள் ஞான வாசனையே இல்லாத ஆயர்குலத்து இடையர்கள் என்றாள். ஜ்ஞானம் என்பது அவ்வளவு எளிதில் பெறக்கூடியதா என்ன?

ப3ஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்3யதே ।
வாஸுதே3வ ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுது3ர்லப4: ॥

என்று பகவத் கீதையில் (7-19) பகவான் கிருஷ்ணனே கூறினான். ஜ்ஞானிகள் பல பிறப்புக்கள் அடைந்து கடைசியில் "எல்லாம் வாசுதேவனே" என்ற கருத்தைப் புரிந்து கொண்டு என்னையே உபாசிக்கிறார்கள். அப்படிப்பட்ட மஹாத்மா கிடைப்பதற்கு அரியது (rare to find) என்றார்.

"தந்திரம் வேறின்றி", என்பதால் அதிகாரி ஸ்வரூபமும் "அடைந்தேன் உனதடி" என்பதால் சரணாகதி ப்ரயோகமும் சொல்லப்படது. ஆழ்வார்கள், ஆசாரியர்கள் கூறிய முறையிலேயே நானும் வேறு உபாயங்கள் இன்றி உன் திருவடியே கதி என்று வந்தடைந்தேன். எனக்கு அருள்வாயே திருமணிமாடக கோவிலில் வீற்றிருக்கும் எம்பிரானே!

உபாயே க்3ருஹ ரக்ஷித்ரோஶ் ஶப்3த3ஶ் ஶரணமித்யயம் ।
வர்த்ததே ஸாம்ப்ரதம் சைஷ உபாயார்த்தை2கவாசக: ॥

என்று அஹிர்புத்ய ஸம்ஹிதை (37-29) சொல்லுகிறது. ஶரணம் என்ற சொல்லிற்கு உபாயம், விடு, காப்பாற்றுபவன் என்னும் மூன்று அர்த்தங்கள் ஆனாலும் இங்கே அது உபாயம் என்னும் பொருளையே குறிக்கிறது என்றது.

கடியன் கொடியன் நெடியமால் உலகம் கொண்ட
அடியன் அறிவரு மேனி மாயத்தன்; ஆகிலும்
கொடிய என்னெஞ்சம் அவன் என்றே கிடக்கும் எல்லே

என்று திருவாய்மொழியில் (5-3-5) நம்மாழ்வார் "நீ நல்லவனாய் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, எனக்கு வேறு போக்கிடம் ஏது?" என்று நாயிகா பாவத்தில் கூறுகிறார் தோழியிடம், "நீ சொன்னபடி பகவான் கருணையற்றவன், கஞ்சன், பொல்லாதவன், வஞ்சகன், ஸ்வரூப, ஸ்வாபங்களை காண முடியாதபடி வெகு ஆழத்தில் வைத்திருப்பவன் மற்றும் ஆயிரக்கணக்கில் தோஷங்களை உடையவன் என்றாலும் என் மனம் கொடியது. அவன்தான் வேண்டும் என்கிறதே" என்றாள்.

திருமங்கையாழ்வார் பன்னிரண்டு பாசுரங்கள் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். "நந்தா விளக்கே, அளத்தற்கரியாய் நர நாரணனே!" என்றே பதிகத்தை ஆரம்பிக்கிறார்.

ஸ்ரீ புண்டரீகவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ சாச்வத தீபாய நாராயண பரப்ரஹ்மணே நம:

33 திருவைகுந்த விண்ணகரம் (திருநாங்கூர்)

திங்கள் முடிசூடித் தீராச்சாபம் கொண்ட துயர் தீர்த்தவன்
தங்கள் நாயகன் தனி முதல்வன் என அமரர் முனியேத்தும்
எங்கள் வைகுந்த நாதன் தாமரைக் கண்ணன் இருந்தாளும்
மங்களம் நிறைந்த மண்ணுலத்து திருவைகுந்த விண்ணகரமே

பூலோக வைகுண்டம் என்ற பெயரோடு விளங்கும் இந்த ஸ்தலத்தில் பகவான் வைகுந்த நாதன் என்ற திருநாமத்துடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸ்ரீவைகுண்டத்தைப் போல் ஸேவை ஸாதிக்கிறார். அரவிந்த லோசனன் (தாமரைக் கண்ணன்) என்று இந்த பெருமாளுக்கு மற்றொரு திருநாமம். தாயாருக்கு வைகுந்தகவல்லி என்று திருநாமம்

பிறைச்சந்திரனை தன் தலையில் சூடியவனான ருத்ரன் ப்ரம்மாவின் தலை கிள்ளியதால் ஏற்பட்ட தீராத ப்ரம்மஹத்யா தோஷத்துடன் அலைந்தபோது பகவான் ஸ்ரீமந் நாராயணனை வேண்ட அவருடைய எல்லையிலா கருணையால் சாபம் விலங்கப் பெற்றான்.

அவனே அகல் ஞாலம் படைத்து இடந்தான்
அவனே அஃது உண்டு உமிழ்ந்தான் அளந்தான்
அவனே அவனும் அவனும் அவனும்
அவனே மற்று எல்லாமும் அறிந்தனமே

என்று திருவாய்மொழியில் (9-3-2) நம்மாழ்வார் எல்லாம் நாரயணனே என்று ஸாதித்தார், அதே கருத்தில் திருமங்கையாழ்வார் தன் பாசுரத்தில் தேவர்கள், முனிவர்கள் எல்லோரும் தங்களுடைய பெருமான், அவரே தனிமுதல்வன் என்று பகவானை தோத்திரம் செய்வதாக இந்த ஸ்தலத்து பெருமானைப் பாடியுள்ளார்.

பவித்ராணாம் பவித்ரம் யோ மங்க3ளாநாஞ் ச மங்க3ளம் ।
தை3வதம் தே3வதாநாஞ்ச பூ4தாநாம் யோऽவ்யய: பிதா ॥

என்று ஸ்ஹஸ்ரநாம த்யான ஸ்லோகம் "எந்த பகவான் புனிதங்களுக்குள் புனிதமாய், மங்களுங்களுக்கு எல்லாம் மங்களாமாய், தேவதைகள் எல்லோருக்கும் மேலான தேவதையாய், எல்லா சேதனர்களுக்கும் அழிவற்ற தந்தையாய் இருக்கிறானோ" என்றது. அந்த பகவானே மங்களகரமான இந்த ஸ்தலத்தில் அமர்ந்திருந்து அரசாட்சி செய்கிறான்.

பகவானின் அங்க அவயங்களின் ஆழகை வர்ணிக்கும்போது திருக்கண்களுக்கு உள்ள காந்தி, கருணை, சோபை இவற்றை விவரிக்க முடியாமல் தவிக்கின்றனர் ஆழ்வார்களும், அசார்யர்களும். அன்று அலர்ந்த தாமரைபோல் உள்ள திருக்கண்களை பல விதமாக பாடி மகிழ்ந்துள்ளனர்.

பாபம் ஹரதி யத் பும்ஸாம் ஸ்ம்ருதம் ஸங்கல்பநாமமயம் ।
தத் புண்டரீக நயநம் விஷ்ணோர் த்ரக்ஷ்யாம்யஹம் முகம் ॥

என்று பராசர முனி ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் எந்த திருமுகம் நினத்த மாத்திரத்தில் ஜீவர்களின் பாபக்குவியல்களைப் போக்கடிக்கிறதோ, தன் அடியார்களின் உணர்வின்படி அமைந்திருந்து தாமரை போன்ற அந்த விஷ்ணுவின் திருமுகத்தை நான் காணப் போகிறேன் என்றார்.

ஆண்டாளும் "கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப்பூப்போலே --- அங்கண் இரண்டும் கொண்டு" என்றாள். அந்த தாமரைக்கண்ணன் இங்கிருந்து எல்லோரையும் உகப்பிக்கிறான்.

உன்னடியாருக்கு என் செய்வேன் என்றே இருத்தி நீ
நின்புகழில் வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ
நீ அவர்க்கு வைகுந்தம் என்று அருளும் வான்?

ஸ்வாமி நம்மாழ்வார், பெரிய திருவந்தாதியில் (53), பரமபதம் சென்று பாகவத கைங்கர்யத்தை இழக்க விரும்பாது கடல் சூழ்ந்த மண்ணுலகே சிறந்தது என்றார். அந்த மண்ணுலகில் பரமபதம் போல் விளங்கக் கூடியது மங்களகரமான இந்த ஸ்ரீ வைகுண்டம்.

ஸத்யம் ஶபே வாரண ஶைலநாத$_2$
வைகுண்ட்ட$_2$ வாஸேऽபி ந மேऽபி$_4$லாஷ:

என்று வரதராஜ பஞ்சாசத்தில் (49) ஸ்வாமி தேசிகனும் "காஞ்சி அத்திகிரிப் பெருமானே! சத்தியமாக ஆணையிடுகிறேன், பரமபதத்தில் வசிப்பதிலும் எனக்கு விருப்பமில்லை" என்றார். அர்ச்சாவதாரமாய் திருக்கோவில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் திருமேனி அழகிலும் அங்குள்ள பாகவத உத்தமர்களுக்கும் செய்யும் கைங்கர்யத்திலும் மனத்தைப் பறி கொடுத்த நம் பூர்வாசார்யர்கள் விண்ணுலகே வேண்டாம் என்ற அளவிற்கு திவ்யதேஸ அனுபவத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஏரார் முயல் விட்டு காக்கைப் பின் போவதேன்

என்று சிறிய திருமடலில் திருமங்கைமன்னனும் "இங்கு பூலோகத்தில் அறிந்து அனுபவிக்கக்கூடிய சுவையை விட்டு கண்ணுக்கு புலப்படாமல் இருக்கும் பரபதத்தை நினைப்பது (real vs virtual) தரையில் ஓடும் முயலைத் தவிர்த்து ஆகாயத்தில் பறக்கும் காக்கையைத் தேடுவது போல் என்று கூறி அர்ச்சாவதார திருமேனியை அனுபவிக்கும்போது பரபதம் ஒரு துச்சமே" என்று ஸாதித்தார்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். "நாங்கூர் வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே" என்றே ஒவ்வொரு பாசுரத்தையும் முடிக்கிறார்.

வைகுண்டவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ வைகுண்டநாத பரப்ரஹ்மணே நம:

34 திருவாலியும் திருநகரியும்

வீற்றிருக்கும் வயலாளி மணவாளன் வேதராஜன் அருளால்
போற்றியுகக்கும் திருமந்திரம் கேட்டறிந்த நீலன் நம் கலியன்
சாற்றி நின்ற குமுதவல்லியுடன் அவன் மனத்தே வந்துறையும்
ஏற்றம் கொள்ளும் இரட்டை திருப்பதி திருவாலி திருநகரியே

திருவாலி திருநகரி இரண்டும் சேர்த்து இரட்டை திருப்பதி என்று வழங்கப்படுகிறது. திருவாலியில் எம்பெருமான் லக்ஷ்மி நரசிம்மன், வயலாளி மணவாளன் என்ற திருநாமங்களுடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு அம்ருத கட வல்லி என்று திருநாமம். திருநகரியில் பகவான் வயலாளி மணவாளன், வேத ராஜன் என்ற திருநாமங்களுடன் அமர்ந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு அம்ருதவல்லி என்று திருநாமம்.

திருமங்கையாழ்வாருக்கு இயற்பெயர் நீலன். ஆலி நாட்டுக்கு மன்னன். அவர் திருமங்கை என்னும் ஊரை தன் தலை நகராகக் கொண்டு ஆண்டதால் திருமங்கை மன்னன், திருமங்கை ஆழ்வார் என்றே அழைக்கப்படுகிறார்.

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ் வேந்தன் - வாழியரோர்
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்

என்று எம்பெருமானார் பெரிய திருமொழித் தனியனில் ஸாதித்த முறையில் திருநகரி கோவிலுக்கு அருகே உள்ள வேத ராஜ புரத்தில் தான் திருமங்கையாழ்வார் பகவானை வழிப்பறி செய்யுங்கால் பகவான் மூல மந்த்ரம் என்று எல்லோரும் போற்றி புகழ்கின்ற திருவஷ்டாக்ஷரத்தை ஆழ்வாருக்கு உபதேசித்தார்.

வையம் எலாம் மறை விளங்க வாள் வேல் ஏந்தும்
மங்கையர்கோன் என்று இவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்யத் தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித்
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே

என்று அதிகார ஸங்க்ரஹத்தில் (1) ஸ்வாமி தேசிகன் திருமங்கை மன்னனைப் புகழ்கிறார். "வாளையும் வேலையும் கொண்டு பகவானின் ஆடை ஆபரணங்களை களவு செய்யும்போது எம்பெருமான் உபதேசித்த திருமந்திரத்தால் இவர் ஞானச்சுடர் பெற்று வேதாந்தங்களின் பொருள் எல்லாம் உலகு அறியும் வண்ணம் பரப்பினார்" என்று ஸாதித்தார்.

நம்மாழ்வாருக்கு மாறன் என்ற பெயர். மதுரகவி ஆழ்வாரால் நம்மாழ்வார் என்று அழைக்கப்பட்டதால் அந்த பெயரே நிலைத்து விட்டது. அதுபோல் பகவானே திருமங்கையாழ்வாரை நம் கலியன் என்று கௌரவித்தார். அதனால்

திருமங்கையாழ்வார் தன்னைப் பற்றி பாசுரங்களில் புகழ்ந்து சொல்லிக் கொள்வது எல்லாம் பகவான் ஸ்ரீமந் நாராயணனையே குறிக்கும் என்றே கொள்ள வேண்டும்.

பகவானால் "நம் கலியன்" என்ற விருதுடன் அழைக்கப்பட்ட பெருமை தவிர மற்றொன்றும் இவருக்கு உண்டு. திருமங்கையாழ்வார் மட்டும்தான் தன் மனைவி குமுதவல்லியுடன் கோவில்களில் ஸேவை ஸாதிக்கிறார். மற்ற எந்த ஆழ்வாருக்கும் இந்த தனிச்சிறப்பு கிடையாது.

மாமாயன் மாயக்கவியாய் வந்து என் நெஞ்சும் உயிரும்
உள் கலந்து நின்றார் அறியா வண்ணம் என் நெஞ்சும் உயிரும்
அவையும் உண்டு தானே ஆகி நிறைந்தானே

என்று ஆழ்வார் அனுபவித்த முறையிலேயே பகவான் திருமங்கையாழ்வார் உள்ளம் வந்து தானே குடியேறினான்.

வந்தாய் என் மனத்தே வந்து நீ புகுந்தபின்னை
எந்தாய் போயறியாய் இதுவே அமையாதோ

என்று பெரிய திருமொழியில் (8-9-5) திருமங்கையாழ்வார் பகவானே வந்து அமர்ந்ததைக் கூறுகிறார். திருவாலி திருநகரிக்கு என்ன பெருமை என்று கேட்டால், அங்குள்ள பெருமாள் தானாகவே ஆழ்வாரின் மனத்தில் வந்து குடி கொண்டான். ஆழ்வாரும் பகவானே "நான் நினப்பதற்கும் முன்னே நீயே வந்து என் மனத்தில் புகுந்து விட்டாய். என் மனம் வேறு ஒன்றிலும் லயிக்க மாட்டேன் என்கிறது என்றார்.

என் நெஞ்சத்து உள்ளிருந்து இங்கு இனிப்போய் பிறர் ஒருவர்
வன் நெஞ்சம் புக்கிருக்க ஒட்டேன் வளைத்து வைத்தேன்

என்று பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார். "உன்னை என்றும் நான் விட மாட்டேன். நீயும் என்றும் என்னை விட்டு பிரியாமல் என் கைங்கர்யத்தை அங்கீகரிக்க வேண்டும்" என வேண்டுகிறார்.

கற்றார் பற்று அறுக்கும் பிறவிப் பெருங்கடலே
பற்றா வந்து அடியன் பிறந்தேன் பிறந்தபின்னை
வற்றா நீர் வயல் சூழ் வயலாலி அம்மானைப்
பெற்றேன் பெற்றதும் பிறவமைப் பெற்றேனே

என்று பெரிய திருமொழியில் (8-9-8) திருமங்கை மன்னன் இத்தலத்திற்கு வந்த பிறகு மறு பிறவி கிடையாது என்கிறார்.

குலசேகராழ்வார் ஒரு பாசுரத்தையும், திருமங்கை மன்னன் 41 பாசுரங்களையும் பாடியுள்ளர்கள்.

ஸ்ரீ தயா நாயிக ஸமேத ஸ்ரீ க்ருபாஸமுத்ர பரப்ரஹ்மணே நம:

35 திருத்தேவனார் தொகை (கீழ்ச்சாலை)

கடைந்த பாற்கடல் திருமகளோடு திருமண விழா காண
அடைந்த அமரர் கூட்டம் உன் அடிக்கீழ் வேத மாதவா!
உடைந்த உள்ளம் உய்யவே உன்னை தெய்வ நாயகா!
அடைந்துயர்ந்தேன் கீழ்ச்சாலை தேவனார் தொகையிலே

திருத்தேவனார்தொகையில் எம்பெருமான் தெய்வநாயகன் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். உத்ஸவருக்கு மாதவப் பெருமாள் என்று திருநாமம். தாயாருக்கு கடல் மகள் நாச்சியார் என்று திருநாமம்.

அண்ணல் செய் தலை கடல் கடைந்து அதனுள்
கண்ணுதல் நஞ்சு உணக் கண்டவனே
விண்ணவர் அமுது உண அமுதில் வரும்
பெண் அமுதுண்ட எம்பெருமானே

என்று பெரிய திருமொழியில் (5-6-1) திருமங்கையாழ்வார் பாடி அனுபவித்தார். எம்பெருமான் பாற்கடலைக் கடையும்போது அதில் தோன்றிய பல பொருள்களை தேவர்களுக்கும், அரக்கர்களுக்கும் தந்து கடைசியில் மஹாலக்ஷ்மீயைத் தானே திருமணம் புரிந்து கொள்கிறான்.

தி3வ்யமால்யாம்ப3ரத4ரா ஸ்நாதா பு4ஷ்ண பு4ஷ்பிதா ।
பஶ்யதாம் ஸர்வதே3வாநாம் யயௌ வக்ஷ:ஸ்த2லம் ஹரே ॥

என்று விஷ்ணுபுராணத்தில் (1-91-05) அருளியபடி தேவர்கள் எல்லோரும் பார்த்திருக்கும்போதே பிராட்டி ஹரினுடைய திருமார்பை அடைந்தாள். பகவானும் அவளை ஏற்று திருமணம் புரிந்து கொள்கிறார். அந்த திருமணம் காண தேவர்கள் எல்லோரும் குழாம் குழாமாக வந்து களித்த இடம். இந்த ஸ்தலத்திற்கு அதனால் தேவனார் தொகை என்ற பெயராயிற்று.

செஞ்சொல் மறைப்பொருளாகி நின்ற தேவர்கள் நாயகனே! எம்மானே
எஞ்சல் இல் என் உடையாய் எனது அமுதே ஏழுலகுமுடையாய் என்னப்பா!

என்று பெரியாழ்வார் திருமொழியில் (4-10-7) சுவையான அழகிய சொற்களை உடைய எல்லா வேதங்களுக்கும் முக்கியமான அர்த்தமாய் விளங்கும் தேவாதி தேவனே என்று அழைக்கிறார்.

நன்கோதும் நால் வேதத்துள்ளான் * நற விரியும்

என்ற பேயாழ்வாரின் வாக்கின்படி (மூன்றாம் திருவந்தாதி - 11) பகவான் பிழையற நன்றாக ஓதப்படும் நான்கு வேதங்களிலும் உள்ளான். அந்த வேதங்கள் எல்லாம்

எம்பெருமானே, உன்னடிக்கீழ் இருக்கின்றன. நீயோ பெரும் தவம் செய்து திருமகளை அடைந்து மாதவன் என்ற பெயரோடு விளங்குகிறாய்.

மாதவன் என்றென்று ஓத வல்லீரேல்
தீது ஒன்று அடையா - ஏதம் சாராவே

என்று திருவாய்மொழியில் (10-5-7) நம்மாழ்வார் "மாதவா" என்று ஓதினால் தீமைகள் வராது என்றார்.

அடைவதும் அணியார் மலர் மங்கைத்தோள்
மிடைவதும் அசுரர்க்கு வெம்போர்களே
கடைவதும் கடலுள் அமுது, என் மனம்
உடைவதும் அவற்கே ஒருங்காவே

என்று திருவாய்மொழியில் (9-3-6) நம்மாழ்வார் நாராயணனையே சிந்தித்து தன் மனம் உடைந்து போனது என்றார்.

வினைப்பயன்களின் துன்பத்தைக் கண்டு மனம் வெறுத்து நான் உஜ்ஜீவிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு உன்னையே அடைந்தேன் தெய்வ நாயகா. உன்னை கீழ்ச்சாலை என்னும் தேவனார்தொகையிலே கண்டு கொண்ட பின் நல்வாழ்க்கை பலனை அடைந்தேன்.

பவஜலதிம் அகாதம் துஸ்தரம் நிஸ்தரேயம்
கதமஹமிதி சேதோ மாஸ்மகா: காதரத்வம் ।
ஸரஸிஜத்ருஶி தேவே தாவகீ பக்திரேகா
நரகபிதி நிஷண்ணா தாரயிஷ்யத்ய வஶ்யம் ॥

குலசேகராழ்வார் முகுந்த மாலையில் (13) ஸாதிக்கிறார். ஓ மனமே! ஸம்ஸாரம் என்னும் பிறவிக்கடலை எவ்வாறு கடப்பது என்ற பயப்படாதே! தாமரைக் கண்களை உடையவனும் நரகாசுரனை அழித்தவனுமாகிய தேவனிடத்தில் செலுத்தும் பக்தி ஒன்றே போதும் உன்னைக் கடலிருந்து கடத்திவிடும் என்றார்.

பேசினார் பிறவி நீத்தார் பேர் உளான் பெருமை பேசி
ஏசினார் உய்ந்து போனார் என்பது இவ்வுலகின் வண்ணம்
பேசினேன் ஏச மாட்டேன் பேதையேன் பிறவி நீத்தற்கு
ஆசையோ பெரிது கொள்க அலைகடல் வண்ணர்பாலே

என்று திருக்குறுந்தாண்டகத்தில் (17) இதையே திருமங்கை மன்னன் எம்பிரான் பெருமையே பேசி பிறவி என்னும் பாபத்தை தொலைத்தேன் என்றார். பகவானை அடைவதற்கு பேதை, பாலகன், அறிவு அற்றோர் என்கிற வரம்பு (restriction) கிடையாது. அவனையே அடைய வேண்டும் என்கிற தீராத அவா ஒன்று மட்டுமே போதும் என்றார்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ஸ்ரீ ஸமுத்ரநயா நாயிக ஸமேத ஸ்ரீ லக்ஷ்மீ ரங்க பரப்ரஹ்மணே நம:

36 திருத்தெற்றியம்பலம் (திருநாங்கூர்)

பள்ளிகொண்ட பெருமாள் செங்கண்மாலே லக்ஷ்மீரங்கா
அள்ளியளிக்க நான்கு திருக்கைகளுடன் நீயிங்கே கிடக்க
எள்ளி நகைப்போம் எந்தையே உன் திருவடி எட்டியபின்
தள்ளிப் போ தீவினையே என்று திருத்தெற்றியம்பலத்தே

திருத்தெற்றியம்பலத்தில் ஸேவை ஸாதிக்கும் எம்பெருமானுக்கு பள்ளிகொண்ட பெருமாள், செங்கண்மால், லக்ஷ்மீரங்கன் என்றெல்லாம் திருநாமங்கள். பகவான் இங்கே நான்கு புஜங்களுடன் ஸயனித்த திருக்கோலம். தாயாருக்கு செங்கமலவல்லி என்று திருநாமம். திருத்தெற்றியம்பலம் என்பது பகவான் நடனமாடும் மேடை. பகவான் நடனத்திற்கும் முன்னோ இல்லை நடனத்திற்குப் பின் இங்கு களைத்து ஸயனித்து கிடப்பதாக சொல்லுவர்.

எம்பெருமானின் கண்கள் எப்பொழுதும் மூடாமல் விழித்திருந்து பக்தர்களுடைய பிராத்தனையை நிறைவேற்றுவதால், சிவந்தே இருக்கும். அதனால் செங்கண்மால் என்ற பெயர். பகவானின் திருக்கண்கள் கருணையால் சிவந்தேயிருக்கும் என்பர் பூர்வாசாரியர்கள்.

கண்கள் சிவந்து பெரியவாய் வாயும் சிவந்து கனிந்து

என்று பெரிய திருமொழியில் (8-8-1) திருமங்கை மன்னன் பகவானின் கண்கள், திரு அதரங்கள் எல்லாம் சிவந்தே இருக்கும் என்றார்.

கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து
செவ்வரியோடி நீண்ட அப்பெரிய வாய கண்கள்

என்று அமலனாதபிரானில் (8) திருப்பாணாழ்வார் பகவானின் திருக்கண்களில் சிவந்த ரேகைகள் இருப்பதை அழகாய் வர்ணிக்கிறார்.

எம்பெருமான் நான்கு திருக்கைகளுடன் நான்கு விதமான புருஷார்த்தங்களையும் (தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்ற அறம், பொருள், இன்பம், வீடு) அள்ளி தருவதற்கே காத்துக் கொண்டிருக்கிறார் என்கிறது வேதங்கள். அந்த பகவானை அறிந்து அவன் திருவடிகளை பற்றிய பின் நமக்கு வேறு என்ன கவலை?

தரணியின் மன்னி அயனார் தனித்தவம் காத்த பிரான்
கருணை என்னும் கடலாடி திரு அணை கண்டதற் பின்
நரகுத் திரள் எண்ணிய சித்திரகுப்தன் தெரிந்து வைத்த
ஸுருணையில் ஏறிய சூழ்வினை முற்றும் துறந்தனமே

என்று ஸ்வாமி தேசிகனும் ஸ்ரீஹஸ்திகிரி மஹாத்மியத்தில் (14) யமனின் கணக்குப் பிள்ளையான சித்திரகுப்தன் வைஷ்ணவர்களின் புண்ய பாப கணக்கு புத்தகத்தை

(ஸஹ்ருணை) கிழித்து எறிந்தான் என்று ஸாதித்தார். உன் திருவடிகளை உன்னுடைய உரையின் மூலமே அறிந்த பின் எனக்கு என்ன குறை இருக்க முடியும்?

நம்முடைய ஸஞ்சிதம், ப்ராரப்தம், ஆகாமி என்ற எல்லா வகையான ஊழ்வினைகளும் "தீயினில் தூசாகும்" என்பது போல் பொசுங்கிவிடும். திருத்தெற்றியம்பலத்தில் கிடக்கும் எம்பெருமானே உன்னையே நான் வந்து அடைந்தேன்.

நெய்க்குடத்தைப் பற்றி ஏறும் எறும்புகள் போல் நிரந்து எங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்! காலம் பெற உய்யப் போமின்
மெய்கொண்டு வந்து புகுந்து வேதப் பிரானார் கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணையோடும் பண்டு அன்று பட்டினம் காப்பே

பெரியாழ்வார் திருமொழியில் (5-2-1) நல்ல யாகத்திற்கு வைத்த நெய்யில் எறும்புகள் ஏறப் புகுந்தால் எப்படி அவைகளை விலக்குவார்களோ அதைப்போல் பகவான் தன்னுடைய பரிஜனங்களுடன் வந்து என் மனத்தில் தன்னுடைய பட்டினம் என்று எழுந்தருளியிருக்கும்போது அதற்கு தடையாய் உள்ள நோய்களே பகவான் உங்களை வேரோடு பிடுங்கி விலக்குவான் என்றார்.

தன் அடிக்கீழ் ஏழ் உலகு ஏழையும் வைத்த தனித்திருமால்
பொன் அடிக்கு ஏற்கின்ற புண்ணியர் கேண்மின் புகல் அறிவார்
முன் அடி பார்த்து முயலுதலால் அவர் சாயை எனப்
பின் அடி பார்த்து நடந்து பெரும்பதம் பெறுவோமே

என்று பரமத பங்கத்தில் (51) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். தன் திருவடியின்கீழ் ஏழு உலகத்தையும் ஆள்கின்ற ஒப்பற்ற எம்பெருமானின் திருவடிகளை பெற்று அனுபவிப்பதற்கு தகுதியான புண்யசாலிகளே கேட்பீராக! உபாயங்களை ஆறிந்த முன்னோர் அடிச்சுவட்டில் அவர் நிழல் என்று சொல்லும்படி நடந்து உயர்ந்த நிலமாகிய பரமபத்தை அடைவோமாக என்றார்.

எல்லாத் தருமமும் என்னை இகழ்ந்திட தான் இகழாது
எல்லாம் தந்து என எல்லாம் உகந்து அருள் தந்த பிரான்
மல் ஆர் மதக் களிறு ஓத்த வினைத் திரள் மாய்ப்பன் என்ற
சொல்லால் இனி ஒரு கால் சோகியாத் துணிவு உற்றனமே

என்று அமிருத ரஞ்சனியில் (37) ஸ்வாமி தேசிகன் சரம ஸ்லோகத்தில் எம்பெருமான் கூறியபடி நடந்து பாபங்களை ஒழித்து தைர்யத்தை அடைந்தோம் என்றார். ஆசாரியர்கள் காட்டிக்கொடுத்த வழியில் அதன்படி பிறழாமல் நடக்கும் எமக்கு தீவினைகளை பற்றி என்ன கவலை?

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ஸ்ரீ ரக்த பங்கஜவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ லக்ஷ்மீ ரங்க பரப்ரஹ்மணே நம:

37 திருமணிக்கூடம் (திருநாங்கூர்)

மணம் கமழும் வீசு தென்றல் காணும் பொருள் எல்லாம் உன்
மனமே கண்டார் நீயே மூவருக்கும் முதல்வா கஜேந்த்ர வரதா
இனம் கண்டார் கண்டு கொண்டார் தான் இன்றி அறத்தின்
குணம் கொண்ட மணிக்கூட நாயகா! நீ நின்ற மணிக்கூடமே

திருமணிக்கூடம் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் வரதராஜப் பெருமான், மணிக்கூட நாயகன் என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு திருமாமகள் நாச்சியார் என்று திருநாமம்.

திருமணிக்கூடத்தில் இளம் தென்றல் வீசுகிறது. அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் அருளால் அந்த வாசனையே தெய்வீக மணம் கொண்டு இருக்கிறது.

ஸ்வாப4விகாநவதி4காஶயே ஶித்ருத்த்வம்
நாராயணய த்வயி ந ம்ருஷ்யதி வைதிக: க: ।
ப்3ரஹ்மா ஶிவஶ் ஶதமக2: பரம: ஸ்வராடி3தி
ஏதேऽபி யஸ்ய மஹிமார்ணவ விப்ருஷஸ்தே ॥

என்று ஸ்தோத்ர ரத்னத்தில் (11) ஆளவந்தார் ஸாதித்த முறையில் கண்ணிற்கு புலப்படும் பொருள்களான ஆகாயம், பூமி, மரம், செடி, கொடி, விலங்குகள், அசேதன பொருட்கள் எல்லாம் பகவானின் மனத்தை ஒட்டியே இருக்கின்றன. எல்லாம் அவனுடைய ஸங்கல்பத்தினால்தான் நிலை பெற்று இயங்குகின்றன.

கண்ணிற்கு புலப்படாத, அறிவுக்கும் எட்டாத அறிய கருத்துக்கள் பல உள்ளன. அதில் மும்மூர்த்திகளில் யார் முதல்வன் என்று எல்லோரும் வீணாய் ஆராய்கிறார்கள்.

முதலாம் திருவுருவம் மூன்றென்பர், ஒன்றே
முதலாகும் மூன்றுக்கும் என்பர் -- முதல்வா

ஸ்வாமி நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் யார் ப்ரஞ்சத்திற்கு முதல்வன் என்று ஆராய முனைந்தார்கள் என்றார்.

ஜன்மாத்யஸ்யயத:

என்று பிரம்மசூத்ரம் (2-2) தோற்றம், இருப்பு, மறைவு எல்லாம் இந்த உலகிற்கும் எதனிடமிருந்து உண்டாகிறதோ அதை ப்ரம்மம் என்று அறிவாய் என்றது. அதாவது ப்ரம்மம் தான் ஜகத்ஜந்மாதி காரணம் என்று ஸாதித்தது. இதையே

நான்முகனை நாரணன் படைத்தான் நான்முகனும்
தான் முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்

திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில் (1) யார் பரம் என்பதை தெளிவாக காட்டுகிறார். முதலில் நாரயணன் மட்டுமே இருந்தான். அவனே ஜகத் காரணகன். அவனே வேர், முதல், வித்து எல்லாம். தன் சங்கல்பத்தாலே ப்ரபஞ்சத்தில் உள்ள பொருள்கள் அனைத்தும் ஸ்ருஷ்டிக்கிறான். பிரகிருதி என்னும் மூலப்பொருளிலிருந்து மஹத் என்னும் அஹங்காரம், பஞ்ச பூதங்கள், என்று ஸம்ஷ்டி ஸ்ருஷ்டியும் பிறகு ப்ரம்மாவை படைத்து அவன் மூலம் வ்யஷ்டி ஸ்ருஷ்டியாய் மற்றவைகளை தோற்றுவித்தான். அந்த ப்ரம்மா உண்டாகியவன்தான் சிவன்.

- ஸதே3வ ஸோம்யேத3மக்3ர ஆஸீதே3கமேவாத்3விதீயம் (சாந் உப 6-2-1)
- ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்,
  ந ப்3ரஹ்மா ந ஈஶாந: (மஹோ உப)
- யோ ப்3ரஹ்மாணம் வித3தா4தி4 பூர்வம்
  யோ வை வேதா3ம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை (தை நார உப)
- நாராயணாத் ப்3ரஹ்மா ஜாயதே நாராயணாத் ருத்3ரோ ஜாயதே
  நாராயணாதி3ந்த்3ரோ ஜாயதே (நார உப)

போன்ற வேத ப்ரமாணங்களும் இதையே சொல்லுகின்றன.

கஜேந்த்ர வரதா, உன்னுடைய அருளாலால், பர தத்துவம் எது என்பது நன்கு புலப்படும். ஆதி மூலமே என்று யானை கதறியபோது யார் அந்த கூக்குரலுக்கு பதிலளித்து அதை காத்து விண்ணுலகு அளித்தார்கள்?

த்ரயோ தே3வாஸ் துல்யாஸ் த்ரிதயமித3 மத்3வைதமதிகம்
த்ரிகாத3ஸ்மாத் தத்வம் பரமிதி விதர்க்காந் விகு4டயந்
விபே4தா3 நாபீ4 பத்3மோ விதி4 ஶிவ நிதா3நம் ப4கவத:
ததா3ந்யத்3 ப்4ரூப4ங்கீ பரவதி3தி ஸித்3தா4ந்யதி நு:

என்று ரங்கராஜஸ்தவத்தில் (1-116) பராசரபட்டர் முழுமுதல்வன் யார் என்று நாரயணணின் நாபி கமலத்தைப் பார்த்தாலே தெரியும் என்று ஸாதித்தார் அல்லவா?

இந்த சூக்ஷுமத்தை யார் சரியான் முறையில் அறிந்தார் என்று பார்த்தால், ஒவ்வொரு பொருள்களிலும் அதனுடைய ஸ்வரூபத்தையும், அதன் காரண காரியங்களையும் புரிந்து அந்தர்யாமியாய் நீ நின்று நடத்துகிறாய் என்பதை மனத்தில் உணர்ந்தவர்கள்தான். மணிக்கூட நாயக! உன்னுடைய திருமணிக்கூடத்தை அடைந்து, ஸத்வ குணமேயான உன்னை அடைக்கலமாக கொண்டு அகம்பாவம் இன்றி தான், தனது என்ற நினைவுகளை ஒழித்து சரணாகதியாக அடைந்தார்கள்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். "குன்றமும், வானும் மண்ணும் குளிர்புனல் திங்களோடு ---- தென்றல் வந்துலவும் நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே" என்றும் "சங்கையும் துணிவும் பொய்யும் மெய்யும் தரணி யோம்பும்" என்று குணங்கள் எல்லாம் அவனுடைய ஸங்கல்பமே என்று பாடி மகிழ்ந்தார்.

ஸ்ரீ ஸ்ரீபூ நாயிக ஸமேத ஸ்ரீ வரதராஜ பரப்ரஹ்மணே நம:

38 திரு வெள்ளக்குளம் (திருநாங்கூர்)

மறந்தேன் என்று உன்னை? களைவாய் எம் இடரை இன்றேயென
அடைந்தேன் பேர் பல அழைத்து கண்ணா நாராணா திருமகள்வாஸா
வருந்தேன் பூமகள் புகுந்துறையும் திருமார்பா திருவெள்ளக் குளத்தானே
பிறந்தேன் இனி அண்ணா! உன்னையும் உம்பியையும் கொண்ட பின்னே

திருவெள்ளக்குளம் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் ஸ்ரீநிவாஸான், கண்ணன், நாராயணன், அண்ணன் பெருமான் என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு அலர்மேல் மங்கை என்று திருநாமம்.

குன்று எடுத்து ஆநிரை காத்த ஆயா! கோநிரை மேய்த்தவனே! எம்மானே
அன்று முதல் இன்று அறுதியா ஆதியஞ் சோதி மறந்து அறியேன்

என்று பெரியாழ்வார் திருமொழியில் (4-10-9) ஸாதித்தபடி, பகவானே உன்னை என்று நான் மறந்தேன்? உனக்குத் தெரியாதா, உன்னையே நினத்திருப்பவன் நான் என்று? எனக்கு உள்ள இடையூறுகளை நீக்குவாய் என்று இன்றே வந்தடைந்தேன்.

இரவும் நன்பகலும் விடாது என்றும்
ஏத்துதல் மனம் வைம்மினோ

நிகரில் அவன் புகழ் இளைப்பு இலம்
பகலும் இரவும் படிந்து குடைந்தே

என்ற ஆழ்வார்களின் வாக்கின்படி உன்னையே எக்காலத்தும் நினத்திருந்தேன்

எங்கேயாவது நான் சொல்வது உன் காதில் விழாமல் போய் விடப்போகிறதே என்று நினத்து உன்னைப் பல பெயர்கள் சொல்லியே அழைக்கிறேன். கண்ணா, ஸ்ரீநிவாஸா, நாராயணா என்று. ஏதாவது ஒரு திருநாமத்திற்கு நீ செவி சாய்க்க மாட்டாயா என்று. கட்டிப்பொன் போல் பகவான். பணிப்பொன் போல் அவன் திருநாமங்கள் என்பர் முன்னோர்.

மண்ணில் பிறந்து மண்ணாகும் மானிடப் பேரிட்டு அங்கு
எண்ணம் ஒன்று இன்றி இருக்கும் ஏழை மனிசர்காள்
கன்னுக்கு இனிய கருமுகில் வண்ணன் நாமமே
நண்ணுமின் நாரணன் தம்மனை நரகம் புகாள்

பெரியாழ்வார் திருமொழியில் (4-6-7) அப்ராக்ருதமான எம்பெருமானின் பெயரை எல்லோருக்கும் இட்டு அவர்களை கூப்பிடும் சாக்கிலாவது எம்பெருமானை பல நாமங்களைக் கொண்டு அழையுங்கள் என்று வேண்டுகிறார்.

ந தே3ஹம் ந ப்ராணாந் நச ஸுக2ம் அஶேஷாபி4லஷிதம்
ந சாத்மாநம் நாந்யத் கிமபி தவ ஶேஷத்வவிப4வாத் ।
ப3ஹிர்ப்பூதம் நாத2! க்ஷணமபி ஸஹே யாது ஶதத4ா
விநாஶம் தத் ஸத்யம் மது4மத2ந! விஜ்ஞாபநமித3ம் ॥

என்று ஸ்தோத்ரரத்னத்தில் (57) ஸ்வாமி ஆளவந்தார் ஸாதிக்கிறார். மதுவைக் கொன்ற எம்பிரானே உனக்கு அடிமை செய்வதற்கு மாறான உடம்பையோ, உயிரையோ, சுகத்தையோ, ஆத்மாவையோ அல்லது வேறு எதுவாக இருந்தாலும் பொறுக்க மாட்டேன். இது உண்மை. இதுவே என் விண்ணப்பம். என்றார்.

அதைப்போல் நான் உன் உடைமை என்று இருக்கிறேன். உன்னை அடைந்தபின் வருத்தம் ஏது? அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கையுறை மார்பா என்று நித்ய ஸ்ரீயாய் எப்பொழுதும் திருமகளை திருமார்பிலேயே தாங்கிக் கொண்டிருப்பவனே. உன்னையும், உன்னுடைய தம்பியான திருவேங்கடம் உடையானையும் அறிந்தபின் எனக்கு ஏது மறுபிறவி? திருவெள்ளக்குளத்தில் வாஸம் செய்யும் பிரானே உன்னையே சரணாக அடைகிறேன்.

நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க
நரகமே சுவர்க்கமாகும் நாமங்கள் உடைய நம்பீ

திருமாலையில் (12) தொண்டரடிப்பொடி ஆழ்வார் முத்கலன் என்னும் மஹாபாதகன் வரலாற்றை சொல்லுகிறார். அவன் கோதானம் செய்யும்போது தன்னை அறியாமல் கிருஷ்ணா என்று பகவான் நாமாவை உச்சரித்தான். அவன் உயிர் போன பிறகு யமலோகத்தில் அவனைப் பற்றிய விசாரணையில் எதேச்சையாக தான் கிருஷ்ண நாமம் முன்னே சொல்லிவிட்டேன் தெரியாமல் என்று வருந்தி மன்னிப்பு கேட்கும்போது அந்த நரகமே சுவர்க்கம் மாதிரி மாறியது, கிருஷ்ண நாமத்தை ஒரு தடவை பலன் ஏதும் கருதாது சொன்னதிற்கே இந்த பலன்! அதைக் கேட்டு உன்னை சரணாக வந்தடைந்தேன் திருவெள்ளக் குளத்தானே.

திருவிண்ணகரத்து ஒப்பிலியப்பன் போல் இந்த ஸ்தலத்தில் உள்ள பகவானும் திருப்பதி திருவேங்கடமுடையானுக்கு அண்ணன் போல் கருதுகிறாகள்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். வட நாட்டில் உள்ள திருமலை திவ்ய தேஸம்போல் தென் நாட்டில் இந்த ஸ்தலத்திற்கு பெருமை என்பதை இரண்டு ஸ்தலங்களையும் பாடிய ஆழ்வார்களுடைய பாசுரங்களின் கருத்து, நடை, சொற்கள் ஒற்றுமையிலிருந்தே அறியலாம்.

திருமங்கையாழ்வார் முதல் பாசுரத்திலேயே. "திருவெள்ளக்குளத்துள் அண்ணா அடியேனிடரைக் களையாயே" என்றார். "அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா" என்று பாடிய நம்மாழ்வார் போல் திருமங்கையாழ்வாரும் பூவார் திருமாமகள் புல்லிய மார்பா" என்றார். அந்த கருத்தே "பூமகள் புகுந்துறையும் திருமார்பா" என்று இப்பாசுரத்திலும் சொல்லப்பட்டது.

ஸ்ரீ பத்மாவதி நாயிக ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

39 திரு பார்த்தன்பள்ளி (திருநாங்கூர்)

கார் வண்ணன் கண்ணன் தேர் நடத்தி சொன்ன மறையின் சாரமே
பேர் சிறக்கும் பார்த்த சாரதியாய் தேவிமார் முவருடன் அங்கே நின்று
வேர் தானேயென விஜயனுக்கும் வருணனனுக்கும் அரனுக்கும் காட்டிய
பார்புகழும் தாமரையாள் கேள்வனை நான்கொண்ட பார்த்தன்பள்ளியே

திருபார்த்தன்பள்ளி என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் கமலாபதி. தாமரையாள் கேள்வன் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். உத்ஸவருக்கு பார்த்த சாரதி என்று திருநாமம். தாயாருக்கு தாமரை நாயகி என்று திருநாமம். இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் மூலவரும், உத்ஸவரும் மூன்று மனைவிமார்களுடன் நின்று காட்சி தருகின்றார்கள்.

வருணனின் தவத்திற்கு இறங்கி அவன் வேண்டுகோளின்படியே எம்பெருமான் பார்த்தசாரதியாக நின்று ஸேவை ஸாதித்த இடம். மேகத்தின் நிறத்தைப்போல் கறுத்த திருமேனியை கொண்ட கிருஷ்ணன் தேர்பாகனாய் நின்று அருளிய பகவத் கீதையின் சாரம் என்பதே கீதா சரமஸ்லோகம். அந்த உயர்ந்த ரஹஸ்யத்தின் அர்த்தம் விளங்கிய இடம்தான் திருப்பார்த்தன் பள்ளி.

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ:
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:

என்று பகவத் கீதையில் (18-66) எம்பெருமான் கிருஷ்ணன் சரணாகதியாக என்னை ஒருவனே அடை என்று சொல்லியதலால், அண்டத்தில் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் வேர், வித்து, முதல் எது என்பது நன்கு புலப்படும்.

தானே எல்லாம் என்பதை அருச்சுனனுக்கும், வருணனுக்கும், சிவனுக்கும் அறிய வைத்து ஸேவை தந்து மகிழ்ந்த திருத்தலம் இவ்வாறு உலகமே புகழ்கின்ற தாமரையாள் கேள்வன் என்ற திருநாமத்துடன் உள்ள பெருமாளை நான் திருப்பார்த்தன்பள்ளி சென்று அடைந்தேன்.

எப்பொருட்கட்கும்
வேர் முதலாய் வித்தாய் பரந்து தனிநின்ற
கார்முகில் போல் வண்ணன் என்
கண்ணனை நான் கண்டேனே

திருவாய்மொழியில் (2-8-10) நம்மாழ்வார் எம்பெருமானே எல்லா உயிருடைய, உயிரற்ற பொருளகளுக்கும் ஜகத் காரணகன் என்பதை வேர், முதல், வித்து என்ற முன்றின் மூலம் அறிவிக்கிறார். வேர் என்பதின் பொருளை திருமந்திரத்தின் வியாக்கியானத்திலிருந்து நம் முன்னோர்கள் வழியாக அறிகிறோம்.

இன்றாக நாளையே ஆக இனிச்சிறிது
நின்றாக நின் அருள் என்பாலதே - நன்றாக
நான் உன்னை அன்றி இலேன் கண்டாய் நாரணனே
நீ என்னை அன்றை இலை

நான்முகன் திருவந்தாதியில் (63) திருமழிசையாழ்வார் சொல்லுகிறார். நாராயணனே உன்னுடைய அருள் என்பது என்னைப் போன்ற நீசர்களுக்கே ஆனது. உன் அருளை பெறுவதற்கு உகந்தவன் நான். ஆணித்தரமாய் சொல்லுகிறேன் இன்று, நாளை, இல்லை என்றாவது ஒரு நாள் நிச்சயமாக உன் அருள் எனக்கே. பொழியப் போகிறது. நீதான் எனக்கு ரக்ஷகன். உன்னைத்தவிர எனக்கு கதியில்லை. நானோ நீ ரக்ஷிக்க வேண்டிய வஸ்து. என்னைத் தவிர உனக்கு ரக்ஷிக்க உனக்கு வேறு பொருள் இல்லை.

இந்த தத்துவத்தை திருமந்திரத்தில் உள்ள நாராயணா பதத்திற்கு ஆசார்யர்கள் அற்புதமாக விளக்கம் ஸாதிக்கும்போது அறியலாம்.

நான் உன்னை அல்லால் இருக்க முடியாது என்பது நாராயணா பதத்தை நாரணாம் + அயநம் (தத் புருஷ ஸமாஸம்) என்று பிரிக்கும்போது காணலாம். பகவான்தான் எல்லா ஜீவராசிகளுக்கு ஆதாரம்.

நீயும் என்னையன்றி இருக்க முடியாது என்பது நாராயணா பதத்தை நாரா: அயநம் யஸ்ய ஸ: (பஹுவ்ரீஹீ ஸமாஸம்) என்று பிரிக்கும்போது காணலாம். "எவன் ஒருவன் ஜீவராசிகளை தனக்கு இருப்பிடமாய் கொண்டானோ அவன்" என்று ஆகிறது.

தத₃ஹம் த்வத்₃ருதே ந நாத₂வாந்
ம₃த்ருதே த்வம் த₃யநீயவாந் ந ச ।
வி₄தி நிர்மித மேதத₃ந்வயம்
ப₄க₃வந் ! பாலய மா ஸ்ம ஜீஹப: ॥

ஸ்வாமி ஆளவந்தாரும் ஸ்தோத்ர ரத்னத்தில் (51) இதையே காண்பிக்கிறார். பகவானே அடியேன் உன்னைத் தவிர நாதன் அற்றவன். நீயும் உன் அருள் சுரக்க என்னைத் தவிர வேறு யார் தகுதியானவர்கள்? என்றார்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். பத்து பாசுரங்களிலும் ஆழ்வார் தம்மை நாயகியாக பாவித்து பகவானிடத்தில் ஈடுபட்டு அதைக் கண்ட திருத்தாயார் சொல்வது போல் வர்ணிக்கிறார். "என் மடந்தை பார்த்தன் பள்ளி பாடுவாளே" என்று ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியிலும் சொல்லி கடைசி பாசுரத்தில் "நல்ல வைகுந்தத்துள் இன்பம் நாளும் எய்துவரே" என்று பாடி முடிக்கிறார்.

ஸ்ரீ கமல நாயிக ஸமேத ஸ்ரீ பார்த்தஸாரதிரூப ஸ்ரீ கமலாபதயே பரப்ரஹ்மணே நம:

40 திருச்சித்ர கூடம் (சிதம்பரம்)

தில்லையில் வந்து போக ஸயனம் கொண்ட மூர்த்திதான் திரு ராமனோ
தொல்லையே தந்து மண்ணையே உண்டு கட்டுண்டபிள்ளை கண்ணனோ
இல்லையே யோகம் இல்லையே யாகம் திருவடியே கொள்ளூர் பத்தரோ
சொல்லையே தந்து உள்ளத்தில் கொண்டு பணிந்த கோவிந்தராஜனோ

சிதம்பரம் என்னும் இந்த ஊரை திருச்சித்திர கூடம் என்றும் தில்லை என்றும் அழைப்பர் இந்த ஸ்தலத்தை. மூலவர் கோவிந்த ராஜனாக போக ஸயனத்துடன் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு புண்டரீக வல்லி என்று திருநாமம்.

சேரலன்கோல் குலசேகரன் என்னும் ஒரு ஆழ்வார், இந்த பகவானை ராமனாகவே கண்டு மகிழ்கிறார். மற்றோரு ஆழ்வார், வாள் வில்லேந்தும் திருமங்கை மன்னனோ எப்பொழுதும் குறும்பையே செய்து இந்த உலகத்தையே உண்டு வயிற்றில் அடக்கி, உரலில் கட்டுப்பட்ட கிருஷ்ணனின் ஸௌலப்ய ஸௌஸீல்யத்தையே காண்கிறார்.

மண்ணும் மலையும் கடலும் உலகு ஏழும்
உண்ணுந் திறந்து மகிழ்ந்து உண்ணும் பிள்ளைக்கு
வண்ணம் எழில் குழல் கொள் மக்ரக் குழை இவை
திண்ணம் இருந்தவா காணீரே
சேயிழையீர் வந்து காணீரே

பெரியாழ்வார் திருமொழியில் (1-3-18) கண்ணனுக்கு காதுக்கு மகர குண்டலங்கள் அணிவிக்க யசோதை அழைக்கிற காட்சியாய் கூறுகிறார். மண். மலை, கடல் எல்லாம் அன்னம்போல் உண்பவன் என்கிறார்.

அப்படி ராமவதாரமும், கிருஷ்ணாவதாரமும் கல் நெஞ்சம் கொண்ட கிராதகனைக்கூட வசீகரப்படுத்துபவை. அது மட்டுமில்லாமல் சரணாகதி என்பதற்கே அத்தாட்சியாய் விளங்கக் கூடிய தத்துவங்கள் நிரம்பிய ப்ரமாணங்கள்.

ரகு4வர! யத3 பூ4ஸ்தவம் தாத்3ருஶோ வாயஸஸ்ய
ப்ரணத இதி த3யாஸூர் யச்ச சைத்3யஸ்ய க்ருஷ்ண! |
ப்ரதிப4வம் அபராத்3து4ர் முக்த4! ஸாயுஜ்யதோ3ஷபூ4:
வத3 கிம பத3மாக3ஸ் தஸ்ய தேஸ்தி க்ஷமாயா: ||

என்று ஸ்வாமி ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் (63) ஸாதித்த முறையில் ரகு குல திலகனாய் அவதரித்து சரணாகதி என்று விழுந்த காகாசுரன் விஷயத்திலும், தோஷங்களையே அறியாத கிருஷ்ணாவதாரத்தில் ஜன்மந்தோறும் தீமைகளையே செய்து வந்த சேதி குலத்து சிசுபாலனுக்கும் மோக்ஷம் கொடுத்தாய். அப்படிப்பட்ட உன் பொறுமைக்கு பாத்திரமாகாத பாவங்கள் என்ன இருக்க முடியும்?

இங்குள்ள அடியவர்களோ அந்த கோசல ராமனையோ இல்லை துவாராகாவாசி கிருஷ்ணனையோ நினக்கவில்லை. அவர்கள் யோகங்களை அறியாதவர்கள். மஹா யாகங்களை செய்ய சக்தி அற்றவர்கள். ஆனால் ஒன்ன்றை மட்டும் அறிந்து அதிலேயே திடமாய் மூழ்கியிருக்கிறார்கள். பகவானுடைய திருவடிகளே தஞ்சம் என்று அடைகிறார்கள். அதாவது கர்ம, ஞான, பக்தி யோகங்களை செய்ய தகுதியற்று சரணாகதி என்றே கொள்கிறார்கள்.

அந்த உயர்ந்த பக்தர்கள் பகவானுக்கு செய்யக்கூடியது என்ன? "ஸ்ரீமந் நாராயண சரணௌ ஸரணம் பரபத்யே" என்ற சொல்லும், பகவான் நம்மை ரக்ஷிப்பான் என்ற உயர்ந்த உள்ளத்து உறுதியும், தலை சாய்த்து என்ன பணி செய்வோம் அவனுக்கும், அவன் அடியவருக்கும் என்று காத்திருக்கும் நிலையும்தான்.

காயோடு நீடு கனியுண்டு
  கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம், ஐந்து
தீயோடு நின்று தவம் செய்ய வேண்டா
  திருமார்பனைச் சிந்தையுள் வைத்து என்பீர்
வாயோதும் வேதம் மல்கின்ற தொல்சீர்
  மறையாளர் நாளும் முறையால் வளர்த்த
தீ ஓங்க ஓங்கப் புகழ் ஓங்குத் தில்லை
  திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே

பெரிய திருமொழியில் (3-2-2) திருமங்கை மன்னன் வீணாய்த் தவம் செய்ய வேண்டாம், திருவாழ்மார்பனை வாழ்த்துங்கள் என்று அறிவுரை கூறுகிறார்.

அதைப்போல், இந்த திருத்தலத்தில் உள்ள அடியவர்கள் மனோ, வாக், காயை என்கிற இந்த மூன்றினாலும் கொள்வது "அடியவர்களை காப்பது என் விரதம்" என்று உறுதி அளித்த ராமனிடத்திலா? இல்லை "என்னையே சரணாக அடை, சோகிக்காதே" என்று சொன்ன கண்ணனிடத்திலா? இரண்டும் இல்லை. இங்கே அழகாய் ஸயனித்திருக்கும் அர்ச்யாவதார கோவிந்த ராஜனிடத்திலேதான்.

குலசேகராழ்வார் பதினொன்று பாசுரங்கள் பாடியுள்ளார். தில்லை நகர் திருச்சித்திர கூடம் தன்னுள் திறல் விளங்கு மாருதியோடு அமர்ந்தான்" என்கிறார். "எங்கள் தனி முதல்வனை எம்பெருமான் தன்னை என்றுகொலோ கண்குளிரக் காணு நாளே!" என்று பகவானை ஸேவிக்க விழைந்து அந்த காட்சி என்று கிடைக்குமோ என்று வருந்தி பாடுகிறார்.

திருமங்கையாழ்வாரோ கண்ணனாகவே பாவித்து இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். "தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா" என்றும் "திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே" என்று பக்தர்களுக்கு எல்லாம் அறிவுரை கூறுகிறார். ஆநிரை காத்தவன், மருத மரங்களை முறித்தவன்,, காளியன்மேல் நடனமாடியவன் என்று கண்ணனையே கண்டு கதறுகிறார்.

ஸ்ரீ புண்டரீக வல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ போக ஸயன கோவிந்தராஜ பரப்ரஹ்மணே நம:

நடு நாட்டு திருப்பதிகள் 2 (41 முதல் 42 வரை)

41 திருவஹீந்த்ரபுரம் (அயிந்தை)

ஏவல் கொள்ள அடியவரும் காவல் நின்ற அரவணையும்
வேகம் கொண்ட புள்ளரசும் யாகம் செய்ய போக மலையும்
மோகம் மறித்த யோகியடியும் ஞானம் தந்த திருப் பரிமுகனும்
தேவ தேவ நாதனே! நான் அடைந்தேன் திரு அயிந்தையிலே

திரு அஹீந்த்ரபுரம், திரு அயிந்தை என்று அழைக்கப்படும் இந்த ஸ்தலத்தில் மூலவர் தெய்வ நாயகனாய், நின்று ஸேவை ஸாதிக்கிறார்கள். உத்ஸவருக்கு தேவ நாதன். திவிஷத் நாதன், தாஸ ஸத்தியன், விபுத நாதன், அடியவர்க்கு மெய்யன், மூவராகிய ஒருவன் என்றெல்லாம் திருநாமங்கள். தாயாருக்கு ஹேமாம்புஜவ்ல்லி, வைகுண்ட்ட நாயகி என்று திருநாமம்.

அடியவர்க்கு மெய்யனான இந்த எம்பெருமானின் பக்தர்கள் எல்லாம் திரள் திரளாக இங்கு குழுமி, "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்" குற்றேவல் செய்ய காத்துக் கிடக்கிறார்கள். இந்த ஊரே அஹீந்த்ர புரம் என்று ஆதி ஸேஷன் பெயரால் உண்டானது. பகவான் ஸயனித்துள்ள அரவின் அரசன், அனந்தன், ஆதி ஸேஷன், எல்லா விதமான கைங்கர்யத்தையும் செய்கிறார். பகவானுக்கு காவல் நின்று காக்கும் பொறுப்பையும் இங்கு கொண்டுள்ளார்.

எம்பெருமான் வாகனமான பக்ஷிராஜன், கருடாழ்வார் பறந்து செல்லும் வேகத்தை யாராலும் அளக்க முடியாது. "வேதாத்மா விஹகேஸ்வரோ" என்று ஸ்வாமி ஆளவந்தார் அருளியபடி உயர்ந்த பக்ஷிராஜனை வேதமாகக் கருதி அவரிடம் முதலில் பக்தி செலுத்திகிறார்கள் அடியவர்கள்.

திருஅயிந்தைக்கு வந்து ஔஷத கிரி என்னும் அந்த மலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஹயக்ரீவரை ஸேவித்து தூய ஞானத்தை அடைகிறார்கள். ஆசார்ய ஸார்வபௌமராகிய ஸ்வாமி வேதாந்த தேசிகன் ஞான உபதேசம் இந்த மலையில்தான் பெற்றார் என்று அறிந்து பரவசத்தில் மூழ்குகிறார்கள்.

பகவானின் அருள்தான் நமக்கு உயர்ந்த ஆசாரியரை காட்டிக் கொடுத்து அவரிடம் சென்று நம்மை சரணாகதி செய்ய வைக்கிறது என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார். "ஞான வைராக்ய பூஷணம்", "கவிதார்க்கிக ஸிம்மம்", "வேதாந்தாசாரியர்" என்றெல்லாம் புகழப்படும் அருள் தரும் ஆரண தேசிகனின் திருவடிகளைக் கண்டு கொள்கிறோம்.

உலகத்தில் உள்ள அநித்யமான பொருள்களில் உள்ள மோகங்களை எல்லாம் மாற்றி பகவான் மேல் திருப்பப் படுகிறது. ஞானம் உண்டாகிறது. "ஞானம் அனந்த

மயம் தேவம்'' என்று ஞானக் கடவுளான குதிரை முகத்தோன், ஹயக்ரீவர் கடாக்ஷத்தால் உயர்ந்த எண்ணங்கள் தோன்றுகிறது.

பன்னுகலை நால்வேதப் பொருளை எல்லாம்
பரிமுகமாய் அருளிய எம் பரமன் காண்மின்

என்று பெரிய திருமொழியில் (7-8-2) திருமங்கை மன்னன் ஹயக்ரீவர் வேதங்களை எல்லாம் உபதேசிக்கிறார் என்றார்.

இந்த பேற்றை எல்லாம் அடியவர்கள் பெறுவதற்கு காரணம் என்ன? தெய்வ நாயகா!, தேவ நாதா! நீ குடி கொண்டுள்ள திரு அயிந்தை என்னும் மாநகரத்திற்கு வந்து உன் திருவடிகளையே அடைக்கலமாக கொள்வதால்தான்.

பாஷாண நிர்மித தபோதநு துர்ம தூரம்
புஸ்ம்ந் யுபாஹித நரேந்த்ர குமாரபுாவம் ।
ஸம்வாஹிதம் த்ரிதஶநாத ரமாமஹிப்யாம்
ஸாமந்ய தைவத முஶந்தி பதம் த்வதீயம் ॥

என்று உன் திருவடி மகிமையை ஸ்ரீ தேவநாயக பஞ்சாஸத்தில் (41) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். தேவநாதனே! ராமவதாரத்தில் கௌதம முனிவரின் மனைவியான அஹல்யை சாபத்தை தீர்த்தாய். கிருஷ்ணாவதாரத்தில் உத்தரை கருப்பத்தில் கரிக்கட்டையான சிசுவை அழகிய அரசிளங் குமரனாய் உன் திருவடி சம்பந்தத்தால் ஆக்கினாய். ஸ்ரீதேவி, பூதேவி இருவரும் உன் திருவடிகளை வருடுகிறார்கள். உன்னையே உலகத்தின் பொதுத் தெய்வம் என்று அழைக்கிறார்கள்.

அஞ்சல் அஞ்சல் அஞ்சல் என்று அளிக்க வேண்டும் அச்சுதா
அடியவருக்கு மருள் இயக்கும் அடியவர்க்கு மெய்யனே

என்று நவமணிமாலையில் (8) ஸ்வாமி தேசிகன் கடைசி காலத்தில் யமதூதர்கள் பாசக் கயிற்றை வீசுவதற்கு முன் சரண் அடைந்த என்னை காத்தருள்வாய், தேவநாதனே! என்று ஸாதித்தார்.

வஞ்ச உருவின் நமன்றமர்கள் வலிந்து நலிந்த என்னைப் பற்றும் போது
அஞ்சல் என்று என்னைக் காக்க வேண்டும் அரங்கத்ரவணைப் பள்ளியானே

என்று பெரியாழ்வாரும் திருமொழியில் (4-10-7) இதே கருத்தை ஸ்ரீரங்கநாதனிடம் ஸமர்ப்பிக்கிறார்.

திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார். ''மூவராகிய ஒருவனை மூவுலகு உண்டு உமிழ்ந்து அளந்தானை'' என்று பாடிக் களிக்கிறார்.

ஸ்ரீ ஹேமாப்ஜவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ தேவநாயக பரப்ரஹ்மணே நம:

42 திருக்கோவலூர்

கோவலன் நின்ற ஊரோ இது வாமனன் அளந்த வானோ
நாவலர் முவரும் இடைகழியில் தோன்றும் நான்மறை தமிழும் நடுஇரவில்
தயக்க கலக்க சிவந்த கண்ணும் நமக்கு மயக்க நினைக்க உருக்குமென
அரு உரு ஆனவை அரி உரு தான் அவை
சிறுகரு கருவினை கறுஉரு ஆனதும் திருஅவள் தருமருள் பெருநிலை பேறோ
இது அறமோ! இது பொருளோ! இது சுகமோ! இன்ப எல்லை வான்வீடோ?

திருக்கோவலூர் என்னும் திவ்ய தேசத்தில், வாமன திரிவிக்கிரம அவதாரம் செய்த ஸ்தலத்தில், மூலவர் திரிவிக்கிரமனாக, ஒரு திருவடியை தூக்கி நின்ற கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார், உத்ஸவருக்கு கோவலன், ஆயன் என்று பெயர். கோபாலன் என்னும் பெயர் கோவலன் ஆக மாறி அந்த கோவலன் நின்ற ஊர் ஆனபடியால் திருக்கோவலூர் என்று இந்த இடத்திற்குப் பெயர் மருவியது என்று சொல்வர்.

மருந்தும் பொருளும் அமுதமும் தானே
திருந்திய செங்கண்மால் ஆங்கே - பொருந்திய
நின்று உலகு உண்டு உமிழ்ந்து நீரேற்று முவடியால்
அன்று உலகம் தாயோன் அடி

முன்றாம் திருவந்தாதியில் (4) பேயாழ்வார் அருளினார். பகவானின் திருவடிகளே மருந்து போன்ற உபாயமாகவும், உபாயத்தால் அடையும் புருஷார்த்தம் போலும், புருஷார்த்ததில் கிடைக்கும் சுகம் போல் அமிர்தமாகவும் ஆகிறான் என்கிறார்.

இந்த ஸ்தலம் மூலவர் வாமனாக இருந்து வளர்ந்து திரிவிக்கிரமனாய் வானத்தை அளந்தானே, அவனுடைய ஊரா? இல்லை உத்ஸவரான அந்த கோபாலன் நின்ற ஊரா? உலகளந்தானைச் சொல்லும்போது கோபாலனை சொல்வது ஏன்?

மாவலி வேள்வியில் மாண் உருவாய்ச் சென்று
முவடி தா என்று இரந்த இம்மண்ணினை
ஓரடி இட்டு இரண்டாம் அடி தன்னிலே
தாவு அடி இட்டானால் இன்று முற்றம்
தரணி அளந்தானால் இன்று முற்றம்

என்று பெரியாழ்வார் திருமொழியில் (2-10-7) பதிலளிக்கிறார். ப்ரம்மச்சாரி வேஷம் பூண்டு முன்று அடி தா என்று மாபலியிடம் வேண்டி ஓர் அடியால் பூவுலகை அளந்து இன்னொரு அடியால் தாவி வேறு ஒரு இடம் அளந்த கண்ணனாலே எல்லாம் முடிந்து விடும் என்கிறார். திரிவிக்கிரமனையும் கண்ணனையும் ஒன்றாகவே பாவிக்கின்றார்.

தமிழ்மறைக் குரவர் என்று திவ்ய ஸூரிகளான ஆழ்வார்களில் முதலாழ்வார்கள் என்று போற்றப்படும் பொய்கை, பூதம், பேய் ஆகிய மூன்று ஆழ்வார்கள் நடு இரவில் இடைகழியில் ஆரம்பித்து வைத்த நாலாயிர திவ்ய பிரபந்தம் தோன்ற காரணமான ஊரா?

பகவானை அவன்தான் ப்ரம்மம், ஜகத்காரணகத்வன், ஸர்வேச்வரன் என்று காட்டிக் கொடுக்கக் கூடியது அவனுடைய திருக்கண்கள். ஜீவர்கள் செய்யும் பாவக்குவியில்களைக் கண்டு எம்பெருமான் தயங்குகிறான். இவர்களை மன்னிப்பதா? என்று யோசிக்கிறான். உடனே பிராட்டி முன்வந்து புருஷகாரத்வம் செய்வதால் காருண்யம் மிகுந்து கண்கள் சிவக்கிறது. இதைக் கண்ட ஜீவர்கள் இதுதான் சமயம், பிராட்டியுடன் கூடி இருக்கும்போது பகவான் மயங்கியிருக்கிறான். இந்த நிலைதான் நமக்கு உறுதுணையானது என்று சரணடைகிறார்கள். பகவானின் கல்யாண குணங்களை நினைத்து ஜீவர்கள் உருக, பகவானும் இந்த ஜீவன்கள் எத்தனை காலம் தவறுகள் செய்தபின் இப்பொழுது திருந்தி நம்மிடம் வந்து மன்னிப்பு கேட்கின்றதே என்று அவனும் உருக, தாயாரும் பிரிந்த இந்த இரண்டையும் ஒன்று சேர்த்து வைத்தோமே என்ற அடைந்த அசுவாசமும் அனுபவிக்கக் கூடிய ஊரா இது?

சித் அசித் என்ற இரண்டும் பரமாத்மா ஹரியான நாரயணனது உடலே என்று நமக்கு பாடம் புகட்டிய ஊரா?

அளவில் மிகச்சிறியதான ஜீவாத்மா, பாபங்களை மலைகளைபோல் செய்கிறது. அதற்கே தெரியாமலும் சில நல்ல காரியங்களையும் செய்கிறது. இந்த இருவினகளையும், சுட்டு பொசுக்கி கரிக்கட்டை போல் ஆக்குவது எது? திரு என்று புகழ் வாய்ந்த மஹாலக்ஷ்மியின் அருளினால்தான். அதனால்தான் பெரு நிலைப் பேறாகிய மோக்ஷத்தையும் ஜீவர்கள் அடைகிறார்கள். அந்த மஹாலக்ஷ்மீ அருள் புரியும் ஊரோ இது?

புருஷார்த்தங்கள் நால்வகை என்று ஸம்ப்ரதாயத்தில் சொல்லப்படுகிறது. அதில் சொல்லப்பட தர்மம் சிறந்த ஊர் இதுவா? இல்லை பொருள் என்று குவியும் ஐச்வர்யம் நிறைந்ததா? இன்பம் என்று ஜீவர்களை மகிழ்ச்சியில் முழுக்கும் காமமா? இல்லை திட விசும்பு என்றும், வான் வீடு என்றும் அந்தமிலா பேரின்பம் என்று புகழக்கூடிய ஸ்ரீவைகுண்ட்டமான பரமபதமே இதுவா?

மூன்று ஆழ்வார்கள் - திருமங்கை, பொய்கை, பூதம் - 21 பாசுரங்களில் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள். பொய்கையாழ்வார் "நீள்கோவில் பொன்னகர்" என்றார். "தமருள்ளம் மாமல்லை கோவல்" என்றார் பூதத்தழ்வார். திருமங்கையாழ்வாரோ "மஞ்சாடு வரையெழும் கடலகளேழும் வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம் எஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின் மேல் ஓர் இளந்தளிரில் கண் வளர்ந்த ஈசன் தன்னை --- திருக்கோவலரதனுள் கண்டேனே" என்று ஆயனாகவே அனுபவிக்கிறார். "கரந்தெங்கும் பரந்தானை காண்பர்" என்று ப்ரம்ம ஸ்வரூபத்தை சொல்லி முடிக்கிறார்.

ஸ்ரீ புஷ்பகவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ த்ரிவிக்ரம பரப்ரஹ்மணே

தொண்டை நாட்டு திருப்பதிகள் 22 (43 முதல் 64 வரை)

43 திருக்கச்சி (அத்திகிரி)

அறிந்தன அடிமையாகி காப்பது திண்ணம் ஆணைகாண்டான்
உயர்ந்தன அறம் விட்டு அடிதொட்டு என உரைத்த கண்ணன்
மறைந்தது வேகம் குறைந்தவன் யாகம் காத்து * திருக் கச்சியில்
எழுந்தது திருவுருவம் பெருந்தேவி அருளான் என்னும் பேரின்பம்.

காசி முதலாகிய நல் நகரி எல்லாம்
கார்மேனி அருளாளர் கச்சிக்கு ஒவ்வா

என்று ஸ்வாமி தேசிகன் அமிருத ஸ்வாதினியில் (27) காசி போன்ற புண்யங்களையே கொடுக்கும் திவ்ய கேஷத்திரங்கள்கூட மழைக்கால மேகம் போல் கறுத்த திருமேனியை உடைய பேரருளாளன் என்று திருநாமத்துடன் எழுந்தருளியிருக்கும் திருக்கச்சி நகரத்திற்கு இணையாகாது என்றார்.

ஸக்ருதே3வ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே. ।
அப4யம் ஸர்வ பூ4தேப்4ய: த3த3ா.ம் ஏதத்3 வ்ரதம் மம: ॥

என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் () என்னை எவன் ஒருவன் ஒருக் காலத்தில் சரணாகதி என்று அடைந்தானோ அவனை "பயக்ருத் பய நாசந" என்கிறபடி பயம் நீக்கி காக்கிறேன் என்றான் பகவான் ஸ்ரீ ராமன். இதை அறிந்த எல்லா ஜீவாத்மாக்களும் அந்த ப்ரதிக்ஞையில் விசுவாசம் கொண்டு "அத்திர அரக்கன் முடி பத்தும் ஒரு கொத்தென உதிர்த்த திறலோனான" ராமனையே சரணாகதி என்று வரிக்கின்றனர். .

ஸர்வ த4ர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ: ।
அஹம் த்வா ஸர்வ பாபேப்4ய: மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ॥

என்று பகவத் கீதையில் (18-66) எல்லா தர்மங்களையும், அதன் பலன்களையும் விட்டு என்னை ஒருவனையே சரணமாக பற்றுவாயக" என்று சோகித்தவனுக்கு "மத்தறு மிகுத்த தயிர் மொய்த்தவெணெய் வைத்துணும் அத்தனான" கண்ணன் சொல்லக் கேட்டு ஜீவாத்மாக்கள் அதைச் செய்து உயர்ந்த கதியை அடைந்தன.

அங்கஹீனமனாய் ஒரு தலை குறைந்து இருக்கும் ப்ரம்மாவின் யாகத்தை கலைக்க சரஸ்வதி, வேகவதி ஆறாக பெருக்கெடுத்து பாயும்போது அதை அணயாக தடுத்து நிறுத்தி, யாகத்தை நிறைவு பெறச் செய்த எம்பெருமானே!

நீயே திருக்கச்சி என்னும் ஹஸ்திகிரியில், யாகத்தில் அக்நியிலிருந்து பெருந்தேவியின் பதி, பேரருளாளன் என்று தோன்றினாய். எல்லோரும் "வினை

தொத்து அற அறுக்கும் அணி அத்திகிரியே": என்று உன்னை அடைந்து பேரின்பம் என்னும் மோக்ஷ ப்ராப்தியை அடைந்து உய்கிறார்கள்.

ஒன்றே புகல் என்று உணர்ந்தவர் காட்டத் திருவருள்
அன்றே அடைக்கலம் கொண்ட நம் அத்திகிரித் திருமால்
இன்றே இசையின் இணையடி சேர்ப்பர் இனிப்பிறவோம்
நன்றே வருவது எல்லாம் நமக்கு பரம் ஒன்று இலதே

ஸ்வாமி தேசிகன் மெய்விரதான்மியத்தில் (4) ஸாதிக்கிறார். ஆசாரியர்கள் ஸ்ரீமந் நாராயணனே பரதேவதை. அவனே உபாயம் என்று நம்மை அவனுடைய திருவடிகளில் ஸமர்ப்பித்தனர். பேரருளாளின் இயற்கையான கருணை உள்ளத்தினானாலும், பிராட்டியின் புருஷகாரத்தினாலும் பகவான் நம்மை காத்து அருள்வதாக ஏற்றுக் கொண்டான். அதனால் நமக்கு மறு பிறவி என்பது கிடையாது. மோக்ஷ ப்ராப்தி வரும் வரை அனுபவிக்கப்போகும் இன்ப துன்பங்கள் எல்லாம் நமக்கு சாதகமானவை. இனி நாம் உஜ்ஜீவீப்பதற்கு செய்ய வேண்டியவை ஒன்றும் இல்லை என்றார்.

மூன்று ஆழ்வார்கள் 7 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

1. திருமங்கையாழ்வார்
   a. கல்லார் மதில் சூழ் கச்சி நகருள் --- நல்லானுடைய நாமம் சொல்லில் நமோ நாரயணமே" என்றும்
   b. "கல்லுயர்ந்த நெடுமதில்சூழ் கச்சி மேய கரிறு" என்றும் அனுபவிக்கிறார்.
2. பூதத்தாழ்வார்
   a. "உலகமேத்தும் ஆழியான் அத்தியூரான்" என்றும்
   b. அத்தியூரான் புள்ளை ஊர்வான் --- இறையாவான் எங்கள் பிரான்" என்று பாடினார்.
3. பேயாழ்வார்
   a. "நிறைந்த சீர் நீள்கச்சி உள்ளும் -- தாம் கடவார் தண்டுழாயார்" என்றார்

ஸ்ரீ பெருந்தேவி நாயிக ஸமேத ஸ்ரீ தேவாதிராஜ பரப்ரஹ்மணே நம:

44. அஷ்டபுயகரம்

ஒருக்காலே பிடித்த ஆனை அலற மறுக்காதே முறித்த நெடுமாலே
செருக்காலே பலகாலும் அமிழ்ந்த எமக்கு விருப்பாலே அருள்வாயே
திருமாலே தலை சாய்த்து நும்பணி தடையின்றி தழைக்க விரைந்து
தருவாயே தோளெட்டும் தகவோடு நின்ற அட்டபுயகர ஆதிகேசவா

காஞ்சி வரதன் கோலிலுக்கு அருகில் உள்ள திருஅட்டபுயகரத்தில் மூலவர் ஆதி கேசவன், கஜேந்த்ர வரதன், சக்ரதர் என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் எட்டுத் திருக்கரங்களுடன் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு அலர்மேல் மங்கை, பத்மாஸனி என்று திருநாமங்கள்.

பகவான் எட்டு திருக்கைகளிலும் ஆயுதம் ஏந்தி பகைவரை அழித்து பிரம்மா செய்த யாகத்தைக் காத்ததாக வரலாறு. யாதோக்தகாரீ பகவான் எழுந்தருளியுள்ள திருவெஃகாவிலும் இதே ஸ்தல புராணம்தான்.

ஒரு காலத்தில் கஜேந்திரன் என்ற யானை பகவானுக்கு அர்ச்சிக்க தாமரைக்குளத்தில் இறங்கி பூ பறிக்கும்போது அதன் காலை ஒரு முதலை கவ்வி இழுத்தது. தன்னாலும், தன் சுற்றத்தாராலும் தனக்கு வந்த ஆபத்திலிருந்து காக்க முடியாது என்ற எண்ணம் கடைசியாக வந்த பிறகே "ஆதி மூலமே" என்று பகவானை அழைத்தது. அதற்கு பதிலளித்தவன் யார்?

பிரபஞ்சம் முழுவதும் இரண்டு அடியில் அளந்து மூன்றாம் அடி எங்கே வைப்பது என்று கேட்ட திரிவிக்கிரமனான நெடுமால் அல்லவோ! அடியவனான கஜேந்தரனின் கூக்குரலுக்கு கேட்ட மாத்திரத்திலேயே மாட்டேன் என்று சொல்லாமல் முதலையின் தலையை முறித்து யானையை காப்பாற்றிய எம்பெருமானே உன் காரியத்தின் மேன்மையைவிட நீ வந்த வேகத்தைக் கண்டே அதிசயித்திருக்கிறேன்.

க3ஜேந்த்3ர ரக்ஷா த்வரிதம் ப4வந்தம்
க்3ராஹை ரிவாஹம் விஷயைர் விக்ருஷ்ட: ।
அபார விஞ்ஞாந த3யாது ப4வம்
ஆப்தம் ஸதாம் அஷ்ட பு4ஜம் ப்ரபத்3யே ॥

அஷ்டபுஜாஷ்டகத்தில் (1) ஸ்வாமி தேசிகன், கஜேந்திர யானைக்கோ ஒருகால்தான் முதலையால் கவ்வப்பட்டது. எனக்கோ இந்த்ரியங்கள் என்று பல கால்கள் உள்ளன. அவை யாவையும் உலகத்தில் உள்ள அற்ப சுகங்களான முதலைகளால் கவ்வப்பட்டு கர்வத்தால் நினைவு இழந்து வினைத்துயரில் அமிழ்ந்து கிடக்கின்றேன் என்கிறார். உன்னையே சரணாகதி கொள்ள வேண்டும் என்ற அறிவை நீயே தந்து என்னை நீயே ஆட்கொள்ள வேண்டும் எட்டு கரங்களுடைய ஆதி கேசவா!

தொட்ட படை எடுக்கும் தோலாத வென்றியான்
அட்டபுயகரத்தான் அஞ்ஞான்று - குட்டத்துக்

கோள் முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்
தாள் முதலே நங்கட்குச் சார்வு

என்று பேயாழ்வாரும் மூன்றாம் திருவந்தாதியில் (99) " எட்டு திவ்ய ஆயுதங்களுடன் தோல்வி என்பதையே அறியாத திரு அட்டபுயகரத்தானே, அன்று ஒரு நாள் குளத்தில் வலிமையான முதலையின் வாழ்க்கையை முடிக்கும்படியான இலக்கு (target) தவறாமல் எறியப்பட்ட சக்கரத்தை உடைய பெருமானின் திருவடிகளே நமக்கு சரணம் என்றார்.

என்னுடைய பாபங்களோ ஒரு காலத்திலிருந்து வந்தவை மட்டும் அல்ல. பல காலங்கள், அதாவது பல ஜன்மங்களிலிருந்து தொடரப்பட்டவை. உன்னுடைய அருள் ஒன்றுதான் அதற்கு நிவ்ருத்தி.

ப்ராப்தாபி4லாஷம் த்வத3நுக்ரஹாந் மாம்
பத்3மா நிஷேவ்யே தவ பாத3 பத்3மே ।
ஆதே3ஹபாதாத் ஆபராத4 தூ3ரம்
ஆத்மாந்த கைங்கர்ய ரஸம் விதே4யா: ॥

அஷ்டபுஜாஷ்டகத்தில் (8) ஸ்வாமி தேசிகன் ஸாதித்த முறையில், திருமாலே, ஈரடியில் சொல்லப்பட்ட திருவோடு சேர்ந்த நாரணனே! நான் தலை வணங்கி உமக்கு தடையில்லாமல் எல்லா காலங்களிலும் ஸேவகம் செய்யவும் அது தழைத்து பல மடங்காக அபிவிருத்தி அடையவும் நீ அருள் புரிய வேண்டும். அடியவருக்கு அருளுவதற்கு என்றே நீ பல தோள்கள் கொண்டு விரைந்து கருணையோடு வந்து திரு அட்டபுயகரம் என்ற ஸ்தலத்தில் ஆதி கேசவப்பெருமளாக நிற்கின்றாயோ?

ப்ரபந்ந ஜ்ந பாதேயம் ப்ரபித்ஸூநாம் ரஸாயநம்

அஷ்டபுஜாஷ்டகத்தில் (9) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். "அட்டபுயகரப் பெருமானே உன்னிடம் சரணாகதி செய்தவர்களுக்கு வழிக்கு உணவாகவும், சரணாகதி செய்ய விரும்புவர்களுக்கு ஒரு மருந்தாகவும் விளங்குகிறாய் நீ " என்றார்.

கலைகளும் வேதமும் நீதி நூலும் கற்பமும் சொற்பொருள் தானும் * மற்றவை
நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினால் அருள் செய்து * நீண்ட
மலைகளும் மாமணியும் மலர்மேல் மங்கையும் சங்கும் தங்குகின்ற
அலைகடல் போன்றிவரார்கொல் என்ன அட்ட புயகரத்தேன் என்றாரே

என்று பெரிய திருமொழியில் (2-8-5) திருமங்கை மன்னன் பகவானின் ஸௌலப்யத்தைப் போற்றி அவன் அலைகடல் போன்றவன் என்றார்.

திருமங்கையாழ்வார், பேயாழ்வார் என்ற இரண்டு ஆழ்வார்கள் 12 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

ஸ்ரீ பத்மாஸிநீ நாயிக ஸமேத ஸ்ரீ கஜேந்த்ரவரத பரப்ரஹ்மணே நம:

45. திருத்தண்கா (தூப்புல்)

கலைமகள் காரிருளை கண்டித்து நிலை கொடுத்த நாயகா
மலையெனும் மறையின் சாரமே மங்கா ஒளி தீபப்பிரகாசா!
துலையிலா நம் தூயனார் வந்துதித்த வளமான திருத்தண்கா
விலையின்றி அவரடியால் அடைந்தேன் விளக்கொளிப்பிரானே

திருக்கச்சிக்கு அருகே உள்ள திருத்தண்கா என்னும் இந்த திவ்ய தேசம். சரஸ்வதி பிரம்மாவின் யாகத்தை கலைக்க எண்ணி அசுரர்கள் உதவியோடு பிரபஞ்சத்தையே இருட்டாக்கி மக்களை தவிக்க விடுகிறாள். அப்பொழுது வேதத்தின் சாரமாய் பகவான் ஸ்வயம் ப்ரகாசமான தன்னுடைய ஒளியினால் உலகத்தையே ப்ரகாசமாக்கி காத்து அருள்கிறார்.. இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு தீபப்பிரகாசன், விளக்கொளி எம்பெருமான் என்று திருநாமங்கள். மரகதவல்லி என்று தாயாருக்குத் திருநாமம்.

"ராமனுஜ தயா பாத்ரம்" என்று எம்பெருமானாரின் திவ்யமான கருணை கொண்டு என்று பிரகாசிக்கும் ஸ்வாமி தேசிகன் அவதரித்த ஸ்தலம் இது. வேதாந்த தேசிகன் என்னும் நம் ஆசாரிய குல திலகத்திற்கு ஈடு இணை கிடையாது. ஒரொன்று தானே அமையாதோ தாரணியில் வாழ்வாருக்கு வானேறப் போமளவும் வாழ்வு" என்கிறபடி, அவருடைய திவ்யசுக்திகளின் மகிமையால், "ஆசார்ய தேவோ பவ:" என்று அவருடைய திருப்பாதங்களைக் முதலில் ஆஸ்ரயித்து அவர் வழியே உன்னை அறிந்துக் கொண்டேன்.

குருடனைச் சுற்றி எவ்வளவு ஒளி இருந்தாலும் அதைக் கண்டு கொள்வதோ, உபயோகத்தில் கொள்வதோ குருடனால் முடியாது. அது போல பகவான் எவ்வளவு தீபப்பிரகாசமானாய் இருந்தாலும் ஞானத்தில் சூன்யமான நம்மைப்போல் இருக்கும் குருடர்களுக்கு அவன் புலப்படமாட்டான். ஆசாரியார்கள் தாம் நம்முடைய ஞானக் கண்களை திறந்து அவனைக் காண வைக்கிறார்கள். ஆசாரியர்கள் நமக்கு செய்யும் இந்த மக்த்தான காரியம் விலையின்றி செய்யக்கூடிய பேருபகாரம்.

தத்தா: ப்ரஜா ஜநக வத் தே3ஶிகேந்த்ரை:
பத்யா பி4நந்த்3ய பு4வதா பரிணீயமாநா: ।
மத்யே ஸதாம் மஹித பே4ரு3 விசேஷ ஸித்3த்4யை
மாங்க3ல்ய ஸூத்ரமிவ பி3ப்4ரதி கிங்கரத்வம் ॥

ஸ்ரீசரணாகதி தீபிகையில் (30) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். ஆசாரியர்கள் ஜனக மஹாராஜா போல் பெண்களாகிற நம்மை கணவனான உன்னிடத்தில் ஸமர்ப்பிக்கின்றனர். நீயும் பரப்த்தி செய்த ஜீவர்களை உவந்து ஏற்றுக் கொண்டாய். பதிவ்ரதை மாங்கல்ய சரடைக் காப்பது போல் நாங்கள், இடைக்காலத்தில் மோக்ஷ ப்ராப்தி வரும் வரை பகவத் பாகவத கைங்கர்யங்கள் செய்து கொண்டு அபசாரங்கள் இன்றி வாழ்வோம் என்று ஆசாரியர்கள் ஜீவனை பகவானிடத்தில் சேர்க்கும்

பொறுப்பு என்பது பெற்றோர்கள் தங்கள் பெண்களுக்கு விவாகம் செய்து வைப்பது என்பது போல் என்று உதாரணம் காட்டுகிறார்.

தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய் எனப் பெய்யும் மழை

என்கிற திருக்குறளுக்கு ஏற்ப அந்த பகவானை புருஷனாக வரித்த நாம் வேறு தெய்வங்களை ஏறெடுத்தும் பார்க்காது மீதி வாழ்க்கையை நடத்துகிறோம்.

விலையின்றி என்ற சொல் பகவானுக்கு நாம் செய்யும் கைங்கர்யம் அனாதி காலமாக வந்தது. காசு கொடுத்து வாங்கக்கூடியது அல்ல

த்வாம் மாதரம் ச பிதரம் ஸஹஜம் நிவாஸம்
ஸந்த: ஸமேத்ய ஶரணம் ஸ்ரீஶ்ருத₃ம் கதி₃ம் ச ।
நி:ஸீம நித்ய நிரவத்₃ய ஸுக₂ ப்ரகாஶம்
தீ₃பப்பிரகாஶ ஸவிபூ₄தி கு₃ணம் விஶந்தி

ஸ்ரீசரணாகதி தீபிகையில் (12) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். விளக்கொளி எம்பெருமானே! ஸாதுக்கள் உன்னை தாயாகவும், தந்தையாகவும், உடன் பிறந்தனாகவும், இருப்பிடமாகவும், நண்பனாகவும், அடையும் பலனாகவும் சரண் அடைந்து துக்கமே கலவாத அளவிலா ஆனந்தத்தையும், ஞானத்தை உடையவனாகவும், ப்ரபஞ்சத்தை ஆள்பவானாகவும், திருக்கல்யாண குணங்களை உடையவனாகவும் அனுபவிக்கின்றனர் என்றார்.

ஆசார்யர் மூலம்தான் மோக்ஷம் அடைய முடியும் என்பதை அறிந்தேன். அவர்களுடைய திருநாமங்களை உச்சரித்து அவர்கள் திருவடிகளையேப் பற்றி நீசனான என்னை உன் அருளுக்கு தகுதியாக்கிக் கொண்டேன்.

ப்ருஷாதிவாத₃ பரிவாத₃ பைஶுநப்ரப்₄ருதி
ப்ரபூ₄த பதநீய பங்கிலா ।
ஸ்வத₃தே மமாத்₃ய ஸுப₄க₃ா ஸரஸ்வதீ
யதிராஜ கீர்தி கதைர் விஶோதி₄தா ॥

என்று யதிராஜஸப்ததியில் (19) ஸ்வாமி தேசிகன் யதிராஜர் திருநாமத்தையே ஒதுவதால் அசுத்தங்கள் நீங்கி தம் வாக்கு தூய்மை பெற்றது என்றார். அதனால் ஸ்ரீமதே ராமாநுஜாய நம: என்றே நம் ஆசார்யர்கள் ஸ்மரித்துக் கொண்டிருப்பார்கள்.

திருமங்கையாழ்வார் மட்டும் இரண்டு பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். "என்னை ஆளுடையீசனை எம்பிரான் தன்னை யாம் சென்று காண்டும் தண்காவிலே" என்றும், "விளக்கொளியை மரகதத்தைத் திருத்தண்காவில் வெஃக்காவில் திருமாலைப்பாடக் கேட்டு" என்றும் அனுபவிக்கிறார்.

ஸ்ரீ மரகதவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ தீபப்ரகாச பரப்ரஹ்மணே நம:

46. திருவேளுக்கை

வானே விடுத்து யானன்றி மற்றாரால் யாது பயன் என
தானே வந்தமர்ந்து தரணியைக் காக்கும் அழகிய சிங்கா!
தேனே அமுதேயென தெய்வமும் தொழும் திரு வேளுக்கை
கோனே * முகிழ்த்தும் முகுந்தநாயகா பொல்லா அரியுருவா,

திருவேளுக்கையில் எம்பெருமான் நரசிங்கனாக அமர்ந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். அழகிய சிங்கன், முகுந்த நாயகன் என்று திரு நாமம். தாயாருக்கு வேளுக்கைவல்லி, அம்ருதவல்லி என்று திருநாமங்கள். வேள் என்றால் விருப்பம். இருக்கை என்பது வீற்றிருக்கையைக் குறிக்கும். எம்பெருமான் தன் விருப்பத்தாலேயே தானே வந்து அமர்ந்த ஸதலமானதால் இப்பெயர் பெற்றது.

அண்டங்கள் பூராகவும் உனக்கு சொந்தம் என்றாலும், அடியார்களைக் காக்க வேண்டும் என்ற தீராத ஆசையினால், பரமபதத்தையும் விட்டு இங்கே வேகவதி ஆற்றின் தென் திசையில் உள்ள திருவேளுக்கையில் நீயாகவே வந்து எழுந்தருளி உள்ளாய்.

த்வயி ரக்ஷதி ரக்ஷகை: கிம்ந்யை:
த்வயி சாரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை: ।
இதி நிஶ்சித தீ4: ஶ்ரயாமி நித்யம்
ந்ருஹரே வேக3வதீ தடாஶ்ரயம் த்வாம் ॥

என்று ஸ்வாமி தேஶிகன் காமாஸிகாஷ்டகத்தில் (8) ஸாதித்த முறையில் உன்னைத் தவிர வேறு ஒருவரும் ரக்ஷகன் இல்லை என்பதை உணர்த்துவதற்காகவே நீயாகவே வந்து அமர்ந்தாயோ? நானும் உன்னத்தவிர வேறு ஒருவரையும் அறியாமல் என்னை ரக்ஷிக்க வேண்டி வந்தேன்

ஹே கோ3பாலக ஹே க்ருபாஜலநிதே4 ஹே ஸிந்து4கந்யாபதே
ஹே கம்ஸாந்தக ஹே க3ஜேந்த்3ர கருணாபாரீண ஹே மாத4வ ।
ஹே ராமாநுஜ ஹே ஜக3த்த்ரயகு3ரோ ஹே புண்ட3ரீகாக்ஷ மாம்
ஹே கோ3பீஜநநாத2 பாலய பரம் ஜாநாமி ந த்வாம் விநா ॥

என்று முகுந்தமாலையில் (21) குலசேகராழ்வார் ஹே கோபாலா!, கடல்மகள் நாதா! கம்ஸனை ஸம்ஹரித்தவனே, கஜேந்தரனை காத்தவனே மாதவா, பலராமனின் தம்பீயே கண்ணா கோபியர்கள் அன்பனே உன்னைத்தவைர நான் வேறு ஒன்று அறியேன் என்றார்.

"க்ருபா கடப கேஸரீ" என்று பொல்லாத கபட உருவம் கொண்டாய். இரணியன் கொண்ட வரத்திற்கு புறம்பின்றி அவனைக் கொல்ல தந்திரமான உருவம் எடுத்தாய். "விஷம விலோசநம்" என்று ஒன்றுக்கொன்று மாறுபட்ட செயல்களை

உடைய கண்கள் கொண்டாய். அதாவது பக்தர்களுக்கு குளிர்ந்த பார்வையும், அசுரர்களுக்கு வெப்பமான பார்வையும் தந்தாய்.

விகஸ்வர நக2 ஸ்வரு க்ஷத ஹிரண்ய வக்ஷ: ஸ்த2லீ
நிரர்க3ள விநிர்க3ளத் ருதி4ர ஸிந்து4 ஸ்நத்4யாயிதா: ।
அவந்து மத3நாஸிகா மநுஜ பஞ்ச வக்த்ரஸ்ய மாம்
அஹம் ப்ரத2மிகா மித2: பரகடித ஆஹவா ப3ாஹவா: ॥

என்று ஸ்வாமி தேஶிகன் காமாஸிகாஷ்டகத்தில் (8) ஸாதித்த முறையில் உன் அலர்ந்த நகங்களால் இரணியனின் மார்பை பிளந்து பொங்கிய இரத்தம் அந்திக்காலம் போல் சிவந்து நரசிம்மா உன் திருக்கைகளிலும் பரவியது. அந்த திருக்கைகள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு அடியவர்களை காக்க முந்தியிடுகிறது என்றார்.

வானாகித் தீயாய் மறை கடலாய் மாருதமாய்த்
தேனாகிப் பாலாய் திருமாலே

என்று பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில் (92) திருமாலைத் தேன், பால், அமுது என்கிறார்.. "ரஸோ வை ஸ:", "ஸர்வ ரஸ:", மத்வ உத்ஸ: என்று வேதங்களும் தேன், அமுதம் என்று உன்னையே புகழ்கின்றன.

சிவன் அயன் இந்திரன் இவர் முதல் அனைத்தோர்
தெய்வ குழாங்கள் கை தொழக் கிடந்த
தாமரை உந்தி தனி பெரு நாயக
மூவுலகளந்த சேவடி யோயே

திருவாசிரியத்தில் (1) நம்மாழ்வார் உன்னை தேவர்களும், மற்றைய தெய்வங்களும் தொழுகிறார்கள் என்றார். ஏன்? நீயே விபவ அவதாரத்தில் ராமனாக அவதரித்த போது "ந்ருசிம்ம பஞ்சாம்ருத ஸ்தோத்ரம் செய்து மகிழவில்லையா?

திருவேளுக்கையில் இருந்து அரசாட்சி செய்யும் நரசிம்ம மன்னனே, உன்னை நினக்கும்போதே மயிர் கூச்செறிந்து என் உடம்பெல்லாம் குறுகி இன்ப வெள்ளத்தில் ஆழ்த்துகிறதே? முகுந்த நாயகா, எம்பிரானே! உன்னையே சரண் அடைகிறேன்.

இரண்டு ஆழ்வார்கள் 12 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள். பேயாழ்வார் "அன்றிவ்வுலகம் அளந்த அசைவே கொல்? நின்றிருந்து வேளுக்கை நீள் நகர்வாய்" என்று பாடினார் திருமங்கையாழ்வார் "வேளுக்கை யாளரியை" என்று பெரிய திருமடலில் காட்டியுள்ளார்.

ஸ்ரீ அம்ருத வல்லீநாயிக ஸமேத ஸ்ரீ ஸிந்ரயோகந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

47. திரு நீரகம்

நீர் நின்று நெஞ்சம் நெகிழ்ந்து நீர்மையால் நிகரிலா
சீர் கொண்டு சிந்தையால் சிறியனுக்கு சேமம் செய்த
ஊர் இன்றி உத்தமனோடு சேர்ந்து நின்ற நீரகத்திலே
கார்வண்ண ஜகதீச்வரா! கைகூப்பினேனே நீரகத்தானே!

திருநீரகம் என்கிற திவ்ய தேஸம் தனி ஊரன்று. திரு ஊரகம் என்கிற உலகளந்த பெருமாள் ஸன்னதியிலேயே ஒரு முலையில் காணப்படுகிறது. இங்கு மூலவர் எங்கே இருக்கிறார் என்று தெரியாது. அதனால் "திட விசும்பு எரி வளி நீர் நிலம் இவை மிசை" என்கிறாற்போல் காணும் பொருளில் எல்லாம் உள்ளார் என்று கொள்ளலாம். உத்ஸவ மூர்த்திக்கு ஜகதீச்வரர் என்று திருநாமம். தாயாருக்கு நிலமங்கை வல்லி என்று திருநாமம்.

மாநாதிலங்கி$_4$ ஸுகி$_2$ பே$_3$த மஹாம்பு$_3$ராஶௌ
மக்$_3$நாஸ் த்ரிஸீம ரஹிதே ப$_4$வத: ஸ்வரூபே ।
தாப த்ரயேண விஹதிம் ந ப$_4$ஜந்தி ஸந்த:
ஸம்ஸார க$_4$ர்ம ஜநிதேந ஸமாதி$_4$மந்த: ॥

என்று ஸ்ரீசரணாகதிதீபிகையில் (23) ஸ்வாமி வேதாந்த தேசிகன் ஸாதிக்கிறார். பக்தி யோகத்தைச் செய்யும் ஞானிகள் நிராலம்பந யோகம் என்று பகவானின் திவ்யாத்ம திருமேனியை விட்டு ஸ்வரூபத்தையே தியானிக்கின்றனர். பகவானின் ஸ்வரூபம் அளவிலா ஆனந்தமும், ஞானமும் கொண்டதாய் மூன்று வகைகளில் எல்லையற்றதாய் (தேசம், காலம், வஸ்து) ஞானிகளின் மூன்று தாபங்களையும் (ஆத்யாத்மிக, ஆதி பௌதிக, ஆதிதைவிக) கோடைக்காலத்தில் கடலுள் மூழ்கித் தாபம் நீங்குவது போல் நீக்கி மோக்ஷ ப்ராப்தியை அடைவிக்கிறது. அதை மனத்தில் கொண்டு இந்த ஸ்தலத்தில் பகவானை ஸேவிக்கிறோம்.

நீர் என்பது உயிர் வாழ்வதற்கு இன்றியமையானது. அதுபோல் இந்த பகவானுடைய அருளின்றி மானிடர்கள் உயிர் வாழ்வது என்பது முடியாது. பகவானை நோக்கி கைகளை கூப்பி ஸ்தோத்திரம் செய்யும்போது அதற்கு மயங்கி அவன் திரவமாக கரைகிறான் என்பதை "அஞ்சலி" (அம் ஜலயதி) என்ற சொல்லில் இருந்தே அறியலாம். "நீராய் அலைந்து கரைய உருக்கின்ற நெடுமாலே" என்று நம்மாழ்வாரும் (5-8-1) பகவானின் நீர்மைப் பண்பை போற்றியுள்ளார்.

கண்ணன் கழல் தொழ கூப்பிய கையின் பெருமைதனை
எண்ணம் கடக்கவே எமுனைத் துறைவர் இயம்புதலால்
திண்ணம் இது என்று தேறித் தெளிந்தபின் சின்மதியோர்
பண்ணும் பணிமதிகள் பாற்றிப் பழந்தொழில் பற்றினோமே

ஸ்வாமி தேசிகன் அமிருத ஸ்வாதினியில் (24) அஞ்ஜலி வைபவத்தை அற்புதமாய் விளக்குகிறார். [பாற்றி = வாதங்களை முறியடித்து, பண்ணும் = செய்யும்,

பழந்தொழில் = ப்ரப்த்தி] பகவானின் திருவடிகளை நோக்கி கை கூப்புவது என்னும் செய்கையின் பெருமையை ஸ்வாமி ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் அருளினார். அதுதான் உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம் என்று அறிந்து கொண்டோம். சிற்றறிவு படைத்தவர்கள் கூறும் விதண்டா வாதங்களை கண்டித்து உன்னதமான ப்ரபத்தியை அனுஷ்டித்தோம் என்கிறார்.

த்வதா3ங்க்4ரி முத்தி3ஶ்ய கதா3பி கேநசித்
யதா2 ததா2 வாபி ஸக்ருத் க்ருதோஞ்சலி:|
ததை3வ முஷ்ணாத்ய ஶுப4ாந்ய ஶேஷதஶ்
ஶுப4ாநி புஷ்ணாதி ந ஜாது ஹ்ரீயதே!!

ஸ்வாமி ஆளவந்தாரும் ஸ்தோத்ர ரத்னத்தில் (28) பகவானே உன் திருவடியைக் குறித்து ஒருதடவை எப்போதாவது எவன் ஒருவன் எந்த மாதிரியாகவோ அஞ்சலி செலுத்தினால் அப்போதே எல்லா பாபங்களும் கழிகிறது. நன்மைகளை விருத்தி செய்கிறது என்று ஸாதித்தார்.

எம்பெருமானின் உத்தமான குணங்களில் நீர்மை என்பது மிகவும் புகழ் வாய்ந்தது. நீர்மை என்பது மிக உயர்ந்த இடத்தில் உள்ளவன், மிகத் தாழ்ந்த இடத்தில் உள்ளவனோடு, விருப்பத்தோடு சரி சமமாக பழகுவது. ஜீவாத்மா செய்யும் பாபங்கள் கணக்கற்றவை. தனக்கே உள்ள கல்யாண குணங்களால் அவற்றை மன்னித்து தன் சங்கல்பத்தால் அவர்களுக்கு க்ஷேமங்களைச் செய்கிறான்.

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்றவர்க்கும் இன்னருள் சுரந்து

பெரிய திருமொழியில் (5-8-1) பகவானின் ஸௌஸீல்ய குணத்தை திருமங்கையாழ்வார் போற்றுகிறார்.

கோலமே தாமரைக் கண்ணதோர் அஞ்சன
நீலமே நின்று எனது ஆவியை ஈர்க்கின்ற சீலமே

என்று திருவாய்மொழியில் (3-8-8) நம்மாழ்வார் ஆத்மாவை தன்னிடம் இழுக்கும் சக்தியான ஸௌஸீல்ய குணம் என்றார்.

நிஷாத3 ராஜ ஸௌஹ்ருத3 ஸூசித ஸௌஶீல்ய ஸாக3ரா!

என்று ஸ்ரீமஹாவீர வைப4வத்தில் ஸ்வாமி தேசிகனும் பாடியுள்ளார். ஓங்கி உலகளந்த உத்தமனோடு சேர்ந்து தனக்கு என்று தனி ஊர் இல்லாமல் திருநீரகம் என்கிற திவ்ய தேஸத்தில் எழுந்தருளியிருக்கும் ஜக்தீச்வரா, உன்னைக் கண்டு உன் திருவடிகளை நோக்கி இரு கையும் கூப்பி வண்ங்கினேனே நீரகத்தானே!

திருமங்கையாழ்வார் ஸாதித்த திருநெடுந்தாண்டகத்தில் "நீரகத்தாய்" என்ற ஒரே பதம் மட்டுமே ப்ரபந்தத்தில் காணப்படுகிறது.

ஸ்ரீ பூ வல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ ஜகதீச்வர பரப்ரஹ்மணே நம:

48. திருப்பாடகம்

வேண்டி வணங்கித் தொழும் கார்வண்ணன் நீயே
தோண்டித் தள்ளுமுன் நீண்டு உயர்ந்த நெடுமாலே
அண்டி வருவதற்கே அமர்ந்த பாடக அருளாளனே
பாண்டவ தூதனே உன்னைப் பல்லாண்டு பாடுவனே

திருப்பாடகம் என்ற திவ்ய தேஸத்தில் எம்பெருமான் பாண்டவதூதனாக அமர்ந்து ருக்மிணி, ஸத்யபாமையோடு ஸேவை ஸாதிக்கிறான். அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அவதரித்த ஸ்தலம் இது.

முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து அரக்கன்
மன்னூர் தன்னை வாளியினால் மாளாமுனிந்து அவனே
பின்னோர் தூதாகி மன்னர்க்காகி பெருநிலத்தான்

என்று திருமங்கையாழ்வார் அனுபவம் பெரிய திருமொழியில் (2-2-3). அனுமான் தூதனாய் சென்று செய்த மஹாகார்யத்தை நினைத்து பகவான் தானும் அவ்வாறு செய்ய ஆசை உண்டாகி அடுத்த அவதாரத்தில் தூது சென்றான் என்கிறார்.

ஜனமேஜயன் மஹாபாரத்தில் கண்ணன் பாண்டவர் தூதனாக ஹஸ்தினாபுரம் சென்றார் என்பதைக் கேட்டான். துர்யோதனன் மற்றும் நீச புத்தியுடையவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கண்ணனை அவமானம் செய்யக் கருதி, ஒரு குழியைத் தோன்றி அதனை மூடி மறைத்து அதன்மேல் ஒரு ஆசனத்தை வைத்து கண்ணனை அதில் அமரும்படி அழைத்தார்கள். பகவானுக்கு இவர்கள் பண்ணும் சூழ்ச்சி தெரியாதா? அவரும் இதற்கு உடன்பட்டு ஆசனத்தில் அமர்ந்தார். ஆசனம் கீழே விழ, பகவான் மட்டும் விசுவரூபமாய் கார் வண்ண கண்ணனாய் உயர்ந்து நின்றார்.

செற்று எழுந்து தீவிழித்துச் சென்ற இந்த ஏழ உலகும்
மற்று இவை ஆ என்று வாய் அம்காந்து -- முற்றும்
மறையவர்க்குக் காட்டிய மாயனை அல்லால்
இறையேனும் ஏத்தாது என் நா.

பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில் (94) பகவான் கோவம் கொண்டு எழுந்து அனல் கக்கும்படியான கண்களைக் காட்டி ஏழ உலகங்களும் இவையே என்னுள் அடங்கியிருக்கின்றன என்று ஆ என்று வாய் திறந்து வேதத்தை அத்யனம் செய்தவர்களுக்கும் மற்றும் எல்லோருக்கும் காட்டினான் என்கிறார். பகவான் விச்வ ரூபத்தை அழகாய் வர்ணித்திருப்பது இங்கே துர்யோதானதிகள் செய்த சூழ்ச்சியின் போது பகவான் நீண்டு உயர்ந்த திருக்கோலத்தை காட்டியதாக உணரலாம்.

கிருஷ்ணாவதாரம் என்பது ஸௌலப்யத்தை காண்பிக்கிறது என்பர் நம் ஆசார்யர்கள். அதிலும் தூது செல்வது என்பது மிகவும் மட்டமான வேலை. பகவான் தன்னை அண்டியவர்களுக்காக அதையும் தான் செய்கிறான். அதை செய்ததோடு

நிற்காமல் உலகத்திற்கே அந்த அற்பத் தொழிலை பறை சாற்றுவது போல் திருப்பாடகத்தில் வந்து பாண்டவதூதனாக அமர்ந்த அருளாளனே, உனக்கு நான் பல்லாண்டு பாடுகிறேன்.

கோது அகம் ஒன்றில்லாத தகவே கொண்ட
கொண்டல் என வந்து உலகில் ஐவர்க்கு அன்றோர்
தூதுவனாய் ஒரு கோடி மறைகள் எல்லாம்
தொடர்ந்தோடத் தனி ஒடித் துயரம் தீர்த்த
மாதவனார்

என்று பரமத பங்கத்தில் (53) ஸ்வாமி தேசிகன் பாண்டவ தூதனை சிறப்பிக்கிறார். குற்றம், குறை என்று ஒன்றும் இல்லாத காளமேகமான எம்பெருமான் இந்த பூலோகத்தில் தோன்றி அந்த காலத்தில் நிகரற்ற பாண்டவ தூதானாய், ஒரு கோடி வேதங்கள் அவனைப் புகழ்ந்து ஓடிவர, அதற்கு அகப்படாமல் தானே தனியாகச் சென்று உலகின் துக்கத்தை போக்கிய திருமால் என்று அவனுடைய ஸௌலப்யத்தை புகழ்கிறார்.

இதி ஸர்வேஷாம் ஸமாந:
ஸத்ய ஸ்தி2தோ த்3ராஸ ஸத்ய ஸந்த4 பரிபூர்ண:
கத2ம் வஹஸி பக்ஷபாதம்
பாண்ட3வ ப்ரமுகே2ஷ்வி ப்ரேஷணம் அபி ஸஹமாந:

என்று ஸ்ரீ-அச்யுதசதகத்தில் (21) ஸ்வாமி தேசிகன் அடியார்களுக்காக சென்ற தூது சென்றதைக் கண்டு வியக்கிறார். பகவானே! நீ எல்லோர் காரியத்திலும் சமமாய் இருப்பேன் என்று வாக்களித்தாய். ஸத்யத்திலேயே ஊறி பரிபூர்ணனாய் விளங்குபவன் நீ. ஆனால் பாண்டவர் விஷயத்தில் மட்டும் எப்படி தூதாக விடுத்ததைப் பொறுத்து பக்ஷ பாதத்துடன் இருந்தாய் என்றார்.

நான்கு ஆழ்வார்கள் 6 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

நின்ற எந்தை ஊரகத்தில் இருந்த எந்தை பாடகத்து
அன்று வெஃகணைக் கிடந்த தென்னிலாத முன்னெல்லாம்
அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன்
நின்றதும், இருந்ததும், கிடந்ததும் என் நெஞ்சுளே

திருமழிசையாழ்வார், திருச்சந்த விருத்தத்தில் (64) ஊரகம், பாடகம் என்ற்ய் எல்லா ஸ்தல்ங்களையும் சேர்த்து பாடியுள்ளார்.

திருமங்கையாழ்வார் கச்சிப் பாடகத்துள் எல்லா உலகும் வணங்க இருந்த அம்மான் என்கிறார். பூதத்தாழ்வார் "பூம் பாடகத்துள் இருந்தானை ஏத்தும் என் நெஞ்சே" என்று வாழ்த்துகிறார். பேயாழ்வார் திருமால் தங்கியிருக்கும் இடங்களில் ஒன்று திருப்பாடகம் என்றார்.

ஸ்ரீ ருக்மணி ஸத்ய பாமா ஸமேத ஸ்ரீ பாண்டவதூத பரப்ரஹ்மணே நம:

49. திரு நிலாத்திங்கள் துண்டம்

தவத்திற் கிறங்கி மா மரத்தின் அடியில் வந்து உதித்த வாமனா
சிவசக்தி தங்கைக்குத் தம்கையில் தாங்கிய சங்கு சக்கரத்தானே
சிவந்த கையால் குளிர்மதியைப் பறித்த சந்த்ரசூடப் பெருமானே
உவந்து தீர்த்தாய் உமையின் தாபம் நிலாத்திங்கள்துண்டத்தானே

திருநிலாத்திங்கள் துணடம் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் எம்பெருமான் நிலாத்திங்கள் துண்டத்தான், சந்தரசூடப் பெருமான் என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். நிலாத்திங்கள் துண்டத்தாயார், நேர் ஒருவரில்லா வல்லி என்று தாயாருக்கு திருநாமம். இது தனிக்கோவிலாக இல்லாமல் காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் கோவிலுள் ஒரு ஸன்னதியாக அமைந்துள்ளது.

பார்வதி மாமரத்தின் அடியில் தவம் செய்கிறாள். அதைக் கெடுக்க சிவன் அந்த மரத்தையே எரித்து சாம்பலாக்குகிறார். பகவான் நாராயணன் தன் தங்கையான பார்வதியின் தவத்திற்காக இறங்கி வாமனனாக ஸேவை ஸாதிக்கிறான். சிவன் தலையில் உள்ள சந்திரனைப் பறித்து குளிர்ச்சி உண்டு பண்ணி சாம்பலான மாமரத்தை பிழைக்க வைக்கிறார். உமையின் வேண்டுகோளுக்கு இணங்க, சங்கு சக்கரத்தோடு காட்சி தருகிறார்.

கண்ணுள்ளே நிற்கும் காதல் தன்மையால் தொழில்
எண்ணிலும் வரும் என் இனி வேண்டும் அம்
மண்ணும் நீரும் எரியும் நல்வாயும்
விண்ணுமாய் விரியும் எம்பிரானையே

திருவாய்மொழியில் (1-10-2) நம்மாழ்வார் ஸாதிக்கிறார். உண்மையான காதல் கொண்டு பகவானைத் தொழுதால் அவனுக்கு நம்மிடம் ஆதரம் பெருகுகிறது. நம் கண்ணுள்ளே பகவான் தெரிகிறான். தியானம், ஜபம், யாகம், பூஜை எதைக் கொண்டும் அவனை வழிபட்டாலும் சரி. இல்லை ஜபத்தில் கணக்கு பண்ணும்போதும் சரி 12, என்று எண்ணிக்கொண்டே வரும்போது 25 ,26 என்றால், 26ஆக நான் இங்கே இருக்கிறேன் என்று பகவான் அதற்கும் வருவதுமுண்டு என்கிறார்.

பத்ரம் புஷ்பம் பலம் தோயம்
யோ மே பக்த்யா ப்ரயச்சதி ।
ததஹம் பக்த்யுபஹ்ருதம்
அஶ்நாமி ப்ரயதாத்மந: ॥

பகவத் கீதையில் (9-26) கிருஷ்ணன் கூறுகிறான் - என்னுடைய அருள் ஒன்றையே விரும்பி எவன் ஒருவன் ஒரு இலை, பூ, பழம், அல்லது நீரோ ஸமர்ப்பிகின்றானோ அவன் பக்தியோடு அளித்ததை நான் உவந்து ஏற்றுக் கொள்கிறேன் என்றார்.

மதுவார் தண்ணந்துழாயன் முதுவேத முதல்வனுக்கு
எதுவாது? என் பணி? என்னாது அதுவே ஆட்செய்யுமீடே

என்று திருவாய்மொழியில் (1-6-2) நம்மாழ்வார் கூறுகிறார். தேன்பெருகும் சிறந்த துளஸி மாலை அணிந்த வேத முதல்வனிடம் நான் தாழ்ந்தவன், என்னால் என்ன முடியும் என்று சொல்லி அகலாதே. அவனுடைய தொண்டு ஏதேனும் ஆனாலும் செய்து அவனுக்கு ஆட்படுவதே சிறந்தது என்றார்.

பகவான் தன்னை வேண்டியவர்களுக்கு நன்மை பயக்கவே காத்திருக்கிறான். அவர்கள் கேட்கும் ரூபத்திலேயே வருகிறான் என்பதை இந்த ஊரில் வாமனனாக காட்சி தந்து பார்வதியின் வேண்டுகோளுக்கு இணங்கியதைக் கொண்டு அறியலாம்.

அநிச்சந்நப் யேவம் யதி புநரீதீச்சந்நிவ
ரஜஸ் தமஶ் சந்நஶ் சத்ம ஸ்துதி வசந பங்கீ மரசயம் ।
ததாபீத்தம் ரூபம் வசந மவலம்ப்யாபி க்ருபாயா
த்வமே வைவம் பூதம் தரணீ தர மே ஶீக்ஷய மந: ॥

என்று ஸ்தோத்ர ரத்னத்தில் (59) ஆளவந்தார், வராஹ அவதாரத்தில் ரஸாதலத்திலிருந்த் பூமியை எடுத்து காப்பாற்றியவனே! ரஜோ, தமோ குணங்களில் அமிழ்ந்திருக்கும் அடியேனை உன்னை இப்படி துதி செய்ய நினைக்காவிட்டாலும், உண்மையாக விரும்புவன் போல் போலி ஸ்துதிவசனத்தை செய்தேன் ஆனாலும் அதியே முன்னிட்டு அதை பற்றாகக் கொண்டு நீயே உன் கருணையால் என்னை திருத்திப் பணி கொள்ள வேண்டும்.

உள்ளத்தே உறையும் மாலை உள்ளுவான் உணர்வு ஒன்று இல்லா
கள்ளத்தேன் நானும் தொண்டாய் தொண்டுக்கே கோலம் பூண்டு
உள்ளுவார் உள்ளிற்று எல்லாம் உடன் இருந்து அறிதி என்று
வெள்கிப் போ என் உள்ளே நான் விலவு அறச் சிரித்திட்டேனே

திருமாலையில் (34) தொண்டரடிபொடியாழ்வார் இதே கருத்தை சொல்லி நானும் நடிக்கிறேன். நீயும் அது தெரியாத மாதிரி நடிக்கிறாய். இதை நினைக்கும்போது எனக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வருகிறது. என்றார்.

பகவான் போலி, நடிப்பு வெளிப்பூச்சு பக்தி என்று ஆனாலும் அதையும் விலக்காமல் அதற்கும் உரிய பலன்களைத் தருகிற கருணை வெள்ளம்.

திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் அருளியுள்ள "நிலாத் திங்கள் துண்டத்தாய்" என்கிற குறிப்பு மட்டுமே பிரபந்தத்தில் காணப் படுகிறது.

ஸ்ரீ சந்த்ர சூடாவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ சந்த்ர சூட பரப்ரஹ்மணே நம:

50. திரு ஊரகம்

அடியில் சிக்கி மாபலி அலற்ற அதற்கு மனம் இரங்கி * ஒரு
நொடியில் உயர்ந்த திரு ஊரகத்து உலகு அளந்த பெருமானே
அடியைக் காட்டி அடியவரை வரித்த அருள்தேவனே * உன்திரு
வடிவை நிமிர்ந்துக் காணாவே அரவரசாய் கண்டு களித்தாரே

திரு ஊரகத்தில் பகவான் உலகளந்த பெருமானாக, நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு அமுதவல்லி நாச்சியார் என்று திருநாமம்.

பார் அளவும் ஓர் அடி வைத்து ஓர் அடியும் பார் உடுத்த
நீர் அளவும் செல்ல நிமிர்ந்ததே

பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில் (3), திருவிக்கிரம விஸ்வரூபத்தில் ஒரு திருவடி பூமியின் நிலம் முழுவதும் அளந்தது. மற்ற ஒன்று அண்டங்களை சூழ்ந்திருக்கும் ஆவரண ஜலம் வரை ஓங்கி வளர்ந்தது என்கிறார்.

ஆழி எழ சங்கும் வில்லும் எழ * திசை
வாழி எழத் தண்டும் வாளும் எழ * அண்டம்
மோழை எழ முடி பாதம் எழ * அப்பன்
ஊழி எழ உலகம் கொண்டவாறே

என்று திருவாய்மொழியில் (7-4-1) நம்மாழ்வார் திரிவிக்கிரமன் நீண்டு வளர்ந்ததை ஒவ்வொன்றாக வர்ணிக்கிறார். (ஆழி = சக்கரம், மோழை = நீர்க்குமிழி).

கலந்து என் ஆவி நலங்கொள் நாதன்
புலன் கொள் மாணாய் நிலம் கொண்டானே

என்று திருவாய்மொழியில் (1-8-6) நம்மாழ்வார் முவடி அளந்து ப்ரபஞ்சம் அனைத்தும் கொண்டவன்தான் என்னுடைய நாதன் என்றார்.

அந்த மஹா புருஷனை மஹாபலிச் சக்கரவர்த்தி கண்டு வணங்கி அனுபவிக்க முடியவில்லை. பகவானின் அளந்த முதல் திருவடிக்கீழ் அகப்பட்டு கொண்டதால் திருவிக்கிர அவதாரத்தை தலை நிமிர்ந்து ஸேவிக்க முடியவில்லை மஹாபலியால். அவன் வருந்தி பகவானை வேண்ட அவரும் ஒரு க்ஷணத்தில் அவனுக்காக இந்த ஸ்தலத்தில் உயர்ந்து உலகளந்த பெருமானாக ஸேவை ஸாதிக்கிறார்.

நைவ கிஞ்சித் ப்ரோஷந்தே ப்ரத்யக்ஷோऽஸி ந கஸ்யசித் ।
நைவ கிஞ்சித₃ ஸித்₄யந்தே ந ஸித்₃தே₄ऽஸி கஸ்யசித் ॥

என்றி ஜிதந்தே ஸ்லோகம் (1-6) சொல்கிறது. பகவானே உனக்கு ப்ரத்யக்ஷம் இல்லாதிருப்பது ஒன்றும் இல்லை. நீயும் எவருக்கும் அவரவர் முயற்சியாலே கண்

முதலிய இந்திரியங்களால் அறியத்தக்கவனாக ஆகிறாய் அல்ல. உனக்கு அடைய முடியாதது ஒன்றும் இல்லை. நீ எவர்க்கும் அவரவர் முயற்சியாலே அடைய முடியாதவனாகிறாய் என்றது.

அது போல் பகவானின் திருவடிக் கீழிருந்து வெளியே வந்த மஹாபலி எவ்வளவு தலையை உயரே தூக்கிப் பார்த்தாலும் தன்னுடைய சக்தியால் பகவானின் உயர்ந்த திருமேனியின் ஒரு சிறு துளிப்பகுதியையும் காண முடியவில்லை. பகவானும் அவனுக்கு இரங்கி தன் உருவத்தை குறைத்துக் கொண்டு ஆதி ஸேஷனாக காட்சி தந்தவுடன் அவனும் கண்டு களித்தான்.

திருவிக்கிரமாவதாரத்தில், மூவுலகையும் அளந்து பகவான் தன் திருவடிகளின் வன்மையைக் காட்டினான். ராமாவதாரத்தில் அகலிகை சாபம் நீக்கி தன் திருவடிகளின் மேன்மையைக் காட்டினான் கிருஷ்ணாவதாரத்திலோ, பாண்டவ தூதானாய் இங்கும் அங்கும் நடந்து திருவடிகளின் எளிமையைக் காட்டினான்

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனி இந்த உலகுக்கு எல்லாம்
உவ்வண்ணம் அன்றி மற்றோர் துயர்வண்ணம் உறுவதுண்டோ?
மைவண்ணத்து அரக்கி போரின் மழைவண்ணத்து அண்ணலே உன்
கைவண்ணம் அங்கு கண்டேன் கால் வண்ணம் இங்கு கண்டேன்

கம்ப இராமாயணத்தில் கம்பன் பகவானின் திருவடிகளின் பெருமையை போற்றுகிறான். ஹே ராமா! மக்கள் எல்லோரும் "கொடுத்தும் தூக்கும் அங்கம்" என்று கையைப் போற்றுவர், கரை படிந்த காலையோ விரட்டி உதைத்துத் தள்ளும் உறுப்பு என்பர். அபயஹஸ்தமாய் நின்று அனவரையும் அஞ்சேல் என்று காட்டித் தன்னிடம் அழைக்கும் உன் திருக்கைகளோ அஸ்திரங்களை தொடுத்து ஆயிரக்கணக்கான அசுரர்களை வீழ்த்தியது. ஆனால் உன்னுடைய திருவடியோ அதன் ஸ்பரிசம் பட்டவுடன் கௌதம முனிவர் மனைவியான அகலிகைக்கு இன்று சாப விமோசனம் அளித்தது என்று திருவடிகளின் பெருமையைக் கண்டு வியக்கிறார்.

பாஷாண நிர்மித தபோத4ந த4ர்மதா3ரம்
ப4ஸ்மந் யுபாஹித நரேந்த்3ர குமார பா4வம்
ஸம்வாஹிதம் த்ரி தஸ3 நாத2 ரமா மஹீப்4யாம்
ஸாமான்ய தை3வத முஷந்தி பத3ம் த்வதீ3யம்

ஸ்வாமி தேசிகன் தேவநாயக பஞ்சாஸத்தில் (41) இதே கருத்தையே ஸாதிக்கிறார். ஸ்வாமி தேசிகன் ராமனுடைய பாதங்கள் பட்டவுடன் ஒரு கல் அழ்கிய பெண்ணாக மாறியது. கிருஷ்ணன் ஸ்பர்சம் பட்டவுடன் உத்தரையின் கருப்பத்திலிருந்த கரிக்கட்டையான குழந்தை அழகிய அரச குமாரனாக மாறியது என்றார்.

இரண்டு ஆழ்வார்கள் 12 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள். திருமழிசை ஆழ்வார் தம்முடைய பாசுரங்களில் ஊரகத்தை குறிப்பிட்டுள்ளார். திருமங்கை ஆழ்வார் "காமருபூங்கச்சி ஊரகத்தாய்" என்று தலைவி சொல்வதாக நாயிகா பாவத்தில் பாடுகிறார்.

ஸ்ரீ அமுதவல்லீநாயிக ஸமேத ஸ்ரீ த்ரிவிக்ரம பரப்ரஹ்மணே நம:

51. திரு வெஃகா (தூப்புல்)

திருமுடி வலம் சாய்த்து அடிமாறிக் கிடக்கும் யதோக்தகாரியே
மறுபடி சொன்ன வண்ணம் செய்து அரவணையும் விரித்தாயே
கறுவடிவே பக்தி ஸாரர் முக்தி சேர்ந்தாரும் நித்தியரும் உன்னை
சிறுவடி வைத்து முதலில் வணங்கும் வேகவதியணை வெஃகாவே

திரு வெஃகாவில் ஸயனித்துள்ள எம்பெருமானுக்கு யதோத்தகாரி, சொன்ன வண்ணம் செய்த பெருமாள் என்று திருநாமம். கோமளவல்லி நாச்சியார் என்று தாயாருக்கு திருநாமம்.

அன்று நயந்த அயமேத மா வேள்வி
பொன்ற உரை அணங்கு பூம்புலனாய்க் - கன்றி வர
வாதி ஆதி அயனுக்கு அருள் செய்து அணை ஆனான்
தாதை அரவு அணையான்

மெய்விரதான்மியத்தில் (13) ஸ்வாமி தேசிகன் இந்த ஸ்தல வரலாற்றை விவரிக்கிறார். காஞ்சிபுரத்தில் பிரம்மனின் அசுவமேத யாகத்தை அழிக்க, அவன் மனைவியான ஸரஸ்வதி வேகவதி என்னும் நதியாய் கோபம் கொண்டு ப்ரவாகம் எடுத்து வந்ததை பகவான் அந்த வெள்ளத்தின் நடுவே பாம்பணையோடு ஓர் அணையாய் கிடந்து தடுத்து பிரம்மாவிற்கு அருள் செய்தான். பிரம்மாவின் வேண்டுகோளுக்கு இணங்கியதால் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் என்று சொல்லுவர். வட மொழியில் யதோக்தகாரீ என்பதும் இதே பொருள்.

கணிகண்ணன் என்ற திருமழிசையாழ்வாரின் சீடரை அரசன் அவமதித்து ஊரிலிருந்து விரட்ட, அழ்வாரும், சீடனின்றி எனக்கு இங்கு இடமில்லை என்று

கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டா * துணிவு உடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயும் உன் தன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்

பாடி, "மணிவண்ணா நீயும் உன் பாம்பு படுக்கையை சுருட்டிக் கொண்டு கிளம்பு" என்று பகவானிடம் பிராத்திக்க, பகவானும் அழ்வாரின் சொல்படி கேட்டதால் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் என்று பெயராயிற்று.

அரசனும் தன் தவறை உணர்ந்து வருந்தி மன்னிப்பு கேட்டதும், ஆழ்வார் ஊருக்கு திரும்ப, பகவானிடம் "நீயும் உன் பைநாகப் பாயை விரித்துக் கொள்" என்றார். சொன்ன வண்ணம் செய்த பெருமாள் அவசரத்தில் ஸயனிக்க முற்பட்டதால் வலது புறம் திருமுடியும், இடது பக்கம் திருவடியையும் வைத்து இடம் மாறி கிடக்கும் கோலத்தில் காட்சி தருகிறார்.

ஸ்ரீமாந் பிதாமஹவதூ4 பரிசர்யமாண:
ஸேதே பு4ஜங்க ஶயநே ஸ மஹா பு4ஜங்க3:
பர்த்யாதி3 ஶந்தி பு4வ ஸ்ஞ்சரணம் ப்ரஜாநாம்
பு4க்தாநுக3ந்துரிஹ யஸ்ய கதாக3தாநி

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ வேகாஸேது ஸ்தோத்ரத்தில் (6) இந்த ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸரஸ்வதியால் பூஜிக்கப் பட்டவர். இத்தலத்தில் பெருமாள் திருவடியில் ஸரஸ்வதி கைகுவித்து நிற்பதைக் காணலாம்

திருமழிசையாழ்வாரின் பின் சென்ற பகவானின் போவது வருவது ஆகிய செயல்களை சிந்தித்துப் பார்த்தால் நம்முடைய ஸம்ஸாரத்தில் நமக்கு உள்ள அலைதல், திரிதல் எல்லாம் தவிர்க்கப்படுகிறது. அதாவது ஸம்ஸார பந்தங்கள் எல்லாம் நீங்கப் பெறுவர் என்றார்.

ப்ரஶமித ஹயமேத4 வ்யாபதா3ம் பத்3ம யோநே:
ஶ்ரித ஜந பரதந்த்ரம் ஶேஷ போ4கே ஶயாநம்
ஶரணமுபக3தா: ஸ்ம: ஶாந்த நி:ஶேஷ தோ3ஷம்
ஶதமக2 மணி ஸேதும் ஶாஶ்வதம் வேக3வத்யா:

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ வேகாஸேது ஸ்தோத்ரத்தில் (7) எம்பெருமான் அடியவர்களுக்கு வசப்பட்டு நிற்பவன். வேகவதி அணையின் நடுவே நீல மணி அணை போல் ஆதிசேஷன் மேல் படுத்துக் கிடந்து பிரமனின் யாகத்தை காத்தான். அவனை நாம் சரணடைந்துள்ளோம் என்றார்.

பக்தி ஸாரர் என்றழைக்கப்படும் திருமழிசை ஆழ்வாரும், பூலோகத்திலிருந்து முக்தி அடைந்து பரமபதம் சென்றவரும், பரமபதத்திலேயே என்றும் நித்ய ஸூரியாய் பகவானுக்கு கைங்கர்யம் செய்பவர்களும் ஆக இவர்கள் எல்லோரும் தங்களுடைய பாதங்களை இந்த ஊரில் வைத்து இந்த பெருமானை முதலில் வழிபடுகிறார்கள்.

முதலில் என்பது முதல் ஆழ்வாராகிய பொய்கையாழ்வார் அவதார ஸ்தலமாகியதால் அவரைக் குறிக்கும் என்றும் கொள்ளலாம்.

திருமழிசையாழ்வார் "அன்று நான் பிறந்திலேன், பிறந்த பின் மறந்திலேன்" என்று சொல்லி மூன்று பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். திருமங்கை மன்னன் பொய்கையாழ்வார், பேயாழ்வாரும் பாசுரங்களில் திருவெஃகா என்று குறிப்பிட்டுள்ளார்கள்

கால் நிலம் தோய்ந்து விண்ணோர் தொழும் கண்ணன் வெஃகா உது அம்
பூந்தேன் இளஞ்சோலை அப்பால் அது எப்பாலைக்கும் சேமத்தே

என்று திருவிருத்தத்தில் (26) நம்மாழ்வாரும் பாடியுள்ளார்.

ஸ்ரீ கோமள வல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ யதோக்தகரீ பரப்ரஹ்மணே நம:

52. திருக்காரகம்

இளந் தென்றல் வீசும் தென் திசை நோக்கி
வளங் கொண்ட வாமனன் வாழ்கின்ற நிலத்துள்
உளம் தந்த ரமாமணி உன்னருகே நின்றுறைக்க
கரம் கொண்ட காரக கருணாகரப் பெருமானே

திரூஊரகத்தில் உலகளந்த பெருமான் கோவில் ப்ராகாரத்திலேயே ஒரு ஸந்நிதியாக உள்ளது. கருணாகரப் பெருமான் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு பத்மாமணி நாச்சியார் என்ற திருநாமம்.

உத்தம புருஷனான வாமனன் ஒங்கி உலகளந்த பெருமாளாய் ஸேவை ஸாதிக்கும் நிலத்தில் அழகாக, குளிர்ந்த தென்றல் ஆனந்தமாய் வீசுகிற தென் திசையை நோக்கி பகவான் ஸேவை ஸாதிக்கிறார்.

லக்ஷ்ம்யா ஸஹ ஹ்றுஷீகேஶா தே3வ்யா காருண்ய ரூபயா ।
ரக்ஷகஸ் ஸர்வஸித்3தா4ந்தே வேதா3ந்தேஷ்வி ச கீ3யதே ॥

என்கிறது லக்ஷ்மீ தந்தரம். கருணையே வடிவெடுத்தவள் லக்ஷ்மீ, அவளுடன் சேர்ந்த ஹ்றுஷீகேஸனான எம்பெருமான் ரக்ஷகன் ஆகிறான் என்று எல்லா ஸித்தாந்தங்களும் சொல்லியது.

ரமாமணி நாச்சியார் ஒரு கணமும் பகவானை விட்டு அகலாமல் கருணாகரப் பெருமான் அருகே நிரந்தரமாக எப்பொழுதும் நிற்கிறாள். அவளுடைய கரத்தைப் பற்றி திருக்காரகத்தில் நின்றதால்தான் இவனுக்கே கருணையின் கரம் என்ற பெயரே வந்தது.

ஶரத்3தா4யா: தே3வோ: தே3வத்வம் அஶ்நுதே

என்று வேதம் பிராட்டியின் சேர்க்கையாலேயே பகவான் தேவ நிலை பெறுகிறான் என்றது. ஶரத்தை என்பது மஹாலக்ஷ்மி. அவளோடு கூடியவன்தான் தெய்வம். ஸ்ரீயப்பதி என்பதால்தான் ஸ்ரீ போட்டுக் கொள்ளும் யோக்யதையே பகவானுக்கு வருகிறாதாம்.

மாதர் லக்ஷ்மி யதை2வ மைதி2ல ஜநஸ்தேநாத்4வநா தே வயம்
த்வத்3 தா3ஸ்யை கரஸாபி4 மாந ஸுபு4கை3ர் பு4வைரீஹா முத்ர ச ।
ஜாமாதா தா3யிதஸ்தவேதி பு4வதீ ஸம்பா3ந்த த்4ருஷ்ட்யா ஹரிம்
பஶ்யேம ப்ரதியாம யாம ச பரீசாரான் பரஹ்ருஷ்யேம ச ॥

என்று ஸ்ரீகுணரத்ந கோஶத்தில் (51) பராஶர பட்டர் பிராட்டி ஸம்பந்தத்தால்தான் பகவான் பெருமை பெறுகிறான் என்பதை வெகு அழகாக காட்டுகிறார். மிதிலை

நகரில் உள்ள மக்கள் எல்லோருக்கும் ராமனிடத்தில் மிகவும் ப்ரீதி. ஏன் என்றால் அவன் ஸீதையின் நாயகன், ஜனக மஹாராஜாவின் மாப்பிள்ளை என்பதால் என்றார்.

பிராட்டி புருஷாகாரத்தினால்தான் நாம் எல்லோரும் பகவானை அண்ட முடிகிறது. தாயாரும் பகவான் அருகில் நின்று சரியான சமயத்தில் அவனுக்கு எடுத்து உரைக்கிறாள் என்று நம் பூர்வாசாரியர்கள் அருளியுள்ளார்கள்.

பர்யாகுலம் மஹதி து3:க2 பயோநிதௌ4 மாம்
பஶ்யந் க்ரீஶ யதி:3 ஜோஷம் அவஸ்த்தி2தஸ் த்வம்
ஸ்பா2ரே கூஷ்மாண்பி மிஷதி த்வயி நிர் நிமேஷம்
பாரே கரிஷ்யதி த3யா தவ து3ர்நிவாரா

ஸ்வாமி தேஶிகன், வரதராஜ பஞ்சாஸத்தில் (36) தாயாரின் புருஷகாரத்தைப் பற்றி சொல்லுகிறார். திணறுகின்ற பெரிய துன்பக் கடலில் என்னை (I am struggling in a ocean of ill-fated events) நீ பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்தாலும் (silently observing) விரிந்த கண்களுடன் இமை கொட்டாது விழித்துக் கொண்டு இருக்கும் போதும் உன்னுடய கருணை வடிவேயான பிராட்டி, தடுக்க முடியாதவளாய் ஸம்ஸார கடலின் அக்கரையான உன்னிடம் என்னை சேர்க்கப் போகிறாள் என்று பிராட்டியின் சாகஸத்தை அற்புதமாக விவரிக்கிறார்.

"புருஷகார பலத்தாலே ஸ்வாதந்த்ரியம் தலை சாய்ந்தால்
தலை எடுக்கும் குணங்களைச் சொல்லுகிறது நாரயண பதம்"

என்று முமுக்ஷுப்படியில் (136) பிள்ளைலோகாசாரியரும் நாராயண சப்தார்த்தத்திற்கு விவரணம் செய்யும்போது தாயாரின் பரிவுரையில் பகவானின் ஸ்வாதந்திரியமும் இருக்கும் இடம் தெரியாமல் ஓடிவிட்டது என்றார்.

கார் மாறன் சடகோபன் சொல் ஆயிரத்து இப்பத்தால்
வேர் மாறாத பூமேல் இருப்பாள் வினை தீர்க்குமே

என்று திருவாய்மொழியில் (4-5-11) நம்மாழ்வாரும் வாசனை மாறாத தாமரை மலரில் அமர்ந்து இருக்கும் பிராட்டி வினை தீர்க்கிறாள். அவள் அருளால்தான் பகவத் அனுபவ விரோதியான ஸகல ப்ரதி பந்தங்களும் தீர்க்கப்படுகிறது என்றார்.

அந்த முறையில் பகவான் இங்கு கருணையின் வடிவான ரமாமணி நாச்சியார் ஸம்பந்தத்தால் கருணாகரன் என்ற பெயர் பெற்றான்.

திருமங்கையாழ்வார் ஸாதித்த திருநெடுந்தாண்டகத்தில் "உலகமேத்தும் காரகத்தாய்" என்ற ஒரே ஒரு சொற்றொடர் மட்டுமே பிரபந்தத்தில் காணப் படுகிறது.

ஸ்ரீ பத்மாமணி நாயிக ஸமேத ஸ்ரீ கருணாகர பரப்ரஹ்மணே நம:

53. திருக் கார்வானம்

நீர் உண்ட மேகமும் பொழிவது நிலத்தில் நல் மழையே
பேர் ஆயிரம் உடையான் கருணைக்கு ஏது இணையே
சீர் கலந்த தாமரையாள் சேவடி சேர்வதும் துணையே
கார்வான கள்வன் குறியிலமிழ்வதும் உயிர்க் கணையே

திருஊரகத்தில் உலகளந்த பெருமான் கோவில் மேற்கு ப்ராகாரத்திலேயே ஒரு ஸந்நிதியாக உள்ளது திருக்கார்வானம் என்னும் இந்த திவ்ய தேசம். இங்கே முலவர் நின்ற திருக்கோலத்தில் கள்வர் என்ற திருநாமத்துடன் மழைக் கடவுளாய் ஸேவை ஸாதிக்கிறார். கமலவல்லி என்று தாயாருக்கு திருநாமம்.

சாரா ஏதங்கள் நீராார் முகில் வண்ணன்
பேர் ஆர் ஓதுவார் ஆராார் அமரரே

என்று திருவாய்மொழியில் (10-5-8) நம்மாழ்வார் தண்ணீர் தாங்கிய மேகங்களைப் போல் நிறமுடைய பகவானின் திருநாமங்களை சொல்லுபவர்களுக்கு எந்த விதமான கெடுதலும் வராது என்றார். எம்பெருமானுடைய நாமங்களையே எவர்கள் ஓதுகிறார்களோ அவர்கள் எல்லோரும் நித்யஸூரிகளாகிறார்கள். பகவான் நாமாவை சொல்லுவதற்கு என்ன தகுதி வேண்டியிருக்கிறது? என்ன வரைமுறை வேண்டியிருக்கிறது? ஒன்றும் இல்லை. அதைச் சொல்ல வேண்டும் என்ற ஆசை ஒன்று மட்டும் இருந்தால் போதும்.

ஆழ்வார்கள் ஆசார்யர்கள் மேகங்களின் நீரையும் பகவானின் கருணையும் ஒப்பிடுகிறர்கள். மேகங்கள் நீரை தனக்கே என்று வைத்துக் கொள்ளாமல் திருப்பி நிலத்திலேயே மழையாகப் பொழிகின்றன. அது போல் பகவானும் தனக்கு என்று எதுவும் வைத்துக் கொள்ளாமல் தன்னுடைய பக்தர்களுக்காவே கருணை மழையாகப் பொழிகிறான். (When prayers go up, blessings come down). ஆனால் மேகங்கள் நீரைப் பொழியப் பொழிய குறையும். பகவான் கொடுக்க கொடுக்க அவன் கருணை என்றும் நிறைந்தேயிருக்கும்.

செய்த குற்றம் நற்றமாகவே கொள் ஞால நாதனே!

என்று திருச்சந்த விருத்தத்தில் திருமழிசையாழ்வார் கூறியது போல் பகவான் மக்கள் செய்யும் குற்றங்களைப் எல்லாம் பொறுத்து அதை நல்லதாகவே எடுத்துக் கொள்கிறான்.

குன்றனைய குற்றஞ் செயினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக என் நெஞ்சே

முதல் திருவந்தாதியில் பொய்கையாழ்வார் சேதனர்கள் குவிக்கும் மலை போன்ற குற்றங்களை பகவான் மன்னித்து அருளுகிறான் என்கிறார். மழை பட்ச பாதமின்றி

எல்லோருக்கும் ஒரே மாதிரியாக பொழியும். அதுபோல் சரணாகதி செய்த ஜீவாத்மாக்கள் அனைவரையும் எம்பெருமான் சரிசமமாகக் கருதுகிறான்.

பகவானுடைய ஸகல கல்யாண குணங்களிலும், கருணை, தயை என்னும் உயர்ந்த குணத்திற்கு ஈடு இணை என்பதே கிடையாது என்பது முன்னோர் வாக்கு.

அநுபத்விதும் அகுளகும் நாலமாகூமி கால:
ப்ரமயிதும் அஶேஷம் நிஷ்க்ரியாபி4ர்ந ஶக்யம் ।
ஸ்வயமிதி ஹி தூ3யே த்வம் ஸ்வீக்ருத ஸ்ரீநிவாஸ
ஶிதி2லித பத்வ பீ4தி ஸ்ரேயஸே ஜாயஸே ந: ॥

என்று தயாஸதகத்தில் (34) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். பாபங்களை ஒருவன் செய்தால் அதை அனுபவித்தால்தான் கழியும். அந்த தண்டனை அல்லது பிராயச்சித்தம் முடிவதற்குள் ஆயிரக்கணக்கில் பாபங்கள் மேன்மேலும் செய்கிறார்கள். அதனால் கணக்கின்றி பாபங்கள் குவிந்துக் கொண்டே இருக்கின்றன (interest is increasing exponentially relative to the principal). அதனால் தயை என்னும் பெருங்குணமே பகவானிடத்தில் எடுத்துரைத்து எங்கள் மேல் உள்ள கடுமையை விலக்குகிறாய் என்றார்.

ஸ்ரீ என்று பெருமை பொருந்திய பிராட்டியின் திருவடிகளை முதலில் புருஷகாரமாய் அடைவதால் பகவானும், பிராட்டியும் கலந்த மிதுனமே உபாயமாகவும் பலனாகவும் நமக்கு கிடைக்கிறது.

அஹம் மத்ப்ராப்யுபாயோ வை ஸாக்ஷாஸ் லக்ஷ்மீபதீ: ஸ்வயம் ।
லக்ஷ்மீ: புருஷகாரணே வல்லப4 ப்ராப்தியோகி3நீ ।
ஏதஸ்யாஶ்ச விஶேஷோSயம் நிக3மாந்தேஷ்வி ஶ்ப்3த்3யதே

என்று பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் பகவான் நாராயணனே சொல்லுகிறார். என்னை அடைவதற்கு லக்ஷ்மீபதியான நானே உபாயமாகிறேன். என் அன்பிறகு ஏற்றவளான லக்ஷ்மியும் புருஷகாரம் செய்து என்னை அடைவிக்க உதவுகிறாள். புருஷகாரம் என்னும் இந்த பெருமை வேதங்களில் சொல்லப்பட்டுள்ளது.

அருள் வரதர் நிலை இலக்கில் அம்பென நான் அமிழ்ந்தேனே

என்ற ஸ்வாமி தேசிகர் அடைக்கலப்பத்தில் ஸாதித்தாற்போல் பிராட்டியிடம் முதலில் புருஷகார ப்ரபத்தி செய்தவன் ப்ரணவம் என்னும் வில்லில், ஆத்மா என்கிற அம்பைப் பூட்டி பகவத் கைங்கர்யம் என்ற லக்ஷியத்தை அடைய முனைகிறான்.

திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் "கார்வானத்துள்ளாய்" என்று ஸாதித்த ஒரே சொல் மட்டுமே பிரபந்தத்தில் காணப் படுகிறது.

ஸ்ரீ கமலவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ நீலமேக பரப்ரஹ்மணே நம:

54. திருக் கள்வனூர்

கானத்தில் திரிந்து கடும் ஈனச் சொல் கேட்டு
வானத்திலிருந்தே வந்திறங்கி யாம் வாழ்வதற்கே
ஏனமாயும் உருவெடுத்து திருக்கள்வனூரில் நின்ற
ஞானப்பிரான் ஆதிவராஹா! கள்வனே அருளாயே

திருக்கள்வனூர் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் ஆதிவராஹப் பெருமாளாய் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு அஞ்சிலைவல்லி என்ற திருநாமம். பெரிய காஞ்சிபுரத்தில் காமாக்ஷி அம்மன் கோவிலுக்குள் அம்மன் கர்ப்ப க்ரஹத்துக்குள்ளேயே வலது பக்கத்தில் இந்த சன்னதி இருக்கிறது.

யதா³ யதா³ ஹி தர்மஸ்ய க்³லாநிர்ப⁴வதி பா⁴ரத ।
அப்⁴யுத்தா²நம் அதர்மஸ்ய ததா³த்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥

என்று பகவத் கீதையில் (4-7) பகவான் கிருஷ்ணன் கூறிய முறையில் ஸ்ரீமந் நாராயணன் பரமபதத்திலிருந்து நம்மைப்போல் கேவல ஜீவர்கள் எல்லாம் உஜ்ஜீவிக்க வேண்டும் என்றே நல்ல எண்ணத்தைக் கொண்டு பல அவதாரங்கள் செய்கிறான்.

ஆனான் ஆன் அயன் மீனோடு ஏனமும்
தானான் என்னில் தானாய சங்கே

என்று திருவாய்மொழியில் (1-8-8) நம்மாழ்வார் பகவானின் அவதாரங்களுக்கு எல்லை என்பதே இல்லை என்றார். ஆநிரை மேய்க்கும் கோபாலனாக, மீனாக, ஆமையாக, வராஹனாக என்று பலப்பல அவதாரங்கள் தாழ்ந்த நானும் அனுபவிக்கவே எடுத்தான் என்கிறார்.

மீனோடு ஆமை கேழல் அரி குறளாய் முன்னும் ராமனாய்
தானாய் பின்னும் ராமனுமாய்த் தாமோதரனாய் கற்கியும்
ஆனான் தன்னை கண்ணபுரத்து அடியன் கலியன் ஒலி செய்த
தேனார் இன்சொல் தமிழ்மாலை செப்பப் பாவம் நில்லாவே

பெரிய திருமொழியில் (8-8-10) திருமங்கையாழ்வார் பகவானின் பத்து அவதாரங்களையும் எளிதில் மனத்தில் நிறுத்தி அனுபவிப்பதற்கு தந்திருக்கிறார்.

"ஸம்ஸாரிகள் தங்களையும் ஈஸ்வரனையும் மறந்து, ஈஸ்வர கைங்கர்யத்தையும் இழந்து, இழந்தோம் என்ற இழவுமின்றிக்கே ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேச்வரன் தன் க்ருபையாலே இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ்சேரும்படி"

என்று பிள்ளைலோகாசார்யரும் முமுக்ஷுப்படியில் (5) ஸாதித்தார்.

ராமனாக திருவவதாரம் செய்து காட்டில் பதினான்கு ஆண்டுகள் திரிந்தான். கண்ணனாய் பிறந்து தூது சென்று தேர் ஓட்டி, கீழ்த்தரமான மக்களும் இவனை தூஷித்தாலும் அவைகளை தன்னையே நாடி வந்த பக்தர்கள் பொருட்டு சகித்தான்.

மட்டமான விலங்காகிய பன்றியாய் அவதாரம் செய்து ஞானமே உருவான வராகனாய் உலகுக்கு நன்மை செய்தான். அப்படி புகழக் கூடிய ஆதி வராகனே, கள்வனூர் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் எழுந்தருளி இருக்கிறான்.

திருத்தம் பெரியவர் சேரும் துறையில் செறிவிலர்க்கு
வருத்தம் கழிந்த வழி அருள் என்ற நம் மண்மகளார்
கருத்து ஒன்று ஆதி வராகம் உரைத்த கதி அறிவார்
பொருத்தம் தெளிந்து உரைக்கப் பொய் இலா மதிப் பெற்றனமே

ஸ்வாமி தேசிகன் அமிருத ஸ்வாதினியில் (20) ஸாதிக்கிறார். பூமி பிராட்டி வராஹ நயினாரை வேண்டி பக்தி யோகம் செய்ய ஞானமும் சக்தியும் இல்லாதவர்கள் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட ஒரு உபாயத்தை அருளுமாறு வேண்ட பகவானும் இரண்டு ஸ்லோகங்களில் அதை வராஹ சரம் ஸ்லோகமாக வெளியிட்டான்.

இடம் பெற்றார் எல்லாம் என் உடலாய் நிற்ப
இடர் பிறப்பு என்று இவை இல்லா என்னை அன்பால்
அடம் பற்று ஆம் அவன் என்று நினைந்தான் யாவன்
அவன் ஆவி சரியும்போது அறிவு மாறி
உடம்பில் தாரு உபலம் போல் கிடக்க நானே
உய்யும் வகை நினைந்து உயர்ந்த கதியால் என்றன்
இடம் பெற்று என்னுடன் வாழ எடுப்பன் என்ற
எம்பெருமான் அருள் பெற்று மருள் செற்றோமே

ஸ்வாமி தேசிகன் அமிருத ஸ்வாதினியில் (21) வராக சரம ஸ்லோகத்தை தமிழில் ஸாதிக்கிறார். வராஹ நயினார் சொல்கிறார். உலகம் முழுவதும் எனக்கு சரீரம். எனக்கு பிறப்பு, இறப்பு கிடையாது. என்னையே கதி என்று உறுதியுடன் சரணம் அடைந்தவன் சாகும்போது தன் நினைவு இழந்து கட்டையும் கல்லும் போல் கிடக்கும் போது அவனை உஜ்ஜீவிக்கும் ப்ராகரத்தை நானே செய்ய நினைத்து அர்ச்சிராதி மார்க்கம் வழியாய் ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துச் சென்று நித்ய கைங்கர்ய ப்ராப்தியை அருளுகிறேன் என்றார்.

பார்வதியும் லக்ஷ்மீயும் தனிமையில் தங்களுக்குள் பேசிக்கொண்டதை பகவான் ஒளிந்து கேட்டபடியால், பார்வதி, தன் அண்ணனான ஸ்ரீமந் நாரயணனை கள்வா என்று அழைத்தாள். உமையின் பிராத்தனைக்கு செவி சாய்த்து நின்றான், இருந்தான், கிடந்தான் என்ற முவராக ஸேவை ஸாதிக்கிறான்.

திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் "கார்வானத்துள்ளாய் கள்வா" என்று ஸாதித்த ஒரே ஒரு சொற்றொடர் மட்டுமே பிரபந்தத்தில் காணப் படுகிறது.

ஸ்ரீ ஸுந்தரபிம்பவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ சோரநாத பரப்ரஹ்மணே நம:

55. திருப் பவளவண்ணம்

பவள வண்ணன் திருப் பரம பத நாதன் * உந்தன்
தவள மரகதக்கொடி செந்தாள் சேர்ந்தேனே * ஓர்
கவளமின்றி கடுஞ்சொல்லால் மறுத்த குறும்பு பயந்து
துவளும்முன் அடைந்தேன் துயர் தீர்த்து உய்ப்பாயே

திருப்பவள வண்ணம் என்னும் திவ்ய தேஸத்தில் மூலவர் பவள வண்ணன் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். இந்த பெருமாளுக்கு பரமபத நாதன் என்ற பெயரும் உண்டு. கோவிலுக்கு அருகாமையில் உள்ள பச்சை வண்ணர் என்ற எம்பெருமானையும் சேர்த்து ஒரே திவ்ய தேஸமாக ஸம்ப்ரதாயத்தில் சேவிக்கிறார்கள். தாயாருக்கு பவளவல்லி என்ற திருநாமம்.

ஒரு காலத்தில் எம்மிடம் யாசகத்திற்கு என்று பல பேர் பிச்சை கேட்டு வந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு ஒரு பிடி சாதம்கூட தானம் செய்தவனில்லை நான். அது மட்டுமில்லாமல் கடுமையான வார்த்தைகளால் ஏசி அவர்களை விரட்டி அடித்தேன்.

யத் ப்₃ரஹ்ம கல்ப நியுதானுப₄வேப்ய நாஶ்யம் ।
தத் கில்பி₃ஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே₄ ॥

என்று ஸ்ரீவைகுண்ட்ட ஸ்தவத்தில் (60) கூரத்தாழ்வான் ஸாதித்த முறையில் பல்லாயிரம் ப்ரம்ம கல்பங்கள் அனுபவித்தாலும் எது அழியோதோ அந்த பாபத்தை இந்த ஐந்து அரை க்ஷணத்தில் செய்கிறான் என்று என்னை நோக்கித்தான் கூறினார் போல் பயந்து கிடக்கிறேன்.

மானேய் கண் மடவார் மயக்கிற்பட்டு மாநிலத்து
நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன்

பெரிய திருமொழியில் (1-9-2) திருமங்கையாழ்வார் நரகத்தில் தள்ளும்படியான பாபங்களை சேதனர்கள் அன்றாடம் செய்வதாக கூறினார்.

வாய் ஒரு பக்கம் வாங்கி வலிப்ப
  வார்ந்த நீர்க் குமிழிக் கண்கள் இழுற்ற
தாய் ஒரு பக்கம் தந்தை ஒரு பக்கம்
  தாரம் ஒரு பக்கம் அலற்ற
தீ ஒரு பக்கம் சேர்வதன் முன்னம்

என்று பெரியாழ்வார் திருமொழியில் (4-5-9) ஸாதித்த முறையில் தீமைகளையே செய்யும் என்னுடைய வலிந்த உடம்பு ஒரு நாள் மெலிந்து துவண்டு விழத்தான் போகிறது.

அதற்கு முன்னே பவள வண்ணா, நீ என்னை நல்ல வழியில் திருப்பி, எனக்கு சிறந்த ஞானத்தை கொடுத்து என் பாவங்களை எல்லாம் மன்னித்து என்னை உயர்ந்த கதிக்கு அழைத்துச் செல்ல மாட்டாயா?

பெறற்கு அரிய நின்ன பாத பத்தியான பாசனம்
பெறற்கு அரிய மாயனே எனக்கு நல்க வேண்டுமே

திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்ததில் (100) சொல்லுகிறார். பெறுவதற்கு அரியதான உம்முடைய திருவடிகள் விஷயமான பக்தி என்னும் பெறுவதற்கு அரியதான ஐசுவர்யத்தை நீரே எனக்கு அருள வேண்டும் என்றார்.

எப்பொருளும் தானாய் மரகதக் குன்றம் ஒக்கும்
அப்பொழுதைத் தாமரைப்பூக் கண் பாதம் கை கமலம்

வள்ளலே மதுசூதனா என் மரகத மலையே

என்று திருவாய்மொழியில் (2-5-4, 2-6-4) நம்மாழ்வார் எல்லாப் பொருள்களுக்கும் தலைவனாய் உள்ள எம்பிரான் மரகத மலை போன்றவன் அவனது திரு அதரங்களும் (உதடு), திருவாயும் செந்தாமரை போன்றவை என்றார்.

அதனால் பச்சை வண்ணர் என்னும் மரகதக் கொடி போல் உள்ள திருமேனியுடைய எம்பிரானின் சிவந்த தாமரை போன்ற திருப்பாதங்களை நான் அடைகிறேன்.

காகம் இராக்கதன் மன்னர் காதலி கத்திர பந்து
நாகம் அரன் அயன் முதலா நாக நகரார் தமக்கும்
போகம் உயர் வீடு பெற பொன்னருள் செய்தமை கண்டு
நாகமலை நாயகனார் நல் அடிப் போது அடைந்தேனே

என்று அடைக்கலப்பத்தில் (4) ஸ்வாமி தேசிகன் பகவானிடம் செய்யும் சரணாகதி எல்லா பலன்களையும் தரும் என்று ஸாதித்தார். பகவான் தன்னை சரண் அடைந்தவர்களான காகம், விபீஷணன், த்ரௌபதி, கூஷத்திரபந்து கஜேந்த்ரன், காளியன், சிவன், பிரமன், தேவர்கள் ஆகிய எல்லோருக்கும் அவர்கள் விருப்பத்திற்கேற்ப மோக்ஷம், இதர பலன்கள் என்று எல்லாவற்றையும் அளித்தான். அந்த பகவானிடம் நானும் சரணம் என்று அடைகிறேன் என்றார்.

திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் அருளியுள்ள "பனிவரையின் உச்சியாய் பவள வண்ணா" என்கிற ஒரு குறிப்பு மட்டுமே பிரபந்தத்தில் காணப் படுகிறது. பச்சை வண்ணரை பற்றி பிரபந்தத்தில் சொல்லப்படவில்லை.

ஸ்ரீ ப்ரவாளவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ ப்ரவாளவர்ண பரப்ரஹ்மணே நம:

56. திருப்பரமேசுவர விண்ணகரம்

பல்லவன் வில்லவன் என்னும் திருவாயில் திறப்பார்
நல்லவன் மகனாய் நாட்டில் வந்திறங்கி வேண்டிய
வல்லவனே வைகுந்தா! பரமேச்வர விண்ணகரத்தில்
சொல்லுவனே சொல்லாத சொற்பொருளும் நீயே

மஹாவிஷ்ணுவின் த்வாரபாலகர்கள் என்கிற ஸ்ரீ வைகுண்டத்தின் வாயில் காப்பாளிகள் இருவரும் பல்லவன், வில்லவன் என்று பூமியில் வந்து விதர்ப்ப தேஸ விரோசனனுக்கு மகன்களாக பிறந்தார்கள். அந்த இருவரும் அசுவமேத யாகம் செய்து பகவானைப் பிராத்திக்க அவரும் ஸ்ரீவைகுண்டத்தில் இருப்பது போல் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை தந்தார். தாயாருக்கு வைகுந்த வல்லி என்ற திருநாமம்.

பகவானைப் பிராத்திப்பதற்கு வேண்டிய தகுதியும், அறிவும், நினைவும், சொற்களும் பொருட்களும் எல்லாம் அவன் அருளினால் வந்தவையே. அவ்வாறு பகவானை துதிக்கும்போது ஜீவாத்மாவின் அறிவுக்கு எட்டி புகழக்கூடிய சொற்கள் கடுகளவு. சொல்லிற்கும் நினைவிற்கும் அப்பாற்பட்டவன் அவன். சொல்லாத சொல்லும், அதன் பொருளும், அதன் சுவையும் அவனே. வேதங்களே பகவானின் கல்யாண குணங்களின் ஒரு துளி சொல்வதற்கே முடியமால் தத்தளிக்கிறது என்றால் சாதாரண ஜீவாத்மாக்களின் நிலையைப் பற்றி சொல்லவும் வேண்டுமா?

வேதை$_3$ஶ்ச ஸர்வை அஹம் ஏவ வேத்$_3$யோ
வேத$_3$ாந்தக்ருத் வேத$_3$விதே$_3$வ சாஹம் ||

என்று பகவத்கீதையில் (15-15) கிருஷ்ணன் எல்லா வேதங்களாலும் அறியப்படுபவன் நானே. வேதங்களில் கூறிய பலனைத் தருவதும், வேதத்தை அறிந்தவனும் நானே என்றார்.

கார்யாணாம் காரணம் பூர்வம் வசஸாம் வாச்ய முத்தமம்

என்று ஜிதந்தே ஸ்லோகத்தில் (7) கார்யங்களான எல்லாப் பொருள்களுக்கு ஆதி காரணமாகவும் சொற்களுக்கு மேலான சொற்பொருளாகவும் உன்னை சொல்கிறது அன்றோ! உன்னை துதிப்பதில் உள்ள ஆனந்தம் வேறு எதில் இருக்கிறது?

நமோ நமோ வாங்மநஸாதிபூ$_4$மயே
நமோ நமோ வாங்மநஸைகபூ$_4$மயே |
நமோ நமோ Sநந்த மஹாவிபூ$_4$தயே
நமோ நமோSநந்த த$_3$யைக ஸிந்த$_4$வே ||

என்று ஸ்தோத்ர ரத்னத்தில் (31) ஸ்வாமி ஆளவந்தாரும் வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதவனான உனக்கு, அவற்றிற்கு நிலமாய் உள்ள உனக்கு, அளவற்ற ஐஸ்வர்யத்தை உடைய உனக்கு, கருணைக்கடலாய் விளங்கும் உனக்கு நமஸ்காரம்

என்றார். அந்த உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் பகவான், கீழே ஸம்ஸார பந்தங்களில் மாட்டித் தவிக்கும் நமக்கு பலவிதமாய் அருள் புரிகிறான்.

கழியாத கருவினையில் படிந்த நம்மைக்
காலம் இது என்று ஒரு கால் காவல் செய்து
பழியாத நல்வினையில் படிந்தார் தாளில்
பணிவித்து பாசங்கள் அடைய நீக்கிச்
சுழியாத செவ்வழியில் துணவரோடு
தொலையாத பேரின்பம் தரம் மேல் ஏற்றி
அழியாத அருளாழிப் பெருமான் செய்யும்
அந்தமில்லா உதவி எலாம் அளப்பாரே

என்று அமிர்தஸ்வாதினியில் (30) ஸ்வாமி தேசிகன் பகவான் சேதனர்களுக்கு செய்யும் உதவிகள் அளவிடமுடியாதவை என அருள்கிறார். பேரருளாளன் பிறப்பைத் தரும் பாப்ச் செயல்களிலே மூழ்கியிருக்கும் நம்மை காப்பதற்கு இதுதான் தருணம் என்று சமயத்தில் ஆசாரியன் திருவடிகளில் பணிய வைக்கிறான். பிறகு உபாயத்தைக் காட்டி கர்மங்களை நீக்கி அர்ச்சிராதி மார்க்கம் வழியாய் ஆதிவாஹிகர்கள் துணை கொண்டு பரமபதம் சேர்ப்பித்து பேரின்பத்தை கொடுக்கிறான். எம்பெருமான் செய்யும் இவ்வளவு உதவிகளை யார்தான் கணக்கிலிட முடியும்? என்றார்.

தொழில் எனக்குத் தொல்லை மால் தன் நாமமே ஏத்த
பொழுது எனக்கு மற்றதுவே போதும். கழி சினத்த
வல் ஆளன் வானரக்கோன் வாலி மதன் அழித்த
வில் ஆளன் நெஞ்சத்து உளன்

திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில் (85) சொல்லுகிறார். வாலி மாஹா பலம் பொருந்தியவன். அடங்காத கோபம் கொண்டவன். அவனுடைய ஆணவத்தை ஒரே அம்பாலே அழித்த வில்லை உடைய ஸ்ரீராமன் என் உள்ளத்தில் எப்பொழுதும் இருக்கிறான். அந்த பழைய மூர்த்தியை நாம ஸங்கீர்த்தனம் பண்ணுவதைத் தவிர எனக்கு பொழுது போக்கு இல்லை.

பகவான் செய்த உபகாரங்கள் எண்ணில் அடங்காதவை. அவற்றில் நம்மால் அறிய முடிந்தவை ஒரு துளித்தான். அதையே எண்ணி வியக்கும் சேதனர்கள் பகவானுக்கு செய்யும் பிரதி உபகாரம் என்ன? அவனுடைய நாம ஸங்கீர்த்தனம் ஒன்றுதான். பொன்னை வைக்கும் இடத்தில் பூவை வைத்தாற்போல் அண்டத்தை கொடுத்த அவனுக்கு ஓர் அணுவைத் திருப்பித் தருகிறோம்.

திருமங்கையாழ்வார் பத்து பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். பாண்டியனை வென்ற பல்லவன் பணிந்த பரமேச்வர விண்ணகரம் என்று புகழ்கிறார்.

ஸ்ரீ வைகுண்டவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ வைகுண்ட நாத பரப்ரஹ்மணே நம:

57. திருப்புட்குழி

காக்கும் விரதம் கொண்டவனே கடும்போரில் வல்ல விஜயராகவனே!
தாக்கும் தசமுகனைத் தனியே துணிந்து பிரிந்த தாரம் சேர்க்கும் * நல்
நோக்கம் கொண்டு மடிந்த புள்ளை மடியில் இட்டு மாகடன் தீர்த்து
ஏக்கம் கொண்ட தேவியருடன் திருப்புட்குழியில் பரமாய் அமர்ந்தாயே!

திருப்புட்குழியில் எம்பெருமான் விஜயராகவனாக வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான், மரகதவல்லி என்று தாயாருக்கு திருநாமம்.

தன்னை ஒரு முறை சரணாகதி என்று அடைந்தவர்களை காப்பதை தன் விரதமாய் கொண்ட ஸ்ரீராமன் வீரர்களில் வீரன். ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ பரமார்த்த ஸ்துதியில் ஆஹவபுங்கன் என்று வர்ணிக்கிறார். அதற்கு போரில் வல்லவன் என்று பொருள்.

ஶரணாக3த ரக்ஷண வ்ரதீ மாம்
ந விஹாதும் ரண புங்க3வ அர்ஹஸி த்வம் ।
வித்3தம் பு4வநே விபீ4ஷணோ வா
யதி3 வா ராவண இத்யுதீ3ரிதம் தே ॥

என்று ஸ்ரீபரமார்த்த ஸ்துதியில் (7) ஸ்வாமி தேஶிகன் ஸாதிக்கிறார். திருப்புட்குழி பகவானே! சரணம் அடைந்தவர்களை காக்கும் விரதத்தை அதி முக்கியமாக கருதுபவனே. அதனால் சரணம் அடைந்த என்னை மட்டும் கைவிடுதல் ஆகாது. முன்பு சுக்ரீவனிடத்தில், "வந்தவன் விபீஷணாயிருந்தாலும் சரி, அல்லது மஹா அபகாரம் செய்த ராவணனே ஆனாலும் சரி அவனை இங்கு அழைத்து வா. நான் அபயம் தருகிறேன்" என்று உலகம் அறிய அன்று நீ கூறினாய் அல்லவா? உன் திருவுள்ளம் அவ்வளவு கனிந்திருக்க என்னை மட்டும் கைவிடுவது என்ன ஞாயம்? என்றார்.

ஸக்ருத் ப்ரபத்3ய ஸ்ப்ருஶாம் அப4ய தா3ந நித்யவ்ரதீ
ந ச த்3விரபி4பா4ஷஸே த்வமிதி விஶ்ருத: ஸ்வோக்தித: ।
யதே3காக்த கரணம் வித்3ஸ்தவ து யாதுதா4நாதா3ய:
கத3ம் விதத3மஸ்து தத் க்ருபண ஸார்வபௌ4மே மயி ॥

என்று அபீதிஸ்தவத்தில் (7) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். பகவானே, நீ ஒரு முறை சரண் அடைந்தால் போதும் அபயம் அளிக்கிறேன் எனப்தை எப்பொழுதும் விரதமாகக் கொண்டவனே நீ இரு முறை பேச மாட்டாய் என்று நீயே சொல்லி உன் சொல்லாலேயே புகழ் பெற்றுள்ளாய். உன் சொன்னவாறு செய்யும் தன்மையும், ராக்ஷஸர்கள் கூட புரிந்து கொண்டுள்ளனர். அகிஞ்சனன் வரிசையில் முதலில் நிற்கும் என் விஷயத்தில் மட்டும் உன்னுடைய விரதம் எப்படி பொய்யாகும்? நீ திடமாய் என்னைக் காத்தருள வேண்டும் என்றார்.

ராவணன் ஸீதையை அபகரித்து செல்லும்போது கழுகரசனாகிய ஜடாயு அந்த அசுரனை தனியாக நின்று எதிர்த்தது. பிராட்டி பகவானுடன் சேர வேண்டும் என்ற ஒரே நோக்குடன் ப்ரதி பலன் எதிர்பார்க்காமல் செய்த உத்தமமான செயல். ராவணனால் சிறகெல்லாம் சீவப் பட்டு ஜடாயு குற்றுயிராய் கீழே தள்ளப் பட்டது. பகவான் ராமன், தம்பி லக்ஷ்மணனுடன் அங்கு வந்து உயிருக்கு மன்றாடும் ஜடாயுவிடமிருந்து விஷயங்களை அறியும்போது அந்த தருணத்தில் ஜடாயு உயிர் நீத்தது.

எம்பெருமான் ராமன் ஜடாயுவை தன் மடியில் வைத்து அந்திம க்ரியைகளை (ஈமக் கடன்களை) எல்லாம் செய்து முடித்தான், தன் தந்தைக்கு செய்ய முடியாமல் போன பித்ரு காரியங்களை தகப்பன் ஸ்தானத்தில் ஜடாயுவை எண்ணி செய்தான். ஸ்வாமி தேசிகனும்

விக்ரம யஶோ லாப4 விக்ரீத ஜீவித க்3ருத்4ரராஜ தே3ஹ
தி3த4க்ஷாலக்ஷித பக்தஜந தா3க்ஷிண்யா

என்று இதை ஸ்ரீமாஹாவீர வைபவத்தில் விவரிக்கிறார். "பக்தஜந தா3க்ஷிண்யா" என்கிற பதம் பகவானின் திருக்கல்யாண குணங்களில் தலை சிறந்தாய் தன்னுடைய பக்தர்களிடம் செலுத்தும் தாராள மனப் பான்மையைக் காட்டுகிறது.

அவதீ4ர்ய சதுர்விதா4ம் புமர்தா2ம்
ப4வதா3ர்தே2 விநியுக்த ஜீத: ஸந் ।
லப4தே ப4வத: பா2லாநி ஜந்து:
நிகி2லாந்யத்ர நிதா3ர்ஶநம் ஜடாயு: ॥

என்று ஸ்ரீபரமார்த்த ஸ்துதியில் (7) ஸ்வாமி தேஶிகன் பகவானுக்கு கைங்கர்யம் செய்பவனுக்கு இம்மை, மறுமைப் பயன்கள் தாமே வந்தடையும் என்று ஸாதித்தார். திருப்புட்குழி விஜயராகவனே! உலகில் எந்த ஒரு சேதனன் நான்கு விதமான புருஷார்த்தங்களையும் (அறம், பொருள், இன்பம், வீடு) தவிர்த்து தனது உயிரையும், அத்மாவையும் உனக்கே அர்பணித்தால், அந்த சேதனன் எல்லாப் பலன்களையும் உன்னருளால் அடைகிறான். இதற்கு ஜடாயு ஒரு உதாரணம் என்றார். வேறு பயனை நாடாத அந்த உத்தமான கழுகரசனுக்கு உள்ளம் உவந்து எல்லாம் நீயே அளித்தாய்

பெரிய திருவுடையார் என்று அழைக்கப்படும் ஜடாயு ஜானகியைக் காப்பதற்காகப் போராடி உயிர் பிரிந்ததை நினைத்து ராமன் வருத்தத்துடன் அமர்ந்தான். ஜடாயுவின் வேண்டுகோளுகிணங்க பரமபத நாதனாக சேவை தந்தான். பகவான் நாராயணனின் பத்னிமார்களான ஸ்ரீதேவி, பூதேவி இருவரும் பகவானின் வருத்தத்தைக் கண்டு தங்கள் நிலை மறந்து, செய்கை மறந்து இடம் மாறி பகவானுக்கு அருகில் நிற்கிறார்கள். திருப்புள்ளம்பூதங்குடியும் (திவ்ய தேசம் 10) இதே ஐதிகத்தை கொண்டிருக்கிறது.

திருமங்கையாழ்வார் இரண்டு பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ஸ்ரீ மரகதவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ விஜயராகவ பரப்ரஹ்மணே நம:

58. திருநின்றவூர்

என்னைப் பெற்ற தாய் ஸுதாவல்லித் தானே இறங்கிய
உன்னையே உகந்து நிறைந்த நின்றவூர் வந்தடைந்தேன்
முன்னை வினை தீர்த்து முத்தியும் தந்து தன்னையே தந்து
பின்என்ன தருவோம் அவருக்கென ஏங்கிய பக்தவத்ஸலனே

தின்னனூர் என்னும் திரு நின்றவூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு பக்த வத்ஸலப் பெருமாள், பத்தராவிப் பெருமாள் என்றும் தாயாருக்கு ஸுதாவல்லி, என்னைப் பெற்ற தாயார் என்று திருநாமம். பகவான் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார்.

முன்னொரு நாள் லக்ஷ்மீ பகவான் நாராயணன் யோக நித்ரையில் இருக்கும்போது ஸ்ரீவைகுண்டத்திலிருந்து இறங்கி இந்த ஊருக்கு வந்து கடாக்ஷித்ததால் திருவாகிய லக்ஷ்மி நின்ற ஊரானதால் திரு நின்ற ஊராயிற்று.

ஆஸம்ஸாரம் விததமகி2லம் வாங்மயம் ய3த்விபு4தீ:
யத்3ரூ ப4ங்க3ாத் குஸுமி து4ருஷ: கிங்கரோ மேருது4ந்வா ।
யஸ்யாம் நித்யம் நயந ஶதகை: ஏக லக்ஷ்யோ மஹேந்த்3ர:
பத்3மே தாஸாம் பரிணதிரஸௌ ப4வலேலேஸ்த்வதீ3யை: ॥

என்று ஸ்ரீஸ்துதியில் (12) ஸ்வாமி தேசிகன் பிராட்டியின் ஸங்கல்பத்தின் பெருமையை ஸாதிக்கிறார். தேவர்களின் மனனைவிகளுக்கு பெருமையை நீயே தருகிறாய். உலகம் படைத்தது முதல் வந்த கணக்கற்ற சொல், நூல் இவற்றிற்கு எல்லாம் காரணமாகவும், பிரமனை தன் கீழ் கொண்ட ஸரஸ்வதீ. மேருமலையை வில்லாக வளைத்து திரிபுர அசுரனைக் கொன்ற சிவனை புருவ அசைப்பால் மயக்கி காம வசப்படுத்திய பார்வதி, நூற்றுக்கணக்கான கண்களால் இந்தரனை தன்னையே நோக்கச் செய்யும் இந்திராணி என்ற மூன்று தேவிமார்களுக்கும் பெருமை. கணவனை அடிமையாக்கும் வல்லமை எல்லாம் லக்ஷ்மீயே ஒரு துளி அளவு நீ செய்த ஸங்கல்பத்தாலே என்றார்.

ஒரு துளி ஸங்கல்பமே அப்படியிருக்க அந்த பிராட்டி தன் ஸ்வரூபத்துடன், திருமேனியுடன் கீழே இறங்கி இந்த ஸ்தலதிற்கு வந்தாள் என்றால் அந்த ஊரின் பெருமையை சொல்லவும் வேண்டுமா? அந்த தாயாரை சரணமாக அடைகிறோம்.

ஸ்வஸ்தி ஸ்ரீர் தி3ஶதாத3 ஶேஷ ஜக3தாம் ஸர்கே3ாப ஸர்க3ஸ்த்தி2தீ:
ஸ்வர்கம் து3ர்க3திமாபவர்கி3கபத3ம் ஸர்வஞ்ச குர்வந் ஹரி: ।
யஸ்யா வீக்ஷ்ய முகம் ததி3ங்கி3ததை3ப் பராதீ4நோ விதத்தேऽகி3லம்
க்ரீடே3யம் கலு நாந்யதா3ऽஸ்ய ரஸதா3 ஸ்யாதை3 கரஸ்யாத் தயா ॥

என்று ஸ்ரீஸ்தவத்தில் (1) கூரத்தாழ்வானும் பிராட்டியின் பெருமையை பேசுகிறார். பகவான் சொர்க்கம், மோக்ஷம் தருவதும், ஸ்ருஷ்டி முதலான காரியங்களை நடத்துவதும் அவளின் புருவ நெளிப்பைக் கண்டுத்தான் என்கிறார்.

புருஷகாரம் செய்யும் பிராட்டி இவ்வாறு இருக்க, இந்த ஸ்தலத்து பகவானோ, பக்தர்களுக்கு "என்ன தருவோம், என்ன தருவோம்" என்று தவம் கிடக்கும் பக்த வத்ஸலப் பெருமானாய் விளங்குகிறான். முதலில் தன்னுடைய பக்தர்களின் முன் பிறவிகளில் செய்த வினைகள் அனைத்தையும் தீர்த்தான்.

பறவையேறு பரமபுருடா! நீ என்னைக் கைக்கொண்டபின்
பிறவியென்னும் கடலும் வற்றிப் பெரும்பதம் ஆகின்றதால்
இறவு செய்யும் பாவக்காடு தீக்கொளீ இ வேகின்றதால்
அறிவையென்னும் அமுத ஆறு தலைப் பற்றி வாய் கொண்டதே"

என்று பெரியாழ்வார் திருமொழியில் (5-4-2) ஸாதித்த முறையில் இங்குள்ள பகவானை சரண் என்று பற்றினவர்களுக்கு பிறவித் துயர் நீங்கியது எனலாம். அதற்கு மேல் அவர்களுக்கு மோக்ஷத்தை அடைய வேண்டிய நற்குணங்களையும், எண்ணங்களையும் கொடுத்தான்.

ய ஆத்மதா பலதா:

என்று வேதங்கள் (யஜு 7-5-36) சொல்வது போல் அது போதாது என்று தன்னையே கொடுத்து தன்னை அனுபவிக்கத் தகுந்த மனோ பலத்தையும் கொடுத்தான் அவ்வளவு கொடுத்த பின்னும் மனம் திருப்தி அடையாமல், இன்னும் என்ன தருவோம் என்று மனம் நிறைவு பெறாமல் முனகிக் கொண்டே இருக்கிறான்.

உன்னடியார்க்கு என் செய்வன் என்றே இருத்தி நீ

என்று மோக்ஷத்தைக் கொடுத்த பின்னும் "இவனுக்கு ஒன்றும் செய்யவில்லையே" என்ற கழிவிரக்கமே பகவானிடத்தில் உள்ளது என்பதை ஸ்வாமி நம்மாழ்வாரும் ஸாதித்தார்.

திருமங்கையாழ்வார் இரண்டு பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

கோவாய் ஐவர் என் மெய்குடியேறிக்
'கூறை சோறு இவை தா' என்று குமைத்துப்
போகார் நான் அவரைப் பொறுக்ககிலேன்
புனிதார்! புட்கொடியாய்! நெடுமாலே
தீவாய் நாகணையில் துயில்வானே
திருமாலே! இனிச் செய்வது ஒன்று அறியேன்
ஆவா என்று அடிமையேற்கு இரங்காய்
அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே

என்று பெரிய திருமொழியில் (7-7-9) திருமங்கை மன்னன் பகவானிடம் இரக்கம் காட்டு என்று பிராத்திக்கிறார்.

ஸ்ரீ ஸுதாவல்லி நாயிக ஸமேத பக்தவத்ஸல பரப்ரஹ்மணே நம:

59. திரு எவ்வுள்

உறைவதற்கு உரிய உள் எவ்வுள் என்று வினவி * மனம்
கரையும் குணம் நிறைந்த கனகவல்லீயுடன் தான்சேர்ந்து
மறையுரைக்கும் முனியைத் தொட்டு ஞானமுத்திரை காட்டி
பறைதரவே எமக்காய் படுத்துக் கிடந்த வைத்யவீரராகவனே

திருவள்ளூர் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் வீரராகவப் பெருமாள் என்ற திருநாமத்துடன் புஜங்க ஸயனமாய் ஸேவை ஸாதிக்கிறார். கனகவல்லி, வசுமதி என்று தாயாருக்கு திருநாமங்கள். திரு எவ்வுள் என்பது மருவி திருவள்ளூர் ஆயிற்று.

சாலிஹோத்ர மஹரிஷி என்பவருடைய தந்தை குழந்தைப்பேறு வேண்டி பகவானுக்கு யாகம் செய்தார். பல ஆயிரக் கணக்கான சாலி (அளக்கிற படியால்) நெல் கொண்டு செய்து பிறந்த குழந்தையானதால் சாலிஹோத்ர மஹரிஷி என்று அழைக்கப்பட்டார். அந்த மஹரிஷி பதரி ஆஸ்ரமத்தில் தவம் செய்து கொண்டிருந்த அவர் பரமபதம் செல்ல ஆசைப்பட்டு பகவானின் நியமனத்தால் வீக்ஷாரண்யம் என்ற இந்த ஊருக்கு வந்து சேர்ந்தார்.

இங்கே உள்ள ஹ்ருத்தாபநாசினி என்கிற குளத்தில் குளித்து மௌன விரதத்தை ஆரம்பித்தார். தினந்தோறும் யாசகம் செய்து கிடைத்த அரிசியை சமைத்து அதில் கால் பாகத்தை அதிதிகளுக்கு ஸமர்ப்பித்து மீதியை அவர் உண்ணுவது வழக்கம். ஒரு நாள் பகவான் வாமனன் உருவத்தில் ஒரு அதிதியாக வந்தான். முனி கொடுத்த கால்பாகம் போதாது, முழுவதும் வேண்டும் என்று கேட்டு எல்லாவற்றையும் உண்டபின் களைப்பாற "உறைவதற்கு உரிய ஊர் எவ் உள்" என்று வினவினான். முனியும் அவ்வுள் என்று காட்டினார். பகவானே எவ்வுள் என்று கேட்டதால் இந்த ஊர் திரு எவ்வுள் என்ற அழைக்கப் பட்டது.

பகவானை ஒருக்கணமும் பிரியாது கூடவே இருக்கும் மஹாலக்ஷ்மியும் இங்கே கனகவல்லீ என்ற திருநாமத்துடன், தாயாருக்கே உள்ள தனிச்சிறப்பு குணமான மாத்ருத்வ ப்ரியத்வ வாத்ஸல்யம் நிரம்பியவளாய் பகவானுடன் சேர்ந்து இருக்கிறாள்.

ஊரீகர்தும் குரூல மகிலம் ஜேதுமாதீ3நராதீந்
தூ3ரீகர்தும் து3ரித நிவஹம் த்யக்துமாத்3யா மவித்3யாம் ।
அம்ப3 ஸ்தம்ப3ாவதி4க ஜநந க்ராம ஸீமாந்த ரேகே2ம்
ஆலம்ப3ந்தே விமல மநஸோ விஷ்ணுகாந்தே த3யாம் தே ॥

என்று ஸ்ரீஸ்துதியில் (18) ஸ்வாமி தேசிகன் பிராட்டியின் அருளன்றி மோக்ஷம் பெற இயலாது என்பதை ஸாதிக்கிறார். தாயாரின் கருணையே எல்லைக்கோடாய் அதற்குள் அடங்கியவர் பிரம்மா முதல் துறும்பு வரை உள்ளவை எல்லாம் பாபங்களை விலக்கி ஸகல நன்மையும் பெற்று மோக்ஷத்தை அடைகின்றன. அதற்கு அப்பற்பட்டவை இவ்வுலக பாபங்களிலேயே உழல்கின்றன என்று பிராட்டியின் வாத்ஸல்யத்தின் மேன்மையைக் காட்டுகிறார்.

"ஈஸ்வர ஸ்வாதந்த்ரியத்தையும் சேதனுடைய அபராதத்தையும்
கண்டு அகல மாட்டாள்"

என்று முமுக்ஷுப்படியில் (132) பிள்ளைலோகாசார்யரும் அருளினார்.

பகவான் இந்த திவ்ய தேஸத்தில் ஸயனித்த திருக்கோலத்தில் ஒரு கையால் அடி பணிந்திருக்கும் சாலிஹோத்ர மஹரிஷியின் தலையைத் தொட்டும் மற்றொரு கையால் "ஞான முத்திரை காட்டி நான்முகனுக்கு வேதங்களை உபதேசிப்பது போல் "ஞானத்தமிழ் புரிந்த நான்" என்று காட்சி அளிக்கிறார்.

முனிவன் மூர்த்தி மூவராகி வேதம் விரித்து உரைக்க
புனிதன் * பூவை வண்ணன் அண்ணல் புண்ணியன் விண்ணவர்கோன்
தனியன் சேயன் தான் ஒருவன் ஆகிலும் தன் அடியார்க்கு
இனியன் எந்தை எம்பெருமான் எவ்வுள் கிடந்தானே

என்று பெரிய திருமொழியில் (2-2-8) திருமங்கை மன்னன் கூறுகிறார். பகவான் எவ்வளவு உயர்ந்தவன், முதல்வன், வேதங்களை உபதேசித்தவன், மோக்ஷ சாம்ராஜ்யத்தை அருளுபவன். இருந்தாலும், அற்ப புத்தி உள்ள கீழ்த்தரமான நம்மைப் போன்ற சேதனர்களிடம் இனிமையாய் காட்சி அளிக்கிறான் என்றார். முன் அவனை விட்டு எப்பொழுதும் அகலாத திருவின் ஸம்பந்தத்தினால்தான் நமக்கு இந்த பேறு என்று ஆசார்யர்கள் ஸாதிக்கின்றனர்.

கார்மேனி செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்

என்று திருப்பாவையில் (1) ஆண்டாள் கூறியது போல் பரமபதநாதனே வீரராகவன் என்று திருநாமம் கொண்ட பகவான் இங்கே. தன்னை அண்டியவர்களுக்கு மோக்ஷ பராப்தி வழங்கவே தான் இங்கு வந்து உறங்குவதுபோல் தோன்றுகிறது.

இங்குள்ள புஷ்கரணியில் தீர்த்தமாடி, விஜயகோடி விமானத்தைக் கண்டு வீரராகவனை சேவித்தால் எல்லா நோய்களும் அறவே ஒழியும் என்று நம்பிக்கை. அதனால் இந்த பகவானை வைத்ய வீரராகவப் பெருமாள் என்றும் அழைக்கின்றனர்.

திருமங்கையாழ்வாரும் திருமழிசையாழ்வாரும் 12 பாசுரங்கள் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

பந்திருக்கும் மெல்விரலாள் பாவை பணி மலராள்
வந்திருக்கும் மார்வன் நீல மேனி வண்ணன்
அந்தரத்தில் வாழும் வானோர் நாயகனாய் அமைந்த
இந்திரற்கும் தம் பெருமான் எவ்வுள் கிடந்தானே

என்று பெரிய திருமொழியில் (2-2-9) திருமங்கையாழ்வார் இந்திரனுக்கும் தலைவன் கிடக்கும் ஊர் இது என்று பாடி அனுபவிக்கிறார்.

ஸ்ரீ கனகவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ வீரராகவ பரப்ரஹ்மணே நம:

60. திருவல்லிக்கேணி

நடமாடி நீதியுரைத்த தெய்வம் வேங்கட மலைவிட்டு வாசம் கொண்டதோ
இடம் மாறி இணையடி காட்டி இணைந்து நிற்கும் அல்லிக் கேணியிலே
பள்ளி அரங்கனும் தெள்ளிய சிங்கமும் உள்ள ப்ருந்தாரண்ய கோவிலிலே
உள்ளி உருகி உன்னை அடைந்த பின் பிறவியேது வேங்கட கிருஷ்ணனே

முன்னொரு நாள் சுமதி என்னும் அரசன் திருவேங்கடமுடையானை கண்ணனாக ஸேவிக்க விரும்பி தவம் இருந்தான். அவனுக்கு இரங்கி பகவானும் இந்த திருத்தலத்தில் இரண்டு கரங்களுடன் பார்த்த சாரதி, வேங்கட கிருஷ்ணனாக ஸேவை ஸாதிக்கிறார்.

பார்த்தற்காய் அன்று பாரதம் கை செய்திட்டு வென்ற பரஞ்சுடர்
கோத்து அங்கு ஆயர்தம்பாடியில் குரவை பிணைந்த எம் கோவலன்
ஏத்துவார் தன் மனத்துள்ளான் இடவெந்தை மேவிய எம்பெருமான்
தீர்த்த நீர்த்தடஞ்சோலை சூழ் திருவேங்கடம் அடை நெஞ்சே

என்று பெரிய திருமொழியில் (1-8-4) திருமங்கை மன்னன் பார்த்தசாரதியே வேங்கடத்தில் நிற்பவன் என்றார். ஸ்வாமி தேசிகனும் "கண்ணன் அடையிணை எமக்குக் காட்டும் வெற்பு" என்று திருவேங்கட மலையையே பாடினார்.

கோவர்தனத்தில் நடனம் ஆடி குருக்ஷேத்திரத்தில் நீதியுரையான பகவத் கீதையை உபதேசித்த கண்ணன் ஏழுமலையை விட்டு இறங்கி இங்கு கடலோரம் வந்து தன்னுடைய இருப்பிடம் என்று கொண்டானோ என்று தோன்றுகிறது. பரமபத்தையும் பாற்கடலையும் விட்டு பாரத்தசாரதியாக அவதரித்த பரந்தாமனே. திருவேங்கட மலைவிட்டு திருவல்லிக்கேணியை தன் வாசமாய் கொண்டான்.

பற்று அலர் வீயக் கையில் கோல் கொண்டு
பார்த்தன் தன் தேர் முன் நின்றானை
சிற்றவை பணியால் முடி துறந்தானைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே

என்று பெரிய திருமொழியில் (2-3-1) திருமங்கை மன்னன் அல்லிமலர்கள் மலரும் தடாகம் உள்ள திரு அல்லிக்கேணியிலே மிக உயர்ந்த கம்பீர தோரணையில் மிடுக்குடனும், மீசையுடனும் நின்று தன் திருவடிகளைக் காட்டிக் கொடுக்கிறவன் அருச்சுனனுக்கு தேர் ஓட்டிய பார்த்தசாரதி என்றார்.

தாளால் உலகம் அளந்த அசைவே கொல்
வாளா கிடந்து அருளும் வாய் திறவான் - நீள் ஓதம்
வந்து அலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்
ஐ தலைவாய் நாகத்து அணை

என்று நான்முகன் திருவந்தாதியில் (35) திருமழிசைப்பிரான் திருவல்லிக்கேணியில் வந்து ஸயனித்து கிடக்கிறான் என்றார். பாற்கடலில் ஸயனித்தவனே கிருஷ்ணனாய் அவதரித்தவன். அவனே திருமலையில் நின்றவன். ஆவனே இன்று அல்லிக்கேணி கொண்டான்.

மற்ற கோவில்களுக்கு இல்லாத பெருமை இந்த கோவிலுக்கு பல உண்டு. பகவான் இங்கு மட்டும்தான் குடும்ப ஸமேதராய் நின்று ஸேவை ஸாதிக்கிறான். ருக்மிணிப் பிராட்டி, அண்ணன் பலராமன், தம்பி ஸாத்யகி, பிள்ளை பிரத்யும்னன், பேரன் அநிருத்தன் இவர்கள் சூழ கண் கொள்ளாக் காட்சியாக நின்று அருள் புரிகிறான். தவிர எம்பெருமானாருடைய பெற்றோருக்கு அனுக்ரஹித்து எம்பெருமானார் திரு அவதாரத்திற்கே காரணமான பெருமாள்.

பள்ளியில் ஓதி வந்த சிறுவன்
வாயில் ஓர் ஆயிரம் நாமம்
ஒள்ளியவாகிப் போதவாங்கு அதனுக்கு
ஒன்றும் ஓர் பொறுப்பு இலனாகி
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப்
பிறை யெயிற்று கனல் விழிப் பேழ்வாய்
தெள்ளிய சிங்கமாகிய தேவைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே

என்று பெரிய திருமொழியில் (2-3-8) திருமங்கை மன்னன் "அங்கு அப்பொழுதே அவன் முன் தோன்றிய தெள்ளிய சிங்கத்தைப் பற்றி" ஸாதிக்கிறார். ப்ருந்தாரண்யம் என்று அழைக்கப்படும் இந்த திவ்ய தேஸத்தில் பள்ளி கொண்ட அரங்கனும், தள்ளிய சிங்கமும் காட்சி தருகிறார்கள்.

அந்த வேங்கட கிருஷ்ணனை கடுவினையர் இருவினையும் கடியும் கண்ணனாக எண்ணி பிறவி என்னும் கடலை கடக்க விரும்பி உள்ளம் உருகி அடைகிறேன்.

ஸங்கல்ப கர்ணதா4ரா: கிங்கரஸத்ய ப4வ ஸாக3ரேSதிக3பீ4ரே ।
அநக4ஸ்த்வம் க2லு போத: ஆத்மநாம் க்ருபா ஸமீரேண ப்ரயுக்த: ॥

என்று ஸ்ரீ-அச்யுதஶதகத்தில் (24) ஸ்வாமி தேசிகன் மிக ஆழமான ஸம்ஸாரக் கடலில் மூழ்கியிருக்கும் சேதனர்களுக்கு பகவானே உன் ஸங்கல்பமே படகோட்டியாகவும் உன் கருணையே காற்றாகவும் நீயே தள்ளப்படும் படகாய் உள்ளாய் என்றார்.

திருமங்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகிய மூன்று ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள். "வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை" என்று திருமங்கையாழ்வார், அனுபவிக்கிறார். "எந்தை ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்வன் திருவல்லிக்கேணியோன்" என்றார் பேயாழ்வார்.

ஸ்ரீ ருக்மணி நாயிக ஸமேத ஸ்ரீ வேங்கட கிருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

61. திருநீர்மலை

நின்றவன் நீர்வண்ணன் இருந்தவனும் அரிமுகனே
கிடந்தவன் அரங்கன் நடந்தவனோ ஓங்கி உயர்ந்தவன்
பெற்றான் பெரும்பேறு தூய மறை நான்கும் கற்றானே
வற்றாக் கருத்து கண்டானே கண்ணெதிரே நீர்மலையிலே

திருமங்கையாழ்வார், பகவானை ஸேவிக்க இந்த ஊருக்கு வந்த பொழுது பகவான் எழுந்தருளியுள்ள மலையைச் சுற்றி தண்ணீர் ஒரு அரண் போல் அமைந்திருந்தது. அதனால் நீர்மலை என்று பெயர் பெற்றது.

பகவான் நீர்வண்ணன் என்று நின்ற திருக்கோலத்தில் மலை அடிவாரத்தில் ஸேவை ஸாதிக்கிறான். மலை மேல் சாந்த நரசிம்மனாக வீற்றிருந்த திருக்கோலத்திலும், அரங்கநாதனாக பள்ளி கொண்ட கோலத்திலும், த்ரிவிக்ரமனாக நடந்தான் என்று நின்ற திருக்கோலத்திலும் ஸேவை ஸாதிக்கிறான்.

வேத விற்பன்னர்கள். பகவானின் கல்யாண குணங்களையும், அவனுடைய ஸ்வாதந்திரியத்தையும், ஜகத் காரணத்தையும், அவனுக்கும் நமக்கும் உள்ள அகலாத உறவையும், கைங்கர்ய ப்ராப்தியையும் நான்கு வேதங்களில் பொதிந்து உள்ள கருத்துக்கள் மூலமாக அறிந்தார்கள். அதனால் பெரும் பேறான மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைவதற்கு தங்களை தகுதியாக்கிக் கொண்டார்கள்.

இந்த நுட்பமான வேத அறிவு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. வேதங்களை பல சந்ததிகளாய் அத்யனம் பண்ணி சாஸ்த்ரங்களில் கைதேர்வது என்னும் பாக்கியம் எல்லா அடியவர்களுக்கு கிடைப்பதில்லை. இருந்தாலும், அந்த அடியவர்கள் பகவானின் பரம பாகவதனாய் பகவானே கதி. அவனே கருணை என்னும் வற்றாத சமுத்ரம் என்ற உயர்ந்த கருத்துக் கொண்டவர்கள். அவர்கள் திருநீர்மலை வந்து பகவானை ஸேவித்து அவனிடம் சரணாகதி செய்வதால் கண்ணுக்கு எதிரிலேயே அந்த மோக்ஷ பலனைத் வெகு சுலபமாகக் காண்கிறார்கள்

ஊன் வாட உண்ணாது உயிர் காவலிட்டே
உடலிற பிரியாப் புலன் ஐந்தும் நொந்து
தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா

பெரிய திருமொழியில் (3-2-1) திருமங்கையாழ்வார் விவரிக்கிறார். யாகங்கள், பூசனைகள், விரதங்கள் எல்லாவற்றையும் விட பகவானிடம் உண்மையாக மனத்தை பறிகொடுத்து அவனிடம் சரணாகதி செய்தவர்கள் உயர்ந்த ஸ்தானத்தை விரைவிலேயே அடைகிறார்கள் என்றார். இதை திருநீர்மலை வந்து அடி பணியும் பக்தர்களிடம் காணலாம்.

பகவானை நினத்து பூசித்து அனுபவிப்பவர்கள் அந்த சுகத்தையே பெரும்பேறாக எண்ணுவார்கள். பக்தி அனுபவத்தைத் தவிர மற்றொன்றை நாட மாட்டார்கள்.

நாஹம் வந்தே3 தவ சரணயோர்த்3வந்த்3வம் அத்3வந்த3ஹேதோ:
கும்பீபாகம் கு3ருமபி ஹரே நாரகம் நாபநேதும் ।
ரம்யா ராமா ம்ருது3தநுலதா நந்த3நே நாபி ரந்தும்
ப4வே ப4வே ஹ்ருத3யப4வநே ப4வயேயம் ப4வந்தம் ॥

முகுந்தமாலையில் (4) குலசேகராழ்வார் ஹரியே உன் திருவடிகளையே நான் அடைகிறேன். அது மோக்ஷத்திற்காகவோ கொடிய நரகத்தை தவிர்க்கவோ தேவர்களுடைய தோட்டத்தில் மென்மையான பெண்களை அனுபவிக்கவோ என்பதற்கு இல்லை. என்னுடைய இதயமாகிற கோவிலில் ஒவ்வொரு பிறவியிலும் உன்னையே நினைக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகவே வணங்குகிறேன் என்றார்.

ஸர்வே வேதா3ஸ் ஸர்வவேத்3யாஸ் ஸ ஶாஸ்த்ரா:
ஸர்வே யஜ்ஞாஸ் ஸர்வ இஜ்யாஶ்ச க்ருஷ்ண: ।
வி(து3: கிருஷ்ணம் ப்3ராஹ்மணாஸ் தத் த்வதோ யே
தேஷாம் ராஜந் ஸர்வயஜ்ஞாஸ் ஸமாப்த: ॥

என்ற ஸ்லோகம் சொல்கிறது. ராஜனே! சாஸ்த்ரங்களுடன் கூடிய எல்லா வேதங்களும் அறிய வேண்டிய எல்லா பொருள்களும், எல்லா யஜ்ஞங்களும், யாகத்தில் உபாசிக்கப்படும் எல்லாத் தேவர்களும் கிருஷ்ணன் ஒருவனே ஆவான். எந்த பிராம்மணர்கள் கிருஷ்ணனை உண்மையாய் உள்ளபடியே அறிகிறார்களோ அவர்களுக்கு எல்லா யாகங்களும் செய்து முடித்தவையாக ஆகின்றன.

வினைத் திரள் மாற்றிய வேதியர் தந்த நல் வாசகத்தால்
அனைத்தும் அறிந்த பின் ஆறும் பயனும் என அடைந்தோம்
மனத்தில் இருந்து மருத்து அமுதமாகிய மாதவனார்
நினைத்தல் மறத்தல் அரிதாய நல் நீழ் கழலே

என்று அமிருத ரஞ்சனியில் (30) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். ஆசாரியர்கள் வேதாந்தங்களின் பொருள்களை சுலபமாகக் காட்டுகிறார்கள். அவர்கள் உபதேசங்களின் ஸாரார்த்தம் என்பது மருந்தும் அமிர்தமுமாகிய பகவான் திருவடிகளே. அதுவே உபாயமும் பலனும் ஆகும். ஆவனுடைய திருவடிகளின் பெருமைகளை நினக்கவும் முடியாது. அவற்றின் இனிமையைப் பார்த்தால் விடவும் தோன்றாது என்றார்.

. ஆகையால் ஸர்வமும் பகவானே என்று அறிந்து அவன் திருவடிகளையே பற்றுபவர்கள் வேதத்தின் சாரத்தை அறிந்தவர்கள், யாகங்களை பரிபூர்ணமாக செய்து கிடைக்கக்கூடிய அந்த பலன்களை அனுபவிக்க தகுதியானவர்கள் ஆகிறார்கள்.

திருமங்கையாழ்வார் 19 பாசுரங்களும், பூதத்தாழ்வார் 1 பாசுரமுமாக மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

ஸ்ரீ ஸுந்தரவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ ஜலதிவர்ணாய பரப்ரஹ்மணே நம:

62. திரு இடவெந்தை

பொன்னுருவாள் அகிலவல்லி இடப்புறம் ஏந்திய எந்தையே
நின்று உலகம் மீட்ட எம் ஞானப்பிரானே! லக்ஷ்மீ வராஹா!
என்றும் உன் மணக்கோலம் இடவெந்தையில் கண்டு பணிந்து
உன்னடியே பற்றி நின்றேன் நித்ய கல்யாணப் பெருமானே!

பகவான் இந்த ஸ்தலத்தில் வராஹ அவதாரமாய் பூமிதேவியை இடக்கையில் ஏந்திய கோலத்தில் லக்ஷ்மீ வராஹன் என்ற திருநாமத்துடன் நின்ற கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு கோமளவல்லி என்ற திருநாமம். அகிலவல்லி என்ற திருநாமமும் இங்கே உண்டு.

பூமேய செம்மாதை நின் மார்வில் சேர்வித்து * பாரிடந்த
அம்மா! நின் பாதத்து அருகு

என்று பெரிய திருவந்தாதியில் (7) நம்மாழ்வார் ஸாதிக்கிறார். தாமரைப்பூவில் பொருந்தியிருக்கிற பொன் வடிவான மஹாலக்ஷ்மியை உன் திருமார்பில் சேர்த்து கொண்டவனே! பிரளய காலத்தில் நீரில் அழுந்தியிருந்த பூமியைக் குத்தி எடுத்து வந்த வராஹ ரூபியான என் ஸ்வாமியே! உன் திருவடிகளின் சமீபத்தை எனக்கு காட்டு என்றார்.

சிலம்பினிடைச் சிறுபரல்போல் பெரிய மேரு
திருக்குளம்பில் கணகணப்பத் திருவா காரம் குலுங்க,
நில மடந்தை தனை இடந்து புல்கிக்
கோட்டிடைத்து அருளிய எங்கோமான் கண்டீர்

என்று பெரிய திருமொழியில் (4-4-8) திருமங்கையாழ்வார் வராஹ அவதாரத்தில் பகவான் ஸமுத்திரத்தில் முழ்கிய பூவுலகை மீட்டு, பூமாதேவியை அவள் பயம் நீங்க அணைத்துக் கொள்கிறார் என்கிறார். தாயாரின் வேண்டுகோளுக்கிணங்க பகவான் சரம ஸ்லோகத்தை உபதேசிக்கிறார்.

வானத்தவர்க்கும் அல்லாதவர்க்கும் மற்றெல்லா யவர்க்கும்
ஞானப்பிரானை அல்லால் இல்லை நான் கண்ட நல்லதுவே

நம்மாழ்வார் திருவிருத்தத்தில் (99) தேவர்களுக்கும், மற்றும் நித்யஸூரிகள் அல்லாதவருக்கும், மற்றைய மனித விலங்குகளுக்கும் வராஹ நயினாரைத் தவிர வேறு உபாயம் கிடையாது. நான் ஆராய்ந்து நிச்சயம் செய்து நன்மை என்று கண்டறிந்தது இதுதான் என்கிறார்.

பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்க்கு பண்டொரு நாள்
மாசு உடம்பில் நீரவாரா மானமிலாப் பன்றியாம்

என்று ஆண்டாளும் நாச்சியார் திருமொழியில் (12-8) வராக அவதாரத்தை போற்றி அதற்கு இணை ஏது? என்கிறாள். மானம் இலாப் பன்றி என்பதற்கு பெரியவாச்சான் பிள்ளை அபிமானம் இல்லாத பன்றி என்றும் ஸ்வாமி தேசிகன் உபமானம் இல்லாப் பன்றி என்று வியாக்கியானம் செய்துள்ளார்கள்.

கண்வ மஹரிஷியிடம் பகவான் வந்து ஒரு யாசகனாக நடித்து அவருடைய 360 பெண்களையும் தான் ஒருவனே மணந்ததால் நித்ய கல்யாணப் பெருமாள் என்று உத்ஸவருக்குப் பெயர். என்றும் திருமண திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார்.

"உற்றேன் உகந்து பணி செய்து உன பாதம்
பெற்றேன்"

என்று திருவாய்மொழியில் (10-8-10) நம்மாழ்வார் வெகு காலம் பகவானுக்கு கைங்கர்யம் செய்து உனது திருவடிகளை அறிந்து கொண்டேன் என்கிறார்.

கண்ணன் கழலினை நண்ணும் மனம் உடையீர்
எண்ணும் திருநாமம் - திண்ணம் நாரணமே

என்று திருவாய்மொழியில் (10-5-1) நம்மாழ்வார் பகவானின் திருநாமங்களையே நினைத்து அவன் திருவடிகளையே பற்றுங்கள் என்றார்.

தஸ்ய யஜ்ஞவராஹஸ்ய விஷ்ணோரமித தேஜஸ:
பரணாமம் யேऽபி குர்வந்தி தேஷாமபி நமோ நம:

என்று யஜ்ஞ வராகஸ்வரூபமாய் உள்ள விஷ்ணுவிற்கு எவர் ஒரு நமஸ்காரம் செய்கிறாரோ அவருக்கு நான் விடாது நமஸ்காரம் செய்கிறேன் என்றான் யமன்.

திருமங்கை மன்னன் 13 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

அன்னமும் மீனும் ஆமையும் அரியும்
ஆய எம் மாயனே! அருளாய்
என்னுமின் தொண்டர்க்கு இன்னருள் புரியும்
இடவெந்தை எந்தை பிரானை
மன்னு மாட மங்கையுர் தலைவன்
மான வேல் கலியன் வாயொலிகள்
பன்னிய பனுவல் பாடுவார் நாளும்
பழவினை பற்று அறுப்பாரே

என்று பெரிய திருமொழியில் (2-7-10) திருமங்கை மன்னன் பக்தர்களின் பழவினை தீர்க்கும் எம்பெருமான் என்றார்.

ஸ்ரீ கோமளவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ லக்ஷ்மீ வராஹ பரப்ரஹ்மணே நம:

63. திருக்கடல்மல்லை (மாமல்லபுரம்)

தொடர் அறுத்து தொல்வினை கெடுத்து உலகுய்யவே
இடர் நீக்க இங்கே கிடந்தேன் என அருள் பொழியும்
பட நாகத்தணையும் பாற் கடலையும் விட்டு திடமாகக்
கடல் மல்லைத் தரை கொண்ட தலசயனப் பெருமானே

திருக்கடல்மல்லை, மாமல்லபுரம், மஹாபலிபுரம் என்று எல்லாம் இந்த திருத்தலத்திற்கு பெயர். ஸயனத் திருக்கோலத்தில் ஸ்தலசயனப் பெருமாள் என்ற திருநாமத்துடன் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு நிலமங்கைத்தாயார் என்ற திருநாமம்.

பகவான் தனது வலது திருக்கரத்தை திருமார்பில் ஞான முத்திரையாக (உபதேச முத்திரையாக) வைத்து "ஞானத் தமிழ் புரிந்த நான்" என்ற பூதத்தாழ்வார் வாக்கின்படி கிடக்கிறார்.

எம்பிரான் என்னை ஆளுடைத் தேனே
ஏழை என் இடரைக் களையாயே

என்று பெரியாழ்வார் திருமொழியில் (5-9) பகவானிடம் தம் இடரைக் களையுமாறு வேண்டினார். எம்பிரான், ஆளுடை, ஏழை என்ற பதங்களாலே பரமாத்வாவிற்கும் சேதனனாகிய நமக்கும் உள்ள ஆதாரத்வம், நியந்த்ருத்வம், ஸ்வாமித்வம் என்ற மூன்று ஸம்பந்தத்தையும் சுருக்கிக் காட்டினார்.

கெடும் இடர் ஆய எல்லாம் கேசவா என்று

என்று ஸாதித்தார் நம்மாழ்வார் திருவாய்மொழியில் (10-2-1). கேசவன் எனற நாமாவைச் சொன்னாலேயே போதும். இடர்கள் நீங்கும் என்றார்.

வையும் தகளியா வார் கடலே நெய்யாக
வெய்யக் கதிரோன் விளக்காக செய்ய
சுடர் ஆழி யான் அடிக்கே சூட்டினேன்
இடர் அழி நீங்குகவே என்று

பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில் (1), பிரபந்தத்தை ஆரம்பிக்கும் முதல் பாசுரத்தில், பகவானுக்கு கைங்கர்யம் செய்வதற்கு இடையூறாய் இருக்கும் துக்கம், வருத்தம், உலக இன்பம், ஸம்ஸார பந்தம் இவைகளை நீக்கு என்று வேண்டுகிறார்.

மஹாபலிச் சக்ரவர்த்தி வாமனனிடம் கேட்டு பெற்ற வரத்தின் மூலம் இந்த ஊரை ஆண்டு வந்ததால் மஹாபலிபுரம் என்று ஆயிற்று என்பர். நரசிம்மவர்ம பல்லவன் மாமல்லன் என்று அழைக்கப்பட்டவன். அவன் ஆண்ட ஊரானதால் மாமல்லபுரம் என்று பெயர் என்றும் கூறுவர்.

அஜாயமானோ பஹுதா விஜாயதே ।
தஸ்ய தீராஃ பரிஜாநந்தி யோநிம் ।

என்று புருஷ ஸூக்தம் பிறப்பற்ற பகவான் பல முறை இந்த பூமியில் பிறக்கிறான். என்கிறது (The one who has no birth is born many times). பகவான் இங்கே சேதனர்களை பிறவித் துயரிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், ஸம்ஸார பந்தத்திற்கு காரணமான பாவச் செயல்களை நினைவுருத்தி அவர்களை உஜ்ஜீவிக்க வேண்டும் என்பதற்காக தனக்கேயுள்ள பாற்கடலையும், பள்ளி கொள்ள அனந்தாழ்வானும் இருக்க அவற்றைவிட்டு இந்த மாமல்லபுரத்து கரையின் மேல் கிடக்கிறான்.

திரிந்தது வெம் சமத்துத் தேர்க்கடவி * அன்று
பிரிந்தது சீதையை மான்பின் போய் * புரிந்ததுவும்
கண்பள்ளி கொள்ள அழகியதே? * நாகத்தின்
தண்பள்ளி கொள்வான் தனக்கு

என்று இரண்டாம் திருவந்தாதியில் (15) பூதத்தாழ்வார் கூறுகிறார். கிருஷ்ணன் கொடிய பாரதப் போரில் தேர்ப்பாகனாய் அலைந்ததும், ராமன் மான் பின் சென்று சீதையைத் பிரிந்து வருந்தியதும் தரையிலே படுத்துக் கொள்ள விழைந்ததும், குளிர்ந்த அனந்தன் மேல் துயிலும் பரமனுக்கு உகந்ததா? என்று வினவுகிறார்.

அணைவது அரவணை மேல் பூம்பாவையாகம்
புணர்வது இருவரவர் முதலும்தானே
இணைவனாம் எப்பொருட்கும் வீடுமுதலாம்
புணைவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே

ஸ்வாமி நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் (2-8-1) பகவான், தாயார் இவர்கள் இருவரையும் உபாயமாக அடந்தவர்கள் பிறவி என்னும் கடலைக் கடக்கிறார்கள் என்றார்.

பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு

திருக்குறளும் சிறப்பு என்று சொல்லக்கூடிய பகவானின் திருக்குணங்களை சொல்லி ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவித்துக் கொள் என்றது.

பூதத்தாழ்வார் அவதார ஸ்தலம் இது. பூதத்தாழ்வார் ஒரு பாசுரமும், திருமங்கை மன்னன் 26 பாசுரங்களும் பாடியுள்ளார்கள். திருக்கடல்மல்லையில் உள்ள எம்பிரான் பல அவதாரங்களைச் செய்தவன் என்று சொல்லி கடல் மல்லை தலசயனத்தே என்று ஒவ்வொரு பாசுரத்தையும் முடிக்கிறார் கலியன்.

ஸ்ரீ பூஸ்தல மங்காதேவி நாயிக ஸமேத ஸ்ரீ ஸ்தலசயன பரப்ரஹ்மணே நம:

64. திருக்கடிகை (சோளசிங்கபுரம் - சோளிங்கபுரம்)

பாப வலை அறுத்துக் கொள்ளத் தக்கானோ
மோக நிலை மாற்றும் திருவடியே புக்கானோ
போகமிகு அரும் சுவைக்கனியே கண்டானோ
யோக நரசிம்மா! நீ அமர்ந்த திருக்கடிகையிலே

சோளிங்கிபுரம், சோளசிம்மபுரம் என்று அழைக்கப்படும் திருக்கடிகை ஸ்தலத்தில் யோக நரசிம்ம மூர்த்தி அமர்ந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு அமிருதவல்லி என்ற திருநாமம்.

இந்த கடிகை மலையை அடைந்து பாபங்களிலிருந்து நிவர்த்தி அடைய பக்தர்கள் விரும்புகிறார்கள். இங்குள்ள யோக நரசிம்மரின் திருவடிகளைப் பற்றி உலகில் உள்ள அற்ப பலன்களில் உள்ள நாட்டத்தை மாற்றிக் கொள்ள முனைகிறார்கள்.

மின்னின் நிலை இல மன்னுயிர் ஆக்கைகள்
என்னும் இடத்து இறை உன்னுமின் நீரே

என்று திருவாய்மொழியில் (1-2-2) நம்மாழ்வார் கூறுகிறார். ஆத்மா அழிவற்றது. ஆனால் அது தங்குகிற இந்த உடம்போ ஒரு க்ஷணத்தில் தோன்றி மறையும் மின்னல் போல் அற்பமானது. நிலையற்றது. இதை எண்ணிப் பார்த்தால் உடம்பு செய்யும் தீமைகளை ஓரளவு புரிந்து கொள்வீர்கள். உடனே வாழ்க்கையில் விரக்தி பிறக்கும் என்றார்.

வன்மா வையம் அளந்த எம் வாமனா! * நின்
பன்மா மாயப்பிறவியில் படிகின்ற யான் *
தொன்மா வல்வினைத் தொடர்களை முதல் அரிந்து
நின் மா தாள் சேர்ந்து நிற்பது எஞ்ஞான்றுகொலோ?

என்று திருவாய்மொழியில் (3-2-2) நம்மாழ்வார் கூறுகிறார். வாமனனாக வந்து உலகம் எல்லாம் அளந்தவனே! உன் மாயத்தால் நான் பல பிறப்புகள் எடுத்து உழல்கின்றேன். தொன்று தொட்டு வரும் கடுவினைகளை அடியோடு வெட்டித் தீர்த்து உன் திருவடிகளில் என்னை சேர்ப்பது என்றோ? என்றார்.

கழிமின் தொண்டீர்காள்! கழித்துத்
தொழுமின் அவனைத் தொழுதால்
வழி நின்ற வல்வினை மாள்வித்து
அழிவின்றி ஆக்கம் தருமே

என்று திருவாய்மொழியில் (1-6-8) நம்மாழ்வார் உலக ஆசையை அறவே விட்டு விடுங்கள். பகவானைத் தொழுதால் தொடர்ந்து வரும் வினைப்பயன்கள் ஒழியும். மோக்ஷத்தில் கைங்கர்யம் என்னும் உயர்ந்த புருஷார்த்தத்தை பெறலாம் என்றார்.

அதையே நினைவில் கொண்டு பக்தர்கள் மலை மேல் அமர்ந்திருக்கும் பகவானை ஸேவித்து அந்த பகவானை ஒரு அரும் பெரும் கனி, அக்காரக்கனி என்று அடையமுடியாத ஒன்றை அடைந்து விட்டது போல் எண்ணி மகிழ்கிறார்கள்.

ஆள் பார்த்து உழி தருவாய் கண்டு கொள் என்றும் * நின்
தாள் பார்த்து உழி தருவேன் தன்மையை - கேட்பார்க்கு
அரும் பொருளாய் நின்றவனே

என்று நான்முகன் திருவந்தாதியில் (60) திருமழிசைப்பிரான், "பகவானே நீ உனக்கு கைங்கர்யம் செய்ய யாரவது கிடப்பாரா? என்று தேடி வருகிறாய். எங்கும் உன் திருவடியே தேடி அலைந்து கொண்டிருக்கும் எனக்கு நீ கடாக்ஷிக்க வேண்டும். உன்னை ப்ரமாணத்தாலோ, என்னுடைய சொந்த முயற்சியாலோ காண முடியாது. நியே உன்னைக் காட்டித் தர வேண்டும். அடைய முடியாத அரும் பொருளாய் நிற்பவனே!" என்றார். அக்காரக் கனி என்பதற்கு பதிலாக அரும் பொருள் என்று அதே பாங்கில் கூறினார்.

தக்கான் என்பது தக்கான் குளத்தையும் குறிக்கும். இந்த ஸ்தலத்திற்கு வந்து தக்கான் குளத்தில் நீராடி ஒரு கடிகை, அதாவது 24 நிமிஷங்கள் தங்கினாலும் பாபங்கள் அனைத்தும் விலகும் என்பது பெரியோர் வாக்கு. மோக நிலை என்பது பேய் பிசாசு, சூன்யத்தால் பாதிக்கப் பட்ட மக்களும் இந்த மலை ஏறி பகவானை வழிபட்டால் அவை போகும் என்று நம்புகின்றனர்.

சண்ட மாருதம் சோளசிம்மபுரம் தொட்டாச்சாரியார் என்ற மஹான் காஞ்சி வரதனை அங்கு சென்று சேவிக்க முடியாமல் வருந்தியதற்கு பகவான் இந்த இடத்திலேயே கருட ஸேவையை அவருக்கு தந்தளித்ததாக வரலாறு.

ஸப்த ரிஷிகள் ந்ருஸிம்ஹனை ஸேவிக்க விரும்பி தவம் இங்கே செய்ய ஆரம்பித்தார்கள். கருணக்கடலான ந்ருஸிம்மன் ஒரே க்ஷணத்தில் அவர்கள் முன் தோன்றி அவர்களை பரவசப்படுத்தினான். ஒரு கடிகைக்குள் பகவான் பலன் தந்தமையால் கடிகாசலம் என்று அழைக்கப்பட்டது.

யோக ஆஞ்சனேயர், சிறிய மலையில் நான்கு திருக்கரங்கள், சங்கு சக்கரங்களோடு காட்சி அளிக்கிறார்.

திருமங்கையாழ்வார் மூன்று பாசுரத்தாலும், பேயாழ்வார் ஒரு பாசுரத்தாலும் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள்
புக்கானைப் புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக்கனியை அடைந்துய்ந்து போனேனே

என்று பெரிய திருமொழியில் (8-9-4) இந்த பகவானை அனுபவிக்கிறார்.

ஸ்ரீ அம்ருதவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ யோகந்ருசிம்ம பரப்ரஹ்மணே நம:

வட நாட்டு திருப்பதிகள் 11 (65 முதல் 75 வரை)

65. திருவயோத்தி (அயோத்யா)

அருள் விளக்கேயென அகலவன் குலத்தே அவதரித்தவன் ஸ்ரீ ராமன்
மருள் கெடவே அருங்குணம் காட்டி மகுடம் துறந்த மாமன்னன்மகன்
இருளரக்கன் தலைசீவி இணையடியால் ஈர்த்த இன்துணை மாவீரன்
பொருள்மிகு அயோத்தி புகழ் பொலிந்த புனிதன் ஸீதா ராமச்சந்திரன்

திரு அயோத்தி என்னும் இந்த திருத்தலத்தில் பகவான் ஸ்ரீராமன், சக்ரவர்த்தி திருமகன், ரகுநநாயகன் என்ற திருநாமங்களோடு வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். அருகில் தாயார் ஸீதாப்பிராட்டி. ஆழ்வார்கள் அனுபவித்த கோவிலோ இல்லை மூர்த்திகளோ இப்பொழுது இல்லை தேசம் மட்டுமே அயோத்தி என்று வழங்கப்படுகிறது. முக்தி தரும் நகர் ஏழில் இதுவும் ஒன்று.

பவ தபந தாபித பக்தஜந பத்ரா ராம!
ஸ்ரீ ராம பத்ரா! நமஸ்தே புநஸ்தே நம:!

என்று ஸ்ரீ மஹாவீர வைபவத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். "ஸம்ஸாரமாகிய வெப்பத்தால் தவிக்கும் அடியவருக்கு மங்களமான குளிர்ந்த பூந்தோட்டமாய் உள்ளவனே! திருமேனியைக் காட்டி வசீகரித்தவனே! ஸர்வேச்வரான உன் திருவடிகளுக்கு நமஸ்காரங்கள்" என்றார்.

அங்கணெடு மதின் புடை சூழ் அயோத்தி என்னும்
அணி நகரத்து உலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்திற்கோர் விளக்காய் தோன்றி
வீண் முழுதும் உய்யக் கொண்ட ராமன் தன்னை

என்ற குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் (10-1) உரைத்தாற்போல் பகவான் ஸ்ரீமந் நாராயணன் சூரிய வம்சத்தில் அயோத்தி மாநகரில் கருணையே உருவெடுத்த ராமபிரானாக அவதரித்தார். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற கூற்றின்படி தனக்கு சொந்தமான ராஜ்யத்தையே துறந்து வனவாஸத்தை மேற்கொண்ட சக்கரவர்த்தி திருமகன். உலகில் உள்ள மக்களின் அஞ்ஞானத்தை போக்குவதற்காகவே பலவிதமான உயர்ந்த குணங்களைக் காட்டி "ராமோ விக்ரஹவாந் தர்ம:" என்ற கூற்றிற்கு ஏற்ப எல்லோரையும் வசீகரப்படுத்தினவன்.

உத்தம அமர்த்தலம் அமைத்தது ஓர்
எழில் தனுவின் உய்த்த கணையால்
அத்திர அரக்கன் முடி பத்தும் ஒரு
கொத்தென உதிர்த்த திறலோன்

என்று ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்கரஹத்தில் (44) ஸாதித்த முறையில் அதர்மத்தில் திளைத்து எலோரையும் துன்புறுத்திய ராவணனின் பத்து தலைகளையும் அவனுடைய ஊரான இலங்கை சென்று (home court advantage) அறுத்துத் தள்ளியவர். தன்னை சரணாகதி என்று அடைந்தவனை "பயம் கொள்ளாதே. உன்னை ஸகல விதமான ஆபத்துக்களிலிருந்து காக்கிறேன். இது என் விரதம்" என்று கூறி தன் திருவடிகளைக் காட்டி எல்லோருக்கும் அபயம் அளித்தவர்.

கற்பார் ராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ
புற்பா முதலாப் புல் எறும்பாதி ஒன்று அன்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரங்கள் முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே?

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் (7-5-1) ஸாதித்த முறையில் அயோத்தியில் வாழும் எல்லாவிதமான தாவரங்களும், புழு, பூச்சி என்கிற ஐந்து வகைகள் வரை உபாயம் ஒன்றையும் பற்றாமலே பெருமாளின் அருள் என்கிற உயர்ந்த பொருள் பெற்றிருந்தன. அப்படிப்பட்ட செல்வங்கள் நிறைந்த அயோத்தி நகரத்து புகழ் வாய்ந்தவன் சீதா ராமச்சந்திரன்.

நீள் கடல் சூழ் இலங்கைக்கோன் தோள்கள் தலை துணி செய்தான்
தாள்கள் தலையில் வணங்கி நாள் கடலைக் கழிமினே

என்று திருவாய்மொழியில் (1-6-7) நம்மாழ்வார் கடல் சூழ்ந்த இலங்கைக்கு அரசன் ராவணன் தலையை அறுத்துத் தள்ளிய இராமபிரானுடைய திருவடிகளை தலையால் வணங்கி வாழ்க்கை என்னும் கடலைக் கடக்கவேண்டும் என்றார்.

ஸாகேத ஜநபத3 ஜநீ த்4நிக ஜங்க3ம ததி3தர ஜந்துஜாத தி3வ்ய
க3தி த3ாந த3ர்ஶித நித்ய நி:ஸீம வைப4வ!

என்று ஸ்ரீ மஹாவீர வைபவத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். ராமனே, நீ அவதாரம் முடிந்து தன்னடிச் சோதிக்கு எழுந்தருளும்போது கோசல நாட்டில் உள்ள ஜங்கம, ஸ்தாவர பொருள்களுக்கு எல்லாம் உயர்ந்த லோகத்தை கொடுத்து அழியாத பெருமையை பெற்றவனே என்றார். பொருள் மிகு அயோத்தி புகழ் என்ற பதம் இதைக் காட்டுகிறது.

ஐந்து ஆழ்வார்களால் 13 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட எம்பெருமான். பெரியாழ்வார் "அயோத்தியர் கோமானை, வேந்தனை, அரசனைப் பாடிப்பற" என்றெல்லாம் அழைத்து மகிழ்கிறார். "அம்பொனோடு மணிமாட அயோத்தி அரசெய்தி" என்று பாடுகிறார் குலசேகராழ்வார். "மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதம் ஆட்டிய அடிதிறல் அயோத்தி எம்மரசே" என்று திருப்பள்ளியெழுச்சி பாடுகிறார் தொண்டரப்பொடியாழ்வார். "அயோத்தி காவலன்" என்றார் திருமங்கை மன்னன். "கற்பார் ராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ. என்று ராமனையே கற்று மகிழுங்கள் என்றார் நம்மாழ்வார்.

ஸ்ரீ ஸீதாதேவீ ஸமேத ஸ்ரீ ராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:

66. திருநைமீசாரண்யம்

காட்டையே திருத் தலமாக்கி கடுந்தவ முனிவர் கண்டு உகந்த
பாட்டையே பண்டை நான்மறையாய் கொண்டாயே * பாழுமுடல்
சேட்டையே வெறுத்து ஒட்டை மனத்துடன் பயந்து * ஓடிவந்து
நாட்டையே விரும்பி நானடைந்த நைமிசாரணியத்து ஸ்ரீஹரியே

ஜோதிம் ஷி விஷ்ணு: புவநாநி விஷ்ணு: வனானி விஷ்ணு:

என்ற ஸ்ரீ விஷ்ணு புராண வாக்கின்படி, நைமீச ஆரண்யம் என்ற இந்த திவ்ய தேஸத்தில் பகவான் ஆரண்ய ரூபமாய் காட்சி அளிக்கிறான். மூலவருக்கு தேவராஜன், ஸ்ரீ ஹரி என்ற திருநாமங்கள். தாயாருக்கு ஸ்ரீ ஹரிலக்ஷ்மி, புண்டரீக வல்லி என்ற திருநாமங்கள். ஆழ்வார்கள் பாடிய கோவிலோ, மூர்த்திகளோ இப்பொழுது இல்லை என்கிறார்கள் நம் முன்னோர்கள்.

இங்குதான் க்ருஷ்ணத்வபாயனர் என்னும் வியாஸ பகவான் வேதங்களை எல்லாம் பாகுபடுத்தி (classified) மற்ற ரிஷிகளுக்கும் உபதேசம் செய்ததாக ஆசாரியர்கள் கூறுகிறார்கள். ஸ்ரீமத் பாகவதம், மஹாபாரதம் போன்றவை இயற்றப்பட்ட புண்ய பூமி. வியாஸர், சுகப் பிரம்மம் போன்ற ரிஷிகள் ப்ரவசனம் செய்த ஸ்தலம்.

ஶ்ருதி ஸ்ம்ருதீர் மமை வாக்யா யஸ்தாமுல்லங்க்4ய வர்த்ததே ।
ஆஜ்ஞாச்சே2தீ3 மம த்ரோஹீ மத்3ப4க்தோபி ந வைஷ்ணவ: ॥

என்று ஸ்ரீவிஷ்ணு தர்மத்தில் பகவானே "வேதங்கள், ஸ்மிருதிகள் எல்லாம் என்னுடைய ஆணை. அதை மீறி நடப்பவன் என் கட்டளையை மீறியவான் ஆவான் அவன் எனக்கு த்ரோஹம் செய்தவன் ஆவன். அவன் வைஷ்ணவன் ஆனாலும் என் பக்தனில்லை" என்கிறான்.

அத2 சேத்த்வமஹங்காராந் ந ஶ்ரோஷ்யஸி விநங்க்ஷ்யஸி ॥

என்று பகவத்கீதையில் (18-56) பகவான் கிருஷ்ணன் சொல்லுகிறார். அர்ச்சுனா! அஹங்காரத்தால் ஒருக்கால் என்னுடைய சொற்களைக் கேட்காவிட்டால் நீ அழிந்து போவாய் என்றார் (சொற்களைக் கேட்டு அதன்படி நடக்காவிட்டால் என்று அர்த்தம்).

அநாதியான வேதங்களை ரிஷிகள் கண்டெடுத்து அதன் மூலம் பகவானைக் கண்டார்கள். உயர்ந்த வேதங்கள்தான் ப்ரமாணம் என்று எல்லோருக்கும் உபதேசித்து அந்த வேத வாக்யங்களுக்கு வியாக்யானம் அருளிச் செய்தார்கள். இதை எல்லாம் அறிந்து கொள்ளாமல் நான் வாழ்க்கையை வீணாக்கினேன்.

அபராத4 ஸஹஸ்ரப4ாஜநம் பதிதம் பீ4மபவார்ணவோத3ரே ।
அக3திம் ஶரணாக3தம் ஹரே க்ருபயா கேவலமாத்மஸாத் குரு ॥

என்று ஸ்வாமி ஆளவந்தாரும் ஸ்தோத்ர ரத்னத்தில் (48) ஸாதித்த மாதிரி கணக்கற்ற குற்றங்களுக்கு இருப்பிடம் நான். பயங்கரமான ஸம்ஸாரக் கடலில் முழ்கி இருக்கிறேன். உன்னைத்தவிர வேறு கதி எனக்கு இல்லை

- நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன்
- என்றேனும் இரந்தார்க்கு இனிதாக உரைத்தறியேன்
- நலம் தான் ஒன்றுமிலேன் நல்லதார் அறம் செய்துமிலேன்
- எப்பாவம் பலவும் இவையே செய்து இளைந்து ஒழிந்தேன்
- தெரியேன் பாலகனாய்ப் பலத்தீமைகள் செய்துமிட்டேன்
- பற்றேல் ஒன்றுமிலேன் பாவமே செய்து பாவியானேன்

என்றெல்லாம் பெரிய திருமொழியில் (1-9) திருமங்கையாழ்வார் சேதனர்கள் செய்யும் குற்றங்களை வரிசையாக அடுக்கிக் கொண்டே போகிறார். அவற்றின் தண்டனைக்கு எல்லாம் பயந்து நீயே கதி என்று ஓடி இங்கு வந்தேன்.

கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால் படுவதோர் கொடுமிறைக்கு அஞ்சி
நடுங்கி நான் வந்து உன் திருவடி அடைந்தேன் நைமிசாரணியத்துள் எந்தாய்!

பெரிய திருமொழியில் (1-6-5) திருமங்கையாழ்வார் கூறுகிறார். நான் எத்தனையோ பாபங்கள் செய்திருக்கிறேன். அப்பொழுது நான் அறியவில்லை. இன்று அந்த பாங்களுக்கு தண்டனை யமலோகத்தில் அவர்கள் படுத்தும் பாட்டை நினத்து பயந்து வேர்த்து விறுவிறுத்து, ஓடி வந்து உன் திருவடிகளை இன்று கெட்டியாகப் பற்றிக் கொண்டேன் என்கிறார்.

இந்த ஸ்தலத்திற்கு வந்து நல்ல அறிவைப் பெற்று மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடையலாம் என்ற விரும்புகிறேன். என்னுடைய உடல் செய்பவை தர்மத்திற்கு விரோதமன காரியங்கள். அதைத் தடுத்து நிறுத்தி மனதை ஒரு நிலைப்படுத்த வழி தெரியாமல் தவிக்கிறேன். உன்னை சரணகதி அடைந்தவன் என்று சொல்லிக் கொள்வனுமாய் இருக்கும் என்னை உன்னுடைய அருளால் உனதாக்கிக் கொள்வாய்.

பரந்த சிந்தை ஒன்றை நின்று நின்ன பாத பங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்கக் வேண்டுமே

திருச்சந்த விருத்தத்தில் (101) திருமழிசையாழ்வார் வேண்டுகிறார். பகவானே நீர் எனக்கு நிலையான நன்மையைத் தர வேண்டும் என்று உன் உள்ளத்தில் நினத்தால் என் மனம் கண்ட இடங்களில் சென்று அலையாது. வேறு ஒன்று நினைக்காதபடி உம் திருவடியையே சிந்திக்க நீர்தான் அருள வேண்டும். ஸ்ரீஹரி பெருமானே ஆசாரியர்கள் காட்டி கொடுத்த வழியிலே உன்னை வந்து அடைந்தேன். நீ தான் எனக்கு அடைக்கலம்.

திருமங்கையாழ்வார் மட்டும் ஒரு பதிகம் பாடி மங்களாசஸனம் செய்துள்ளார். ஒவ்வொரு பாசுரத்திலும் நைமிசாராணியத்துள் எந்தாய் என்று பாடியே முடிக்கிறார்.

ஸ்ரீ ஹரீலக்ஷ்மீ நாயிக ஸமேத ஸ்ரீ தேவராஜ பரப்ரஹ்மணே நம:

67. திருப்பிருதி (ஜோஷிமட் - நந்தப்ரயாக்)

குருதி சேர அரக்கன் தலை பத்தும் அறுத்தவன்
கருதிய விரதத்தைக் கொண்டு அடை நெஞ்சே
சுருதியில் சொன்ன அரசனும் பரிமளவல்லி கண்ட
பிருதியில் பள்ளி கொள்ளும் பரமபுருஷனும் ஒன்றே

ஜோஷிமட் என்னும் இந்த திவ்ய தேஸம் ஹ்ருஷிகேஸத்திலிருந்து பதரியாஸ்ரமம் செல்லும் வழியில் உள்ளது. பகவான் பரம புருஷன் என்ற திருநாமத்துடன் ஸயன திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறார். பரிமளவல்லி நாச்சியார் என்று தாயாருக்குத் திருநாமம்.

அகி2ல ஜக3த்3தி4த புஜ பு3ல வர பு3ல து3ஶ லபந லபந து3ஶக லவந

என்று ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமாஹாவீர வைபவத்தில் ஸாதித்தார். "உலகத்தில் உள்ள எல்லா மக்களைவிட அதிகமான தோள் வலிமையும், வரத்தின் வலிமையும் உடைய தஸ முகனாகிய ராவணனின் பத்து தலைகளையும் அறுத்த ஸ்ரீ ராமன்" என்று வீவரித்தார்.,

மலை கொண்டு நீர் அலை கட்டி
மதில் நீள் இலங்கை வாள் அரக்கர்
தலைவன் தலை பத்தும் அறுத்து உகந்தான்

என்று பெரிய திருமொழியில் (1-5-1) திருமங்கைமன்னன் ராவண வத்தை பாடுகிறார்.

தானே தன் திருவாக்கிலிருந்து சொன்ன "ஸக்ருதேவ ப்ரபன்னாய" என்ற சரம ஸ்லோகத்தில் தன்னை அண்டியவர்களை ரக்ஷிப்பதே தன்னுடைய விரதம் என்று கூறிய மஹாப்பிரபு ஸ்ரீராமச்சந்திரன். "ஸக்ருத் பரபன்ன ஜந ஸம்ரக்ஷண தீக்ஷிதன்" என்றார் ஸ்வாமி தேசிகன்.

ஒருக்காலே சரணாக அடைகின்றாற்கும்
  உனக்கு அடிமை ஆகின்றேன் என்கின்றாற்கும்
அருக்காதே அனைவருக்கும் அனைவராலும்
  அஞ்சேல் என்று அருள் கொடுப்பவன் இதுதான் ஓதும்
இருக்காலும் எழில் முனிவர் நினைவினாலும்
  இவை அறிவார் செயலுடன் என் இசைவினாலும்
நெருக்காத நீள்விரதம் எனக்கு ஒன்று என்னும்
  நெறி உரைத்தார் நிலை உணர்ந்து நிலை பெற்றோமே

என்று ஸ்வாமி தேசிகன் அமிருத ஸ்வாதினியில் (16) இராமபிரான் செய்த அபய ப்ரதாநத்தை அப்படியே தமிழாக்கித் தந்திருக்கிறார்.

இதன் கருத்தை உயர்ந்த ஆசாரியர்கள் மூலமாக அறிந்து அந்த ராமபிரானே நமக்கு புகலிடம் என்று உணர்ந்து அடைக்கலமாய் வந்திருக்கிறோம். வேதங்களில் சொன்ன பரமாத்மாவும், பரிமள வல்லி நாச்சியார் உடைமையான பரமபுருஷன் என்ற திருநாமத்துடன் ஸேவை ஸாதிக்கும் எம்பெருமானும் ஒன்றே என்பதை இங்கே கண்டு கொள்கிறோம்.

திக்ஷிமவிநீதம் நிர்த்தயம் மாமலஜ்ஜம்
பரமபுருஷயோஹம் யோகிவர்யாக்ர கண்யை:
விதிஸிவ ஸநகாத்யைர்த்யாது மத்யந்ததூரம்
தவ பரிஜந பாவம் காமயே காமவ்ருத்த:

என்று ஸ்வாமி ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் (47) பரமபுருஷன் ஆன பரவாசுதேவனை எல்லோரையும் விட உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பதாக போற்றி மகிழ்கிறார். பரம புருஷன் என்ற சொல் இந்த ஸ்தல பகவானைக் குறிக்கிறது என்று கொள்ளலாம். இதே கருத்தை ஸ்வாமி நம்மாழ்வாரும் ஸாதித்துள்ளார்.

அடியேன் சிறிய ஞானத்தன் அறிதல் யார்க்கும் அடியானை
கடிசேர் தண்ணந்துழாய்க் கண்ணி புனைந்தான் தன்னைக் கண்ணனை
செடியார்க்கை அடியாரைச் சேர்தல் தீர்க்கும் திருமாலை
அடியேன் காண்பான் அலற்றுவன் இதனில் மிக்கோர் அயர்வுண்டே?

என்று திருவாய்மொழியில் (1-5-7) நம்மாழ்வார் தன்னை அறிவில்லாத ஸம்ஸாரியாக கூறிக் கொள்கிறார். "ஞானம் சிறிதும் இல்லாதவன் நான். ஆனால் பகவானைக் காண வேண்டும் என்ற ஆசையால் தவிக்கிறேன். இதைவிட மடத்தனம் வேறு ஏதாவது உண்டா? மேன்மையிற் மேன்மையாய் விளங்கும் அவனை ஞானிகளும் தங்கள் சக்தியால் காண முடியாதபடி அரியன் அவன். அடியவர்களின் சரீர ஸம்பந்தத்தை நீக்கும் துளஸீ மாலை அணிந்த திருமகள் கேள்வனை காண வேண்டும் என்றே நான் அலற்றுகிறேன்" என்றார்.

ஆக வட மொழி வேதங்கள், திராவிட வேதங்கள், ஆசாரியர் ஸ்ரீசூக்திகள் இவை யாவையும் காட்டக்கூடிய அரசர்களுக்கு அரசனாகிய பரம புருஷன் ஸ்ரீமந் நாராயணன் இங்கே வந்து ஸயனித்து உள்ளான். அவனே பரிமளவல்லி என்னும் இந்த திவ்ய தேஸத்தின் தாயாரின் நாயகனாய் உள்ளான்.

ஓதி ஆயிரம் நாமங்கள் உணர்ந்தவருக்கு உறு துயர் அடையாமல்
ஏதும் இன்றி நின்று அருளும் நம் பெருந்தகை இருந்த நல் இமயத்து

என்று பெரிய திருமொழியில் (1-2-9) திருமங்கையாழ்வார் இந்த எம்பெருமானை பரமன் என்பதை ஆயிரம் நாமம், பெருந்தகை என்று கூறி பிரிதி சென்று அடைந்தோர் துயரம் நீங்கும் என்றார்.

ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் மட்டுமே பத்து பாசுரங்களால் இந்த திவ்ய தேஸ எம்பெருமானை மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ஸ்ரீ பரிமளவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ பரமபுருஷாய பரப்ரஹ்மணே நம:

68. திருக்கண்டமென்னும் கடிநகர் (தேவப்ரயாகை)

பாதம் தொட்டு விளங்கும் கங்கைதனின் புனிதமும்
வேதம் துவக்கும் முவெழுத்தும் உன்னடியால் சிறக்கும்
மோதும் வினையும் ஓழியும் கண்டமெனும் கடிநகரில்
ஏதுமின்றி அடைந்தேன் புருஷோத்தமா நீலமேகனே!

தேவப் ப்ரயாகை என்னும் இந்த திவ்ய தேஸம் பதரியாஸ்ரமம் செல்லும் வழியில் உள்ளது. நீலமேகப் பெருமான், புருஷோத்தமன் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு பண்டரீகவல்லி என்று திருநாமம்.

கங்கை பூவுலகிலேயே மிகவும் புனிதமான நதி என்று புகழப்படுகிறது. அந்த கங்கையும் புனித தன்மையை பகவான் திருவிக்கிரமனின் பாதங்களை கழுவியதால் பெற்றது அல்லவோ?

குறை கொண்டு நான்முகன் குண்டிகை நீர் பெய்து
மறை கொண்ட மந்திரத்தால் வாழ்த்தி - கறை கொண்ட
கண்டத்தான் சென்னி மேல் ஏறக் கழுவினான்
அண்டத்தான் சேவடியை ஆங்கு

நான்முகன் திருவந்தாதியில் (9) திருமழிசையாழ்வார் திரிவிக்கிரமனின் திருவடி பிரம்மலோகம் வரை நீண்டதும், பிரம்மா தான் செய்த தவம் பலித்ததே என்று வேதங்களை ஓதிக் கொண்டே கமண்டலு வழியாக தீர்த்தத்தை சேர்த்து நீலகண்டனின் தலையில் ஸ்ரீபாத தீர்த்தமாக விழும்படி பகவானின் திருவடிகளை விளக்கினான் என்றார். அதையே

ப4க்தோபரோத4 ஸஹ பாத3 ஸரோஜதஸ்தே
மந்த3ாகிநீ விக3ளிதா மகரந்த3 து4ரா ।
ஸத்3யஸ் த்ரிவர்க3ம் அபவர்க3மபி க்ஷரந்தீ
புண்யா ப3பூ4வ புர ஶாஸந மௌளி மாலா॥

என்று ஸ்வாமி தேசிகனும் தேஹளீச ஸ்துதியில் (13) உன்னுடைய திருவடித் தாமரையிலிருந்து பெருகிய ஆகாய கங்கை என்னும் தேன்மாரியான நதி தர்மம், அர்த்தம், காமம் என்கிற முன்று புருஷார்த்தங்களையும் அளிக்கவல்லது. அந்த நதியே சிவனின் ஜடையை அலங்கரிக்கிறது என்றார்.

"ஏஷாது தோஷ ரஹிதா மஹிதா புராணீ"

வேதங்கள் ஒரு தோஷமும் இல்லாதது என்பது கூரத்தாழ்வான் வாக்கு. முவழுத்தாகிற ப்ரணவத்துடன் துவங்கும் வேதங்களும் உயர்ந்த ப்ரமாணமாய் திகழ்ந்து எம்பெருமானே உன்னைக் காட்டிக் கொடுக்கிறது. வேதங்கள் அந்த உயர்ந்த

ஸ்தானத்தை அடைவதே எம்பெருமானே உன்னுடைய திருவடிகளை அலங்கரிப்பதால்தானே

காரணமும் காவலனும் ஆகி என்றும்
கமலையுடன் பிரியாத நாதனான
நாரணனுக்கு அடியேன் நான் அடிமை பூண்ட
நல்லடியார்க்கு அல்லால் மற்று ஒருவருக்கு அல்லே
ஆரணங்கள் கொண்டு அகமும் புறமும் கண்டால்
அறிவாகி அறிவதுமாய் அறு நான்கு அன்றிச்
சீர் அணிந்த சுடர் போலத் திகழ்ந்து நின்றேன்
சிலை விசயன் தேர் அனைய சிறு வேதத்தே

என்று அமிருத ஸ்வாதினியில் (2) ஸ்வாமி தேசிகன் ப்ரணவத்தின் அர்த்தத்தை ஸாதிக்கிறார். ஜீவனாகிய நான் எம்பெருமானுக்கும் பாகவதர்களுக்கும் அடியவன். எம்பெருமானே பரதத்துவம். மற்றைய அசேதனங்கள், சேதனங்களைவிட வேறுபட்டவன். இதுதான் வேதாந்தங்கள் கண்ட அருச்சுனன் தேர் போன்று நிற்கும் ப்ரணவத்தின் ஸாரம்

ஸகல வேதத்தின் ஸாரமாய் நிற்பது ப்ரணவம். அதன் பொருளாய் நிற்கும் பரம புருஷன் நம்முடைய பாவக் குவியல்களை எல்லாம் விலக்கி நம்முடைய பிறப்பு இறப்பு சுழல்களிலிருந்து காப்பாற்றுகிறான். அந்த பகவானே இங்கு கண்டம் என்னும் கடிநகரில் எழுந்தருளியிருந்து எல்லோருக்கும் அருள் புரிகிறான்.

லகிஷ்ட₂ ஸ்ரிக₂ ஸங்க₃தை: ஸ்வக்ருத கர்மநிர்வர்திதை:
களத்ர ஸ்ரித ஸோத₃ர அநுசர பந்து ஸம்ப₃ந்தி₄பி₄: ।
த₄ந ப்ரப்ருதிகை: அபி ப்ரசுர பீ₄தி பே₄த₃ உத்தரை:
ந பி₃ப்₄ரதி த்₄ருதிம் ப்ரபே₄ா த்வத₃நுபூ₄தி பே₄காக₃ார்தி₂ந: ॥

என்று ஸ்ரீ அபீதிஸ்தவத்தில் (12) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். அற்ப சுகத்தை தருபவையும், அவரவர் கர்மத்தினால் வந்தவையும் ஆகிய மனைவி, மக்கள், உடன் பிறந்தோர், வேலைக்காரன், உற்றார், உறவினர்களும் செல்வமும் மிகுந்த பயத்தை கொடுப்பவை. பிரபு உன்னை அனுபவித்தல் என்னும் மோக்ஷ ஆனந்தத்தை விரும்புவர்கள், இவற்றில் மகிழ்ச்சியை பெற மாட்டார்கள் என்றார்.

"நான்", "எனது" என்கிற அகங்கார மமகாரங்களை விட்டு ஒழித்து, மற்றவர்களாலும், செல்வத்தாலும் பயன் இல்லை என்பதை ஆறிந்து ஜீவாத்ம ஸ்வரூபத்தை உணர்ந்து அவனையே அடைவதற்காகவே இங்கே எழுந்தருளியுள்ளான்.

பெரியாழ்வார் பதினொன்று பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். பத்து பாசுரங்களிலும் கண்டமென்னும் கடி நகரே என்றே முடிக்கிறார். மூன்றெழுத்தனை மூன்றெழுத்ததனால் என்று ப்ரணவத்தால் சொல்லப்படுகிறவன் இங்குள்ள புருஷோத்தமனே என்று விளக்குகிறார்.

ஸ்ரீ புண்டரீகவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ நீலமேக பரப்ரஹ்மணே நம:

69. திருவதரியாஸ்ரமம் (பத்ரி நாத்)

தன்னையே குருவாக்கித் தனக்குத்தானே ஓதிவித்த நல் மந்திரத்தால்
உன்னையே அறிந்தேன் இன்று நெஞ்சில் அஞ்சு வைத்து நரநாரணா
நின்னையே சரண்பற்றி நலம் வேண்டினேன் இலந்தை மரத்தடியில்
என்னையே காப்பதற்கு அமர்ந்த நான்கு கரத்து பதரிநாராயணனே

திருவதரியாஸ்ரமம் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் பதரி நாராயணனாக வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். தாயாருக்கு அரவிந்தவல்லி என்று திருநாமம்.

ரஹஸ்யத்ரயம் என்ற சிறப்பு பெற்ற மூன்று ரகசியங்களின் முதல் ஸ்தானம் வகிக்கும் திருமந்திரம் என்னும் திருவஷ்டாக்ஷரத்தின் அவதார ஸ்தலம். பகவான் தன்னையே குருவாகவும், தன்னையே சீடனாகவும் ஆக்கிக் கொண்டு தனக்குத் தானே திருமந்திரத்தை உபதேசித்த ஸ்தலம்.

ஹே மர்த்யா: பரமம் ஹிதம் ஶ்ருணு வோ வக்ஷ்யாமி ஸங்க்ஷேபத:
ஸம்ஸாரார்ணவம் ஆபதூ3ர்மி ப3ஹுலம் ஸம்யக் பரவிஶ்ய ஸ்தி2தா: ।
நாநாஜ்ஞாநம் அபாஸ்ய சேதஸி நமோ நாராயணாய இதி அமும்
மந்த்ரம் ஸப்ரணவம் ப்ரணமஸஹிதம் ப்ரவர்தயத்4வம் முஹு: ॥

என்று ஸ்ரீமுகுந்த3மாலாவில் (18) குலசேகராழ்வார் அஷ்டாக்ஷர மந்தர ஜபம் செய்ய வேண்டுகிறார். ஆபத்துக்கள் பல நிரம்பிய ஸம்ஸாரக் கடலில் மூழ்கிய சேதனர்களே, உமக்கு நலத்தைத் தரும் மந்திரம் ஒன்றை சொல்லுகிறேன். கேட்பீர்! வேறு பல விஷயங்களை அறிவதைவிட்டு ப்ரணவத்துடன் கூடிய திருமந்திரத்தை மனத்தில் ஜபம் செய்யுங்கள் என்றார்.

ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வு என்னும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

என்று பெரிய திருமொழியில் (1-1-1) திருமங்கையாழ்வார் திருமந்திரத்தை அறிந்து கொண்ட நிலையை விவரிக்கிறார்.

எங்கானும் ஈதொப்பதோர் மாயம் உண்டே?
நரநாரணா உலகத்து அற நூல்
சிங்காமை வீரித்தவன் எம்பெருமான்

என்று பெரிய திருமொழியில் (10-6-1) திருமங்கையாழ்வார் நர நாராயணனாக பகவான் அவதரித்து ஸகல வேதங்களின் ஸாரமான திருவஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்தான். அத்தனை வல்லமை உடையவன் ஆய்ச்சியர் வெண்ணெய் திருடி

உண்ணும் எளிமையான கண்ணனாக அவதரித்தது என்ன விநோதம் என்று ஆச்சரியப்படுகிறார்.

மேல் எழுந்து அது ஓர் வாயு கிளர்ந்து
மேல் மிடற்றினை உள் எழ வாங்கி
காலும் கையும் விதிர்விதிர்த்து எறிக்
கண் உறக்கம் ஆவதன் முன்னம்
முலம் ஆகிய ஒற்றை எழுத்தை
முன்று மாத்திரை உள் எழ வாங்கி
வேலை வண்ணனை மேவுதீர் ஆகில்
விண் அகத்தினில் மேவலும் ஆமே

என்று பெரியாழ்வார் திருமொழியில் (4-5-4) திருமந்திரம் ஆரம்பிக்கும் ப்ரணவத்தை எப்பொழுது, எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதை தெளிவாக விளக்குகிறார்.

ஓமித்யேவ த்4யாயதா2த்மாநம்

என்று முண்டகோபனிஷத் (2-2-6) பரமாத்மாவை "ஓம்" என்றே த்யானம் செய்யுங்கள் என்றது.

ஆசாரியர்கள் "திருமந்திரத்தில் பிறந்து த்வயத்தில் வளர்ந்து என்று சேதனர்களின் ஜீவாத்ம ஸ்வரூபத்தை அஷ்டாக்ஷரத்தின் முலம்தான் அறிய வேண்டும் என்பதை உணர்த்துகிறார்கள். அர்த்த பஞ்சகம் என்று சொல்லப் படும் ஐந்து தத்துவங்களையும் நன்கு அறிந்து மனத்தில் கொண்டு நர நாரணாய் ஸேவை ஸாதிக்கும் எம்பெருமானே உன்னை அடைந்தேன்.

பீளை சோரக் கண் இடுங்கிப் பித்தெழ முத்திருமி
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் தள்ளி நடவாமுன்
காளையாகிக் கன்று மேய்த்துக் குன்று எடுத்து அன்று நின்றான்
வாளை பாயும் தண்ட சூழ் பதரி வணங்குதுமே

என்று திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (1-3-4) உடல் தளர்வதற்குமுன் பதரி சென்று பகவானை அடைவீர்கள் என்கிறார். இலந்தை மரத்தடியில் வீற்றிருக்கும் எம்பெருமானே உன்னையே சரணாகக் கொண்டு அந்தமில்லா பேரின்பம், பெருநலம் எனப்படும் பரபதத்தையே வேண்டி சரணமாய் அடைகிறேன்.

பெரியாழ்வார் 1 பாசுரமும், திருமங்கையாழ்வார் 21 பாசுரங்களும் பாடியுள்ளார்கள். பெரியாழ்வார் "இடமுடை வதரி" என்ற ஒரே ஒரு சொல் மட்டுமே ஸாதித்துள்ளார் திருமங்கை மன்னன் "வதரி வணங்குதுமே", "வதரியாச் சிரமத்துள்ளானே" என்று ஒவ்வொரு பாசுர முடிவிலும் பாடி மகிழ்ந்துள்ளார்.

ஸ்ரீ அரவிந்தவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ பதரீநாராயண பரப்ரஹ்மணே நம:

70. திருசாளக்கிராமம்

கண்டகி நதிக்கரையில் கண்டு எடுத்த ஸ்ரீமூர்த்தி
தொண்டு செய்வதற்கே துலையிலா சாளக்கிராமமே
ஒரு கையில் ஏந்தி உயரே ஒருகையால் நீர் சேர்த்து
ஒருமுறை உட்கொண்டான் மறுபிறவி கண்டானில்லையே

இந்த திவ்ய தேஸம் நேபாள நாட்டில் இருக்கிறது. மூலவர் ஸ்ரீமூர்த்தி என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார்.

கண்டகீ நதிக்கரையில்தான் பகவத் திருவாரதனத்திற்கு மிகவும் உயர்ந்ததாய் போற்றப்படும் சாளக்கிராம மூர்த்திகள் கிடைக்கின்றன. இல்லங்களில் நித்ய திருவாரதனத்திற்கு உகந்த சாளக்கிரமத்தை ஒரு கையில் உயரே தூக்கி வைத்துக் கொண்டு மற்றொரு கையால் தீர்த்தத்தை சேர்த்து அந்த சாளக்கிராம தீர்த்தத்தை எவன் ஒருவன் உட்கொள்கிறானோ அவனுக்கு மறுபிறப்பு என்பது கிடையாது என்கிறது வேதம்.

தத3ஸ்ய ப்ரியமபி4 பாதே3 அஶ்யாம் । நரோ யத்ர தே3வயவோ மத3ந்தி ।
உருக்ரமஸ்ய ஸ ஹி ப3ந்து4ரித்தா। விஷ்ணோ: பதே3 பரமே மத்4வ உத்ஸ: ॥

என்று யஜுர் வேதம் (2-4-6) கூறுகிறது. இனிதான தெய்வீக கங்கையின் தீர்த்தத்தில் எவன் சந்தோஷிக்கிறானோ அவன் இந்த பகவானுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை அருந்துவானாக! அவன் திரிவிக்கிரமனுக்கு உறவு ஆகிறான். இப்படி விஷ்ணுவின் திவ்யமான திருவடிகளிலிருந்து அமுத வெள்ளம் உண்டாகிறது என்றது.

இல்லத்தில் பகவத் ஆராதனைக்கு மிக உன்னதமானது சாளக்ராம மூர்த்தியே. ஆராதிக்கையில் அதற்கு ப்ரதிஷ்டையோ கடுமையான முறைகளோ அதற்கான தீக்ஷை பெற வேண்டிய நிர்பந்தமோ வேறு நியதிகளோ தேவையில்லை. விக்ரஹ ஆராதனை போலன்றி முறையில் குறை நேர்ந்தால் தோஷங்களும் மிகவும் சொற்பம்..

மேவித் தொழுது உய்ம்மினீர்கள் வேதப் புனித இருக்கை
நாவிற் கொண்டு அச்சுதன் தன்னை ஞானவிதி பிழையாமே
பூவிற் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து
மேவித் தொழும் அடியாரும் பகவரும் மிக்கது உலகே

திருவாய்மொழியில் (5-2-9) நம்மாழ்வார் கூறுகிறார். வேதத்தில் புனிதமான புருஷசூக்த நாராயணானுவாகாதிகளாக திகழும் ரிக் சாகைகளை நாவினால் சொல்லி பூ, தூபம், தீபம், சந்தனம், நல் தீர்த்தம் கொண்டு பூஜிக்கும் அடியார்களும் (பகவானுக்கு பணி செய்பவர்) பகவர்களும் (பாகவதர்கள்) உயர்ந்தவர்கள் என்றார். வேதங்களை நாவில் கொண்டு என்றுதான் சொன்னது அவைகளின் நுட்பமான பொருள் தெரியாமல் இருந்தாலும் அதைக் கொண்டு பகவானை ஆராதிக்கலாம் என்று பொருள்பட.

சாளக்கிராமம் என்பது எளிதில் எல்லோராலும் சென்று ஸேவிக்கக்கூடிய க்ஷேத்திரம் அன்று. சென்று ஸேவிக்கமுடியாதவர்கள் அங்குள்ள பகவானை இங்கே இருந்த இடத்திலிருந்தே தியானம் பண்ணி அடையலாம் என்பதை

மார்வம் என்பது ஓர் கோவில் அமைத்து மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் என்பதோர் பூ இட வல்லார்க்கு அரவ தண்டத்தில் உய்யல் ஆமாமே

என்றார் பெரியாழ்வார் திருமொழியில் (4-5-3) பகவானை எளிய முறையில் ஸ்தோத்திரம் பண்ண காட்டிக் கொடுத்தார்.

கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கு இனியன கண்டோம்
தொண்டீர் எல்லீரும் வாரீர் தொழுது தொழுது ஆர்த்து

என்று திருவாய்மொழி (5-2-2)யிலும்

பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாது ஒன்றும் இல்லை

என்று திருவாய்மொழியிலும் (5-2-1) நம்மாழ்வார் ஸாதித்த முறையில் பகவானை இல்லந்தோறும் சாளக்கிராம ஆராதனை செய்து அவனக் கண்டு களித்து வான் வீடு அடையும் வழியை முன்னோர்கள் நமக்கு தந்திருக்கிறார்கள். அதனால் ஸ்ரீ வைஷ்ணவ கூட்டம் பூவுலகில் பெருகி, நரகத்து இடம் எல்லாம் வருவார் யாருமின்றி காலியானது

இதி விவித₄ மஜஸ்ய யஸ்ய ரூபம் ப்ரக்ருதி பராத்ம மயம் ஸநாதநஸ்ய ।
ப்ரதி₃ஶது ப₄க₃வாந் அஶேஷ பும்ஸாம் ஹரீரபஜந்ம ஜராதி₃காம் ஸ ஸித்₃தி₄ம் ॥

ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (6-8-64) வரும் கடைசி ஸ்லோகம். பிறப்பற்றவனும். மிகப் பழமையானவனுமான எந்த விஷ்ணுவிற்கு பலவிதமான ப்ரக்ருதி என்ன? தி₃வ்ய மங்க₃ள விக்₃ரஹம் என்ன? ஆத்ம ஸ்வரூபம் என்ன? இவை இந்த மாதிரியான ஶரீரங்களாய் இருக்கின்றவோ அந்த பகவான் ஹரி எல்லா மனிதர்களுக்கும் பிறப்பு, மூப்பு முதலியவற்றை நீக்கும் மோக்ஷ பராப்தியை அருளட்டும்! என்றார் பராசரர்..

பாலைக் கறந்து அடுப்பு ஏற வைத்துப் பல்வளையாள் என் மகள் இருப்ப
மேலகத்தே நெருப்பு வேண்டிச்சென்று இறைப்பொழுது அங்கே பேசிநின்றேன்
சாளாக்கிராமம் உடை நம்பீ சாய்ந்து பருகிட்டுப் போந்து நின்றான்
ஆலைக் கரும்பு இன்மொழி அனைய அசோதை நங்காய் உன் மகனைக்கூவாய்

என்று பெரியாழ்வார் திருமொழியில் (2-9-5) கண்ணானகவே அனுபவிக்கிறார். சாளக்கிராமம் உள்ள வீட்டில் பகவானுக்கு அமுது செய்யாவிட்டாலும் தானே அமுது செய்து அருளும் உயர்ந்த குணசீலன் என்பது பாசுரத்தின் உள்ளர்த்தம்.

பெரியாழ்வார் இரண்டு பாசுரங்களும் திருமங்கையாழ்வார் பத்து பாசுரங்களும் பாடியுள்ளார்கள்.

ஸ்ரீ ஸ்ரீதேவீ ஸமேத ஸ்ரீ ஸ்ரீமூர்த்தி பரப்ரஹ்மணே நம:

71. திரு வட முதுரை (மதுரா)

வட மதுரை வந்தவன் இன்று வங்கக்கடல் பள்ளி கொண்ட வாசுதேவனே!
இடக்கை வலக்கை அறியா இடையர் இணைந்த பிருந்தாவன மோகனமே!
தடத்தை குறைத்து இரு கை மறைத்து இருக்கையுடன் இறங்கிய இறையே
குடத்தில் ஆடி குன்றை ஏந்திய கோவர்தன நேசனே! கோபாலகிருஷ்ணனே!

வட மதுரை, பிருந்தாவனம், கோவர்த்தனம் என்ற மூன்று இடங்களும் சேர்த்து ஒரே திவ்யதேஸமாக ஆழ்வார்கள் கணக்கில் காணப்படுகிறது. கோவர்த்தன நேசன், பால கிருஷ்ணன் என்ற திரு நாமங்களுடன் பகவான் இங்கே கிருஷ்ண ஜன்ம பூமியில் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார்.

மதுரா நாம நகரீ புண்யா பாபஹரீ ஶுபா ।
யஸ்யாம் ஜாதோ ஜகந்நாதஸ் ஸாக்ஷாத் விஷ்ணுஸ் ஸநாதந: ॥

என்பது ப்ராசீனமான வசனம். எந்த நகரத்தில் ஆதி தேவனும், ஜகந்நாதனுமாகிய விஷ்ணு அவதரித்து அருளினானோ அந்த மதுரை என்னும் நகரம் பாபத்தை போக்கும். அதுவே அந்த பகவானைப் பெறுவதற்கு உபாயமாய் இருக்கிறது என்றது.

ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந: ।
நாக பர்யங்க முத்ருஸ்ருஜ்ய ஹ்யகதோ மதுராம் புரீம் ॥

என்று ஹரி வம்ஶத்தில் கூறியபடி பகவான் பாற்கடலிருந்து இறங்கி வந்து இங்கே கோவர்தனத்தில் ஆயர்பாடி மக்கள் நடுவே கண்ணனாக அவதாரம் செய்துள்ளான். வேதம் அறிந்த ப்ராம்மணர்களும் ஆத்ம ஸ்வரூபம் அறிந்த பெரியோர்களும் "கிருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்று பகவான் கிருஷ்ணனை பழமையான தர்மமாக அறிந்தார்கள்.

ப்ருந்தாவநம் புகவதா க்ருஷ்ணேந அக்லிஷ்ட கர்மணா ।
ஶுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திம் அபீப்ஸதா ॥

என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (5-6-28) கிருஷ்ணன் மங்களமான குணங்களை உடையவன். அரிய காரியங்களை சாதிப்பவன். பசுக்களின் வ்ருத்தியை விரும்புபவன். அவனால் பிருந்தாவனமானது ஶுபமான மனத்தினால் நினைக்கப்பட்டது என்றார்.

இங்குள்ள இடையர்களோ ஞான வாசனையே அறியாதவர்கள். வலது கை இடது கை என்ற வித்தியாசம் கூட தெரியாத அளவு அறிவில் குறைந்தவர்கள். ஆனால் கண்ணனிடத்தில் மட்டும் பக்தியும், ப்ரீதியும் கொண்டு அவனனையே சுற்றி சுற்றி வருபவர்கள். அவர்களுக்கு கண்ணனோ பிருந்தாவனத்தில் ஒடி விளையாடும் ஒரு மோகினி போல் காட்சி தருகிறான்.

ஒருமை மனத்தினுள் வைத்து உள்ளம் குழைந்து எழுந்து ஆடி
பெருமையும் நாணும் தவிர்த்து பிதற்றுமின் பேதமை தீர்ந்தே

என்று திருவாய்மொழியில் (3-5-10) நம்மாழ்வார் பகவானை மனம் கரைந்து எழுந்து ஆடிப் பாடுங்கள் என வேண்டுகிறார். பக்தி முற்றி, உங்களுடைய பெருமையை நினைக்காது வெட்கம் கொள்ளாது பகவான் பெயரைச் சொல்லி தன்னை மறந்து ஆடிப்பாடுவதே உயர்ந்த புருஷார்த்தம் என்றார். அதை இந்த திவ்ய தேஸத்தில் காணலாம்.

உபஸம்ஹர ஸர்வாத்மந்! ரூபமேதச் சதுர்பு4ஜம் ।
ஜாநாது மாऽவதாரம் தே கம்ஸோऽயம் தி3ஜந்மஜ: ॥

ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (5-3-11) பராஸர மஹரிஷி கூறுகிறார். கண்ணன் பிறந்த போது பகவத் ஸ்வரூபமாய் நான்கு கைகளுடன் பிறக்க, அவனுடைய பெற்றோர்களான வசுதேவரும், தேவகியும் கண்ணனிடம் கைகூப்பி வேண்டி "ஸர்வாந்தர்யாமியே நான்கு திருக்கைகளையுடைய உம்முடைய ஸ்வரூபத்தைக் மறைத்துக் கொள்வாயாக! உம்முடைய அவதாரத்தை கம்ஸன் அறிய வேண்டாம். அதனால் உன்னை சாதரண மனித ஜாதியில் உள்ள குழந்தைபோல் மாற்றிக் கொள்ள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

பகவானும் தன்னுடைய நான்கு திருக்கைகளை குறைத்து இரண்டு கைகளுடன் உள்ள சிறிய குழந்தையாய் தன்னை மாற்றிக் கொண்டான். இருக்கையுடன் இறங்கிய இறையே என்பது தன்னுடைய இருக்கையான ஆதி சேஷனுடன் அதாவது பலராமனுடன் அவதாரம் செய்தான் என்றும் கொள்ளலாம்.

கண்ணன் செய்த பாலலீலைகளுக்கு கணக்கு வழக்கு கிடையாது. குடங்களை அடுக்கி அதன்மேல் தாவுவதும் கோவர்தன மலையே குடையாக பிடித்து குடிமக்கள் எல்லோரையும் காப்பாற்றியதும் போன்ற பல லீலைகளைச் செய்த கோவர்தன நேசனே, கோபால கிருஷ்ணனே உன்னையே சரணாக அடைகிறேன்.

பரவி வானவர் ஏத்த நின்ற பரமனைப் பரஞ்சோதியை
குரவை கோத்த குழகனை மணி வண்ணனை குடக்கூத்தனை
அரவம் ஏறி அலை கடல் அமரும் துயில் கொண்ட அண்ணலை
இரவும் நண்பகலும் விடாது என்றும் ஏத்துதல் மனம் வைம்மினோ

என்று திருவாய்மொழியில் (3-6-3) நம்மாழ்வார் நித்யசூரிகள் போற்றும் அந்த பகவான் கண்ணனாக வந்து குரவைக் கூத்து ஆடினான். அழகிய அந்த மணி வண்ணன் குடம் எடுத்து ஆடினான். அந்த பகவான்தான் பாற்கடலில் பள்ளி கொண்டுள்ளான். அவனையே இரவும் பகலும் விடாது வணங்குங்கள் என்றார்.

பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் என்று 5 ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்டுள்ள ஸ்தலம்.

ஸ்ரீ ஸத்யபாமா நாயிக ஸமேத ஸ்ரீ கோவர்த்தந கிரிதாரி பரப்ரஹ்மணே நம:

72. திருவாய்ப்பாடி (கோகுலம்)

நவ மோஹன கிருஷ்ணா உந்தன் நர்தனம் கண்ட யசோதை
தவக் கோலமின்றி தனிச்சுவை எல்லை தான் பெற்ற அன்னை
உரலோடு ஒடுங்கி ஒர்பிடி அவலோடு மகிழ்ந்த மகிமை * ஒரு
குரலோடு பாடி ஆடிக் களித்த திருவாய்ப்பாடியில் உன்எளிமை

திருவாய்ப்பாடியில் பகவான் நவமோகன கிருஷ்ணனாக நின்ற திருக் கோலத்தில் ருக்மிணி, ஸத்யபாமா ஸகிதமாய் ஸேவை ஸாதிக்கிறார்.

வசுதேவரும், தேவகியும் கிருஷ்ணனுக்கு பெற்றோர் என்பது பெயர் அளவு மட்டும்தான். கண்ணன் தொட்டில் முதல் குழந்தைப் பருவம் வரை வளர்ந்தது, பொல்லாத லீலைகள் செய்தது எல்லாம் கோகுலத்தில்தான்.

முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டு உண்ணும்
முகிழ் இளஞ் சிறு தாமரைக் கையும்
எழில் கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு எள்கும்
நிலையும் * வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையும் அஞ்சி நோக்கும் அந் நோக்கும்
அணிகொள் செஞ்சிறு வாய் நெளிப்பதுவும்
தொழுகையும் இவை கண்ட அசோதை
தொல்லை இன்பத்தின் இறுதி கண்டாளே

என்று குலசேகராழ்வார் பெரிய திருமொழியில் (6-8) யசோதை பகவானின் லீலைகள் எல்லாம் கண்டு மகிழ்ந்து போகத்தின் எல்லையே கண்ட தாயார் என்றார். ஆனால் அவள் பண்ணியே யோகமோ, யாகமோ ஒன்றுமில்லை. பகவானின் ஸங்கல்பத்தால் பெற்ற தாயான தேவகிகூட பெறாத அந்த உயர்ந்த பேறைப் பெற்றாள். ஆண்டாளும் திருப்பாவையில் யசோதையை "ஏராந்த கண்ணி யசோதை" என்கிறாள். கண் பெற்றதின் பலனை அனுபவித்தவள் அவள் ஒருத்தி மட்டும்தான் சுட்டிக் காட்டினாள்.

ஆவிர்ப4வத்வநிப்4ருதாபரணம் புரஸ்தாத்
ஆகுஞ்சிதைக சரணம் நிப்4ருதாந்ய பாத3ம்
த3த்4நா நிமந்த2 முக2ரேண நிப3த்3த4 தாளம்
நாத2ஸ்ய நந்த3 ப4வநே நவநீத நாட்டியம்

என்று ஸ்வாமி தேசிகனும் ஸ்ரீகோபால விம்ஶதியில் (4) கிருஷ்ணன் வெண்ணெய் வேண்டி ஆடிய நாட்டியத்தை அனுபவித்தார்.

ஸர்வ லோகத்தையும் அதில் உள்ள பொருள்களையும் படைத்து அவற்றை நியமித்து அவற்றிற்கு ஸேஷியாக இருக்கும் பரந்தாமன் ஒரு சாதாரண அதிலும் வலிவு குன்றிய ஜீவ சரீரம் கொண்ட பெண், யசோதையின் ஆணைக்கு உட்பட்டு ஒரு

உரலில் கட்டுண்டு கிடந்தான். அந்த ஸௌசீலயத்தையும் ஸௌலப்யத்தையும் கண்டு ஆழ்வாரே "எத்திறம் எத்திறம்" என்று ஆறு மாதங்கள் மோகித்து கிடந்தார்.

உறியார் வெண்ணெய் உண்டு உரலோடும் கட்டுண்டு
வெறியார் கூந்தல் பின்னை பொருட்டு ஆன் வென்றான் ஊர்

என்று பெரிய திருமொழியில் (6-5-4) திருமங்கை மன்னன் உரலில் கட்டுண்டதை ஸாதிக்கிறார்.

குழந்தைப் பருவத்தில் மட்டும் அவனுடைய கல்யாண குணங்கள் பொலிந்து திகழ்ந்தது என்பதில்லை. வறுமை என்ற சொல்லுக்கே சாட்சியாய் விளங்கியவர் குசேலர். கிருஷ்ணனோ துவாரகாபதி, மன்னன். அப்படியிருக்க அந்த குசேலர் கொடுத்த பயனற்றது என்று விலக்கி தூக்கி குப்பையில் எறிந்த கறுத்த அவல், அதிலும் ஒரே ஒர் பிடி. அதைப் பெற்றதிலே மயங்கியவன் கிருஷ்ணன்.

நிஷாத3நாம் நேதா கபி குல பதி: காபி ஶப3ரீ
குசேல: குப்3ஜா ஸா வ்ரஜ யுவதயோ மால்யக்ருதி3தி ।
அமிஷாநாம் நிம்நத்வம் வ்ருஷகி3ரி பதேருந்நதிமபி
பரபூ4தை: ஸ்ரோதிபி4: ப்ரஸப4மநுகம்பே ஸமயஸி ॥

என்று ஸ்ரீதயாஶதகத்தில் (65) ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். பகவானின் எளிமையை குஹன், சுக்ரீவன், சபரீ, குசேலர், கோபிமார்கள், மாலாகாரர் இவர்களைக் நினைத்தால் போதும் என்று ஸ்லோகத்தில் அனுபவிக்கிறார்.

அப்படிப்பட்ட பரமாத்மாவை கோகுலத்தில் உள்ள பொல்லாத கோபிமார்கள் கட்டி உகந்து ஆடிப்பாடி களித்தனர். எளிமை அல்லது ஸௌலப்யம் என்பது இந்திரியங்கள், வாக்கு, மனம் இவற்றிற்கு எல்லாம் எட்டாத பரத்வமான பகவான் மிகத் தாழ்ந்த நிலையில் உள்ள சேதனர்களிடம் விபவ நிலையில் அகப்படுவது.

பிறந்தாவாறும் வளர்ந்தவாறும் பெரிய பாரதம் கைசெய்து ஐவர்க்குத்
திறங்கள் காட்டி இட்டுச் செய்து போன மாயங்களும்
நிறந்தனூடு புக்கு எனது ஆவியை நின்று நின்று உருக்கி உண்கின்ற இச்
சிறந்த வான்சுடரே

என்று திருவாய்மொழியில் (5-10-1) நம்மாழ்வார் பகவானின் ஸௌலப்யத்தைக் கண்டு மனம் உருகுகிறது என்றார்.

பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை மன்னன் ஆகிய மூன்று ஆழ்வார்களும் 22 பாசுரங்களால் இந்த திவ்ய தேஸத்தை மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

ஸ்ரீ ருக்மணீ ஸத்யபாமா நாயிக ஸமேத ஸ்ரீ நவமோஹன க்ருஷ்ண பரப்ரஹ்மணே நம:

73. திருத்துவாரகை

அன்றுநீ பிறந்து ஆய்ப்பாடி வளர்ந்து சென்ற தேசம்தான் வான்வீடோ
கன்று மேய்த்து கருணைபொழிந்து மன்னன் மணிமகுடம் சூடிய மாநகரோ
இன்ப வெள்ளமே இந்த துளை வழியே கண்டேன் கல்யாணநாராயணனே
சென்மம் கெடவே உன்னைக் கொள்ளவேயடைந்தேன் இன்று துவராபதீயே

திருத்துவாரகை என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் கல்யாண நாராயணன், த்வாரகாதீசன் என்ற திரு நாமங்களுடன் நின்ற திருக் கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். மோக்ஷத்திற்கு துவாரமாக இருக்கும் ஊர். முக்தி தரும் நகர் ஏழில் ஒன்று.

பகவான் கிருஷ்ணன் பிறந்தது ஓர் இரவில், சிறைச்சாலையுள்ளே. அதே இரவிலேயே கோகுலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கேயே வளர்ந்தான். திருவாய்ப்பாடியில் கோபிகைகளுடன் ஆடிப்பாடி மகிழ்ந்தவன். கன்றுகளை மேய்த்து களித்தவன். இளமைப் பருவம் முடிந்தபின் துவாரகை மன்னனாக முடி சூடி ராஜ்ய பரிபாலனம் செய்தான்.

மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து
அடியை அடைந்து உள்ளம் தேறி
ஈறி லின்பத் திரு வெள்ளம்
யான் மூழ்கினேன்

நம்மாழ்வார் திருவாய்மொழியில் (2-7-8) இன்ப வெள்ளத்தை அனுபவித்தாற்போல் கிருஷ்ணன் ஆண்ட அந்த ஊர் துவாரகையா? இல்லை மோக்ஷ ஸம்ராஜ்யமோ? என்று வியக்கும்படி இன்ப வெள்ளமாய் எங்கும் பரவி இருந்தது.

ஸஸுராஸுர கந்ருதுர்வம் ஸயக்ஷோரகு ராக்ஷஸம் ॥
ஜகுத்ருவஶே வர்த்ததேதும் க்ருஷ்ணஸ்ய ஸ சராசரம் ॥

என்று ஸஹஸ்ரநாமம் சொல்லுகிறது. தேவர்கள், அசுரர்கள், கந்தவர்கள், நாகர், ராக்ஷஸர்களோடு சேர்ந்ததும், அசைவையும், அசையாவையும் சேர்ந்ததுமான இந்த உலகம் யாவும் கிருஷ்ணின் வசத்தில் இருக்கிறது என்றது. அந்த துவாரகையில்

பதினாறா மாயிரவர் தேவிமார்
பணி செய்யத் துவரை என்னும்
மதில் நாயகராகி வீற்றிருந்த
மணவாளர் மன்னு கோயில்

என்று பெரியாழ்வார் திருமொழியில் (9-4) துவரை மன்னனை விவர்க்கிறார்.

துவாரகை என்ற பெயரே மோக்ஷத்தை அடைய உதவும் துவாரம் என்பர் பெரியோர். புருஷார்த்த காஷ்டையான (எல்லையான) வான்வீடு என்று சொல்லக்கூடிய பரமபத்தையும் அங்கே அனுபவிக்கக் கூடிய இன்பத்தையும் இந்த துவாரத்தின் வழியாகக் காட்டுபவன் கல்யாண நாராயணன். அவனை வந்து ஸேவித்தால் சென்மங்கள் ஒழியும். பிறவித்துன்பம் தொலையும். அவன் பாதங்களை சரணாகதி என்றே இன்றே வந்தடைவீர்கள்!

கண்ணன் அல்லால் இல்லை கண்டீர் சரண் அது நிற்க வந்து
மண்ணின் பாரம் நீக்குதற்கே வட மதுரை பிறந்தான்
திண்ணமாம் உன்னுடைமை உண்டேல் அவனடி சேர்ந்து உய்ம்மினோ
எண்ண வேண்டா நும்மது ஆதும் அவன் அன்றி மற்று இல்லையே

என்று திருவாய்மொழியில் (9-1-10) நம்மாழ்வார் கிருஷ்ணனைத் தவிர மீதை ஒருவரும் சரண் அடைவதற்கு அருகதை அற்றவர் என்று நிரூபிப்பதற்கும் பூமியில் உள்ள பாரத்தை போக்குவதற்கும் வட மதுரை வந்து பிறந்தான். எல்லாம் அவனுடைய உடைமை என்று அவனிடம் ஸமர்ப்பித்து சரண் அடையுங்கள் என்றார்.

எட்டில் ஆறு இரண்டில் ஒன்றில் எங்கும் ஆறு இயம்புவார்
விட்ட ஆறு பற்றும் ஆறு வீடு கண்டு மேவுவார்
சிட்டரான தேசு உயர்ந்த தேசிகர்க்கு உயர்ந்து *மேல்
எட்டு முன்றும் ஊடறுத்த எந்தை மால் இரக்கமே

என்று அமிருத ரஞ்சனியில் (39) கடைசிப் பாசுரமாக ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். ஆசார்யர்கள் ரஹஸ்யங்கள் முன்றிலும் பகவானே உபாயம் என்று கூறவதாக ஸாதிக்கின்றனர். அதனால் பக்தி யோகத்தை துறந்து ப்ரபத்தியைப் பற்றி அதன் மூலம் மோக்ஷ பலனை அறிந்தவர்கள். ஜ்ஞானம், அனுஷ்டானம், வைராக்கியம் இவை மிகுந்த ஆசார்யர்களின் அருளை நாம் பெறுவதால் பகவானின் கருணை வெள்ளம் நம்மீது பெருகி ஸம்ஸார பந்தத்தை அழித்தது என்றார்.

பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார் என்று ஐந்து ஆழ்வார்களாலால் 13 பாசுரங்களாலால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட திவ்ய தேஸம்.

1. "எல்லாரும் சூழ சிங்காசனத்தே இருந்தான், துவரை வேந்தன் என்று பெரியாழ்வார் அனுபவிக்கிறார்.
2. ஆண்டாளோ "சோலை மலைப் பெருமான், துவரைப் பிரானுக்கே நான்" என்கிறாள்.
3. திருமங்கையாழ்வாரோ "வண்துவரை நட்டானை நாடி நறையூரில் கண்டேனே" என்கிறார்.
4. "ஆயன் துவரைக்கோனாய் நின்று மாயன் அன்று ஒதிய வாக்கதனை" என்று திருமழிசையாழ்வார் பகவத்கீதையை புகழ்கிறார்.
5. "முன்னை அமரர் முதல்வன் வண்துவராபதி மணி வண்ணன் வாசுதேவன் வலையில் வீழ்ந்தேன்" என்கிறார் நம்மாழ்வார்.

ஸ்ரீ லக்ஷ்மீ ருக்மண்யாதி அஷ்டமஹிஷீ ஸமேத ஸ்ரீ த்வாரகாதீச பரப்ரஹ்மணே நம:

74. திருச்சிங்கவேள் குன்றம்

உள் எழுந்த அரிஉருவம் ஒருபுள்ளுக்கே இரங்கி ஒன்பதும் தானேயாகி
கள்மகிழ்ந்த வேடன் பெண்ணுடன் கலந்த சிங்கவேள்குன்றம் தன்னில்
வில் ஏந்தி வருந்திய மன்னன் பணிந்த அஹோபில லக்ஷ்மீ நரசிங்கா!
சொல்கேட்டு முனிதன் இல்கொணர்ந்த அரிவுருவமும் உன் திருவருளே

'எங்கும் உளன் கண்ணன்' என்ற மகனைக் காய்ந்து
'இங்கில்லையால்' என்ற இரணியன் தூண் புடைப்ப
அங்கு அப்பொழுதே அவன் வீயத் தோன்றிய * எம்
சிங்கப்பிரான் பெருமை யாராயும் சீர்மைத்தே

என்று ஸ்வாமி நம்மாழ்வார் திருவாய்மொழியில் (2-8-9) ஸாதித்தார் தன்னுடைய பக்தனான ப்ரஹ்லாதனை காப்பதற்காக ஓர் தூணுள் இருந்து எழுந்த சிங்க உருவம் நரசிம்மாவதாரம்.

ஜ்வாலாSஹோபில மாலோல க்ரோடா காரஞ்ச பார்க்கவா: ।
யோகாநந்த: சத்ரவட: பாவனோ நவ முர்த்தயா: ॥

என்று இந்த ஸ்தலத்தில் நவந்ருஸிம்ஹராய் காட்சி அளிக்கிறார். (1) ஜ்வாலா நரசிம்மன் (2) அஹோபில நரசிம்மன், (3) மாலோல நரசிம்மன், (4) வராஹ நரசிம்மன் (5) காரஞ்ச நரசிம்மன் (6) பார்கவ நரசிம்மன் (7) யோகாநந்த நரசிம்மன் (8) சத்ர வட நரசிம்மன் (9) பாவந நரசிம்மன் என்கிற நரஹரியின் நவமூர்த்திகள்.

முன்னொரு காலத்தில் கருடன் பகவானை நோக்கி கடும் தவம் செய்து முன் செய்த நரசிம்மாவதாரத்தை காண வேண்டும் என்று கேட்ட வரத்தால் மீண்டும் நரசிம்மாவதாரம் செய்து இங்கேயுள்ள மலையில் அர்ச்சை மேனியுடன் ஒன்பது ரூபமாய் ஸேவை ஸாதிக்கிறார். அதனால் இந்த ஸ்தலத்திற்கு காருடசைலம், கருடாத்ரி என்றும் பெயர். நரசிம்மக் கடவுள் வேடனாக வந்து வேடக்குலப் பெண்ணான செஞ்சுலக்ஷ்மியை மணந்ததாய் ஐதிகம்.

நல்லை நெஞ்சே! நாம் தொழுதும் நம்முடை நம்பெருமான்
அல்லி மாதர் புல்க நின்ற ஆயிரம் தோளனிடம்
நெல்கி மல்கிக் கல் உடைப்ப புல்லிலையார்த்து அதர்வாய்
சில்லு சில்லென் றெல்லறாத சிங்கவேள் குன்றமே

என்று திருமங்கை மன்னன் பெரிய திருமொழியில் (1-7-8) மனமே சிங்கவேளைத் தொழு என்றார்.

ராமன் ஸீதையைப் பிரிந்து தம்பி லக்ஷ்மணனுடன் அவளைத்தேடி வரும் சமயத்தில் அஹோபிலம் வந்து ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்மனை துதித்தாதாக வரலாறு.

அஹோபி₃லம் நாரஸிம்ஹம் கு₃த்வா ராம: ப்ரதாபவாந் ।
நமஸ்க்ருத்வா ஸ்ரீந்ருஸிம்ஹம் அஸ்தௌஷீத் கமலாபதிம் ॥

என்று ஆரம்பிக்கும் ந்ருஸிம்ஹ பஞ்சாம்ருத ஸ்தோத்ரத்தை (1) பகவான் ராமன் அருளி இந்த ந்ருஸிம்ஹனை வணங்கினார்.

கிடாம்பி ஸ்ரீநிவாஸாச்சார் என்னும் அஹோபில மடத்தின் ஸ்தாபகரான ஆதிவண் சடகோப மஹாமுனி இந்த க்ஷேத்திரத்தில்தான் வந்து பகவான் ஸ்ரீலக்ஷ்மீநரசிம்மானால் ஆட்கொள்ளப்பட்டு ஸந்யாஸம் பெற்றார். பகவான் ஆஹோபில மடத்தை ஸ்தாபிக்கும்படி நியமிக்க அவரும் பகவானின் கட்டளையைத் தலைமேல் தாங்கி அடி பணிந்தார்.

ஆதிவண் சடகோப ஸ்வாமியும் எந்த பகவானைத் தான் ஆராதிப்பது என்று தெரியாமல் திகைத்திருக்க பகவானே மாலோல நரசிம்ம உத்ஸவ மூர்த்தியை எடுத்து முனியின் கையில் கொடுத்ததாக வரலாறு. அவரும் அந்த திருவுருவத்தை தன்னுடைய இல்லமான அஹோபில மடத்திற்கு எழுந்தருளப் பண்ணி ஆராதித்தார். அன்று முதல் இன்று வரை ஸ்ரீமாலோல நரசிம்மரை அஹோபில மட ஆஸ்தானத்திலேயே எழுந்தருளப் பண்ணி பரம்பரையாக ஆராதித்து வருகிறார்கள்.

அஹோபி₃லே கா₃ருட₃ஶைலமத்₄யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதா₄நம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கி₃த வாமபா₄க₃ம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்₃யே ॥

என்று ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹப்ரபத்தியில் (14) வேதா₃ந்ததே₃ஶிக யதீந்த்₃ர மஹாதே₃ஶிகன் என்ற 44 வது பட்டம் ஸ்ரீமத் முக்கூர் அழகியஸிங்கர் இந்த எம்பெருமானிடம் ஶரணாகதி செய்வதை அருளியுள்ளார்.

இந்த திவ்ய தேஸத்தில் காட்சி தரும் மூலவருக்கு அஹோபில நரசிம்மர் என்று திருநாமம். திருமங்கை மன்ன 10 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். காட்டு மிருகங்கள் திரியும் இடம். வேடர்கள் கோவிலுக்கு வரும் பக்தர்களிடமிருந்து பொருளைத் திருடி அவர்களை அடித்து போட்டு ரசிக்கும் இடம் என்று சொல்லி சிங்கவேள் குன்றமே என்று மலையே பாடியுள்ளார்.

"தெய்வமில்லாச் செல்லவொண்ணாத சிங்கவேழ் குன்றமே", சென்று காண்டற்கு அரிய சிங்கவேள் குன்றமே" என்பது எல்லாம் திருமங்கை மன்னன் வாக்கு. அந்த காலத்தில், இந்த மலையை தாண்டி வேடர்கள், கள்ளர்கள் இவர்களிடம் சித்திரவதை படாமல், கோவில் சென்று பகவானை தரிசிப்பது என்பது அரிய சாதனை. கலியன் அதனால் இந்த பகவானை கண்டு மகிழ்ந்து பாடுவதற்கு பதிலாக அஹோபில மலையையே மங்களாசாஸனம் செய்து விட்டார்.

ஸ்ரீ அம்ருதவல்லீ செஞ்சுலக்ஷ்மீ ஸமேத ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்மஹ பரப்ரஹ்மணே நம:

75. திருவேங்கடம் (திருப்பதி, திருமலை)

அலைமகளை அகலாமே அன்புடன் தாங்கியவன் அருளும் அரவு மலை
இலையெனாது சுரக்கும் இரக்கத்தால் பத்தர் வினைதீர்க்கும் திருமலை
விலையின்றி பணிசெய்ய வேண்டி அடையும் புகல் புனிதமலை * எம்
தலைமீது அடியோர் படியேறி வணங்க விழையும் ஏழுமலை வேதமலை.

திருவேங்கடம், திருமலை, திருப்பதி, ஆதிவராஹ கேஷத்திரம் என்றெல்லாம் அழைக்கப்படும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் திருவேங்கடமுடையான், வேங்கடாஜலபதி, ஸ்ரீநிவாஸன், பாலாஜி, ஏழுமலையான் என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான்.

திருமலை தவிர, கீழ்த் திருப்பதி என்னும் கோவிந்தராஜப்பெருமாள் திருத்தலமும் பத்மாவதி தாயார் எழுந்தருளியுள்ள திருச்சானூர் என்னும் அலர்மேல் மங்காபுரமும் சேர்த்து ஒரே திவ்ய தேஸமாக நம் ஆசார்யர்கள் அனுபவித்துள்ளார்கள்.

அகலகில்லேன் இறையும் என்று
அலர்மேல் மங்கை உறை மார்பா

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் (6-10-10) பாற்கடலிருந்து தோன்றிய மஹாலக்ஷ்மியை தன்னுடைய திருமார்பிலே எங்கும் எப்பொழுதும் ஒரு கணமும் பிரியாமல் தாங்கி நிற்கின்ற ஸ்ரீநிவாஸனே! என்று சரணாகதி செய்கிறார்.

சேஷாசலம் என்றழைக்கப்படும் ஆதிஸேஷனே மலையாய் நின்று உன்னைத் தாங்கி நிற்கிறார். கிருஷ்ணாவதாரத்தில் கோவர்தன மலையை ஏழு நாட்கள் குடையாக பிடித்து தாங்கி அங்குள்ள மக்களை காத்தற்கு ப்ரதி உபகாரமாய் ஏழு மலையாக உன்னை இன்று தாங்குகிறதோ?

ப்ரபத்3யே தம் கி3ரீம் ப்ராய: ஸ்ரீநிவாஸாநுகம்பயா ।
இக்ஷீஸார ஸ்ரவந்த்யேவ யந்மூர்த்யா ஶர்க்கராயிதம் ॥

என்று ஸ்வாமி தேசிகன் தயா ஸதகத்தில் (1) அந்த திருவேங்கட மலை என்பது பகவான் ஸ்ரீநிவாஸனின் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுகின்ற கருணை என்னும் வற்றாத ஆறு உறைந்து சர்க்கரை மலையாக ஆனதோ? என்று வியக்கிறார்.

ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதாயந்தே
ய ஏதத் ஏவம் வித்வாந் அக்னிஹோத்ரம் ஜுஹோதி

என்று சாந்தோக்ய உபனிஷத்தில் (V 34-3) இதை அறிந்து அக்னிஹோத்ரம் செய்தவனுடைய பாபங்கள் அனைத்தும் எரிந்து போகின்றன என்றது. அவ்வளவு கடினமான யாக யோகங்கள் தேவையில்லை என்றார்கள் நம் ஆசார்யர்கள்.

கண்ணடியினை எமக்குக் காட்டும் வெற்பு
கடுவினையர் இருவினையும் கடியும் வெற்பு

எம்பெருமானே உன்னுடைய திருவடிகள் இரண்டையும் காட்டிக் கொடுத்து கொடிய பாப புண்யமாகிற இரண்டு கர்மங்களையும் ஒழிக்கும் புனிதமான மலை திருமலை என்றார் ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்க்ரஹத்தில் (43). உன் தயை என்னும் காருண்யத்தால் உன்னை அண்டி வரும் பக்தர்களின் பாபங்களை எரித்து அவர்களுக்கு அருள் புரிகிறாய். வேங்கடம் என்பதற்கு பாபங்களை சுட்டு பொசுக்குதல் என்றல்லா பொருள்?

அடியவர்கள் அனைவரும் புகல் வேறு ஒன்றில்லாது உம்முடைய திருவடிகளையே நாடி கைங்கர்யத்தையே உயர்ந்த புருஷார்த்தமாக விரும்பி அடைகிறார்கள். எம்பெருமானார் போன்ற ஆசார்யர்கள் கூட தங்கள் பாதங்கள் ஆதிஸேஷனாகிற மலைமீது பட்டு விடப்போகிறதே என்று முட்டியாலேயே புனிதமான மலை மீது ஏறி உன்னை ஸேவித்தார்கள்.

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்
படியாய்க் கிடந்து உன் பவள வாய் காண்பேனே

என்று குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் (4-9) ஸாதித்தாற்போல் அங்குள்ள பக்தர்கள் குழாம் எல்லாம் அடியார், அடியார்க்கு அடியார், அவரடியார், என்று தொண்டர் குலத்தையே தம் தலைமீது கொண்டு படியாய் கிடந்து உன் பவள வாய் காண விழைகிறார்கள்.

வேதத்தின் ஏழு காண்டங்களே ஏழு மலையாய் வந்திருந்து உன்னைத் தாங்கி நின்று விண்ணவரும், மண்ணவரும் விரும்பும்படி கலியுக கருணைக்கடலாக விளங்கும் எம்பெருமானே உன்னை சரணாக அடைகிறேன்.

தொண்டரடிப்பொடி ஆழ்வார் தவிர மற்ற ஒன்பது ஆழ்வார்களாலும் ஆண்டாளையும் சேர்த்து 202 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட பெருமான்.

ஆழ்வார்கள் அனைவரும் சரணாகதியாய் அடைந்து பாடி மகிழ்ந்த எம்பெருமான். பகவத் பாஷ்யகாரரும் ஸ்ரீபாஷ்ய மங்கள ஸ்லோகத்தில் "ப்ரஹ்மணீ ஸ்ரீநிவாஸே பவது மம பரஸ்மி ஸேமுஷி பக்திரூபா" என்றார். ஸ்வாமி தேசிகன் "பரபத்யே தம் கிரிம் ப்ராயா ஸ்ரீநிவாஸ அநுகம்பயா" என்று ஆரம்ப வார்த்தையிலேயே ப்ரபத்தியைச் அனுஸந்தித்தார்.

ஸ்ரீ பத்மாவதீ நாயிக ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ புண்டரீகவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ கோவிந்தராஜ பரப்ரஹ்மணே நம:

மலை நாட்டு திருப்பதிகள் 13 (76 முதல் 88 வரை)

76. திருநாவாய்

மாவாய் பிளந்த மாதவனை நாவால் வாழ்த்தி வணங்கியே
போவாய் என வினையறுத்து நோவாமல் காத்து அருளும்
பாவாய் மலர்மங்கை மார்பனை நாவாய் நின்ற முகுந்தனை
தூவாய் தூயவேழம்போல் தொலையாப்பணியில் திகழ்வாயே

திருநாவாய் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் நாவாய் முகுந்தன், நாராயணன் என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு மலர்மங்கை நாச்சியார் என்ற திருநாமம்.

இந்த திருத்தலத்தை காசிக்கு ஒப்பாக கருதுகிறார்கள். ஒரு காலத்தில் 9 யோகிகள் இங்கே இருந்து தவம் செய்தலால் இந்த ஊர் நவயோகி என்று அழைக்கப்பட்டு அதுவே மருவி நாவாய் என்றாயிற்று.

ஒரு சமயம் லக்ஷ்மியும், கஜேந்திரனும் பகவானை தாமரை கொண்டு அர்ச்சிக்க போட்டியிட்டார்கள். தாமரையாளான லக்ஷ்மியை கஜேந்திரன் வெல்ல முடியுமா? கஜேந்திரனும் தான் தோற்றதில் வருந்தி தனக்கு தாமரை மலர் பகவானுக்கு அர்ச்சிக்க இல்லையே என்று பகவானை வேண்ட பகவானும் தாயாரை தன்னிடம் அழைத்து அமரச் செய்து கஜேந்த்ரனை இருவருக்கும் பூஜிக்குமாறு செய்ததாக வரலாறு.

நாவாயில் உண்டே நமோ நாராணா என்று
ஓவாது உரைக்கும் உரை உண்டே -- மூவாத
மாக்கதி கண் செல்லும் வகை உண்டே ; என் ஒருவர்
தீக்கதிக்கண் செல்லும் திறம்

பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில் (95) சொல்லுகிறார். பகவான் நமக்கு நாக்கு படைத்திருப்பது எம்பெருமானை ஸ்துதி செய்யவே. வெறுமனே உண்டு மகிழ்வதற்கு அல்ல. பெரிய கடினமான மந்திரங்களை முச்சு பிடித்து, முச்சு வாங்கி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஒரே தொடர்ச்சியாய் உள்ள சுலபமான திருவஷ்டாக்ஷர மந்திரம் எளிதில் நம் கையில் உள்ளதே! மோக்ஷத்திற்கு இதைவிட உபாயமுண்டோ? இதை செய்யாமல் சிலர் ஏன் தீய வழிகளில் சென்று வீழ்கிறார்கள் என்கிறார்.

குதிரை வடிவு கொண்ட கேஸி என்னும் அசுரனின் வாயைப் பிளந்த அந்த திருநாரணனின் பெருமைகளை அற்புதங்களை அவனுடைய திருக்கல்யாண குணங்களை நம்முடைய வாயால் நன்கு வாழ்த்தி அவனையே அடைந்தால் நம்முடைய தீராத வினைகள் தொலையும்.

மத்த நறுமலர் முருக்க மலர்
கொண்டு முப்போதும் உன் அடி வணங்கி

தொழுது முப்போதும் உன் அடி வணங்கித்
தூமலர் தூய்த் தொழுது ஏத்துகின்றேன்

சூட்டு நன் மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள்
ஆட்டிய தூபம் தரா நிற்க அங்கு

என்று பல அழ்வார்களும் நம்மாழ்வாரும் திருவிருத்தத்தில் (21) ஸாதித்த முறையிலே, நித்ய சூரிகள் வைகுந்த மாநகரில் உன்னை ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளப் பண்ணி திருமஞ்சனம் செய்து ஆடை ஆபரணாதிகளை அணிவித்து தூய மலர்களாலான மாலைகளை ஸமர்ப்பிக்கின்றனர் என்றார்.

அரியது எளிது ஆகும் ஆற்றலால் மாற்றிப்
பெருக முயல்வாரைப் பெற்றால் - கரியது ஓர்
வெண் கோட்டு மால் யானை வென்றி முடித்து அன்றே
தண் கோடு மாமலரால் தாழ்ந்து

என்று பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியில் (22) மோக்ஷம் சுலபமாகும் எப்பொழுது என்றால் தன் சக்திகளை ஒழித்து ஒரு சேதனன் மஹாபுருஷானாகிய எம்பெருமானை அடைந்தால். இதை கஜேந்த்ரன் கதையில் காணலாம் என்றார்.

தாழ்வதும், சரணடைவதும் தான் ஸ்ரீவைஷ்ணவர்களின் உயர்ந்த லக்ஷணம். அதுவே சாதுர்யமும் கூட. இதை மனத்தில் கொண்டு திருவுடன் சேர்ந்த முகுந்தனை பூக்களால் கஜேந்தரனைப்போல் அர்ச்சித்து பகவத் கைங்கர்யம் என்கிற உயர்ந்த புருஷார்த்தத்தையே அனுபவிக்கிறோம்.

திருமங்கை மன்னனும், நம்மாழ்வாரும் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள். "துறை வேழம் மூவாமை நல்கி முதலை துணித்தானை" என்கிறார் திருமங்கை ஆழ்வார். "மீளா அடிமைப்பணி செய்ய புகுந்தேன் நீளாய் மலர்சோலைகள் சூழ் திருநாவாய்" என்கிறார் நம்மாழ்வார்.

அருளாது ஒழிவாய் அருள் செய்து * அடியேனைப்
பொருள் ஆக்கி உன் பொன் அடிகீழ் புக வைப்பாய்
மருளே இன்றி என் நெஞ்சத் திருத்தும்
தெருளே தருதென் திருநாவாய் என் தேவே

என்று திருவாய்மொழியில் (9-8-8) நம்மாழ்வார் பாடுகிறார். திருநாவாய் பிரானே, நீ எனக்கு அருள் செய்யாவிட்டாலும் சரி, அருள் செய்து என்னை ஒரு வஸ்துவாக்கி உன் திருவடிக்கீழ் கைங்கர்யத்தைக் கொடுத்தாலும் சரி எப்படி இருந்தாலும், என்னுடைய அஞ்ஞானத்தை போக்கி உன்னை அனுபவிக்க செய்வாய் என்றார்.

ஸ்ரீ மலர்மங்கை நாயிக ஸமேத ஸ்ரீ முகுந்த நாராயண பரப்ரஹ்மணே நம:

77 திரு வித்துவக்கோடு

பெற்றதாய் தள்ளினும் அவளையே சுற்றி வரும் சேயைப் போல்
உற்றுகந்து பற்றினேன் உன்னடி வழிமற்று ஒன்றிலையென்றே
கற்றபயன் யாவும் திரு விற்றுவக்கோட்டு அம்மானே உன்னடிப்
பற்றி கண்டுகொண்டேன் கணப்பொழுதில் உய்யவந்தபெருமானே

இந்த திவ்யதேஸத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு உய்யவந்த பெருமான், அபய ப்ரதன் என்ற திருநாமங்கள். நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு வித்துவக்கோட்டுவல்லி, பத்மபாணி நாச்சியார் என்று திருநாமம். அம்பரீஷ ரிஷி மோக்ஷம் இங்கிருந்து அடைந்ததாக ஐதிகம்.

தருதுயரம் தடாயேல் உன் சரண் அல்லால் சரண் இல்லை
விரைகுழவு மலர்ப் பொழில் சூழ் வித்துவக் கோட்டம்மானே
அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்று அவள் தன்
அருள் நினைந்தே அழும் குழவி அதுவே போன்று இருந்தேனே

குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் (5-1) வித்துவக்கோட்டம்மான் பதிகத்தில் ஸாதிக்கிறார். பகவானை நம்மைப்போல் உள்ள ஜீவாத்மாக்கள் சரண் என்று பற்றுவது தாயைச் சுற்றி வரும் குழந்தையைப்போல்.

ஒரு தாயானவள், எவ்வளவோ தவம் செய்து குழந்தையைப் பெற்று அதை கண்ணே, மணியே என்று கொஞ்சி வளர்த்தாலும் ஏதாவது ஒரு சமயத்தில் கோபம் கொண்டு, வேண்டி வந்த குழந்தையை சீண்டாது துரத் தள்ளவும் கூடும். அதனால் குழந்தையானது தாயார்தான் நம்மை வேண்டாம் என்று ஒதுக்கி விட்டாள். தந்தையிடம் போவோம் என்று செல்லாது. அடித்து விரட்டிய அதே தாயைச் சுற்றி வந்தே அழுமே தவிர வேறு ஒருவரிடமும் செல்லாது.

அது போல பகவானே நான் செய்த எண்ணிலா குற்றங்களைக் கொண்டு என்னை நீ ஒரு சமயத்தில் பார்க்காது வெறுத்துத் தள்ளினாலும் எனக்கு உன்னைத் தவிர வேறு கதி என்ன இருக்கிறது? உன் திருவடிகளையே கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உன்னைத் தவிர வேறு வழியில்லை என்று கதறுகிறேன்.

நிராஸ கஸ்யாபி ந தாவதுஸ்த் ஸஹே.
மஹேஶ! ஹாதும் தவ பாதபங்கஜம்
ருஷா நிரஸ்தோபி ஶிஶுஸ் ஸ்தநந்தயோ
ந ஜாது மாதுஶ் சரணௌ ஜிஹாஸதி

ஸ்தோத்ர ரத்னத்தில் (26) ஸ்வாமி ஆளவந்தாரும் இதே உதாரணத்தையே காட்டுகிறார். ஆழ்வார் பகவானைப் பற்றினேன் என்றாரே தவிர திருவடிகளை என்று வெளிப்படையாகச் (explicit) சொல்லவில்லை. ஆழ்வாரைப்போல் அன்று நம்முடைய

ஆசார்யர், "பகவானின் திருவடிகளையே", "தாயின் பாதங்களையே" என்று ஸ்பஷ்டமாக (emphasis) தெரிவிக்கிறார்.

ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாத4வ: ।
க3ச்ச2த்வமேநம் ஶரணம் ஶரண்யம் புருஷர்ஷப4ா: ॥

என்று பாரதம் (ஆ பர்வம் 192-56) கூறுகிறது. புருஷர்களில் உத்தமமானவர்களே! எல்லா உலகத்திற்கும் தந்தையாகவும், தாயாகவும் இருப்பவன் ஸ்ரீயப்பதியே. அடைக்கலம் கொள்ள தகுதியான அவனையே சரணம் அடைவீர்கள் என்றது.

அந்த பகவானை மற்றவர்கள் நல்லவன் என்று கூறினாலும் சரி, பொல்லாதவன் என்று வெறுத்தாலும் சரி, அடைக்கலம் கொள்ளும் எனக்கு அவனின்றி வேறு கதியில்லை.

கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள் போல்
விண்டோய் மதிள்புடை சூழ் விற்றுவக் கோட்டம்மானே * நீ
கொண்டாளாய் ஆகிலும் உன் குரை கழலே கூறுவனே

குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் (5-2) கூறுகிறார். தன்னுடைய கணவன் அசடு, பொல்லாதவன் என்றெல்லாம் ஊரார் பேசினாலும் அதை தன் காதில் போட்டுக் கொள்ளாமல் "கல்லானாலும் கணவன், புல்லானாலும் புர்ஷன்" என்று தன் கணவனையே தெய்வமாய் கருதும் கற்புக்கரசியப் போல் வித்துவக்கோட்டம்மானே உன்னையே நான் அடைந்தேன் என்றார்.

தத்துஸமன்வயாத்

என்று பிரம்மசூத்திரம் (ஸூ 4) கூறுகிறது. ஆனந்த ரூபமான ப்ரம்மத்தில் சாஸ்த்ரங்கள் அன்வயம் பெறுவதால் சாஸ்த்ர ப்ரமாணத்தால் உணரப்படுவது ப்ரம்மம் என்று அறிய வேண்டும்.

சாஸ்த்ரங்கள், நீதி நெறிகள் எல்லாவற்றையும் கற்று கரை தேர்ந்தவர்கள் அறிந்ததின் சாரம், வேதாந்த விழுப்பொருள் என்ன? உன்னைத் தவிர வேறு கதி இல்லை என்கிற சூட்சுமப் பொருள்தான். அதை நான் உன் திருவடியைப் பற்றி ஒரே கூஷணத்தில் அறிந்து கொண்டேனே, உய்ய வந்த பெருமானே!

குலசேகராழ்வார் பத்து பாசுரங்களால் மங்களாசஸனம் செய்திருக்கிறார். நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான், நின்னையே வேண்டி நிற்பேன்" என்று கூறி மகிழ்கிறார்.

ஸ்ரீ பத்மபாணி நாயிக ஸமேத ஸ்ரீ அபயப்ரத பரப்ரஹ்மணே நம:

78. திருக்காட்கரை

கோட்பாடுடைய கோமானே உன்னடிக்கே தொண்டு செய்ய
வீட் செய்கின்றாய் வினை தீர்க்கும் வாத்ஸல்ய வல்லியுடன்
ஆட்கொண்ட கள்ளனாய் கண்ணனாய் உள்புகுந்து நின்ற * திருக்
காட்கரை அப்பனே! திருவருள் செய்து என் வேட்கைத் தீர்த்தாயே

காட்கரையப்பன் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் தெற்கு நோக்கி ஸேவை ஸாதிக்கிறார் திருக்காட்கரை என்னும் இந்த திவ்ய தேஸத்தில். தாயாருக்கு பெருஞ்செல்வ நாயகி, வாத்ஸல்யவல்லி என்று திருநாமங்கள். மலையாள நாட்டில் இந்த பெருமானை வாமனன் என்றே அழைக்கின்றனர்.

எந்த ஒரு அரசனுக்கும் அவசியமானது, நீதிநெறி தவறாது முறையாக செங்கோல் செலுத்துவதுதான். ஒரு சாதாரண வேந்தனுக்கே அது முக்கியம் என்றால் ஜகத் காரணமாய் எல்லா ஜீவராசிகளுக்கும் ரக்ஷகனாக விளங்கும் பரமாத்வாவிற்கு எவ்வளவு அத்யாவசியம் என்பதைக் கூறத் தேவையே இல்லை.

வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீவில்சீர்
ஆற்றல் மிக்காளும் அம்மானை

என்று திருவாய்மொழியில் (4-5-1) நம்மாழ்வார் எம்பெருமான் தான் எல்லாவற்றிற்கும் தலைவன். இருந்த இடத்திலிருந்து அவன் ஆட்சி செவ்வன நடைபெறுகிறது. எப்படி என்றால்,

நல்ல கோட்பாட்டு உலகங்கள் முன்றினுள்ளும் தான் நிறைந்த
அல்லிக் கமலக் கண்ணனை அந்தண்குருகூர்ச் சடகோபன்

என்று திருவாய்மொழியில் (8-10-11) நம்மாழ்வார் உலகம் யாவும் பகவத் பாகவத தொண்டே உயர்ந்த புருஷார்த்தம் என்று அறிந்து உலகத்தில் உள்ள மக்கள் யாவரும் ஒரு கட்டளைக்கு உட்பட்டு இயங்குகின்றனர் என்றார்.

மக்கள் பகவானின் கட்டளையை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே எம்பெருமான் பல சாஸ்த்ரங்களை ஆக்கித் தந்து இருக்கிறான். சாஸ்த்ரங்கள் என்பது விதி முறைகள். இதைச் செய் இதைச் செய்யாதே என்று சொல்லக்கூடியவை.

மோக்ஷ சாம்ராஜ்யத்தில் என்றும் குறைவில்லாத ஆனந்த மயம் நிரம்பி இருப்பதால் அங்குள்ள நித்யர்களுக்கோ முக்தர்களுக்கோ சாஸ்திரங்கள் அவசியமில்லை. பிரபஞ்சத்தில் உள்ள மற்றைய அசேதனப் பொருள்கள் அறிவில்லாதவை. அவற்றிற்கும் அவசியமில்லை. பக்தர்கள் என்று பிரிக்கப்படும் பூலோகத்தில் உள்ள சேதனர்களுக்காகவே பகவான் இதை உண்டாக்கினான்.

ஶ்ருதி ச்மிருதிர் மமை வாக்யா

என்பது பகவானே சொன்னது. அவரவர் குலத்திற்கு தகுந்த விதி முறைகளை தங்கள் ஆசாரியர் மூலமாக தெரிந்து கொண்டு அவற்றை பின்பற்றி, முறையாக அனுஷ்டித்து, பகவானை அடைவதுதான் சிறந்தது.

வேறி மாறாத பூவில் இருப்பாள் வினை தீர்க்குமே

என்று ஆழ்வார் பிராட்டியின் வினை தீர்க்கும் வாத்ஸல்ய குணத்தைக் காடுகிறார். கணக்கற்ற பாவக் குலியல்கள் எல்லாவற்றையும் ஒரு நொடியில் பொசுக்கி சாம்பலாக்கும் வாத்ஸல்ய வல்லியுடன் என் மனத்துள் புகுந்து என்னை நல்வழியில் திருப்பி உமக்கே தொண்டு செய்ய மோக்ஷ சாம்ராஜ்ய பேற்றை அளிக்கிறாயே, திருக்காட்கரை அப்பனே! உன்னையே சரணாக அடைகிறேன்.

ஊர் இலேன் காணி இல்லை உறவு மற்று ஒருவரும் இல்லை
பாரில் நின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி

என்றார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையில். இன்று அறிந்தேன் நீதான் எல்லாவிதமான உறவும் என்று. அந்த முறையில் பகவான், நீதான் எனக்கு என்கிற அறிவைக் கொடுத்து எத்தனை ஜன்மங்களாக பாடு பட்ட இந்த ஆத்மாவின் தீராத தாகம் என்கிற பகவத் பாகவத ஸேஷத்வத்தில் என்னை ஈடுபடுத்தினாயே!

என்றே எனை உன் ஏரார் கோலம் திருந்தடிகீழ்
நின்றே ஆட்செய்ய நீ கொண்டருள நினப்பதுதான்

என்று திருவாய்மொழியில் (8-3-8) நம்மாழ்வார் பகவானே உன் திருவடிக்கிழ் அடிமை செய்ய என்னை ஆட்கொள்ள மாட்டாயா? என்று வேண்டுகிறார்.

நம்மாழ்வார் 11 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். "நீர்மையால் நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்து" என்று பகவானின் ஸௌஸீல்யத்தை கண்டு கதறுகிறார். "சன்மம் முடிவெய்தி நாசங் கண்டீர்களே" என்று இந்த ஊரில் உள்ள பகவானை அடைந்தால் பிறப்பு இறப்பிலிருந்து விடுபடுவர் என்று கடைசிப் பாசுரத்தில் அறுதியிடுகிறார்.

திருவருள் செய்பவன் என்னுள் புகுந்து
உருவமும் ஆருயிரும் உடனே உண்டான்
திருவளர் சோலைத் தன் காட்கரை என்னப்பன்
கருவளர் மேனி நம் கண்ணன் கள்வங்களே

என்று திருவாய்மொழியில் (9-6-5) நம்மாழ்வார் பாடுகிறார். எம்பெருமான் என்னை அடிமையாக்கி எனக்கு அருள் செய்வதுபோல் என் நெஞ்சத்துள் வந்து புகுந்து வஞ்சித்து என் உடலையும் உயிரையும் உண்டான். காட்கரைபிரான் கண்ணன் இப்படி செய்தது எனக்கு அவன் மேல் உள்ள காதலினால்தானே? என்கிறார்.

ஸ்ரீ வாத்ஸல்யவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ காட்கரையப்பன் பரப்ரஹ்மணே நம:

79. திருமூழிக்களம்

அழிவில்லா அறத்தையும் திறத்தையும் முனிக்குத் திரு மொழிந்த
நழுவில்லா திரு நாரணனே * பாபம் கழுவி பிணி நீங்கி உமக்கே
வழுவில்லா அடிமை செய்ய வேண்டினேன் * மதுரவேணி மருவிய
ஒழிவில்லா விளக்கே! * முதலுக்கும் முதலான திருமூழிக்களத்தானே

இந்த திவ்யதேஸத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு திருமூழிக்களத்தான், ஸ்ரீஸௌம்யநாதப் பெருமாள் என்ற திருநாமங்கள். பகவான் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். மதுரவேணி நாச்சியார் என்று தாயாருக்கு திருநாமம்.

வேதங்கள் அனாதியானது, அபௌருஷமானது. அதாவது அதற்கு தோன்றுதல், அழிதல் என்பதே கிடையாது. உயர்ந்த வேத சாஸ்த்ரங்களைக் கொண்டு தன்னுடைய ஸ்வரூபத்தை ரிஷிக்கு உபதேசித்த ஸ்ரீமந் நாராயணன், தன்னை அண்டியவர்களை நழுவ விடாத அச்சுதன் என்று அறிந்தேன்.

பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம் சாஸ்வதம் ஶிவமச்யுதம் நாராயணம்

என்று உபனிஷத்துக்கள் அடியவர்களை நழுவவிடாத நாராயணன் என்று உன்னையே நித்யமாய், மங்களமாய், ஸர்வலோகத்திற்கும் பதியாய் கூறுகின்றன.

தீர்ந்த அடியவர் தம்மைத் திருத்திப் பணி கொள்ள வல்ல
ஆர்ந்த புகழ் அச்சுதனை அமர் பிரானை எம்மானை

நம்மாழ்வார் திருவாய்மொழியில் (3-5-11) பகவான் தன்னையே நாடி வரும் அடியவர்களிடம் குற்றங்களைக் காணாது அவர்களைத் திருத்தி அவர்களை என்றும் நழுவவிடாமல் காக்கிறான் என்கிறார்.

ப4வந்தமேவானுசரந் நிரந்தரம்
ப்ரஶாந்த நிஶ்ஶேஷ மனோரதா2ந்தர: |
கதா3ஹமைகாந்திக நித்ய கிங்கர:
ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாத2 ஜீவித: ||

ஸ்வாமி ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் (46) பகவானிடம் வேண்டுகிறார். எல்லா ஆசைகளையும் ஒழித்து, பலனுள்ள வாழ்க்கை உடையவனாய், உன்னையே எப்பொழுதும் இடைவிடாமல் நினைத்து நித்யமான கைங்கர்யத்தை செய்து உன்னை எப்படி சந்தோஷப்படுத்தப் போகிறேன் என்கிறார்.

உலகில் நித்யமான பொருள் எது என்று அறிந்து இதர விஷயங்களில் இருக்கும் ஆசை என்னும் நோய் தீர்ந்து பாபங்களை எல்லாம் தொலைத்து "நித்ய கிங்கரோ பவ" என்று உமக்கே அடிமை செய்ய உன்னையே வேண்டி நின்றேன்.

மதுரவேணி நாச்சியார் ஸமேதனாய் நிற்கின்ற திருமுழிகளத்துள் நிற்கும் எம்பிரானே, ஆதி முலமாய் நிற்கும் பெருமானே உன்னையே சரணாக அடைகிறேன்.

ஸ்ரீய: காந்தோऽநந்தோ வரகு3ணகணைக ஆஸ்பத3வபு:
ஹதா ஶேஷாவத்3ய: பரமக2பதே3ர வாங் மநஸயோ: ।
அபூமிர் பூ4மிர்யோ நதஜநத்ருஶாமாதி3 புருஷோ
மநஸ் தத்பாத3ாப்3ஜே பரிணஸக்தம் ப4வது மே ॥

என்று வேதாந்த தீபத்தில் பகவத் ராமனுஜர் பகவானிடம் கைங்கர்ய ப்ராப்தியை வேண்டுகிறார். எம்பெருமான் திருவை உடையவன். நித்ய கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாய் திருமேனி உடையவன். குற்றம் இல்லாதவன். பரமபத வாஸன். மனோ வாக்கிறகு புலப்படாதவன். அடியவர்கள் கண்களுக்கு இலக்கானவன். அந்த ஆதி புருஷன், அனந்தன் திருவடிகளில் கைங்கர்யம் செய்ய என் மனம் ஆசை கொள்ளட்டும் என்றார்.

ஓழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி
வழுவில்லா அடிமை செய்ய வேண்டும் நாம்

என்று திருவாய்மொழியில் (3-3-1) நம்மாழ்வார் ஸாதித்தார்.

ஹாரீத மஹரிஷிக்கு பகவான் வர்ணாச்ரம தர்மங்கள், அனுஷ்டான ப்ரகாரங்களை தன் திருமொழியாக உபதேசித்தார். பகவானின் ஸ்ரீஸூக்தி விளைந்த ஸ்தலமானதால் திரு மொழி கண்ட களம் என்பது திருமொழிக்களம் என்று ஆகி திருமுழிக்களம் என்று மருவியது என்று கூறுவர். லக்ஷ்மணன், பரதனை திருச்சித்திர கூடத்தில் வந்தபோது சந்தேகித்து அவனைக் கொல்ல முயன்ற தவாறான எண்ணத்திற்காக இங்கே வந்து பரதனுடன் சேர்ந்து ராமபிரானை துதித்ததால் திரு முழிக்களம் என்ற பெயர் என்றும் சொல்லுவர்.

கிடந்து இருந்து நின்று இயங்கும் போதும் நின்ன பொற்கழல்
தொடர்ந்து விள்விலாததோர் தடர்ச்சி நல்க வேண்டுமே

திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்ததில் (104) நான் அமர்ந்தும், நின்றும், நடமாடும் போதெல்லாம் உன்னையே நினைத்து தங்க நிறமான உன் திருவடிகளை ஆசையுடன், இடைவிடாது தியானிக்க நீ தான் அருள வேண்டும் என்றார்.

திருமங்கையாழ்வாரும், நம்மாழ்வாரும் 14 பாசுரங்கள் பாடியுள்ளார்கள்.

ஓழிவின்றித் திருமுழிக்களத்து உறையும் ஒண்சுடரை
ஒழிவில்லா அணிகழலைக் கிளிமொழியாள் அலற்றிய சொல்
வழுவில்லா வண்குருகூர்ச் சடகோபன் வாய்ந்துரைத்த
அழிவில்லா ஆயிரத்து இப்பத்தும் நோய் அறுக்குமே

என்று திருவாய்மொழியில் (9-7-11) நம்மாழ்வார் இந்த ஊர் பதிகத்தை முடிக்கிறார்.

ஸ்ரீ மதுரவேணி நாயிக ஸமேத ஸ்ரீ ஸுக்திநாத பரப்ரஹ்மணே நம:

80. திருவல்லவாழ்

எளியனாய் எண்ணிறத்த குணம் மிளிரும் திருவல்லபனாய்
வெளியமுள்ளும் கேட்பதும் காண்பதுமெல்லாம் கண்ணனே
ஒளியாய் உன்செல்வத்திருக்கொழுந்தை திருவாழ் மார்பில்
தெளிவாய் காட்டி நின்ற திருவல்லவாழ் கோலப்பிரானே

திருவல்லவாழ் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவானுக்கு கோலப்பிரான், திருவாழ்மார்பன் ஸ்ரீவல்லபன், என்றெல்லாம் திருநாமங்கள். நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார்.பகவான். தாயாருக்கு செலவத் திருக்கொழுந்து நாச்சியார், வாத்ஸல்ய தேவி என்று திருநாமம். பகவான்

பகவானின் பல திருக்கல்யாண குணங்களில் விசேஷமான எளிமையை முதலில் சொல்லியது. வாமனாவதாரத்திலேயும்,. கிருஷ்ணாவதாரத்திலேயும் இது தெளிவாகத் தெரியும். உடனே பகவானின் மற்ற எல்லா குணங்களும் ஞாபகம் வந்துவிட்டது. ஒன்று ஒன்றாய் சொல்லி மாளாது என்று கணக்கற்றதாய் ஜ்வலிக்கும் குணங்கள் என்று ஒரேடியாக சுருக்கிச் சொல்லப்பட்டது.

ஸமஸ்த கல்யாண கு3ணாம்ருதோத3தி4:

என்று ஸ்வாமி ஆளவந்தாரும் ஸ்தோத்ர ரத்னத்தில் (18) நீ இயற்கையாகவே எல்லாக் கல்யாண குணங்களுக்கும் அமுதக் கடலாய் இருக்கிறாய் என்றார்.

அகி2லஹேய பரத்யநீக கல்யாணைகதாந!!
அநந்த கு3ணநிதி4 தி3வ்ய ரூபா!
கல்யாண கு3ணக3ணௌக4 மஹார்ணவா!
கல்யாண கு3ணக3ண ஸ்ரீவல்லப4!

என்றெல்லாம் பகவத் ராமனுஜர் ஶரணாகதி கத்யத்தில் இசைத்துள்ளார்.

மான் கொண்ட தோல் மார்வில் மாணியாய் மாவலி மண்
தான் கொண்டு தாளால் அளந்த பெருமானை

பெரிய திருமொழியில் (6-8-1) திருமங்கையாழ்வார் வாமனன் வந்த காட்சியை விவரிக்கிறார். மான் தோலை ஒரு மாலை மாதிரி சாத்திக்கொண்டு ஒரு சிறிய பிரம்மச்சாரி வேஷத்தில் வந்தான். வாமனன் தன் திருமார்பில் சாத்திய மான் தோலை விலக்கி பிராட்டியைக் காட்டியதாக இந்த கோவிலில் ஐதிகம்.

பி4ஷோசிதம் ப்ரகடயந் ப்ரது2மாஶ்ரமம் த்வம்
கிருஷ்ணாஜிநம் யவநிகாம் க்ருதவாந் ப்ரியாயா: ।
வ்யக்தாக்ருதே ஸ்தவ ஸமீக்ஷ்ய பு4ஜாந்தரே தாம்
த்வாமேவ கே3ப நகரீ ஜநா விது3ஸ்த்வாம் ॥

என்று ஸ்வாமி தேசிகனும் தேஹளீச ஸ்துதியில் (11) பிக்ஷை வாங்குவதற்கு ஏற்றமாய் உள்ள ப்ரம்மசாரியத்தை காட்டிக் கொண்டு மான் தோலைக் கொண்டு மஹாலக்ஷ்மியை மறைத்துக் கொண்டாயே என்றார்.

தமஸ: பரமோ தா4தா ஶங்கா2சக்ர கா3தா3தா4ர: ।
ஸ்ரீவத்ஸ வக்ஷா: நித்ய ஸ்ரீ: அஜய்ய: சாஸ்வதோ த்ருவ: ॥

என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் (யு.கா. 114-115) மண்டோதரிகூட பிராட்டி ஸம்பந்ததைக் கொண்டுதானே ஸ்ரீராமபிரானை ஸ்ரீமந் நாராயணனாகவே ஸேவித்தாள்.

வாய் மொழிந்து வாமனன் ஆய் மாவலிபால் மூவடி மண்
நீ அளந்து கொண்ட நெடுமாலே -- தாவிய நின்
எஞ்சா இணை யடிக்கே ஏழ் பிறப்பும் மாளாகி
அஞ்சாதிருக்க அருள்

மூன்றாம் திருவந்தாதியில் (18) பேயாழ்வார் வாமனனின் திருவடிகளுக்கே அடிமையாய் ஏழு ஜன்மங்களுக்கும் பயமின்றி வாழ அருள்வாய் என்கிறார்.

சிவ பக்தன் கண்டாகரணன் என்று ஒருவன் முதலில் சிவனை ஆராதித்து வந்தான். மோக்ஷத்தை அடைய ஆசைப்பட்டு சிவனின் அறிவுரையின்படி பகவான் நாராயணனை நோக்கித் தவமிருந்து திருமந்திரத்தை ஓதி வந்தான். கண்டாகரணன் தன் காதில் மற்றைய சப்தங்கள் விழுந்து விடப்போகிறதே என்று பயந்து காதில் பெரிய குண்டலங்களை அணிந்து தலையை அசைத்துக் கொண்டே அந்த மணியின் சப்தத்தில் மற்ற ஓசைகள் காதில் விழாமல் கிருஷ்ண நாம ஸங்கீர்த்தனம், செய்தான். அவன் கேட்க விரும்பியது எல்லாம் கண்ணனைப் பற்றிய சங்கீதமே.

இந்த ஸ்தலத்தில் பெண்களை ஸன்னதியின் உள்ளே அனுமதிப்பதில்லை. வெளியிலிருந்து பெண்கள் கண்டு களிப்பதும் மற்றவர்கள் கர்ப்ப க்ரஹத்தின் உள்ளே வழிபடுவதும் எல்லாம் அந்த ஒரே பகவான் கண்ணனைத்தான்.

திருமங்கையாழ்வாரும், நம்மாழ்வாரும் 22 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

தொல் அருள் நல் வினையால் சொல்லக் கூடுங்கொல் தோழிமீர்காள்!
தொல் அருள் மண்ணும் விண்ணும் தொழ நின்ற திருநகரம்
நல்லருள் ஆயிரவர் நலன் ஏந்தும் திருவல்லவாழ்
நல்லருள் நம்பெருமான் நாராயணன் நாமங்களே

என்று திருவாய்மொழியில் (5-9-10) நம்மாழ்வார் திருவல்லவாழ் பெருமான் தன் திருவடிகளை எல்லோருக்கும் தருகிறான் என்றான். நல்லருள் நம்பெருமான் என்பது நாராயண சப்தத்தை விவரிக்கிறது. (வாத்ஸல்யம், ஸ்வாமித்வம்) என்பர் முன்னோர்.

ஸ்ரீ வாத்ஸல்யதேவி நாயிக ஸமேத ஸ்ரீ ஸ்ரீவல்லப பரப்ரஹ்மணே நம:

81. திருக்கடித்தானம்

கற்பகவல்லி களிக்கும் அற்புத நாராயணனே நீ
நிற்பதும் திருக்கடித் தானத்தில் நற்கதி நல்கவே
சொற் பொருள்மிகு கற்கும் நான் மறைகளும் * உன்
பொற்பதங்கள் காட்டித்தாம் ஏற்றம் கொண்டனவே

இந்த ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் மூலவருக்கு அத்புத நாராயணன், தாயாருக்கு கற்பகவல்லீ என்று திருநாமம்.

பகவான் இந்த ஸ்தலத்தில் அடியவர்க்கு அருள் செய்யவே அற்புதமாய் வந்து நின்றான்.

அகல இலாத் திருமகள் அன்பர் வந்தார்
அடி இரண்டும் ஆறாகத் தந்தார் வந்தார்
புகல் இல்லார் புகல் ஆகும் புனிதர் வந்தார்
பொன் உலகில் திருவுடனே தகழ்வார் வந்தார்
அகிலம் எலாம் ஆனந்தம் ஆனார் வந்தார்
அடி இணைக்கீழ் வைது அடிமை கொள்வார் வந்தார்
பகல் நடுவே இரவு அழைக்க வல்லார் வந்தார்
பகல் ஒன்றாய் இரவு அழித்தார் வந்தார்தாமே

என்று திருச்சின்னமாலையில் (7) ஸ்வாமி தேசிகன் எம்பெருமான் எதற்கு பூலோகத்தில் விபவாவதாரமாய் வந்தான், அர்ச்சையாவதார திருமேனியோடு எல்லாம் எழுந்தருளியிருக்கிறான் என்பதை த்வயத்தின் அர்த்த ரூபமாய் விவரித்து காட்டினார்.

எப்பொருட்கும் நின்றார்க்கும் எய்தாது நான்மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே

என்று ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் (12-6) பகவான் நான்கு வேதங்களின் சொல்லப்பட்ட சொற்களின் பொருளாகவே நிற்கிறான் என்றாள்.

பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்
பிண்டமாய் விரித்த பிறங்கொளி அனலும்
பெருகிய புனலோடு நிலனும்
கொண்டல் மாருதமும் குரைகடல் ஏழும்
ஏழு மாமலைகளும் விசும்பும்
அண்டமும் தானாய் நின்ற எம்பெருமான்

என்று திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (5-7-1) பகவான் தான் படைத்த எல்லாவற்றிலும் இருக்கிறான் என்கிறார். அவற்றில் ப்ரமாணம் என்று ஆசார்யர்கள்

கருதுவது ஶ்ருதி, ஸ்மிருதி, இதிஹாச, புராண, திவ்ய பிரபந்தங்கள். அவற்றிலும் வடமொழி வேதங்களுக்கே முதன்மையான ஸ்தானத்தை அளித்துள்ளார்கள்.

நாதன் ஞாலம் கொள் பாதன் என் அம்மான்
ஓதம் போல் கிளர் வேத நீரனே

என்று திருவாய்மொழியில் (1-8-10) நம்மாழ்வார் வேதம் கூறும் தன்மைகள் எல்லாம் நிறைந்தவன் எம்பெருமான் என்றார்.

சொல்லுவன் சொற்பொருள் தான் அவையாய்ச் சுவையூறு
ஓலி நாற்றமும் தோற்றமுமாய்

என்று பெரிய திருமொழியில் (2-9-1) திருமங்கை மன்னன் வேதங்கள் பகவானைக் காட்டுகின்றன என்றார். வேதங்கள் சொல்லும் கருத்துக்கள் கணக்கிலடங்காதவை. மேலேழுந்தவாரியாக பார்த்தால் அவை புலப்படாது. ப்ரம்மத்தை நன்கு அறிய வேண்டுமானால் வேதாந்த வாக்யங்களைக் கொண்டே விசாரிக்க வேண்டும் என்பது எம்பெருமானார் ஸாதித்த ஸ்ரீபாஷ்யத்தின் கருத்து.

அப்படிப்பட்ட மிக உன்னதமான கருத்துக்களை இங்கே எழுந்தருளியிருக்கும் அற்புத நாராயணனின் திருவடிகளை அடைந்தவர்கள் ஒரு நொடியில் அறிகிறார்கள்.. ஏனென்றால் அந்த உயர்ந்த வேதங்களுக்கு ஏற்றமே இந்த பகவானின் திருவடிகளுக்கு கீழ் இருப்பதால்தானே.

நாமதேயம் இன்னதென்ன வல்ல மல்லமாகிலும்
சாமவேத கீதனாய சக்ரபாணி அல்லையே?

என்று திருச்சந்தவிருத்தத்தில் (14) திருமழிசையாழ்வாரும் சாமவேத கீதன் ஸ்ரீமந் நாராயணனே என்றார். பகவானின் அந்த திருவடிகளை அடைவதற்கு ஆசாரியர்களே காரணமாய் இருக்கிறார்கள். ஒரு நல்ல ஆசாரியனை அடைந்து அவரைப் பணிந்து தன்னை தகுதியாக்கி கொண்டு அவருடைய கருணையால் வேதாந்த கருத்துக்களை அடைய முடியும் என்பதை உன்னுடைய திருவடிகள் காட்டிக் கொடுக்கின்றன.

நம்மாழ்வார் மட்டும் 11 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

அற்புதன் நாராயணன் அரி வாமனன்
நிற்பது மேவி இருப்பது என் நெஞ்சம்
நற்புகழ் வேதியர் நான்மறை நின்றதிர்
கற்பகச் சோலை திருக் கடித்தானமே

என்று திருவாய்மொழியில் (8-6-10) நம்மாழ்வார் பாடி மகிழ்கிறார். என்னுடைய இதயத்தில் அற்புத நாராயணன் வந்து அமர்ந்துள்ளான். அவனே நரசிம்மனாகவும், வாமனனாகவும் திருக்கடித்தானத்தில் எழுந்தருளியுள்ளான் என்று ஸாதித்தார்.

ஸ்ரீ கற்பகவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ அற்புத நாராயணன பரப்ரஹ்மணே நம:

82. திருச்செங்குன்றூர்

இமையவரப்பா! செங்குன்றூர் திருச்சிற்றாற்று மோகனரூபா
குமைகின்ற சிற்றின்பம் குலையவே குடிகொண்ட காவலனே
சுமைதனை நீக்கி சரண் அடைந்த அடியவர் அவருக்கு அரணாக
அமைகின்ற அருளாளா! செங்கமலவல்லி மகிழும் மணவாளா!

இமையவரப்பன் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். திருச்செங்குன்றூர் என்பது திவ்ய தேஸத்தின் பெயர். திருச்சிற்றாறு என்பது. பகவான் எழுந்தருளியிருக்கும் கோவிலையும் குறிக்கும். அங்குள்ள ஆற்றையும் குறிக்கும். செங்கமலவல்லி என்று தாயாருக்கு திருநாமம்.

அறிவு என்னும் தாள் கொளுவி ஐம்புலனும் தம்மில்
செறிவு என்னும் திண் கதவம் செம்மி -- மறை என்றும்
நன்கு ஓதி நன்கு உணர்வார் காண்பரே நாள் தோறும்
பைங்கோத வண்ணன் படி

என்று மூன்றாம் திருவந்தாதியில் (12) பேயாழ்வார் ஸாதிக்கிறார். மனத்தில் வைராக்யம் என்னும் தாழ்ப்பாள் போட்டு பஞ்ச இந்திரியங்களையும் அதற்கு உரிய இடத்தில் அடைத்து வேதத்தை இடைவிடாது சரியான முறையில் அத்யனம் செய்து பகவானை துதிப்பவர்கள் பசுமையான கடல் நிறக் கடவுளின் அருளுக்கு பாத்திரமாகி நன்மைகளை பெறுவர் என்றார்.

ஆழ்வார் அருளியபடி உலக விஷயங்களில் மனம் போனபடி செலுத்தாது கட்டுப்படுத்தி தீய நினைவுகளை உடனே ஒழித்து நல்ல நினைவுகளைக் கொடுத்து என்றும் என் மனத்தில் அமர்ந்து காக்கின்ற ரக்ஷகனே! உன்னையே நம்பி உன்னையே சரணாக அடைந்து உன் நினைவையே கொண்டு கைங்கர்யத்தில் களிப்பவர்களுக்கு நீ ரக்ஷகனாக நின்று அருளுகிறாய்.

ஐவர் அறுத்துத் தின்றிட அஞ்சி நின்னடைந்தேன்

பெரிய திருமொழியில் (7-7-7) திருமங்கையாழ்வார் ஐந்து இந்திரியங்களும் தம் இஷ்டத்திற்கு போய் பாவங்களை சம்பாதித்து அவைகள் கடைசியில் என் உயிரையே குடிக்கின்றன என்றார்.

ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம்
பாவியேனைப் பல நீ காட்டி படுப்பாயோ
தாவி வையும் கொண்ட தடம் தாமரைகட்கே
கூவிக் கொள்ளும் காலம் இன்னும் குறுகாதோ?

நம்மாழ்வார் திருவாய்மொழியில் (6-9-9) இந்திரியங்கள் ஐந்தும் படுத்தும் பாட்டை சொல்லுகிறார்.

புலன் ஐந்தும் மேயும் பொறி ஐந்தும் நீக்கி
நலம் அந்தம் இல்லதோர் நாடு புகுவீர்

என்று திருவாய்மொழியில் (2-8-4) நம்மாழ்வார் ஐந்து கரணங்களும் (சேவி, வாய், கண், மூக்கு, உடல்) ஐந்து புலன்களை (ஓளி, சுவை, நாற்றம், ஊறு, ஓசை என்கிற ரூபம், ரஸம், கந்தம், ஸ்பர்சம், சப்தம்) காட்டி அடிமைப் படுத்தும். அவற்றை விலக்கி மோக்ஷத்தை அடையும் உபாயத்தை செய்வீர் என்றார்.

கண்டு கேட்டு உற்றும் மோந்தும் உண்டு உழலும் ஐங்கருவி
கண்ட இன்பம் * தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம் *
ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப *
கண்ட சதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன் உன் திருவடியே.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் (4-9-10) கண்ணா நான் சிற்றின்பம் தவிர்த்து உன் திருவடி அடைந்தேன் என்கிறார். உண்மையான பேரின்ப ஞானத்தை ஆறிந்தவர்கள் மீதி அற்ப சுகத்தை துச்சமாக தூக்கி எறிவார்கள். உன்னையே சரண் கொள்வார்கள்.

அஹமஸ்ம்யபராத4ானாமாலயோऽகிஞ்சநோऽக3தி: ।
த்வமேவ உபாய பூ4தோ மே ப4வதி பராத்த2நாமதி: ॥
ஶரணக3த திரீத்யுக்தா ஸா தே3வேऽஸ்மிந் பரயுஜ்யதாம் ॥

என்று அஹிர்பு3த்4ந்ய ஸம்ஹிதையில் (37-29) "நான் குற்றங்களுக்கு இருப்பிடம். என்னைக் காத்துக் கொள்ள ஒர் உபாயமும் அற்றவன். உன்னைத்தவிர வேறு கதியின்றி இல்லை என்று இருக்கிறேன். நீயே எனக்கு உபாயமாய் ஆவாய் என்ற ஶரணாகதி பிராத்தனையை பகவானிடத்தில் செய்வாயாக" என்றது அல்லவா?

ப3ஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்3யதே ।
வாஸுதே3வஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுது3ர்லப4: ॥

பகவத் கீதையில் (7-19) கிருஷ்ணன் கூறுகிறான். பல பிறவிகளுக்குப் பின் கடைசிப்பிறவியில் தத்வ ஜ்ஞானத்தை அடைந்த சேதனன் எல்லாம் வாசுதேவனே என்று என்னை அடைக்கலம் கொள்கிறான். அந்த உயர்ந்த மஹான் கிடைத்தற்கு அரியது என்று கண்ணா, நீயே சொன்னாயே!

செங்கமல்வல்லி சந்தோஷிக்கும் இமையவரப்பா! உன் கல்யாண குணங்களைக் கண்டு மகிழும் அடியவர்களுக்கு உன்னுடைய திருமேனி அழகைக் காட்டி மோகன ரூபமாய் நிற்கின்றாயே!

நம்மாழ்வார் மட்டும் 11 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். ஒவ்வொரு பாசுரத்திலும் "திருச்செங்குன்றூர் திருச்சாற்றில்" என்று இரண்டு பெயரையும் சேர்த்தே அனுபவித்திருக்கிறார். மாட மாமயிலை திருவல்லிக்கேணி என்று மற்ற ஆழ்வார்களும் அனுபவித்த முறையிலேயே.

ஸ்ரீ செம்பகவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ இமையவரப்ப பரப்ரஹ்மணே நம:

83. திருப்புலியூர்

கரிய திருமால் கட்டழகைக் காட்டும் பரத்துவம் சொல்லும்
பெரிய மாயப்பிரான் * அவன் வலையில் சிக்கி நானவனுக்கே
உரியவனோ அடியாரடியார் அவரடியாரடியார் அவரடியார் கீழ்
சிறியேன் ஆனேன் முதலில் * திருப்புலியூரை அடைந்தபின்னே

திருப்புலியூர் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் மாயப்பிரான் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். பொற்கொடி நாச்சியார் என்று தாயாருக்கு திருநாமம்.

நீலத்தடவரை மேல் புண்டரீக நெடுந்தடங்கள் போல

என்று ஸ்வாமி நம்மாழ்வார் திருவிருத்தத்தில் (39) பெருமாளின் திருமேனி அதிசுந்தரமாய் கறுத்து இருக்கும் என்கிறார்.

கறுத்த மலைப் போல் பிரகாசிக்கும் திருமால் தன்னுடைய கட்டழகைக் காட்டி வசீகரிக்கிறான். அது மட்டும் இல்லை. ஜகத்காரணகன், மோஷத்தை அளிக்கும் வல்லமை உடையவன், அணுப்பிரவேசம் செய்பவன், ஸ்ரீயப்பதி என்று தானே பர தத்துவம் என்பதை நிர்ணயிக்கிறான் இத்தனையும் செய்கிறவன் அத்துடன் நிற்காமல், பலவிதமான மாய லீலைகளைச் செய்கிறான். அவன் அழகனா? பரந்தாமனா? இல்லை மாயங்கள் செய்யும் வித்தகனா? எப்படியோ அவன் வலையில் போய் சிக்கி வேறு ஒரு நினைவும் இல்லாது வெளியே வரத் தெரியாமலும் திகைக்கிறேன்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இப்படி என்னை ஆட்கொண்ட பெருமான் வலையில் விழ்ந்தவன் நான் ஒருவன் மட்டும் அல்ல. எத்தனையோ முன்னோர்கள் எனக்கு முன் இதைவிட மிகவும் அதிகமான ஆழத்தில் வீழ்ந்து அவனிடமே முழ்கியிருக்கிறார்கள். அந்த அடியவர்கள், அவருடைய அடியவர்கள், அவருடைய அடியவர்கள் என்ற வரிசைப் பட்டியலில் கடையில் ஒரு ஓரத்தில் நின்று எனக்கும் முன் நிற்கும் எல்லா முன்னோர்களையும் வரிசைக்கிரமாய் வணங்குகிறேன். நான் அவர்களுக்கு தொண்டன். அந்த வரிசையில் பகவானான உன்னை கடைசியாகத்தான் நினைக்கிறேன்

மாறு ஆய தானவனை வள் உகிரால் மார்வு இரண்டு
கூறாகக் கீறிய கோளரியை -- வேறாக
ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச்
சாத்தியிருப்பார் தவம்

நான்முகன் திருவந்தாதியில்(18) திருமழிசையாழ்வார் ஸாதிக்கிறார். பக்தனான ப்ரஹ்லாதனுக்கு தீங்கு இழைத்த இரணியனின் மார்பை இரண்டாக பிளந்த மிடுக்குடன் கூடிய நரஸிம்மனை வணங்குபவர் முதல் சாரார். அந்த பக்தர்களை ஆச்ரயித்து அவருக்கு தொண்டராய் இருப்பவர் இரண்டாம் சாரார். இதில்

இரண்டாவது சாரார் செய்யும் புண்யம் முதல் சாராரை வென்று விடும். அதாவது பாகவத பாரதந்த்ரயம் என்பது பகவத் பக்தியைவிட மிகச் சிறந்தது என்றார்.

வில்லி புதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே

என்று ஆண்டாளும் நாச்சியார் திருமொழியில் (10-10) காட்டினாள்.

ஆராத₄நாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோர் ஆராத₄நம் பரம் ।
தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீ₃ ஆராத₄நம் பரம் ॥

என்ற ப்ராசீனமான ஸ்லோகம். எல்லா ஆராதநங்களையும் விட விஷ்ணுவை ஆராதிப்பது மிகச் சிறந்தது. அதைவிட அவனுடைய அடியார்களை ஆராதிப்பது அதிலும் மிக உன்னதமானது என்றது

தவ த₃ாஸ்ய ஸுகை₂க ஸங்கி₃நாம் ப₄வநேஷ்வ ஸ்தவபி கீட ஜந்ம மே ।

என்று ஸ்வாமி ஆளவந்தாரும் ஸ்தோத்ர ரத்னத்தில் உனக்கே அடிமையாய் உள்ள அடியவர் திருமாளிகையில் எனக்கு புழு ஜன்மாவது உண்டாகட்டும் என்றார்.

எய்தற்கு அரிய மறைகளை ஆயிரம் இன்தமிழால்
செய்தற்கு உலகில் வரும் சடகோபனை -- சிந்தை உள்ளே
பெய்தற்கு இசையும் பெரியவர் சீரை உயிர்கள் எல்லாம்
உய்தற்கு உதவும் இராமாநுசன் எம் உறு துணையே

இராமாநுச நூற்றந்தாத்தியில் (18) திருவரங்கத்தமுதனார் மதுரகவிகளை பெரியவர் என்று அழைப்பதும் இதே கருத்தில்தான்.

மஜ்ஜந்மந: ப₂லமித₃ம் மதுகைடப₄ாரே
மத் ப்ரார்தநீய மத₃நுக்ரஹ ஏஷ ஏவ ।
த்வத்₃ ப்₄ருத்ய ப்₄ருத்ய பரிசாரக ப்₄ருத்ய ப்₄ருத்ய
ப்₄ருத்யஸ்ய ப்₄ருத்ய தி மாம் ஸ்மர லோகநாத₂ ॥

என்று குலசேகரப் பெருமாள் முகுந்த மலையில் (27) அருளியுள்ளார். மதுகைடபர்களை அழித்த லோகநாதா! என் ஜன்மாவின் பலன், நான் உன்னிடம் வேண்டி நீ அருள வேண்டியதும் இதுதான். உமது அடியார்க்கு அடியார் என்ற வரிசையில் ஏழாவது படியில் உள்ளவனாய் நீர் என்னை நினக்க வேண்டும் என்றார். இந்த உயர்ந்த கருத்தை திருப்புலியூருக்கு வந்து உன்னை ஸேவித்த பின்னே நன்கு உணர்ந்தேன்

நம்மாழ்வார் 11 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். கடைசி பாசுரத்தில் "நேர் பட்ட தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன் என்று சொல்லிக் கொள்கிறார். திருமங்கையாழ்வார் திருப்புலியூர் என்ற பெயரை மட்டுமே சிறிய திருமடலில் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ பொற்கொடி நாச்சியார் ஸமேத ஸ்ரீ மாயப்பிரான் பரப்ரஹ்மணே நம:

84. திருவாறன்விளை (ஆரம்முளா)

விண்ணில் விளங்கும் சோதி விரைவில் இன்பம் பயக்கவே
எண்ணிலா உருவமெடுத்து அருள்தரவே எங்கு நின்றாலும்
மண்ணில் திகழும் திருவாறன்விளை திருக்குறளப்பனையே
உண்ணாதுறங்காது என்கைதொழுது களைத்துநின்றனவே

திருவாறன்விளை (ஆரம்முளா) என்கிற திவ்ய தேஸத்தில் பகவான் திருக்குறளப்பன் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயாருக்கு பத்மாஸநி நநச்சியார் என்ற திருநாமம்.

துயரமே தரு இன்ப வினைகளாய் அவை அல்லனாய்
உயரே நின்றது ஓர் சோதியாய் உலகேழும் உண்டு உமிழ்ந்தான்

திருவாய்மொழியில் (3-6-8) நம்மாழ்வார் ஆகாயத்திற்கு மேல் உள்ள பரமபதம் என்னும் ஸ்ரீவைகுண்டத்தில் உயர்ந்த ஸ்தானத்தில் ஒப்பற்ற பரஞ்சோதியாய் பகவான் திகழ்ந்தான் என்கிறார்.

தத்3 விஷ்ணோ: பரமம் பத3ம் ஸதா3 பஶ்யந்தி ஸூரய: ।
தி3வீவ சக்ஷுராததம் தத்3 விப்ராஸோ விபந்யவோ
ஜாக்3ருவாம்ஸஸ் ஸமிந்த4தே விஷ்ணோர் யத் பரமம் பத3ம் ॥

என்று வேதம் (ரிக் அஷ்டகம் 1-2-7, சாமம் 3-18-2-4) கூறுகிறது. நித்யஸூரிகள், முக்தர்கள் எல்லோரும் ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் பரம புருஷனையே ஸேவித்து அவனுடைய திருப்பணியில் ஈடுபடுகிறார்கள். அதில் மகிழ்ந்து எம்பெருமான் மயங்கியிருக்கிறான்.

பிராட்டி பகவானுக்கு அறிவுரை கூறுகிறாள். விண்ணில் உள்ளவர்கள் மட்டும் இந்த சுகத்தை அனுபவித்தால் போதாது. மண்ணுலகில் வாழும் கோடிக்கணக்கான ஜீவராசிகளையும் எழுப்பி உய்விக்க வேண்டும் என்று தாயாருக்கே உள்ள பரிவுடன் கூறுகிறாள். அதைக் கேட்டு பகவானும் தன் கருணையால் மண்ணில் வாழும் உயிரினங்கள் உய்வு பெற பலவிதத்திலும் அருள் புரிகிறான்.

விண்மீதிருப்பாய்! மலைமேல் நிற்பாய்! கடல் சேர்ப்பாய்,
மண் மீது உழல்வாய்! இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் (6-9-5) ஸாதித்த மாதிரி சேதனர்களை உஜ்ஜீவிப்பதற்கே பகவான் பர, வ்யூஹ, விபவ ஹார்த, அர்ச்சா ரூபங்களாய் திகழ்கிறான்.

அவற்றில் விபவ அவதாரமாய் பாபங்கள் நிறைந்த மண்ணுலகிலும் தோன்றி பல அற்புத செயல்களை நடத்திக் காட்டுகிறான்.

அதிமாநுஷ ஸீலவ்ருத்த வேஷை:. அதிவிருத்தாமர விக்ரம ப்ரதாபை:
அதிலங்கிதத ஸ்ரவலோகஸாம்யாம் வரயே வைஷ்ணவ வைபவாவதாரம்

என்று கூரத்தாழ்வானும் அதிமானுஷஸ்தவத்தில் (1) பகவானின் விபவ அவதாரங்களின் மகிமையைப் போற்றுகிறார்.

இச்சா மீந விஹார கச்சப மஹா போத்ரீந் யத்ருச்சா ஹரே

என்று தஸாவதார ஸ்தோத்ரத்தில் (12) ஸ்வாமி தேசிகன் ஆரம்ப அவதாரத்திலேயே தன் இச்சையினால் தோன்றிய மத்ஸ்யாவதாரம் என்றார்.

தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமர் உகந்தது எப்பேர் மற்றப்பேர் - தமர் உகந்தது
எவ்வண்ணம் சிந்தித்து இமையாது இருப்பரே
அவ்வண்ணம் ஆழியானாம்

என்று பொய்கையாழ்வார் முதலாம் திருவந்தாதியில் (44) பகவான் தன் அடியவர்கள் எந்த ரூபத்தில், எந்த நாமாவுடன், எந்த குணங்களில் ஈடுபட்டு சிந்தனையில் கொள்கிறார்களோ நான் அவ்வாறே ஆகிறேன் என்கிறார்.

அர்ச்சாயவதாரமாய் நின்று நான் இங்கேயே குடி கொண்டிருக்கிறேன் "சேதனர்களே நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் வந்து என்னை ஸேவிப்பதற்காகவே நான் இங்கு காத்து கொண்டிருக்கிறேன்" என்று கூறி அருகிலிருந்து அருள் புரிகிறான். ஆனாலும் என்னுடைய மனமானது அந்த அவதாரங்களிலேயோ, இல்லை மற்ற அர்ச்சை மூர்த்திகளிலோ நாட்டம் கொள்ளாது திருவாறன்விளையில் குடி கொண்டிருக்கும் திருக்குறளப்பனையே தேடுகிறது.

உண்ணும் நாளில்லை உறக்கமும் தான் இல்லை
பெண்மையும் சால நிறைந்திலள் பேதைதான்

என்று திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (8-2-4) நாயிகா பாவத்தில் எம்பெருமானை நோக்கி பாடுவதாக எழுதியுள்ளார்.

இட்டகால் இட்ட கையளாய் இருக்கும்
எழுந்துலாய் மயங்கும் கைகூப்பும்

என்று திருவாய்மொழியில் (7-2-4) நம்மாழ்வார் நாயிகா பாவத்தில் வேதனையைக் கூறுகிறார். அதுபோல இந்த ஸ்தலத்தில் உள்ள எம்பெருமானிடம் மனம் பரி கொடுத்த பின் உணவோ செல்லவில்லை. தூக்கம் என்பது மறந்தே போய்விட்டது. அந்த பகவானை நினத்தே என் கைகள் கூப்பிய நிலையிலேயே மனம் களைத்து நிற்கிறது

நம்மாழ்வார் மட்டும் 11 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.
ஸ்ரீ பத்மாஸநி நாயிக ஸமேத ஸ்ரீ திருக்குறளப்ப பரப்ரஹ்மணே நம:

85. திருவண்வண்டூர் (திருவமுண்டூர்)

சேற்றில் மலரும் செந்தாமரையிலமர் மாதுடன் சேர்த்து
போற்றி உரைத்தேன் உன் பொன்னடி பெருமையை
ஊற்றம் உடைத்து வந்து அடைந்தேன் திருவண்வண்டூர்
மாற்றம் கொளாது காத்தருள்வாய் என்பாம்பணையப்பனே

பாம்பணையப்பன் கமலநாதன் என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் சேவை ஸாதிக்கிறான், திருவண்வண்டூர் என்ற திவ்ய தேஸத்தில். தாயாருக்கு கமலவல்லி நாச்சியார் என்ற திருநாமம்.

சேறு அசிங்கமானது. அறுவறுக்கத் தக்கது. அதில் மலரும் செந்தாமரையோ மிகவும் அழகும் வாசனையும் கொண்டது. எம்பெருமானே! அந்த செந்தாமரைமேல் அமர்ந்திருக்கும் பங்கயத்தாள், பிராட்டியோ உன்னை இணைவிடாது உன்னோடு என்றும் சேர்ந்தே மிதுனமாய் திகழும் பர தத்துவம்.

அதுபோல் என்னுடைய மனமும் உடலும் வெறுக்கத்தக்கது. செய்த பாபங்கள் எண்ணிலடங்காதவை.

அமர்யாத3 க்ஷுத்3ரஶ் சலமதி ரஸூயா ப்ரஸவபூ4:
க்ருதக்4 நோ து3ர்மாநீ ஸ்மர பர வஶோ வஞ்சந பர:
ந்ரும்ஶஸ: பாபிஷ்ட2: கத2 மஹ மிதோ து3:க்க2 ஜலதே:
அபாராது3த் தீர்ணஸ் தவ பரி சரேயம் சரணயோ:

ஆளவந்தாரும் ஸ்தோத்ரரத்னத்தில் (62) தம்முடைய குறைகளைக் கூறிக் கொள்கிறார். [அமர்யாத3: = வேதங்களில் சொன்னதை மீறியவன்; க்ஷுத்3ர: = நீசமான விஷங்களில் ஆசை உடையவன்; சலமதி = நிலையற்ற புத்தி உடையவன் (wavering mind); அஸூயா ப்ரஸவபூ4: = அஸூயைக்கு பிறப்பிடமாக (பிறர் நல்ல குணத்தைக் கண்டு காயும்); க்ருத4க்ந: = நமக்கு நல்லது செய்தவர்களுக்கும் தீமை செய்வது; து3ர்மாநீ = கெட்டதான கர்வத்தை உடையவன்; ஸ்மர பர வஶோ: = காம வஸப்பட்டவன்; வஞ்சந பர: = வஞ்சிப்பவன், எல்லோரையும் ஏமாற்றுபவன்; ந்ருஸம்ஸ: = கொடுமையான காரியங்கள் செய்பவன்; பாபிஷ்ட2: = பாபத்திலேயே மூழ்கி இருப்பவன்]

அஹமஸ்ம் யபராத4 சக்ரவர்த்தீ
கருணே த்வம் ச கு3ணேஷ்வ ஸார்வபௌ4மீ ।

என்று தயாஸதகத்தில் (30) ஸ்வாமி தேசிகன் தன்னை பாபங்களுக்கு எல்லாம் சக்கரவர்த்தியாகவும் பகவானின் தயை என்பது குணக் கடல்களுக்கு சக்கரவர்த்தினியாகவும் காட்டியுள்ளார். உண்மையில் குறைகள் அவர்களிடம் ஒன்றும் இல்லை. எல்லாக் குறைகளும் நம்மிடம்தான். நமக்காக அவர்கள் கூறுகிறார்.

ஆனால் என் வாயிலிருந்து வெளிவரும் பாடல்களோ உன்னருளால் தாமரை மலர்களை போன்ற அழகான கருத்துக்களைக் கொண்டவை. ஏனென்றால் அவற்றிற்கு காரணமும் நீயே காரியமும் நீயே. அந்த பாடல்கள் புகழும் உன் திருவடிகளோ அறம், பொருள் இன்பம், வீடு என்னும் சதுர்வித புருஷார்த்தத்தில் மிக உயர்ந்ததாய் போற்றப்படும் வான் வீடாகிற மோக்ஷத்திற்கே சாதனமவை அன்றோ!

மிக உன்னதமான அந்த உபாயத்தை ஆற்றல் தாங்காது பிராட்டியை முன்னிட்டு உரைத்தேன். "ஒரு முறை சரணாகதி என்று அடைந்தவனை என்றும் காப்பது என்னுடைய வ்ரதம்" என்றும் "சோகிக்காதே, எல்லா தர்மங்களையும் விட்டு என்னை ஒருவனையே சரணாக அடை" என்றெல்லாம் வாக்களித்தாய்.

தன்னடியார் திறத்தகத்து தாமரையாள் ஆகிலும் சிதகு உரைக்குமேல்
என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார் என்பர்

என்று பெரியாழ்வார் திருமொழியில் (4-9-2) பகவான் தன்னுடைய அடியவர்கள் செய்யும் குற்றங்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்ற உன் உரையை நம்பி நீ மனம் மாற மாட்டாய் என்கிற மஹா விசுவாசத்துடன் ஆர்வம் மிகுந்து உன்னையே வந்தடைந்தேன். என்னை காத்து அருள்வாய் பாம்பணையப்பனே!

அத்தனாகி அன்னையாகி ஆளும் எம்பிரானுமாய்
ஒத்து ஒவ்வாத பல்பிறப்பு ஒழித்து நம்மை ஆட்கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முன் மேவினார்
எத்தினால் இடர்க் கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே!

என்று திருச்சந்த விருத்தத்தில் (115) திருமழிசையாழ்வாரும் இதையே ஸாதித்தார்.

அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்
த்வாம் வா ஸீதே ஸ லக்ஷ்மணாம் ।
ந து பரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய
ப்₃ராஹ்மணேப்₄யோ விசேஷத: ॥

ஸ்ரீமத் ராமயணத்தில் (ஆ 10-19) ராமன் கூறுகிறான். நான் என் உயிரையும், தம்பி லக்ஷ்மணனையும் உன்னையும் விடுவேனேத் தவிர நான் செய்த ஸத்தியத்தை ஒரு பொழுதும் விட மாட்டேன். அதிலும் விசேஷமாக ப்ராம்மணர்களுக்கு கொடுத்த வாக்கை மாற மாட்டேன் என்றார். அதை நம்பியே உன்னை ஸரணடைந்தேன்.

கர்மண்யே அதி₄காரஸ்தே மா ப₂லேஷூ கதா₃சந ।
மா கர்ம ப₂லஹேதுர் பூ₄ர்மா தே ஸங்கோ₃ஸ்தவ கர்மணி ॥

என்று பகவத்கீதையில் (2-47) நீயே கூறினாய். கர்மாக்களை செய்வதற்குத்தான் எனக்கு அதிகாரம். பலன்கள் எல்லாம் உன் ஸங்கல்பத்தால் என நம்பி வந்தேன்.

நம்மாழ்வார் மட்டும் 11 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.
ஸ்ரீ கமலவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ கமலநாத பரப்ரஹ்மணே நம:

86. திருவனந்தபுரம்

அனந்தபத்மநாபனே உன்தாமரைத் திருமுகமும் உந்தியும் அடியும் என்
மனந்தனில் கண்டு கேசவா மாதவா கோவிந்தா என்றே கதறி அழுது
இனந்தனை இழுத்து இருவினை தொலைக்கும் உன் இணையடியை
நினைந்திருந்தே கைகூப்பி நெகிழ்ந்தேன் அனந்தபுரம் திசைநோக்கியே

திரு அனந்த புரம் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் எம்பெருமான் அனந்த பத்மநாபன் என்ற திருநாமத்துடன் புஜங்க ஸயனமாய் ஸேவை ஸாதிக்கிறான். தாமரைமணாளன் என்றும் பகவானுக்கு திருநாமம். தாயாருக்கு ஸ்ரீஹரி லக்ஷ்மி என்று திருநாமம்.

எம்பெருமானின் திருவுருவம் இந்த ஸ்தலத்தில் மிகவும் விசாலமானது. திருமேனியை மூன்று வாசல்கள் வழியாகத்தான் ஸேவிக்க முடியும். பகவானின் திருமுகமும், திரூவுந்தியும், திருவடியும் என்று மூன்று வாசல்கள் வழியாக தரிசிக்கலாம்.

கண்ணும் கமலம் கமலமே கைத்தலமும்
மண்ணளந்த பாதமும் மற்றவையே

என்று பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதியில் (9) பகவானின் திருக்கண்கள் தாமரை, திருமுகம் தாமரை, திருக்கைத்தலங்கள் தாமரை, திருவடி தாமரை என்றெல்லாம் வர்ணிக்கிறார்.

கண்ணும் செந்தாமரை கையும் அவை அடியோ அவையே
வண்ணங் கரியதோர் மால்வரை போன்று

என்று திருவிருத்தத்தில் (43) நம்மாழ்வார் அந்த கருத்தையே கூறுகிறார்.

நாமம் பல சொல்லி நாராயணா என்று
நாம் அம் கையால் தொழுதும் நன்னெஞ்சே!

என்று பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதியில் (8) பகவானின் பல திருநாமங்களைச் சொல்லி அழகிய நம் திருக்கையால் தொழுவோம் என்கிறார்.

அந்த அனந்த பத்மநாபனை நேரில் கண்டு ஸேவிக்க முடியாமல் போனாலும் என் மனத்தினால் அந்த காட்சியே நினைத்து கேசவா, மாதவா, கோவிந்தா என்றே உன்னை அழைத்து பக்தி பரவசத்தால் கதறி அழுகிறேன்.

சார்ந்த இருவல்வினைகளும் சரித்து மாயப் பற்று அறுத்து
தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி வீடு திருத்துவான்

என்று திருவாய்மொழியில் (1-5-9) நம்மாழ்வார் என்னோடு சேர்ந்து விலக்கமுடியாதவை என்கிற பாப புண்யங்களான கர்ம வினைகளை பகவான் தன் வாத்ஸல்ய குணத்தினால் ஒழித்து தள்ளினான். எனது ஸ்திரமில்லாத பொருள்களில் உள்ள நாட்டத்தையும் அழித்தான் என்கிறார்.

உண்டியே உடையே என்று உவந்து ஓடும் இம்
மண்டலத்தோடும் கூடுவதில்லை யான்

என்று பெருமாள் திருமொழியில் (3-4) குலகேகராழ்வார் ஸாதித்தாற்போல் பக்தர்களுக்கு உன்னுடைய செந்தாமரைத் திருவடிகளோ மக்கள் இனத்தையே தன்னிடம் கவர்ந்து இழுக்கும் காந்த சக்தி உடையது. சேதனர்களின் நல்வினை, தீவினை ஆகிய இரு விலங்குகளையும் விலக்கி நற்கதி அருளும் என்றே நினத்திருந்து என் கை கூப்பிய வண்ணம் நீ ஸயனித்திருக்கும் திசை நோக்கியே நான் தொழுகிறேன்.

ஊராய எல்லாம் ஓழியாமே நான் அவனை *
ஓரானைக் கொம்பு ஒசித்தத் தோரானை கோள் விடுத்த
சீரானை * செங்கணடியானைத் தேன் துழாய்த்
தாரானை * தாமரைபோல் கண்ணானை * எண்ணருஞ்சீர்
பேர் ஆயிரமும் பிதற்றி * பெருந்தேருவே
ஊரார் இகழிலும் ஊராது ஒழியேன் நான் *
வாரார் பும்பெண்ணை மடல்.

என்று சிறிய திருமடலில் திருமங்கை மன்னன் ஸாதித்தாற்போல் பகவனையே நினத்து அவனிடம் சேரும் காலத்தை எண்ணியே கதறுகிறேன்

நமாமி நாரயண பாதபங்கஜம்
கரோமி நாராயண பூஜநம் ஸதா
வதாமி நாராயண நாம நிர்மலம்
ஸ்மராமி நாராயண தத்தவம் அவ்யயம்

முகுந்தமாலையில் (35) குலசேகராழ்வார் ஸாதிக்கிறார். நான் எப்பொழுதும் ஸ்ரீமந் நாரயணனின் திருவடிகளையே ஸேவிக்கிறேன். அவனுக்கே பூஜை செய்கிறேன். அவன் திருநாமத்தையே எப்பொழுதும் ஜபிக்கிறேன். நாராயண என்ற உயர்ந்த தத்துவத்தையே மனத்தில் என்றும் நினைத்திருக்கிறேன் என்றார். அதுபோல் அனந்த பத்மநாபனே உன்னையே நினைத்து உன்னிடமே ஒன்றியிருக்கிறேன்.

நம்மாழ்வார் 11 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். "கெடும் இடர் ஆய எல்லாம் கேசவா என்ன" என்றே பதிகத்தை ஆரம்பித்து "கடுவினை களைய அனந்த புரம் அடைவீர்" என்றார்.

ஸ்ரீ ஸ்ரீஹரிலக்ஷ்மீ நாயிக ஸமேத ஸ்ரீ அநந்த பத்மநாப பரப்ரஹ்மணே நம:

87. திருவட்டாறு

சேரும் பரிதிமதி ஒளியும் திருமுகத்தில்
பேரும் கேசி கொன்ற ஆதி கேசவா!
ஆறும் பணிந்து வலம் வரும் அவன்
ஊரும் பிறப்பு அறுக்கும் திருவட்டாறே

ஆதிகேசவப் பெருமாள் என்ற திருநாமத்துடன் புஜங்கஸயனத்தில் ஸேவை ஸாதிக்கிறார் பகவான் திருவாட்டாறு என்னும் இந்த திவ்ய தேஸத்தில்.. மரகதவல்லி நாச்சியார் என்று தாயாருக்கு திருநாமம்.

பகவான் ஸயனத் திருக்கோலத்தில் கிடக்க பகலில் சூரியன் ஒளி பகவானின் திருமுகமண்டலத்தை அலங்கரித்து அற்புதமாக பிரகாசிக்கிறது. இரவில் சந்திர ஒளியும் அப்படியே. கர்ப்பக்ருஹத்தை இவ்வாறு அமைத்திருப்பது இந்த கோவிலில் ஒரு நூதனமான காட்சி.

முன்னொரு காலத்தில் கேஸி என்னும் ராக்ஷஸன் தேவர்களையும் மற்றும் சாதுக்களையும் துன்புறுத்தினான். அவர்கள் அந்த கொடுமை தாங்கமுடியாமல் பகவானிடம் சென்று முறையிட்டனர். பகவானும் அவர்கள் வேண்டுகோளுக்கு செவி சாய்த்து கேஸியைக் கொல்வதாக தீர்மானித்தான்.

கேஸியுடன் மல்யுத்தம் செய்து அவனை மரிக்க வரும்போது அவனுடைய மனைவி தன் கணவனைக் காக்குமாறு கங்கையை நோக்கிப் பிராத்தித்தாள். கங்கையும் அந்த ஊரில் பாயும் தாமிரபரணியுடன் சேர்ந்து வெள்ளப் பெருக்கெடுத்து பகவான் யார் என்று தெரியாமல் கேஸியுடன் சண்டையிட்டவனை அழித்துவிடலாம் என்ற இறுமாப்புடன் பொங்கி வந்தது.

பகவான் பூமிதேவிக்கு ஆணையிட அவர்கள் யுத்தம் செய்யும் பூமியின் ஒரு சிறிய பகுதி உயர்ந்து கொண்டே போய் ஆறு எட்டமுடியாதபடி உயரத்தில் மேடாக ஆனது. அதைக் கண்ட கங்கையும் தாமிரபரணியும் தங்கள் தவற்றை உணர்ந்து பகவானிடம் மன்னிப்பு கேட்டு அவரை ப்ரதக்ஷிணம் செய்து வணங்கிச் சென்றன. ஆறு வட்டமாய் வலம் வந்ததால் திரு வட்ட ஆறு என்ற பெயர் ஆயிற்று.

இனி யார் புகுவார் ஏழு நரக வாசல்
முனியாது மூரித் தாள் கோமின் - கனி சாயக்
கன்று எறிந்த தோளான் கணைகழலே காண்பதற்கு
நன்கு அறிந்த நாவல் அம் சூழ் நாடு

என்று முதல் திருவந்தாதியில் (87) பொய்கையாழ்வார், பாரத நாடு பக்தி மிகுந்த தெய்வீக நாடு. ஆழகிய நாவல் மரங்களை உடையதால் ஜம்பூத் த்வீபம் என்று அழைக்கப் படுகிறது என்றும் சொலுவர். இங்கே கண்ணன் பிறந்து பல ஆச்சிரியங்களான காரியங்களை செய்தான். ஒரு அசுரன் கிருஷ்ணனைக் கொல்ல

கன்று உருவத்தில் வந்தான். பழமாய் ஒரு அசுரன் வந்தான். மரத்தை உலுக்கி விளாம்பழங்கள் கீழே விழுமாறும் கன்றை எடுத்து அதன் மேல் வீசியும் இரண்டு அசுரர்களையும் அழித்தான்.

அப்படிப்பட்ட கண்ணன் திருவடிகளின் மகிமையை இந்த நாட்டில் உள்ளவர்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் இங்குள்ள மக்கள் ஏழு விதமான நரகங்களின் வாசல்களைக் கூட மிதிக்க மாட்டார்கள். அதனால் யம கிங்கரர்களே உங்கள் நரக வாசலைத் தாழ்ப்பாள் போடு பூட்டி வைப்பீர் என்றார்.

அந்த உயர்ந்த பாரத நாட்டிலே உயர்ந்ததாய் இருக்கும் திருவட்டாற்றில் வசிக்கும் மக்களுக்கு மறு பிறப்பு என்பதே கிடையாது.

நண்ணினம் நாரணனை நாமங்கள் பல சொல்லி
மண்ணுலகில் வளம் மிக்க வாட்டாற்றான் வந்து இன்று
விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் விதி வகையே
எண்ணினவாறாக இக்கருமங்கள் என் நெஞ்சே

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் (10-6-3) இந்த ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பகவான் ஸ்ரீமந் நாராயணன் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அளிப்பதற்கே காத்திருக்கிறான். இங்கே உள்ள பக்தர்கள் உடனே வேண்டும் என்று விரும்புகிறார்களோ இல்லையோ பகவான் கொடுப்பதற்கு நான் தயார் என்று அவசரப்படுத்துகிறான் என்றார்.

மற்று ஒரு பற்று இன்றி வந்து அடைந்தார்க்கு எல்லாம்
குற்றம் அறியாத கோவலனார் - முற்றும்
வினை விடுத்து விண்ணவரோடு ஒன்ற விரைகின்றார்
நினைவு உடைத்தாய் நீ மனமே நில்லு

என்று அமிருத ரஞ்சனியில் (86) ஸ்வாமி தேசிகன் பலன் தர பகவான் விரைகின்றான் என்றார். தன்னையே வந்து அடைந்த பக்தர்களின் குறைகளைக் காணாது வைகுண்ட பராப்தி தர ஓடி வருகிறான். அதை நினைத்து ப்ரப்த்தி செய்தவர்களே கவலையின்றை இருங்கள் என்றார்.

நம்மாழ்வார் மட்டுமே 11 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

- "இருள் தருமா ஞாலத்துள் இனிப்பிறவி யான்வேண்டேன் மருளாழி நீ மட நெஞ்சே! வாட்டாற்றான் அடிவணங்கே"என்று ஆரம்ப பாசுரத்திலேயே இந்த ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானிடம் வேண்டுகிறார்.
- "திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமாலார் சேர்விடம் தண் வட்டாறு" என்றும்
- "வானேற வழி தந்த வாட்டற்றான் பணி வகையே" என்றும்
- "எந்நன்றி செய்தேனா என்னெஞ்சில் திகழ்வதுவே" என்று பாடி மகிழ்ந்துள்ளார்.

ஸ்ரீ மரகதவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ ஆதிகேசவ பரப்ரஹ்மணே நம:

88. திருவண்பரிசாரம் (திருப்பதிசாரம்)

உண்மை எது என்று அறிவீர் ஓடிச் சென்று அடைவீர்
பெண்மை மிகு தன்மை உடைய நங்கை பெற்றெடுத்த
வண்மை வளர் வகுளாபரன் வணங்கிய திருவாழ்மார்பன்
திண்மையாய் வீற்றிருக்கும் திருப்பதி திருவண் பரிசாரமே

திருவண்பரிசாரம் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் திருவாழ்மார்பன் என்னும் திருநாமத்துடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். கமலவல்லி நாச்சியார் என்று தாயாருக்கு திருநாமம்.

பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் சொல்லி நின்று பின்னவரும்
பேசுவார் தமை உய்ய வாங்கிப் பிறப்பு அறுக்கும் பிரானிடம்

பெரிய திருமொழியில் (1-8-9) திருமங்கையாழ்வார் மக்களிடம் உண்மையான பரத்வம் எது என்று தெரிந்து கொள்ளுங்கள். திருமந்திரம் காட்டும் ஸ்ரீயப்பதியான நாராயணனையே நினைவீர் என்றார்.

மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிக உணர்ந்து
ஆம் பரிசு அறிந்து கொண்டு ஐம்புலன் அடக்கிக்
காம்பு அற தலை சிரைத்து உன் கடைத்தலை இருந்து வாழும்
சோம்பரை உகத்தி போலும்

திருமாலையில் (38) தொண்டரடிப்பொடி ஆழ்வார் கூறுகிறார். மெய் எது என்று உணர்வீர். உங்கள் ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்து கொள்ளுங்கள். மேன்மை தரும் என்ற அற்பமான இவ்வுலகத்து விஷயங்களை விட்டு பகவத் கைங்கர்யத்தை கண்டு கொள்க என்றார். ஐந்து இந்திரியங்களையும் அடக்கி மற்றவைகளில் பற்று நீக்கி உன் திருவாயில் வந்து உஜ்ஜீவிக்கும் தங்கள் நலத்தில் சோம்பராய் இருப்பவரைக் கண்டு நீ உகக்கமாட்டாயா? என்று த்வயம், சரம ஸ்லோகத்தின் சாரார்த்தத்தை ஸாதிக்கிறார்.

அதை நாம் திருவண்பரிசாரத்தைப் போய் சரணாகதி என்று அடைந்து காண்கிறோம். இந்த ஊரில்தான் உடைய நங்கை என்னும் திருநாமம் கொண்ட நம்மாழ்வாரின் திருத்தாயார் அவதரித்தார். பெண்மைக்கே உரிய குணங்கள் அனைத்து உடையவளாய் திகழ்ந்து திருக்குருகூரில் வாழும் காரி என்பவருக்கு வாழ்க்கைப் பட்டாள்.

துஞ்சும்போது அழைமின் துயர் வரில் நினைமின்
துயரிலீர் சொல்லினும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா என்னும் நாமம்

பெரிய திருமொழியில் (1-1-10) திருமங்கையாழ்வார் ஸாதித்த முறைப்படி அவர்கள் குழந்தைப் பேற்றிக்காக இந்த திவ்ய தேஸத்தில் விரதமிருந்து இந்த கோலிலில் காட்சி தரும் பகவானனையே சரண் அடைந்து வேண்டினர்.

ஸங்கீர்த்ய நாரயண ஶப்₃த₃ மாத்ரம்
விமுக்த்து₃க்க₃ாஸ் ஶ்ரேகி₃நோ ப₄வந்தி ॥

என்று ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் நாரயண சபத்ததை கீர்த்தனம் பண்ணிய மாத்திரத்திலேயே ஸகல துக்கங்களிலிருந்து விடுபட்டு சுகமடைகிறார்கள் என்கிறது.

நாராயண பரம் ப்₃ரஹ்ம தத்வம் நாரயண: பர: ।
நாராயணபரோ ஜ்யோதிர் ஆத்மா நாரயண: பர: ॥

என்று தைத்ரீய நாராயண உபனிஷத் (11) நாரயணனே பரப்ரம்மம். நாராயணனே பரம்பொருள். நாராயணனே பரமாத்மா. என்று நாராயண சப்தத்தால் வேறு எவரையும் குறிக்க மாட்டாத வேதாந்த வாக்யங்களில் மேன்மையாய் விளங்கி நிற்பவர் அவர் என்றது.

யஸ்ய ஸாரஸ்வதம் ஸ்ரோதோ வகுளாமோத₃ வாஸிதம் ।
ஶ்ருதீநாம் விஸ்ரமாயாலம் ஶட₂ாரிம் தமுபாஸ்மஹே ॥

என்று யதிராஜஸப்ததியில் (4) ஸ்வாமி தேசிகன் வேதங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும் என்று அதைவிட ஒரு படி உயர்ந்தது என்று சொல்லும்படியான அமுதமான தமிழ் வேதங்களை ஐயமற எல்லா சாதியினரும் தெளிவாய் அறிய அருளினார் மகிழம்பூ அணிந்த ஸ்வாமி நம்மாழ்வார் என்றார்.

அந்த நம்மாழ்வார் என்று அழைக்கப்படும் மாறனைப் இந்த பகவான் அருளால்தான் பெற்றெடுத்தார்கள். ப்ரபன்ன ஜன கூடஸ்தர், அவயவி என்று ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்ததிற்கே அரும் பெரும் தலைவராய் விளங்கும் சடகோபன் தன் தாயாரின் சொந்தாமான ஊர் என்று மகிழ்ந்து வணங்கிய இடம் இது.

நம்மாழ்வார் மட்டும் ஒரே ஒரு பாசுரத்தால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

வருவார் செல்வார் வண்பரிசாரத்து இருந்த * என்
திருவாழ் மார்வற்கு என் திறம் சொல்லார் செய்வது என் ? *
உருவார் சக்கரம் சங்கு சுமந்து இங்கு உம்மோடு *
ஒருபாடு உழல்வான் ஓர் அடியானும் உளன் என்றே

என்று திருவாய்மொழியில் (8-3-7) நம்மாழ்வார் திருநகரியிலிருந்து வண்பரிசாரம் போவது வருவதுமாய் மக்கள் தங்கள் காரியத்தை செய்கிறார்கள். யாராவது அந்த சக்கரம் கொண்ட பகவானிடம் உமக்கு பணி செய்ய அடியன் ஒருவன் உள்ளான் என்று கூற மாட்டீர்களா? என்று தலைவி சொல்வதாக அனுபவிக்கிறார்.

ஸ்ரீ கமலவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ திருவாழ்மார்பன் பரப்ரஹ்மணே நம:

பாண்டிய நாட்டு திருப்பதிகள் 18 (89 முதல் 106 வரை)

89. திருக்குறுங்குடி

உருகிய உள்ளம் உவந்து உன்னையே உணர்ந்து வணங்கும்
குறுகிய வாமனன் கரிய திருமால் கருத்துடன் நின்ற நம்பியும்
பெருகிய வெள்ளம் முனியருள பணிந்த வைணவ நம்பி தான்
பருகிய மந்திரமும் நம் பாடகன் பகிர்ந்த மன்னு குறுங்குடியே

நின்ற நம்பி என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார் திருக்குறுங்குடி என்னும் இந்த திவ்ய தேஸத்தில். குறுங்குடிவல்லி நாச்சியார் என்று தாயாருக்குத் திருநாமம்.

பகவானின் திருக்கல்யாண குணங்களைக் கேட்டு என் மனம் அவனையே அடைய வேண்டுகிறது. பகவானுக்கும் நம்க்கும் உள்ள உறைவை அறிந்து, பகவான் நமக்காக செய்யும் எத்தனையோ அறிய செயல்களை கண்டு மனம் வியந்து அவனையே வணங்குகிறது.

அண்டமெல்லாம் பரந்து எங்கும் வியாபித்திருக்கும் கரிய நெடுமாலான நீ உன்னை ஒரு குறுகிய உருவமாய் மாற்றிக் கொண்டு வாமனனாக அவதாரம் செய்தான். நித்ய ஸ்ரீ என்று போற்றும்படியாய் அந்த ரூபத்திலும் மற்ற அவதாரங்கள் போலன்று லக்ஷ்மீயை உன் திருமார்பில் எப்பொழுதும் விடாது தரித்தாய். உன்னுடைய ஸங்கல்பத்தை நீ நின்ற நம்பி என்னும் திருநாமத்துடன் இந்த திவய தேசத்தில் எல்லோரும் அறியும் வண்ணம் காட்சி தருகிறாய்.

செவிக்கு இன்பம் ஆவதும் செங்கண்மால் நாமம்
புவிக்கு புவி அதுவே கண்டீர்

என்று நான்முகன் திருவந்தாதியில் (69) பக்திசாரர் என்னும் திருமழிசையாழ்வார் சொல்லுகிறார். பகவான் நாமம் யம கிங்கரர்களை துரத்துபவை மட்டுமா? காதிற்கு இன்பம் பயப்பதில்லையா? பகவானின் செந்தாமரைக் கண்கள் எப்படி சுகமோ அதுபோல் அவன் திரு நாமங்களும். பூமியில் வாழும் எல்லோருக்கும் ஒதுங்கும்படியான நிழல் தருவது அதுதான் என்றார்.

நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன * நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது * தென் குருகை வள்ளல்
வாட்டம் இலா வண் தமிழ் மறை வாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டிய சீலத்து * இராமானுசன் தன் இயல்வு கண்டே

என்று இராமானுச நூற்றந்தாதியில் (54) திருவரங்கத்தமுதனார், எம்பெருமானார் ராமனுஜர் செய்த அரும் பெரும் செயல்களைக் கண்டு போற்றுகிறார். மடை திறந்த

வெள்ளம் போல் பகவானே உன் ஸ்வரூப, ரூப, குண, விபூதிகளை எம்பெருமானார் ராமானுஜ முனி அருளினார். வீண் சமயங்களை முறித்து ஸ்ரீமந் நாராயணனே பரதத்துவம் என்கிற உயர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை நிலை நிறுத்தினார்.

ஹரிபத3 மகரந்த3 ஸ்யந்தி3ந: ஸம்ஶ்ரிதாநாம்
அநுக3த பா3ஹ்யஶாக2: தாபமுந்மூலயந்தி ।
ஶமித து3ரித க3ந்த4: ஸம்யமீந்த்ர பரபா3ந்த4:
கத2க ஜந மநீஷா கல்பநா கல்ப வ்ருக்ஷ: ॥

என்று ஸ்ரீயதிராஜ ஸப்ததியில் (31) ஸ்வாமி தேசிகன் ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீசூக்திகள் பண்டிதர்களின் கற்பனையில் கற்பக மரங்கள் போல் தோன்றுகின்றன. பகவானின் திருவடிகளில் பெருகும் தேனைப் போன்றவை. வேதங்களின் பொருள்களை பாப வாசனையே இல்லாமல் பிற மதத்தினரை வாதத்தில் ஜயிக்க வேண்டிய அம்சங்களுடன் உள்ளவை என்றார்.

நீயும் அந்த ஒப்பிலாத்த ஆசாரியன் புகழைக் கண்டு மகிழ்ந்து அவர் திருவாக்கிலிருந்து உபதேசம் பெற வேண்டும் என்ற ஆசையால் அவருக்கு பணிந்து நல் சீடனாய் கைகட்டி வாய் பொத்தி நின்று மந்திரார்த்தத்தைக் கேட்டு அகமகிழ்ந்து அனுபவித்து வைணவ நம்பீ என்ற திருநாமத்தையும் சூட்டிக் கொண்டாய்.

நம்பாடகன் என்னும் பக்தர் கைசிக துவாதசியன்று தன்னை புசிக்க வந்த பிரம்ம ராக்ஷஸனுக்கு தன் புண்ணியத்தில் ஒரு பங்கை கொடுத்து பகிர்ந்து கொண்டதால் இந்த ஸ்தலம் ரக்ஷிக்கப் பட்டது என்று வராஹ புராணம் கூறுகிறது.

செவியின் சுவை உணரா வாய் உணவின் மாக்கள்
அவியினும் வாழினும் என்

என்று திருக்குறளும் காதுகளுக்கு சிறந்த உணவு என்னும் பகவத் நாமாக்களை கேட்காத மக்கள் பூமியில் இருந்தால் என்ன? இல்லாவிட்டல் என்ன? என்றது.

நாலு கவிபெருமான் என்றழைக்கப்படும் பண் இசைத்து பாடுவதிலும் வல்லவரான திருமங்கையாழ்வார் இந்த ஸ்தலத்திலிருந்துதான் பரமபதம் சென்றதாக வரலாறு. மோஷ சாம்ராஜ்யத்தை பகவானுடனும் மற்ற நித்யர்கள், முக்தர்களுடன் சேர்ந்து அனுபவித்து அந்த ஆனந்தத்தை பகிர்ந்து கொள்ள இவ்விடத்திருந்து பரமபதம் சென்றார் நம் பாடகனான திருமங்கை மன்னன்

பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய ஆழ்வார்கள் மொத்தம் 40 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

ஸ்ரீ குறுங்குடி நாச்சியார் ஸமேத ஸ்ரீ நின்ற நம்பீ பரப்ரஹ்மணே நம:

90. திருச்சிரீவரமங்கை

நாங்குஏரிசுழ் சிரீவரமங்கையில் தான்தோன்றிய தோதாத்ரிநாதா
பாங்காய் என்னைக் காத்து கற்பித்து ஒரு பொருளாக்கினையே
ஏங்குகிறேன் ஏழையேன் என்செய்கேன் கைம்மாறு இதற்கென
ஓங்குபுகழ் வானமாமலைநாயகா உணர்ந்தேன் எனதாவியுமுனதே

வானமாமலை, நாங்குனேரி, தோதாத்ரி கேஷத்ரம் என்னும் திருச்சிரீவர மங்கையில் பகவான் தோதாத்ரிநாதனாக வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான். சிரீவர மங்கைத் தாயார் என்று தாயாருக்குத் திருநாமம்.

ஒரு காலத்தில் இந்த ஸ்தலம் நான்கு ஏரிகளால் சூழப்பட்டு இருந்தது. அதனால் நான்கு ஏரி என்ற பெயர். அதுவே மழுவி நாங்குனேரி ஆயிற்று. இப்பொழுது ஒரு ஏரி மட்டும்தான் இங்கு உள்ளது. இந்த ஸ்தலம் ஸ்வயம் வக்த கேஷத்ரம் என்று பெயர் பெற்ற எட்டு திவ்ய தேஸங்களில் ஒன்றாகும். அதாவது மூர்த்தியும் ஸ்தலமும் தானே தோன்றியவை.

குலங்களாய ஈரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்
நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவின்றிலேன்
புலன்கள் ஐந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனித
நின் இலங்கு பாதம் அன்றி மற்றோர் பற்றிலேன் எம் ஈசனே

திருச்சந்த விருத்தத்தில் (90), திருமழிசை ஆழ்வார் சொல்கிற மாதிரி எம்பெருமானே! நான் கல்வி ஒன்றுமற்றவன். உன்னை அடையும் உபாயம் உண்மையில் எது என்று தெரியாமல் திரிபவன். தெரிந்த அறிவோ அறைகுறை. அதிலும் உன்னை அடைய வேண்டிய உபாயங்களை மேற்கொள்ள சக்தியோ, ஞானமோ அற்றவன்.

நீ உனக்கே உள்ள பொங்கும் கருணையால் என்னை நல்ல வழியில் திருப்பி காத்தாய், நல்லறிவு கொடுத்து உன்னை உணர்த்தினாய். நான் யோகமோ அல்லாது யாகமோ ஒன்றும் செய்யாமல் இருக்க நீயே என்மேல் பாசம் வைத்து கீழே ஆழ்ந்த சகதியில் கிடக்கும் என்னை தூக்கி உயர வைத்தாய். இதற்கு என்ன கைம்மாறு என்னால் செய்ய முடியும்?

வபுராதி3ஷு யோऽபி கோऽபி வா
கு3ணதோऽஸாநி யதா3 ததா3விதி4: ।
ததய3ம் தவ பாத3 பத்3மயோ:
அஹம்த்3யையவ மயா ஸமர்பித:

என்று ஸ்தோத்ரரத்னத்தில் (52) ஆளவந்தார் நான் ஸ்வரூபத்திலோ அல்லது ஸ்வாபவத்தலோ ஏதாகவும் இருக்கக் கடவேன். அதில் எனக்கு விருப்பமோ நிர்பந்தமோ இல்லை. ஆகையால் உம் திருவடித்தாமரைகளில் இந்த க்ஷணத்திலேயே ஸமர்ப்பிக்க பட்டேன் என்றார்.

ஐயோ! என் மனதுதான் எத்தனை பொல்லாதது. மிகவும் அல்பமானது. இப்பொழுதுதான் சொன்னேன், உன் அருளால் நான் யார் என்பதை உணர்ந்தேன் என்று. அதற்குள் என்னுடைய அகங்கார மமகாரங்கள் தலையெடுத்து "நான்" உனக்கு எனக்கு செய்யமுடியும் என்று சொல்கிறேன்.

என்னுடைய ஆத்மா உனக்கு சொந்தம். என் உடலோ அழியக்கூடிய அசேதன வஸ்து. இதற்கு நடுவில் "நான்" என்பது ஒன்றும் இல்லை என்பதை புரிந்து கொண்டேன் வானமாமலலை நாயகா! எல்லாம் உனதே!

மம நாத2! யத3ஸ்தி யோஸ்ம்யஹம்
ஸகலம் தத்3தீ4 தவைவ மாத4வா ।
நியமிஸ்வமிதி ப்ரபுத்3த4தீ4:
அத2வா கிந்து ஸ்மர்ப்பயாமி தே ॥

என்று ஸ்வாமி ஆளவந்தாரும் ஸ்தோத்ரன ரத்னத்தில் (53) ஸாதித்தார். ஸர்வ ஸ்வாமியான உனக்கு என்னுடைய சொந்தமான பொருள்கள், யான் என்று சொல்லக்கூடியது இவை எல்லாம் முழுவதும் உனக்கே சொந்தமானது என்று தெரிந்த பிறகு உனக்கு எதைத்தான் ஸமர்பிக்க முடியும் என்கிறார்.

யானே என்னை அறியகிலாதே
யானே என்று எனதே என்று இருந்தேன்
யானே நீ என் உடைமையும் நீயே
வானே ஏத்தும் என் வானவர் ஏறே

என்று திருவாய்மொழியில் (2-9-9) நம்மாழ்வார் கூறுகிறார். நானும் என் உடைமைகளும் உனக்கு அடிமை என்பதை அறியாமல் "நான்", "எனது" என்ற விபரீத புத்தியுடன் இருந்து விட்டேன். நானும் எனது உடைமையும் உன் அங்கமே என்று உணர்ந்தேன். நித்யஸூரிகளின் தலைவன் நீ அல்லவோ என்றார்.

எனது ஆவியும் நீ பொழில் ஏழும் உண்ட எந்தாய்
எனது ஆவி யார்? யான் யார்? தந்த நீ கொண்டாக்கினையே

என்று திருவாய்மொழியில் (2-3-4) ஸ்வாமி நம்மாழ்வாரும் ஏழு உலகங்களையும் காத்த அப்பனே நீ என் ஆத்மாவுடன் கலந்து கொடுத்த அனுபவத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? என் ஆத்ம ஸ்வரூபத்தையே உனக்கு அர்ப்பணிக்கிறேன். உடனே யார் உடைமையை எடுத்து யாருக்கு கொடுத்தேன் என வருத்தப்படுகிறார்.

ஸ்வாமி தேசிகன் ஆத்ம ஸ்மர்ப்பணம் என்பது கைம்மாறு கருதிய கடமை. ஆனால் மோக்ஷ உபாயம் அன்று. உபாயமாகில் பிராந்தி, அனுதாபம் என்பதற்கு இடமே இருக்காது. பகவானின் உயர்வும், நம்முடைய சிறுமையும் நோக்கும்போது இவ்வார்த்தைகள் வெளிவரும் என்றார்.

நம்மாழ்வார் மட்டும் 11 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ஸ்ரீ சிரீவர மங்கை நாயிக ஸமேத ஸ்ரீ தோதாத்ரீநாத பரப்ரஹ்மணே நம:

91. திருவைகுண்டம்

அரவு குடை பிடிக்க வைகுந்தத்துள் நின்ற கள்ளப்பிரானே
இரவு முடியும்முன் இறைஞ்சியவர்க்கு இளகிய எம்மிறையே
திருவு சேர் மால் எனத் திகழும் திருவைகுண்டநாதா உம்மை
மருவுதலும் மாளாப் பணி கொள்ளுதலும் மண்ணவர் விதியே

வைகுந்தநாதன், கள்ளப்பிரான் என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் திருவைகுண்டம் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் ஸேவை ஸாதிக்கிறார். வைகுந்தவல்லி, பூதேவி என்று இரண்டு தனிக்கோவில் நாச்சியார்கள்.

உத்ஸவ மூர்த்திக்கு கள்ளப்பிரான் என்று திருநாமம். உதஸவரை ஆக்கிய சிற்பி, பகவானின் ஸௌந்தர்யத்தில் மயங்கி, அவருடைய கன்னத்தை ஆசையாக கிள்ளினதால் உத்ஸவ மூர்த்தியின் இரண்டு கன்னங்களிலும் சிறிய குழி ஏற்ப்பட்டது என்பது வரலாறு.

இந்த ஸ்தலத்தில் ஆதிஸேஷன் குடைபிடித்து பகவான் வீற்றிருந்து காட்சி தருவது தனிச் சிறப்பு. காலதூஷகன் என்று ஒரு திருடன் இருந்தான். இரவில் பொருளைத் திருடி சம்பாதிப்பவன். அவன் தான் திருடியதில் ஒரு பங்கு இங்குள்ள பகவானுக்கு என்று ஸமர்ப்பிப்பது வழக்கம். ஒரு இரவு திருடும்போது கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டான். அரசன் முன் கொண்டு நிறுத்தினார்கள்.

எங்கேயாவது அரசன் தன்னைக் கொன்று விடுவானே என்ற பயத்தில் தனக்கே தெரியாமல் திருவைகுண்ட பெருமானை நினைக்க ஆரம்பித்தான். பகவானுக்கு தர்ம சங்கட நிலை. திருட்டு பொருளை முன்பு ஏற்றுக் கொண்டதால் பகவானும் திருட்டிற்கு ஒத்துழைத்தான் (accomplice) என்று ஆகும். அதனால் அந்த திருடனைக் காக்க வேண்டிய பொறுப்பு ஏற்ப்பட்டது.

திருடனுடைய மனத்தில் எம்பெருமான் தான் ஏறி அரசனுக்கு தத்துவ உபதேசங்களை புகட்டி காலை விடிவதற்குமுன் அரசனின் மனததை மாற்றினார். பகவான் ஸமஸ்த கல்யாண குணங்களை உடையவன். ஆனாலும் கள்ள ரூபத்தில் உபதேசித்ததால் இந்த பகவானுக்கு கள்ளப்பிரான் என்றும் பெயர்.

லக்ஷ்மிக்கு நாதன் என்னும் புகழ் பெற்ற வைகுண்டநாதா! உம்னை சரணாக அடைவதும் உமக்கே பணி செய்திருப்பதும் மண்ணுலகில் உள்ள எல்லா ஜீவாத்மாக்களின் விதி அல்லவோ? இன்று இல்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் எல்லோரும் இதை உணரப் போகிறார்கள்.

நாளேல் அறியேன் எனக்குள்ளன * நானும்
மீளா அடைமைப் பணி செய்ய புகுந்தேன்

என்று திருவாய்மொழியில் (9-8-4) நம்மாழ்வார் பகவானின் ஸேவை என்பதில் புகுந்தவர் யாரேனும் திரும்பினார் என்ற கேள்வியும் உண்டோ? என்றார்.

வைகுந்தம் புகுதலும் வாசலில் வானவர்
"வைகுந்தன் தமர் எமர், எமது இடம் புகுது" என்று
வைகுந்தத்து அமரரும் முனிவரும் வியந்தனர்
வைகுந்தம் புகுவதும் மண்ணவர் விதியே

என்று திருவாய்மொழியில் (10-9-9) நம்மாழ்வார் திருமால் அடியவர்கள் பரமபதத்தை அடைந்து எம்பெருமானுக்கு பணி செய்வது என்பது நம் விதி. அவரவர் பாவ புண்யங்களைப் பொறுத்தது என்று அருளினார்.

ஸம்ஸார பந்தத்தில் கிடந்து உழலும் சேதனர்களின் வினைப்பயன்களை இரவிற்கு ஒப்பிடப்படுகிறது. அதை நோக்கும்போது இனி எத்தனை ஜன்மங்கள் பிறந்து இறக்க வேண்டும் என்பது கணக்கிலடங்காது. அதற்கு முன்பாகவே தம்மை இறைஞ்சியவர்களை, அதாவது தன்னிடம் சரணாகதி செய்தவர்களுக்கு பகவான் அவைகளை நீக்கி மோக்ஷ ப்ராப்தியைத் தருகிறான்.

எஞ்சா வெந்நரகத்து அழுந்தி நடுங்குகின்றேற்கு
அஞ்சேல் என்று அடியேனை ஆட் கொள்ள வல்லானை

என்று பெரிய திருமொழியில் (5-9-6) திருமங்கை மன்னன் பகவான் நரகதிற்கு செல்லாது நம்மை ஆட்கொண்டு நல்ல கதியைத் தருவான் என்றார்.

வெள்ளை நீர் வெள்ளத்து அணைந்த அரவணைமேல்
துள்ளு நீர் மெள்ளத் துயின்ற பெருமானே
வள்ளலே! உன் தமர்க்கு என்றும் நமன் தமர்
கள்ளர் போல்

என்று பெரிய திருமொழியில் (8-10-7) பகவானுடைய அடியவருக்கு யமனுடைய தூதர்கள் திருடர்கள் போல் அஞ்சி காணாது போல் விலகுவர் என்றார்.

வேம்பின் புழு வேம்பின்றி உண்ணாது, அடியேன்
நான் பின்னுமுன் சேவடி அன்றை நயவேன்

என்று பெரிய திருமொழியில் (11-8-7) திருமங்கை மன்னன் வேம்பின் புழு வேம்பையே உண்ணுவது போல் பகவானே உன்னையே விரும்பி உன்னடி வந்து அடைந்தேன் என்றார். உமக்கு பணி செய்வது என்பது மறுக்க முடியாத தத்துவம்.

நம்மாழ்வார் மட்டும் இரண்டு பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். "புளிங்குடிக் கிடந்து வரகுண மங்கை இருந்து வைகுந்தத்துள் நின்று" என்றும் "திங்கள் சேர் மாடத் திருப்புளிங்குடியாய்! திருவைகுந்தத்துள்ளாய்" என்றும் பாடியுள்ளார்.

ஸ்ரீ வைகுந்தவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ வைகுந்தநாத பரப்ரஹ்மணே நம:

92. திருவரகுணமங்கை

வீற்றிருக்கும் வரகுணமங்கை விஜயாஸனப்பெருமானே உம்மை
ஏற்றியிருக்கும் படநாகம் குடை பிடிக்க தேவிமாரும் சூழ்ந்தனரே
சாற்றியிருக்கும் அடியவரும் வெற்றி விமானம் சுற்றி வலம் வந்து
போற்றி புகழ்ந்து புவியில் பிணைக்கும் பிறவிக்கடலை பிரிந்தாரே

விஜயாஸனப் பெருமான் என்ற திருநாமத்துடன் பகவான் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான் திருவரகுண மங்கை என்னும் இந்த திவ்ய தேஸத்தில். வரகுணவல்லித் தாயார் என்று தாயாருக்குத் திருநாமம்.

பெண்களின் ஸத்யத்தை நிலை நாட்டும் சிறப்பு குணத்தை உயர்த்தி காட்டுவதால் இந்த ஸ்தலத்திற்கு இப்பெயர் வந்தது. அக்னி, ரோமஸ மஹரிஷி, ஸத்யவான் முவரும் உயர்ந்தவர்களாக இருந்தாலும் ஸீதை, புசுந்தா, சாவித்ரி என்கிற கற்புக்கரசிப் பெண்களே தர்மத்தை அவர்களுக்கு போதித்தனர். பெண்மையின் தூய்மையை போற்றும் ஸ்தலமாக உள்ளது இது.

சென்றால் குடை ஆம் இருந்தால் சிங்காசனம் ஆம் *
நின்றால் மர அடி ஆம் நீள் கடலுள் * -- என்றும்
புணை ஆம் மணி விளக்கு ஆம் பூம்பட்டு ஆம் புல்கும்
அணை ஆம் * திருமாற்கு அரவு

என்ற முதல் திருவந்தாதியில் (53) பொய்கையாழ்வார் வாக்கின்படி ஆதிஸேஷன் இங்கே குடை பிடிக்கிறார், தர்மத்தின் மேல் வெற்றி ஆசனத்துடன் பகவான் வீற்றிருந்து அருகில் தேவிமார்கள் சூழ காட்சி தருகிறான்.

காந்தஸ்தே புருஷோத்தம: பு₂ணிபதி: ஶய்யா ஆஸநம் வாஹநம்
வேதாத்மா விஹகேஶ்வரோ

என்று ஸ்வாமி ஆளவந்தாரும் இதே கருத்தை சதுஶ்லோகியில் ஸாதித்தார். நாகங்களின் அரசானான ஆதி ஶேஷன் பகவான் ஸயனித்திருக்க படுக்கையாகவும் அமர்ந்திருக்க ஆசனமாகவும் ஸேவை செய்கிறான் என்றார்.

நிவாஸ ஶய்யாஸந பாது₃காம்ஶுக
உபதா₄ந வர்ஷாதபவாரணாதி₃பி₄:
ஶரீர பே₄தஸ் தவ ஶேஷதாம் க₃தைர்
யதே₂சிதம் ஶேஷி இதீரிதே ஜநை:।

என்று ஆளவந்தார் இதே கருத்தை ஸ்தோத்ர ரத்னத்திலும் (40) காட்டியுள்ளார்.

நோற்றேன் பல்பிறவி உனைக் காண்பதோர் ஆசையினால்
ஏற்றேன் இப்பிறப்பே இடர் உற்றன எம்பெருமான்

பெரிய திருமொழியில் (1-9-8) திருமங்கையாழ்வார் ஸாதித்த முறையில் அடியவர்கள் அனைவரும் இக்கோவிலின் விஜயகோடி விமானத்தை, வெற்றி விமானத்தை சுற்றி வந்து பகவானின் கல்யாண குணங்களைப் போற்றி அவன் அடி பணிந்து பிறவி என்னும் விலங்கை அறுத்து ஒழிக்கின்றனர்.

பவஜலதிகதாநாம் த்வந்த்வ வாதாஹதாநாம்
ஸுததுஹித்ரு களத்ர த்ராண பாராரார்திதாநாம் ।
விஷம விஷய தோயே மஜ்ஜதாம் அப்லவாநாம்
பவது சரணமேகோ விஷ்ணுபோதோ நராணாம் ॥

முகுந்தமாலையில் (12) குலசேகராழ்வாரும் சொல்லுகிறார். ஸம்ஸாரக் கடலில் தத்தளிப்பவர்களும் சுகம் துக்கம் ஆகிய இரண்டு காற்றால் வீழ்த்தப்பட்டவர்களும் மனைவி, மக்கள் என்ற குடும்ப பாரத்தில் அமிழ்ந்து வருந்துபவர்களும் விஷம் போன்ற உலக விஷய சுகங்களில் திளைத்திருப்பவர்களும் ஓடமில்லாமல் தவிப்பவர்களையும் விஷ்ணு என்னும் ஓடம் ஒன்றே கரை சேர்க்க புகலாகிறது என்றார்.

குலந் தாங்கு சாதிகள் நான்கிலும் கீழ் இழிழ்ந்து எத்தனை
நலந்தான் இலாத சண்டாளன் சண்டாளர்கள் ஆகிலும் *
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணற்கு ஆளென்று * உள்
கலந்தார் அடியார் தம் அடியார் எம் அடிகளே

என்று திருவாய்மொழியில் (3-7-3) நம்மாழ்வார், எம்பெருமானுக்கு அடியவர்கள் எந்த கீழ்த்தரமான சாதிகள் ஆயினும் எமக்கு அவரே தெய்வம். மணிவண்ணனான பகவானின் அடியவர்களின் அடியவர்கள் எமக்கு கடவுள் என்போம் என்று பாகவத ஸேஷத்வத்தை சிறப்பிக்கிறார்.

திருவுடன் வந்த செழுமணிபோல் திருமால் இதயம்
மருவு இடம் என்ன மலர் அடி சூடும் வகை பெறும் நாம்
கருவுடன் வந்த கடுவினை ஆற்றில் விழுந்து ஒழுகாது
அருவுடன் ஐந்து அறிவார் அருள் செய்ய அமைந்தனரே

என்று அதிகார ஸங்க்ரஹத்தில் (8) ஸ்வாமி தேசிகன் கர்ப்ப வாசம் என்பதே இல்லை யாருக்கு என்றால் அர்த்த பஞ்சகத்தை அறிந்து பகவான், ஆசாரியர், பாகவதர் அடி பணிந்தவர்களுக்கு என்றார்.

நம்மாழ்வார் மட்டும் ஒரே ஒரு பாசுரத்தால் மங்களாசாஸனம் செய்துள்ளார். "புளிங்குடி கிடந்து வரகுண மங்கை இருந்து" என்ற ஒரே ஒரு சொற்றொடர் திருவாய்மொழியில் மட்டுமே காணப் படுகிறது.

ஸ்ரீ வரகுணவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ விஜயாஸனப் பெருமாள் பரப்ரஹ்மமே நம:

93. திருப்புளிங்குடி

குடி கிடந்தார் தொண்டர் குலம் உம் கோயிலிலே
அடி நோக்கி உம்மருளும் திருவருளும் வேண்டியே
படி கிடக்கும் பத்தரின் பகைநீக்க பல்லாயுதம் ஏந்தி
வடிவுடன் கிடந்தாய் புளிங்குடி காய்ச்சின வேந்தே

காய்ச்சினவேந்தன் என்ற திருநாமத்துடன் பகவான் புஜங்க ஸயனத்தில் ஸேவை ஸாதிக்கிறான் திருபுளிங்குடி என்னும் இந்த திவ்ய தேஸத்தில். மலர்மகள் நாச்சியார் என்றுத் தாயாருக்குத் திருநாமம்.

ந காமகலுஷம் சித்தம் மம தே பாத₂யோ ஸ்தி₂தம் ।
காமயே வைஷ்ணவத்வம் து ஸர்வ ஜந்மஸு கேவலம் ॥

என்று ஜிதந்தே ஸ்லோகம் (13) கூறுகிறது. உம் திருவடிகளில் லயித்த என் மனம் பரபதத்தைக் கூட புருஷார்த்தமாக எண்ணவில்லை. எல்லாப் பிறவிகளிலும் உமக்கே அடிமை செய்யவே ஆசைப்படுகிறேன் என்று.

எம்மா வீட்டுத் திறமும் செப்பம் நின்
செம்மா பாத பற்பு தலை சேர்த்து * ஒல்லைக்
கைம்மா துன்பம் கடிந்த பிரானே
அம்மா! அடியேன் வேண்டுவதும் ஈதே

என்று திருவாய்மொழியில் (2-9-1) நம்மாழ்வாரும் இதே கருத்தை ஸாதித்தார்.

அந்த பரம புருஷார்த்தமான எண்ணத்தில் திருப்புளிங்குடி என்னும் இந்த திவ்ய தேஸத்தில் உள்ள அடியவர்கள் அனைவரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள்தாம். உமக்குத் தொண்டர் என்பதே அந்தக் குலம். அவர்கள் உம்முடைய கோலிலேயே பகலும் இரவும் பணி செய்கிறார்கள். உம்முடைய அருளும், உன் திருமார்பை விட்டு என்றும் அகலாத திருவின் அருளும் வேண்டித் தவம் கிடக்கின்றனர்.

திருமந்திரத்தில் "நாராயணாய" பதத்தில் உள்ள "ஆய" என்ற நான்காம் வேற்றுமை உருபின் பொருளாக நிற்கின்றனர். அது அநந்யார்ஹ சேஷத்வத்தையும் பகவத் பார தந்த்ரியத்தையும் காட்டுகிறது. அவனுக்கே என்றும் பணி செய்யவே இருக்கிறோம் என்ற நினைப்பு.

பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்
கொண்டு, நின் கோயில் சீய்த்துப் பல படிகால் குடிகுடி வழி வந்தாட் செய்யும்
தொண்டரோர்க்கு அருளிச்சோதி வாய்திறந்து உன்தாமரைக்கண்களால் நோக்காய்
தெண்டிரைப் பொருநல் தண் பணை சூழ்ந்த திருப்புளிங்குடி கிடந்தானே

என்று திருவாய்மொழியில் (9-2-1) நம்மாழ்வார் திருப்புளிங்குடியானே மிகக் பழைய காலம் தொடங்கியே உன் திருவடிகளையும் அதற்கு காரணமான பிராட்டி திருவடிகளையும் அடைந்து உம்மிருவர் அருள் பெற்றோம். உமது கோலிலில் பலவிதமான திருப்பணிகளுடன் சீய்த்தல் என்னும் தரையை பெறுக்கி சுத்தம் செய்வது போன்ற உயர்ந்த பணிகளை வழி வழியாக பெற்றோம். நீ உன் சோதிவாய் திறந்து பேச வேண்டும். உன் கடாக்ஷம் எங்கள் மேல் விழ வேண்டும் என்றார்.

ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப

என்று திருவாய்மொழியில் (4-9-10) என்று இருவர் சேர்த்தியையே சரண் அடைகிறார்.

பிராட்டியின் கருணை தாயின் பொங்கும் பரிவானது. அது பகவானின் தயையைவிட ஒரு படி உயர்ந்தது என்பர் நம் ஆசாரியர்கள்.

மாதர் மைதி$_2$லி ராக்ஷஸீஸ் த்வயி ததை$_3$வார்த்$_3$ராபராத$_4$ாஸ்த்வயா
ரக்ஷந்த்யா பவநாத்மஜா ல்லகு$_4$தரா ராமஸ்ய கே$_3$ாஷ்டூ$_2$ க்ருதா ।
காகம் தஞ்ச விபீ$_4$ஷணம் ஶரண மித்யுக்தி க்ஷமெள ரக்ஷத:
ஸா நஸ் ஸாந்த்$_3$ர மஹாகஸஸ் ஸ்மிக$_2$யது க்ஷாந்திஸ் தவாSSகஸ்மிகீ ॥

ஸ்ரீகு$_3$ணரத்ந கோஶத்தில் (5) பராசர பட்டரும் தாயே மைதிலி!, நீ அபராதம் செய்த ராக்ஷஸீகளை அனுமனிடமிருந்து அப்போதே ரக்ஷித்தாய். ஆனால் ராமனோ காகாசுரன், விபீஷணன் இவர்களை அவர்கள் தஞ்சமென்று வந்து வீழ்ந்த பிறகே ரக்ஷித்தான். அதனால் அவனுடைய கூட்டம் ஒரு படி தாழ்த்தப்பட்டது அப்படிப்பட்ட வேறோன்றும் நாடாத உம்முடைய கருணையானது எங்களை ரக்ஷிக்கட்டும் என்றார்.

பகவான் தன்னுடைய அடியவர்களைக் காக்க வேண்டும் அவர்களுக்கு தீங்கிழைக்கும் கொடியவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில், ஆவேசத்துடன் மஹா கோவத்தினால் காய்ச்சின வேந்தனாய் இருக்கிறான்.

கத$_3$ா புநஸ் சங்க$_2$ ரத$_2$ாங்க$_3$ கல்பக:
த்$_4$வஜாரவிந்த$_3$ாங்குச வஜ்ரலாஞ்ச$_2$நம் ।
த்ரிவிக்கிரம: த்வத் சரணாம் பு$_3$ஜத்$_3$வயம்
மதீ$_3$ய மூர்த்த$_4$ா நமலங்கருஷ்யதி ॥

என்று ஸ்தோத்ர ரத்னத்தில் (31) ஆளவந்தார் திரிவிக்கிரமாவதாரம் செய்த பகவானே! சங்கு, சக்கரம், கல்பகவிருக்ஷம், கொடி, தாமரை, அங்குசம், வஜ்ராயுதம் இவை எல்லாம் அடையாளமாக உடையவனே என்றார். கையில் திவ்ய ஆயுதங்கள் அனைத்தும் ஏந்தி அடியவர்களைக் காக்க வேண்டும் என்கிற ஆர்வத்துடன் புறப்பட்ட நீ, இங்கு உன் வடிவழகைக் காட்டி சயனத் திருக்கோலத்தில் படுத்துக் கிடக்கின்றாயே!

நம்மாழ்வார் மட்டும் 12 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். "காய்ச்சின ஆழி சங்கு வாள் வில் தண்டு ஏந்தி எம் இடர் கடிவானே" என்கிறார்.

ஸ்ரீ மலர்மகள் நாச்சியார் ஸமேத ஸ்ரீ காய்ச்சின வேந்தன் பரப்ரஹ்மணே நம:

94. திருத்தொலைவில்லிமங்கலம்

வில்லாய் புருவம் கருந்தடக்கண்ணி காதல் மயக்கத்திலும்
சொல்மாறா துலையாய் நிற்கும் செந்தாமரைக் கண்ணனே
பல்லாயிர உயிர்களும் உள்ளம் உரை உடலால் கொள்ளும்
கல்லும் கரையும் திருத்தொலைவில்லிமங்கல தேவப்பிரானே

இரட்டைத் திருப்பதி என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் தேவப்பிரானாய் நின்ற திருக்கோலத்திலும் செந்தாமரைக் கண்ணன் என்ற திருநாமத்துடன் வீற்றிருந்த திருக்கோலத்திலும் ஸேவை ஸாதிக்கிறான். இரண்டு கோவில்களையும் ஒரே திவ்ய தேஸமாகக் கருதுவது ஆசசரியர்களின் வழக்கு.

அத்திரேய ஸுப்ரபர் என்னும் ரிஷி இந்த இடத்தில்தான் ஒரு யாகசாலையை அமைத்து வெகு சிரத்தையாக யாகங்களை நடத்தி வந்தார். யாகசாலையில் ஒரு நாள் அவர் துப்புரவு செய்ய வந்த போது ஒரு தராசையும் வில்லையும் கண்டார். தராசை துலாம் என்றும் அழைப்பர். அதனால் இந்த ஊருக்கு "திருத் துலாம் வில் மங்கலம்" என்கிற பெயர் மருவி திருத்தொலை வில்லி மக்கலம் என்றாயிற்று.

கருந்தடக்கண்ணி என்று தாயாருக்கு திருநாமம். வில் போன்று அழகாய் வளைந்த தாயாரின் புருவங்கள் பகவானின் மனத்தை ஈர்த்து வசீகரிக்கிறது. பகவான் அந்த தாயாருடன் தனித்து சந்தோஷத்தில் மயங்கியிருந்தாலும் தன்னுடைய பக்தர்களிடம் "அபயம் ஸர்வபூதேப்யோ", பரித்ராணாய சாதுநாம்" என்றெல்லாம் பரக்க பேசியவன் ஒரு க்ஷணம் கூட தாமதிக்காமல் ரக்ஷகனாய் காக்கின்றான். தன் சொல்லை மாறாமல் பக்தர்களை என்றும் நழுவ விடாத அச்சுதன் அவன்.

த்வயி கிஞ்சித் ஸமாபந்தே கிம் கார்யம் ஸீதயா மம ।
ப$_4$ரதேந மஹாப$_3$ாஹோ ! லக்ஷ்மணே ந யவீயஸா
ஶத்ருக்$_4$நேந ச ஶத்ருக்$_4$ந ! ஸ்வ ஶரீரேண வா புந: ॥

ஸ்ரீமத் ராமாயணத்தின் ஸ்லோகம் (யு 41-4). பகவான் ஸ்ரீராமன் சொல்லுகிறார். "நீண்ட கைகளை உடைய சுக்ரீவனே! என்னை சரணாக அடைந்த உனக்கு ஓர் அவமானம் நேர்ந்தால் ஸீதை, பரதன், லக்ஷ்மணன், சத்ருக்னன் இவர்களால் எனக்கு என்ன பயன்? பகைவர்களை அழிப்பவனே! என்னுடைய உடம்பால்தான் என்ன பயன்?" என்று தன்னை சரணாகதி அடைந்தவர்களை காக்கும் விரதத்தின் உறுதியையும் அதன் பெருமையும் சொல்லுகிறார்.

"உள்ளம் உரை செயல் - உள்ள இம்மூன்றையும்
உள்ளிக் கெடுத்து இறை - உள்ளில் ஒடுங்கே"

என்று ஸ்வாமி நம்மாழ்வார் திருவாய்மொழியில் (1-2-8) ஜீவாத்மாக்கள் கணக்கில் அடங்காதவை. அவை எல்லாம் பகவானை மனோ வாக் காயை என்கிற மூன்றினாலும் சேஷத்வ அனுஷ்டானத்தை போற்றி உகக்கின்றன என்றார்.

அவர்களை ரக்ஷிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் அருகில் வந்து அர்ச்சாவதார மூர்த்தியாய் நின்றாயே தொலைவில்லி மங்கல தேவப் பிரானே!

"மனோ வாக் காயை: அநாதி3கால பரவ்ருத்த
அநந்த அக்ருத்ய கரண க்ருத்யாகரண"

என்று சரணாகதி கத்யத்தில் பகவத் ராமானுஜரும் இம்முன்றினாலும் ஜன்மம் ஜன்மாந்த்ரமாக செய்யும் அக்கிரமங்களை தவிர்த்து பகவானை சரண் அடை என்றார்.

"சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே
தந்தை தாய் என்றடைந்த வண் குருகூர் சடகோபன் சொல்"

என்று திருவாய்மொழியில் (6-5-11) நம்மாழ்வார் இந்த பகவானையே உள்ளம், உரை, உடலால் கொண்டேன் என்கிறார். முன்றிலும் மனம்தான் மிகவும் முக்யம்

மந ஏவ மநுஷ்யாணம் காரணம் ப3ந்த4 மோக்ஷயோ: ।
ப3ந்த4ாய விஷயஸாங்கி3 முக்தையை நிர்விஷயம் மந: ॥

என்று விஷ்ணுபுராணத்தில் பராசர மஹரிஷி ஸாதிக்கிறார். சேதனன் அடையும் ஸம்ஸாரத்திற்கும் மோக்ஷத்திற்கும் அவன் மனம்தான் காரணம். ஆற்ப சுகங்களில் ஈடுபட்ட மனம் ஸம்ஸாரத்தையே மீண்டும் மீண்டும் வரவழைக்கிறது. இதர விஷயங்களில் உள்ள பற்றை நீக்கினால் அதுவே முக்திக்கு ஹேதுவாகிறது என்றார்.

அற்றது பற்று எனில் உற்றது வீடு உயிர்
செற்றது மன்னுறில் அற்றிறை பற்றே

என்று திருவாய்மொழியில் (1-2-5) நம்மாழ்வார் இதே கருத்தைத்தான் ஸாதித்துள்ளார்.

அர்ச்சாவதார மூர்த்திக்கு மற்ற எம்பெருமானின் நிலைகளைவிட கருணை அதிகம் வாய்ந்தது என்பதை ஆழ்வார்கள், ஆசாரியர்கள் காட்டியுள்ளார்கள். அந்த எம்பெருமானை ஒரு தடவை ஸேவித்தால் போதும் மஹா கிராதகன், கல் நெஞ்சம் உடையவன் என்று சொல்லக் கூடிய பாவிகளின் மனதுகூட கரைந்து விடும்.

நீராய் அலைந்து கரைய உருக்கின்ற நெடுமாலே

என்று திருவாய்மொழியில் (5-8-1) நம்மாழ்வார் பகவானை நினக்கும்போதே மனது எல்லாம் கரைந்து உருகித் திரவமாக ஆகிறது என்றார். பகவானும் நாம் செய்யும் சரணாகதிக்கு, அஞ்சலிக்கு மயங்கி, தன் மனத்தை பறிகொடுத்து அவனும் திரவமாக கரைகிறான் என்று பொருள்.

நம்மாழ்வார் மட்டும் 11 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். என்று பாடி மகிழ்கிறார்.

ஸ்ரீ கருந்தடங்கண்ணி நாயிக ஸமேத ஸ்ரீ அரவிந்தலோசன பரப்ரஹ்மணே நம:

95. திருக்குளந்தை

ஆயர் பாடி ஆயன்போல் அரக்கன் மேல் நின்றாடும்
மாயக் கூத்தா மங்கை திருக்குளந்தை வல்லி நாயகா!
தூய மலர் கொண்டு உன்னையே துதிக்கும் தொண்டரும்
நேயமாய் பெருங் குளத்தைத் தம் தேசமாய் கொண்டனரே

பெருங்குளம், திருகுளந்தை என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் ஸ்ரீநிவாஸன், மாயக் கூத்தன் என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். அலமேலு மங்கைத்தாயார், குளந்தைவல்லி என்று இரண்டு உபய நாச்சிமார்கள். ஒரு காலத்தில் இங்கு பெரிய குளம் ஒன்று இருந்ததால் பெருங்குளம் என்று இந்த ஊரை அழைத்தனர்.

அச்மஸாரன் என்ற ராக்ஷஸனை பகவான் மாய யுத்தத்தால் தோற்கடித்தார். அவனைக் கீழே தள்ளி அவன் தலையின் மேல் ஏறி நின்று நாட்டியமாடி அவனை ஸம்ஹரித்தார். பகவானுக்கு துவாபர யுகத்தில் இடையனாக இருந்து காளிங்க நர்த்தனம், வெண்ணெய்ப் பானைகள் மேல் ஆடிய நாட்டியம் போன்ற லீலைகள் நினவுக்கு வந்து விட்டது போலும்.

புலன் ஐந்து மேயும் பொறி ஐந்தும் நீங்கிப்
நலம் அந்தம் இல்லதோர் நாடு புகுவீர்

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் (2-8-4) மோக்ஷத்தில் உள்ள பகவானை அடைவதற்கு வழி சொல்லுகிறார்.

தேவும் எப்பொருளும் படைக்கப்
பூவில் நான்முகனை படைத்த
தேவன் எம்பெருமானுக்கு அல்லால்
பூவும் பூசனையும் தகுமே?

என்று திருவாய்மொழியில் (2-2-4) நம்மாழ்வார் நாராயணன் ஒருவன்தான் முழு முதற் கடவுள். அவனுக்கு பூக்கள் இட்டு, பூஜை செய்யாமல் மற்ற தெய்வங்களுக்கு செய்கிறீரே என்று வருந்துகிறார்.

நாடீர் நாடோறும் - வாடா மலர் கொண்டு
பாடீர் அவன் நாமம் - வீடே பெறலாமே

என்று திருவாய்மொழியில் (2-2-4) நம்மாழ்வார் எம்பெருமானை தினமும் பரிசுத்தமான அன்று மலர்ந்த பூக்களைக் கொண்டு ஆராதித்து அவன் திருநாமங்களையே எப்பொழுதும் ஒதுபவர்கள் வான் வீடு என்னும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையே அடையலாம் என்றார்.

அவ்வாறு உன்னையே வணங்கி உன் பாதங்களை பரிசுத்தமான வாசனை மலர்களைக் கொண்டு அர்ச்சிக்கும் தொண்டர்களும் அன்புடன் இந்த பெருங்குளத்தையே தம்முடைய வாஸ ஸ்தலமாகக் கொண்டார்கள்.

நேசமிலாதவர்க்கும் நினையாதவர்க்கும் அரியான்
வாசமலர்ப் பொழில் சூழ் வட மாமதுரைப் பிறந்தான்

என்று பெரிய திருமொழியில் (9-2-6) திருமங்கையாழ்வார் பகவான் அருள் செய்வதில்லை யாருக்கு என்றால், அவனை நினக்காதவருக்கு, அவனை அன்புடன் நேசித்து போற்றிப் புகழ்ந்து துதிக்காதவர்களுக்கு என்கிறார்.

பகவானை நேசிப்பது என்பது நம்முடைய மனத்தால் எப்பொழுதும் ஸ்மரிப்பது, அங்கங்களால் பணி செய்வது என்பதை

ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி
தச்சித்தம் யத்த த்₃ர்ப்யதம் ।
தாவேவ ச கரௌ ஶ்லாக்₄யௌ
யௌ தத்பூஜாகரௌ கரௌ ॥

என்று ஹரிவம்ஸத்தில் (1) வரும் ஸ்லோகம். எது ஹரியை துதிக்கிறதோ அதுதான் நாக்கு. எது அவனிடம் ஸமர்ப்பிக்கப்பட்டதோ அதுதான் மனம். எவை அவனை பூஜை செய்கின்றனவோ அவைதான் கைகள். அவைதான் உயர்ந்தவை என்றது.

ஜிஹ்வே கீர்தய கேஶவம் முரரிபும் சேதோ ப₄ஜ ஸ்ரீத₄ரம்
பாணித்₃வந்த்₃வ ஸமர்சயாச்யுத கதா₂: ஶ்ரோத்ரத்வய தவம் ஶ்ருணு ।
கிருஷ்ணம் லோகய லோசநத்₃வய ஹரேர் க₃ச்சாங்க்₄ரியுக்₃மாலயம்
ஜிக்₄ர க்₄ராண முகுந்தபாத₃ துலஸீம் மூர்த₄ந் நமாதோ₄க்ஷஜம் ॥

முகுந்த மாலையில் (16) குலசேகராழ்வார் இதையே வேண்டுகிறார். நாக்கே கேசவனை ஸ்தோத்ரம் செய். மனமே! முராரியை பஜனை செய். இரு கைகளே! ஸ்ரீதரனுக்கே அர்ச்சனை செய்வீர்கள். காதுகளே! அச்சுதன் கதைகளைக் கேளுங்கள். கண்களே! கிருஷ்ணனையே காணுங்கள். மூக்கே! முகுந்தனின் திருவடி துளஸியை நுகர்வாய். தலையே! பகவானை வணங்கு என்று தன்னுடைய ஒவ்வொரு அங்கமாக பகவானை வழிபட்டு மகிழ்ச்சி அடைய வேண்டும் என்று வேண்டுகிறார்.

நம்மாழ்வார் மட்டுமே ஒரே ஒரு பாசுரத்தால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிக ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

96. திருக்கோளூர்

வாழ்வாரவரே சோறும், நீரும், சுகமும் கண்ணனே என்னும்
ஆழ்வாருக்கே அடியேன் என அவதரித்த திருக் கோளூரில்
சூழ்வாரே திருவும் தினையளவும் அகலா வைத்தமாநிதியை
தாழ்வாரும் தரமாக தமிழ்ச் சுருதியைத் தீர்வாகத் தெரிந்தே

நிஷேபவித்தன், வைத்தமாநிதி என்னும் திருநாமங்களுடன் பகவான் புஜங்க ஸயனத் திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார் இந்த திவ்ய தேஸத்தில். குமுதவல்லி, கோளூர்வல்லி என்று இரண்டு உபய நாச்சிமார்கள்.

இந்த ஸ்தலத்திற்கு அதர்ம பிசுனம் என்றும் பெயர். தர்மம் பகவானை ஸேவித்து இந்த ஊரில் வாழ்ந்து வரும்போது அதனுடன் சண்டையிட்ட அதர்மத்தை வேரோடு அழித்து ஓட்டி விட்டதால் இந்த பெயர் என்று ஐதிகம்.

குபேரன் பார்வதியின் சாபத்தால் நவநிதிகளைப் பிரிந்து அவைகளை அடைய பகவான் நாராயணனை நோக்கித் தவம் இருந்தான். பகவான் தானும் அவன் முன் தோன்றி அவனுக்கு தைரியம் அளித்து நவநிதிகளின் வேண்டுகோளுக்கிணங்க நிக்ஷேபவித்தன் திருநாமம் கொண்டு அவைகளை காத்து வந்ததாக சரிதம்.

அலை அற்ற ஆர் அமுதம் அக்கடல் உண்ட முகில்
விலை அற்ற நன்மணி வெற்பு வெயில் நிலவு ஓங்கு பகல்
துலை உற்றன என்பர் தூமறை சூடும் துழாய் முடியாற்கு
இலை ஒத்தன அவன் பாதம் பணிந்தவர் எண்ணுதற்கே

அமிருதரஞ்சனியில் (6) ஸ்வாமி தேசிகன் பாகவதர்களின் உயர்வை போற்றுகிறார். யாராலும் இயற்றப்படாத வேதங்கள் புகழும் எம்பெருமானுக்கு உதாரணமாய் அலையே இல்லாத அமுதமான கடல், கடல்நீரை உறிஞ்சும் மேகங்கள், வெய்யிலும், நிலவும் சேர்ந்த பகல், விலை மதிக்க முடியாத மாணிக்கங்கள் என்று கவிகளின் அற்பமான கற்பனை. ஆனால் அந்த எம்பெருமானின் திருவடிகளை பூஜிக்கும் பக்தர்களுக்கு உபமானத்தை மனத்தால் நினைக்கக் கூட முடியாது என்றார். பாகவதர்கள் எம்பெருமானை விட உயர்ந்தவர்கள் என்ற பொருளை ஸாதித்தார்.

வியன் முவுலகு பெறினும் போய்த் தானே தானே ஆனாலும்
புயல் மேகம் போல் திருமேனி அம்மான் புனை பூங்கழல் அடிக் கீழ்
சயேமே அடிமை தலை நின்றார் திருத்தாள் வணங்கி இம்மையே
பயனே இன்பம் யான் பெற்றது உறுமோ பாவியேனுக்கே

என்று திருவாய்மொழியில் (8-10-2) நெடுமாற்கடிமை பதிகத்தில் நம்மாழ்வார் ஸாதிக்கிறார். ஐச்வர்யம், ஆத்ம அனுபவம் இவை எல்லாம் அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தில் ஆழ்ந்து பணி செய்யும் அடியவரின் ஒரு துளியான பகுதிக்கும் சமம் ஆகாது. இஹலோகத்தில் பாகவதர்கள் திருவடிகளைப் பிடித்துக் கொள்வதே பரம

புருஷார்த்தம் என்றார். அந்த கருத்தை நடைமுறையில் காட்டி பாகவதோத்தமரான மதுரகவிகள் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்ளும் தம் ஆசார்யனையே தெய்வமாக கருதி அவர் புகழையே பாடிக் களித்தார்.

"தேவு மற்றறியேன்" என்று கண்ணுன் சிறுத்தாம்பு பாடிய மதுர கவிகள் அவதரித்த திருத்தலம். "உண்ணும் சோறும், பருகு நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணனே" என்று பாடிய ஆழ்வாரின் பாதங்களையே ஆஸ்ரயித்து, அவரையே தெய்வமாகக் கருதி 11 பாசுரங்களைப் பாடி ஆழ்வார் என்று பெயர் பெற்றவர் மதுர கவிகள்.

அன்பர்க்கே அவதரிக்கும் மாயன் நிற்க
அருமறைகள் செய்தான் தாளே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்
தொல்வழியே நல்வழிகட் துணிவார்கட்கே

என்று அதிகார ஸங்க்ரஹத்தில் (2). ஸ்வாமி தேசிகன், பகவான் தன் அடியவருக்கு எது வேண்டுமானும் சரி செய்ய காத்திருக்க அதைத் தவிர்த்து வேதம் தமிழ் செய்த மாறனின் திருவடிகளை அடைந்த குற்றமில்லாத மதுரகவி என்றார். ஆழ்வார்க்கடியன் என்ற நாமம் பூண்டு பாகவத பாரதந்த்ரியத்தின் எல்லையாய் விளங்கும் மதுரகவிகள் அவதரித்த ஊரான திருக்கோளூரில் அடியவர்கள் அனைவரும் பிராட்டியை ஒரு க்ஷணமும் பிரியாத பகவான் வைத்தமாநிதியை அறிந்து கொண்டார்கள்.

ஸ்ருதி, ஸ்மிருதி, இதிகாச புராணங்கள், மற்றும் ஆசார்யர்கள் அருளிய ஸ்ரீ சூக்திகள் இவை யாவற்றையும் நன்கு கசடறக் கற்று முடிவாக தீர்மானமாக உயர்ந்த புருஷார்த்தம், அடையும் இன்பத்தின் எல்லை எது என்பதற்கு விடை மிக எளிதாகக் கிடைக்கும். அது பகவானின் அடியவருக்கு செய்யும் தொண்டு ஒன்றேதான் எல்லா கைங்கர்யங்களிலும் சாலச்சிறந்தது. பாகவத பாரதந்த்ரியமே இன்பத்தின் எல்லை நிலம் என்று ஆசார்யர்கள் பணிப்பர். இந்த ஊரில் உள்ள தொண்டர்கள் அனைவரும் இதை மதுரகவிகள் வழியாக அறிந்து கொண்டார்கள்.

இன்புற்ற சீலத்து இராமனுசா * என்றும் எவ்விடத்து
என்புற்ற நோய் உடல் தோறும் பிறந்து இறந்து * எண் அரிய
துன்புற்ற வீயினும் சொல்வது ஒன்று உண்டு உன் தொண்டர்கட்கே
அன்புற்று இருக்கும்படி * என்னை ஆக்கி அங்கு ஆட்படுத்தே

என்று இராமானுச நூற்றந்தாதியில் (107) திருவரங்கத்தமுதனார் எம்பெருமானாரை வேண்டுகிறர். உன் அடியார்க்கு அடியவனாய் என்னை ஆக்குவாயாக என்ற இதே கருத்தைத்தான் தெரிவித்தார்.

நம்மாழ்வார் மட்டுமே 12 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். "அனைத்துலகும் உடைய அரவிந்த லோசனை தினைத்தனையும் விடாள்" என்று பாடி மகிழ்ந்துள்ளார்.

ஸ்ரீ குமுதவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ நிக்ஷேபவித்த பரப்ரஹ்மணே நம:

97. திருப்பேரை

மகர நெடுங் குழைக்காதன் மணிவண்ணன் நின்ற
நகரமாம் திருவின் பெயரான தென் திருப்பேரையில்
நிகரில் புகழான் நீள் முடியான் சிவந்த திருவடியை
சிகரம் அணிந்தார் சன்மம் இனி கண்டார் இல்லையே

மகர நெடுங்குழைக்காதன், நிகரில் முகில் வண்ணன் என்ற திருநாமங்களுடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான் இத்தலத்தில். குழைக்காதுவல்லி நாச்சியார், திருபேரை நாச்சியார் என்று இரண்டு உபய நாச்சிமார்கள்.

மகர நெடுங்குழைக்காதன் என்ற பெயரோடு காதுகளில் மணிக் குண்டலங்களை அணிந்து திருவின் பெயரைக் கொண்ட திருப்பேரைக்கு வந்து நீள் முடியும் சிவந்த திருவடியும் உடைய பகவானை சரணம் புகுந்தவர் மறு பிறவி என்பதைக் காண்பதில்லை.

த்வத3ங்க்4ரீ முத்தி3ஶ்ய கத3ாபி கேநசித்
ய2தா தை2தா வாபி ஸக்ருத் க்ருதோஞ்சலி:|
ததை3வ முஷ்ணாத்ய ஶுப4ாந்ய ஶேஷதஶ்
ஶுப4ாநி புஷ்ணாதி ந ஜாது ஹ்ரீயதே!!

ஸ்வாமி ஆளவந்தாரும் ஸ்தோத்ர ரத்னத்தில் (28) பகவானே உன் திருவடியைக் குறித்து ஒருதடவை எப்போதாவது எவன் ஒருவன் எந்த மாதிரியாகவோ அஞ்சலி செலுத்தினால் அப்போதே எல்லா பாபங்களும் கழிகிறது. நன்மைகளை விருத்தி செய்கிறது என்று அஞ்சலி வைபவத்தைப் புகழ்ந்து அதிலேயே திளைக்கவில்லையா?

பூதேவி துர்வாஸ மஹரிஷியால் ''லக்ஷ்மியைப்போல் நீ ஆகக் கடவாய்'' என்று சபிக்கப்பட்டதால் லக்ஷ்மியின் உடலை தாங்கி ஸ்ரீபேரை (திருப்பேரை) என்ற திருநாமத்துடன் சாப விமோசனத்திற்காக தவமிருந்தாள். தாமிரபரணி நதியில் அவள் குளிக்கும்போது மீன் வடிவமுள்ள இரண்டு குண்டலங்களை கண்டெடுத்தாள். அவற்றை பகவானுக்கு ஸமர்ப்பிக்க, பகவானும் அதைத் தான் காதுகளில் அணிந்து மகர நெடுங்குழைக்காதன், என்ற பெயர் பெற்றான். பூதேவி, ஸ்ரீயின் பெயரைக் கொண்டதால் திருப்பேரை என்றாயிற்று என்றும் சொல்லுவர்.

தாழ் சடையும் நீண் முடியும் ஒண்மழுவும் சக்கரமும்

என்று மூன்றாம் திருவந்தாதியில் (63) பேயாழ்வார் பகவான் தன் திருமேனியில் ஒரு பகுதியை சிவனுக்கு தந்துள்ளார். வலது பாகத்தில் நாராயணனும், இடது பக்கம் தாழத் தோங்கும் ஜடையும் கொண்ட சிவன் என்று ஸாதித்தார். [சரீர ஆத்ம பாவத்தை நோக்குங்கால் நாராயணனே பரம். அவனுடைய சரீரமே பிரபஞ்சம் எல்லாம் என்று கொள்ளும்போது சிவன் அவனுக்கு சரீரமாகிறான். ஏன் நாம்

எல்லோருமே ஹரியின் சரீரம். "தஸ்ய பூதா: ஸ்வத ஸர்வே ஹ்யாத்மாந பராமத்மன:" என்றான் சிவனே மந்தர ராஜபத ஸ்தோத்ரத்தில்]

வைகுந்தம் ஈப்பாயும் எவ்வுயிர்க்கும் நீயே

என்று நான்முகன் திருவந்தாதியில் (19) திருமழிசையாழ்வார் எந்த ஜீவன் ஆக இருந்தாலும் சரி, அதற்கு பிறப்பறுத்து மோக்ஷ சாம்ராஜயத்தை அளிப்பவன் நீயன்றோ என்றார்

அந்தாமத்து அன்பு செய்து என் ஆவிசேர் அம்மானுக்கு
அந்தாமம் வாழ்முடி சங்கு ஆழிநூல் ஆரம் உள
செந்தாமரைத் தடங்கண் செங்கனிவாய் செங்கமலம்
செந்தாமரை அடிக்கள் செம்பொன் திரு உடம்பே

என்று திருவாய்மொழியில் (2-5-1) நம்மாழ்வார் பகவானை வர்ணிக்கிறார். எம்பெருமானின் திரு உடம்பு, திருக்கண்கள், திருக்கைகள், திருவடிகள் எல்லாம் தாமரை மலர் போன்று சிவந்தே இருக்கும் என்றார்.

அப்படிப்பட்ட எம்பெருமானின் திருவடிகளை உகந்து அவனுக்கு பணி செய்வது

எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டு ஊழி ஊழி தோறும்
அப்பொழுதைக்கு அப்பொழுதே என் அராவமுதமே

என்று திருவாய்மொழியில் (2-5-4) நம்மாழ்வார் பகவானை அனுபவிப்பது என்பது என்றும் குறைவிலாமல் எத்தனை நாள், மாதம், ஆண்டுகள் ஆனாலும் புதிய அனுபவமாக தெவிட்டாத இன்பமாய் இருக்கும் என்று ஸாதித்தார்.

நம்மாழ்வார் மட்டுமே 12 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

செங்கனி வாயின் திறத்ததாயும்
செஞ்சுடர் நீண்முடித் தாழ்ந்ததாயும்
சங்கோடு சக்கரம் கண்டு உகந்தும்
தாமரைக் கண்களுக்கு அற்றுத் தீர்ந்ததும்
திங்களும் நாளும் விழாவறாத
தென் திருப்பேரையில் வீற்றிருந்த
எங்கள் பிரானுக்கு என் நெஞ்சம் தோழீ!
நாணும் நிரையும் இழந்ததுவே

என்று திருவாய்மொழியில் (7-3-3) நம்மாழ்வார் நாயிகா பாவத்தில் இந்த ஸ்தலத்து பகவானை வர்ணிக்கிறார். .

ஸ்ரீ குழைக்காதுவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ மகர நெடுங்குழைக்காத பரப்ரஹ்மணே நம:

98. திருக்குருகூர்

வேதம் தமிழ் செய்த வித்தகன் குருகூரில் தான் தோன்றி
ஓத வல்லார் அல்லாரும் பாசம் கொண்டு பரமன் தன்னை
பாதம் புதைந்து பூமியில் பொலிந்து நின்ற ஆதிப்பிரானை
நாதனை மற்றொன்றின்றி நேசமாய் கொள்ள நவின்றாரே

ஆதிநாதன், ஆதிப்பிரான், பொலிந்து நின்ற பிரான் என்றெல்லாம் அழைக்கப்படும் பகவான் திருக்குருகூரில் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். ஆதிநாதவல்லி, குருகூர் வல்லி என்று இரண்டு உபய நாச்சிமார்கள்.

வேதத்தைத் தமிழாக்கித் தந்த வள்ளல் மாறன் சடகோபன் அவதரித்த திருத்தலம் திருக்குருகூர். வேதங்கள் ப்ரமாணம் ஆனாலும் அவற்றின் விதிமுறைகள் அதிகம். காலம், நேரம், இடம், ஜாதி முறை, துய்மைத் தன்மை ஆகிய நியமங்கள் கணக்கிலடங்கா. அதனால் எல்லோரும் அதை ஒதுவதற்கு அருகதை உடையவர்கள் என்று கூற முடியாது.

என்னைப் பெற்ற
அத்தாயாய் தந்தையாய் அறியாதன அறிவித்த
அத்தா, நீ செய்தன அடியேன் அறியேனே

அறியாக் காலத்துள்ளே அடிமைக்கு அன்பு செய்வித்து
அறியாய மாமாயாத்து அடியேனை வைத்தாயால்

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் (2-3-2, 2-3-3) நன்றி தெரிவிக்கிறார். தான் பிறப்பதற்கு முன்னாகவே பகவான் முன் வந்து செய்த அருளை நினைக்கிறார். பகவான் ஆழ்வாருக்கு செய்ததை விட ஆழ்வார் நம்மைப்போல் இருக்கும் மக்களுக்குக்காகவே அனுதாபப்பட்டு வேதத்தைத் தமிழாக்கித் தந்த பேருபகாரமே இதைவிடச் சிறந்தது.

வேதத்தை அத்யனம் செய்யத் தகாதவர்களும் பேதை, பெண் என்று வேறுபாடின்றி அனைவரும் பயன் பெறவே கன்றின் மேல் இரக்கம் கொள்ளும் தாய்ப்பசுவின் வாத்ஸல்யம் போல் நம்மாழ்வார் திருவதாரம் செய்து வேதத்தை தமிழாக்கித் தந்தார். வட மறை போலன்று தமிழ் மறை யாவராலும் ஓத வல்லது.

ஆதிப்பிரான் என்னும் இங்குள்ள மூலவர் தான் தேன்றிய பெருமான். பாதங்கள் பூமியின் அடியில் பதிந்திருப்பதாக பெரியோர் கருத்து. திராவிட வேதங்கள் மூலம் இந்த பகவானை அறிந்து அவனையே சரணாக கொள்வீர் பக்தர்காள் என்று அன்புடன் தமிழ்மறையை சடகோபன் யாவருக்கும் வழங்கினார்.

நாயமாத்மா பரவசநேந லப்ய:

என்று ப்ரம்ம சூத்திரம் சொல்லுகிறது. ஸ்ரீபாஷ்யத்தில் எம்பெருமானார் அன்பில்லாத வெறும் வாய் வார்த்தை, மனத்தில் நோக்கின்றி நினைப்பது போன்றவைகள் பரமாத்வை அடைவதற்கு உபாயமாகாது. எவன் ப்ரீதி செய்வதற்கு உகந்தவனோ அவன் ப்ரீதியோடு வரிக்கப் படுகிறான் என்றார்.

பிதரம் மாதரம் தா4ராந் புத்ராந் ப3ந்தூ4ந் ஸகீ2ந் கு3ரூந் ।
ரத்நாநி தநதா4ந்யாநி க்ஷேத்ராணி ச க்3ருஹாணி ச ॥
ஸர்வ தா4ர்மாஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வ காமாம்ஶ்ச ஸாக்ஷராந்
லோகவிக்ராந்த சரணௌ ஶரணம் தே3வ்ரஜம் விபே4 ॥

என்று விஹகேஸ்வர ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது. பகவத் ராமானுஜரும் ஶரணாகதி கத்யத்தில் அப்படியே இதைத் தந்திருக்கிறார். பகவானே! நான் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள், ஆசாரியர்கள், ரத்னங்கள், தன தான்யங்கள், வயல், வரப்பு, வீடு எல்லா உபாயங்கள், கைவல்யம் உள்ளீட்ட எல்லா ஆசைகளையும் துறந்து உன் திருவடிகளை சரணாக அடைகிறேன், உலகம் அளந்த எம்பெருமானே.

அதனால் பகவானை அடைய முற்படும்போது மனோ வாக் காயை என்ற மூன்றினாலும் அவனையே நேசித்து அவன் அருளையே நாட வேண்டும் என்றார்கள் முன்னோர்கள்,

எக்காலமும் சென்று சேவித்திருக்கும் அடியவரை

என்று பெரியாழ்வார் திருமொழியில் (4-2-3) ஸாதித்த முறையில் இந்த ஊரில் உள்ள அடியவர்கள் பகவானையே எப்பொழுதும் ஸேவிக்கின்றனர்.

நம்மாழ்வார் மட்டுமே 12 பாசுரங்களால் "ஒன்றும் தேவும்" என்ற திருவாய்மொழியில் மங்களாசாஸனம் செய்துள்ளார். அர்ச்சாவதார பரத்வத்தை பேசி திருக்குருகூர் ஆதிப்பிரானே பரம் பொருள் என்று ஸாதிக்கிறார்.

ஓடிஓடிப் பலபிறப்பும் பிறந்து மற்றோர் தெய்வம்
பாடிஆடிப் பணிந்து பற்படி கால்வழி ஏறிக் கண்டீர்
கூடி வானவர் ஏத்த நின்ற திருக்குருகூர் அதனுள்
ஆடு புட்கொடி ஆதிமூர்த்திக்கு அடிமை புகுவதுவே

என்று திருவாய்மொழியில் (4-10-7) நம்மாழ்வார் அறிவுரை அளித்து ஆதிப்பிரானை அடைந்தவர்கள் வைகுந்த மாநகர் அடைவர் என்றார்.

தவிர திருவாய்மொழியில் ஒவ்வொரு பதிகம் முடியும்போது ஸங்க்ரம பாசுரத்தில் அதாவது திருநாமப்பாட்டில் குருகூர்ச் சடகோபன், குருகூர் மாறன் என்று தாம் பிறந்த குருகூரோடு சேர்த்து தன்னை கூறி மகிழ்கிறார்.

ஸ்ரீ ஆதிநாதவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ ஆதிநாத பரப்ரஹ்மணே நம:

99. திருவில்லிபுத்தூர்

அடியவரனைவரும் அணுக ஆட்கொண்டு பரமனை பாமாலைப்பாடியே
நெடியமால் வடபெரும் கோயிலானை வரித்ததும் பூமாலைச் சூடியே
கடிமலராள் கோதையும் தாதையும் தத்துவ சாரத்தின் தனத்தை ஊட்டியே
குடிகொண்ட கோவிலும் வில்லிபுத்தூர் அரங்க மன்னன் அருள் அடியே

ஸ்ரீ வில்லிபுத்தூர் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் எம்பெருமான் வட பத்ரசாயி, வட பெரும் கோயிலுடையான், ரங்க மன்னார் என்ற திருநாமங்களுடன் புஜங்க ஸயனமாய் ஸேவை ஸாதிக்கிறார். வில்லி, புத்தன் என்கிற இரு வேடுவ அரசர்களால் ஆக்கப்பட்ட ஊரானதால் இப்பெயர் பெற்றது ஸ்ரீ ஆண்டாளும், பெரியாழ்வாரும் அவதரித்த ஸ்தலம் என்கிற பெருமை உடையது.

ஸ்ரீ ஆண்டாள் பூவுலகில் அவதாரம் செய்தது ஜீவர்கள் அனைவரையும் உஜ்ஜீவிக்க வேண்டும் அதாவது நல்ல கதியை அடைவிக்க வேண்டும் என்கிற மாத்ருத்வ ப்ரியத்வ வாதஸல்யத்தினால்தான் (தாயாருக்கே உள்ள பரிவினால்). பகவான் கிருஷ்ணன், பார்த்த சாரதியாய் கூறிய கீதையைவிட ஒரு படி சிறந்தது என்று ஆசாரியர்கள் அபிமானிக்கும்படி "வேதமனைத்துக்கும் வித்தாகும்" என்கிற திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய இரு பிரபந்தங்களையும் கொடுத்தருளினாள்.

ஆர்த்₃ராபராதி₄நி ஜநேப்ய பி₄ரக்ஷ்ணார்த₂ம்
ரங்கே₃ஶ்வரஸ்ய ரமயா விநிவேத்₃யமாநே
பார்ஶ்வே பரத்ர ப₄வதீ யதி₃ தத்ர நாஸீத்
ப்ராயேண தே₃வி வத₃நம் பரிவர்த்திதம் ஸ்யாத்

கோதாஸ்துதியில் (24) ஸ்வாமி தேசிகன் ஆண்டாளின் வாத்ஸல்யத்தை அழகாக ஸாதிக்கிறார். சேதனர்கள் மேன்மேலும் ஈரக்கை உலறுவதற்குமுன் பாவங்கள் செய்கிறார்கள். பெரிய பிராட்டியார் அரங்கநாதனிடம் அந்த அபராதங்களுக்காக வாதாடுகிறாள். பகவான் ஒரு வேளை சலிப்பினால் அவள் பக்கம் விட்டு உன் பக்கம் திரும்பினால் நீ அதைவிட கருணையாக பரிந்து பேசுகிறாய் என்றார்.

வேயர் புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம்
மேன்மேலும் மிக விளங்க விட்டுசித்தன்
தூய திருமகளாய் வந்து அரங்கனார்க்கு
துழாய் மாலை முடி சூடிக் கொடுத்த மாதே

என்று ஸ்வாமி தேசிகன் பிரபந்த ஸாரத்தில் (10) ஸாதித்த முறையில் தினந்தோறும் வடபெரும்கோயிலுடையானுக்காக தந்தை விஷ்ணுசித்தர் தூய மலர்களைப் பறித்து அவற்றை நல்மாலையாக தொடுத்து வைத்திருப்பதை யாரும் அறியா வண்ணம் தான் சூடி கண்ணனுக்கு உகந்தவளாய் இருப்போமா? என்று மகிழ்ந்தவள். பெரியாழ்வாரும்

அதை அறியாமல் பகவானுக்கு ஆண்டாள் சூடி களைந்த மாலைகளை தினமும் கொண்டு ஸமர்பிப்பது வழக்கம்.

ஒரு நாள் இந்த விஷயம் தெரிய வந்தவுடன் பெரியாழ்வார்ர் அபசாரம் நடந்து விட்டதே என்று வருந்தி அன்று பகவானுக்கு மாலை ஸமர்ப்பிக்காமலே போனார். பகவானும் ஆண்டாள் சூடிக் களைந்த மாலையே தான் உகந்தது என்று அருளி அதைக் கேட்டு பெற்றுக் கொண்டான்

தாதஸ்து தே மது4பி4த3: ஸ்துதி லேஶ வஶ்யாத்
கர்ணாம்ருதை: ஸ்துதி தை3ரநவாப்த பூர்வம்
த்வந் மௌளி கு3ந்த4 ஸ்ரீப4கு3ம் உபஹ்ருத்ய மாலாம்
லேபே4 மஹத்தர பத3ாநுகு3ணம் ப்ரஸாத3ம்

என்று ஸ்வாமி தேசிகன் கோதாஸ்தியில் (10) ஆண்டாளே நீ சூடிக் களைந்த மாலைகளை பகவானுக்கு கொண்டு போய் ஸமர்ப்பித்து அவனுக்கு உகந்தத்தை செய்ததால் உன் தகப்பனார் பெரியாழ்வார் என்ற பட்டம் பெற்றாரே'' என்றார்.

ஆமோத3வத்யபி ஸதா3 ஹ்ருத3யம் கு3மாடபி
ராகு3ந்விதாடபி லளிதாடபி கு3ணோத்தராடபி ।
மௌளி ஸ்ரஜா தவ முகுந்த3 கிரீட ப4ாஜா
கே3ாதே3 ப4வத்யத4ரிதா கலு வைஜயந்தீ ॥

என்று கோதாஸ்துதியில் (15) ஸ்வாமி தேசிகன் ஆண்டாள் சூடிய மாலைகள், பகவானை அலங்கரித்திருக்கும் வைஜயந்தி என்னும் வனமாலையை விட உயர்ந்தது என்று ஸாதிக்கிறார். வனமாலையோ பகவானின் திருமார்பில் இடம் பெற்றுள்ளது. ஆனால் கோதையே, நீ அணிந்து களைந்த மாலையானது ஸர்வேச்வரானாகிய அவனுடைய க்ரீடத்தின் மேல் சூட்டப்பட்டுள்ளது. உன் மாலைக்கு எவ்வளவு மதிப்பு கொடுத்து உன் நாயகன் அதைத் தன் சிரத்தின் மேல் தாங்குகிறான் என்றார்.

வாசனை மிகுந்த மலர்களை சூடி திவ்ய ரூபமாய் விளங்கும் ஆண்டாளும் அவளுடைய தகப்பனாரான பெரியாழ்வாரும் பர தத்துவ பொருளின் ஸாரம் ஒன்றையே விரும்பி அடியவர்கள் அனைவருக்கும் அதை தாய்ப் பசு கன்றிற்கு ஊட்டுவது போல் சேதனர் எல்லோரையும் உய்விக்க இந்த ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் கோவில் கொண்ட க்ஷேத்திரத்தில் வசித்ததும் ஸ்ரீரங்கமன்னன் அருளினாலே.

ஸ்ரீ ஆண்டாள் ஒரு பாசுரமும், பெரியாழ்வார் ஒரு பாசுரமும் பாடி இந்த பகவானை மங்களா சாஸனம் செய்துள்ளார்.கள்.

பெரியாழ்வார் மின்னனைய நுண்ணிடையார் விரிகுழல்மேல் நுழைந்த வண்டு இன்னிசைக்கும் வில்லிபுத்தூர் இனிதமர்ந்தாய்'' என்றும், ஸ்ரீ ஆண்டாள், ''மென்னனடை அன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூருறை வான்றன் பொன்னடி காண்பதோர் ஆசையினால்'' என்று பாடினாள்.

ஸ்ரீ ஆண்டாள் நாயிக ஸமேத ஸ்ரீ ரங்கமன்ன பரப்ரஹ்மணே நம:

100. திருத்தண்கால்

தன்மை மிகுந்த தென்றல் குளிர்ந்து வீசும் தேஸமும்
அனந்தம் அன்னம் வலமும் அமிர்தம் விலங்கு மகளும்
தன்னிடம் சேர்ந்த திருத் தண்கால் நின்ற நாரணன்
கனிந்த சிவந்த கழலை கண்டு உகக்கும் தொண்டரே

இங்குள்ள கோவில் ஒரு சிறிய மலைமேல் இருக்கிறது. பகவான் நாராயணன் என்ற திருநாமத்துடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான்.

குளிர்ச்சி என்னும் மென்மையான தன்மையை உடைய தென்றல் காற்று சுகமாக வீசும் ஊராய் விளங்குகிறது திருத்தண்கால். அன்னநாயகி என்னும் ஸ்ரீதேவியும், அனந்த நாயகி என்னும் நீளாதேவியும் பகவானின் வலப்புறம் நிற்கின்றனர். அமிர்த நாயகி என்னும் பூதேவியும், ஜாம்பவதி என்னும் ஜாம்பவான் கரடியின் மகளும் தனக்கு இடப்புறமும் சேர்த்து பகவான் காட்சி அளிக்கிறான்.

அந்த பகவானின் தாமரை மலர் போன்ற சிவந்த பாதங்களை கண்டு தொண்டர்கள் எல்லோரும் பணிந்து மகிழ்ச்சியடைகிறார்கள் இத்திருத்தலத்தில்.

என்னுள் கலந்தவன் செங்கனிவாய் செங்கமலம்
மின்னும் சுடர்மலைக்குக் கண் பாதம் கை கமலம்
மன்னு முழு ஏழு உலகமும் வயிற்றினுள்
தன்னுள் கலவாது எப்பொருளும் தான் இலையே

என்று திருவாய்மொழியில் (2-5-3) நம்மாழ்வார் பகவானிடம் சேராத அவனைச் சாரத பொருளே இல்லை. என்பதை ஸாதிக்கிறார். பகவான் உடம்பில் அத்தனை உலகங்களும் இருக்கிறது. அவன் கலவாத பொருள் எதேனும் உண்டோ? என்கிறார்.

பகவானின் திருவடிகளை சிவந்த தாமரை மலருக்கு ஒப்பிடுகிறார்கள் நம்முடைய ஆழ்வார்களும், ஆசாரியர்களும்.

கைவண்ணம் தாமரை வாய் கமலம் போலும்
கண் இணையும் அரவிந்தம் அடியும் அஃதே

திருநெடுந்தாண்டகத்தில் (21) திருமங்கை மன்னன் பகவானின் திருவடிகள் மற்றும் எல்லாம் தாமரை வண்ணமாகவே இருக்கிறது என்கிறார்.

அடித் தலமும் தாமரையே அம் கையும்
பங்கயமே என்கின்றாளால்

என்று பெரிய திருமொழியில் (8-8-5) திருமங்கை மன்னன் எம்பெருமானின் திருவடிகளும் திருக்கையும் தாமரையே என்கிறார்.

எண்பெருக் கந்நலத்து ஒண்பொருள் ஈசனை
வண்புகழ் நாரணன் தி்ண்கழல் சேரே

என்று திருவாய்மொழியில் (1-2-10) நம்மாழ்வார் பகவானின் சிவந்த தமரை போன்ற பாதங்களைக் கெட்டியாகப் பற்றுங்கள் என்றார்.

நாரயணபரா வேதா தேவா நாரயணாங்கஜா: ।
நாரயணபரா லோகா நாரயணபரா மகா: ॥

என்று ஸ்ரீமத் பாகவதம் (2-5-15) கூறியது. வேதங்கள் நாரயணனை சொல்லுபவை. தேவர்கள் எல்லோரும் நாரயணனின் உடலிருந்து தோன்றியவர்கள்தாம். உலகங்கள் யாவையும் நாராயணனையே சார்ந்து இருப்பவை. யாகங்கள் எல்லாம் நாராயணனையே பூஜிக்கின்றன. அந்த நாராயணனே இந்த ஸ்தலத்தில் எழுந்தருளியுள்ளான்.

நாவாயில் உண்டே நமோ நாரணா என்று
ஓவாது உரைக்கும் உரையுண்டே

என்று பொய்கையாழ்வார் நம் வினைகள் நீங்க வேண்டும் என்றால் நாராயணா நாராயணா என்றே அழைத்து அவனைத் தொழ வேண்டும் என்றார்.

காலை எழுந்து உலகம் கற்பனவும் * கற்று உணர்ந்த
மேலைத்தலை மறையோர் வேட்பனவும் * வேலைக்கண்
ஓர் ஆழியான் அடியே ஓதுவதும் ஓர்ப்பனவும்
பேர் ஆழி கொண்டான் பெயர்

என்று முதல் திருவந்தாதியில் (66) பொய்கையாழ்வார் பக்தர்கள் காலையில் எழுந்தவுடன் த்யானம் செய்து அனுஸந்திப்பதும் படித்து அறிவு நிரம்பிய வைதிகர்கள் கண்டு உகக்க ஆசைப்படுவதும் திருப்பாற்கடலில் ஸ்யனித்துள்ள சக்கரம் எந்திய பரமனின் திருவடிகள்தாம். அவர்கள் ஓதி மனத்தில் நினப்பதும் அந்த பகவானின் நாமக்கள்தாம் என்றார்.

திருமங்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் 5 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

"பேரானைக் குறுங்குடி எம்பெருமானை, திருத்தண்கால் ஊரானைக் கரம்பனூர் உத்தமனை" என்றும் "ஆங்கே தண்காலும் தண்குடந்தை நகரும் பாடியாடக் கேட்டு நங்காய்", என்று திருங்கையாழ்வாரும்

"தமர் உள்ளம் தஞ்சை தலை அரங்கம் தண்கால், தமர் உள்ளம் தண் பொருப்பு வேலை" என்று பூதத்தாழ்வாரும் பாடி மகிழ்ந்துள்ளனர்.

ஸ்ரீ செம்பகவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ நாராயண பரப்ரஹ்மணே நம:

101. திருக்கூடல் (கூடலழகர்)

ஊடல் உகக்கும் மதுரவல்லியுடன் கருமுகில் திரண்ட
கூடலூரில் வீடு செய்யவே வீற்றிருக்கும் கூடலழகனை
தேடல் தேவையில்லை தேவனை இங்கே அறிவீரென
பாடல் கொண்டு பரவினமே தமிழ் பல்லாண்டிசையே

கூடலழகர் என்ற திருநாமத்துடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார், திருகூடலூர் என்னும் இந்த திவ்ய தேஸத்தில்

நீரைத் தாங்கி நிற்கும் கருணை மிகுந்த கருமையான மேகங்கள் சூழ தென்றல் காற்று சுகமாய் வீசி எப்பொழுதும் மனத்திற்கு மிகவும் ரம்யமாக இருக்கும் ஊர் கூடலூர். அங்கேயுள்ள மதுரவல்லி நாச்சியார் பகவானுடன் சண்டையிட்டு பிரிந்து அவனை ஏங்க வைப்பதாக விளையாடி இருவரும் மகிழ்கிறார்கள். .

பகவான் தன் ஸ்ருஷ்டித்த பிரபஞ்சத்தில் எத்தனையோ இடங்கள் இருந்தாலும் கூடலழகனாய் இந்த ஊரில் தான் எழுந்தருளி அடியவர்கள் அனைவரும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைவதற்கு காரணமாய் அமர்ந்திருக்கிறான்.

நாரணன் முழு ஏழு உலகுக்கும் நாதன் வேத மயன்
காரணம் கிரிசை கருமம் இவை முதல்வன் என் எந்தை

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் (2-7-2) யார் பர தத்துவம் என்று ஸாதித்தார். வேதங்களிலும் மற்ற ஸ்மிருதி இதிஹாச புராணங்களாகிற ப்ரமாணங்களில் வீணாய்த் தேடி அலசிப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. வேதங்களும், மஹரிஷிகளும் மற்ற அடியவர்களும் போற்றும் அந்த பர ஸ்வரூபமே ஸ்ரீமந் நாராயணனே இங்கே கூடலழகராய் எழுந்தருளி உள்ளார்.

நீயே உலகு எல்லாம் நின் அருளே நிற்பனவும்
நீயே தவத் தேவ தேவனும் - நீயே
எரிசுடரும் மால் வரையும் எண் திசையும் * அண்டத்து
இரு சுடரும் ஆய இறை

என்று நான்முகன் திருவந்தாதியில் (20) திருமழிசையாழ்வார் பகவான் சேதன அசேதன பொருள்கள் யாவற்றிலும் உள்ளான். தவம் செய்யும் ப்ரம்மா, ருத்ரன் போன்ற தேவர்களும் நீயே என்று எல்லாவற்றிலும் அந்த்ர்யாமியாய் இருப்பதைக் காட்டுகிறார்.

அறிந்தன வேத அரும்பொருள் நூல்கள்
அறிந்தன கொள்க அரும்பொருள் ஆதல்
அறிந்தனர் எல்லாம் அரியை வணங்கி
அறிந்தனர் நோய்கள் அறுக்கும் மருந்தே

என்று திருவாய்மொழியில் (9-3-3) நம்மாழ்வார் நோய்களை தீர்க்கும் மருந்து நாராயணனே என்றார்.

ஆலோட்ய சர்வ சாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: ।
இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயணோ: ஹரி: ॥

என்று எல்லா சாஸ்த்ரங்களையும் ஆராய்ந்து அலசிப் பார்த்தபின் முடிவாக அந்த ஸ்ரீமந் நாராயணனே உபாசிப்பதற்கு உரியவன் என்கிறது ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

நாகணைமிசை நம்பிரான் சரணேசரண் நமக்கு என்று
நாடோறும் ஏக சிந்தையனாய்க் குருகூர்ச் சடகோபன் மாறன்

திருவாய்மொழியில் (5-10-11), நம்மாழ்வார் நாகத்தில் பள்ளி கொள்ளும் ஸ்ரீமந் நாராயணனே நமக்கு கதி என்று ஸாதிக்கிறார்.

யதோ வாசோ நிவர்த்தந்தே
அப்ராப்ய மநஸா ஸஹ: ।
ஆநந்தꣳ ப்ரஹ்மணோ வித்ꣳவாந்
ந பிꣳபேꣳதி குதஶ்சநேதி ॥

என்று தைத்ரிய உபனிஷத் (9-1) கூறுகிறது. மனத்தை ஒன்று படுத்தி சொன்ன எந்த வாக்குகள் எல்லாம் அளவிடமுடியாமல் பிரம்மத்தினிடமிருந்து திரும்புகிறதோ அந்த பரமாத்மாவின் ஆனந்தத்தை அறிந்தவன் எதற்கும் பயப்படமாட்டான் என்றது. அந்த கருத்தில் அந்த பரமாத்வை அறிந்தவன், வேறு இடங்களில் போய் ஏன் தேட வேண்டும்?

இந்த பகவானின் அருளினால்தான் பாண்டிய மன்னன் அரசவையில் பரதத்துவ நிர்ணயம் செய்து பரமனுக்கே பல்லாண்டு சென்தமிழில் பாடி மகிழ்ந்தார் பெரியாழ்வார் என்று அழைக்கப்படும் விஷ்ணுசித்தர்.

நாவளரும் பெரு நான்மறைகள் ஓதிய கீதம் எலாம்
பாவளரும் தமிழ் பல்லாண்டிசையுடன் பாடுவோமே

என்று பரமபத ஸோபானத்தில் (18) ஸ்வாமி தேசிகன் ஸாதித்த முறையில். அந்த திருப்பல்லாண்டை நாங்களும் பாடி அதன் பெருமையை பரப்பி விண்ணுலகிலும் வந்து அதைக் கொண்டாடுவோம்

திருமங்கையாழ்வார் ஒரு பாசுரமும், திருமழிசையாழ்வார் ஒரு பாசுரமும் பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

ஸ்ரீ மதுரவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ கூடலழகர் பரப்ரஹ்மணே நம:

102. திருமாலிருஞ்சோலை

சோதியாய் வனகிரி மாலிருஞ் சோலையில் மயக்கவே நின்ற
ஆதியான நம்பியே! ஆயிரந்தோளுடை அமலாற்று கள்ளழகா!
வேதியர் மகள் தாம் உரைத்த நூறு தடாவும் யாம் நிறைத்தே
சாதியின்றி சரணடைவோமே விரைந்து சரிவு வரும் முன்னே

திருமாலிருஞ்சோலை என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் அழகர், கள்ளழகர், மாலாங்காரர், மாலிருஞ்சோலை நம்பி என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார்.

அடியவருக்கு அருளுவதற்கே என்று ஜோதி ஸ்வரூபமாய், விளக்காகி நிற்கும் எம்பெருமானே! வனகிரி என்றழைக்கப்படும் திருமாலிருஞ்சோலையில் எல்லோரையும் மோகிக்கும்படியான திவ்யரூபனாய் விளங்கும் ஆதியான மூர்த்தியே!

பலபல நாழம் சொல்லிப் பழித்த சிசுபாலன் தன்னை
அல வலைமை தவிர்த்த அழகன் அலங்காரன் மலை
குலமலை கோலமலை குளிர்மாமலை கொற்றமலை
நிலமலை நீண்டமலை திருமாலிருஞ்சோலை அதே

பெரியாழ்வார் திருமொழியில் (4-3-5) தொண்டர்கள் உறையும் இந்த மலை குலாசலம், சித்ரகூடம், இமயமலை, கோவர்தனம், மேரு பர்வதம், வட வேங்கடம் என்றெல்லாம் புகழ்கிறார்.

சேயோங்கு தன் திருமாலிருஞ்சோலை மலை உறையும்
மாயா * எனக் குரையாயிது மறை நான்கில் உளாயோ

என்று பெரிய திருமொழியில் (7-9-7) திருமங்கை மன்னன் பகவானை எல்லா விளையாட்டுக்களை நடத்தும் மாயன் என்று அழைத்தார். பக்தர்களை தன் அழகில் மயக்கி அவர்களை கவர்ந்து இழுக்கும் அற்புத வீலா ரஸம் உடையவன் என்று.

ஸஹஸ்ராஸ்யஸ் ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரசரணோ விபு: ।
ஸஹஸ்ரபாஹரீஸ் ஸர்வஜ்ஞோ தை³வோ நாம் ஸஹஸ்ரவாந் ॥

என்று பீஷ்மர் மஹாபாரத்தில் பகவானை முடிகள் ஆயிரம், கண்கள் ஆயிரம், கால்கள் ஆயிரம் தோள்கள் ஆயிரம் கொண்டவனாய் ஸர்வஜ்ஞனாய், ஸர்வ சக்தியாய் விளங்கும் பகவான் பேர்கள் ஆயிரம் உடையவன் என்றார்.

ஆயிரம் தோள் பரப்பி முடி ஆயிரம் மின் இலக
ஆயிரம் பைந்தலைய அனந்த சயனம் ஆளும் மலை
ஆயிரம் ஆறுகளும் சுனைகள் பல ஆயிரமும்
ஆயிரம் பூம்பொழிலும் உடை மாலிருஞ்சோலை அதே

என்று பெரியாழ்வார் திருமொழியில் (4-3-10) சுந்தர பாகு என்று அழைக்கப்படும் அழகுமிக்க ஆயிரம் தோள்களுடைய அழகனே என்றார். ஆயிரம் என்று கூறியது கணக்கற்றது என்ற பொருளில்.

பாதோதோயம் பசுபதி ஜடா ஸ்பர்ஶ சூன்யம் பிபாதி

என்று ஸ்வாமி தேசிகன் ஹம்ஸ ஸந்தேஸத்தில் அருளியபடி திரிவிக்ரமனின் கால் சிலம்பிலிருந்து தெரித்துத் தோன்றிய தோஷமில்லாத புனித கங்கை சிலம்பாறாக பாயும் வ்ருஷபாத்ரி மலையில் வாசம் செய்யும் கள்ளழகனே!

நாறு நறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான்
நூறு தடாவில் வெண்ணெய்வாய் நேர்ந்து பராவி வைத்தேன்

என்று நாச்சியார் திருமொழியில் (9-6) கூறிய பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாள் வாக்கினை இன்று எம் குலத்திற்கே ஆசாரியரான பகவத் ராமானுஜர் காண்பித்த முறையில் நாங்களும் நூறு தடா நிறைந்த அக்கார அடிசில் கொண்டு ஸமர்பிக்கிறோம்.

யஜ்ஜாதீயோ யாத்3ருஶோ யத் ஸ்வபா4வ:
பாத3ச்ச2ாயாம் ஸம்ஶ்ரீதோ யோऽபி கோऽபி ।
தஜ்ஜாதீயஸ் தாத்3ருஶஸ் தத் ஸ்வபா4வ:
ஶ்லிஷ்யத்யேநம் ஸுந்த3ரோ வத்ஸலத்வாத் ॥

என்று ஸ்ரீஸுந்தரபாஹுஸ்தவத்தில் (30) கூரத்தாழ்வான் ஸாதிக்கிறார். ஓ! ஸுந்தரராஜனே உன்னுடைய திருவடிகளின் நிழலில் ஒதுங்கியவன் ஒருவன் எந்த ஜாதி, ஆசாரம், குணங்கள் உடையவனாக இருந்தாலும் சரி நீ வாத்ஸல்யத்துடன் அந்த ஜாதி, ஆசாரம், குணங்கள் உடையவனாய் அவனுடன் சேர்கிறாய் என்றார்.

கிளர் ஒளி இளமை கெடுவதன் முன்னம்
வளர் ஒளி மாயோன் மருவிய கோவில்
வளர் இளம் பொழில் சூழ் மாலிருஞ்சோலை
தளர்விலர் ஆகில் சார்வது சதிரே

என்று ஸ்வாமி நம்மாழ்வார் திருவாய்மொழியில் (2-10-1) ஸாதித்த முறையில் வாழ்க்கையின் தளர்ச்சி வருவதற்குள்ளாகவே சாதி, இடம், நேரம், முறை என்று காலம் விளம்பாது விரைந்து உன் திருவடிகளே சரண் என்று வந்து அடைக்கலமாய் அடைகின்றோம்.

பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் என்று ஆறு ஆழ்வார்கள் 128 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

ஸ்ரீ ஸுந்தரவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ ஸுந்தரபாஹவே பரப்ரஹ்மணே நம:

103. திருமோகூர்

வழிக்குத் துணையாம் கட்டுசோறாய் நின்ற காளமேகப் பெருமானே
விழிக்கும் விருந்தாம் வியக்கும் மோகன வல்லீயின் மோகூர் ஆத்தனே
குழிக்குள் தள்ளாது குற்றம் கொள்ளாது கள்ளம் தவிர்த்து காப்பாயே
அழிக்குமாற்றலுடையாய் குறிக்கொண்டேன் உன்னை பழிக்குபயந்தே

காளமேகப்பெருமானாய் நின்ற திருக்கோலத்தில் ஸேவை சாதிக்கிறார் திருமோகூர் என்னும் இந்த திவ்ய தேஸத்தில்.

வெகு தூரம் கடும் வெய்யிலில் பிரயாணம் செல்லுவோருக்கு இளைப்பாற கட்டுச் சோறு எப்படி உதவுமோ அதுபோல் வாழ்க்கை என்னும் கடும் பயணம் செல்பவர்களுக்கு பகவந்நாம ஸங்கீர்த்தனம் ஆகும் என்பதை

கஸ்சஸ்தாம் தூஸ்ரமத்யவாநம் த்ருஷ்ணாமூர்ச்சிஸ்தஸேதஸாம் ।
பாதேயம் புண்டஸ்ரீகாஷ நாம் ஸங்கீர்த்தனாம்ருதம் ॥

என்று கருட புராணத்து வாக்கு. திருமோகூர் கால மேகப்பெருமான் கட்டுச்சோறாய் ஒவ்வொரு பக்தனுக்கும் உதவுகிறான்.

மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சக்குறும்பாம்
குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான்

என்று ஸ்ரீ இராமானுச நூற்றந்தாதியில் (7) திருவரங்கத்தமுதனார் அபிஜநமதம், வித்யாமதம், தனமதம் என்ற மூன்று தோஷங்களைப் பற்றி ஸாதிக்கிறார். குலத்தினால் வரும் கர்வம், படிப்பினால் வரும் கர்வம், பணத்தால் வரும் கர்வம் ஆகிற மூன்றும் தள்ளும் படு குழியைக் கடந்தவன் நம் கூரத்தாழ்வான் என்றார். அதுபோல் கால மேகப் பெருமானே என்னையும் குழியில் தள்ளாது காப்பாயே!

கண்ணுக்கும் விருந்து என்று கூறும்படி அழகே வடிவெடுத்த திருமோகூர் மோகனவல்லீப் பிராட்டியார் இந்த திருத்தல பகவானை மயக்குகிறாள். அந்த புருஷகார பூதையின் மயக்கத்தில் அவளின் சொல் கேட்டு பகவான் சேதனர்களின் கணக்கிலடங்காத பாபங்களைக் கண்டும் காணாது போல் இருந்து சரணம் என்று அடைந்தவர்களை பிறவி என்னும் படுங்குழியில் தள்ளாது காக்கிறான்.

மதுரா மதுராலாபா கிமாஹ மம பாமிநீ ।
மத்விஹீநா வராரோஹா ஹநுமத் கதயஸ்வ மே ॥

என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் பகவான் ராமன் சொல்லுகிறான். "ஹனுமனே ஸீதை மிகவும் இனியவள், இனிக்கும் சொற்களையே சொல்லுபவள். உத்த பெண்ணாகவும், எனக்கு மிகவும் பிடித்தவளும் இப்போது என்னை விட்டு பிரிந்து உள்ள அவள் என்ன சொன்னாள்? நீ அதை எனக்கு சொல்வாயாக" என்றார். பகவானே தன்

மனைவியை ஸ்தோத்திரம் செய்கிறார். அதனால் தாயரை புருஷகாரமாக அடைந்த நமக்கு என்ன கவலை?

ஒரு முறை ப்ரபத்தி செய்தால் மட்டும் போதும். அவர்களின் மனத்தை மாற்றி உலக இன்பங்களில் மோகம் அடையச் செய்யும் கள்ளர்களாகிய புலன்களை பகவானே மாற்றி நல்வழியில் திருப்புகிறான். தன் பக்தர்களுக்கு தீங்கு என்பதை பொறுக்காதவன். அவைகளை அழிக்கும் வல்லமை உடையவன்.

இதை அறிந்தே நான் காளமேகப்பெருமானே! உன்னை வந்தடைந்தேன் வினைப்பலன்களுக்கு அஞ்சியே

பேசினார் பிறவி நீத்தார் பேருளான் பெருமை பேசி
ஏசினார் உய்ந்து போனார் என்பதில் உலகின் வண்ணம்
பேசினேன் ஏச மாட்டேன் பேதையேன் பிறவி நீத்ததற்கு
ஆசையோ பெரிது கொள்க அலை கடல் வண்ணர் பாலே

திருக்குறுந்தாண்டகத்தில் (17) திருமங்கையாழ்வார் கூறியது போல் பகவானின் கல்யாண குணங்களை பேசி அவனை வாயார வாழ்த்தி பிறவி நீக்கும் விருப்பத்தோடு பெரும் ஆசையான பரபத்தை அடைய இங்கு வந்து உன் திருவடிகளை அடைந்தேன் காள மேகப் பெருமானே!

ஹரீர் ஹரதி பாபாநி து3ஷ்டசித்தைரபி ஸ்ம்ருத:
அநிச்ச2யாSபி ஸ்ம்ஸ்ப்ருஷ்டோ த3ஹத்யேவ ஹி பாவக:

என்று ஹரியஷ்டகத்தில் தீய மனது உடையவர்கள் நினைத்தாலும் ஹரி, அவர்கள் பாபங்களைப் போக்குகிறான் எப்படி விருப்பமில்லாமல் தொட்ட நெருப்பும் சுடுமோ அதைப் போல என்றது.

நாராயணன் என்னை ஆளி நரகத்து
சேராமல் காக்கும் திருமால்

நான்முகன் திருவந்தாதியில் (14) திருமழிசையாழ்வார் எம்பெருமான் ஒருவன்தான் என்னைப் பாழும் நரகத்தில் தள்ளாது என்னை காத்து ஆளும் இறைவன். அவன்தான் ஸ்ரீமந் நாராயணன், திருமால் என்று அழைக்கப் படுபவன் என்றார்.

நம்மாழ்வார் 11 பாசுரங்களும் திருமங்கை மன்னன் 1 பாசுரங்களுமாய் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள். "காள மேகத்தையன்றி மற்றொன்றிலம் கதியே", இடர் கெட அடி பரவுதும் தொண்டீர் வம்மீனே", திருமோகூர் ஆத்தன் தமரை அடியின்றி மற்றிலம் அரணே" தீமை செய்யும் வல்லசுரரை அஞ்சி சென்றடைந்தால் காமரூபம் கொண்டெழுந்தளிப்பான் திருமோகூர்" என்று நம்மாழ்வார் மகிழ்கிறார்.

ஸ்ரீ மோஹனவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ காளமேகப்பெருமாள் பரப்ரஹ்மணே நம:

104. திருக்கோட்டியூர்

ஓடியோடி அலைந்து ஓதும் நமோ நாராயணாவை நன்கு அறிந்து
தேடி அடைந்த தனத்தை உடையவர் தமக்கேயெனக் கொள்ளாது
வாடி வருந்தும் உயிருக்கு பரிந்து உரகமெல்லணையான் கோவிலிலே
கூடி ஆசையுடையோருக்கு அளித்த த்வயம் விளைந்த கோட்டியூரே

இந்த ஸ்தலம் நான்கு நிலைகளாக உள்ளது. முதல் நிலையில் உரக மெல்லணையான் என்ற திருநாமத்துடன் புஜங்க ஸயனத்தில் வலது கையால் ஆதி ஸேஷனுக்கு அபயம் அளிக்கும் கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார்.

குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும் நீள் விசும்பும் அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

திருமங்கையாழ்வார் இதையே பெரிய திருமொழியில் (1-1-9) நாராயண நாம ஸங்கீர்த்தனத்தாலே எல்ல விதமான புருஷார்த்தங்களையும் அடையலாம் என்பதை தெரிவிக்கிறார். பகவானுக்கு அடிமையாய் நிற்கு நிலையாகிற ஞானமே குலம். அவனுக்கு செய்யும் கைங்கர்யமே செல்வம் என்றார்.

ஓராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர்
ஏரார் எதிராசர் இன்னருளால் - பார் உலகில்
ஆசை உடையோருக்கு எல்லாம் ஆரியர்காள்! கூறும் என்று
பேசி வரம்பு அறுத்தார் பின்

என்று உபதேச ரத்தினமாலலையில் (37) மணவாள் மாமுனிகள் ஸாதிக்கிறார்.

எம்பெருமானார் ஸ்ரீராமானுஜர் தன் ஆசாரியரிடம் மிகவும் பாடு பட்டு பல ஆண்டுகளுக்குப்பின் ஓராண்படி உபதேசமாய் ரஹஸ்ய அர்த்தங்களையெல்லாம் அறிந்தார். தான் அறிந்த பெரும் பேறை தனக்கே என்று கொள்ளாது அடியவர்கள் அனைவரும் பெற்று பிறப்பு இறப்பு சுழலில் விழுந்து தத்தளிக்கும் எல்லா ஜீவராசிகளும் உய்ய வேண்டும் என்கிற உதாரண குணத்தால் ஆசாரியன் வார்த்தையை மீறினோம் என்கிற பழி வருமோ என்பதற்கும் அஞ்சாது இங்குள்ள நான்காம் மாடியிலிருந்து "ஆசையுடையோர் எல்லோரும் வாரும். மோஷமடையும் ஸாதனத்தை உபதேசிக்கிறேன்" என்று வாக்களித்து நிறைவேற்றினார்.

அதனால் த்வயம் விளைந்த திருப்பதி என்றே ஸ்ரீவைஷ்ணர்கள் இத்தலத்தை அழைக்கிறார்கள்.

இன்றா அறிகின்றேன் அல்லேன் * இரு நிலத்தைச்
சென்று ஆங்கு அளந்த திருவடியை * அன்று
கருக் கோட்டியுள் கிடந்து கை தொழுதேன் கண்டேன் *
திருக் கோட்டி எந்தை திறம்

என்று பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியில் (87) திருக்கோட்டியூர் பெருமாளின் ஸ்வரூப, ரூப, குண, விபூதிகளை நான் பிறப்பதிற்கு முன் கர்ப்ப வாசத்திலேயே தெரிந்துக் கொண்டேன் என்கிறார்.

உண்மையில் ஆழ்வாருக்கு பின் அவதரித்த எம்பெருமானர் எல்லா வைஷ்ணவர்களுக்கும் உஜ்ஜீவிக்க "பாருலகில் ஆசையுடையோருக்கு எல்லாம் ஆரியர்கள் கூறும்" என்று தன்னுடைய ஸம்பிராதயத்தில் உள்ள அனைவரும் மோக்ஷம் அடைய வழி வகுத்துள்ளார். கோடிக்கணக்கான வைஷ்ணவர்கள் பிறப்பதற்கு முன்னே எம்பெருமானார் இந்த மகத்தான காரியத்தை அவர்களுக்காக செய்துள்ளர். அதனால் நாம் எல்லோரும் ஜன்மஸித்தி ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆனோம்.

எண் திசை பரவும் சீரோர் எங்களுக்கு ஈந்த எட்டில்
உண்டவாறு உரைப்பார் போல ஒன்பது பொருள் உரைத்தோம்
மண்டு நான் மறையோர் காக்கும் மா நிதி இவை அனைத்தும்
கண்டவர் விள்ளார் விள்ளக் கருதுவார் காண்கிலாரே

என்று திருமந்திரச்சுருக்கில் ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யார்த்தங்களை நன்கு அறிந்து அனுபவித்தவர்கள் தகாதவருக்கு கூறத் துணிய மாட்டார்கள் என்று ஸாதித்தார்.

இந்த ஊரில் எம்பெருமானார் திருவுருவம் கோபுரத்தின் மேல் ஊரை நோக்கிய வண்ணம் எழுந்தருளப் பட்டுள்ளது

பூதம் ஐந்தோடு வேள்வி ஐந்து புலன்கள் ஐந்து பொறிகளால்
ஏதம் ஒன்றும் இலாத வண் கையினார்கள் வாழ் திருக் கோட்டியூர்
நாதனை நரசிங்கனை நவின்று ஏத்துவார்கள் உழக்கிய
பாத தூளி படுதலாலில் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே

பெரியாழ்வார் திருமொழியில் (4-4-6) திருக்கோஷ்டியூர் பக்தர்களின் பாதத்தின் தூசிகளைப் பெற இந்த உலகம் என்ன பேற் பெற்றதோ? என்றார்.

பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார் பேயாழ்வார், திருமழிசையாழ்வார் என்னும் ஆழ்வார்கள் 39 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

ஸ்ரீ திருமகள் நாச்சியார் ஸமேத ஸ்ரீ சௌம்ய நாராயண பரப்ரஹ்மணே நம:

105. திருப்புல்லாணி

வில்லின் வீரன் வன்மையாய் அடைக்கலம் அருளிய மொழியும்
நல்லோர் எல்லோரும் கூடி எழுப்பிய அணையும் * அரவு விடுத்து
புல்லின்மேல் கிடந்து வருந்தி வணங்கியதும் திருப்புல்லாணியிலே
கல்யாண ஜகந்நாதன் அவன் வல்லமை சொல்லாதாரும் இல்லாரே

கல்யாண ஜகந்நாதன் என்ற திருநாமத்துடன் நின்ற திருகோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார் திருப்புல்லாணி என்னும் இந்த ஸரணாகதி க்ஷேத்திரத்தில்.

பகவான் ஸ்ரீமந் நாராயணன் மஹாவீரன் ஸ்ரீராமனாக விபவாவதாரத்தில் தோன்றியபோது ஸீதையைப் பிரிந்திருக்குங்கால் இலங்கைக்குச் சென்று ஸீதையை மீட்டுவர தீர்மானித்து இந்த தலத்திற்கு சுக்ரீவன், அனுமான், இவர்களோடு வந்தார். வான் வழியே விபிஷணன் "ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மனே" என்று சரணாகதி அடைந்த போது அவனுக்கு அபயம் அளித்து

ஸக்ருதே3வ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அப4யம் ஸர்வ பூ4தேப்4யோ த3த3ாம் யேதத்3 வரதம் மம ॥

என்கிற ராம சரணாகதி ஸ்லோகத்தையும் அருளினார். விபீஷணனின் ஆலோசனையின் பேரில் ராமன் சமுத்திர ராஜனை வணங்க அவனும் தன்மேல் அணையைக் கட்டி இலங்கைக்கு செல்லுமாறு பிராத்தித்தான்.

ராமனும் ஸீதையும் ஒன்று சேர வேண்டும். அதற்கென தீங்கிழைத்த ராவணனை இலங்கை சென்று அழிக்க வேண்டும் என்று தூய எண்ணம் கொண்ட வானர சைன்யங்கள் மற்ற அடியவர்கள் அனைவரும் அணை கட்ட முனைந்தனர்.

மல்லை முந்நீர் அதர்பட வரி வெஞ்சிலை கால் வளைவித்து
கொல்லை விலங்கு பணி செய்யக் கொடியோன் இலங்கை புகலுற்று
தொல்லை மரங்கள் புகப் பெய்து துவலை நிமிர்ந்த வானணவ
கல்லால் கடலை அடைத்தான்

என்று பெரிய திருமொழியில் (8-6-4) திருமங்கை மன்னன் ராமபிரான் கடலில் அணை கட்டியதை விவரிக்கிறார்.

பரப3ல ரிபு கலஹ குதுக சடுல கபிகுல கரதல தூலித ஹ்ருத கி3ரி
நிகர ஸாதி4த ஸேதுபத2 ஸீமா ஸீமந்தித ஸமுத்3ர!

என்று ஸ்வாமி தேசிகனும் மஹாவீர வைபவத்தில் வானரப் படைகள் எதிரிகளுடன் போர் புரிய உற்சாகத்துடன் கிளம்பி பஞ்சை தூக்குவதுபோல் மலை எல்லாம் கொண்டு வந்து போட்டு அணை கட்டின என்று ஸாதித்தார்.

ராமனோ, ஸீதையைப் பிரிந்த வருத்தத்தில் ஆதிஸேஷனாகிற அரவணையை விடுத்து தர்ப்பஸயனமாக தரையில் படுத்துக் கிடந்தான். ராமன் அருகில் ஆதி ஸேஷன் லக்ஷ்மணனாக கைகட்டி ஸேவை செய்ய காத்திருக்கும் காட்சி அற்புதமானது. புல்லாணி என்பது தர்ப்ப ஸயனம்.

ஏஷ ஸேதுர் மயா ப3த்3த4ஸ் ஸாக3ரே ஸலிலார்ணவே ।
தவ ஹேதுர் விஶாலாக்ஷி! நளஸேதுஸ் ஸுது3ஷ்கர: ॥

என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் (யு 126-12) ராமன் சீதையை நோக்கி சொல்லுகிறான். அகன்ற கண்களை உடையவளே! நீர் நிறைந்த கடலில் இந்த நளஸேது என்னும் அணை கட்டுவதற்கு மிகவும் அரியது. இது உனக்காகவே கட்டப்பட்டது என்றார்.

ஏழு தேவ கன்னிகைகள் ஸ்நானம் செய்யும்போது அருகிலிருந்த தேவாலர் என்னும் மஹரிஷியை அவமத்தித்தால் அவர் நீங்கள் யக்ஷராகக் கடவீர் என்று சபித்தார். கன்னிகைகளும் பயந்து வணங்க அவர் புல்லாரண்யம் சென்று புல்லர் முனிவரை அடைந்தால் சாப விமோசனம் என்றார். அதன்படியே அவர்களும் புல்லாரண்யம் அடைந்து ஆதி ஜகந்நாத பெருமானை வணங்கி ராமன் வரும் காலம் வரை காத்திருந்தார்கள். ராமனின் கடாக்ஷம் விழுந்தவுடன் அவர்கள் சாபம் விலகியது.

ஒத்தாரை மிக்காரை இலை ஆய மாமாயா
ஒத்தாய் எப் பொருட்கும் உயிராய்

என்று திருவாய்மொழியில் (2-3-2) நம்மாழ்வார் பகவானுக்கு நிகரோ அவனை மிஞ்சியவரோ என்பதே கிடையாது என்கிறார். அது ஸ்ரீராமனுக்கு மிகவும் பொருந்தும்

மஹா வீர, மஹா தீ4ரா, ஸத்ய வ்ரத, ஆஸஹாய ஶூர, அநபாய ஸாஹஸா, அப்ரதித்3வந்த்3வ பௌருஷா, த்ர்யம்ப3க ஸமதி4க கே4ராஸ்த்ராட3ம்பரா, ராக4வ ஸிம்ஹ என்று எல்லாம் ஸ்வாமி தேசிகனும் மஹாவீர வைபவத்தில் ராமனுடைய வல்லமையை புகழ்கிறார்.

கு3ச்ச2ானுஜாநாமி ரணார்த்தி3தஸ் த்வம்
ப்ரவிஶ்ய ராத்ரிஞ்சரராஜ லங்காம் ।
ஆஶ்வாஸ்ய நிர்யாஹி ரதீ2 ச து4ந்வீ
தத3ா ப3லம் த்ரக்ஷ்யஸி மே ரதா2ஸ்தா2: ॥

என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் (யு 59-144) ராமன் ராவணனை நோக்கி கூறுகிறான். "ராக்ஷஸ ராஜனே, நீ யுத்தம் செய்து களைத்து போனாய்! திரும்பி செல்வாய். நான் அனுப்புகிறேன். இலங்கையுள் சென்று களப்பாறியபின் தேரின் மேல் வில் ஏந்தி திரும்பி வா. "இன்று போய் நாளை வா" அப்பொழுது என் பலத்தை நீ காணலாம்" என்றார். அது அல்லவோ வல்லமை!

திருமங்கையாழ்வார் மட்டும் 21 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ஸ்ரீ கல்யாணவல்லீ நாயிக ஸமேத ஸ்ரீ கல்யாண ஜகந்நாத பரப்ரஹ்மணே நம:

106. திருமெய்யம்

பொய்யே சொல்லி இப் புவியில் புரளும் மானிடரன்றி
ஐயனே! சிற்றின்பம் நோயேயெனத் தீர்ந்ததடைந்தவர்தம்
செய்யும் கருமமும் பலனும் பரமனையேச் சாரும் என்பது
மெய்யே என மொழிந்த மெய்யம் நின்ற ஸத்யகிரிநாதனே

திருமெய்யம் என்னும் இந்த திவ்ய தேஸத்தில் பகவான் ஸத்யகிரி நாதன், ஸத்ய மூர்த்தி என்ற திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறான்.

நாள்தோறும், ஜீவர்கள் எல்லோரும் உயிர் வாழ்க்கைக்கு என்று சொல்லும் பொய்களும் செய்யும் குற்றங்களும் கணக்கற்றவை. ஆனால் உன் அடியவர்களோ அதைப்போலன்றி உலக விஷயங்களில் உள்ள சுகம் நிலையற்றது, அழியக்கூடியது. மனத்தைத் தூண்டி பாபங்களை மேன்மேலும் செய்ய வைக்கிறது என்று திடமாக கருதுகிறார்கள். சிற்றின்பங்களை சுகம் என நினைக்காமல் உடலை வருத்தும் நோயைப்போல் அற்பமாக எண்ணுகிறார்கள்.

ஆய்ந்து கொண்டு ஆதிப்பெருமானை அன்பினால்
வாய்த்த மனத்து இருத்த வல்லார்கள் - ஏய்ந்த நம்
மெய் குந்தமாக விரும்புவரே * தாமும் தம்
வைகுந்தம் காண்பாரே விரைந்து

என்று நான்முகன் திருவந்தாதியில் (79) திருமழிசையாழ்வார் ஜகத் காரணகனான எம்பெருமானை ஆசையினால் தம் மனத்தில் வைத்து நிறுத்தி கொள்ள தக்கவர் தாம். ஆனால் தமக்கே என உள்ள வைகுந்தத்தை சீக்கிரம் அடைய தம் ஆத்மாவோடு கூடிய சரீரத்தை வெறும் வியாதியாகவே எண்ணுவர் என்றார். அப்படி என்றால் சரீர சம்பந்த சிற்றின்பங்கள் எல்லாம் வியாதியோடு சேர்ந்தவை என்று ஆகிறது.

ஸ்வாமீ ஸ்வஶேஷம் ஸ்வவஶம் ஸ்வபரத்வேந நிர்பரம் ।
ஸ்வதந்த்ர ஸ்வதிரயா ஸ்வார்தம் ஸ்வஸ்மிந் ந்யஸ்யதி மாம் ஸ்வயம் ॥

என்று ஸ்ரீந்யாஸ தஶகத்தில் (3) ஸ்வாமி தேஶிகன் ஸாத்விகத் தியாகத்தை பற்றி கூறுகிறார். பகவானே நம்மைக் கொண்டு ஒரு காரியத்தை செய்விக்கிறான் என்ற எண்ணம் கர்த்ருத்வ தியாகம். செய்யும் கர்மம் நம்முடையது அல்ல. நமக்கு ஒரு ப்ரயோஜனமும் கிடையாது என்கிற எண்ணம் மமதா தியாகம். செய்யும் காரியத்தால் வரும் பலன் நம்மைச் சேர்ந்தது அல்ல அதுவும் பகவானைச் சேர்ந்தது என்கிற நினைவு பலத் தியாகம் எனப்படும். இந்த மூன்றையும் ப்ரப்த்தி செய்பவர்கள் எப்பொழுதும் நினைவில் கொண்டு அதன்படி நடந்து மீதி வாழ்நாளில் தர்மங்களை செய்ய வேண்டும் என்று ஸாதித்தார்.

கருமமும் கருமபலனும் ஆகிய காரணன் தன்னை
திருமணிவண்ணனைச் செங்கண்மாலினைத் தேவபிரானை

என்று திருவாய்மொழியில் (3-5-10) நம்மாழ்வார் இதே கருத்தை ஸாதிக்கிறார். புண்ய, பாபம் என்ற இருவினைகளுக்கும் காரணமான கருமமாய் இருக்கிறான் பகவான்.

அந்த முறையிலேயே இந்த ஸ்தலத்தில் உள்ள அடியவர்கள் மெய்யே சொல்லி செய்யும் காரியங்களின் காரணமும் பலனும் பரமனின் அருளே, அவனே ஸஹ காரியாய் நின்று நடத்துகிறான் என்ற திட விசுவாசமும் கொண்டு அவனுடைய திருவுள்ளம் எதுவாகிலும் அதிலேயே மகிழ்கிறார்கள்.

மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை
ஏலாப் பொய்கள் உரைப்பானை இங்கே போதக் கண்டீரே

என்று நாச்சியார் திருமொழியில் (14-3) கிருஷ்ணனை அண்டப்புளுகன் என்று பொய் சொல்வதில் மிகவும் சாமர்த்தியமானவன் என்றாள். இருந்தாலும்

வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான்
பொய் கலவாது என் மெய் நின்றானே

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் (1-8-5) பகவான் கிருஷ்ணாவதாரத்திற்கு தகுந்த வேஷத்துடன் வெண்ணெய் திருடினாலும் என் மனத்தில் ஸத்ய ஸந்தனாய் உண்மையாகவே கலந்தான் என்கிறார்.

"அந்ருதம் நோக்தபூர்வம் மே"
என்னால் பொய் சொல்லப்பட்டதில்லை

"ராமோ த்3விர் நா3பிபா4ஷதே"
ராமன் இருவிதமாகப் பேசான்

"ந மே மோகo3ம் வ்சோ பா4வேத்"
என் வார்த்தை வீணாகாது

என்றெல்லாம் சொல்லி எங்களை ஆசுவாசப்படித்தினாய். இங்கே அர்ச்சையாய் நின்று இதுதான் உண்மை, சத்யம் என்று ஊர்ஜிதப்படுத்திய ஸத்யகிரிநாதா!, என் ஐயனே, உன்னையே பரம் பொருள் என்று அடைகிறேன்.

திருமங்கையாழ்வார் மட்டும் 9 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். "திருமெய்ய மலையானை", "என்னுள் புகுந்து உள்ள முருக்கி உண் விடலையிச் சென்று காண்டும் மெய்யத்துளே", "மெய்யானை மெய்ய மலையானைச் சங்கேந்தும் கையானை கைதொழா கையல்ல" என்று பாடி மகிழ்கிறார்.

ஸ்ரீ உய்யவந்த நாச்சியார் ஸமேத ஸ்ரீ ஸத்யமூர்த்தி பரப்ரஹ்மணே நம:

விண் நாட்டு திருப்பதிகள் 2 (107 முதல் 108 வரை)

107. திருப்பாற்கடல் (வ்யூஹம்)

பாற்கடலில் துயிலும் பரமனை
தமிழ்மறைக்குறவர் நாத்தழும்ப நவின்றனரே
கூக்குரலைக் கேட்க அரவணையில்
ஊக்கமுடன் திருமகள் மண்மகள் அடி வருட
ஆக்கவே அயனை உந்தியில் படைக்க
நாலாய் பிரிந்து தானும் அவதரிக்க * கள்ளத்
தூக்கம் கொள்ளும் கடல்மகள் நாதனை
கண்டு கொள்வாயே நீ உள் மனத்தே

நூற்றுஆறு திருப்பதிகள் ஸேவித்தபின், விண்ணுலகில் உள்ள திருப்பாற்கடல் என்னும் திருப்பதிக்கு வருகிறோம். அழியக் கூடிய இந்த உடம்புடன் (ப்ராக்ருத சரீரத்துடன்) சென்று பகவானை தரிசிக்க முடியாது. உடல் உயிர் நீங்கியபின் ஸூக்ஷ்ம சரீரம் அடைந்து பகவானே நம்மை அழைத்துச் சென்று காட்டும் திவ்ய தேசம்.

பகவான் பரமபத்தில் எல்லையில்லா ஆனந்தத்தில் திளத்து இருந்தாலும் அங்கு அவனுடைய உத்தமமான தயை என்னும் கல்யாண குணம் பிரகாசிக்க முடியாமல் போனது. ஆதற்காகவே அவன் க்ஷீராப்தி நாதனாக பாற்கடலில் பரமனாய் கிடந்த நிலையில் ஸேவை ஸாதிக்கிறான் என்று தோன்றுகிறது.

தமிழ் மறை என்ற திவ்ய பிரபந்தத்தை அருளிய ஆழ்வார்கள் மனம் உருகி, நிலை குலைந்து, வார்த்தை வெளிவராமல் தவித்து உள்ளத்தை கொள்ளை கொண்ட காட்சியை ஊனக் கண்ணுடைய நமக்கு தாம் கண்டதை அப்படியே (தத்ரூபமாக) வர்ணிக்கிறார்கள். ஆழ்வார்கள் ஆசாரியர்கள் அனைவருக்கும் இந்த ஸயன திருக்கோலத்தில் அப்படி ஒரு மோகம்.

வெள்ளை வெள்ளத்தின் மேல் ஒரு பாம்பை
மெத்தையாக விரித்து அதன் மேலே
கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம்
காணலாம் கொல் என்ற ஆசையினாலே

பெரியாழ்வார் திருமொழியில் (5-1-7) திருபாற்கடலை வர்ணிக்கிறார்.

பாற்கடலில் பையத் துயின்ற பரமன் அடி பாடி

என்று திருப்பாவையில் (2) ஆண்டாள் பாற்கடலைப் பற்றி பாடுகிறாள்.

அசைவறு அமரர் அடியிணை வணங்க

அலை கடல் துயின்ற அம்மானை

என்று பெரிய திருமொழியில் (4-3-4) திருமங்கையாழ்வார் பரமன் பாற்கடலில் வந்து ஸயனித்து இருப்பது தேவர்கள் வண்ங்க ஸ்ருஷ்டி, ஸ்திதி ஸ்ம்ஹார காரியங்களை நடத்துவதற்குத்தான் என்கிறார்.

மூவராகிய ஒருவனை முவுலகும்
உண்டு உமிழ்ந்து அளந்தானை
தேவர் தானவர் சென்று சென்று இறைஞ்ச

என்று பெரிய திருமொழியில் (3-2-1) கலியன் இந்த கருத்தையே சொல்லுகிறார்.

பாம்பணை மேல் பாற்கடலுள் பள்ளி அமர்ந்ததுவும்
காம்பணைத்தோள் பின்னைக்காய் ஏறுடன் ஏழ் செற்றதுவும்

என்று திருவாய்மொழியில் (2-5-7) நம்மாழ்வார் பாற்கடலில் ஆதிசேஷனின் மேல் ஸயனித்துள்ள எம்பெருமானே விபவாவதாரத்தில் பல லீலைகள் செய்தான் என்கிறார்.

பகவான் வைகுண்டத்திலிருந்து இறங்கி பாற்கடலில் ஸயனித்து இருப்பது தேவர்களின் கூப்பாடு கேட்பதற்கு என்று நம்முடைய ஆசாரியர்கள் வியாக்யானம் செய்து உள்ளார்கள்.

பாட்டு கேட்குமிடமும், கூப்பாடு கேட்குமிடமும், குதித்த இடமும், வளைத்த இடமும், ஊட்டுமிடமும் என்று நம் ஸம்பிரதாயத்தில் சொல்வது. பாற்கடல் நாதன் ஸயனித்து இருக்க, திருமகள், மண்மகள், என்ற இருவரும் பகவானின் பாதங்களைத் மகிழ்ச்சியுடன் தொட்டு மெல்ல வருடுகிறார்கள்.

செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன்
திருவடி இணை வருட முனிவர் ஏத்த

என்று பெரிய திருமொழியில் (7-8-1) திருமங்கை மன்னன் இதை விவரிக்கிறார்.

பகவானுடைய ஸ்ருஷ்டி, அவதாரம் எல்லாம் இந்த பாற்கடலிருந்துதான். பரவாசுதேவனாக பரமபதத்திலிருக்கும் பகவான் தன்னை நான்கு வ்யூஹமாக பிரித்துக் கொள்கிறான். அதுவே வ்யூஹ வாசுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அனிருத்தன் என்று. உலகத்தை ஸ்ருஷ்டி செய்ய பிரமனையும் தன்னுடைய உந்தியில் படைக்கிறான். அநிருத்த மூர்த்தியிலிருந்துதான் எல்லா அவதாரங்களையும் செய்கிறான்.

பை அரவின் அணைப் பாற்கடலுள்
பள்ளிகொள்கின்ற பரம மூர்த்தி
உய்ய உலகு படைக்க வேண்டி
உந்தியினில் தோற்றினாய் நான்முகனை

என்று பெரியாழ்வார் திருமொழியில் (4-10-5) மேலே விரித்த படங்களையுடைய ஆதி சேஷன் வியூகத்தில் இருந்துதான் எல்லா அவதாரங்களும் தோன்றின என்கிறபடி.

இப்படி ஜகத் சிருஷ்டி கர்த்தாவாக இருக்கும் எம்பெருமான், போலி தூக்கத்துடன் பாற்கடலில் பள்ளி கொண்ட ஸேவையை நாம் எல்லோரும் நம்முடைய மனத்தில் காணலாம். காதை பொத்திக் கொண்டு ஊர்ந்து கேட்டால் பாற்கடலின் அலைகள் மோதுவதை நம் மனத்தில் காணலாம் என்று வேதமே கூறுகிறது. பனிக்கடலில் பள்ளிகோளைப் பழக விட்டு ஓடி வந்து என் மனக் கடலில் வாழ வல்ல மாய மணவாள நம்பீ என்கிறாற்போல்

அரவத்து அமளியனோடும் அழகிய பாற்கடலோடும்
அரவிந்தப் பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து
பரவைத் திரை பல மோதப் பள்ளிகொள்கின்ற பிரானை
பரவுகின்றான் விட்டுசித்தன் பட்டினம் காவல் பொருட்டே

பெரியாழ்வார் திருமொழியில் (5-2-10) பகவான் தன்னுடைய உடமை அனத்தும் எடுத்துக் கொண்டு பாற்கடலையும் கொண்டு வந்து என் மனத்தில் அமர்ந்தான் என்கிறார்.

பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் பேயாழ்வார், நம்மாழ்வார் என்று ஆழ்வார்கள் 51 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

க்ஷீரஸாகர தரங்க ஸீகரா ஸாரதாரகித சாருமூர்தயே
பேகி பேக ஸயநீய ஸாயிநே மாதவாய மதுவித்விஷே நம:

குலசேகராழ்வார் முகுந்த மாலையில் (39) பாற்கடலில் எழுந்த அலைகளின் வெள்ள நிறத் துளிகள் பகவானின் திருமேனியில் பட்டு ஆகாயத்தில் காணும் நக்ஷத்திரங்கள் போல் ஜொலிக்கின்றன ஸ்ரீமந் நாராயணன் ஆதிசேஷனுடைய மேனி என்னும் படுக்கையில் படுத்திருப்பவரான லக்ஷ்மீ நாதனுக்கு என் நமஸ்காரங்கள் என்கிறார்.

ஸ்ரீ ஸ்ரீதேவி, பூதேவி நாயிக ஸமேத ஸ்ரீ க்ஷீராப்தி நாத பரப்ரஹ்மணே நம:

108 பரமபதம் (ஸ்ரீவைகுண்ட்டம், திருநாடு, பரமபதம்)

ஆதி அவனேயென அறிந்து காரண காரிய காவலனைத் தெரிந்து
சோதி உயிருக்குயிரான உன்னை உள்ளமுரை உடலிலும் உகந்து
பாதிக்குபாதி பாழுலகை பிரிய விரைந்து அருள்வாய் பரமபதநாதா
மீதிப்பணியும் தமிழிசையுடன் நமோ நாராயணாயா என மகிழவே

திருப்பரமபதம், ஸ்ரீவைகுண்ட்டம், திருநாடு, நித்ய விபூதி, தெளி விசும்பு, பரம், அந்தமில்லா பேரின்பம், பரம புருஷார்த்தம் என்றெல்லாம் அழைக்கும் இந்த திவ்ய தேஸம் ஸ்ரீவைஷ்ணவர்களின் லக்ஷியமான நிலையின் எல்லை. இது பூலோகத்தில் இல்லை. பகவான் பரமபத நாதனாக வீற்றிருந்த திருக்கோலத்தில் ஆதிஸேஷன் என்னும் அனந்தன் மீது பரவாசுதேவனாய் அமர்ந்திருக்கிறான்.

ஸவ்யம் பாத3ம் ப்ரஸார்ய தது3ரிதஹரம் த3க்ஷிணம் குஞ்சயித்வா
ஜானுந்யாத4ய ஸவ்யே தரமிதரபு4ஜம் நாக3பே4காகே3 நித4ய ।
பஶ்யாத்3 பா3ஹூத்வ்யேந ப்ரதிப4டஶமநே த4ரயந் ஶங்க2சக்ரே
தே3வீபூ4ஷாதி3 ஜீஷ்டோ ஜநயது ஜக3தாம் ஶர்ம வைகுண்ட2நாத2: ॥

அஷ்டாக்ஷர த்4யாந ஸ்லோகத்தில் பகவானின் வர்ணனை சொல்லப்பட்டது. தன் அடியார்களின் துயரத்தை நீக்கும் இடது திருவடியை நீட்டி, வலது திருவடியை மடக்கி, வலது கையை வலது முழங்காலில் பொருந்தி, இடது கையை ஆதி ஸேஷன் மேல் வைத்து பின் உள்ள மற்ற இரு கைகளிலும் பகைவர்களை அழிக்கும் சங்கு சக்கரங்களை ஏந்தி பத்தினிமார், ஆபரணங்கள் போன்றவற்றால் ஸேவிக்கப்பட்ட வைகுண்ட நாதன் இவ்வுலகிறகு சுகத்தை அளிப்பானாக! என்றது.

பகவான் அமர்ந்திருக்கும் இடத்திற்கு திருமாமணி மண்டபம் என்று பெயர். நித்ய விபூதியில் என்றும் குறைவற்ற ஆனந்தம்தான். சுத்த ஸத்வம் என்னும் குணம் மட்டுமே நிரம்பியதாய் உள்ளது. காலம் என்னும் கணக்கே கிடையாது. பகவான் ஸ்த்யம், ஞானம், அனந்தம், ஆனந்தம், அமலத்வம், ஸ்ரீயப்தித்வம் என்ற ஆறு ஸ்வரூப நிரூபக குணங்களோடு காட்சி அளிக்கிறான்.

எம்பெருமானின் பிராட்டிமார்களான ஸ்ரீதேவி, பூதேவி, நீளா தேவி மூவரும் அருகில் இருந்து பணிவிடை செய்கிறார்கள். கருடன், ஸேனை முதலியார் போன்ற நித்ய ஸூரிகளும், பூவுலகிலிருந்து மோக்ஷ ப்ராப்தி அடைந்த அடியவர்களும் சூழ காட்சி அளிக்கிறான். குமுதன், குமுதாட்சன் போன்றவர்கள் காவலுக்கு உள்ளார்கள்.

பகவான் திவ்ய ஆபரணங்களும், திருமகுடமும், அணிந்து திவ்ய ஆயுதங்களோடும் தோன்றுகிறான். சண்டன், பிரசண்டன் என்னும் வாயில் காப்போர்கள் அதை காத்து நிற்கிறார்கள்.

பரத்துவம், ஜகத் காரணகன் அவன்தான் என்று அறிந்து பகவான் சூஷ்ம ரூபமாயும், ஸ்தூல ரூபமாயும் ப்ரபஞ்சத்தில் எங்கும் விளங்குகிறான் என்பதை புரிந்து அவன்தான் ரக்ஷகன் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்

ஏதத் ஸாம கா3யந்நாஸ்தே ।
ஹா வுஹா வுஹா வு ।
அஹமந்நமஹமந்நமஹமந்நம் ।
அஹமந்நாதே3Sஹமந்நாதே3Sஹமந்நாத3: ।

என்று தைத்ரீய உபனிஷத் (தை-ப்ருகு 10-6) கூறுகிறது. முக்தன் ஹா வுஹா வுஹா வு என்னும் ஸாம கானத்தைப் பாடிக் கொண்டிருக்கிறான். நான் பரமாத்மவிற்கு அன்னம் போல் போக்யமாய் இருப்பேன். நான் அவனுக்கு அன்னம். நான் அன்னத்தை புஜிப்பவன் என்று கூறியே இன்பத்தில் திளைக்கிறான்.

காரணந்து த்4யேய:

என்று சாஸ்த்ரம் காரண வஸ்துவே த்யானிக்க தக்கது என்றது.

யச்சாபி ஸர்வ பூ4தாநாம் பீ3ஜம் தத்3ஹமர்ஜுந ।
ந தத்3ஸ்தி விநா யத் ஸ்மாந்மயா பூ4தம் சராசரம் ॥

என்று பகவத் கீதையில் (10-39) கிருஷ்ணன் சொல்கிறார். "அருச்சுனா! எல்லா உயிரினங்களுக்கும் எது விதையோ, அதாவது அவை தோன்றுவற்கு காரணம், அதுவும் நான்தான். இயங்குபவையும், இயங்காதவையும் ஆன எல்லா வஸ்துக்களிலும் நான் இல்லாமல் இருக்கக்கூடிய வஸ்து ஒன்றும் இல்லை.

அருள் மிகு சோதியாய், ஜீவாத்ம உயிர்களுக்கு அந்தராத்மாவாய் உள்ள அவனை உள்ளம், உரை, உடல் என்கிற மனோ வாக் கார்யை என்கிற மூன்றினாலும் அடி பணிந்து அத்தால் உகக்க வேண்டும்.

ந தே3ஹம் ந ப்ராணாந் நச ஸீக2ம் அசேஷாபி4லஷிதம்
ந சாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வவிப4வாத் ।
ப3ஹிர்ப்பூதம் நாத2! க்ஷணமபி ஸஹே யாது சுதத4ா
விநாசம் தத் ஸத்யம் மது4மத2ந! விஜ்ஞாபநமித3ம் ॥

என்று ஸ்தோத்ரரத்னத்தில் (57) ஸ்வாமி ஆளவந்தார் சாதிக்கிறார். மதுவைக் கொன்ற எம்பிரானே உனக்கு அடிமைப்பட்டிருக்கும் செல்வத்திற்கு மாறான உடம்பையோ, உயிரையோ, சுகத்தையோ, ஆத்மாவையோ அல்லது வேறு எதுவாக இருந்தாலும் பொறுக்க மாட்டேன். இது உண்மை. இதுவே என் விண்ணப்பம். என்றார். அதைப்போல் எம்பெருமானுடன் என்றுன் சேர்ந்து அவனை அனுபவிக்க வேண்டும்.

பாதோஸ்ய விஸ்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி

என்கிற ஸ்ருதியின்படி நான்கில் ஒரு பங்கான இந்த பூலோகத்தை விட்டு இனி திரும்பி வரப்போவதில்லை என்று ஒரு வழியாக கோடிக் கணக்கான ஜன்மங்களையும் அதனால் உண்டான வினைப் பயன்களையும் ஒழித்து

ந ச புநரா வர்த்ததே ந ச புநரா வர்த்ததே

என்ற தைத்ரீய உபனிஷத் வாக்கின்படி பரம பதத்தை நீ தந்தருளுகிறாய். நாங்களும் இந்த பூவுலகிறகு இனி திரும்பி வரப்போவதில்லை என்று மகிழ்கிறோம்.

நாவளரும் பெரு நான் மறை ஓதிய கீதம் எலாம்
பாவளரும் தமிழ் பல்லாண்டு இசையுடன் பாடுவமே

என்று பரபதசோபானத்தில் (18) ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார். இங்கு விட்டுப்போன மீதி கைங்கர்யத்தையும் சேர்த்து அங்கே நமோ நாராயணா என்று தமிழ் பல்லாண்டிசையுடன் என்றும் உன்னருகில் இருந்து பணி செய்யவேண்டும். அதற்கு நீ அருள் செய்ய வேண்டும். பாட்டு கேட்கும் இடம் பரமபதம் என்பர் நம் ஆசாரியர்கள்.

ஆசார்யாத் ரங்கஸ்துர்ய த்ஸ்வய ஸமதிகஸ்மே
லப்ஸ்தஸ்யத்தம் ததஸ்தத்வே
விஶ்லிஷ்டாஶ்லிஷ்ட பூர்வோத்தர துஸ்ரீத பஸ்ரம்
யாபிதாரப்ஸ்தஸ் தேஸ்ஹம் ।
நீதம் த்வத்கைஸ்த்வயா வா நிரவதிகஸ
தஸ்யோத்ஸ் பூஸ்த பேஸ்ாதஸ்ாதிஸ்ரூபம்
தவத்ஸ் பேஸ்ாகஸ்க ஸ்வபேஸ்ாகஸ்ம் தஸ்யிதம் அநுசரம்
தவத் க்ருதே மாம் குருஷ்வ ॥

என்று ஸ்ரீ ந்யாஸதிலகத்தில்(31) ஸ்வாமி தேஶிகன் பரம பதத்தில் நித்ய கைங்கர்யம் வேண்டி பிராத்தித்தார். திருவரங்க எம்பெருமானே, நான் ஆசாரியர்களிடம் நன்கு த்வயம் உபதேசம் பெற்று என் ஸ்வரூபத்தை அறிந்தேன். உன் திருவடிக்கீழ் செய்த ப்ரபத்தியால் பாபக்குவியல்கள் ஒழிந்தன. ஆறியாமல் சேர்ந்த பாபங்கள் என்னை ஒட்டாது. என் உடம்பு விழும்போது நீயே என்னை பரபதத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். உன் கருணையால் என் ஞானம் வளர வேண்டும். உன்னை விடாது அனுபவிப்பதே எனக்கு போக்யமாக வேண்டும். உனக்கே நித்ய கைங்கர்யம் செய்ய அருளுவாய் என்றார்.

ததோ பஸ்கஸ்வதா ஸ்வயமேவ ஆத்ம ஸஞ்ஜீவநேந அவலோகநேந அவலோக்ய*
ஸஸ்மிதமாஹஸ்ய*
ஸமஸ்த க்லேஶாபஹம்*
நிரதிஶய ஸுகஸ்ாவஹம்*
ஆத்மீயம்*
ஸ்ரீமத் பாதஸ்ாரவிந்தஸ் யுகஸ்ளம்*
ஶிரஸி க்ருதம் த்ஸ்யாத்வா*
அம்ருத ஸாகஸ்ரந்தர் நிமக்ஸ்ந ஸ்ர்வாவயவ: ஸுகஸ்மாஸீத ॥

என்று ஸ்ரீவைகுண்ட2க3த்3யத்தில் பகவத் ராமாநுஜர் என்றும் இடைவிடாத கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தில் முடிசூடி ஸுகமாய் இருக்க பிராத்திக்கிறார்.

வைகுண்டே3து பரே லோகே யா ஸார்த்த4ம் ஜக3த்பதி: ।
ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா ப4க்தைர் ப4க3வதஸ் ஸஹ ॥

என்று உன்னுடைய பக்தர் பாகவதர்களோடு சேர்ந்து ஸ்ரீயப்பதியான உமக்கும் பிராட்டிக்கும் செய்யும் நித்ய கைங்கர்யத்திலேயே திளைத்து மகிழ அருள்வாயே!

பெரியாழ்வார், ஆண்டாள், திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், பொய்கைழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் என்று எட்டு ஆழ்வார்கள் தொண்டரடிபொடியாழ்வார், குலசேகராழ்வார், பூதத்தாழ்வார் நீங்கலாக 36 பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம:

என்று சொல்லி எம்பெருமானார் ஸ்ரீவைகுண்ட்ட கத்யத்தில் வைகுண்ட லோகத்தை தத்ரூபமாக வர்ணித்துள்ளார்.

சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும் பாழேயோ
சூழ்ந்து அதனில் பெரிய பரம் நல் மலர்ச் சோதியோ
சூழ்ந்து அதனில் பெரிய சுடர் ஞான இன்பமேயோ
சூழ்ந்து அதனில் பெரிய என் அவா அறச் சூழ்ந்தாயே

அவா அறச் சூழ் அரியை அயனை அரனை அலற்றி
அவா அற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன
அவாவில் அந்தாதிகளால் இவை ஆயிரமும் * முடிந்த
அவாலில் அந்தாதி இப்பத்தும் அறிந்தார் பிறந்தார் உயர்ந்தே

ஸ்ரீ ஸ்ரீதேவி, பூதேவி நாயிக ஸமேத ஸ்ரீ பரமபதநாத பரப்ரஹ்மணே நம:

பின்னிணைப்பு - 1

ஸ்ரீமந் நாராயணன் தனியன்

திருநாரணன் தானே முன்நின்று திருவருள் காட்டி
ஒரு சாதனமின்றி இணையடிதாம் துணையென தேற்றி
திருமகளோடு தீவினை நீக்கித் தருவான் பெறும் பேறு
அறிவாயே என உரையும் ஆசிரியர் வழிமுறையும் ஆக்கி

அறிவாய் = சேதனர்களே! தெரிந்து கொள்ளுன்கள்,
திருநாரணன் = ஸ்ரீமந் நாராயணன்
தானே முன்நின்று = தானே முதல் ஆசாரியனாக நின்று
ஒரு சாதனமின்றி = வேறு எந்த சகாயமும் இல்லாமல்
இணையடிதாம் = தன்னுடைய திருவடிகள் மட்டுமே
துணையென தேற்றி = உபாயம் என்று புரிந்து மனம் தேற்றிக் கொள்
திருமகளோடு தீவினை நீக்கி = லக்ஷ்மியுடன் கூடி நம் பாபங்களை எல்லாம் விலக்கி
திருவருள் காட்டி = நமக்கு அருள் செய்வார்
பெறும் பேறு தருவான் = மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அளிப்பான்
என உரையும் = என்று உபதேசிக்கும்
ஆசிரியர் வழிமுறை = ஆசாரிய பரம்பரையையே
ஆக்கி = உண்டாக்கி கொடுத்தான்.

ஸ்ரீயப் பதியான ஸ்ரீமந் நாரயணன்தான் பரதத்துவம். அவனே ஆதி குரு. அவனுடைய திருக்கல்யாண குணங்களினால்தான் சேதனர்கள் அனைவரும் உய்வு அடைகின்றனர். அந்த குணங்களில் முக்கியமாக கருணை, தயை என்ற பண்பே நம்மேல் அவனது திருவருள் சுரக்க வைக்கிறது.

மோஷ ஸாம்ராஜ்யம் என்று அழைக்கும் உயர்ந்த புருஷார்த்ததை அடைவதற்கு பகவான் ஒருவனே தனித்து வேறு எந்த துணையும் இன்றி உபாயம் ஆகிறான் (ஸாத்யோபாயம்) . பகவான் தன்னுடைய இரு திருவடிகளையும் காண்பித்து பக்தர்கள் பற்றுவதற்கு பாங்காய் அமைத்துக் கொடுத்து அதன் மூலம் நம்மை எல்லாம் வசீகரிக்கிறான். அந்த திருவடிகளே தஞ்சம் என் பிரபன்னர்கள் அனைவரும் பற்றுகிறார்கள் (ஸித்தோபாயம்).

பக்தர்களை நல்வழியில் திருத்தி உயர்ந்த எண்ணங்களை கொடுத்து உதவுவது பிராட்டிக்கே உள்ள தாயின் பொங்கும் பரிவாலே.. புருஷகாரபூதையாய் நின்று ஒரு பக்கம் சேதனர்களை தன் அன்பினால் அரவணைத்து, மற்றொரு பக்கம் தனக்குள்ள செல்வாக்கினால் பகவானின் சீற்றத்தை போக்கி நம்மேல் கருணையை பொழியச் செய்கிறாள்.

அவ்வாறு சரண் என்று திவ்ய தம்பதிகளிடம் சேதனர்கள் அடைவதற்கு ஒரு வழிகாட்டியாய், உறு துணையாய், நல்ல கருத்துக்களையும் அனுஷ்டானத்தையும் போதிக்கும் ஆசாரியனே முதலில் மிகவும் முக்கியமானவர்,

ஆசாரிய ஸம்பந்தத்தினால்தான், அவர்களுடைய கடாக்ஷத்தால்தான் பிராட்டியும், பகவானும் நம் சரணாகதியை உவந்து ஏற்றுக் கொள்கிறார்கள். அந்த ஆசாரிய பரம்பரையையே ஆக்கி நமக்கு அருளியவன் திருமால் என்று அவனையே நாம் சரணாக அடைகிறோம்.

ஸ்ரீ லக்ஷ்மீ

அருளாலே அவன் மார்பில் அகலாது உறையும்
உன் தகவாலே நிறையும் நல்தந்திரத் துணிவும்
மருளாலே மண்ணில் மயங்கும் உயிரும் நீங்காப்
பொருளாலே விண்ணில் பணி செய்து விளங்கும்

அவன் மார்பில் = அந்த ஸ்ரீமந் நாராயணனின் திரு மார்பில்
அகலாது உறையும் = எக்காலத்து, எந்த தேசத்தும், எந்த இடத்திலும் பிரியாது அங்கேயே குடி கொண்டிருக்கும்.
அருளாலே = மஹா லக்ஷ்மியே! சேதனர்களைக் காக்க வேண்டும் என்கிற உன்னுடைய வாத்ஸல்யத்தாலே.
உன் தகவாலே = உம்முடைய புருஷகாரகம் என்ற பரிவுரையாலே (recommendation)
நிறையும் = எல்லா விதமான செல்வங்களும் நிறைந்து
நல்தந்திரத் துணிவும் = ப்ரப்த்தி என்னும் ஒரே உபாயத்தை நாங்கள் பயமின்றி பற்றி
மருளாலே = அஞ்ஞானத்தாலே
மண்ணில் மயங்கும் = பூமியில் அல்ப சுகங்களிலேயே மூழ்கியிருக்கும்
உயிரும் = சேதனர்களின் ஆத்மாக்களும்
நீங்காப் = என்று அளவற்றதாய், பரிபூர்ணமாய்
பொருளாலே = விளங்கும் உம்முடைய திருவருளையும், பகவானின் திருவருளையும் பெற்று
விண்ணில் = மோக்ஷத்தில்
பணி செய்து = கைங்கர்யம் செய்து
விளங்கும் = ஆனந்திக்கிறோம்

"அகலகில்லேன் இறையும்" என்று கூறி எம்பெருமானுடைய திருமார்பை விட்டு என்று பிரியாமல் அவனுடனே சேர்ந்து உபாயமாகவும் பலனாகவும் விளங்கும் மஹா லக்ஷ்மியே! உன்னுடைய வாத்ஸல்யம் என்ற குணத்தினால் அன்றோ சேதனர்கள் மலைபோல் பாபங்களை செய்திருப்பினும், செய்து கொண்டிருப்பினும் ஸ்வதந்தரனாய், தன்னிச்சையில் உலகம் யாவையும் படைத்து, காத்து, அழித்து, ஜகத் காரணமாய் விளங்கும் எம்பெருமானின் சீற்றத்தைக் குறைத்து அவனது திருவடிகளை அடைய முடிகிறது.

உம்மிடம் நாங்கள் முதலில் செய்த புருஷகார ப்ரபத்தியில் மகிழ்ந்து நீர் அந்த பகவானிடம் எமக்காக வாதாடி புருஷகாரபூதையாய் நின்று எம்மை அவனது திருவடிகளில் சேர்ப்பிக்கிறாய். உலகத்தில் உள்ள கோடிக்கணக்கான சேதனர்களுக்கு நல்ல நினைவுகளைக் கொடுத்து, அஞ்ஞானத்தைப் போக்கி உம்முடைய திருவருளாலும், பகவானின் திருவருளாலும் மோக்ஷம் என்னும் திட விசும்பை அடைந்து உம் இருவருக்குமே என்றும் பணி செய்து மகிழ அருளுகிறாயே!

விஷ்வக்ஸேனர் (ஸேனை முதலியார்)

பிரம்பு எடுத்து வானில் குண்டலை மகனே
வரம்பு கொள்ளும் ஸேனையின் அதிபதியே
தடை நீக்கி அருளும் சூத்திரவதியின் பதியே
உன் கருணைக்கு பாத்திரமாவதும் எம்கதியே

குண்டலை மகனே = குண்டலை என்பவளின் மகனாய்
பிரம்பு எடுத்து = கையில் பிரம்பு கொண்டு
வானில் = வைகுண்டம் என்னும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தில்
வரம்பு கொள்ளும் = பகவான் ஆணையை நிர்வகிக்கும்
ஸேனையின் அதிபதியே = ஸேனாதிபதியே !
தடை நீக்கி = இடையூறுகளை நீக்கி
அருளும் = திருவருள் தந்து அருளும்
சூத்திரவதியின் பதியே = சூத்திரவதியின் கணவனே
உன் கருணைக்கு = உம்முடைய தயைக்கு
பாத்திரமாவதும் = ஏற்றவர்களாய்
எம்கதியே = நாங்கள் விளங்குவதும் எங்கள் ஆசாரியர்களின் திவ்ய கடாக்ஷத்தாலே

நித்ய விபூதியில் "அநந்த கருட விஷவக்ஸேனாதிகள்" என்று அழைக்கப்படும் பகவானின் தொண்டர்களாய் பகவானுக்கும் பிராட்டிக்கும் கைங்கர்யம் செய்து அதிலே உகந்திருக்கும் எல்லா நித்ய ஸூரிகளுக்கும் தலைவர் ஸேனை முதலியார்.

பகவான், பிரட்டிக்கு அடுத்ததாக ஆசாரிய பரம்பரையில் சேனை முதலியார் இடம் வகிக்கிறார். ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்க்ரஹத்தில் "ஸேனை நாதன் இன்னமுத் திருமகள் என்று இவரை முன்னிட்டு" என்று ஆசாரிய பரம்பரையை வரிசைக் கிரமமாய் வணங்குகிறார். ஸ்ரீவைஷ்ணவர்கள் எந்த மங்களமான காரியத்தை மேற்கொண்டாலும் முதலில் விஷ்வக்ஸேனரை ஸேவித்து அதன் பிறகே ஆரம்பிப்பது வழக்கம்.

பகவான் இவரிடம் தனக்கு உள்ள அன்பையும், நம்பிக்கையும் வெளிப்படுத்த, தன்னுடைய அதிகாரத்தையே இவரிடம் ஒப்படைத்திருக்கிறான் (delegated the responsibilities). ஸேனை முதலியாரும் கையில் பிரம்பு கொண்டு அதன்கீழ் பகவத் ஆணையாய் உலகனைத்தும் நடத்தி வருகிறார்.

திருவாரதனம் செய்யும்போது "பகவதே விஷவக்ஸேனாய நம:" என்று பகவானுக்கு வடகிழக்கு மூலையைப் (ஈசான்ய மூலை) பார்த்து சொல்லி, பின் தெற்கு நோக்கி விஷ்வக்ஸேனரையும் அவரது மனைவியான சூத்ரவதியையும் மனத்தில் தியானிப்பது ஆரம்பிப்பது வழக்கம்.

விஷ்வஸேனருக்கு சேஷாசனர் என்றும் பெயர். பகவான் உண்டு மீதி உணவை அவர் உண்பதால் இந்த திருநாமம். எம்பெருமானிடம் இவர் காரியங்களை விண்ணப்பம் செய்ய பகவானும் தன் கடைக்கண்ணால் ஒரே பார்வையில் அவற்றை ஆமோதிக்கிறான்.

ஸ்வாமி நம்மாழ்வார் (சடகோபன், மாறன், சடாரீ, பராங்குசன்)

உந்தியில் அயனைப் படைத்ததும் உரலில் உவந்து கட்டுண்டதும் *
அந்தியில் அரியாய் அழித்ததும் அவனியில் அண்ணலாய் அளித்ததும் *
மந்தி மலிந்த மாமலை அம் மாதவன் மலரடி மருவுதலும் * உறவாட
சந்தியாய் சேர்த்ததும் தமிழ்மறை இசைச்சுவை தந்த மாறனடிகளே.

உந்தியில் = திருநாபியில்
அயனைப் = ப்ரம்மாவை
படைத்ததும் = ஸ்ருஷ்டித்ததும்
உரலில் = உரலில்
உவந்து கட்டுண்டதும் = தானாகவே விரும்பி கட்டுப் பட்டதும்
அந்தியில் = சாயங்கால வேளையில்
அரியாய் = நரசிம்மமாய்
அழித்ததும் = இரணிய கசிபுவைக் கொன்றதும்
அவனியில் = உண்மையான தத்துவங்களை விரும்பி கற்கும் அடியவர்களுக்கு
அண்ணலாய் = ஸ்ரீராம பிரான் தன்னையே
அளித்ததும் = ஸாக்ஷாத்காரமாய் அருளியதும்
மந்தி மருவிய = குரங்கள் தஞ்சம் என குடியிருக்கும்
மாமலை மாதவன் = திருவேங்கட மலையில் உள்ள ஸ்ரீநிவாஸன்
மலரடி = தாமரை போன்ற சிவந்த திருவடிகளில்
மருவுதலும் = அடைக்கலமாய் எங்களை அடைய வைத்ததும்
உறவாட = பகவானுக்கும் எங்களுக்கும் உள்ள ஸம்பந்தத்தை கொண்டாட
சந்தியாய் = நடுவில்
சேர்த்ததும் = நின்று அந்த உறவை சேர்த்து வைத்தும் (reestblished)
தமிழ்மறை = திராவிட வேதமான நாலாயிர பிரபந்த
இசைச்சுவை = இசையில் உள்ள சுவையைத்
தந்த = அளித்தது
மாறனடிகளே = ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே

ஸ்வாமி நம்மாழ்வார் வைணவ குலதிற்கே ஆசாரியனாகவும், ஆழ்வாராகவும் விளங்குகிறார். எம்பெருமான் பலவிதங்களாய் சேதனர்களுக்கு கருணை புரிவதும், சேதனர்கள் தங்கள் தவறை எண்ணி வருந்தி எம்பெருமானிடம் சரணாகதியாய் அடைவதும் ஆழ்வாரின் திருவருளாலே என்பது காட்டப்பட்டது.

"அகலகில்லேன்" என்ற திருவாய்மொழி பாசுரத்தில் நம்மாழ்வார் ஸாதித்த பகவானுடைய ஆறு குணங்கள் இங்கே சொல்லப்பட்டது. ஐந்து குணங்கள் பகவானுக்கும் ஆறாவதான வாத்ஸல்யம் பகவானைவிட ஆழ்வாருக்கு அதிகம் என்று மதுரகவியாழ்வார் வாக்கின்படி "திருத்திப் பணி கொள்வான்" என்ற முறையில் ஆழ்வாருக்கு சொல்லியது.

1. உந்தியில் அயனைப் படைத்ததும் = ஸ்வாமித்வம் (பகவான்)
2. உரலில் தாமே கட்டுண்டதும் = ஸௌஸீல்யம் (பகவான்)
3. அந்தியில் அரியாய் அழித்ததும் = சக்தி (பகவான்)
4. அவனியில் அண்ணலாய் அளித்ததும் = ஞானம் (பகவான்)
5. மந்திமருவிய மாமலை மாதவன் மலரடி மருவியதும் = ஸௌலப்யம் (பகவான்)
6. உறவாட சந்தியாய் சேர்த்ததும் = வாத்ஸல்யம் (ஆழ்வார்)

நாதமுனிகள் தனியன்

போகத்தை எண்ணும் மாந்தர்க்கு நல் யோகத்தை காட்டி
சோகத்தை தவிர்ப்பாய் நீயவன் பாகமேயென * வேகத்தில்
நாகத்தில் பள்ளி கொண்டானை அடைய * அடைந்தேன்
ராகத்தில் தாளத்தில் வழங்கிய நாதமுனியை காலத்திலே

ஓரு பத்து கேட்டு உகந்து உள்ளம் கசிந்து
பல பத்தை நாடிய உம் யோகத்தில் இசைந்து
ஒருமித்து அருளிய ஆயிரம் நான்கும் நமக்கேயென
தருவித்த வள்ளலே தரித்தேன் உன் திண்கழலே

போகத்தை = வீடு என்று அழைக்கும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை
எண்ணும் = அடைய வேண்டும் என்று
மாந்தர்க்கு = விரும்பும் ஜீவர்களுக்கு
நல் யோகத்தை காட்டி = யோகம் என்கிற உயர்ந்த உபாயத்தை வெளிப்படித்தி
நீயவன் = நீ என்கிற ஜீவாத்மாவும், பகவானுடைய
பாகமேயென = சரீரம்தான் என்று உணர்ந்து.
சோகத்தை = உன்னுடைய கையால் ஆகாத தன்மையைக் கண்டு கொள்ளும்
வருத்தத்தை
தவிர்ப்பாய் = விட்டு விடுவாய்
நாகத்தில் = ஆதி ஸேஷனில்
பள்ளி கொண்டானை = ஸயனித்து கொண்டிருக்கும் ஸ்ரீமந் நாராயணனை

வேகத்தில் அடைய = நீ விரைவில் அடைய வேண்டும் என்கிற விருப்பத்தால்
ராகத்தில் தாளத்தில் = ராக தாளத்துடன் வழங்கிய நாலாயிர திவ்ய பிரபந்தத்தை
வழங்கிய நாதமுனியை = நமக்கு கொடுத்து அருளிய ஆசார்ய நாதமுனிகளை
காலத்திலே = காலம் வீணாவதற்கு முன்
அடைந்தேன் = நான் சரணாகதியாக புகுந்தேன்

ஒரு பத்து = திருகுடந்தையில் திவ்ய பிரபந்தத்தில் ஒரு பத்து மட்டும்
கேட்டு = அடியவர்கள் பாட அதைக் கேட்டு
உகந்து = மகிழ்ந்து
பல பத்தை = மீதி உள்ள பாசுரங்களை
நாடிய = அடைய வேண்டும் என்ற விருப்பத்தால்
உள்ளம் கசிந்து = மனம் வருந்தி
உம் யோகத்தில் = செய்த உம்முடைய யோக மகிமையால்
இசைந்து = ஸ்வாமி நம்மாழ்வார் மனம் நெகிழ்ந்து
ஒருமித்து = ஒன்றாய் (in one shot)
அருளிய ஆயிரம் நான்கும் = திவ்ய பிரபந்த நாலாயிர பாசுரங்களையும் கொடுத்து
நமக்கேயென = அடியவர்களான நமக்காக
தருவித்த = நீர் அடைந்து பெற்ற (fetched)
வள்ளலே = ஆசார்ய நாதமுனியை
உன் திண்கழலே = பாதங்கள் இரண்டையும் கெட்டியாக
தரித்தேன் = அடைக்கலமாய் எம்முடைய தலையில் வைத்து வணங்கினேன்

யாமுன முனிகள் (ஆளவந்தார்)

அயனை ஆக்கிய ஆயனை ஆரவணையில் துயிலும் ஈசனை
உகந்து அவன்பால் பணியினை உள்ளம் உரை செய்தவனை
மற்றில் இசையா சோர்வினைக் கண்டுதாமே கழியும் கடுவினை
அறிந்த ஆளவந்தார் அடியினை அடைந்தோமே நம் யாமுனனை.

நான்கும் ரத்தினமும் பத்திரமாய் தந்து பாங்காய் திருவைத்
தாங்கும் இதயத்தில் எமக்கோர் இடத்தை அளித்தவனே
பொங்கும் கருணையில் தங்கும் அவர் திருவருள் என
சங்கும் சக்கரமும் உடையானுக்கு ஆள் செய்வித்த வித்தகனே.

அயனை ஆக்கிய = ப்ரம்மாவை படைத்த
ஆயனை = இடைக்குலத்தில் பிறந்த கிருஷ்ணனை (ஜகத்காரணத்துவத்தை)
ஆரவணையில் = ஆதி ஸேஷனில்
துயிலும் ஈசனை = உறங்கும் பரமாத்வாவை (ரங்கநாதனை)
உகந்து அவன்பால் = மகிழ்ச்சியுடன் அவனுக்காவே
பணியினை = கைங்கர்யத்தை
உள்ளம் உரை செய்தவனை = மனோ வாக் காயை என்ற மூன்றிலும் கொண்டவனை
மற்றில் = வேறு ஒரு உபாயத்திலும்
இசையா = சம்மதிகாமல், மனம் ஈடு படாமல் இருக்கும்

சோர்வினைக் = சோம்பேறித்தனத்தை (laziness)
கண்டுதாமே = பார்த்து தானாகவே
கழியும் கடுவினை = மறைந்து போகிற கொடிய பாபங்கள்
அறிந்த ஆளவந்தார் = என்பதை அறிந்து நம்மை ஆண்டு நற்கதியிற்கு அழத்துச் செல்லும்
நம் யாமுனனை = நம்முடைய ஆசாரியனான யாமுனாசாரியாரின்
அடியிணை = இரண்டு திருவடிகளையும்
அடைந்தோமே = சரணமாகப் பற்றினோம்

நான்கும் = சதுஸ்லோகியாகிற உயர்ந்த ஸ்லோகத்தையும்
ரத்தினமும் = ஸ்தோத்ர ரத்னம் என்கிற ஸ்தோத்ரதையும்
பத்திரமாய் = முன்னோர் அருளிய வேதத்திற்கு ஒத்த கருதுக்களை பாதுகாத்து
தந்தவனே = நமக்கு அருளியவனே
திருவைத் தாங்கும் = லக்ஷ்மியை கொண்டுள்ள
இதயத்தில் = திருமார்பில்
எமக்கோர் இடத்தை = எங்களுக்கே என்று ஒருமுலையில்
பறித்தவனே = இடத்தை பிடித்து வைத்தவனே (kept a reserved seat)
பொங்கும் கருணையில் = பகவானின் அபரிமிதமான தயையில்
தங்கும் அவன் திருவருள் = மற்ற குணங்களைவிட அருள் என்கிற குணம் மட்டும் நிலைக்கும்
என்று சங்கும் சக்கரமும் உடையானுக்கே = என்று சங்கு சக்கரதாரியான நாராயணனுக்கே
ஆள்செய்வித்த = அடிமை செய்வாய் என்று எம்மை ஆக்கிய
வித்தகனே = வேதாந்தியே

பகவத் ராமானுஜர் (ஸ்ரீபாஷ்யகாரர், எம்பெருமானார், உடையவர், யதிராஜர்)

அடையவனை அவாக்கொண்டு உள் உயிரும் உலகும் உடலாய்
உடையவனை * சடையனை அயனையும் படைத்த இடையனை *
மடைதிறந்து மாதவனருளால் மருள்நீக்கி மறைப்பொருள் விடையினை *
கொடையென குவித்த ராமானுஜா! அடைந்தேன் உன்னடி யான்பெற்றபேறே.

உள் உயிரும் = உன் சரீரத்தின் உள்ளிருக்கும் ஜீவாத்மாவும்
உலகும் = இந்த ப்ரபஞ்சத்தில் உள்ள எல்லா அசேதன வஸ்துக்களையும்
உடலாய் = தனக்கு சரீரமாய்
உடையவனை = கொண்ட ஸ்ரீமந் நாராயணனை
சடையனை = சிவபிரானை
அயனையும் = பிரம்மாவையும்
படைத்த = உண்டாக்கி
இடையனை = இடைக் குலத்தில் பிறந்து கிருஷ்ணனாக அவதாரம் செய்த பெருமானை
அவாக்கொண்டு = காதல், பக்தி கொண்டு
அவனை அடை = அந்த ஸ்ரீமந் நாராயணனை சரணமாக அடைவாய் என்று
மடைதிறந்து = பொங்குகின்ற ப்ரவாகத்தை, தடையை எடுத்து வெளிவிடுவதுபோல்
மாதவன் அருளால் = ஸ்ரீயப் பதியான நாராயணனின் ஸங்கல்பத்தினாலே
மருள்நீக்கி = மீதி மதத்தில் உள்ளவர்கள் தவறாக அறிந்து பரப்பிய அஞ்ஞானத்தை
மறைப் பொருள் = வேதங்களில் கூறப்பட்ட உண்மையான தத்துவங்களை
விடையினை = இதுதான் சிறந்த ஸாராம்ஸம் என்கிற கருத்தை

கொடையென = வள்ளல் என்று கூறும்படி எல்லோரும் உஜ்ஜீவிக்க
குவித்த = பொழிந்த
ராமானுஜா! = ராமானுஜ முனியே !
அடைந்தேன் உன்னடி = உம் திருவடிகளை அறிந்து சரண் என பற்றியது
யான் பெற்றபேறே = நான் பெற்ற பாக்கியமே !

உட்பொருள்

அடையவனை அவாக்கொண்டு உம்முயிரும் உலகும் தன் உடலாய் உடையவனை

விசிஷ்டாத்வைத ஸம்பரதாயத்தில் சரீர ஆத்ம பாவம் என்பது ஆணிவேர் போன்றது. எப்படி நமக்குள் இருக்கும் ஆத்மா வெளியே இருக்கும் உடம்பை தாங்குகிறதோ அதைப்போல் பகவான் பரமாத்மாய் உள்ளிருந்து நம் உடலில் இருக்கும் ஜீவாத்மாவையும், உலகில் உள்ள எல்லா வஸ்துக்களையும் தாங்கிறான். எம்பெருமானார் அருளிய ஸ்ரீபாஷ்யத்தின் ஸாரமே (essence) இதுதான். கீதாசார்யனும் பகவத் கீதை பதிமுன்றாம் அத்யாயத்தில் இதைத்தான் சொல்கிறான். ஸ்வாமி தேசிகனும், ப்ரதான ப்ரதிதந்த்ரம் என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் மூன்றாம் அதிகாரத்தில் விளக்குகிறார். ஸ்வாமி நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் "உடல் மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்" என்றும் "கடல் ஞாலமும் செய்தேனும் யானேன் என்றும் கடல் ஞாலமும் ஆவேனும் யானேன் என்றும்" ஸாதித்தார்.

அந்த பகவானை மிக உயர்ந்த புருஷார்த்தமாக பற்று என்றார். அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்கு புருஷார்த்தங்கள் இருந்தாலும், பகவானை அடையும் வழி காமத்தின் மூலம்தான் என்று நம்முடைய ஆசார்யன் ராமானுஜர், ஒரு ஸந்யாஸி சொல்லிக் கொடுத்தார். "நான்கினும் கண்ணனுக்கே ஆமது காமம்" என்று திருவரங்கத்தமுதனார் ராமானுஜ நூற்றந்தாதியில் ஸாதித்தார்.

முதல் வரியில் மோக்ஷத்திற்கு உபாயமானவன் நிகில சிதசித்விலக்ஷணமான திருக்கல்யாண குணங்களை உடைய ஸ்ரீமந் நாராயணனே என்று கூறப்பட்டது. இதுவே ஸ்ரீபாஷ்யத்தின் முதல் அத்யாயத்தில் எம்பெருமனார் ஸாதித்துள்ளார்.

சடையனை அயனையும் படைத்த இடையனை

ப்ரம்மாவையும், சிவனையும் படைத்தவனான நாராயணனை நீ சரணமாக பற்று என்றார். படைக்கும் கடவுள் நான்முகன். அழிக்கும் கடவுள் சிவன். இவர்கள் இருவரையும் படைத்தவன் நராயணன். அவனை வணங்கு என்றார். "நான்முகனை நாராயணன் படைத்தான். நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்" என்றார், திருமழிசையாழ்வார்.

இரண்டாம் வரியில் பிரம்மனுக்கும், சிவனுக்கும் ஈச்வரனாய் ஜகத்காரணமாய் விளங்குபவன் அந்த ஸ்ரீமந் நாராயணனே என்று கூறப்பட்டது. இதுவே

ஸ்ரீபாஷ்யத்தின் இரண்டாம் அத்யாயத்தில் எம்பெருமனார் பிற மதங்களை கண்டித்து இந்த உண்மையை ஸாதித்துள்ளார்.

மடைதிறந்து மாதவன் அருளால் மருள் இன்றி மறைப்பொருள் விடையினை

வேதத்தின் பொருளை பல குதிருஷ்டிகள் (perverted people) மாற்றி, தமக்கு ஸாதகமாக பரப்பி வந்ததைக் கண்டித்து தத்துவங்களின் உண்மையான விளக்கங்களை மடையைத் திறந்த ஆறானாது எப்படி ப்ரவகிக்குமோ அது போல் ஸ்ரீபாஷ்யத்திலும் மற்ற க்ரந்தங்களிலும் பொழிந்துள்ளார். மேலேழ்ந்தவாரியாக பார்க்கும்போது, வேதங்கள் பல இடங்களில் ஒன்றுக்கு ஒன்று புறம்பாக தோன்றும், அவற்றின் சூட்சுமத்தை அறிந்து மாறாக தோன்றும் கருத்துக்களை இணைத்து "கட ஸ்ருதி" என்ற இணைப்பின் மூலம் விளக்கினார்.

பேதையர் வேதப்பொருள் என்று உன்னி, பிரமம் நன்று என்று ஓதி
மற்றெல்லா உயிரும் அதென்று, உயிர்கள் மெய்விட்டு
ஆதிப்பரனொடு ஒன்றாம் என்று சொல்லும் அல்லல் எல்லாம்
வாதில் வென்றான் எம் இராமானுசன் மெய்ம் மதிக்கடலே"

என்று ஸ்ரீராமானுச நூற்றந்தாதியில் (58) திருவரங்கத்தமுதனார் ஸாதித்தார்.

கொடையாய் குவித்த ராமானுஜா! அடைந்தேன் உன்னடி யான் பெற்றபேறே

"பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்" என்று ஸ்வாமி தேசிகனால் போற்றப்படுகின்ற லக்ஷ்மண முனி எல்லா ஜீவாத்மாக்களும் நல்ல கதியை அடிய வேண்டும் என்பற்காக தன்னுடைய ஆசாரியனின் கடும் சீற்றத்திற்கே ஆளானார்.

"ஆரியர்காள், பாருலகில் ஆசையுடையோருக்கு எல்லாம் கூறும் என்று பேசி வரம்பு அறுத்தார் பின்" என்றார் விசதவாக்சிகாமணி மணவாள மாமுனிகள் உபதேச ரத்தினமாலையில்

ஸ்ரீபாஷ்யத்தின் முன்றாம் அத்யாயத்தில் எம்பெருமனார் அந்த ப்ரம்மத்தை அடைய பக்தி ஸ்வரூபமாய் பணிய வேண்டும் என்றும் நான்காம் அத்யாயத்தில் அந்த பக்திக்கு பலன் அர்ச்சிராதி மார்க்கமாய் சென்று அந்த ப்ரம்மத்தை அடைவதே என்று விளக்கினார். இங்கு கடைசி இரண்டு வரிகளில் ஜகதாசாரியரான எம்பெருமானாரின் திருவடிகளை அடைந்தவனுக்கு எம்பெருமானின் மேல் பக்தியும் அந்த ப்ரம்ம பராப்தி என்னும் பலனும் கிட்டுவது திண்ணம் என்று கூறப்பட்டது.

அடை, உடை, மடை என்று முதல் மூன்று வரிகளில் அகார உகார மகாரங்களைக் கொண்ட ப்ரணவத்தை காட்டுகிறது என்பது விளங்குகிறது.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் (வேங்கட நாதன், தூப்புற் பிள்ளை)

அறத்தை அவனியில் உரைத்து அகலாபரத்தை அன்புடன் வரித்து
உன்தரத்தை அருளால் குரைத்து தூமறை பொருளை நிறைத்து
மறத்தை மனத்தில் வெறுத்து மாளா பிறவித்துயரை நினைத்து
துறத்தை துறந்த துய்யோன் அடியிணை அடைந்தோமே இனித்து.

அறத்தை = தர்மத்தை
அவனியில் = உலகத்தில்
உறைத்து = சொல்லி, ஒதுவித்து
அகலா பரத்தை = என்றும் பிரியாத பரம் பொருளான பகவானை
அன்புடன் = ஆசையுடன், உகப்புடன்
வரித்து = சரணாகதி என்று அடைக்கலமாய் அடைந்து
உன் தரத்தை = பகவானாகிய உன்னுடைய பெருமையை
அருளால் = உன்னுடைய ஸங்கல்பத்தால்
குரைத்து = ஒலித்து
தூமறை = தூய்மையான உபய வேதங்கள்
பொருளை = அவற்றின் உண்மையான ஸாராம்ஸத்தை
நிறைத்து = முழுமையாக ஆக்கி
மறத்தை = பாபங்களாகிய வினைப் பயன்களை
மனத்தில் = உள்ளத்தில்
வெறுத்து = ஒழித்து
மாளாப் பிறவித் துயரை = முடிவில்லாத பிறப்பு இறப்பு சுழலை
நினைத்து = எண்ணிப் பார்த்து
துறத்தை = ஸந்யாஸத்தையே
துறந்த = விலக்கிய
துய்யோன் = பரிசுத்தமான ஸ்வாமி தேசிகனுடைய
அடியிணை = இரண்டு திருவடிகளையும்
இனித்து = இன்பத்துடன்
அடைந்தோமே = சரணாகதி என்று அடைந்தோம்

ஸ்வாமி தேசிகன் தன்னுடைய ஜீவதசையில், தர்ம சாஸ்த்திரத்திற்கு ஒத்த நித்ய கர்மாக்களை பிறழாது செய்தும், பகவான் ஸ்ரீமந் நாராயணனிடத்தில் ஆசையுடன் அடைக்கலமாய் அடைந்தும், அவன் அருளால் அவனுடைய பெருமையை போற்றியும், வேதத்தில் கூறிய கருத்துக்களை சரியான முறையில் விளக்கியும், வினைப் பயன்களுக்கு காரணமாகிய செயல்களை விலக்கியும், பிறப்பு இறப்பு சுழல்களிருந்து மீள்வதற்காக பகவானிடம் ப்ரபத்தி செய்தும், உயர்ந்த முறையில் தாமே வாழ்ந்து காட்டினார். அதற்காவே, ஆசார்யர்களுக்கே உரித்ததான ஸந்யாஸத்தையே தியாகம் செய்து நமக்காவே இல்லற வாழ்க்கையில் வாழ்ந்து காட்டிய புனிதமான மஹான். இந்த பெருமை மற்ற எந்த ஆசார்யர்களுக்கு இல்லாமல் ஸ்வாமி தேசிகன் ஒருவருக்கே உரித்ததாகும். அவ்வாறு சிறந்து விளங்கும் அவருடைய இரண்டு திருவடிகளையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் சரணாகதி என்று நாம் அடைந்தோம்.

உட்பொருள்

இப்பாசுரத்தின் நான்கு வரிகளில் (1) பரதத்துவம், (2) பகவத் சேஷத்வம், (3) பகவத் பாரதந்த்ரியம், (4) பாகவத சேஷத்துவத்தும் இவற்றை முறையே காட்டுகிறது என்று கூறலாம். ஸ்ரீமத் ராமாயணத்தில் இவற்றை பகவான் (1) ஸ்ரீராமன், (2) லக்ஷ்மணன், (3) பரதன் (4) சத்ருக்னன் இவர்களிடம் காணலாம்.

அறத்தை அவனியில் உரைத்து அகலாபரத்தை அன்புடன் வரித்து

"நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறை ஞானத்து ஒரு முர்த்தி"யான பகவான் ஸ்ரீகிருஷ்ணன், ப்ரதம குருவாகி, பகவத் கீதையில், சரம ஸ்லோகத்தில் "ஸர்வ தர்மாந் பரித்தஜ்ய மாம் ஏகம் ஸ்ரணம் .... மாசுச" என்றார். "கிருஷ்ணம் தர்மம் ஸநாதனம்" என்கிறபடி தர்மத்தின் வடிவேயான கீதாசார்யனிடம் சோகிக்காமல், மகிழ்ச்சியுடன் -- அவன் ஒருவனே பரதேவதை, ஸ்வதந்த்ரன், "தானே உலகெலாம் தானே படைத்திடந்து தானே உண்டு உமிழ்ந்து தானே ஆள்வானே" என்ற முறையில் ஜகத் காரணமாய் விளங்குபவன். மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அளிக்கும் வல்லமை உடையவன், அவன் ஒருவனே, திருவிற்கும் திருவாகிய செல்வன் திருமகளை திருமார்பில் தாங்கி நம் குறைகளை பொறுத்து வீட்டின்பத்தை அருள்பவன் -- என்று நன்கு அறிந்து அவனிடம் "கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர் எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே" என்கிறபடி சரணாகதி என்ற உயர்ந்த உபாயத்தை மஹா விசுவாசத்துடன் பண்ண வேண்டும் என்கிறது.

உன்தரத்தை அருளால் குரைத்து தூமறை பொருளை நிறைத்து

பகவானின் அருளால் ஆத்ம ஸ்வரூப ஞானத்தை அறிந்த ஆசார்யர்கள், அவனுடைய பெருமையை "கறந்த பாலுள் நெய்யே போல் இவற்றுள் எங்கும் கண்டுகொள் " என்பதுபோல் உலகத்திற்கு எடுத்து காட்டுகிறார்கள். அவனுடைய கல்யாண குணங்களையும், அவனே தாய், தந்தை, மற்றும் எல்லா உறவும் அவனே என்கிற கருத்தை நம் மனத்தில் ஆணி வேராக படிய வைக்கிறார்கள். மற்றும், "நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன, நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது" என்கிறபடி வட மறை, தென் மறை இவற்றிக்கு முரண்பாடானா கொள்கைகளை களைந்து, சரியான விளக்கங்களை அருளினார்கள். பகவானுக்கு செய்யும் கைங்கர்யத்தைத் தவிர நிலையானது ஒன்றும் இல்லை என்பதை காட்டி, பகவத் சேஷத்வமே நாம் விரும்பி அடையத் தகுந்தது என்றார்கள். ஸ்வாமி ராமானுஜரும் இதையே "நித்ய கிங்கரோ பவா" என்று கத்யத்தில் அருளியிருக்கிறார்.

மறத்தை மனத்தில் வெறுத்து மாளாபிறவித் துயரை நினைத்து துறத்தை துறந்த துய்யோன்

ஜீவாத்மாக்கள் பிறவிக் கடலில் மூழ்கி தத்தளிப்பதற்கு மூல காரணம் வினைப்பயன். "இருள் தருமா ஞாலத்துள் இனிபிறவி யான் வேண்டேன்" என்று

அதிலிருந்து விடுபட ஆசைப் படுபவர்களுக்கு அமைந்த நெறி முறை இரண்டு. பக்தி, ப்ரபத்தி என்பது. "ஐயோ! என்னால் என்ன செய்ய முடியும்? நான் யாரிடம் புகல் அடைவேன்? இத்தனை காலம் வாழ்க்கையில் இறைவனை நினையாமல் வீணாக்கி விட்டேனே!" என்று வருந்துபவர்களுக்கு பகவானை அடையும் வழியை வாயால் மட்டும் சொல்லி சுட்டிக் காட்டாமல், வாழ்க்கையில் வாழ்ந்து காட்டிய புண்ய புருஷர். தன்னைப்போல் இல்லற வாழ்க்கையிலேயே பக்தி, அனுஷ்டானத்துடன் முறையான நிலையில் வாழ்ந்து உஜ்ஜீவிக்க முடியும் என்பதை "ஓது மறை நான்குதனில் ஓங்கும் ஒர் முன்றினுள்ளே நீதி நெறி தழுவா நிற்கின்றாம்" என்ற முறையில் காட்டினார். மற்ற ஆசார்யர்கள் பகவத் கைங்கர்யத்தை விரும்பி உலக வாழ்க்கையில் உள்ள சுக துக்கங்களை வெறுத்து, துறவறத்தை நாடினார்கள். ஸ்வாமி தேசிகனோ பகவான் இட்ட ஆணையாக இந்த ஜீவாத்ம கூட்டங்களை வைகுண்டத்திற்கு ஆட்டு மந்தை போல் விரட்டி அழைத்து செல்ல வேண்டும் என்கிற கருத்தைத் தாங்கி ஆசார்யர்களுக்கே அமைந்த துறவறத்தையே, நமக்காக தியாகம் செய்து பரதன் போல் (Do what I do) விளங்குபவர்.

அடியினை அடைந்தோம் இனித்து.

ஆசார்ய பரம்பரையிலேயே தனக்கே என்று முதலிடம் வகிக்கும் ஸ்வாமி தேசிகனுடைய இரண்டு திருவடிகளையும் தஞ்சமாக நாம் பற்றுவோம். ஸ்வாமி தேசிகனையும், அவரை உயர்ந்ததாகக் கொண்டாடும் பாகவதர்களையும் சத்ருக்னன் போல் "அடியார்தம் அடியார் அடியார் அடையாரெங்கோக்கள்" என்றும் மனத்தில் வாழ்த்துவோம்.

"ஒரொன்று தானே அமையாதோ, தாரணியில் வாழ்வார்க்கு" என்கிற ரீதியில் ஸ்வாமி தேசிகன் அருளிய கிரந்த, ப்ரபந்த, காவிய, ஸ்தோத்ர, நாடகங்களில் குறைந்த பக்ஷம், ஏதாவது ஒன்றையாவது நாம் பற்றி நல்வாழ்க்கை நடத்தி விண்ணுலகு அடைந்து உய்யுவோமாக!.

விசேஷ அர்த்தங்கள்

1. ப்ரணவத்தின் விரிவான அகார உகார மகாரங்களை அ,உ,ம என்ற எழுத்துக்களால் பாசுரத்தின் முதல் மூன்று வரிகளில் சொல்லப்பட்டது. திருமங்கை மன்னன் பகவானிடமே "நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் உற்றதும் உன் அடியார்க்கு அடிமை" என்று உரைத்து பாகவத சேஷத்வமே திருவஷ்டாக்ஷர மந்திரத்தின் ஸாரம் என்பதை காட்டினார். அந்த ரீதியில், முதல் மூன்று வரிகளில் ப்ரணவத்தை காட்டி திருமந்திரத்தின் ஸாரம் என்பது, கவிதார்க்கிக ஸிம்மம், வேதாந்தாசார்யன் ஸ்வாமி தேசிகன் திருவடிகளைப் பற்றிய ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நாம் என்றும் அடிமை என்பதை அறியலாம்.

2. புருஷார்த்தம் என்பது அறம், பொருள், இன்பம், வீடு (தர்ம, அர்த்த, காம, மோக்ஷம்) என்கிற நான்கும் ஆகும்.

- அவற்றில் அறம் எனப்படுவது நல்ல நெறியை உணர்த்துவது. பகவான் கிருஷ்ணன் பார்த்தஸாரதியாக ஸாதித்த பகவத் கீதையை அறம் என்று அழைக்கலாம்.
- பொருள் என்பது வேத சாஸ்த்திரத்தில் சொல்லப் பட்ட கருத்துக்களை பரம்பரையாக வழி வந்து, ஆசார்யர்கள் மூலமாக அறிந்து, பிறழாமல் பின்பற்றுவதே நமக்கு உள்ள சொத்து.
- ஸ்வாமி தேசிகன் திருவடிகளை என்றும், எப்பொழுதும், எல்லா நிலைகளிலும் (ஸர்வ தேச, ஸர்வ கால, ஸர்வ அவஸ்தைகளிலும்) மனம், வாக்கு, செயல் இவற்றில் ஈடு படுத்துவதே இன்பம் ஆகும்.
- இந்த மூன்றையும் அடைந்தவர்க்கு "நின் புகழில் வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ, நீ அவர்க்கு வைகுந்தம் என்று அருளும் வான்?" என்கிறபடி வைகுந்த வீடும் துச்சமே.

3. இரண்டாம் வரியில் சொல்லப்பட்ட பகவான் அருளும், கடைசி வரியில் சொன்ன ஆசார்யன் திருவடிகளும் த்வயத்தை காண்பிக்கிறது. த்வயத்தின் முதல் வரியில் சொல்லப்பட்டது உபாயம். ஸ்ரீவேச்வரனுடைய அருளை விட உயர்ந்த உபாயம் எதுவும் இல்லை. த்வயத்தின் கடையில் சொல்லப்பட்டது பலன். ஆசார்யன் திருவடி ஸம்பந்தத்தைத் தவிர உயர்ந்த புருஷார்த்தம் எதுவும் இல்லை. சேதனர்கள் என்றோ எந்த பிறவியிலோ ஒரு நல்ல காரியத்தை நமக்கே தெரியாமல் செய்ததை கொண்டு பகவான் நமக்கு உயர்ந்த ஆசார்யனை காடிக் கொடுக்கிறார். ஆசார்யனை அடைய வேண்டும் என்ற ஆசை நம் மனத்தில் தோன்ற காரணம் பகவான் அருளே என்று ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாதிக்கிறார். உபாயத்தை காண்பித்தவன் பகவான்.

ஸ்ரீவசன பூஷணத்தில் முதல், கடைசி ப்ரகரணங்களை பார்க்கும் போது "வேதார்த்தங்கள் அறுதியிடுவது --- ஆசார்யன் அபிமானமே" என்கிறபடி ஆசார்யன் உகப்பே உயர்ந்த புருஷார்த்தம்.

ஆதிவண் சடகோப மாமுனி தனியன்

காட்சி தரும் கமலைநாதன் வானவர்க்கு மட்டும் இன்றி
மீட்சி செய்து மாறன் மறையோடு * நம் சிங்கப்பிரான்
சாட்சி சடகோபமாமுனி சரண்கொண்டார் சார்வுடன்
தாழ்ச்சியின்றி தவமின்றி தவறாது தழைக்கும் வாழ்ச்சியே

தாழ்ச்சி இன்றி = ஜன்மாந்தரங்களில் நாம் செய்த பாபங்களால் பகவான் நம்மை ஏற்றுக் கொள்வேனோ என்ற சந்தேகமின்றி, துயரின்றி
தவமின்றி = மற்ற உபாயங்களை அனுஷ்டிக்காமல்
சார்வுடன் = சிறந்த உபாயமாய்
சடகோப மாமுனி = ஆதி வண் சடகோப மாமுனி

சரண் கொண்டார் = பாதங்களில் ப்ரப்த்தி செய்தவர்கள்
மீட்சி செய்து = ஸம்ஸார பந்தத்தில் இருந்து மீண்டு
மாறன் மறையோடு = நம்மாழ்வார் அருளிய திராவிட வேத ஸாகரத்துடன்
வானவர்க்கு = பரமபத்தில் இருக்கும் முக்தர், நித்யர்
மட்டுமின்றி = இவர்களுக்கு மட்டுமின்றி
காட்சி தரும் = நம்மைப்போல் இருக்கும் பக்தர்களுக்கும்
கமலைநாதன் = ஸ்ரீமந் நாராயணன்
தவறாது = நிச்சயமாக
தழைக்கும் = உயர்ந்து விளங்கும்
வாழ்ச்சியே = வாழ்வு என்கிற பெரும் செல்வத்தை அளிப்பார்
நம் சிங்கப்பிரான் = இதற்கு நம் மடத்திலேயே எழுந்தருளியிருக்கும் மாலோல நரசிம்மனே
சாட்சி = சாட்சியாய் நிற்கிறான்.

44ம் பட்டம் அஹோபிலமட முக்கூர் ஸ்ரீமத் அழகியசிங்கர் தனியன்

கட்டிய கோபுரம் களையுடன் களிக்கும் அரங்க நகரிலே
எட்டியது வான்போகம் பிறவிக் களைகளை விலக்கியதுலே
தட்டி எழுப்பிய குரவரிலும் மேலாய் தனிக்கருணை சுரக்கும்
முட்டிய வினைதீர்க்கும் முக்கூர் வேதாந்த முனியின் பாதங்களே

45ம் பட்டம் அஹோபிலமட ஸ்ரீமத் அழகியசிங்கர் தனியன்

அல்லி மலரும் அந்தியில் ஆதவன் கண்டே தாமரை
எல்லிப் பகல் எண்ணாது எவருக்கும் ஏற்ற தூமறை
வில்லிவலம் வந்த நாரயண முனி நவிலும் பேருரை
சொல்லி மகிழ்வோம் நாம் அவர் மகிமை வான்வரை

அல்லி = அல்லி மலர்
அந்தியில் = இரவு ஆரம்பத்தில்
ஆதவன் = சூரியன்
எல்லி = இரவு
எண்ணாது = கருதாது
எவர்க்கும் = எல்லா சேதனர்களுக்கும்
ஏற்ற = பொருந்திய
தூமறை = தூயமையான வேதங்கள்
வில்லிவலம் = வில்லிவலம் என்னும் ஊர்
நவிலும் = எளிதாய் சொல்லும்
பேருரை = உபதேசங்கள்

மகிமை = பெருமை
வான்வரை = மோக்ஷம் வரை

அல்லி மலர் மலருவது சாயங்காலத்திற்கு பிறகு. தாமரையோ பகலைத் தரும் சூரியன் உதித்த பிறகே மலரும். ஆனால் வில்லிவலம் என்னும் ஊரில் உதித்த நாரயண யதீந்ர மஹா தேசிகன் என்னும் அஹோபிலமடத்து 45ம் பட்டம் அழகியசிங்கர் பகல், இரவு என்று பாராது தம் அடியவர்களுக்கு தூய்மையான வேதத்தின் ஸாரார்த்தங்களை பலவித உபதேசங்களாய் (உபந்யாஸம், ப்ரந்யாஸம், காலக்ஷேபம், teleupanyasam, மற்றும் பல அறிவுரைகளாய்) ஸாதித்து அடியவர்களைக் கரை சேர்க்கிறார். அந்த ஆசாரிய ஸார்வபௌமரின் பெருமைகளை மோக்ஷத்தில் கூட நாங்கள் சொல்லி மகிழ்வோம். .

<u>கிடாம்பி சுந்தரராஜன் வாழ்த்துப் பாடல்</u>

ஒப்பாரிலா ஆவியில் மன்னன் நீர்ப் பானை சுந்தரத்தான்
இப்பால் புவியில் சுரந்தான் ஓர் யானை வேர் மந்திரத்தால்.

ஓர் யானை = கஜேந்த்ரன் என்கிற அந்த உயர்ந்த யானை
வேர் மந்திரத்தால். = அலறிய "ஆதி மூலமே" என்கிற மந்த்ரத்தின் பொருளை கொண்டு
ஒப்பாரிலா = தனக்கு நிகர் ஒருவரும் இல்லாத
நீர்ப் பானை = கடாம்பி
சுந்தர மன்னன் = சுந்தர ராஜன்
புவியில் = பூலோகத்தில்
இப்பால் = அமெரிக்கா என்னும் இந்த இடத்தில்
தான் = தானாகவே
ஆவியில் = இன்டர்நெட் (internet) மூலமாக.
சுரந்தான் = வர்ஷித்தான், கொடுத்தான்

கஜேந்தரன் ஆதிமூலமே என்று அழைத்த கூக்குரலுக்கு பதிலளித்த பரதத்துவத்தை விவரிக்கும் சிறந்த வ்யாபஹ மந்திரம் திருமந்திரம். அந்த திருவஷ்டாக்ஷர மந்த்ர ஸித்தி பெற்று தனக்கு நிகர் ஒருவருமில்லை என்று கூறும்படியாய் உயர்ந்த பரிசுத்தமான ஆத்மாவாக விளங்குபவர் ஆசாரிய பரம்பரையில் உதித்த கிடாம்பி சுந்தரராஜன்,

பூலோகத்தில் பாரத தேஸம் விட்டு அமெரிக்கா (USA) என்னும் இப்பக்கம் வந்து, தானாகவே கன்றுகளுக்கு சுரக்கும் தாய்ப்பசு போல் முன்னோர்கள் மொழிந்த கூற்றை அப்படியே அப்பழுக்குகின்றி இன்ட்ர்னேட் (internet) மூலமாய் ஸகல

விதமான சேதனர்களும் அறம், பொருள் இன்பம் என்ற முன்றையும் விட உயர்ந்த புருஷார்த்தமாய் விளங்கும் வீட்டின்பத்தை பெறும் வழியைப் பொழிந்தார்.

பின்னிணைப்பு - 2

அர்ச்சாவதார மூர்த்திகள் ஸேவை ஸாதிக்கும் 108 திருப்பதிகள் பற்றிய குறிப்புகள்

1. பகவான் நின்ற, இருந்த, கிடந்த கோலங்களில் காட்சி தரும் ஸ்தலங்கள்
    - நின்ற திருக்கோலம் - 60 ஸ்தலங்கள்
    - கிடந்த திருக்கோலம் - 27
    - இருந்த திருக்கோலம் - 21

2. திவ்ய தேஸ எம்பெருமான் நோக்கும் திசைகள்
    - கிழக்கு - 79 ஸ்தலங்கள்
    - மேற்கு - 19
    - வடக்கு - 3
    - தெற்கு - 7

3. கிடந்த (ஸயனித்த) திருக்கோலம் எட்டு வகைகள்
    - 1. ஸ்ரீரங்கம் புஜங்க ஸயனம்
    - 12. திருக்குடந்தை உத்தான ஸயனம்
    - 26. திரு இந்தளூர் வீர ஸயனம்
    - 40. திருச் சித்திர கூடம் போக ஸயனம்
    - 61 திருநீர் மலை மாணிக்க ஸயனம்
    - 63. திருக் கடல் மல்லை தல சயனம்
    - 99. ஸ்ரீவில்லி புத்தூர் வடபத்ர ஸயனம்
    - 105. திருப்புல்லாணி தர்ப்ப ஸயனம்

4. திவ்ய தேஸங்கள் அமைந்துள்ள நாடு
    - சோழ நாடு - 40 ஸ்தலங்கள்
    - நடு நாடு - 2 ஸ்தலங்கள்
    - தொண்டை - 22 ஸ்தலங்கள்
    - வட நாடு - 11 ஸ்தலங்கள்
    - மலை - 12 ஸ்தலங்கள்
    - பாண்டிய நாடு - 18 ஸ்தலங்கள்
    - வின் நாடு - 2 ஸ்தலங்கள்

5. அதிகமான ஆழ்வார்கள் (ஆண்டாள் உட்பட) மங்களாசாஸனம் செய்த ஸ்தலங்கள்
    1. 1. ஸ்ரீரங்கம் - 11 அழ்வார்கள்
    2. 75. திருவேங்கடம் - 10 ஆழ்வார்கள்
    3. 107. திருப்பாற்கடல் - 10 ஆழ்வார்கள்
    4. 108. திருப்பரமபதம் - 8 ஆழ்வர்கள்
    5. 12. திருக்குடந்தை - 7 ஆழ்வார்கள்
    6. 102. திருமாலிருஞ்சோலை - 6 ஆழ்வார்கள்

6. ஆசாரியர்களால் சிறப்பிக்கப்பட திவ்ய தேஸங்கள்
    1. 1. ஸ்ரீரங்கம் - நடை
    2. 75. திருவேங்கடம் - வடை
    3. 40. திருக்கச்சி - கொடை
    4. திருநாராயணபுரம் (மேல்கோட்டை) ஆழ்வார் பாடஸ்தலம் அல்ல. இருந்தாலும் ஆசாரியர்கள் அபிமானித்த ஸ்தலம் - முடி

7. அதிக பாசுரங்கள் பாடப்பட்ட திவ்ய தேஸங்கள்
    1. 1. ஸ்ரீரங்கம் - 247 பாசுரங்கள்
    2. 75. திருவேங்கடம் - 202
    3. 17. திருக்கண்ணபுரம் - 128
    4. 102. திருமாலிருஞ்சோலை - 128
    5. 12. திருக்குடந்தை - 51
    6. 107. திருப்பாற்கடல் - 51
    7. 13. திருவிண்ணகர் - 47
    8. 23. திருவழுந்தூர் - 45
    9. 89. திருக்குறுங்குடி - 40

8. ஒரே பாசுரமே பாடப்பட்ட திவ்ய தேஸங்கள் (மொத்தம் 13)
    - 3. திருக்கரம்பனூர்
    - 7. திருக்கண்டியூர்
    - 9. திருக்கபித்தலம்
    - 11. திருஆதனூர்
    - 47. திருநீரகம்
    - 49. திருநிலாத்திங்கள் துண்டம்
    - 52. திருக்காரகம்
    - 53. திருக்கார்வானம்
    - 54. திருகள்வனூர்
    - 55. திருப்பவளவண்ணம்
    - 88. திருவண்பரிசாரம்
    - 92. திருவரகுணமங்கை
    - 95. திருக்குளந்தை

9. இரண்டே பாசுரங்கள் பாடப்பட்ட திவ்ய தேஸங்கள் (மொத்தம் 8)
    - 2. திருக்கோழி
    - 25. திருத்தலைச்சங்க நாண்மதியம்
    - 45. திருத்தண்கா
    - 57. திருப்புட்குழி
    - 58. திருநின்றவூர்
    - 91. திருவைகுந்தம்
    - 99. திருவில்லிபுத்தூர்
    - 101. திருக்கூடல்

பின்னிணைப்பு - 3

திவ்ய பிரபந்த பாசுரங்களின் எண்ணிக்கை

1.	**நம்மாழ்வார்**		**1296**
	1) திருவிருத்தம்	100	
	2) திருவாசிரியம்	7	
	3) பெரிய திருவந்தாதி	87	
	4) திருவாய்மொழி	1102	
2.	**திருமங்கையாழ்வார்**		**1253**
	1) பெரிய திருமொழி	1084	
	2) திருக்குறுந்தாண்டகம்	20	
	3) திருநெடுந்தாண்டகம்	30	
	4) திருவெழுக்கூற்றிருக்கை	1	
	5) சிறிய திருமடல்	40	
	6) பெரிய திருமடல்	78	
3.	**பெரியாழ்வார்**		**473**
	1) பெரியாழ்வார் திருமொழி		
4.	**திருமழிசையாழ்வார்**		**216**
	1) நான்முகன் திருவந்தாதி	96	
	2) திருச்சந்த விருத்தம்	120	
5.	**ஆண்டாள்**		**173**
	1) திருப்பாவை	30	
	2) நாச்சியார் திருமொழி	143	
6.	**குலசேகராழ்வார்**		**105**
	i. பெருமாள் திருமொழி		
7.	**பொய்கையாழ்வார்**		**100**
	i. முதல் திருவந்தாதி		
8.	**பூதத்தாழ்வார்**		**100**
	i. இரண்டாம் திருவந்தாதி		

9. பேயாழ்வார்		**100**
i. முன்றாம் திருவந்தாதி		
10. தொண்டரடிப்பொடியாழ்வார்		**55**
i. திருப்பள்ளியெழுச்சி	10	
ii. திருமாலை	45	
11. மதுர கவிகள்		**11**
i. கண்ணிணுன் சிறுத்தாம்பு	10	
12. திருப்பாணாழ்வார்		**10**
i. அமலனாதிபிரான்	10	
13. திருவரங்கத்தமுதனார்		**108**
i. இராமானுச நூற்றந்தாதி		
மொத்தம்		**4000**

ஆழ்வார் திருவடிகளே சரணம்।